THE LAW OFFICE OF
Gary Anandasangaree
PROFESSIONAL CORPORATION
• Real Estate (Buying, Selling & Re-Financing)
• Corporate • Commercial
• Wills & Estates • Immigration
416 321 1100
gary@galaw.ca

# தாய் வீடு

THAIVEEDU AUGUST 2012 ஒகஸ்ட் HOME & LIVING

FREE REAL ESTATE CLASSES
Get Your License Fast
Successful Real Estate Office with Over 200 Salespeople
SELVA VETTYVEL
Broker of Record
Tel: 416.568.4301
Bus: 905.201.9977
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently Owned and Operated, REALTOR®



# இரத்தம் வழிய வழிய தமிழர்கள் ஓடிக்கொண்டிருந்தனர்

## 1983 கறுப்பு ஜூலை - நேரடிச் சாட்சியின் வாக்குமூலம்

படம்: டிஜி கருணா

RAMAN APPLIANCES
Quality Products, Certified Technicians Reliable Service & Reasonable Prices
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
General Contractors For:
• Air Conditioning • Gas Furnaces • Central Vacuum
• Air Cleaners • Gas Fireplaces
• Garage Door Openers • Security Alarm
Tel: 647-893-4414
Email: info@raheatingcooling.com
Raman Chelliah
President
647-893-4414
Scarborough : C105-6055 Steeles Ave. East, Scarborough, ON M1X0A7
Brampton : Unit # 11, 158 Kennedy Rd. S., Brampton, ON L6W3G7

உங்களுக்கான வாகனத்தை தேர்வு செய்ய...
FORMULA HONDA
ATHEESAN (SHAN) SARVANANTHAN
CELL: 416-720-1184
2240 MARKHAM ROAD, SCARBOROUGH,
ONTARIO M1B 2W4.
TEL: 416-754-4555 EXT.2705, FAX: 416-754-9465

SAVE MONEY & ENERGY
GERARD RATNARAJAH, P.Eng.
Sales Representative
647.206.4494
Century 21 Innovative Realty Inc. Brokerage
2250 Markham Road, Unit 3
Toronto, ON M1B 2W1

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200, Fax: 416-298-3440,E-mail:
kuna@kunahomes.ca
*Independently Owned and Operated.
Kunasegar Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

Attic Blown Insulation
Spray foam Insulation
Save on Heating & Cooling Cost
Prevent Roof Rot & Mold
ENERecon Insulation
SuPa.Raventhiran
416-847-7171

Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
Office: 905.471.0002
RE/MAX Dynasty Realty Inc., Brokerage
Independently owned and operated


இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலதிற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Marham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002


LET US FIND YOUR
DREAM
HOME
MULTI-USE SPACE FOR RENT
Markham / 14th Avenue
Total of 600 Sq Ft
$22.50 Sq Ft
HOMELIFE
Homelife Today Realty Ltd.
Brokerage*
31 Progress Ave,
Unit 210, Toronto, ON.
M1P 4S6
BUS: 416.298.3200
FAX: 416.298.3440
Quay / York
Bright & sunny apartment on demand location, 2+2 bdrms, 2 wshrms, close to Union Station.
$2,950/M
Birchmount / Ellesmere
Condo, 2 bdrms, 2 wshrms, well kept suite in move-in condition, ttc at doorstep, close to all amenities
$289,900
Middlefield & Steeles
2-Storey, 3 bdrms, 2 wshrms, finished basement with family room, large brick fireplace, mirrored wall.
$425,900
Steeles/Brimley
Home in high demand location, 3 bdrms, 2 wshrms, long drive way, renovated kit. & bath, fin. bsmnt
$449,000
Morningside / Ellesmere
Home near schools, U Of T, Centennial College, 3 bdrms, 3 wshrms, hdwd flrs & laminate flr.
$447,000
Sheppard / Midland
Detached, 4 bdrms, 2 wshrms, beautiful Curb Appeal with manicured gardens, good sized bdrms.
$439,900
Port Union & Lawrence
2-Storey, 3 bdrms, 3 wshrms, renovated kitchen, granite countertops, hrdwd flr fin. bsmnt
$439,900
Ellesmere/ Meadowvale
Bungalow, 2-Storey, 3+1 bdrms 2 wshrms, new windows, counter top & int doors, bsmnt with sep ent
$449,500
Bur Oak & 9th Line
Detached bright house, 4 bdrms 3 wshrms, california shutters on G/F, interlocked yard with garden
$699,000
Mccowan /Raymerville
Beautifu home on lrg Pie-Shaped lot, 3 bdrms, 2 wshrms, custom backsplash, stone walkway
$480,000
Brimley / Denison
2-Storey, thousands in upgrades +Income, 3+1 bdrms, 3 wshrms, hardwood floors, fin. bsmnt with sep ent
$485,000
Mccowan / Steels
2-Storey, 3+1 bdrms, 3 wshrms, new staircase, hdwd flrs t/o main flr, bsmnt apt, steps to ttc.
$489,900
Mccowan / Highglen
2-Storey, 3 bdrms, 3 wshrms, vinyl windows with extra casement windows, new roof, great backyard
$509,900
9th. / 16th.
2-Storey, 4 bdrms, 3 wshrms, open concept, hrdwd flr & crown moulding t/o main flr, rec. rm 900sq.ft extra
$634,800
Hwy 7 / Hwy 48
Lovely family home in the heart of Markham, 3+2 bdrms, 4 wshrms, bsmnt apt, Mins to 407
$489,900
Don Mills / Steeles
Totally renovated home, 3 bdrms, 3 wshrms, hrdwd flr, granite counter, crown moulding fin.bsmnt
$524,900
Mccowan / N Of 16th Av
2-Storey, 4 bdrms, 3 wshrms, 9ft ceiling, hrdwd flr, oak stair case, close to all amenities.
$529,998
16th Ave / 9th Line
Detached, 4 bdrms, 3 wshrms, 9ft ceiling, hrdwd flr, granite counter, oak stair case, close to all amenities
$599,800
*Independently Owned & Operated. Not intended to solicit properties currently listed for sale or individuals currently under contract with Brokerage
Vasanthy Niranjan
Real Estate Broker
416.845.8272
vasanthyne@gmail.com
DIAMOND AWARD WINNER 2009, 2010 & 2011 • TOP 5% IN CANADA
Raj Ariyanayagam
Real Estate Broker
416.930.4663
rajhomes@hotmail.com
GOLD AWARD WINNER 2009, 2010 & 2011

# இரத்தம் வழிய வழிய தமிழர்கள் ஓடிக்கொண்டிருந்தனர்





கறுப்பு ஜூலையின் உயிர், உடைமை இழப்புக்களை மட்டுமன்றி மனங்களில் அது ஏற்படுத்திய ஆறாவடுக்களையும் 'தாய்வீடு' வழியாகப் பகிர்ந்து கொள்கிறார் குரும்பசிட்டி இராசரத்தினம்.





### சிறுநீரகச் செயலிழப்பு
- கந்தையா செந்தில்நாதன்

உடற்தொழிற்பாட்டியலின் போது ஒவ்வொரு தடவையும் இதயம் குருதியைப் பாய்ச்சும் பொழுது அதில் ஐந்தில் ஒரு பகுதி சிறு நீரகங்களின் ஊடாகச் செல்கின்றது.




### கோபத்தைக் கையாளக் கற்றுக்கொடுங்கள்
- ஸ்ரீரஞ்சனி

பொதுவாக விரக்தி தான் கோபத்தின் மூல காரணமாக உள்ளது. பிள்ளைகள் கோபத்தைத் தகுந்தமுறையில் கையாளப் பழகா விட்டால் அது தான் சார்ந்த சமூகத்தையும் பாதிக்கும் ஒரு பிரச்சினையாகிவிடலாம்.




### குளிரேற்றியற்ற குளிர்மை
- பிரபா சின்னா

சாதாரணமாகக் குளிரூட்டியையே நாங்கள் வீட்டின் குளிர்மைக்காகப் பாவிக்கின்றோம். இதைவிட வேறு பல வழிமுறைகள் மின்கட்டணத்தைப் பெருமளவில் குறைத்து வீட்டையும் குளிர்மையாக வைத்திருக்க உதவுகிறது.




### வீட்டுக் காப்பை உறுதி செய்யும் வீட்டுக் காப்புறுதி
- செந்தூரன் புனிதவேல்

அனேகமாக எல்லாருமே வீட்டுக் காப்புறுதி வைத்திருப்போம். ஆனால் மிகச்சிலரே அதுபற்றி தெளிவான விளக்கம் உடையவராய் இருக்கிறோம்.


நீதிகேட்கும் போர்க்குற்றங்கள் 4
அ. கணபதிப்பிள்ளை

உலகளாவிய குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் கனடியர்கள் 6
ராதிகா சிற்சபைசன்

ஆரோக்கியமான பற்கள் 9
ரவிச்சந்திரிகா

சினம் காக்க 11
போல் யோசேப்

வயது வந்தோருக்கான தடுப்பூசிகள் 12
சிவாஜினி பாலராஜன்

மின்சாரச் செலவும் கட்டுப்பாடும் 23
வேலா சுப்ரமணியம்

அசையாச் சொத்தும் வாடகை வருமானமும் 35
யாதவன் செல்வராஜா

சிறு தொழிற் காப்புறுதி 50
செந்தூரன் புனிதவேல்

அரங்கக்கலை வளர்த்த புலவர் சு. செல்லத்துரை 115
தெளிவத்தை ஜோசப்

'கலாபூஷணம்' அண்ணாவியார். செ.டானியல் பெலிக்கான் 116
என். அருளானந்தம்

கொடிய நோய்களுக்கான காப்புறுதி 118
சிறீதரன் துரைராஜா


மேலும் ஆக்க விபரங்கள் 5ம் பக்கம்

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு.
ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

தாய் வீடு

## குற்றமும் தண்டனையும்

ஜுன் மாதம் 22ஆம் நாள், தாய்வீட்டின் எழுத்தாளர்களிலொருவரின் சகோதரன் கொல்லப் பட்டார். ரொறன்ரோவின் 31வது கொலை இதுவெனக் காவல்துறையினர் தெரிவிக்கின்றனர். கொலைகளும் குற்றச்செயல்களும் பற்றி மீண்டுமொருமுறை பலத்த கேள்விகளை நாம் எழுப்பவேண்டியிருக்கிறது.

கோடை காலம் கொலை மலிந்த காலம் எனச் சொல்கின்ற வழமை சில நாடுகளில் உண்டு. பெரு நகரங்கள் கொலைகளதும் குற்றச் செயல்களதும் விளைநிலங்களாக இருக்கின்றன. 'இதுதான் நகரங்களின் யதார்த்தம். இதனை மாற்றவே முடியாது' என்று சோர்ந்துவிடுபவர்கள் இருக்கிறார்கள். "கொலைகளுக்கும் குற்றங்களுக்கும் காரணம் குடியேறிகளும் கறுப்பினத்தவர்களும்தான். அவர்களை நாடுகடத்திவிட்டால் பிரச்சினை தீர்ந்தது" என்று சொல்கிற பலர் அரசியல்வாதிகளும் இருக்கிறார்கள். எனினும், பெரு நகரங்கள் சார்ந்த குற்றச்செயல்களும் அவற்றைத் தவிர்க்கும் வழிவகைகளும் இத்தகைய இலகுவான மூட நம்பிக்கைகளால் ஆய்வுசெய்யப்பட முடியாதவை.

குற்றங்களும் கொலைகளும் வெற்றிடத்தில் நிகழ்வதில்லை. அவற்றுக்கு சமூக பொருளியல் பகைப் பலங்கள் உள்ளன. வறுமை, சமூக ஏற்றத்தாழ்வு, பல்வேறுபட்ட ஒடுக்குமுறைகள் சமூக வளங்களும் பொருளியல் வாய்ப்புக்களும் நீதியான முறையில் பகிர்ந்து கொள்ளப் படாததால் ஏற்படக்கூடிய கொந்தளிப்புகள் எனப் பலதளப்பட்ட சமூகப் பின்னணிகள் குற்றச்செயல்களுக்கு இருக்கலாம். தனிநபர் சார்ந்த உளவியல் காரணங்களும் வன் முறைகளும் இன்னொரு ஊற்றுக்கண்ணாக இருக்கலாம். இந்த இருவேறுபட்ட பின்னணி களும் புரிந்துகொள்ளப்படவேண்டும்.

எங்களுடைய மாகாண ஆட்சியாளர்களுக்கும் மாநகர சபை ஆட்சியாளர்களுக்கும் இது பற்றிய பெருங்கவனம் இல்லை. கொலைகள் இடம்பெறுகிறபோது அறிக்கை விடுவதும் பின்னர் அவைபற்றிப் பெருமளவு அலட்டிக்கொள்ளாத நிலையுமே காணப்படுகிறது. கொலைகளும் குற்றச்செயல்களும் இடம்பெறுகிற சமூக பொருளாதாரப் பின்னணியை விளங்கிக்கொண்டு, அந்தப் பின்னணியிலுள்ள குறைபாடுகளைத் தீர்க்க இவர்கள் முன் வருவதில்லை. வறுமை நிலவுகின்ற, வசதிகளும் வாய்ப்புக்களும் குறைந்த புறநகர்ப் பகுதிகளுக்கு நூலகங்கள், சமூக நிலையங்கள், பொழுதுபோக்கு வசதிகள், இளைஞர் நலத் திட்டங்கள் கிடையாது. இருந்தவையும் நீக்கப்படுகின்றன. கல்வி கற்க ஆர்வ முள்ள மாணவர்களும் கல்விக்கட்டண அதிகரிப்பால் படிப்பைத் தொடரமுடியாத கடன் சுமைகளுக்கு ஆளாகின்றனர்.

மத்திய அரசின் நிலைப்பாடோ இன்னும் மோசமானது. சிறைச்சாலைகளைப் பெருப்பிப்பதும் புதிய சிறைச்சாலைகளைக் கட்டுவதும் தண்டனையின் அளவையும் காலத்தையும் கொடுமையையும் அதிகரித்துவிட்டால் குற்றங்களும் கொலைகளும் இல்லாமற்போய் விடும் என்றுமாகப் பிழையான மடமை பொருந்திய விசுவாசத்தோடு அது இயங்குகிறது. கடந்த இருபதாண்டு காலம் அமெரிக்க அரசு இத்தகைய திட்டங்களைக் கையாண்டு பெருந்தோல்வியுற்றமையை பலரும் அறிவர்.

குற்றங்களையும் கொலைகளையும் நிறுத்தி நல்வாழ்வும் நல்லாட்சியும் மிளிரும் நாட்டை உருவாக்கவேண்டுமானால் நமது திட்டங்களும் செயற்பாடுகளும் மேயர் றொப் போர்ட், பிரதமர் ஸ்ரீபன் ஹார்ப்பர் போன்றவர்களைப் போல கோபத்திலும் உணர்ச்சியிலும் தொடங்கப்படமுடியாது. அறிவிலும் ஆய்விலும் மக்கள் நலனிலும் இருந்தே தொடங்கப்பட வேண்டும்.

**முகப்பில்: கறுப்பு ஜூலையின் நேரடிச் சாட்சி - குரும்பசிட்டி இராசரத்தினம்**
*படம்: 'டிஜி' கருணா*


**Publisher & Editor :** P.J. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர் :** பி.ஜெ. டிலிப்குமார்

**ஆலோசகர் குழு :** சேரன், துஷி ஞானப்பிரகாசம், ஞானம் லெம்பட், கந்தசாமி கங்காதரன், கருணா, பொன்னையா விவேகானந்தன்

**ஓவியங்கள் :** ஆசை இராசையா (இலங்கை)
ட்ராட்ஸ்கி மருது (இந்தியா)
ஜீவா (இந்தியா)
கைலாசநாதன் (இலங்கை)
கருணா (கனடா)
மு. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து)

**புகைப்படங்கள் :** கணா ஆறுமுகம், கருணா

**தட்டச்சு :** கௌரி, ஜீவா, மஞ்சுளா ராஜலிங்கம், சாம் டானியல்

**ஒப்புநோக்கல் :** கௌரி, மஞ்சுளா ராஜலிங்கம், வீ. நடராஜா.

**வரைகலை ஆலோசனை :** கருணா (டிஜி வரைகலை அமையம்)

**ரொறன்ரோ விநியோகம் :** இராமநாதன் ரூபன்

**மொன்றியல் தொடர்புகள் :** சுகுமாரன் சின்னையா
1-514-299-3186

**ஒட்டாவா தொடர்புகள் :** அலெக்ஸ் சிவசம்பு
1-613 -276-7253

**அஞ்சல் முகவரி :** Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

**Tel :** 416-646-3422, 416-857-6406
**Fax :** 416-849-0594
**Web :** www.thaiveedu.com
**E-mail :** info@thaiveedu.com

Printed on recycled paper

# நீதிகேட்கும் போர்க்குற்றங்கள்

- அ. கணபதிப்பிள்ளை -

உலகெங்கும் போரின் வடுக்களைச் சுமந்து கொண்டிருக்கும் பல கோடிக்கணக்கான மக்களது வாழ்வியலில் போரும், போரை நடாத்தியவர்களும், போருக்குப் பின்னணியில் கற்பிக்கப்படும் காரணங்களும் வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சும் நடவடிக்கையாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

போர்கொடுத்த கசப்பான நினைவுகளைச் சுமந்துகொண்டிருக்கும் பிஞ்சு மனங்கள் இன்று போர்க்குற்றங்களுக்கான நீதி வழங்கும் நீதி பதிகளாக மாற்றம் பெற்றிருக்கின்றார்கள். ‘போரின் வன்மம் தீர்த்தல் என்பது தொடரும் போருக்கு இடும் வித்துக்கள்’ ஆனால் போ-ருக்கான சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்துத் தண்டனை பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகள் தான் போரைத் தவிர்க்கவும் மனிதகுல சமாதானத்துக்கும் வழிஏற்படுத்திக் கொடுக்கக்கூடியவை.

1950 ஆம் ஆண்டு இடம் பெற்ற கொரிய யுத்தத்தின் விளைவாக ஏற்பட்ட இரப்பர்த் தேவையைச் சாதகமாக்கிக் கொண்டு, இலங்கை பொருளாதார வளர்ச்சியைப் பெற்றதுடன் புதிய புதிய கட்டடங்களுடன் இணைந்த உயர்ச்சியும் வெளியிற்தெரியத் தொடங்கியது. ஆனால் மறுபக்கத்தில் கொரியாவின் சாதாரண மக்கள் பட்ட துயரங்கள் சொல்லிமாளாதவை.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் தலைவரான நீதிபதி சாங் கையுன் சொங் (Sang Hyun Song) சிட்னி நியூசவுத்வேல்ஸ் பல்க-லைக்கழகத்தில் feb 14, 2012 க்கான உயர்திரு வலஸ் வூர்த்தின் (Wallace Wurth) ஞாபகாத்தப் பேருரையில் கொரியப் போர் தனக்குக் கொடுத்த கொடுமையினை வெளிப்படுத்தியிருக்கிறார். அவர் மீட்டிருந்த நிகழ்வுகளின் நினைவானது இன்று ஈழப்போரில் இளங் குஞ்சுகள் பட்ட துன்பத்துக்கு எத்துணையும் பெரியதாகிவிடவில்லை. ஈழப்போரில் எஞ்சிய இளம் பிஞ்சுகள் எதிர்காலச் சமாதானத்துக்கான தலைவர்களாக ஒரு நாள் உயருவார்கள் என்ற உறுதியான நம்பிக்கையினை அவரது உரை வழங்கியிருக்கிறது.

60 வருடங்களுக்கு முன் கொரியாவைப் போர் மேகங்கள் சூழ்ந்திருந்த பொழுது அவர் 9 வயதுச் சிறுவன். அப்பொழுது போர்கொடுக்கும் பயங்கரத்தைத் தன்னால் உணரமுடிந்தது என்று குறிப்பிடுகிறார் மூன்று மாதங்கள் சோல் (Seoul) நகரத்தில் வெப்பமும் புளுக்கமும் உடைய நிலத்தடிக்குழிகளுக்குள் (பங்கர்-களுக்குள்) இருந்ததை ஞாபகப்படுத்துகிறார். நாளாந்தச் சாப்பாட்டுக்காக ஒவ்வொரு நாளும் பதினாறு கில்லோ மீட்டர் தூரம் நடக்கவேண்டியிருந்தது. சாப்பட்டுப் பொருட்களைக் கொண்டு வரும் பொழுது குண்டு வீசும் விமானங்களின் குண்டுப் பொழிவினால் பலதடவைகள் சாப்பாடு மண்ணில் சிதற உயிர்காக்கும் மறைவிடம் தேடவேண்டியிருந்தது அவருக்கு. நாளாந்தம் பயணித்த வழியெங்கும் நூற்றுக் கணக்கான உடலங்களை அவர் காண நேர்ந்தது. இதுதான் போர் கொடுக்கும் மன உளைச்சல் இதனை எத்தனை ஆயிரம் ஈழச் சிறுவர்கள் அனுபவத்திருப்பார்கள்.

‘போர் என்பது அசிங்கமான பயங்கர நடவடிக்கை’ (War is a Filthy, Terrible business) என்ற வலஸ் வூர்த்தின் கூற்றினை நினைவு

> “ *சர்வதேச அளவில் முதலாவது நீதிவழங்கும் நிறுவனமான சர்வதேசக் குற்றவியல் நீதி மன்றமானது இனக்கொலை, மனித குலத்துக்கெதிரான குற்றச்செயல், போர்க்குற்றம் என்பவற்றுக்காகத் தனிப்பட்டவர்களுக்குத் தண்டனை வழங்கும் தகுதியுடைய ஒரு நிரந்தர நீதிமன்றமாகும்.* ”

கூர்ந்தார். இதனைத் தடுக்கவேண்டும் என்பதில் நான்கு வழிகள் பின்பற்றப்படவேண்டும் என்ற தனது விருப்பத்தை வெளியிட்டிருக்கிறார்.

- போருக்கான அவாவினை மழுங்கடித்தல் (Deterrence):

இதனை, குற்றத்துக்கான தண்டனைகளை வழங்குவதன் மூலம் குற்றம் செய்யும் பயத்தை மக்களிடையே ஏற்படுத்தலாம்.

- சரியான நேரத்தில் தலையிட்டுத் தடுத்தல் (timely Intervention):

ஈழப்போர் போன்ற பலபோர்களில் சரியான நேரத்தில் தலயிட்டிருந்தால் போரில் மனித அழிவுகளைக் குறைத்திருக்கலாம்.

- உறுதியான நிலைமையை ஏற்படுத்துதல் (Stabilizalion) நீண்டகால சமாதானத்துக்கான திட்டங்களை அமூலாக்குதல்:

இதனை, சிறந்த தீர்வுத்திட்டங்கள் மூலம் ஏற்படுத்தலாம். இலங்கை போன்ற நாடுகளில் சிறப்பான தீர்வுத் திட்டம் புரையோடிப் போன இன, மத, மொழிசார் ஐக்கிய முரண்பாடுகளைத் தீர்க்க உதவலாம்.

- போரற்ற விழுமியங்களை அமைத்தல் (Norm Setting) :

மக்கள் மனதில் போர் தொடர்பான விருப்பமில்லாத நிலைமையை ஏற்படுத்தும் ஐக்கியம், நட்பு, போரற்ற நாகரிகம் போன்றவற்றை ஏற்படுத்துதல் ஆகியன போரில்லாத சமூகத்தைக் கட்டிஎழுப்ப உதவும் என்ற நாலு வகைத் தீர்வுக் கருத்தினை வலியுறுத்துகிறார்.

இரண்டாம் உலகப் போரின் பின்பாக எழுப்பப்பட்ட அடிப்படையான வேண்டுகோள் உலக சமாதானத்தைப் பாதுகாப்பதும், தனிமனித கௌரவத்தைப் பேணவேண்டும் என்பதுமாகும். இதற்காக உருவாக்கப்பட்டவை ஐக்கிய நாடுகள் சபையும் அதன் துணைநிறுவனங்களும் அவற்றால் உருவாக்கப்பட்ட அமைப்புக்க-ளுமாகும்.

‘சட்டங்கள் மனிதர்களையும் நாடுகளையும் காப்பாற்றுகின்றன.’ ஐ.நா. பட்டயத்தில் வரையறை செய்யப்பட்ட மனித உரிமைகள், போரில் மனிதர்களைக் காப்பாற்றும் சட்ட விதிகளான சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள், மனிதர்களைப் பாதுகாப்பது நாடுகளின் கடமைப்பாடு என்று வலியுறுத்துவது போன்ற சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள், சர்வதேசக் குற்றவியற் சட்டங்கள் ஆகிய நாலு பிரிவுகளும் தனிமனிதர்களையும் உலக சமாதானத்தையும் பாதுகாக்கும் தொண்டினைத் திறம்படச் செயலாற்றி வருவதாகக் குறிப்-பிடுகிறார்.

குற்றம் செய்பவர்களுக்குத் தண்டனை, வழங்-கக்கூடிய ஒரு நிறுவனத்தின் மூலம் போர் அவாவினைக் குறைப்பதுடன் போருக்கான சூத்திரதாரிகளுக்குத் தண்டனை வழங்கமுடியும் என்ற கருத்தியற் பின்னணியில் உரு-வாக்கப்பட்டதுதான் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் (International Criminal Court ) (I.C.C.). இதற்கான எண்ணக்கருவினை வழங்கியவை 2ம் உலகயுத்தத்தின் பின் உருவாக்கப்பட்ட நூறன்பேக்(Nurenberg) ரோக்கியோ (Tokyo) இராணுவ நீதிமன்றங்கள் தான். 1989ஆம் ஆண்டு றினிடாட் அன்ட் ரொபேகோ நாட்டுப் பிரதமராயிருந்த ஏ.என்.ஆர். றொபின்-சன் என்பவர் சட்டத்துக்குப் புறம்பான போதைப் பொருள் விற்பனைக்கெதிராகச் செயலாற்றத்தக்க ஒரு நிறுவனத்தின் அவசியத்தை வெளிப்படுத்தியிருந்தார். யூகோஸ்லாவியா (1993) றுவாண்டா (1994) ஆகிய நாடுகளில் ஏற்படுத்தப்பட்ட மனித உரிமை மீறுதல்களும் மனித இனத்துக்கெதிரான கொடுமைகளும் 1998ல் ஐ.நா. பொதுச்சபையினாற் கூட்டப்பட்ட ரோம் மாநாட்டுக்கு வழியேற்படுத்திக் கொடுத்திருந்தது. 120 நாடுகளின் விருப்பத்துடனும் 21 நாடுகள் விரும்பாமலும் இருந்த நிலையில் இந்த அமைப்புக்கான ஆதரவு கிடைத்தது.

முதன்நிலையில் 60 நாடுகளால் கையெழுத்திட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட ரோம் உடன்ப-டிக்கை 2002ம் ஆண்டு ஜீலை மாதம் 1ம் திகதி முதல் நடைமுறைப்படுத்தும் நிலையைப் பெற்றிருந்தது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கான ரோமாபுரிச் சட்டங்களை 120 நாடுகள் அங்கீகரித்திருந்தாலும் இன்னமும் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளாத நிலையில் 40 சதவீதமான நாடுகளுள்ளன. ஐ.நா. மனித உரிமைகள் கண்காணிப்புப் பிரிவும் பிரதான பங்கினைச் செலுத்தும் நிலைக்குள் இருந்து வருகிறது.

சர்வதேச அளவில் முதலாவது நீதிவழங்கும் நிறுவனமான சர்வதேசக் குற்றவியல் நீதி மன்றமானது இனக்கொலை, மனித குலத்துக்கெதிரான குற்றச்செயல், போர்க்குற்றம் என்பவற்றுக்காகத் தனிப்பட்டவர்களுக்குத் தண்டனை வழங்கும் தகுதியுடைய ஒரு நிரந்தர நீதி மன்றமாகும்.

இதிலிருந்து வேறுபட்ட ஒரு நிறுவனம்தான் ஐ.நா. வின் பிரதான நீதி நிறுவனம். இது 1946ல் உருவாக்கப்பட்டது. சமாதானத்துக்கான சர்வதேச நீதிமன்றம் (International Court of Justice) ஐ.நா. வின் பிரிவாக, நாடுகளுக்கிடையிலான சர்ச்சைகளைத் தீர்க்க உதவி வருகிறது.

குற்றமிழைக்கப்பட்ட நாட்டு நீதிமன்றங்கள் விசாரணைசெய்ய விரும்பாமலும், அத்தகைய குற்றங்களை விசாரணை செய்து தண்டனை வழங்க முடியாத நிலையில் அந்த விசாரணையினை முன்னெடுக்கும் அதிகாரத்தை இப்பங்குதார நாடுகள் (அங்கத்துவ அரசுகள்) வழங்கியிருக்கின்றன. ஐ.நா. பாதுகாப்புச்சபையின் பிரேரணையின் மூலம் குற்றத்துக்கான விசாரணை தொடர்பான அறிவுறுத்தலை வழங்கும்படியும் வற்புறுத்தப்படலாம்.

இவ்விதம் வழங்கப்படும் தண்டனையானது எழுத்து வடிவிலான குற்றச்சாட்டாகவோ, குற்றத்தை குறிப்பிட்டுச் சொல்லுவதாகவோ, உத்தியோக முறையில் தெரியப்படுத்துவதாகவோ, யூரிகள் கொண்ட விசாரணை மூலம் தண்டனை வழங்கும் முறையாகவோ அமையப் பெற்றிருக்கலாம்.

குற்றவியல் நீதிமன்றத்தின் நீதிவழங்கும் அதிகார எல்லை நாலு பெரிய குற்றங்களை அடிப்படையாகக் கொண்டதாக அமைகிறது. சொந்த நாட்டில் விசாரணை செய்து தண்டனை அளிக்கமுடியாத சூழ்நிலை இப்பொ-ழுதும் அல்லது இனிமேலும்கூட நிலவும் நாடுகளில் நடாத்தப்பெற்ற இந்த நாலு வகையான குற்றங்களுக்கும் தண்டனை பெற்றுக் கொடுக்கும் அதிகாரத்தை இந்த ரோமாபுரிச் சட்டவரைவானது வழங்கியிருக்கிறது. இதில் நாலாவது வகையான ஆக்கிரமிப்பு என்ற குற்றமானது (Crime of aggresson) அயல் நாடுகளில் இராணுவ ஆக்கிரமிப்பு, எல்லை கடந்த இராணுவ அத்துமீறல், பேரழிவாயுதப் பிரயோகம் போன்ற குற்றங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும். வரைவிலக்கணப்படி இவற்றைக் குற்றமாக நாடுகள் ஏற்றுக்கொண்டிருக்காதநிலையில் 2010ம் ஆண்டு உகண்டா தலைநகர் கம்பாலா மாநாட்டில் 2017வரை மேலும் பல நாடுகளின் ஆதரவைப் பெறுமிடத்து ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய நிலைமை இடம் பெற்றிருக்கிறது.

தொடர்தல் 30ம் பக்கம்

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*


*E-mail: info@thaiveedu.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

வீடு வாங்குவதற்கும் விற்பதற்கும்



Century 21
Service Plus
5855 Taschereau Blvd (Office)
Brossard, Quebec. J4Z 1A5
Email : sugumaran@sympatico.ca

Office : (514) 299-3186
(450) 926-1881



Sugumaran Sinnaiah
Chartered Real Estate Broker

**ஜுலை மாதம் தமிழர்களைப் பொறுத்தமட்டில் கறுப்பு ஆனது 1983 இல். கறுப்பு ஜுலையின் கசப்பு நினைவுகள் எளிதில் மறந்துவிடக் கூடியவையல்ல. 29 ஆண்டுகள் கடந்தும் ஈழத்தமிழர் வரலாற்றில் ஆறாவடுவாக இருந்து கொண்டிருக்கின்றது அது. 1983 ஜுலை கறுப்பு ஜுலையில் உறவினர்களைப் பறிகொடுத்தோர், சொத்துக்களை இழந்தோர், நடந்த அட்டூழியங்களை நேரடியாகப் பார்த்தோர் என்று பலரும் மனதில் வடுக்களோடு கனடாவிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுள் ஒருவரான குரும்பசிட்டி இராசரத்தினம் அவர்களை தாய்வீடு இதழுக்காகச் சந்தித்தோம்.**



# இரத்தம் வழிய வழிய தமிழர்கள் ஓடிக்கொண்டிருந்தனர்

## - குரும்பசிட்டி இராசரத்தினம்

**நேர்காணல்: கந்தசாமி கங்காதரன்**

**கறுப்பு ஜுலையில் நீங்கள் கண்டவற்றை விபரிக்க முடியுமா?**

என்னுடைய வேலை காரணமாக கொழும்பில் வாழ்ந்து கொண்டிருந்தேன் வெள்ளவத்தை 55ம் ஒழுங்கையில் குடியிருந்தேன். என் இரு மகன்மாரும் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மாணவர்கள். நான் பணியாற்றிய அரச அலுவலகம் கொம்பனித்தெரு சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தையில் றீகல் திரையரங்குக்கருகே இருந்தது.

ஜுலை 25ம் நாள் திங்கள் காலையில் பொரளைப்பக்கம் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்ததாகச் செய்திகள் வர, மகன்மார் இருவரையும் பாடசாலை செல்லவேண்டாமென மறித்துவிட்டு நான் அலுவலம் சென்றேன். அலுவலகம் வழமைபோல் இயங்கத் தொடங்கியது காலை 10:00 மணியளவில் வெளியே பெரும் கூச்சலும் ஆரவாரமுமாக இருந்தது. மாடியிலிருந்து சாளரம் வழியாகப் பார்த்தோம்.

கார்களை மறித்து, கார்களிலிருந்தோரை வெளியே இழுத்து அடித்து உதைத்துத் துன்புறுத்திக் கொண்டிருந்தது ஒரு கும்பல். எங்களுக்குப் பயம் தொற்றிக் கொண்டது. 4 தமிழர்கள் வரையில் அங்கு பணிபுரிந்தோம். எங்கள் மேலதிகாரி (சிங்களவர்), ‘‘நீங்கள் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம் நான் உங்களை உங்கள் வீடுகளுக்குக் கொண்டு சென்று விடுகிறேன்’’ என்று ஆறுதல் தந்தார். வெளியே எட்டிப் பார்க்கவும் பயமாக இருந்தது. அருகேயிருக்கும் லேக் ஹவுஸ் கட்டத்துக்கு முன்பாக நின்ற காவற்றுறையினர் கூட வன்முறைக் கும்பல்களின் நடவடிக்கைகளை நிறுத்த முனையவில்லை. பார்த்துக்கொண்டு எதுவுமே செய்யாது நின்றனர். தமிழர்கள் என்று கண்டுகொண்டால், வாகனங்களிலிருந்து இழுத்து அடித்து உதைத்தனர் காடையர்கள். ‘வீட்டில் என்னாயிற்றோ?’ என்ற யோசனையும் சேர்ந்துகொண்டது. நான் வசித்த வீட்டில் தொலைபேசி வசதியும் இருக்கவில்லை. மனைவியும் 2 மகன்மாரும் வீட்டில் தனியே. மனம் பதைபதைத்தது.

*தொடர்தல் 26ம் பக்கம்*

## வீட்டினுள்ளே இன்னும் வருபவை...


நோவு தவிர்ப்பு வைத்தியம் — குமார் புனிதவேல் — 15
ஏமாற்றம்: ஓர் எண்ணத்தின் தோல்வி — எஸ். பத்மநாதன் — 16
உங்களைவிட, உங்களைப் பற்றித் தெரிந்தவர் யார் — 28
காற்றுவடி இயந்திரம் — செல்வி அதினி — 32
உங்களது வீட்டு பரிசோதனையில் சித்தியடைவதற்கு அறிந்திருக்க வேண்டிவை — மகேன் சிங்கராஜா — 38
உதவியுடனான தற்கொலை / வேதனையற்ற மரணம் / கருணைக் கொலை — ஜீவா திசைராஜா — 43
எக்கினேசியா — செல்லையா சந்திரசேகரி — 45
கருணைக் கொலையை ஏற்கலாமா? — பொன் குலேந்திரன் — 46
எருமைத்தயிரும் எள்ளுருண்டையும் — கதிர் துரைசிங்கம் — 52
வேலை செய்யும் இடங்களில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் — என். மிலான் — 56
காபனீரொட்சைட் நச்சுவாயு — 58
எரிபொருட் செலவைச் சேமிப்பதற்கான.... — 63
பொருள் தேடும் பூமியில்... — சிவவதனி பிரபாகரன் — 64
நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் — முருகேசு பாக்கியநாதன் — 66
ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி - 2012 — குரு அரவிந்தன் — 72
அடி வாங்கிப் பெறும் அறிவு — உதயணன் — 75
சரசோதிமாலையில் வீடுகட்டும் படலம் — பால சிவகடாட்சம் — 78
றொறன்ரோவில் ‘கர்ணன்’ — பொன்னையா விவேகானந்தன் — 83
அந்த மனிதன் — என்.கே. மகாலிங்கம் — 85
மாறுதல்கள் — தெளிவத்தை ஜோசப் — 88
புறோக்கர் இரத்தினம் — பொ. கனகசபாபதி — 95
அலசாத அழுக்குத் துணி — அ.முத்துலிங்கம் — 97
இரண்டாம் கலியாணம் — இளைய அப்துல்லாஹ் — 103
நதி — தேவகாந்தன் — 104
அடுத்தவர்களின் அழிவுகளில் எழுகின்ற எங்கள் பரம்பரை — நிமால் நாகராஜா — 108
போராளியின் செயற்படு தன்மையின் உளவியல் — சுல்பிகா இஸ்மாயில் — 110
எனது இணையிலா இரசிகர் திரு. சின்னத்துரை நடராஜா — வி. கந்தவனம் — 112

# உலகளாவிய குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் கனடியர்கள்



ராதிகா சிற்சபைஈசன்

**உலகளாவிய குடும்ப கட்டுப்பாட்டுத் திட்டத்தில் கனடியர்களின் தலைமைப் பங்களிப்பிற்கான நேரம்:**

U.K அரசும் மற்றும் Bill & Melinda Gates அறக்கட்டளையும் சேர்ந்து குடும்ப கட்டுப் பாட்டுத்திட்டம் சம்பந்தமான ஒரு முக்கியமான மகாநாட்டை கடந்த ஜுலை 11ஆம் தேதி நடத்தினர்.

Londonல் நடந்த இந்த மாநாட்டிற்கு உலகளவில் பல தலைவர்களும் மற்றும் தனியார்களாக துறைசார்ந்த பல முக்கியமான சமூக ஆர்வலர்களும் கலந்து கொண்டனர். இந்த மகாநாட்டில் மகளிர் உரிமை பற்றியும் மற்றும் பெண்களின் மகப்பேற்றுரிமை (பெண்கள் எத்தனை குழந்தைகள் பெற்றுக்கொள்ள விருப்புகின்றனர்) பற்றியும் முக்கியமாக விவாதிக்கப்பட்டது.

குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தமாக ஏற்கனவே ஒரு மாநாடு Istanbul ல் கடந்த மே மாதம் நடத்தப்பட்டது. அதில் உலககின் பல பாகங்களிலிருந்தும் 200க்கும் மேற்பட்ட பாராளுமன்ற அங்கத்தினர்கள் கலந்து கொண்டனர். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை முழு முயற்சியுடன் செயலாற்ற வேண்டும் என்று அந்த கூட்டத்தில் அவர்கள் உறுதி எடுத்துக் கொண்டனர். பாலின மற்றும் இனவிருத்தி ஆரோக்கியம் சம்பந்தமான சுகாதார திட்டங்களுக்கும் பெருமளவில் நிதியுதவி அளிக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

இந்த உலகத்தில் பெண்களுக்கு அதிலும் குறிப்பாக இளம் பெண்களுக்கு, கர்ப்பம் அடைவதைத் தடுக்கப் போதிய அறிவோ அல்லது தேவையான சாதனங்களோ இருக்கவில்லை. உலகளவில் வளர்ந்து வரும் நாடுகளில் 20 கோடிக்கும் மேற்பட்ட பெண்கள், தாங்கள் கர்ப்பம் அடைவதைத் தடுக்க நவீன மற்றும் பயனுள்ள கருத்தடை சாதனங்களை பயன்படுத்துவதில்லை.

இதன் காரணமாய் ஒவ்வொரு வருடமும் ஏழரைக் கோடிக்கும் மேற்பட்ட பெண்கள் தங்கள் விருப்பத்திற்கு மாறாக கர்ப்பிணி ஆகின்றனர். இதனால் கருச்சிதைவு மற்றும் குறைப் பிரசவம் போன்ற பல தொல்லைகளுக்கும் அவர்கள் ஆளாகின்றனர்.

எனவே, அனைத்து பெண்களும் முழு அளவிலான ஒரு சுகாதாரமான மற்றும் நவீன கருத்தடை முறையை பின்பற்ற வேண்டியது அவசியம்.

பெண்களின் பாலின மற்றும் இன விருத்தி உரிமைகளை பாதுகாக்க கனடாவில் The Muskoka Initiative (மஷ்கோக்கா நலத்திட்டம்) தொடங்கப்பட்டுள்ளது. உலகளவில் பெண் சமூகத்தினரின் உடல் நலம் மற்றும் ஆரோக்கியத்தை பேணி பாதுகாக்க வேண்டும் என இந்த திட்டத்தின் முதன்மையான குறிக்கோளாக அறிவிக்கப்பட்டுள்ளது. உலகத்தில் வளர்ந்து வரும் நாடுகளில் பெண்கள் மற்றும் குழந்தைகளின் உடல்நலம் மற்றும் ஆரோக்கியம் பேணி காப்பாற்றப்பட வேண்டும் என G8 Muskoka மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இம் மாநாட்டில் கருத்தடை மருந்துகள் மற்றும் சேவைகளுக்கு 80 கோடி டாலர் நிதி உதவி தர அறிவிக்கப்பட்டது. ஆயினும் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு இந்த நிதியில் 2 சதவீதம் மட்டுமே இதுவரை செலவிடப்பட்டுள்ளது. உலகளவில் இந்த நிதிஉதவி மிக சொற்பமான தொகை தான். கர்ப்பத்தடை மூலமே குறைப்பிரசவம், கருச்சிதைவு மற்றும் சிசு மரணம் முதலிய வற்றை பயனுள்ள வகையில் தடுக்க முடியும். பெண்கள் தாங்களாகவே முன்வந்து குடும்பக் கட்டுப்பாடு செய்யும்போது, பல தாய்மார்களின் மரணத்தை தடுக்க முடியும்.

பல வளர்ச்சி திட்டங்களுக்கு அளிக்கும் நிதி உதவியில் கனடா அரசு கடும் நிதி வெட்டு அறிவித்துள்ளது. பாராளுமன்ற அங்கத்தினர்கள் கலந்துகொண்ட மாநாட்டில் ஒவ்வொரு நாடும் தன்னுடைய தேசிய வருமானத்தின் (Gross National Income) 0.7 சதவீதத்தை வெளிநாட்டிற்கு உதவியாக அளிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இந்த இலக்கிற்கு மாறாக நிதி உதவியில் கனடா நீண்ட வெட்டு அறிவித்துள்ளது.

தன்னுடைய March 29ஆம் தேதி நிதிநிலை அறிக்கையில் கனடா, நலத்திட்டங்களுக்கான நிதி உதவியை ஏறத்தாழ 80 கோடி டாலர் அளவில் குறைத்துள்ளது. இன்றிலிருந்து 2015இற்குள் நிதி உதவியில் 14 சதவீதம் குறைக்கப்படும். 2010 மற்றும் 2015க்குள் உலக நாடுகளுக்கு கனடா வழங்கும் உதவி 0.34 சதவீதத்திலிருந்து 0.24 சதவீதத்திற்கு சரிவடையும். இதனால் மிகக் குறைந்த நிதி உதவி வழங்கும் நாடுகளில் கனடாவும் ஒன்றாகும் நிலை உருவாகியுள்ளது. உலகில் சில மிகமிக வறிய நாடுகளுக்கு கூட, கனடா தான் அளித்து வந்த நிதி உதவியில் கடும் வெட்டு அறிவித்துள்ளது. நிதி உதவி பெற்று வந்து Rwanda, Zambia, Zimbabwe, Malawi மற்றும் Niger போன்ற ஆப்பிரிக்க நாடுகளை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

தாய்மைப் பேறடைந்த பெண்கள் குழந்தை பிரசவிப்பதில் மிகவும் கஷ்டப்படும் நாடு Niger என Thirteenth state of the world's Mothers Report (08 May 2012) தெரிவித்துள்ளது. Mozambique, Ethiopia மற்றும் Tanzania போன்ற நாடுகளுக்கும் அளித்துவந்த நிதி உதவியை கனடா குறைக்க ஆரம்பித்துள்ளது.

பிரசவத்தின் போது தாய் மற்றும் சேய் மரணத்தை தடுக்க இந்த ஆப்பிரிக்க நாடுகள் கடுமையாக போராடி வருகின்றன. அதனால் கனடாவின் வெளிநாட்டு அமைச்சகம் இந்த நாடுகளுக்கு பெரும் அளவில் நிதி உதவி அளிக்க வேண்டும் என்பதே ஒவ்வொரு கனடியரின் விருப்பம். ஆனால் இதற்கு மாறாக நிதி உதவியைக் குறைக்க முடிவு செய்துள்ளது கனடிய அரசு.

rathika.sitsabaiesan@thaiveedu.com

■ ■ ■

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*

*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான*

*பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveeducom***

***Fax: 416-849-0594 Tel: 416-646-3422***

YOUR HOME DOESN'T COME WITH MORTGAGE ADVICE. I DO.



- Purchase Refinance Preapprovals
- Builder rate hold up to 24 months
- Special program for Self employed and New immigrants
- Unlock your equity in your home with RBC Home Line Plan
- Available 7 days a week

**Call now before rate goes up!**

As your RBC Mortgage Specialist and a trusted member of our community I can advise you on your options and give you the confidence you need to make the right decisions. I can meet with you at a **place** and **time** that is **convenient** for you.

**Ram Krish**

**RBC Royal Bank**

Mobile Mortgage Specialist

Direct: **416-849.5363**

Email: ram.krish@rbc.com

* Some conditions apply.

RBC



- digi Media -

# சிறுநீரகச் செயலிழப்பு

## இதயம் மலர்கிறது - 44



கந்தையா செந்தில்நாதன்
- Echo - Cardiographer -

### Kidney Failure

மிகவும் பிரதானமான உறுப்புக்களில் சிறு-நீரகமும் ஒன்றாகும். அவரை விதை போன்ற அமைப்புடைய இரு சிறுநீரகங்கள் எமது உடலில் வயிற்றுப் பகுதியில் முள்ளந் தண்டின் இருமருங்கிலும் அமைந்துள்ளன. வலது சிறுநீரகம், இடது சிறுநீரகம் என அழைக்கப்படும் இவ்விரு சிறுநீரகங்களும் எமது உடலின் தொழிற்பாட்டியலில் பெரும் பங்கினை ஆற்றுகின்றன.

### சிறு நீரகங்கள் ஏன் பிரதானமானவை?

உடற்தொழிற்பாட்டியலின் போது ஒவ்வொரு தடவையும் இதயம் குருதியைப் பாச்சும் பொழுது அதில் ஐந்தில் ஒரு பகுதி சிறு நீரகங்களின் ஊடாகச் செல்கின்றன. அப்-பொழுது குருதியில் உள்ள அழுக்குகள் வடிகட்டப்பட்டு கழிவுகள் சிறுநீருடன் வெளி யேற்றப்படுகின்றன. ஒரு நிமிட நேரத்தில் சராசரியாக 72 தடவைகள் அடிக்கும் இதயம் உடல் பூராவும் ஏறத்தாழ 5 லீற்றர் குருதி யைப் பாச்சுகின்றது. இதில் 1 லீற்றர் குருதி இரு சிறுநீரகங்களூடாகவும் ஒரு நிமிட நேரத் தில் வடிகட்டப்படுகின்றன. நாம் உறங்கும் போதும், உண்ணும் போதும், வேறு செயற் பாடுகளில் ஈடுபடும் பொழுதும் தொடர்ச்சியாக இச்சிறுநீரகங்கள் சுத்தகரிப்பு வேலையைத் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன.

சிறுநீரகங்களின் அடுத்த பிரதான தொழில் குருதியில் உள்ள எல்லாவித உப்புக்களின் அளவுகளையும் சமமாக வைத்திருப்பதாகும். இதன் மூலம் குருதியமுக்கத்தை சரிவரப் பேணமுடிகிறது.


சிறுநீரகங்கள் பிராணவாயுவின் அளவை உணரக் கூடியவை. அதாவது செங்குருதிச் சிறுதுணிக்கைகள் உடலில் குறையும் பொழுது அவை 'எரித்திரோ பொயிற்றின்' (Erythro poitin) என்கின்ற ஹோமோனைச் சுரந்து செங்குருதிச் சிறுதுணிக்கைகளின் பெருக்-கத்தை எலும்பு மச்சை, ஈரல், மண்ணீரல், போன்ற அங்கங்களில் தூண்டுவதன் மூலம் அதன் எண்ணிக்கை உடலில் சரிவரப் பேண உதவுகின்றது.

குருதியில் கல்சியத்தின் அளவைக் கூட 'கல்சிரெறோல்' என்ற பதார்த்தத்தைத் தயார் செய்வதன் மூலம் கட்டுப்படுத்துகின்றது. எமது குருதியானது சிறிது காரத்தன்மை உடையது. அதாவது pH அளவு 7.2ற்கும் 7.4ற்கும் இடையில் பேணப்படுவதற்கு சிறு நீரகத்தின் வடிகட்டல், தேவையான பதார்த்-தங்களை மீளவுறிஞ்சுதல் போன்ற தொழிற் பாடுகள் மிகவும் அவசியமாகின்றது.

எமது உடலிற்குத் தேவையான பெறுமதியான சத்துக்கள் வடிகட்டலின் போது வெளியேறா மல் அவற்றைப் பாதுகாப்பதுடன் கழிவுகளான யூறியா, யூறிக் அமிலம் போன்றவற்றை வெளியே கழிக்கின்றது.

எமது அன்றாட உணவில் உள்ள மென் நஞ்சுகள், உட்கொள்ளும் மருந்துகள் போன்ற வற்றை உடலில் இருந்து அகற்றுவதுடன் ஈரலினால் பிரித்தழிக்கப்படும் தேவையற்ற பொருட்களையும் வெளியே அகற்றுவதற்கு உதவிபுரிகின்றது.

உடற்தொழிற்பாடு தொடர்ந்து நடைபெறும் பொழுது பலவிதமான அனுசேபத் தொழிற் பாடு, அவசேபத் தொழிற்பாடுகள் நடைபெறு கின்றன. அதாவது சிறு பிள்ளைகள், பெரிய வர்களாக வளரும் பொழுது வளர்ச்சியானது உடலைக் கட்டியெழுப்புகின்றது. அன்றாடம் நாம் செய்யும் உடற்பயிற்சி, செய்யும் தொழில், உடல் நிலை பேணுதல் போன்றவற்றின் பொழுது உடலின் ஏற்படும் சிதைவுகளைத் திருத்துவதற்கு பலவிதமான செயற்பாடுகள் உடலினுள் நடந்த வண்ணம் இருக்கின்றன. இச்செய்கைகளின் பொழுது அகற்றப்படும் பல கழிவுகள் சிறு நீரகங்களூடாக கழிக்கப் படுகின்றன.




இது தவிர சிறுநீரகங்களால் சுரக்கப்படும் றீனின் (Renin) என்கின்ற பதார்த்தம் அன்-ஜியோ ரென்சினோஜென் என்ற பதார்த்தத்தை அன்ஜியோ ரென்சின் I ஆக மாற்றுகிறது. இது சுவாசப்பையில் பிறிதொரு பதார்த்தத்தால் அன்ஜியோ ரென்சின் II ஆக மாற்றப்படுகி றது. உடலின் பல தொழிற்பாடுகளிற்கு இப்பதார்த்தம் தேவைப்படுகிறது.

### பல நன்மைகளைச் செய்து கொண்டிருக்கும் இச்சிறு நீரகங்கள் பழுதடைவதற்குக் காரணங்கள் என்ன?

- மிகவும் குறைந்த அளவு திரவம் அருந்-துதல்.
- வயிற்றோட்டம், வாந்தி, வியர்வை, காச்சலின் போது உடலில் உள்ள திராவ-கத்தன்மை குறைதல்.
- குருதிப்பெருக்கினால் சிறுநீரகங்களூடாகச் செல்லும் குதுதியின் அளவு குறைதல்.
- சில சமயங்களில் சிறுநீர் கழிவதற்காகக் கொடுக்கப்படும் வில்லைகள்.
- சிறுநீரகங்களுக்குக் குருதி வினியோகிக் கும் நாடி, நாளங்களில் தடங்கல்.
- தொற்றுக் கிருமிகளால் குருதியில் அதிக நீர்ப்பீடனத் தாக்கத்தால் சிறுநீரகங்களில் வீக்கம் ஏற்பட்டு தொழிற்பாடு அற்றுப் போதல்.
- உட்கொள்ளும் சில மருந்துகள் சிறுநீர கங்களை பாதிக்ககூடியவை (Gentamicin, Naproxen Etc).
- உடற்காயங்கள், நெருப்புக்காயம் போன்ற வற்றால் ஏற்படும் உடற் சிதைவுகளின் போது பழுதான தசைகளின் நார்களின் சிறுபகுதிகள் வடிகட்டும் பகுதிகளை அடைக்கலாம்.
- ஆண்களில் மூத்திரக்காய் (Prostate Gland) வீக்கம் சிறுநீர் வெளியேறுவதைத் தடுத்து, தேங்கும் சிறுநீர் பின்பக்கமாக வந்தவழியே சென்று மீண்டும் சிறுநீரகங்களை அடையும்.
- சிறுநீரகக் கற்களும் இத்தடங்கலை ஏற்ப டுத்தவல்லவை
- அதிக குருதியமுக்கம்.
- நீரிழிவு நோய்.

போன்று பல காரணங்கள் உண்டு.

### குணங்குறிகள்:

- உடல் வீக்கம்/ உடற் பலவீனம்/ மூச்சு வாங்குதல்
- குறைந்தளவு சிறுநீர் கழிதல்
- மாறாட்டம், மனதைக் குவியச் செய்வதில் சிரமம்
- தூக்கக் குணம்
- வாந்தி, வயிற்றோட்டம், குமட்டல்
- வயிற்று வேதனை
- வாயில் ஒரு விதமான ருசி
- நோய் முற்றிய தறுவாயில் வலிப்பு, மயக்கம் ஏற்படலாம்.
- பொட்டாசியம் வெளியேற்ற முடியாததால் இருதயத்துடிப்பில் பாரிய ஏற்றம்/ மாறாட் டம். இது இறுதியில் இறப்பில் முடிவடை யலாம்.
- உடலில் உற்பத்தியாகும் Urea என்ற பதார்த்தக் கழிவடையாமல் தேங்குவதால் பல உள்ளுறுப்புகள் பாதிக்கப்படும். மூளை யில் சிந்தனைத்திறன் பாதிப்படையும்.
- இருதயச் சுற்றுவிரி வீங்கி Pericarditis என்ற இதய வியாதி ஏற்படும்.
- கல்சியம் அளவு குறைவதால் தசைகளில் பலவீனம் ஏற்படும்.
- குருதிச் சோகை – செங்குருதிச் சிறு துணிக்கைகளின் அளவு குறைவதால் பொதுவாக உடம்பில் இயலாமை ஏற்படும்.
- கழிவுகள் உடலிலிருந்து கழிக்கப்படாது தேங்குவதால் தூக்கக்குணம், பசியின்மை, இலகுவில் களைத்துப் போதல் போன்ற குணங்கள் ஏற்படும்.
- சிறுநீரகம் பழுதாகிய நிலையில் அமிலத் தன்மையைக் குருதியில் கட்டுப்படுத்த முடி யாது போய்விடும். இதை ஈடு செய்வதற் காக சுவாச வீதம் கூடி விடுவதும் உண்டு.

### எப்படிக் கண்டுபிடிப்பது

### குருதிச் சோதனை:

- Bun, Creatinine அளவுகள் கூடும்
- GFR – குறையும்.
- கனியுப்புக்களின் அளவு ஒப்பிடுதல்

### சிறுநீர்ச் சோதனை:

- சிறுநீரில் புரதம் காணப்படுதல்
- பிரத்தியேகமான கலங்கள் காணப்படுதல்
- கனியுப்புக்களின் அளவு ஒப்பிடுதல்
- Ultrasound – சிறுநீரக அளவுகள், தடை கள்
- Biopsy

### சிகிச்சை:

- வருமுன் காத்தல்
- குருதி அமுக்கக் கட்டுப்பாடு
- நீரிழிநோய் கட்டுப்பாடு
- மேலும் நோய் வளர விடாது கட்டுப்பாட்

தொடர்தல் 18ம் பக்கம்

Royal Shades inc.
Interior Windows Design Solutions
ROYAL SHADES
Draperies | Blinds | Shutters | Door & Lock Systems | Crown Molding
Over 17 Years Experience
Satisfaction Guaranteed
Visit Our Showroom For Variety of selection
3031 Markham Road, Unit# 23 | Scarborough M1X 1L9
Tel: 416.562.0340 | 647 347 4474
info@royalshades.com | www.royalshades.com
Thaas Sivathason
416.562.0340





* When properly equipped

BUICK.CA

# ஆரோக்கியமான பற்கள் 05


பற்கள் தாடை எலும்புகளுக்குள் எப்படிக் கட்டமைக்கப் பட்டிருக்கின்றன என்பதைப் பார்ப்போம்.

Periodontium என்றொரு சொல் உள்ளது. பண்டைய கிரேக்க மொழியில் இருந்து பெறப் பட்டது. Peri - 'சுற்றி இருப்பது', Odontium 'பல் சார்ந்த' எனப் பொருள் படும். ஆகவே Periodontium என்றால் பல்லைச் சுற்றியிருப்பது என்று பொருள் படும். இது பின்வரும் பகுதி களைக் கொண்டது.

- Gingiva
- Periodontal Ligament
- Cementum
- Alveolar Bone

இவை பற்களை அவற்றின் சரியான இடங்க ளில் இருக்குமாறு பாதுகாப்பதால் supporting structures என்றும் சொல்லப்படும். இந்த அமைப்புகளைப் பற்றி இத்தனை விரிவாக அறிந்து கொள்ள வேண்டிய அவசியம் என்ன என்று ஒரு கேள்வி எழுகிறதா? காரணம் இருக்கிறது. இனி வரும் இதழ்களில் முரசு சம்பந்தப்பட்ட நோய்கள், அவை வாய்க்குள் ஏற்படுத்தும் பாதிப்புகள், அவற்றைத் தவிர்க் கும் செயல்பாடுகள் பற்றி விரிவாக பேசப் போகிறோம். அதற்கு இந்த அடிப்படை அறிவு தேவையாக இருக்கிறது.


வாய்க்குள் இரண்டு தாடை எலும்புகள் உள்ளன. மேல்தாடை (upper jaw) maxilla என்றும் கீழ்த்தாடை (lower jaw) mandible என்றும் அறியப்படும். தாடை எலும்புகளுக்குள் ஒவ்வொரு பல்லும் அதற்குரிய ஒரு குழிக் குள் பதிக்கப் பட்டிருக்கின்றது. அந்தக் குழி Tooth Socket எனப்படுகின்றது. தாடை எலும்பில் இந்த Tooth Socket அமைந்துள்ள பகுதி Alveolar Bone எனப்படுகின்றது. பல்லின் வேரை மூடியிருக்கும் cementum, alveolar bone ஆகிய இரண்டும் படம் 1 இல் காட்டப் பட்டது போல் இருக்கும்.




படம்: 1

Alveolar Bone உம் பல்லின் ஒரு பகுதியும் ஒரு மெல்லிய இழையத்தால் மூடப்பட்டிருக் கின்றது. இது தமிழில் பொதுவாக முரசு மற்றும் ஈறு என்றும் ஆங்கிலத்தில் gum என்றும் மருத்துவர்கள் மத்தியில் gingiva என்றும் அறியப்படுகின்றது.


Gingival Unit இல் Free Gingiva, Attached Gingiva, Alveolar Mucosa என மூன்று பகுதி கள் இருக்கின்றன. இவை படம் 2 இல் காட்டப் பட்டிருக்கின்றன.


படம்: 2

**Free Gingiva:**
பல்லின் crown உம் root உம் சந்திக்கும் பகுதியில் ஒரு பட்டி (collar) போல் இறுக்க மாகச் சுற்றிப் பற்றியுள்ளது. இதே gingiva இரு பற்களுக்கிடையே உள்ள இடைவெளியை நிரப்பும் போது Interdental papilla, Gingival papilla ஆகிய பெயர்களால் அறியப் படுகின் றது. Interdental papilla முன் வாய்ப் பற்களில் முக்கோணமாகவும் கூரான முனை கொண் டும், கடை வாய்ப் பற்களில் மழுங்கியும், இரு பற்களுக்கிடையே இடைவெளி இருக் கும்போது நேராக அல்லது குதிரையின் சேணத்தின் அமைப்பை ஒத்திருக்கும். (படம் 3)


படம்: 3

பல்லின் மேற்பரப்புக்கும் free gingiva வின் உட்பரப்புக்கும் இடையில் gingival crevice என்று சொல்லப்படும் ஒரு சிறு வெளி உள்ளது. முழு நலத்துடன் இருக்கும் gingival crevice, sulcus என்றும், நோய் கொண்ட போது pocket என்றும் அறியப்படும். எந்த நோயும் தாக்காத முழு நலத்துடன் இருக்கும் gingival sulcus இன் சராசரி ஆழம் 2 to 3 mm ஆக இருக்கும். (படம் 4)




படம்: 4

**Attached Gingiva:**
இது free gingivaவுக்கு அடுத்த படியாக உள்ள பகுதி, எலும்புடனும் cementum உடனும் உறுதியாக இணைக்கப்பட்டிருக்கிறது. மிகவும் கூர்ந்து கவனித்தால் ஒரு தோடம்பழத்தின் தோல் போன்ற தோற்றம் கொண்டிருக்கும். அரைப்பது, பல் துலக்குவது போன்ற செயல் களின் அழுத்தங்களைத் தாங்குகிறது.

**Alveolar Mucosa:**
இது, attached gingiva முடியும் இடத்தில் தொடங்குகிறது. அப்படியே வாய்க்குள் கன் னத்தின் உட்பகுதி, உதடுகளின் உட்பகுதி, ஆகியவற்றுடன் தொடர்கிறது. வழவழப்பான அமைப்பும், பளபளப்பும் (smooth texture and shine) கொண்டது.

கன்னம், உதடுகளின் உட்புறம், நாக்கின் அடிப்புறம், அண்ணத்தின் பின் பகுதி ஆகிய வற்றை மூடியிருக்கும் இழையம் (tissue) linig mucosa எனப்படுகிறது. Gingivaவை விட மென்மையாகவும் சிவந்த நிறத்திலும் இருக்கிறது.

**Periodontal ligament:**
வேரைச் சுற்றியிருக்கும் இழையம். பல்லை யும் எலும்பையும் இணைக்கிறது. இது சிறு சிறு நார்களைக் (Fibres) கொண்டது. பல்லின் வேரும் alveolar bone உம் ஒன்றுடன் ஒன்று உரசித் தேய்வதைத் தடுக்கிறது. (படம் 5)



படம்: 5

முழு நலத்துடன் உள்ள gingiva அனேகமாக சல்மன் (salmon) என்ற மீனின் மெல்லிய பிங்க் (light pink) அல்லது coral pink (பவழம்) நிறத்துடன் இருப்பதாகச் சொல்லப்பட்டாலும் மெல்லிய pink இலிருந்து ஆழ்ந்த கருமை கலந்த pink நிறம் வரை பல வேறுபாடு களுடன் காணப்படும். ஒரு தனி மனிதனின் இன வேறுபாடுகளுக்கு ஏற்ப அந்த நிறம் வேறுபடும். அது அந்த இனத்தவரின் தோல் நிறத்தைப் பொறுத்தது. கறுப்பின மக்கள், இந்தியர்கள், Orientals எனப்படும் ஆசியர் கள், மத்திய தரைக் கடல் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களின் gingiva வில் நிறங்களில் மாறுபாடுகள் காணப்படும். கறுப்பின மக்க ளிடையில் gingiva கருமை கலந்த நிறத்தில் இருப்பதை அவதானித்திருப்பீர்கள். இந்த நிற வேறுபாட்டுக்கு melanin என்ற நிறப் பொருள் (pigment) காரணமாகும்.

பற்கள் உணவை அரைக்கும் அழுத்தத்தை (stress) மேற் குறிப்பிட்ட அத்தனை இழை யங்களும் தாங்குகின்றன. இந்தத் தொடர் அழுத்தத்தைத் தாங்குவதற்காக அவை தொடர்ந்து தம் கலங்களைப் (cells) புதுப் பித்துக் கொண்டிருக்கின்றன. இந்தப் புதுப் பிக்கும் காலம் பத்து நாட்களாகும். (தோலின் கலங்கள் புதுப்பிக்க எடுக்கும் காலம் இருபத் தெட்டு நாட்கள் என்பதுடன் ஒப்பிட்டுப் பார்த் தால் இதன் முக்கியத்துவம் புரியும்.) அதன் காரணமாக இவற்றின் இரத்தச் சுற்றோட்டம் அதிக அளவு காணப்படுகின்றது. பற்களுக் குரிய ஊட்டச் சத்துகள் சிறிய இரத்தக் குழாய்கள் மூலம் வந்து சேர்கின்றன. பல் வலியும் அழுத்தங்களும் சிறு நரம்புகள் மூலம் உணரப்படுகின்றன.

அடிப்படையில் நோயற்ற gingiva என்று நிச்சயிக்க பின் வரும் சுட்டிகள் (Criteria) பயன்படுத்தப் படுகின்றன.

Salmon pink, Coral pink நிறம், அல்லது அதனுடன் சேர்ந்து ஒருவரின் தோல் நிறத் துக்கு ஏற்ற மாறுபாடுகள் (PPigmentation according to Complexion)


ரவிச்சந்திரிகா

- கத்தி முனை போன்ற ஓரங்கள்
- பற்களை இறுகப் பற்றியிருக்கும் தோற்றம்
- தோடம்பழத் தோலின் தோற்றம் (Stippling similar to an orange peel)
- மிகக் குறைந்த ஆழம் கொண்ட sulcus 0.5 mm to 1.8 mm

சிறுவர்களின் gingiva, வயது வந்தவர்களின் gingivaவை விடப் பின் வரும் அம்சங்களில் வேறுபடுகின்றது.

- நிறம்: இளம் சிவப்பு அல்லது கொஞ்சம் சிவந்த நிறம்
- உருவம்: தடிப்பாக, உருண்டையாக இருக்கும்
- பல்லை இறுகப் பற்றியிருப்பதில்லை
- பளபளப்பு அதிகமாக இருக்கும்
- தோடம்பழத் தோலின் தோற்றம் குறை வாக இருக்கும்
- பற்களுக்கிடையே இடைவெளிகள் அதிக மாக இருப்பதால் Interdental papill நேராக அல்லது குதிரையின் சேணத்தை ஒத்தி ருக்கும்.

இந்த அடிப்படைகளில் இருந்து மாற்றங்கள் ஏற்பட்டால் அவற்றுக்கு என்ன காரணம் என் பது ஆராயப்பட வேண்டும். இந்த அடிப்படை களில் இருந்து மாற்றங்கள் ஏற்பட்டால் அவற்றிற்கு நோய்கள் மட்டும் காரணமாக இருக்க வேண்டியதில்லை என்பதையும் கவ னத்தில் கொள்ளவேண்டும். ஆனால் அதை மருத்துவர் மட்டுமே முடிவு செய்யலாம்.

ஒழுங்காகப் பல் மருத்துவரிடம் செல்லும் போது ஒவ்வொரு முறையும் அவர் பற்களுடன் gingiva வையும் சேர்த்தே பரிசோதிக்கிறார். ஏதாவது ஒரு சிறு மாற்றம் ஏற்பட்டாலும், அதற்குரிய சிகிச்சை செய்து, நீங்கள் வீட்டில் gingivaவை எப்படிப் பாதுகாக்க வேண்டும் என்பதையும் சொல்லித் தருவார். எனவே மறுபடியும் இங்கே வலியுறுத்த வேண்டிய விடயம் என்னவென்றால் பல் மருத்துவரிடம் செல்வதை ஒழுங்காகச் செய்யுங்கள். அவர் கள் அறிவுறுத்தல்களை வீட்டில் சரியாகப் பின்பற்றுங்கள்.

அடுத்த மாதம் முரசு கரைதல் என்று பொது வாக அறியப்படும் Periodontal Diseases பற்றிப் பேசுவோம்.

**உசாத்துணை:**


- Brand, R. W & Isselhard, D. E. *Anatomy of Orofacial Structures* (2003). St Louis, Missouri: Mosby.
- Wilkins, E. M. *Clinical Pracitce of the Dental Hygienist* (2005). Baltimore, MD: Lippincourt Williams & Williams
- Weinberg, M.A, Westphal, C Froum, S.J, Palat M.*Comprehensive Periodontics for the Dental Hygienist* (2006). Upper Saddle River, New Jersey: Pearson Education Inc.


ravichandrika@thaiveedu.com

■ ■ ■

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*

*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான*

*பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveeducom***

***Fax: 416-849-0594 Tel: 416-646-3422***

**Pickering**


**$89,000**
Profit Making Breakfast & Lunch Place
Great Potential to grow..
Low Rent & Great Location

**Kennedy & Major Mc**

**$899,900**
2 Storey Detached Home...
4 Bedroom Fin. Bsmt...
3 Full W'Room
Great Location & School..

**McCowan & 16Th**

**$529,000**
2 Storey Detached Home...
3 Bedroom 2 Washroom..
Close to Great School....
Great Location

**Kennedy & Major Mc**

**$569,000**
2 Storey Detached...
3 Bedroom 2 Washroom..
Close to Great School....
Great Location

**Markham & Bur Oak**

**$459,000**
2 Storey Free Hold Town..
3 Bedroom 2 Full W Room.
Close to Great School....
Great Location

**Markham & 16Th**


**$485,000**
2 Storey Semi Detached...
3 Bedroom 2 Washroom.
Finished Basement..
Great Location

**Brimley & Lawrence**

**$449,000**
Backspilit Det. Home...
3 Bedroom 2 Full W'Room
Lots Of Upgrade......
Convenient Location...

**McCowan & Brimor**

**$439,900**
Bungalow Det. Home...
3 Bedroom Fin. Bsmt...
2 Full W'Room Sep. Ent..
Convenient Location....

**Bellamy & Brimort.**

**$409,900**
Detached Bungalow...
3 Bedroom Fin. Bsmt Apt..
2 Full W'Room
Convenient Location.......

**Markham & Lawren.**

**$367,000**
Detached Bungalow...
3 Bedroom Fin. Bsmt
2 Full Washroom.
Close to All Amenities........

**Markham & H'Glen**

**$525,000**
Detached Home...
3 Bedroom Fin. Bsmt Apt..
3 Full W'Room
Great Location.......

**McCowan & H' Glen**


**$425,000**
Detached Home...
3 Bedroom Fin. Bsmt Apt..
3 Full W'Room
Great Location.......

**Neilson & Finch**

**$388,000**
2 Storey Semi Detached...
3 Bedroom 2 Washroom..
Close to School...
Great Location

**Stouffville**

**$549,000**
2 Storey Detached Home...
4 Bedroom 3 Full W'Room
Lots Of Upgrade......
Great Location & School..

**Ajax**

**$549,000**
2 Storey Detached Home...
4 Bedroom 3 Full W'Room
Lots Of Upgrade......
Great Location & School..

**Ajax**

**$389,900**
2 Storey Semi Detached...
3 Bedroom 2 Washroom..
Close to Great School...
Great Location

**Sheppard & M' Side**

**$375,000**
2 Storey Detached Home...
3 Bedroom Fin. Bsmt.Apt..
Close to School, Shopping
Great Location

**Bellamy & Eglinton**


**$149,000**
2 Bedroom Condo
Low Maintenance...
2 Washroom, Close to GO.
Great Location

McCowan & 16Th

**$869,000**





- Absolutely Impressive North-Facing 3133 Sq Ft Detached Home In Wismer!
- Completely & Tastefully Decorated With Designer's Touch,
- Upgrd Kitchen With S/S Appl. Granite Counter, Tall Cabinets, Diagonal B'Splash, Breakfast Island Chef's Desk & Pantry
- 5 Br With 3 Upgd Baths. 6Pc Master Ensuite With Jacussi. Granite Counter.
- Double Door Glass Entrance, Hardwood Flrs Thru-Out Main Flr, 6 Yrs Old, 9 Ft Ceiling, 17 Ft Open Foyer, Oak Spiral Stair.

Gnani & Judy
# REAL ESTATE
To Buy, Sell & Lease Home, Business & Investment Properties



HOMELIFE HIGHER STANDARDS

**Gnanendran Narasingham**
Sales Representative
CELL: 416.937.8090

**Judy Gnanendran**
Sales Representative
CELL: 416.629.9797

HOMELIFE GTA REALTY INC., 1711 MCCOWAN RD. SUITE # 206, TORONTO, ON. M1S 3Y3
OFFICE: 416.321.6969

## உடலும் உள்ளமும் நலந்தானா?

# சினம் காக்க


போல் யோசேப்
ஹோமியோ மருத்துவ நிபுணர்

கடந்த ஜுன் மாதக் கட்டுரையில் 'தன்னையே கொல்லும் சினம்' எனும் தலைப்பில் கோபத்தின் பல பரிமாணங்களும் அதன் காரணிகள், உடல் உளரீதியான பாதிப்புகள் போன்றவற்றைப் பற்றி விரிவாகப் பார்த்தோம். இனி 'தன்னைத்தான் காக்கின் சினம் காக்க' என்பது போல கோபத்தை திசை திருப்பி வடிகால் அமைப்பது, கோபமே வராமல் பார்த்துக் கொள்வது, கோபத்தை நிர்வகிப்பது அல்ல கோப மேலாண்மை (Anger Management) போன்றவற்றைப்பற்றி சில கருத்துக்களை வாசகர்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக பெரியோர்கள் நமக்குச் சொல்லுவது கோபத்தை அடக்கிக்கொள் என்ற பொருளில்த் தான். ஆனால் கோபத்தை மனதுக்குள்ளே அடக்கிச் கொள்வதால் வரும் விளைவுகளைப்பற்றித்தான் கடந்த கட்டுரையில் பார்த்தோம். திருக்குறளிலே வெகுளாமை எனும் அதிகாரத்தில் உள்ள பத்துக் குறளிலும் சினம் காக்க, சினம் வராமல் காப்பவன், மறத்தல் வெகுளியை, கோபத்தை தன் மனதில் கொள்ளாதிருந்தால், கோபத்தை வென்றவர்கள் போன்ற வாக்கியங்களும் விளக்கங்களும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு குறளில் கோபம் வராமல் அதனை அடக்கி ஆள வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அடக்கி ஆள்தல் என்பது தான் இன்றைய உளவியல் விஞ்ஞான குறிப்பிடுகின்ற Anger Management.

வெகுளாமை எனும் கோபம் தொடர்பான குறளின் அதிகாரத்துடன் தொடர்புடைய இன்னொரு அதிகாரம் அடக்கமுடமை. அதிலுள்ள அத்தனை குறள்களும் முத்தானவை. எல்லோருக்கும் தெரிந்த 'யாகாவாராயினும் நாகாகக்க, தீயினால் சுட்டபுண் உள்ஆறும் போன்றவையும் கதம் காத்துக் கற்று அடங்கல் ஆற்றுவான் செவ்வி அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து' என்ற அருமையான குறள்களில் கோப நிர்வாகம் எவ்வளவு முக்கியமானது என்பதை உணர முடிகிறது.

இவற்றைப் பற்றி படிக்கலாம், தெரிந்து கொள்ளலாம், எழுதலாம், பயிற்சிகளில் கலந்து கொள்ளலாம் இவையெல்லாம் மிக இலகுவானதுதான். ஆனால் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவது என்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. முறைப்படுத்தப்பட்ட தொடர்ச்சியான சில பயிற்சிகளால் மட்டுமே தான் பொதுவாகச் சாத்தியமாகும். முதலில் ஒவ்வொரு முறையும் கோபம் வரும் போதும், கோபப்படும் அல்லது முன்பு கோபப்பட்ட நேரங்களிலெல்லாம் அதற்கு பின்புலமாக இருந்த விடயங்கள், நபர்கள், கால சூழ்நிலைகள், அந்தக் கணத்தில் நீங்கள் எப்படியிருந்தீர்கள், என்னவெல்லாம் செய்தீர்கள், குறிப்பாக உங்கள் வார்த்தையால் செயலால் எவற்றையெல்லாம் வெளிப்படுத்தினீர்கள் என்பற்றை மட்டும் மீள் ஆய்வு செய்து பாருங்கள். இந்த இடத்தில் ஒரு முக்கியமான விடயத்தைக் கருத்திற் கொள்ளவேண்டும் உங்கள் மீது அல்லது நீங்கள் கோபப்பட்டவர் மீதுதான் தவறு இருக்கிறது என்பதை மட்டும் முடிவு செய்யாமல் மற்ற விடயங்களை மட்டுமே அலசிப்பார்க்க வேண்டும்.

இரண்டாவது நீங்கள் கோபப்பட்ட நேரங்களிலெல்லாம் உங்களின் உணர்வும், உணர்ச்சிகள் (Emotions) நிலை எப்படியிருந்து அதாவது உங்களுக்குள்ளாக உண்டான விரக்தி, வெறுப்பு, பயம், அவமானம், பழிவாங்கும் உணர்வு, அழுகை, பாதுகாப்பற்ற நிலை, போன்றவற்றின் பரிமாணங்களை நினைவு படுத்தி தொகுப்பாய்வு செய்து பார்த்தல் அவசியமாகும்.

மூன்றாவது விடயம் கடந்த காலங்களில் கோபப்பட்டதற்கான சில முக்கிய காரணங்கள் என்ன என்பதை கொஞ்சம் வரிசைப் படுத்திப்பார்த்தல் நன்று. நான் குறிப்பிடுவது உங்களுக்கு வேடிக்கையாக இருக்கலாம்.



முதலில் ஒரு குறிப்பேடு வைத்து இந்தக் கட்டுரையில் நான் குறிப்பிடும் விடயங்களையும் அதற்கான பதில்களையும் எழுதி ஆய்வு செய்து பார்த்தாலே ஐம்பது வீதம் நீங்கள் கோபத்தை வென்று வீட்டீர்கள் என்பது அர்த்தம். அடுத்த ஐம்பது வீதம் சில பயிற்சிகள், அவ்வளவு தான் இனிக்கோபமே இல்லை, இதில் நான் குறிப்பிடுகின்ற எல்லா விடயங்களும் பல ஆயிரக்கணக்கானவர்களில் பயன்படுத்தி அவர்கள் நன்மை பெற்ற பிறகே இதை அனுபவபூர்வமாக எழுதுகிறேன்.

சரி, இனி விடயத்திற்கு வருவோம். கடந்த காலத்தில் உங்களை கோபப்படுத்திய விடயங்கள் என்றால் உதாரணமாக, உங்கள் தேவைகள், ஆசைகள், எதிர்பார்ப்புகள் நிறைவேறாத போது நீங்கள் கோபப்பட்டிருக்கலாம். யாராவது உங்களைப் புண்படுத்தியதால், சந்தேகங்கள், ஏமாற்றங்களால், சிறிய வயதில் பாதிக்கப்பட்டு, காயப்பட்ட அனுபவங்களால், ஆழ்மனதிலுள்ள வடுக்களால் அவர்களைப் பார்க்கும் போதெல்லாம் வரும் கோபம், தீர்கப்படாத பிரச்சினைகள் வழக்குகள் இப்படி எத்தனையோ காரணிகள் உங்களின் கோபத்தைத் தூண்டுவதாய் அமையலாம் அவற்றையெல்லாம் கடந்தகால அனுபவப் பதிவுகளாய் வரிசைப்படுத்தி எழுதி உங்களையே நீங்கள் ஆய்வு செய்யுங்கள்.

நான்காவது, கோபப்படும் நேரமெல்லாம் உங்கள் உடலிலுண்டாகும் குணங்குறிகளை ஞாபகப் படுத்தி வரிசைப்படுத்திப்பாருங்கள் உதாரணமாக வயிற்றிலுண்டாகும் ஒருவித மாற்றம், தாடைகளிலும் கைகளிலுண்டாகும் இறுக்கம், அதிகமான மூச்சிரைப்பு, தலையிடி, முகத் தசைகளிலுண்டாகும் இறுக்கம், கண் சிவத்தல், இதயத் துடிப்பு அதிகமாதல், கை கால்கள் நடுங்குதல், கழுத்து, தோள் மூட்டு, முதுகு தசைகளிலுண்டாகும் இறுக்கம், இன்னும் பல. இவை ஒவ்வொன்றும் உண்டாகும் போது உடலுக்குள்ளே ஏற்படும் தேவையற்ற இரசாயண மாற்றங்கள், இதனால் இதயம், இரத்தக் குழாய்கள், உள்ளுறுப்புகளில் உண்டாகும் பாதிப்புகள், அதன் பின்விளைவுகளாக நோய்கள் போன்றவற்றைக் குறித்த விழிப்புணர்வும் அவசியமாகிறது.

ஐந்தாவது விசயம் ஆள், இடம், பொருள், ஏவல் போன்றவற்றை முடிந்தவரை தவிர்த்தல், கோபத்தைத் தூண்டுகின்ற நபர்கள், இடங்கள், காரணமாக இருக்கிற பொருட்கள், எரிகிற நெருப்பில் எண்ணை ஊற்றுகிற நபர்கள் போன்றவர்களிடமிருந்து சில நாட்கள் விலகி வாழ்வது அல்லது கண்டுகொள்ளாமல் விடுவது அல்லது சூழ்நிலைகளை தவிர்த்தல் போன்றவற்றால் பயன்கள் உண்டாகலாம். இதைவிட இன்னும் சிறந்த வழி என்று சொன்னால் மன்னித்தல். இது மிகக் கடினமான விடயம் என்றாலும் எல்லா வேதங்களும் மறை நூல்கள் மட்டுமன்றி உளவியல் விஞ்ஞானமும் இதைத்தான் சொல்கிறது. ஒருவர் மீது ஒருவர் மனக்குறை இருந்தால் ஒருவரையொருவர் பொறுத்துக் கொள்ளுங்கள். சூரியன் மறைவதற்குள் உங்கள் கோபம் தணியட்டும். சண்டையின் ஆரம்பம் மதகை திறந்துவிடுவது போலிருக்கும் அதனால் விவாதம் எழுப்புமுன் அதைவிட்டுவிடு, கோபத்தை அடக்குவதைப்பார்க்கிலும் அதை விலக்கு, விட்டுவிடு, எரிச்சல் கொள்ளாதே அது கடைசியில் பெரிய தீங்கு செய்வதற்கு ஏதுவாகும். விவேகம் கோபத்தை தணிக்கும் குற்றத்தை மன்னிப்பது மனிதனுக்கு மகிமை இப்படி விவிலியத்தில் பல மேற்கொள்கள் காட்டப் பட்டுள்ளது.

ஆறாவது விடயம் என்னவென்றால சட்டென்று வரும் கோபத்தைத் தணிப்பதற்கான வழிமுறைகளைக் கற்றுக்கொள்ளுதல்.

- ஆழமான மூச்சுப்பயிற்சி மிகவும் பயன் தரும். அதற்கு நீங்கள் பிராணாயமம் என்ற மூச்சுப்பயிற்சியை தொடர்ந்து செய்துவரும் நிலையில் அதன் பலன் அதீதமானது.
- ஆழ்நிலைத்தியானம் அதாவது 'அல்பாமைன்ட்' என்ற ஒருவகை குறிப்பிட்ட தியானம் இதற்கு மிகவும் பயனளிக்கும். இதை முறையாகக் கற்றுக் கொண்டு தொடர்ச்சியாக செய்வதால் சினம் தவிர்த்து வாழலாம். அதோடு இதிலுள்ள சில குறிப்பிட்ட பயிற்சிகள் சட்டென்று கோபம் வரும் வேளையில் தியானத்திலுள்ள ஒரு சில முத்திரைகளை கையில் செய்தாலே கோபம் தணிந்துவிடும் அற்புத கலையாகும். ஆனால் இதற்கு நல்ல பயிற்சிகள் அவசியமாகும்.
- கோபம் வரும் வேளையில் வழக்கமாக ஒன்று முதல் பத்து வரை எண்ணுவது வழக்கமானதாகும். ஆனால் மாறாக பத்து முதல் ஒன்று வரை மெதுவாக எண்ணப் பழகினால் நல்ல பலன்கிடைக்கும் என்பது ஆய்வுகளின் முடிவாகும்.

தொடர்தல் 34ம் பக்கம்

103% SOLD
JUST SOLD OVER ASKING PRICE
Your Home could be worth more than you think! For quick results call...
HOMELIFE HIGHER STANDARDS
HomeLife / Future Realty Inc., Brokerage* (905)201-9977
Suthan Namasivayam (647)988-3866
Sales Representative Email: suthanhome@rogers.com


# வயது வந்தோருக்கான தடுப்பூசிகள்

சிவாஜினி
பாலராஜன்



சிறுவர்களுக்கும் குழந்தைகளுக்குமான தடுப் பூசிகளைப் பற்றிப் பொதுவாகப் பலருக்கும் தெரிந்திருக்கும். ஆனால் வயது வந்தோர் தங்களுக்கான தடுப்பூசிகளைக் காலா காலத் தில் எடுத்துக் கொள்வதில்லை. இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றது.



- குடும்ப வைத்தியரின் அறிவுறுத்தல் கிடை- டயாமை
- தடுப்பூசிகளின் நன்மை தீமைகளைப் பற்றிய தப்பான விளக்கம்.
- தடுப்பூசிகளுக்கு பணம் செலுத்த வேண் டிய கட்டாயம். (நோய் வந்தபின் மருந் திற்காக பணம் செலவழிக்கும் காப்புறுதி நிறுவனங்கள் தடுப்பூசி மருந்துகளுக்கு வழங்காமை)
- கட்டாயமாக தடுப்பூசிகள் போடப்பட வேண்டும் என அரசாங்கம் அறிவுறுத்தல் செய்யாமை.

வயது வந்தோர் கட்டாயமாக தொண்டைக் கரப்பன் எனப்படும் diphtherயை, ஏற்புவலி எனப்படும் tetanus, சின்னமுத்து எனப்படும் measles, குக்கல் எனப்படும் Pertussis, கூகைக் கட்டு எனப்படும் mumps, ஜேர்மன் சின்ன முத்து எனப்படும் rubella, கொப்பளிப்பான் எனப்படும் varicella போன்ற நோய்களுக் கான தடுப்பூசிகளை எடுத்துக் கொள்வது மிகவும் முக்கியமானதாகும். அடுத்து இன்னும் மிக முக்கியமான தடுப்பூசிகள் Hepatitis A, Hepatitis B ஆகிய இரண்டும் ஆகும்.

Hepatitis என்பது ஈரலில் ஏற்படும் அழற்சி. இது சில வகை மருந்துகளால், மது, புகைத் தல் அல்லது வைரசினால் இந்த அழற்சி ஏற்படலாம். Hepatitis Aக்குரிய தடுப்பூசியினை வளர்முக நாடுகளுக்குப் பிரயாணம் செய்ப வர்கள் கட்டாயமாக எடுத்துக்கொள்ள வேண் டும். அதுவும் மிகவும் பிரபல்யமான சுற்றுலா மையமான கரிபியன்போன்ற இடங்கள் இந்த வைரசுக்கான மையமாகக் காணப்படுகின்றது.

இந்த Hepatitis Aக்கான தொற்று பல வழிக ளில் ஏற்படலாம். இந்த வைரசு கழிவுகளி னாலும் அல்லது தொற்று ஏற்பட்ட ஒருவரது கையினால் பாவிக்கப்பட்ட உணவினை உண் ணல், சுத்தமற்ற நீர் நிலைகளிலிருந்து பிடிக் கப்பட்ட மீன்களை உண்ணல், தொற்றினைக் கொண்டிருக்கும் நீரினால் கழுவப்பட்ட மரக் கறிகளை உண்ணல் தொற்று ஏற்பட்ட நீர்த் தடாகங்களில் குளித்தல் போன்றவற்றினால் ஏற்படும். இதற்கான தடுப்பூசியினை எடுத்துக் கொள்வது மிகவும் அவசியமானது. அடிக்கடி பிரயாணம் செய்வோர், வயோதிபர் இல்லங் களில் வேலைசெய்வோர், மருத்துவ மனை களில் வேலை செய்வோர் இதனைக் கட்டா யமாகக் கருத்திற்கொள்ள வேண்டும்.

Hepatitis B (serum hepatitis)க்கான தொற்று பெயருக்கேற்றபடி ஒருவருடைய உடலின் நீரினால் இன்னொருவருக்குத் தொற்றக்கூடியது. சிலர் தங்களுக்கு இந்த நோய் இருப்பதை மிகவும் கேவலமாக நினைத்து கவலைப்படு வதும் மற்றவர்கள் தங்களைக் கெட்ட நடத்தை உடையவர் என நினைத்து மறுகுவதுண்டு. இது பாலியல் உறவினால் மாத்திரம் தொற் றாது. பாலியல் உறவினாலும் தொற்றக் கூடி யது. அதேசமயம் குருதி, உமிழ்நீர் போன்ற வற்றினாலும் தொற்றக் கூடியது. குருதி கொடுக்கும் இடங்கள் சரியான பாதுகாப்பின்றி இருப்பின் தொற்றுக்குரிய சாத்தியக் கூறுகள் அதிகரிக்கும். நோயுற்றவர் நீரருந்தப் பாவித்த பாத்திரம் சரியாகக் கழுவப்படாது பாவிக்கப் படினும் தொற்று ஏற்படும். மேலும் இதில் அதிகமாகப் பாதிக்கப்படுவோர் சுகாதாரத் திணைக்கள ஊழியர்கள்தான். அவர்களுக்கு அடுத்தவரிடமிருந்து விலை கொடுக்காமலே இவ்வாறானா தொற்றுகள் கிடைத்து விடு- கின்றன.

Varicella-zoster virus (VZV) இந்த வைரசு தான் பொக்களிப்பான் அல்லது கொப்பளிப் பான் எனப்படும் chickenpox நோய்க்குக் காரணமானது. இதற்குரிய தடுப்பூசியினை எடுப்பதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு. கொப்பளிப்பான் வரும்போது சில ருக்கு நன்றாக வருவதுண்டு. சிலருக்கு மிகவும் குறைவாகவே வரும். இவ்வாறு மிகவும் குறை வாக வருவோருக்கு இந்த வைரசுக்கள் வலுவிழந்த நிலையில் இருந்து விட்டு வயது முதிர்ந்த பின்னர் shingles என்னும் நோயினை உண்டாக்கும். இந் நோய்யானது சொறி புண் போன்றவற்றை உண்டாக்கும். அதுவும் சாதா ரணமாக உடம்பில் வருவதிவிட முகத்தில் அதுவும் ஒரு பக்கத்தில் வருவது அதிகம். இதனால் முதியோர் கட்டாயமாக இந்த தடுப்பூசியினை எடுப்பது நன்று.

பொதுவாகச் சொல்லப்போனால் காலா காலத் தில் தேவைப்படும் தடுப்பூசிகளை எடுத்துக் கொண்டால் வாழ்க்கை மிகவும் சுலபமாகும். இந்த தடுப்பூசிகள் பற்றிய கட்டுரையினை ஆரம்பிக்கும் போது இந்த விடயம் எங்கள் முதியோரை அடையவேண்டும் என்று எனது குடும்ப வைத்தியர் கேட்டுக் கொண்டதாகக் கூறினேன். அது முக்கியமாக இந்தத் தடுப்- பூசிக்காகத் தான்.

sivagini.bala@thaiveedu.com

■ ■ ■


**Adult Immunization Schedule - Routinely for All**

| Vaccine | Dosing schedule (no record or unclear history of immunization) | Booster schedule (primary series completed) |
|---|---|---|
| Tetanus and diphtheria given as Td; and pertussis given as Tdap | Doses 1 and 2, 4-8 weeks apart and dose 3 at 6-12 months later; one of the doses should be given as Tdap for pertussis protection | Td every 10 years; 1 dose should be given as Tdap if not previously given in adulthood |
| Measles, mumps and rubella given as MMR | 1 dose for adults born in or after 1970 without a history of measles or those individuals without evidence of immunity to rubella or mumps; second dose for selected groups | Not routinely required |
| Varicella | Doses 1 and 2, at least 4 weeks apart for susceptible adults (no history of natural disease or seronegativity) | Not currently recommended |

**Adult Immunization Schedule - Specific Risk Situations**

| Vaccine or toxoid | Indication | Schedule |
|---|---|---|
| Influenza | Adults ≥ 65 years; Adults < 65 years at high risk of Influenza-related complications, their household contacts, health care workers, and all those wishing to be protected against influenza. | Every autumn using current recommended vaccine formulation |
| Pneumococcal polysaccharide | Adults ≥ 65 years; Adults < 65 who have conditions putting them at increased risk of pneumococcal disease | 1 dose |
| Hepatitis A | Occupational risk, life-style, travel and living in areas lacking adequate sanitation. Outbreak control, post-exposure immunoprophylaxis. Patients with chronic liver disease. | 2 doses 6-12 months apart |
| Hepatitis B | Occupational risk, life-style, post-exposure immunoprophylaxis. Patients with chronic liver disease. | 3 doses at 0, 1 and 6 months |
| Bacille Calmette-Guérin (BCG) | Rarely used. Consider for high-risk exposure in selected cases. | 1 dose |
| Cholera | High-risk exposure in travelers to endemic area(s) | 1 oral dose of live attenuated vaccine; 2 doses at least 1 week apart but not greater than 6 weeks of oral inactivated vaccine |
| Japanese encephalitis | Travel to endemic area(s) or other exposure risk | 3 doses at days 0, 7 and 30 |
| Poliomyelitis | Travel to endemic area(s) or other risk group | Primary series doses 1 and 2, 4-8 weeks apart and dose 3 at 6-12 months later; 1 booster dose if > 10 years since primary series |
| Meningococcal conjugate | Young adults | 1 dose |
| Meningococcal polysaccharide | High-risk exposure groups | 1 dose |
| Rabies, pre-exposure use | Occupational or high-risk travelers | 3 doses at days 0, 7 and 21 |
| Typhoid | High-risk travelers to endemic area(s) or other high-risk exposure | Parenteral capsular polysaccharide 1 dose; live attenuated 3-4 oral doses depending on preparation |
| Yellow fever | Travel to endemic area(s) or if required for foreign travel | 1 dose with booster every 10 years if required |
| Smallpox | Laboratory staff working with vaccinia or other orthopoxviruses | 1 dose |


அடுத்த தலைமுறையின்
பாதுகாப்பிற்கான முதற்படி...
கா ப் பு று தி
• Life Insurance • Travel Insurance
• Non-Medical Insurance • Critical Illness Insurance
• Mortgage Insurance • Disability Insurance
• RESP • RRSP
INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Assumption Life
Unity Life of Canada
RBC Insurance
Canada Life
BMO Insurance
Kuna Nagalingam
Insurance Agnet
Dir: 416-402-4545
Royal Brokers Corp.
Insurance & Investments Solutions
Office: 416-298-4722, Fax: 416-298-4664
80 Nashdene Ave. , Unit 25&26, Toronto, ON M1V 5E4


RENU MOTORS Ltd.
AWARD WINNING USED CAR DEALERS
வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பது எமது விசேட திறன்
34 வருட அனுபவம்
• We Sell Bank Repossed Cars
• Accident Vehicle Repair
• Computerized Painting
• Motor Vehicle Accident
• Traffic Tickets
HONDA
TOYOTA
GM-MINI VANS
தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற
Radha
3030 Markham Road,
Markham and Passmore
416.412.3838

திரு. பொ. கனகசபாபதி அவர்களின்


# இரண்டு நூல்கள் வெளியீட்டு விழா

(எம்மை வாழவைத்தவர்கள், மரம் மாந்தர் மிருகம்)




## செப்ரெம்பர் 8

சனிக்கிழமை மாலை: 5:00 மணி




**101 Town Centre Boulevard**
**Markham**

சரியாக 5:45 மணிக்கு கூட்டம் ஆரம்பம். எல்லோரையும் அன்புடன் அழைக்கிறேன்.
பொ. கனகசபாபதி: 416 283 1544

# வீடோ, வியாபாரமோ?

## விசயம் தெரிந்தவர்களை நாடுங்கள்



**Homelife/Future**
Realty inc. Brokerage
*Higher Standard Agents... Higher Results!*

**Vivek Subramaniam**
Sales Representative

**Direct: 416 898 4846**

7 Eastvale Drive, Unit 205, Markham, On. L3S 4N8
Bus: 905 201 9977, Fax: 905 201 9229
Independently Owned and Operated

# நோவு தவிர்ப்பு வைத்தியம்

## (Palliative care)


குமார் புனிதவேல்

அன்று பகல் பன்னிரண்டு மணி இருக்கும். மதிய போசனத்தை அருந்துவோம் என தயார் செய்யும்வேளை டெலிபோன் மணி கணகண என அடித்தது. அடுத்த முனையில் ஒரு அன்பர் மிக வேதனையுடன் புற்று நோய் வைத்தியத்திற்காக வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்று வந்த மனைவியை பாலியாட்டிவ் வைத்தியர் (Palliative Doctor) பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும், தான் மறுத்து வீட்டிற்கு அழைத்து வரப்போவதாகவும் தெரிவித்தார்.

இப் பாலியாட்டிவ் பராமரிப்பு பற்றி பெரும் தவறான ஒரு அபிப்பிராயம் நிலவுவதாலேயே, இத்தகைய முடிவுக்கு அந்த அன்பர் வந்துள்ளார் என்பது புரிந்தது.

பலர் எண்ணுவதுண்டு, வைத்தியம் எல்லாம் கைவிட்டு நோயாளியை இறக்கவிடும் வேளையில் பாலியாட்டிவ் பராமரிப்புக்கு அனுப்புவதாக. டெலிபோணில், அடுத்த முனையில் இருந்தவரை நான் அறியமாட்டேன். ஆனால் அவர் அறியாமை எனக்கு தெளிவாகவே தெரிந்தது. மிகுந்த சிரமப்பட்டு அவர் தன் மனைவியை பாலியாட்டிவ் பராமரிப்புச் சிகிச்சைக்கு அனுப்பச் செய்தேன்.

இம்மாதம் பாலியாட்டிவ் பராமரிப்பு பற்றி ஒரு சிறு விளக்கம் பற்றி எழுதலாம் என்று நம்புகிறேன். முன்னைய காலத்தில் ஒரே வைத்தியர் எல்லா வகையான நோய்களுக்கும் சிகிச்சை செய்வார். ஆனால் இன்றோ ஒவ்வொரு துறைக்கும் சிறப்பான கல்வி கற்று அவ்வத்துறையில் வைத்தியம் செய்வார். உதாரணத்திற்கு புற்றுநோய் சிகிச்சை செய்பவரை Oncologist என்பார்கள். அதேபோல் மூளை, நரம்பு சம்பந்தமான வருத்தங்களுக்கு Neurologist வைத்தியம் செய்வார். இவர்களைப்போலத் தான் நோவு அல்லது வலி ஏற்படும் வேளைகளுக்கு வைத்தியம் செய்பவர் Palliative Doctor எனவும், அவர் பராமரிப்பை Palliative care எனவும் குறிப்பிடுவர்.

இங்கு இன்னும் ஒரு பராமரிப்புத்துறை உண்டு. அதுதான் Hospice Care அல்லது ‘ஒஸ்பிஸ்’ பராமரிப்பு என்பர். அவர், நோயாளியின் வலியை தவிர்ப்பது அவசியமாகையால் இங்கும் பலியாட்டிவ் வைத்தியர் சேவை பெரிதும் பயன்படும்.

என்னை தொலைபேசியில் அழைத்தவர் பாலியாட்டிவ் பராமரிப்பை புரியாமல்தான் அதற்கு மறுப்பு தெரிவித்துள்ளார். ஒருவர் எப்போது இறப்பார் என்பதைத் தீர்மானிப்பது பிரபஞ்ச சக்தி. ஆனால் அவர் வாழும் நாளில் வேதனையைத் தவிர்த்து இயன்ற அளவு இயல்பான வாழ்வு வாழ்வதற்கு அனுசரணை செய்வது இந்த விஞ்ஞான வளர்ச்சியடைந்த காலத்தில் முடியுமாயுள்ளது. ஆதனைத் தவிர்ப்பது உசிதமல்ல. இறுதிக்காலத்தை வேதனையில் ஒருவருமே கழிக்கக் கூடாது.

பாலியாட்டிவ் வைத்தியர் பராமரிப்பு, நோயாளியின் வைத்தியத்தின் பல்வேறு கட்டங்களில் அனுசரணையாக இருக்கும். பாலியாட்டிவ் என்னும் நோவு தவிர்ப்புப் பராமரிப்பானது பன்முகப்பட்ட செயற்பாடாகும். பலியாட்டிவ் வைத்தியர், மருத்துவ வைத்தியர், மருந்து கலப்பவர், தாதிமார், சமூக சேவகர், மன நோய் மருந்துவர், ஆரோக்கியம்சார் வல்லுனர்கள் மற்றும் ஆன்மீகவாதிகள் என பல தரப்பட்ட வல்லுனர்களின் அனுசரணையுடன் தனது பராமரிப்பை திட்டமிடுவார். இவரது குறிக்கோள் தன் பராமரிப்பில் உள்ளவர் உடல் நோவும், உள வேதனையும் தவிர்த்து வாழ வழி வகுப்பதே. மேலும் பலியாட்டிவ் வைத்தியர் நோயாளிக்கு மட்டுமன்றி, அவரது நெருங்கிய உறவினருக்கும் அனுசரணையாக இருந்து உளவேதனையைத் தவிர்ப்பதில் கவனமாயிருப்பர்.

WHO எனப்படும் உலக ஆரோக்கிய அமைப்பு பலியாட்டிவ் பற்றி வரைவிலக்கணம் கூறுகையில் ‘உயிராபத்தான வருத்தங்களுக்கு முகம் கொடுக்கும் நோயாளிக்கும், அவர் குடும்பத்தாருக்கும் வாழ்வின் அந்தத்தை கொண்டுவரும் வருத்தத்தால் ஏற்படும் வேதனைகளை முன்கூட்டியே கணித்து அதனைத் தவிர்ப்பதற்கு அனுசரணையாக உள, உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதுடன் ஆன்மீக அனுசரணையும் செய்வது’ என குறிப்பிட்டுள்ளார்கள்.

பலியாட்டிவ் பராமரிப்பு ஒரு குறிப்பிட்ட நோயைக் குறிவைத்து செயல்படாவிடினும் 85 வீதமான பலியாட்டிவ் பராமரிப்பில் உள்ளவர்கள் புற்றுநோயாளிகள் என்பதை இங்கு குறிப்பிடலாம். இன்னும் ஒரு முக்கிய விடயம் அண்மைக்காலத்தில் சிறுவர் நோவு பராமரிப்பு (Pediatric Palliative Care) என விரிவடைந்துள்ளது.

பலியாட்டிவ் பராமரிப்பு அல்லது நோவு தடுப்பு பராமரிப்பு கீழ்த்தரப்பட்ட வகைகளில் செயற்படும்.

- உடல் வலி, மூச்சுத்திணறல், வாந்தி மற்றும் பிற வேதனைகள் தரும் விளைவுகளில் இருந்து விலக்க உதவுவது.
- முயன்று நோயாளி இயல்பாக, சுதந்திரமாக இயங்குவதற்கு அனுசரணையாக இருப்பது.
- மனவியலையும் ஆன்மீகத்தையும் இணைத்து பராமரிப்பு வழங்குவது.
- நோயாளி மட்டுமல்லாமல் அவர் சார்ந்த குடும்ப அங்கத்தவர்களுக்கும் அனுசரணையாய் இருப்பது.
- நோயாளிக்கும் அவர் குடும்பத்திற்கும் பல்முகப்பட்ட வல்லுனர்களுடனும் தொடர்பு கொண்டு அனுசரணையாய் இருப்பது.
- வாழ்க்கையை நீடிக்க செயற்படும் மற்றைய வைத்தியர்களுக்கு அனுசரணையாய் இருந்து நோயாளியின் நோவுகளை இயன்ற அளவு குறைப்பது.
- வாழ்வை ஏற்றுக்கொள்ளும் வேளையில் மரணத்தையும் இயல்பான ஒன்றாக உணரும் மனப்பக்குவத்தைக் கொடுப்பது.
- வாழும் நாளை கூட்டுவதற்கோ, அன்றி குறைப்பதற்கோ முனையாமல் நோயாளியின் சௌகரியத்தில் முனைப்பாய் செயற்படுதல்.
- வாழும் ஒவ்வொரு நாளும் தரமுடையதாக அமைத்துக் கொடுப்பது.

நாம் எவ்வளவு காலம் இருக்கிறோம் என்பதிலும் இருக்கும்வரை எப்படி வாழ்கிறோம் என்பது தான் முக்கியம்.

kumar.punithavel@thaiveedu.com

■ ■ ■



Raj. A. Rasaratnam
Sales Representative
416-726-8055
argaccountax@rogers.com
HomeLife/ GTA Realty Inc.
Real Estate Brokerage*
5215 Finch Ave. E., Suite #203,
Toronto, ON. M1S 0C2
*Independently own and operated

ARG Accountax
Moved to New Location:
5200 Finch Ave. E., Suite #308,
Scarborough, ON. M1S 4Z5
(416) 299-8570
Mortgage arrangement, Business incorporation
and corporate tax preparation
Cell: (416) 726-8055

# ஏமாற்றம்: ஓர் எண்ணத்தின் தோல்வி



எஸ். பத்மநாதன்

வெற்றியடைபவர்களை விட ஏமாற்றத்தினை சந்திப்பவர்களே இன்று அதிகமாக உள்ளனர். எதிர்பார்ப்புகள் அதிகமாகும் போது ஏமாற்றங்களும் அதிகமாகவே செல்லும். தொழில் முயற்சியில் தோல்வி, காதலில் தோல்வி, அகம்பாவமுள்ள கணவன் / மனைவி கிடைத்தால் ஏமாற்றம், பிள்ளைகள் உருப்படவில்லையே என்பதில் ஒரு ஏக்கம், அடிக்கடி அதிஷ்டலாபச்சீட்டு எடுத்து பணம் கிடைக்கவில்லையே என்ற விரக்தி, நிறைவேறாத ஆசைகள், முற்றுப்பெறாத கனவுகள் இவை எல்லாமே ஒரு வகையில் ஏமாற்றங்களேயாகும். ஏமாற்றம் என்பது அனைவருக்கும் பொதுவான கருத்து ஆகும். அது மகத்தானவர்கள், சாமானியர்கள் அனைவரையும் பிடித்துக்கொள்கிறது.

நாம் அனைவரையும் நம்புகிறோம், கனவு பல காண்கிறோம், தவிர்க்க முடியாதவகையில் ஏமாற்றம் அடைகிறோம், பழையன கழியும் போது புதியன புகுகின்றன. இந்த மாற்றங்களோடு ஒத்துப்போக முடியாத மக்களின் எதிர்பார்ப்புகள் தோற்றுப்போகும் போது நாம் ஏமாற்றப்பட்டுவிட்டதாக உணர்கிறோம். ஏமாற்றம் என்பது உளவியல் ரீதியில் மன அழுத்தம், மனச்சோர்வு, பயம் போன்ற உச்சமான நிலைக்கு ஒருவரை கொண்டு செல்லவல்லது. அந்தரங்க ஆசை நிறைவேறாத விடத்து ஆழமான துயரம் எம்மை பிடித்து விடுகிறது. ஒவ்வொரு கால கட்டங்களிலும் வேறுபட்ட ஏமாற்றங்களையே சமூகம் சந்திக்கின்றது. இன்று அதீத நம்பிக்கைகளாலும் கனவுகளாலும் நிரம்பிப்போயுள்ள சமூகத்தில் ஏமாற்றங்களைத் தடுக்க முடியாதுள்ளது.

நாம் அனைவரும் வாழ்க்கையின் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் ஏமாற்றம் அடைந்திருப்போம். நாம் ஏமாற்றத்தால் பாதிக்கப்பட்டோம் என்பதற்காக நம்மீது பரிதாபப்படுபவர் யாரும் இல்லை. எம்மை புரிந்து கொள்ளவும் யாரும் இல்லை. நாம் கூட எமது ஏமாற்றங்கள் பற்றி சிந்திக்காமல் தொடர்ந்து போய்க் கொண்டிருக்கிறோம். ஏமாற்றங்களை தவிர்க்கவே பார்க்கிறோம். ஆனால், அவை மேலும் மேலும் தொடர்ந்துகொண்டேயிருக்கின்றன.

ஏமாற்றம் பற்றி எளிமையாக கூறுவதனால் ‘நிறைவேறாத எதிர்பார்ப்பு’ என்று கூறலாம். ஒரு விடயம் நடக்கும் என எதிர்பார்த்தோம் அது நடக்கவில்லை, எனவே நாம் ஏமாற்றம் அடைகிறோம், ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக இதனை எடுத்துக்கொள்வர். சிலருக்கு கோபம், சிலருக்கு கசப்புணர்வு, சிலருக்கு விரக்தி, ‘எல்லாமே அதிர்ச்சியான இழப்புணர்ச்சி’ தான். இப்படியானவர்கள் கசப்பாளராகவும், சிடுமூஞ்சிக்காரராகவும், மானுட வெறுப்பாளராகவும் மாறிப்போய்விடுகின்றனர். நீண்டதொரு ஏமாற்றத்திற்குள் பூட்டப்பட்டு விடுகிறார்கள்.

‘எதையும் எதிர்பார்க்காதவன் பாக்கியவான், ஏனென்றால் அவன் ஒரு போதும் ஏமாற்றமடைவதில்லை’ என்ற நல்லதொரு கருத்தினை அலெக்ஸான்டர் போப் குறிப்பிட்டுள்ளார். ஒவ்வொரு எதிர்பார்ப்பிற்கும் அடித்தளத்தில் ஓர் ஆவல் இருப்பதினை உணரலாம். அந்த ஆவல் நிறைவேறாத போது அதிர்ச்சி கலந்த இழப்பு உணர்ச்சியே ஏற்படுகிறது. ஆவல் இல்லாதவர்கள் எவரும் இல்லை. அந்த ஆவல் எப்படியானது என்பதிலேயே பிரச்சினையுள்ளது. ஆவல் எழும்போது கூடவே எதிர்பார்ப்பும் எழவே செய்யும். ஆவல் இல்லாத வாழ்வினை கற்பனை செய்துகூட பார்க்க முடியாது. உண்மையில் வண்ணமில்லாத வானவில்லை போன்றதே ஆவலில்லாத வாழ்வும். நனவுநிலைச் செயற்பாட்டின் மூலமோ நனவிலி மனத்தின் இயக்கத்தின் மூலமோ அது வெளிப்பட்டுவிடுகிறது. ‘நமது ஆவல்கள் அல்லது ஆசைகள் கனவுகளின் மூலமாக வெளிப்பட்டுவிடுகின்றன’ என்பதனை ஏற்கனவே சிக்மன்ட் பிராய்ட் கூறிச்சென்றுள்ளார்.

‘ஒருபோதும் ஏமாற்றம் அடையாதவன், முட்டாள் அல்லது பிணம்’. இக்கருத்தினை கூறியவர் கிராபித்தோ என்ற அறிஞராவர். பொதுவாக எமது எல்லா ஏமாற்றங்களும் சமமானவை அல்ல. சில மிகவும் கடுமையானவை. சில சாதாரணமானவை. எவ்வளவு ஆவல் அல்லது எதிர்பார்ப்பு கூட இருக்கின்றதோ அந்தளவுக்கு ஏமாற்றமும் பெரிதாகிவிடும். நினைத்த திருமணம் நிகழாதவிடத்து ஏமாற்றம் பெரிதுதான். அதேவேளையில் ஒரு நாடகத்தினை பார்க்க சென்று ரிக்கெற் கிடைக்கவில்லை என்றால் அந்த ஏமாற்றம் சிறியதுதான். யதார்த்தத்தோடு ஆசை மோதும்போது எமது நாடகத்திலும் ஒவ்வொரு நிலையிலும் அந்தந்த நிலைக்குரிய ஏமாற்றங்கள் ஏற்படுகின்றன. எமது வாழ்வு என்பது நிரந்தரமானதல்ல, வாய்ப்புக்கள் பறந்துகொண்டிருக்கின்றன, நாம் விரும்பும் எல்லாவற்றையும் அடையமுடியாது. முதியவர்கள் இன்னும் கொஞ்ச காலம் தான் இருக்கப்போகிறோம் என்ற நிலையில் ஏமாற்றங்கள் பழகிப்போய் விடுகின்றன.

> “ எதையும் எதிர்பார்காதவன் பாக்கியவான்,
> ஏனென்றால்
> அவன் ஒரு போதும்
> ஏமாற்றமடைவதில்லை ”

‘உலகத்தில் இரு, ஆனால் உலகத்தின் உடையவனாக இருக்காதே!’ என்ற அலன் வாட்ஸ் என்பவரது கருத்தில் எவ்வளவோ உண்மை பொதிந்து கிடக்கின்றது. வாழ்க்கை முழுவதும் ஏமாற்றம் ஏற்படப்போவதில்லை. சில வேளைகளில் மட்டுமே ஏற்படலாம். வாழ்க்கை குறுகியதாக இருக்கலாம், அதிருப்திகரமாகவும் இருக்கலாம். அது உண்மையாக ஏமாற்றமளிப்பதில்லை என்பதனைப் பொறுத்தே எமது நிலைமை தீர்மானிக்கப்படுகிறது. வாழ்க்கையே ஏமாற்றம் என்றும், நாம் வாழ்க்கையை எப்படிப்பார்க்கிறோம் என்பதையும் பொறுத்தே ஏமாற்றம் உருவாக்கப்படுகின்றது. எமக்கு வயது செல்லச்செல்ல சக்தி குறைந்துகொண்டே போகிறது. குடும்பத்தை சமாளித்தல், பொருள்தேடுதல், பல்வேறு பொறுப்புக்கள் சிக்கல்களை எதிர்கொள்ளல் என்ற பெருஞ்சுமை வந்து சேர்கிறது. இவ்வேளையில் எதிர்பார்ப்புக்கள் அதிகம் தான். எனவே தான் மோசமான முடிவுகளில் வந்து சேருகின்றோம்.

குழந்தைகளாக இருந்தபோது எதிர்காலம் பற்றியோ இறந்தகாலம் பற்றியோ எந்தவித அக்கறையும் இல்லாமல் இருந்திருப்போம். ஆனால் வளர்ச்சியடையும் போது எமது அக்கறை நிகழ்காலத்தில் குவிந்திருக்கும். மற்றைய கவலைகளில் நம்மை நாமே ஈடுபடுத்திக்கொள்கிறோம். இறந்த காலத்திலிருந்து பாடங்களை கற்றுள்ளோம். நிகழ் கால கற்பனைகளுக்கும் அளவில்லை. கற்பனைச் சக்திமூலமே எமது சிந்தனைச் சித்திரங்களை புனைகிறோம். வண்ண வண்ண நிறங்களால் அழகு செய்கிறோம். இன்பியல் முடிவுகளை எதிர்பார்க்கிறோம். எமது கற்பனைகள் களங்கமற்றவை. ஆனால் யதார்த்தங்கள் வேறுவிதமானவை. சிறிய வீடுகளிலிருந்து பெரிய வீடுகள் வரை, குறைந்த விலை வாகனத்திலிருந்து மிகவும் விலை உயர்ந்த விலைக் கார்கள் வரை, கம்பள விரிப்புக்களை எடுத்துவிட்டு வீடு முழுவதும் உறுதியான மரப் பலகைகளை அடிக்கும் வரை, வீட்டிலுள்ள எல்லா அறைகளையும் புத்தம்புதிய தளபாடங்களால் நிரப்பும் வரை, நிம்மதியேயில்லை. சில வேளைகளில் இந்த எதிர்பார்ப்புகள் தோல்வியிலும் முடிந்துவிடலாம். பொருட்களை வைத்திருந்தல் என்பது மிக எளிதாகவும் மிக வசதியானதாகவும் ஆக்கலாம். ஆனால், அவை பிரச்சினைகளை தீர்ப்பதில்லை. மிக ஆழமான திருப்தியுணர்வை அளிப்பதும் இல்லை. நம்மைச் சுற்றிலும் உடைமைகள்...! உடைமைகள்...!! நம்மால் வாங்க முடியாத பொருட்களின் மீது தான் எமக்கு மோகம் அதிகம். இதனால் ஏமாற்றமே எமது நிரந்தர தோழனாகிவிடுகிறான்.

ஏமாற்ற உணர்ச்சியிலிருந்து கோபம், புண்படுதல், சுய இரக்கம் என்பவை தோன்றுகின்றன. அல்லது குழப்பமான நிலை எழக்கூடும். ஒன்றுடனொன்று பின்னிப்பிணைந்துள்ளன. மரணத்தின் இழப்பு என்பது நிரந்தரமானது. ஆனால், ஏமாற்றம் என்பது வெறுமனே ஓர் எண்ணத்தின் தோல்விதான். அத்துடன் நமது வாழ்க்கையுடனே நாமே மோதிப் புதிய தொலைநோக்கிற்கு நம்மைக் கொண்டு செல்ல நிகழும் ஓர் அனுபவமே ஏமாற்றம் எனலாம். பொதுவாக மனதில் ஏற்படும் ஏமாற்றம் உடலிலும் பாதிப்பினை ஏற்படுத்தி விடக்கூடும். மீண்டும் மீண்டும் ஏமாற்றமடைவோர் மன அழுத்தத்திற்கு உட்படுவர். உடலியல், உளவியல் சிக்கல்கள் ஏராளமாக நிகழலாம். உயர் இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி, ஒற்றைத்தலைவலி, பாலியற்கோளாறு, தூக்கமின்மை, போதைப்பழக்கம் போன்ற பல்வேறு நோய்கள் எழ வாய்ப்பு உண்டு. உடலுறவில் ஏற்படும் தோல்விகரமான முயற்சிகள் போன்ற தோல்வி மனப்பான்மை எதிலுமே எழுவதில்லை. இங்கு சுயமதிப்பு இழக்கப்படுகிறது. எதிர்பார்ப்பு, ஏமாற்றம், அவநம்பிக்கை மீண்டும் எதிர்பார்ப்பு இப்படி தொடர்கிறது வாழ்வு. நீண்ட கால ஏமாற்றத்திற்கு இவர்கள் கொண்டு செல்லப் படுவார்கள். இவர்களிடமிருந்து ஒரு புன் சிரிப்பைக்கூட எதிர்பாக்கமுடியாது.

இளையோர்களாக இருந்தபோது நாம் செல்வதற்கு ஏராளமான பாதைகள் இருந்தன. எல்லா நேரமும் நம்முடையது போலவே தோற்றமளித்தது. இப்போ எதையும் நிறைவேற்ற போதுமான கால அவகாசம் கிடைப்பதில்லை. நான் பெரிய நிறுவனத்திற்கு தலைமை தாங்குவேன்; எல்லாப் பிள்ளைகளையும் பல்கலைக்கழகத்துக்கு அனுப்புவேன்; பல வீடுகளை வாங்கிவிடுவேன் என்றெல்லாம் எண்ணி திரும்ப திரும்ப ஏமாற்றங்கள் கிடைக்கும் போது பொதுவாக மனஅழுத்தமே மிஞ்சும். ஏமாற்றங்கள் அனைத்தும் ஒரே ஒரு மையக்கருத்தையே சுற்றிக்சுழல்கின்றன. மாயக்கோட்டைகள் நொருங்க ஆரம்பிக்கின்றன. வயது அதிகரிக்கும்போது ஒரு சிக்கலான பகுதியை நாம் சந்திக்கின்றோம். பக்குவமும் முதிர்ச்சியும் பெற்ற அன்புள்ள பருவம் அது; மிகப் பெரும்பான்மையான செல்வத்தை கட்டுப்படுத்தும் பருவம் அது; அதிகாரமும் திறமையும் உச்சத்திலுள்ள பருவம் அது; சொந்த வீடுகளில் நிரந்தரத்தன்மையுடன் வாழும் பருவம் அது. எனினும், மன அழுத்தம், மதுப் பழக்கம், தற்கொலை இந்த வயதுப் பருவத்திலே அதிகம் என்றே ஆய்வுகள் கூறுகின்றன. காரணம் வாழ்க்கைத் துணையின் மரணம், பணி ஓய்வு பற்றிய அச்சங்கள், மாதவிடாய் நிற்கும் பருவ கோளாறுகள், தனிமைப்பயம் போன்ற பல சவால்களை சமாளிக்கவேண்டியுள்ளது.

எமது முதிர்ச்சி நிலையோ இதைவிட மோசமானது. அவநம்பிக்கையுடன் மற்போர் புரியும் பருவம். மரணத்தின் அச்சங்கள் அதிகம் உருவாகும் பருவம், உடலியல் குன்றி நோய்களோடு போராடும் பருவம். வாழ்க்கையின் எல்லையில் இனிமேல் எதுவும் சிறப்பாக ஏற்பட்டுவிடமாட்டாது என ஏங்கும் பருவம். தங்கள் திறமையின் மீது நம்பிக்கை இழக்கும் பருவம். எனவே, தவறிய வாய்ப்புக்கள் தோல்விகள் என எல்லாவற்றையும் அசைபோட்டு ஏமாற்றங்களை மட்டுமே ஜீரணித்துக் கொள்ளுகின்றோம். மையிருட்டில் முழுநிலா வந்தது போல் இனியொரு வாய்ப்பு இல்லை. இனியும் ஆவல்களையும், எதிர்பார்ப்புக்களையும் பிடித்து வைத்துக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. ‘முன்கூட்டியே நல்லதாக தோன்றும் எந்தப் பொருளும் பின்னர் அப்படி இருப்பதில்லை’ என்று கூறிய ஜோர்ஜ் எலியட் அவர்களின் சிந்தனை எவ்வளவு பொருத்தமாகிறது.

எதிர்பார்ப்பு என்பது புதிரான அதிசயம்! நமது அனுபவத்தைப் பெரிதாக்கும் திறமையும், சிறிதாக்கும் திறமையும் அதற்கு உண்டு. அறிவியல் நோக்கி ஊக்குவிக்கவும் மிகச் சாதாரண நிலைக்கு தள்ளிவிடவும் அதனால் முடியும். நம்பிக்கை இழந்தவர்களுக்கு துணிச்சலை அளிக்கும்; நோயாளிகளை குணமாக்கும். அல்லாதுவிடில் நமது உணர்வுகளை கண்டபடி கந்தலாக்கி, விழிப்புணர்வினை மந்தமாக்கவும் அதனால் முடியும்.

ஏமாற்றங்களை தடுப்பதற்கு அல்லது குறைப்பதற்கு சில நடவடிக்கைகளை எடுக்கவேண்டியுள்ளது. எதிர்பார்ப்புகளின் தொலைநோக்குப்பார்வையில் வளைந்து கொடுக்கும் மன நோக்கு, மாற்றத்திற்கு தயாராக இருத்தல், முதலீடுகளை ஆரம்பத்தில் குறைத்தல், எதிர்பார்ப்புகளை சீராக்குதல், மதிப்பிடலை செய்து ஆவலை சரி செய்தல், தொடர்ந்து நம்பிக்கை வைத்தல் என்பனவே அவை. வழக்கமான முறையில் ஏமாற்றம் அடைவதினை தவிர்த்து நாம் வாழவேண்டுமானால் மனக்கட்டுப்பாட்டுடன்கூடிய எதிர்பார்ப்புகளை மட்டுமே வைத்திருக்கவேண்டும். ‘கற்பனைகளை மட்டும் வளர்த்துக்கொண்டு காற்றில் பறப்பதனை விடுத்து பழக்கி கொடுப்போம் கால்களுக்கு நிலத்தில் நடப்பதற்கு’ என்று எண்ணுவோம்.

pathmanathan.s@thaiveedu.com

■ ■ ■

### ஆத்திரக்காரனுக்குப் புத்தி மத்திமம்:



∴புளோரிடா மாநிலத்துக் கணவர் ஒருவர் முகநூலில் உலாவும்/மேயும் போது மனைவியிடம் “அருகே இருக்கவேண்டாம்” என்று சொன்னார். “மற்ற இடங்களில் இருப்பது எனக்கு அவ்வளவு வசதியாக இல்லை” என்று மனைவி சொல்ல, பியர் குடிக்குமாறு மனைவியைக் கேட்டார் கணவர். 8 பியர் குடித்தபிறகும் மனைவி நித்திரைக்குச் செல்லாமல் குத்துக்கல்லு போன்று அருகிலேயே இருக்க, சலித்துப்போன கணவர் ஆத்திரம் மேலிட 911க்கு அழைத்து முறைப்பாடு செய்தார்.

காவற்றுறையினர் வந்து, ‘அவசர சேவைக்கான தொலைபேசி எண்ணை முறைகேடாகப் பயன்படுத்தினார்’ என்று குற்றஞ்சாட்டி கணவரைக் கைதுசெய்தது. 60 நாட்கள் சிறைத் தண்டனையை எதிர் நோக்கியிருக்கிறார் கணவர்.

8 பியர் நட்டம்

குட்டான்

# வீட்டுக்கடன் காப்புறுதி திட்டம்
# Mortgage Life Insurance

"Before sign up for the Mortgage life Policy you should shop around.
The Banks offer convenience, but individual Insurance sold by Life Insurance companies offer Portability, Flexibility and a Better Deal."

### வங்கிக் கடன் காப்புறுதி

01 வங்கியே உடமைக்காரர்.
02 வங்கியின் அதிகாரத்தில் இருக்கிறது.
03 கடன் தவணைகள் தவறினால் காப்புறுதி செயலிழந்து விடும்.
04 வங்கியே பாத்தியக்காரர்.
05 உங்கள் காப்பு தொகை குறைந்துகொண்டே வரும்.
06 காப்புறுதிக்கு திரும்பவும் விண்ணப்பிக்கவேண்டும்.
07 காப்புறுதி தொகை, கடன் தொகையை தாண்டக்கூடாது.
08 கடனை முற்றிலும் தீர்க்கவேண்டும்.
09 நீட்டவோ மாற்றவோ முடியாது.
10 திட்டமில்லாத வைப்புகளுக்கு சலுகை இல்லை.
11 காப்புறுதி எடுத்தவர் இறந்த பிற்பாடே வங்கி அதன் தராதரங்களை முற்றாக ஆராயும்.
12 வங்கி காப்புறுதி மிகவும் கூடிய செலவு.
13 வங்கி காப்புறுதியை எப்போதும் லண்டன் லை:ப் காப்புறுதிக்கு மாற்றலாம்.
14 முடிவு உங்களுடையது, வங்கியுடையது அல்ல.

### லண்டன் லை:ப் காப்புறுதி

01 காப்புறுதி எடுத்தவரே உடமைக்காரர்.
02 காப்புறுதி எடுத்தவரே அதிகாரம் கொண்டவர்.
03 கடன் தவணைகள் தவறினாலும் காப்புறதி செயலிழக்காது.
04 உங்கள் பாததியக்காரராக யாரையும் நீங்கள் நியமிக்கலாம்.
05 உங்கள் காப்புதொகை நிரந்தரமானது, காப்புறுதித் தவணையும் ஒரே அளவானது.
06 கடன் உதவியவரை மாற்றினாலும் காப்புறுதி தொடரும்.
07 காப்புறுதித் தொகையை உங்கள் தேவைப்படியும் வசதிப்படியும் தீர்மானிக்கலாம்.
08 உங்கள் உரிமைக்காரர் பணத்தை தக்கவைத்துக்கொண்டு அதன் வருமானத்தில் 10 தவணைகளைக் கட்டலாம்.
09 உங்கள் காப்புறுதியை மிண்டும் புதுப்பிக்கலாம்; மாற்றலாம்.
10 திட்டமில்லாத வைப்புகளுக்கு சலுகை உண்டு.
11 காப்புறுதிகளின் தராதரம் விண்ணப்ப சமயத்தில் தீர்மானிக்கப்படும்.
12 எங்களுடையது போட்டிகளை எதிர்த்து நிற்கும் வல்லமை கொண்டது.
13 மேற்சொன்ன காரணங்களினால் இதுவே சிறந்தது.

Freedom 55 Financial
A division of London Life Insurance Company



## பாலா பாலசுந்தரம் B.Eng, CHS.

**Certified Health Insurance Specialist**

**Office: 416-291-0451 Ext.227**
**Cell: 416-518-9489**
300-2075 Kennedy Rd, Toronto. ON M1T 3V3

**E-mail: bala.balasundaram@freedom55financial.com | Now Representing Manulife, Sunlife & Greatwest Life.**


# வீடு வாங்கும் போது அதிகூடிய
# $5000 சலுகை

**Neilson & Sheppard**




3+1 Bedrooms, 2 Washrooms
Condo Townhouse

**Neilson & Sheppard**




3+1 Bedrooms, 4 Washrooms
with Basement Apt.

**Meadowvale & Sheppard**




3 Bedrooms, 1 Washroom

Century 21
Affiliate Realty Inc. Brokerage

Full Time Realtor
## Punch Sockalingam
Broker
416-786-2463 416-290-1200



# YOU DON'T KNOW BECAUSE YOU DON'T ASK

உணர்வுசார் நுண்ணறிவை வளர்த்தல் - பகுதி 2

# கோபத்தைக் கையாளக் கற்றுக்கொடுங்கள்



ஸ்ரீரஞ்சனி

பெற்றோராக இருப்பதில் எவ்வளவு சந்தோசம் இருக்கின்றதோ, அதேயளவுக்கு கஷ்டமும் இருக்கின்றது எனலாம். ஆதரவு தர அயலவர்களோ, சொந்தக்காரர்களோ சூழ இல்லாத நிலைமை, அந்தக் குறித்த வயதில் எமக்கு இருந்த அறிவை விட அதிகமான அறிவு எமது பிள்ளைகளுக்கு இருத்தல் என்பன பிள்ளை வளர்ப்பில் உள்ள சவால்களை மேலும் அதிகரிக்கின்றன. எனவே புத்தகங்கள் மூலமோ அல்லது தொழில்சார் நிபுணர்களுக்கு ஊடாகவோ பிள்ளை வளர்ப்புக்கு உதவி பெற வேண்டிய நிலை ஏற்பட்டால் பெற்றோர்கள் தம்மைப் பற்றித் தாம் குறைவாக நினைக்க வேண்டியதில்லை.

பெற்றோரை மிகவும் விசனத்துக்குள்ளாக்கும் பிள்ளைகளின் கோபம் பற்றிப் பார்ப்போம். பொதுவாக விரக்தி தான் கோபத்தின் மூல காரணமாக உள்ளது. கோபத்தைத் தகுந்த முறையில் கையாளப் பிள்ளை பழகாவிட்டால் அது அடாவடித்தனமாகி, நாளடைவில் பெற்றோரை மட்டுமன்றி சமூகத்தையும் மிகவும் பாதிக்கும் ஒரு பிரச்சினையாகி விடலாம்.

கோபம் என்பது ஒரு உணர்ச்சி, அதனால் அதைப் பார்க்க முடியாது. ஆனால் கோபத்தால் ஒருவரில் ஏற்படும் உடலியல் மாற்றங்களையும் நடத்தை மாற்றங்களையும் நாம் பார்க்க முடியும்.

உதாரணமாக கோபமுற்ற ஒருவரின் முகமும் உடலும் விறைப்படையும். அத்துடன், அவர் பின்வரும் நடத்தைகளைக் காட்டக்கூடும்.

- கத்துதல் / கூடாத வார்த்தைகளால் ஏசுதல்
- பொருள்களை எறிதல்
- சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தல்
- அடித்தல் / உதைத்தல் / கடித்தல்
- சண்டை பிடித்தல்
- அச்சுறுத்தல்
- விலங்குகளுடன் கொடூரமான முறையில் நடத்தல்
- மற்றவர்களைக் கொடுமைப்படுத்தல்
- நெருப்பு வைத்தல்

அடாவடித்தனம் என்பது ஒரு நடத்தையாகும். இது அதிகாரத்துக்கு சவால் விடும் அல்லது அதிகாரத்தைக் காட்ட முயற்சிக்கும் ஒரு செயலாகும். பிள்ளையின் இந்த நடத்தை பரம்பரை ரீதியானதாகவோ அல்லது அடாவடித்தனம் காட்டுபவரைப் பார்த்துக் கற்றுக் கொண்டதாகவோ இருக்கலாம்.

எல்லாப் பிள்ளைகளும் தங்களுடைய வளர்ச்சி நிலையின் ஒரு கட்டத்தில் கோபத்தைத் தற்காலிகச் சண்டித்தனமாகக் காட்டுவது இயற்கை. ஆனால் அதன் பாரதூரம் அது எவ்வளவு நேரம் நிலைக்கிறது, எவ்வளவு மோசமாக இருக்கிறது, அடிக்கடி நிகழ்கிறதா, இல்லையா என்பவற்றைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

பொதுவாக 3 - 5 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் தாம் விரும்பும் ஒரு பொருளைப் பெறுவதற்காக அல்லது தம்முடைய பொருளைப் பங்கிட்டுக் கொள்ள விரும்பாத போது ஏற்படும் விரக்தியைக் காட்டவும் பெற்றோரின் கவனத்தைத் தம்பால் திருப்புவதற்காகவும் இவ்வகையான நடத்தையைக் காட்டுகிறார்கள்.

அப்படியான நிலைமையில் பிள்ளைகளின் கவனத்தை திசை திருப்புவதன் மூலம் அல்லது நிலைமையை விளங்கப்படுத்தக் கூடிய கலந்துரையாடல்களால் அதனைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கலாம்.

உதாரணத்துக்கு parkல் இருந்து வர முடியாது என அடம்பிடிக்கும் பிள்ளைக்கு சொல்லுக் கேட்டால் வீட்டுக்கு போனதும் மேலதிகமாக ஒரு கதை வாசித்துக் காட்டுவதாகச் சொல்லலாம். அல்லது எவ்வளவு நேரம் விளையாடுவது எனப் பிள்ளையுடன் கலந்து முன் கூட்டியே முடிவு செய்தபின் parkக்குப் போகலாம்.

6-12 வயதுக்குட்பட்ட பிள்ளைகள், தங்களுடைய விருப்பங்களுடன் பெற்றோர் ஒத்துவராத போது தங்களுடைய உரிமைகளுக்காகவும் சுதந்திரத்துக்காகவும் போராடும் ஒரு வழியாகக் கோபத்தையும் அடாவடித்தனத்தையும் கையாளுகிறார்கள். வளர்ச்சியின் போது அவர்களுக்குள் உருவாகும் புதிய உணர்ச்சிகளையும் அவர்களது தனித்துவமான அடையாளத்தையும் இனம் காணும் ஒரு முயற்சியாகவும் இது இருக்கிறது. அத்துடன் இந்த வயதில் அவர்களுக்கு நண்பர்களின் அபிப்பிராயங்கள் முக்கியமாதலால் அவர்களின் நண்பர்களின் முன் அவர்களைக் குறை கூறுவதையும் அவமானப்படுத்துவதையும் பெற்றோர்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

மேலே குறிப்பிட்ட பிரச்சினைகள் 13 - 18 வயதுக்குட்பட்ட பிள்ளைகளில் ஒப்பீட்டளவில் அதிகமாகக் காணப்படலாம். அவர்களிடம் தாம் தான் சரி என்றும் பெற்றோரை விட தமக்கு அதிகமாகத் தெரியும் என்ற எண்ணமும் இருப்பது தான் இதற்குக் காரணமாகிறது. பெற்றோருக்குக் கீழ்ப்படியாமை, ஒழுங்கு முறையைப் பின்பற்றாமை போன்ற அவர்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளை மேவுவதற்கு, தகுந்த எல்லை வகுத்தலும் கூட்டாகச் சேர்ந்து குடும்ப ஒழுங்குமுறைகளை உருவாக்கலும் உதவலாம். ஆனால் எதுவும் குடும்பத்தின் நாளாந்த வாழ்வைக் குழப்பும் அளவுக்கு இருந்தால் நிபுணர்களின் உதவி பெறுவது அவசியமாகும்.

### கோபம், அடாவடித்தனம் என்பவற்றை அதிகரிக்கக் கூடிய சில காரணிகள்:

- பரம்பரைக் காரணி - விரக்தியைத் தாங்க முடியாத தன்மை, வாக்குவாதம் செய்யும் பண்பு - ஆனால் இது சூழலின் தன்மையால் குறைக்கப்படலாம்
- உடல் / உள ஆரோக்கியம்
- Autism, Learning Disability
- இழப்பு / வன்முறை / அதிர்ச்சி அனுபவங்கள்

> “ கோபம் என்பது ஒரு உணர்ச்சி, அதனால் அதை நாம் பார்க்க முடியாது. ஆனால் கோபத்தால் ஒருவரில் ஏற்படும் உடலியல் மாற்றங்களையும் நடத்தை மாற்றங்களையும் நாம் பார்க்க முடியும். ”

### கோபம், அடாவடித்தனம் என்பவற்றைக் குறைக்கும் வழிகள்:

- சத்தம் போட்டுக் கத்தாமல், பழைய பிரச்சினைகளை இழுக்காமல் உங்கள் பிள்ளையின் குறிப்பிட்ட அடாவடித்தனம் தான் உங்களுக்குப் பிடிக்கவில்லையே தவிர பிள்ளையையல்ல என்பதைப் பிள்ளைக்குத் தெளிவுபடுத்துங்கள்
- உங்களுடைய கோபத்தைக் கட்டுப்படுத்துங்கள். பிள்ளைக்கு முன்மாதிரியாக இருங்கள்
- நித்திரை வருவதால்தான் என்றோ, பசிக்கிறதால்தான் என்றோ பிள்ளையின் அடாவடித்தனத்துக்குக் காரணம் கற்பிக்காதீர்கள். சூழலில் குற்றம் சொல்லாமல், தம்முடைய செயலுக்கு தாம் தான் பொறுப்பு என்பதை பிள்ளைகள் சிறு வயதிலிருந்தே கற்றுக்கொள்ள உதவி செய்யுங்கள்.
- பிள்ளைகளுடைய செயல்கள் சூழ உள்ளவர்களை எப்படிப் பாதிக்கின்றது என்பதை அவர்கள் உணர வையுங்கள்.

அடாவடித்தனம் வரமுன்பே தடுப்பது சிறந்தது அதற்காக உங்கள் பிள்ளையின் உணர்வு சார் நுண்ணறிவை அதிகரியுங்கள், கோபத்தைக் கையாளக் கற்றுக்கொடுங்கள்:

- அன்பான வீட்டுச் சூழலை உருவாக்குங்கள். பிள்ளை, தன் எண்ணங்களைக் கதைக்கச் சந்தர்ப்பம் கொடுங்கள்.
- அன்பை வெளிக்காட்டுங்கள், கட்டியணையுங்கள்.
- பிள்ளைகளுடன் கதைக்க, விளையாட, வாசிக்க என அவர்களுக்காக ஒரு நேரத்தை ஒதுக்குங்கள்.
- பிள்ளைகள் நல்ல விடயங்களைச் செய்யும் போது பாராட்டுங்கள்.
- விரும்பத்தகாத நடத்தையைச் செய்யும் போது அதை நல்ல விடயத்தை கற்பிக்கும் ஒரு சந்தர்ப்பமாக மாற்றுங்கள்.
- ஒழுங்குமுறை ஒன்றை உருவாக்கும் போது உங்கள் பிள்ளையுடன் சேர்ந்து உருவாக்குங்கள். மாற்ற வேண்டிய தேவை வந்தால் பிள்ளையுடன் கலந்தாலோசிக்காது மாற்றாதீர்கள்.
- கட்டளையிடுவதற்குப் பதிலாக ஒன்றைச் செய்யும் படி கேளுங்கள்.
- தெரிவுகள் மேற்கொள்ளச் சந்தர்ப்பம் அளியுங்கள். உதாரணம்: சத்தம் போட்டுக்கொண்டு இருக்கின்றார்கள் என்றால் “சத்தம் போடுவதை நிறுத்தப் போகிறீர்களா அல்லது இவ்விடத்தைவிட்டு விலகப் போகிறீர்களா?” என்பதற்கு, அதற்குத்தக்கதாக நடந்தால் பாராட்டுங்கள். இல்லையென்றால் பிள்ளை அந்தத் தெரிவைச் செய்ததையிட்டு உணர வையுங்கள்.
- ஒழுங்குமுறைப்படி பிள்ளைகள் நடக்கும் போது வயதுக்கேற்ற சன்மானம் வழங்குங்கள். உதாரணம்: sticker அல்லது ஒரு சினேகிதருடன் ஒரு நாளைக் கழிக்கும் வாய்ப்பு.
- ஒரு விடயம் சம்பந்தமாக பிள்ளை கோபமாக இருந்தால், அது பெரிய விடயமல்ல என்று சொல்லாதீர்கள். ஏன் அதற்கு உனக்குக் கோபம் வரவேண்டும் எனக் கேட்காதீர்கள். பதிலுக்கு நீ கோபமாக இருக்கிறாய் என எனக்கு விளங்குகிறது என அந்த உணர்வுக்கு மதிப்பளியுங்கள். பின்னர், எது கோபம் ஏற்படுத்தியதோ அதை பிள்ளை எப்படிக் கையாளலாம் என்பது பற்றிப் பிள்ளையுடன் கதையுங்கள்.

முடிவில், “நான் உன்னை விரும்புகிறேன், நீ என் பிள்ளையாக இருப்பதில் நான் சந்தோஷப்படுகிறேன், ஆனால் இந்த நடத்தை ஏற்றுக்கொள்ளப்படமுடியாதது. நான் இதைச் சகித்துக்கொள்ள மாட்டேன்” என்பதே உங்களின் செய்தியாக இருக்க வேண்டும்,

உசாத்துணை:
*http://www.hincksdellcrest.org*

sriranjani@thaiveedu.com

■ ■ ■

# சிறு நீரகச் செயலி...

7ம் பக்கத் தொடர்ச்சி...

டில் வைப்பதற்குரிய வழி வகைகளை கரிசனையுடன் பின்பற்றுதல்.

### உணவு:

பழுதடைந்த சிறுநீரகங்களால் அதிகளவாக உள்ள உப்புகள், பொட்டாசியம், சோடியம், நீர் என்பன கழிக்கப்பட இயலாமையால் அளவாக உட்கொள்ளுதல் வேண்டும். பால், சீஸ், Cola குடிவகைகள் போன்றவற்றைக் கட்டுப்பாட்டுடன் உட்கொள்ளுதல் வேண்டும்.

### மருந்துகள்:

நோயின் தாக்கத்திற்கேற்ப பல மருந்துகள் உண்டு. உங்கள் குடும்ப வைத்தியர்கள் அவற்றத் தீர்மானிப்பார்.

### நோய் தீவிரமாகும் பொழுது:

இக்கட்டத்தில் செயற்கையாக உடலில் உள்ள கழிவுகள் அகற்றப்படுதல் வேண்டும். இரண்டு முறைகள் உண்டு. முதலாவது குருதியை ஒரு சுத்திகரிக்கும் இயந்திரத்தினூடாகச் செலுத்தி அதை மீளவும் உடலில் சேர்த்துவிடுவார்கள். இரண்டாவது முறை ஒரு சிறு குழாயினூடாக சுத்திகரிக்கும் திராவகம் வயிற்றுச் சுற்று விரி மேலணியில் (Peritoneum) அக்குழாயூடாகச் செலுத்தப்பட்டு சிலமணி நேரங்கள் விடப்படும். பின்பு அத்திராவகம் வெளியேற்றப்படும் பொழுது கழிவுகளும் அத்திராவகத்துடன் வெளியேற்றப்படும். நோய் முற்றிய நிலையில் சிறுநீரக மாற்றுச் சத்திர சிகிச்சை செய்வார்கள்.

senthilnathan.kandiah@thaiveedu.com

■ ■ ■

Acupuncture Clinic
அக்குபஞ்சர் சிகிச்சை

Provider
Dr. Kandiah Senthilnathan (SLMC)
Acupuncturist (MAcF)

647-801-9252
Finch / Warden Medical Clinic
3430 Finch Avenue East

RBC Insurance

உங்கள் ஆயுளின் நண்பன் RBC காப்புறுதி

# கொடிய நோய்களுக்கான காப்புறுதி

## இது நீங்கள் உயிர் வாழும் போதே பயன்பெறக்கூடிய காப்புறுதி!


- நீங்கள் கொடிய நோயுற்றிருக்கும் வேளைகளில் இக்காப்புறுதித் தொகையை மொத்தமாகப் பெற்று பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தலாம்லாம்.
- 18– 65 வயது வரை கொடிய நோய்கள் ஏற்பட்டால் 2 மில்லியன் டொலர்கள் வரை காப்புறுதி செய்யலாம்.



இக்காப்புறுதி பற்றிய தகவல்களை விளக்கமாக அறிந்து கொள்ள,
கனடாவின் முன்னணிக் காப்புறுதி நிறுவனமான
RBC Insurance நிறுவனத்தின் **Platinum**
தரத்தில் உள்ள காப்புறுதி ஆலோசகரான என்னை அழையுங்கள்.

**குகன் பொன்னம்பலம்**
CHS, B.A.Fin, PGDip in MGT, MAAT
**Platinum Advisor**
**416-576-0050**

கண்கள் உங்களுக்கு உலக அழகைக் காட்டுவது போல் பற்கள் உங்கள் அழகை உலகிற்குக் காட்டுகிறது.



# Markham NS Dental

*So much begins with smile*

**Dr. நளினி சுதர்சன் DDS**
*Family and Cosmetic Dentistry*

**New Patients and Emergencies always Welcome**

**Complimentry**
Oral Cancer Screening
Cosmetic & Implant
Consultation and Advice

- Prompt emergency treatment
- New patients are welcome
- We bill your insurance company directly
- Female Dentist available
- State-of-the-Art Dental Technology
- Evening & Weekend hours available
- Flexible payment plan
- Major credit cards accepted
- Wheel chair accessible
- Kids play area available
- Family appointment available

**Preventative Care**
- Dental Hygiene
- Fluoride Treatment
- Sealants
- Oral Cancer Screening

**Periodontic Services**
- Gum Treatment
- Scaling and Root Planning

**Endodontic Services**
- Root Canal Therapy

**General & Cosmetic Dentistry**
- Tooth-Coloured Fillings
- Porcelain Veneers
- Teeth Whitening
- Cosmetic Bonding
- Crowns & Bridges
- Inlays & Onlays
- Complete & Partial Dentures
- Implant Supported Dentures
- Dental Implant Restorations

**Oral Surgery**
- Tooth Extractions
- Wisdom Teeth Removal

**Implant**
**Braces**
**Sleep Dentistry**
**Sports Dentistry**
**Seniors Dentistry**
**Children Dentistry**
**Emergency Dental Care**




*Treats all age groups, including children*
*All aspects of dentistry practiced*
*Education & Prevention*

**Open Seven Days A Week**



**www.markhamNSdental.com**
9293 Hwy 48, Suite 4, Markham, ON. L6E 1A3 905-472-4111

MON - SAT 10:00 AM - 8:00 PM
SUN 10:00 AM - 5:00 PM




GLORIOUS PRINTERS & VIDEO INC.
DESIGN | PRINT | AUDIO | VIDEO
your one stop shop for multimedia solutions
உங்கள் அனைத்து அச்சகப்பணிகளுக்கும்
தொலைக்காட்சி விளம்பரங்களுக்கும்
அழையுங்கள்: 905.471.2500
PROFESSIONAL VIDEO SOLUTIONS
YOUR COMPANY HERE
EFFECTIVE T.V. ADS:
CONCEPT > SHOOT > EDIT
CUSTOM PRODUCTION TO MEET YOUR INDIVIDUAL BUSINESS NEEDS
WEDDING:
SHOOT > EDIT > PACKAGE
1 COLOUR FLYER:
- Size: 5.5" x 8.5"
- QTY: 10,000pcs
$99.99 +TAX
CALL US FOR MORE INFORMATION
BUSINESS STATIONARY, BANNERS & SALES SIGN
LETTER HEADS, INVOICES STAMPS, EMBOSS SEALS, LOGO, POSTCARDS, CALENDER MAGNETS.
WEBSITE DESIGN
GET YOUR COMPANY ONLINE!
BUSINESS CARDS
1,000 Cards
- Full Colour - 1 Sided
- Quality Card Stock
ONLY $69.99 +TAX
5,000 Cards
- Full Colour - 2 Sided
- Quality Card Stock
ONLY $149.99 +TAX
WE ALSO OFFER:
* Graphic Design Services
FAST & QUALITY SERVICE
printglorious@gmail.com | Fax: 905.471.2501 | Tel: 905.471.2500
9889 Highway 48, Unit 9, Markham ON. L6E 0B7 (Markham & Major MacKenzie)


"Unemployed?
Let me help you start your Second Career."
You may qualify for funding if:
Laid off within the last 4 years due to closing, downsizing or recession
OR Receiving EI over 6 months
OR Receiving EI over 6 months and working less than 20 hours per week
Choose from these 6 courses
Early Childcare Assistant
Personal Support Worker
Medical Office Administration
Community Service Worker
Computer Systems & Networks Specialist
Computerized Accounting & Payroll
Call Cynthia Now
416-335-0508
cynthia@evergreencollege.ca
Cynthia Sunny
Director, Second Career
Evergreen College
1265 Morningside Avenue at Sheppard Avenue, 2nd Floor
Scarborough Campus


#1
RE/MAX
Shan Thayaparan
www.shan123.com
Re/Max Vision
Realty Inc. Brokerage
INDEPENDENTLY OWNED & OPERATED
Stouffville
$489,900
Beautiful 4 Bedroom home in a quiet area. Close to school. Hardwood main floor. Ready to move in for the new school year. close to all amenities.
Markham
$559,900
Beautiful 4Bedrooms + Computer loft. Close to 407, Shopping, Schools & Hospital. Hardwood floors, Double garage Ready to move in for the new school year
Scarborough
$489,900
Mint Condition. New windows, doors Large 3 bedrooms. Covered deck Manicured lawn. Ready to move in and enjoy.
Pickering
$434,900
Beautiful 4+3 bedroom home Open concept. Two family rooms. New kitchen. Close to all amenities.
Whitby
$419,900
Exclusive
Gorgeous 4 bedroom home in Williamsburg. Heated driveway Hardwood floors. Close to all amnesties.
Scarborough
$464,900
Gorgeous 4 bedroom+loft. 7 year home with 9 ft ceiling. $$$$ spent on upgrades Hardwood floors, new kitchen, Granite counters, Stainless appliances.
Pickering
$424,900
Immaculate detached home in a quit neighborhood Walkout basement & back on to ravine. Large deck. close to everything..
Brampton
$329,999
Free hold town home. Quite area Well kept. Minutes away from schools, shopping & Transit. Hardwood floors Bright kitchen. Back on to ravine.
Down Town
$319,900
Brand new condo located in the heart of St. Lawrence market. 1+Den. Modern kitchen. Roof top garden, steps to shops, financial district and more.

# Law Offices of Yaso Sinnadurai

## யசோ சின்னத்துரை சட்ட அலுவலகம்

**Barrister & Solicitor, Notary Public**



- **Real Estate Law** (Residential and Commercial)
- **Business Law**
- **Wills & Powers of Attorney**

2100 Ellesmere Road, Unit 202
Scarborough ON M1H 3B7
@ Markham & Ellesmere

3024 Hurontario Street, Unit 216
Mississauga ON L5B 4M4
@ Dundas & Hurontario St.


For Appointment, Please call:

**416 265 3456**

# MKS DENTAL

Markham & Steeles Dental

Dr. Chandra & Associates
Dr. Seena Abraham
Dr. Dhafir Ali
Dr. Sharon Barr



*New & Walk In Patients Are Welcome*
*Special Discount For Seniors*
*Special Discount For Students*

- All Insurance Coverage Accepted
- **ODSP** (Ontario Disability Support Program)
- **CINOT** (Children In Need Of Treatment)
- Healthy Smiles Ontario
  (Children Under 17 Years & Family Income Under $20,000)
- Ontario Works (Dental / Denture Benefits)
- All Other Benefits – please call our office for more information

**Hours Of Operation: Monday – Friday 10 Am – 7 Pm**
**Saturday 10 Am – 5 Pm**

For More Information & Appointments Please Call Jeya at 416-298-0101

**Emergency & After-Hours Consult: 416.700.0101**


Best Choice
Home Renovation & Flooring
24/7 All-In-One HANDYMAN Services Available.
QUALITY 100% GUARANTEED
We offer a full range of home improvement, repair and maintenance services.
• Plumbing • Gas Line
• Painting • Electrical Works
• Carpentry & Dry Wall
• Full Basement Renovation
• And More...
WAREHOUSE SALE!
• Hardwood Flooring • Tiles
• Back Splash • Laminate
மேலதிக விபரங்களுக்கு
அழையுங்கள் SUTHA:
416.822.5351
3480 McNicoll Ave., Unit 13, Scarborough, ON. M1V 5A7


EVEREST TRAVELS & TOURS
The Apex of Travel
Low-Priced Air Fares
We Specialize In:
• Low-Priced Air Fares
• Tour, Vacation & Hotel Packages
• Car Reservations
• Caribbean, Cuban & Dominican Republic Vacation Packages
• RBC Travel Insurance
• Excellent & Friendly Service
இலங்கை, இந்தியா, ஐரோப்பா மற்றும் அனைத்து நாடுகளுக்கும் உங்கள் விமான பயண சீட்டுக்களை மிக குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள
இன்றே அழையுங்கள். Tel: 416.321.2311
2761 Markham Rd, Unit C21, Toronto, ON M1X 0A4
(Markham Rd / Nashdene Rd - Sun City Plaza)


Free HomeLife Home Warranty Program
Flexible Commission | Free Market Evaluation
உங்கள் திருப்தியே... எனது வெற்றி...
HomeLife Today Realty Ltd., Brokerage
Independently Owned and operated
$99,000
Jane/ Eddystone
3 Bed Room, 2 Washroom
Well Maint. Unit, Close To Hwy 400 & 401
$205,000
Finch/ Middlefield
2+1 Bed Room, 1 Washroom
Low Maintenance Fee
$218,000
Kennedy / Eglinton
2+1Bed Room, 2 Washroom
Excellent Location! Close to Subway
$249,900
Markham/Sheppard
2 Bed Room, 1 Washroom
North View, Corner, New Building
$419,000
Finch / Morningside
3+2 Bed Room, 3 Washroom
Renovated Through Out
$459,000
Markham / Elson
3 Bed Room, 3 Washroom
Location! Very Well Maintained
ஐக்கியா ஐக்கியசீலன்
Ikea Aickiyaseelan BSc.
Sales Representative
Cell: 416-669-8104 Off: 416-298-3200
agentikea@yahoo.com
*Not intended to solicit properties already listed for sale or buyers under buyer agency agreement

# மின்சாரச் செலவும் கட்டுப்பாடும்

### வீடும் விடியலும் - 75

வேலா சுப்ரமணியம்
- Certified Home Inspector -



### மின்சாரச் செலவைக் கட்டுப்படுத்துவதற்கான ஆலோசனைகள்:

பொதுப்படையாகக் கூறுவதானால் பாவனையில் இல்லாத உபகரணங்களை நிறுத்தி விடுங்கள். ("If You Aren't Using It - Shut It Off") இங்கு வானொலி, கம்பியூட்டர், குளிரூட்டிகள், தொலைக்காட்சி, உட்பட மின் விளக்குகளும் உள்ளடக்கப்படுகின்றது.

காலத்தின் மாற்றத்திற்கேற்ப எங்கள் பழக்க வழக்கங்களையும் நாங்கள் மாற்ற வேண்டிய தேவை இருக்கின்றது. அதாவது எதிர் காலத்தில் மின்சாரப் பாவனைக்கான கட்டணம் எவ்வளவு பாவிக்கின்றோம் என்ற அடிப்படையில் இல்லாது எப்போது? பாவிக்கின்றோம் என்ற அடிப்படையில் அறவிடப்பட இருக்கின்றது. அதாவது அதிகரித்த தேவையின் காரணமாக இரவில் பாவிக்கும் மின்சாரத்தை விட பகலில் பாவிக்கும் மின்சாரத்திற்கு இரட்டிப்பு கட்டணம் அறவிடப்பட இருக்கிறது.

ஒன்ராறியோவில் பெரும்பாலான இடங்களுக்கு Smart Meterஇன் பாவனை நடைமுறைக்கு வந்திருப்பது பலருக்கும் தெரிந்திருக்கும். அதனடிப்படையில் தற்போது கோடைகாலத்திற்குரிய நியமம் பின்வருமாறு வகுக்கப்பட்டுள்ளது.

**கோடைகாலம் - May 1- October 31**

- திங்கள் -வெள்ளி

7pm – 7am – Off Peak – 6.5 cts/KWH

- திங்கள் -வெள்ளி

7am–11am & 5pm–7pm -Mid Peak–10 cts/KWH

- திங்கள் -வெள்ளி

11am – 5pm Peak – 11.7 cts/KWH

- சனி- ஞாயிறு விடுமுறை நாட்கள்:

Off Peak – 6.5 cts/KWH

உதாரணமாக காலை 11 மணிக்கு 11.7 சதமாக /KWH இருக்கும் கட்டணம் மாலை 7 மணிக்குப் பின்னர் 6.5 சதமாக /KWH இருப்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள். சூரியன் மேலே உயர உயர கட்டணமும் கூடிப் பின்னர் மாலையில் குறைவடையத் தொடங்கும். சனி, ஞாயிறு தினங்களில் கட்டணம் மேலும் குறைவாக இருக்கும். இத்தகைய சூழலுக்கேற்றவாறு நாமும் எமது பழக்கவழக்கங்களை முடிந்தளவு மாற்றுவதன் மூலம் மிகுந்த பலனை அடையமுடியும்.

சில செயற்பாடுகளை கட்டணம் குறைந்த நேரங்களில் மேற் கொள்ளுவதன் மூலம் அதிக பலன் பெறமுடியும். உதாரணமாக உடுப்பு துவைத்தல், பாத்திரம் கழுவும் இயந்திரங்களைப் பாவித்தல், அதிக மின்சாரத்தை நுகரக் கூடிய பாண் தயாரிக்கும் இயந்திரங்களைப் பாவித்தல் அல்லது Baking செய்தல் போன்றவற்றை இரவு நேரத்திற்கு மாற்றி விடுதல் பலன் தரக்கூடியது. மேலும் கூறுவதானால் தானாக இயங்கும் TIMERஐ பொருத்துவதன் மூலம் நாம் நித்திரையாக இருக்கும் போது இவை விழித்திருந்து செயற்பட்டு எமது செலவினைக் கட்டுப்படுத்த துணை புரியும். குறைந்த விலையில் TIMER களை வாங்க முடியும் என்பதனை இங்கு குறிப்பிட வேண்டியது அவசியமாகிறது. $10 டொலருக்கு குறைவாக இவற்றை வாங்க முடியும். சிறிய முதலீடு காலப் போக்கில் பாரிய சேமிப்புக்கு வழிவகுக்கும்.

கோடைகாலத்தில் குறிப்பாக கனடாவில் வெப்ப அலைகளின் (HEAT WAVE) தாக்கத்திற்கு முகங்கொடுக்கத் தயாராக வேண்டும். இதற்குப் பலவிதமான ஆலோசனைகள் கூறப்படுகின்றன. ஒரு சில மாதங்கள் ஆனாலும் வீட்டில் இருக்கும். வெப்பத்தின் தாக்கத்தால் பலரும் அவதிப்படுவது உண்டு.

வீடுகளில் பல தேவைகளுக்காக மின்சாரம் பாவிக்கப் படுகிறது. ஒவ்வொரு பிரிவிலும் எத்தகைய வழியில் மின்சாரத்தைச் சேமிப்பதன் மூலம் செலவைக் குறைத்துக் கொள்ளலாம் என்பது பற்றி ஆராய்வது சிறந்தது.

### குளிர் ஊட்டிகள் (Air conditioning)


பலரும் கோடைகாலத்தில் AIR CONDITIONஐப் பாவிப்பது வழக்கம். வீட்டில் நாம் பாவிக்கும் மின்சார உபகரணங்களில் மிக அதிக அளவு மின்சாரத்தை நுகரக் கூடியதும் அதிக செலவை ஏற்படுத்தக் கூடியதும் குளிரூட்டிகள் என்றால் அது மிகையல்ல. எனவே இதனை மிகத் தேவையான நேரங்களில் மட்டும் பாவித்து அதற்கான பதிலீட்டு வழிகளில் ஈடுபடுதல் நல்லது.

மிக அதிகளவு மின்சாரத்தை நுகர்வதனால் மிக அதிகளவு செலவை ஏற்படுத்தக் கூடியவை குளிரூட்டிகள். எனவே அவற்றை மிக அவசியமான போது மட்டும் பாவிப்பது நல்லது. THEMOST CONTROLERஐ 26C பாகைக்கு மேல் இயங்கும் விதத்தில் பாவித்தல் சிறந்ததும் லாபகரமானதும் ஆகும். தவிர இயற்கையான முறைகளில் வெப்பத்தை தணிக்க வழி காண்பது மேலும் பலன் தரவல்லது.

### மேலும் சில ஆலோசனைகள்:

- வீடு சூடேறதவாறு பார்த்துக் கொள்ளல். அதாவது மாலை தொடக்கம் இரவு நேரங்களில் சாளரங்கள் ஊடாக குளிர்காற்றை உள்வாங்கி, பகல் வேளைகளில் உள் வாங்கப்பட்ட குளிர் காற்றை தப்பித்து விடாதபடி பார்த்தக் கொள்ளல்.("Keep the heat out & invite the cool air in")
- உஸ்ணம் கூடிய வேளைகளில் சூடான காற்றை காற்றாடி மூலம் வெளியேற்றல்.
- திரைச் சீலைகளை பகலில் மூடி இரவில் திறந்து விடல்.
- ATTIC பகுதியில் கோடை காலத்தில் வெப்பம் மிக அதிகமாக இருக்கும். அந்த வெப்பத்தை தணிக்க பல மணி நேரம் குளிரூட்டிகள் இயங்க வேண்டி இருக்கும். ATTICல் தலைக்கு மேலே அடைபட்டிருக்கும் வெப்பமான காற்றை வெளியேற்ற காற்றாடிகள் (FAN) போடப்பட்டால் உங்களது மின்சாரச் செலவில் பாரிய வித்தியாசத்தைக் கண்டு கொள்ள முடியும். அத்துடன் இத்தகைய காற்றாடிகள் கூரையின் ஆயுட் காலத்தைக் கூட்டவும் உதவும். ஒரு கல்லில் இரு மாங்காய் என்பது இங்கு சாலவும் பொருந்தும்.
- நிலக்கீழ் அறை உள்ளவர்கள் கோடை

தொடர்தல் 24ம் பக்கம்





Law Office

T. JEGATHEESAN

(Barrister, Solicitor and Notary Public (on)



உங்கள் சட்டப் பிரச்சினை எதுவாகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

தி. ஜெகதீசன்

(Barrister, Solicitor and Notary Public (on)

Off: 416 • 266 • 6154
Fax: 416 • 266 • 4677

2620 Eglinton Ave., East # 201
Scarborough. ON
M1K 2S3



Home Inspection

• Purchase & sale Inspection, • Problem solving Inspection, • New home – Warranty inspection

Optimal Home Inspection Services

Vela Subramaniam

Certified Home Inspector

416-786-0760
416-299-0700

E-Mail: homeinspectorvela@gmail.com



# மின்சாரச் செலவும்...

23ம் பக்கத் தொடர்ச்சி...

காலத்தில் அங்கு அடை பட்டிருக்கும் குளிர்காற்றை மேற் பகுதிக்குப் பரப்புவதன் மூலம் வீடு வெப்பமாவதைக் குறைக்க முடியும்.

- FURNACE உடன் பொருத்தப்பட்டிருக்கும் காற்றாடியைத் தனியாகப் பாவிப்பதில் எந்தவித தப்பும் கிடையாது. குளிரூட்டியுடன் ஒப்பிடும் போது மிகக் குறைந்தளவு மின்சாரத்தை மட்டுமே காற்றாடிகள் நுகர்கின்றன.

## சமைத்தல்:

எம்மவர் மத்தியில் சமையற்கலை மிகப் பிரபல்யமானது. நீண்ட நேரம் சமைப்பதில் பலருக்கு இன்பம். ஆனால் மாதாந்த கட்டணங்கள் செலுத்தப்படும் போது அதன் தாற்பரியம் பலருக்கும் புரிவதில்லை. தொடர் மாடிக் கட்டிடத்தில் இருப்பவர்களுக்கு இதனைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய அவசியம் கிடையாது. பிறரது செலவில் சமையல் செய்து சம்பாதிப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள் சில தொடர் மாடிக் கட்டிட குடியிருப்பாளர்கள். எது எப்படியாயினும் சமையல் துறையில் மின்சாரத்தைக் கட்டுப் படுத்த சில ஆலோசனைகள்:

- மின்சாரத்தில் இயங்கும் அடுப்புகளை விட GAZல் இயங்கும் அடுப்புகள் சிக்கனம் வாய்ந்தவை. அத்துடன் பழைய அடுப்புகளை விட புதிய அடுப்புகள் (ENERGY EFFICIENT) குறைந்த அளவு மின்சாரத்தை உள் வாங்கி அதிகளவு வெப்பத்தைத் தரக்கூடியவை. எனவே பழைய அடுப்புகளைத் திருத்துவதை விட புதிய சிறந்த அடுப்புகளை பிரதியீடு செய்வது பற்றியும் சிந்திக்கலாம்.
- அடுப்புச் சூடாக இருக்கும் போதே மேலதிக உணவுகளை தயார் செய்யலாம். அடிக்கடி போடுவதைத் தவிர்ப்பது நல்லது.
- சூடாக இருக்கும் போதே OVENஐ சுத்தம் செய்வது நல்லது. இங்கு குறிப்பிடப் படுவது தானே சுத்தமாக்கும் அடுப்புகள். (SELF CLEANING OVEN)
- சமைக்கும் போது மூடிச் சமைத்தல் விரயத்தைத் தவிர்க்கக் கூடியது. அத்துடன் சூழலையும் பாதுகாக்கும்.
- அமுக்க முறையில் இயங்கும் சமையல் பாத்திரங்கள் (PRESSER COOKER) மிக இலாபகரமானது. நேரத்தையும், பணத்தையும் சேமிக்கக் கூடியவை.
- MICROWAVEன் பாவனையைக் கூட்டுவது இலாபகரமானது. சாதாரண MICROWAVE, 1.6 KW மின்சாரத்தை நுகர்ந்து 600W சக்தியை உருவாக்குகிறது. நேரத்தை மீதப்படுத்தும் அதேவேளை சாதாரண அடுப்புகளுடன் ஒப்பிடும் போது 50% - 75% வரை செலவைக் குறைக்கவல்லது என சில ஆராய்ச்சிகள் கூறுகின்றன.
- அடுப்பில் பாத்திரங்களை வைக்கும் போது பாத்திரத்தின் அளவுக்குத் தகுந்த மாதிரியான அளவான அடுப்பைப் பாவிப்பதும், அவை பொருந்தக்கூடிய விதத்தில் நடுவில் வைப்பதும் வீணான வெப்ப விரயத்தைத் தவிர்க்க வழிவகுக்கும். உதாரணமாக அப்பச் சட்டியை சாதாரண அடுப்பில் வைத்தால் நுகரப்படும் வெப்பத்தை விட விரயமாகும் வெப்பம் தான் அதிகமாக இருக்கும். புத்திசாலியான சிலர் அதற்கென சில உலோக வளையங்களைப் பாவிக்கிறார்கள்.









## வெளிப்புற விளக்குகள். (Exterior Lights)

**SOLAR LIGHTS:**

(சூரியக்கதிரில் இயங்குபவை)

வீட்டிற்கு வெளியே பாவிக்கக்கூடிய சூரிய ஒளியில் இயங்கக் கூடிய பூந்தோட்ட விளக்குகள் பிரபல்யம் அடைந்து வருகின்றன. பகலில் உள்வாங்கும் சூரிய ஒளியை சேமித்து இரவில் வெளிச்சம் தரும் இத்தகைய விளக்குகள் மிக இலாபகரமானவை. மிக அழகான பல்வேறு வடிவங்களில் இவை சந்தைப்படுத்தப் படுகின்றன. இவற்றைப் பொருத்துவதும் மிக இலகு.

**SENSOR LIGHTS / MORTION LIGHTS:**

அசைவுகளைக் கண்டதும் குறிப்பிட்ட நேரத்திற்கு தானே இயங்கி தானாக நிற்கும் மின் விளக்குகளும் பயன் உள்ளவை. வீட்டிற்கு வெளியிலும் வாசல் போன்ற பகுதிகளிலும் இவற்றைப் பயன் படுத்தலாம். இவை மின் சாரத்தைச் சேமிக்க உதவும்

அதேவேளை பாதுகாப்பையும் (Security) தரவல்லவை. பொருத்தமான இடங்களில் வீட்டிற்கு உள்ளும் இவற்றைப் பயன் படுத்தலாம். குறிப்பாக நிலக்கீழ் அறைக்குச் செல்லும் படியில் உள்ள விளக்குகள் பல வீடுகளில் நீண்ட நேரம் எரிவதை அவதானிக்க முடியும். படியை அண்மிக்கும் சந்தர்ப்பத்தில் தானே on ஆகி சில நிமிடத்தில் தானே நிறுத்தப்படுமானால் அது காலப் போக்கில் குறிப்பிட்ட சேமிப்பிற்கு வழி வகுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இரவு நேரத்தில் தானே on ஆகி சூரிய ஒளியைக் கண்டதும் நிறுத்தப்படும் விளக்குகளும் பாவனையில் உள்ளன. தானே இயங்கி, தானாக நிறுத்தப்படும் தன்மை வாய்ந்தவை. ஆனாலும் இரவு முழுவதும் தொடர்ந்து எரிவது அவசியமா என்பதையும் சிந்திக்க வேண்டும். சில பூந்தோட்ட விளக்குகள் இரவில் தானே on ஆகிய போதிலும் குறிப்பிட்ட நேரத்திற்கு பின்னர் நிறுத்தப்படக்கூடிய கட்டுப்பாட்டைக் கொண்டவை. (1, 2, 3மணி என) இவற்றை உரிய முறையில் பாவித்தால் அதன் மூலம் பயன் பெறமுடியும்.


## Seasonal Leds

கிறிஸ்மஸ், புதுவருடம் போன்ற காலங்களில் வெளிப்புறத்திலும், உட்புறத்திலும் அலங்காரங்களுக்குப் பாவிக்கக் கூடிய Energy saver lights பாவனைக்கு வந்துள்ளன. சாதாரண விளக்குகளோடு ஒப்பிடுகையில் இவை 95% குறைந்தளவு மின்சாரத்தை நுகரக்கூடியவை என்பதோடு 100 மடங்கு காலம் நிலைக்கக் கூடியவை. இவை கடந்தவருட இறுதியில் (November & December) Mississauga, Streetville பகுதிகளில் Energy conservation bureauவினால் இலவசமாக மாற்றீடு செய்யப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சில வீடுகளின் அமைப்பை உற்று நோக்கினால் மின் விளக்குகளை பாவிக்க வேண்டிய அவசியமே இல்லாத அளவு இயற்கையான வெளிச்சம் உள்ளவையாக இருக்கும். வீடுகள் அவ்வாறு அமைவது அவரவர் அதிஸ்டத்தைப் பொறுத்தது. மாறாக இருண்ட வீடுகளில் அதிகளவு நேரம் பாவிக்கப்படும் மின் விளக்குகளுக்கு, CLF, Blub,Timer, Tube light போன்றவற்றைப் பாவிப்பது காலப் போக்கில் அதிக பலனைத் தரவல்லது. புதிய தொழில் நுட்பத்தில் சிறிது தொகைப்பணம் முதலீடு செய்வது எவ்வளவு இலாபகரமானது என்பது எமது பழக்க வழக்கத்தில் தங்கியுள்ளது. சிலர் வீட்டில் விழிப்பாக இருக்கும் போது கூட இருட்டில் தான் இருப்பார்கள். சிலரது வீடுகளில் சிறியவர் தொடக்கம் முதியவர் வரை தேவையற்ற விளக்குகளை நிறுத்துவதில் மிகக் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். மாறாக வேறு சிலர் வீடுகளில் எப்போதும் ஏதோ கொண்டாட்டம் நடப்பது போல் ஒரே வெளிச்சமாக இருக்கும். சிலர் படுக்கைக்குச் செல்ல இரவு 1மணிக்கு மேலாகும். ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் மேற் கூறப்பட்ட தொழில் நுட்பங்களைப் பாவிக்கும் போது ஏற்படக் கூடிய பலாபலன்களின் அளவுகள் எம்மவரின் பழக்க வழக்கத்திற்கு ஏற்றவாறு மாறுபடக் கூடியது.

velasubramaniam@thaiveedu.com

■ ■ ■


கேளுங்கோ கேளுங்கோ
ஆனந்தமான அனுபவம் ! தகவல்களின் சுரங்கம்
இசையும் ஆழ்ந்த அறிவும் தமிழின் பலமே!
கலசம்
www.KALASAM.com
தமிழின் சுவைகூறும் இணையத்தள ஒலிபரப்பு



**Full-time Real Estate Agent**

# Nada G. Nadarajah B.V.Sc

Call Me @ 416 616 8751 Sales Representative

"An award-winning realtor with 14 years experiance".




Morningside & Ellesmere
Condo, Apartment
2 Bedrooms - 2 Washrooms
Close to Major Amenities




McCowan & Sheppard
Condo, Apartment
3 Bedrooms - 2 Washrooms
Close to Scarborough Town Center




Eglinton & Kennedy
Condo, Apartment
3+1 Bedroom - 2 Washroom
Many Condo Features!




Middlefield & Steeles
2-Storey Detached
3 Bedrooms - 2 Washroom
Finished Basement




McCowan & McNicoll
2-Storey Semi-Detached
4+2 Bedrooms - 4 Washrooms
Finished Basement with 2 Bedrooms




McCowan & Finch
Condo, Apartment
2 Bedrooms - 2 Washrooms
Close to TTC Service!

HomeLife
Landmark Realty Inc., brokerage
7240 Woodbine Ave, Suite 103
Markham, ON L3R 1A4
Bus: 905 305 1600
nanadarajah@trebnet.com

HOMELIFE
HIGHER STANDARDS



# வீட்டு உரிமையாளர் கவனத்திற்கு!




Business: 416-519-3896
Fax: 647-547-8147
thana7@gmail.com
www.thana.ca

80 Nashdene Road, Unit D218
Scarborough, OnM1V 5E4

# இரத்தம் வழிய வழிய...

5ம் பக்கத் தொடர்ச்சி...

அரச அலுவலகங்களுக்கு வழங்கப்படும் ஜீப் வாகனத்தில் மேலதிகாரியும் சாரதியும் எங்கள் 4 பேரையும் ஏற்றிக்கொண்டு புறப்பட்டனர். புறப்படும்போதே வாகனம் மறிக்கப்பட்டது. “வேலை தொடர்பான ஒரு பயணம் போகிறோம்” என மேலதிகாரி பதிலளித்தார். எங்களில் ஒருவர் நுகேகொடைக்கும் இருவர் தெஹிவளைக்கும் நான் வெள்ளவத்தைக்கும் செல்லவேண்டும். முதலில் நுகேகொடைக்குப் போவதென்ற முடிவில் ஹைலெவல் வீதியில் எங்கள் வாகனம் சென்று கொண்டிருந்தது. கிருலப்பனைப் பகுதியைத் தாண்டும்போது ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் எனப் பலதரப்பட்டோரும் தலையிலும் உடலிலும் காயங்களோடு, இரத்தம் வழிய வழிய உயிரையேனும் காத்துக்கொள்ள ஓடிக் கொண்டிருப்பதைப் பார்த்தோம். அத்தோடு வேறுபலர், எந்தவிதப் பயமுமின்றி பைகளிலும் பெட்டிகளிலும் பல்வேறு பொருட்களையும் கொண்டு போவதையும் பார்த்தோம். அவை ‘தமிழர்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பொருட்கள்’ என்பதில் எமக்கு ஐயமிருக்கவில்லை. கடைகள், வீடுகள் எரிந்து கொண்டிருப்பதையும் பார்த்தோம். வாகனங்களைப் புரட்டித் தீவைத்துக் கொண்டிருந்தனர் காடையர். இயற்றையெல்லாம் தாண்டி, ஒருவாறு நுகேகொடையில் எம் நண்பரை இறக்கிவிட்டு தெஹிவளைக்குச் செல்லும்போது, காவற்றுறை அதிகாரியொருவர் “தெஹிவளை செல்வதற்கு எனக்கு இடம் தருவீர்களா?” என்று எம் மேலதிகாரியிடம் கேட்டு ஏறிக்கொண்டார். பின்னிருக்கைகளில் பயத்தால் விறைத்துக் போயிருந்த எமக்கு எமது வாகனத்தில் சீருடையோடு ஒரு காவற்றுறை அதிகாரி பயணித்தது பெரும் ஆறுதலைத் தந்தது. தெஹிவளை காவல் நிலையத்தில் காவற்றுறை அதிகாரியையும் நண்பர்களை அவர்களது வீடுகளிலும் இறக்கிவிட்டு காலி வீதி வழியாக வெள்ளவத்தைக்கு வந்தோம். வழியில் எங்கும் எதுவிதமான பிரச்சினைகளும் இருக்கவில்லை. என் வீட்டுக்கு வந்து கதவைத் தட்டினால், வீட்டில் யாருமில்லை! பதற்றம் அதிகரித்தது. ‘என்னாயிற்றோ?’ என்று அங்கலாய்ப்புடன் நிற்க, பக்கத்து வீட்டுக்காரர், “உங்கள் வீட்டுக்காரர் எங்கள் வீட்டில் பாதுகாப்பாக இருக்கின்றனர்” என்று சொல்லி நெஞ்சில் பால்வார்த்தார். மதிலுக்கருகே எதையோ வைத்து மதிலேறிக் குதித்துத்தான் அடுத்த வீட்டுக்கு மனைவியும் பிள்ளைகளும் சென்றிருந்தனர். நான் போவதற்கு ஓர் அரை மணி நேரம் முன்புதான் பேருந்தில் கொண்டுவரப்பட்ட காடையர் எமது வீட்டுக்கருகே சில வீடுகளைக் கொள்ளையடித்து, தீவைத்து அட்டகாசம் செய்திருந்தனர். எமது வீட்டருகே ஒரு தமிழ் இராணுவ அதிகாரி குடியிருந்தார். அவர்தான் தன்னை அடையாளப்படுத்தி காடையரை அவ்விடத்திலிருந்து துரத்தியிருந்தார். அவர் இல்லாதவிடத்து எங்கள் வீடுகளுக்கும் எதுவும் நடத்திருக்கலாம்.

33ம் ஒழுங்கை, 55ம் ஒழுங்கை, சென். லொறன்ஸ் வீதி ஆகியன சேருமிடத்தில் சில விடுகள் மட்டுமே எரியூட்டப்பட்டிருந்தன. ஏனைய வீடுகளுக்கு ஆபத்து அப்போது நேரவில்லை. வீட்டிலிருந்த உணவு எல்லோருக்கும் போதுமானதாக இருக்கவில்லை. பிள்ளைகளுக்குக் கொடுத்தோம்.



> இந்தத் துயரங்கள் எங்களோடு முடிந்துபோனவையாக இருக்கட்டும். ஆனால், இந்தத் துயரங்கள் பற்றிய சேதிகள் எங்களோடு முடிந்துபோனவையாக இருக்கக்கூடாது. எம் அடுத்த சந்ததிக்கும் இவை தெரிய வேண்டும் தெரியப்படுத்தப்படவேண்டும்.

33ம் ஒழுங்கை முகப்பில் ஒரு வாகனம் திருத்தும் நிலையம் இருந்தது. அதன் உரிமையாளரான சிங்களவர் பாண் வாங்கிக் கொண்டு வந்து எமக்கும் அயலவருக்கும் தந்துவிட்டுப் போனார். 2-3 நாட்கள் இவ்வாறாகவே கழிந்தன. பயமும் அவலமும் நிறைந்த நாட்களாகவே அவை இருந்தன. ஜுலை 29 வெள்ளிக்கிழமை, என் மனைவியின் உறவினர் ஒருவர் - பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி ஆசிரியை - இப்போது சரஸ்வதி மண்டப முகாமில் தங்கியிருப்பதாக அறிந்து அவருக்கு ஏதாவது உணவு வாங்கிக் கொடுக்கலாமென்று புறப்பட்டேன். வெள்ளவத்தையில் பாண் வாங்கிக் கொண்டு நடந்து போய் முகாமில் உறவினரிடம் கொடுத்துவிட்டுப் புறப்படும்போது முகாம் பொறுப்பாளர்கள், “நீங்கள் இங்கே தங்குவதானால் போகக்கூடாது; வெளியே போனால் திரும்பி உள்ளே வரமுடியாது. வெளியே நிலைமைகள் அவ்வளவு நன்றாக இல்லை. இங்கே இருந்துவிட்டு, ‘வீட்டைப் பார்த்துவிட்டு வருகிறோம்’ என்று கிருலப்பனைக்குப் போன சிலர் திரும்பிவரவில்லை. அவர்களுக்கு ஏதோ நடந்திருக்கிறது என்று அறிகிறோம்” என்றனர். நான் வீட்டை நோக்கி காலி வீதி வழியாக வந்துகொண்டிருந்தபோது, பேருந்துகளும் லொறிகளும் வேகவேகமாக தெற்குநோக்கிச் சென்றுகொண்டிருந்தன. அவற்றின் கூரைகளிலும்கூட மக்கள் நிறைந்திருந்தனர். “கொட்டி எனவா! கொட்டி எனவா!” (புலிகள் வருகின்றனர்) என்று அலறியடித்துக் கொண்டு அவர்கள் ஓடினர். அதைக் கேட்ட குப்பை அள்ளும் தொழிலாளிகள் குப்பை அள்ளுவதையும் விட்டுவிட்டுத் தங்கள் லொறிகளில் ஏறித் தலைதெறிக்க ஓடி மறைந்தனர். சந்தையில் மரக்கறி விற்றுக் கொண்டிருந்த பெண்கள் மரக்கறிக் கூடைகளைத் தலைச்சுமையாகச் சுமந்தவண்ணம் ஓடினர். இவற்றையெல்லாம் பார்த்தவாறு வீடுவந்தேன். “இனியும் இவ்வாறு இருப்பது பாதுகாப்பானதல்ல, நாம் சரஸ்வதி மண்டப முகாமுக்குச் செல்வதே நல்லது” என்று கூறினேன். அப்போது அங்கிருந்த எனது நண்பர், “நீங்கள் எங்கும் போகவேண்டாம், நாம் அனைவரும் பாதுகாப்பாக மன்னாருக்குப் போகலாம். நான் கூட்டிச் செல்கிறேன்” என்று கூறிவிட்டுப் போய் ஒரு வானுடன் வந்தார். மன்னார் வாடிவீட்டின் (Rest House) பொறுப்பாளரான சிங்களவர் ஒருவரும் எம்மோடு வந்தார். வழியெங்கும் மிகுந்த பதற்றமான சூழ்நிலையே இருந்தது. ஒருவாறு மன்னாருக்குப் போய், அங்கிருந்து பூநகரி – சங்குப்பிட்டி வழியாக யாழ்ப்பாணம் போய்ச் சேர்ந்தோம். யாழ்ப்பாணம் போனபின்புதான் நாம் பாதுகாப்பாகப் போய்ச் சேர்ந்தது ஒரு பெரும் அதிசயம் என்றுணர்ந்தோம்.

### மீண்டும் கொழும்பு வந்தீர்களா?

பிள்ளைகளை யாழ்ப்பாணத்தில் பாடசாலைகளில் சேர்த்துவிட்டு 6 மாதத்திற்குப் பிற்பாடு நான் மட்டும் கொழும்பு வந்தேன். நான் முன்பு குடியிருந்த 55ம் ஒழுங்கை வீட்டிலேயே, என் நண்பர்கள் சிலரும் சேர்ந்து குடியேறினோம். வேலைக்கும் போனேன். அதே அலுவலகம், அதே கதிரை மேசைகள். அதே நண்பர்கள். ஆனால் முன்பு போல இப்போதில்லை.

அவர்கள் வீட்டு சுகதுக்கங்கள் அனைத்திலும் நான் பங்கு கொண்ட, என் அலுவலக நண்பர்கள் என நான் நம்பிய பலரதும் இன்னொரு முகத்தை அன்று கண்டேன். என் காது படவே “கொட்டியா எனவா” (புலி வருகிறது) என்று குசுகுசுத்ததைக் கேட்டு மனம் நொந்தேன். ‘மனிதர்கள் அவ்வளவு விரைவில் மாறுகின்றனரா? அல்லது அவர்கள் இவ்வளவு காலமும் உள்ளே வெறுப்பையும் வெளியே சிரிப்பையும் காட்டிக் கொண்டிருந்தனரா?’ என்று குழப்பமாக இருந்தது.

‘இந்தச் சூழ்நிலையில் நிம்மதியாக இருக்க முடியாது’ என்று நண்பர் ஒருவர் சொன்னது நியாயமாகப்பட்டது. சம்பளமற்ற விடுமுறை எடுக்கக்கூடிய வாய்ப்பைப் பயன்படுத்தி சவூதி அரேபியாவில் ஒரு வேலைக்குச் சென்றேன். பிற்பாடு கனடா வந்து சேர்ந்தேன்.

### கறுப்பு ஜுலையில் நேரடியாகப் பாதிக்கப்பட்ட பலர் கனடாவில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். கறுப்பு ஜுலை நினைவு நிகழ்வுகளிலோ இது தொடர்பான ஆவணப்படுத்தல்களிலோ அக்கறையில்லாதோராகவே அவர்கள் இருக்கிறார்கள். கறுப்பு ஜுலையின் நேரடிச் சாட்சியான நீங்கள் எவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகிறீர்கள்?


கவிஞர் சேரன் எழுதிய இரு நாடகங்கள், கறுப்பு ஜுலையைக் கருவாகக் கொண்ட ‘What if the Rain Fails’, முட்கம்பி முகாம்களுக்குள் மக்களின் அவலத்தைச் சொல்லும் ‘Not by Our Tears’ ஆகியவற்றில் நான் நடித்திருக்கிறேன். Not by Our Tears, ரொறன்ரோ பல்கலைக் கழகத்திலும் ஒட்டாவாவிலும் அமெரிக்காவின் Connecticut, New Jersey, Chicago ஆகிய இடங்களிலும் மேடையேறியது. எங்கள் போராட்டங்கள் பற்றி 150 வரையிலான கவிதைகள் எழுதியுள்ளேன். இங்குள்ள பத்திரிகைகளில் அக்கவிதைகளுள் பெரும்பாலானவை வெளியாகியுள்ளன. எழுச்சிப் பாடல்களையும் எழுதியுள்ளேன், பாடியுமிருக்கிறேன். என் மனச்சாட்சிக்கேற்ப என்னாலியன்ற செயற்பாடுகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகிறேன்.

### ‘25 - 30 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த விடயங்களைப் பேசிப் பயனில்லை. பழைய புண்ணை ஏன் கிளறவேண்டும்? நடத்தவற்றை மறப்போம்’ என்று சிலர் கூறிக் கொண்டிருக்கின்றனர். உங்கள் நிலைப்பாடு?

இந்தத் துயரங்கள் எங்களோடு முடிந்துபோனவையாக இருக்கட்டும். ஆனால், இந்தத் துயரங்கள் பற்றிய சேதிகள் எங்களோடு முடிந்துபோனவையாக இருக்கக்கூடாது. எம் அடுத்த சந்ததிக்கும் இவை தெரிய வேண்டும்; தெரியப்படுத்தப்படவேண்டும். ‘எல்லாம் முடிந்துவிட்டது... மறப்போம்’ என்றால்... நாங்கள் மறக்கலாம்; ஆட்சி செய்பவன் மறப்பானோ? அவன் நினைவுபடுத்திக் கொண்டேயிருப்பான். இப்போதும் பாருங்கள்... எல்லாமே இராணுவம்தான். இராணுவம் சொல்வதும் செய்வதும் தான் சட்டம்.

என்னைப் பொறுத்தமட்டில் இங்கு கனடாவில் உள்ளதுபோல் ஒரு சமஷ்டி ஆட்சி. இல்லாதுவிடின் ‘நீங்கள் வேறு, நாங்கள் வேறு’ என்று பிரிந்துபோவது தான் தீர்வு (வடக்கு – கிழக்குப் பிரதேசத்திலும் குறைவான நிலப் பரப்பைக் கொண்ட சுதந்திர நாடுகள் உலகில் உள்ளன). அப்படியில்லாவிடின் எங்களை அடிமைப்படுத்திக் கொண்டேயிருப்பார்கள்.

**க** கறுப்பு ஜுலை இன அழிப்பு தமிழ் மக்கள் மத்தியில் எவ்வளவு தூரம் ஆவணப்படுத்தப்படுகின்றதோ அவ்வளவு தூரம் இலங்கைப் பேரினவாதத்தின் கட்டுக்கதைகள் அடிபட்டுப்போகும். கனடாவில் வாழும் கறுப்பு ஜுலைச் சாட்சிகளில் பாதிப்பேர் தங்களுக்கு நிகழ்ந்ததை, தாம் கண்டதை ஆவணப்படுத்தினாலே கறுப்பு ஜுலையின் கொடூரம் முழு அளவில் வெளிவரும். கனடாவில் இவ்வாறான ஆவணப்படுத்தலை போரினால் பாதிக்கப்பட்டோருக்கும் மனித உரிமைகளுக்குமான நடுவம் (Centre for War Victims and Human Rights –CWVHR) செய்துவருகின்றது. பிரித்தானியாவில் திரு. ஐ.தி. சம்பந்தன் தொகுத்த கறுப்பு ஜுலை ‘83 - குற்றச்சாட்டு’ (Black July ‘83 : Indictment) கறுப்பு ஜுலை பற்றிய முக்கியமான ஆவணத் தொகுப்பு. ஆனாலும் இவை போதாது. பாதிக்கப்பட்டோர் முன்வந்து, நிகழ்த்தப்பட்ட இன அழிப்பு ஆவணப்படுத்தப்பட உதவவேண்டும்.



gangatharan.k@thaiveedu.com

இரண்டாம் உலகப் போருக்குப் பின் Simon Wiesenthal எனும் யூதர் அவுஸ்திரியாவில் யூத வரலாற்று ஆவணப்படுத்தும் நிலையம் (Jewish Historical Documentation Centre) அமைவதில் பெரும்பங்கு வகித்தார். யூதர்களுக்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த பல நாஸி அதிகாரிகள் நீதியின் முன் நிறுத்தப்படுவதற்கு Simon Wiesenthal ஆற்றியபங்கு அளப்பரியது. கலிபோர்ணியாவில் தலையகத்தைக் கொண்டுள்ள Simon Wiesenthal Centre இனவெறுப்புணர்வையும் பயங்கரவாதத்தையும் எதிர்பதிலும் மனித உரிமைகளையும் தன்மானத்தையும் முன்னேற்றுவதிலும் உலகெங்கணும் வாழும் யூதர்களைப் பாதுகாப்பதிலும் இஸ்ரேலுடன் இணைந்து பணியாற்றும் ஓர் அமைப்பு. ஐ.நா அவை, UNESCO போன்றவற்றால் அரச சார்பற்ற அமைப்பு என ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம்.


எமக்கெதிராக நிகழ்த்தப்பட்ட கொடுமைகளை ஆவணப்படுத்துவதில் Simon Wiesenthal அவர்களையும் அவர் உருவாக்கிய ஆவணப்படுத்தும் நிலையத்தையும் அவருக்கு மதிப்பளிக்கும் வகையில் பெயர் சூட்டப்பட்ட Simon Wiesenthal Centreஐயும் நாம் முன்மாதிரியாகக் கொள்ளவேண்டும்.

*-Making Your Dream Home A Reality-*

Visit

www.lokanhomes.com

Mortgage Interest Rates AS LOW AS 2.85%




Call Us Before July 9th To Maximize Your Equity Loan

- 4 Bedrooms
- 4 Washrooms
- Stainless Steel Appliances
- In High Demand Area
- Close to all Amenities
-Hardwood on Main Floor





Lic #: M08000182
416-450-3984
lsundaram@trebnet.com

Lic #: M08009958
416-230-6462
kkathir@trebnet.com

HomeLife Future Realty

7 Eastvale Dr #205
Markham, Ontario
L3S 4N8

Office: 905-201-9977
Fax: 905-201-9229

Lokan Sundaram AMP
Real Estate/Mortgage Broker

Kathir Kandiah
Real Estate/Mortgage Broker






**Kannan Kankesu**

REAL ESTATE BROKER

kkankesu@gmail.com
www.learntotradeintamil.com

880 Ellesmere Road, Suit 204, Toronto, ON

Dir: 416 834 4200
Off: 416 284 5555

## பங்குச்சந்தையை பல இடத்தில் கற்றும் பணத்தை இழக்கின்றீர்களா?

உலகத்தமிழ் வரலாற்றில் முதல் முதலாக தமிழில் பங்குச்சந்தை நுணுக்கங்களை உங்கள் வீட்டில் இருந்தவாறு மிகத்துல்லியமாக கற்றுக்கொள்வதற்கான அரிய வாய்ப்பு
நீங்கள் உலகின் எப்பகுதியில் இருந்தாலும்எந்த வயதினராக இருந்தாலும்எந்த வகையான தொழில் செய்பவராக இருந்தாலும், இந்த இணையத் தளத்தினூடாக Free Seminar ல் பதிவு செய்வதன் மூலம் தமிழில் இலவசமாக (IT IS FREE) பங்குச்சந்தை பற்றி அறிமுக வகுப்புகளில் கலந்து கொள்ளலாம்.

மேலும் இதனை முழுமையாக கற்பதன் மூலம் பங்குச்சந்தை பற்றிய நுட்பங்களை அறிந்து மிக இலகுவாக, ஒருவருடைய உதவியும் இல்லாமல் உங்கள் வருமானத்தை அதிகரிக்கலாம்.

பொதுவாக ஒரு வியாபாரத்தை ஆரம்பிக்க அல்லது ஒரு நீண்டகால முதலீடு செய்வதற்கு மிக அதிக பணம் தேவைப்படும் ஆனால் Stock Options & Forex Trading ஐ தமிழில் கற்பதன் மூலம் மிக குறைந்த முதலீட்டிலேயே நிறைந்த வருமானத்தை பெறலாம்.

learntotradeintamil.com is a leading provider of trading education emphasizing in stock Options and Forex trading.

I have taught hundreds of students how to be smarter investors, how to protect their retirements to build a better lifestyle, to profit regardless of market direction, and how to manage risk effectively.
The Learntotradeintamil.com provides the education, support, and expert guidance to make it happen.

புதிய நேரடி(In Class) மற்றும் On-Line வகுப்புகள் ஆரம்பமாகின்றன

**Toronto - Montréal - Vancouver - Calgary**
**And**
**Anywhere else in the world.....**

**www.kannan.ca**

**"If you are not learning how to learn you are not really learning at all"**

# உங்களைவிட, உங்களைப் பற்றித் தெரிந்தவர் யார்

உங்களைவிட உங்களைப் பற்றி நன்றாக தெரிந்தவர் யாரும் இருக்க முடியாது. நம் எல்லோருடைய முக்கியமான பலமே நம் உள்ளம் தான். உள்ளம் என்றும் மனம் என்றும் குறிப்பிடும் அந்த சக்தியை இன்னும் அறிந்து கொண்டால் நம் வாழ்வு மேம்படும்.

உடலில் பாதிப்பு வந்தவுடன் நாம் வைத்தியரை தேடுவது போலத்தான் மனதையும் பார்த்துக்கொள்ளவேண்டும். உற்சாகம், உறக்கம், உணவில் நிறைவு இவை மூன்றும் தான் மனநலத்தின் வெளிப்படையான அடிப்படைகள் இவற்றில் எது குறைவாக இருந்தாலும் மனம் முழு நலத்துடன் இல்லை என்பது அர்த்தம். இம்மூன்றிலும் உறக்கம் தான் மனதுக்கு இதமும் சுகமும் தினசரி ஊட்டும் அத்தியாவசியம்.

அதிகமாக உறங்குவது அல்லது சரியாக உறக்கவில்லை என்றாலும் அது மனநலத்தின் பாதிப்பாக இருக்கலாம். அது மட்டும் அல்லாமல் பின்வரும் உணர்வுகள் அல்லது நிலைமைகளில் எவற்றையேனும் நீங்கள் அனுபவிக்கின்றீர்களா?

- திரும்பத் திரும்ப வருகின்ற பயங்கர கனவுகள்.
- மன ஈடுபாடு கொள்வதில் சிரமங்கள்.
- அடிக்கடி மனநிலை மாற்றங்கள்.
- மூச்சுத் திணறுதல், மூச்செடுப்பதில் கஷ்டம் அல்லது நெஞ்சில் வலி.
- சோகவுணர்வு, அடிக்கடி காரணமில்லாமல் அழுதல்.
- முன்பு உங்களுக்கு மகிழ்ச்சி தந்த விடயங்களில் ஆர்வமில்லாத ஒரு நிலை.
- உங்களில் நீங்கள் குறைபாடுகளை மட்டுமே கண்டுகொள்ளுதல்.
- நீங்கள் பாதுகாப்பாக ஒருபோதும் இல்லை என்ற எண்ணம்.
- கோபம்.
- வாழ்வில் கட்டுப்பாட்டினை இழப்பது போன்ற உணர்வு.
- எப்பொழுதும் களைப்பான உணர்வு.
- வாழ்க்கை, வாழ்வதில் அர்த்தமில்லை என்ற எண்ணம்.

மேலே கூறப்பட்டவற்றில் பலவற்றை நீங்கள் அனுபவித்து வருகின்றீர்கள் என்றால், உங்கள் விடயத்தில் உதவியை நாட வேண்டிய நேரம் உங்களுக்கு வந்துவிட்டது எனலாம்.

கனடாவில் வாழும் ஈழத்தமிழர்கள் பலர் பலவிதமான மனநோயினால் பாதிக்கப்பட்டு இருக்கின்றனர். அதில் சிலர் தற்கொலை செய்ய முற்பட்டு துரதிஷ்டவசமாக இறந்தும் இருக்கின்றார்கள்.

பலர் மனநோயை ஏற்றுக்கொள்வதில்லை. மனநோய் சம்பந்தமாக இருந்து வரும் சமூகக் கறையின் காரணமாக சிலர் உதவியை நாடுவதற்கு தயக்கம் காட்டுகின்றனர். அல்லது தங்களுக்கு உதவி தேவை என்பதை அவர்கள் உணருவதில்லை. வேறு சிலரோ தமது மனநோயக்கு சிகிச்சை செய்ய விரும்பிய போதிலும் கலாச்சார மெல்லுணர்வுடன் கூடிய சேவைகள் அரிதாக இருப்பதால் அவர்கள் இவ்விடயத்தில் உதவி பெறுவதில் சங்கடங்களைச் சந்தித்து வருகின்றனர்.

இங்கே ஒரு பெண் தனது மனநோய் பற்றியும் அவருக்கு அது எப்படி வந்தது என்பதைப் பற்றியும் அவர் இப்பொழுது கனடிய உளநலச் சங்கம் மூலம் உதவி பெற்று குணமடைந்ததையும் பகிர்ந்து கொண்டுள்ளர்.

## அனுபவப் பகிர்வு:

எனது சொந்த ஊர் வவுனியா. பருவ வயதில் பலரைப் போல் 'காதல் நோய்' என்னையும் தாக்கியது எனது சகோதரர் ஒருவரின் நண்பரை காதலித்தேன். காதலிக்க ஆரம்பித்த சில மாதங்களிலேயே அவர் ஐரோப்பா சென்று விட்டார். எனது குடும்பத்தாரிற்கு இந்த காதல் பிடிக்கவில்லை, ஆனாலும் அவர்களின் எதிர்ப்பையும் மீறி நானும் ஐரோப்பா சென்றுவிட்டேன்.

சென்ற சில வாரங்களில் எனது வருங்கால கணவரின் செயல்கள் வித்தியாசமாக இருந்தது.



நான் எனது குடும்பத்தாரிடமும் சகோதர சகோதரிகளிடமும் பேசுவது அவருக்குப் பிடிக்கவில்லை என தெரிந்ததால் அவர்களிடம் தொடர்பு கொள்வதை படிப்படியாக குறைத்து கொண்டேன். ஒரு கட்டத்தில் அறவே தொடர்பு இல்லாமல் ஆகிவிட்டது. பொருளாதார நெருக்கடியால் எங்களால் உடன் திருமணம் செய்து கொள்ள முடியவில்லை. இரண்டு வருடங்களுக்குப் பின் திருமணம் நடந்தது. ஆனால் ஐரோப்பா சென்று சில மாதங்களிலேயே நான் கர்ப்பவதியானேன். அவரோ கருவைக் கலைக்குமாறு கூறினார், நானும் வேறு வழியின்றி அரை மனதுடன் சம்மதித்தேன்.

சிறிது காலம் கழித்து எனது மாமியாரும் எம்முடன் வந்துவிட்டார்கள். அவர், எனக்கும் என் வருங்கால கணவருக்கும் இடையில் பெரும் பிரச்சினையை ஏற்படுத்தினார். திருமணம் ஆன பின்னர் என் கணவர் என்னை சந்தேகப்பட ஆரம்பித்தார். வீட்டிற்கு அவர் நண்பர்களைக் கூட்டி வருவார், அப்படி வரும் நண்பர்கள் என்னுடன் பேசினால் அவர்கள் போன பின் கடும் சொற்களால் என்னை திட்டுவார், சில சமயம் என்னை அடித்துமுள்ளார்.

வாழ்க்கை எனக்கு மிகவும் கசந்தது. புது நாடு, உறவுகளோ நண்பர்களோ யாரும் இல்லை. இலங்கையில் இருக்கும் எனது குடும்பத்தினருடன் தொடர்பு இல்லை. சோகம் தாங்க முடியாமல் இரண்டு முறை தற்கொலை செய்ய முயற்ச்சி செய்தேன்.

திருமணமாகி சிறிது காலத்தில் மீண்டும் கர்ப்பமானேன். அப்போது நான் தொழிற்சாலை ஒன்றில் வேலை பார்த்து கொண்டிருந்தேன். எனக்கு வேலை செய்வது மிகவும் கடினமாக இருந்தது. எனது கணவரோ கட்டாயமாக வேலைக்குப் போகவேண்டும் என வற்புறுத்த கர்பத்தோடு வேலைக்கு சென்றேன். எனது சம்பளத்தையும் அப்படியே வாங்கிவிடுவார். இப்படியாக எனது கணவர் உடல் ரீதியாக, மன ரீதியாக, பொருளாதார ரீதியாக என்னை எல்லா வகையிலும் துன்பப்படுத்தினார். இந் நிலையில் கரு தானாகவே கலைந்துவிட்டது.

அப்பொழுது வைத்தியர்கள் என்னை 6 மாதத்திற்கு கர்பமாகாது கவனமாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள். ஆனால் என் கணவரோ என்னை மீண்டும் 3 மாத்தில் கர்ப்பமாக்கி விட்டார். எனக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது.

என் பிள்ளை சில மாதங்கள் இருக்கும் போது, மற்றப் பிள்ளைகளைவிட அவர் வித்தியாசமாக இருப்பதுபோல் தெரிந்தது. வைத்தியரிடம் காட்டினேன், ஒன்றும் இல்லை என்று சொல்லிவிட்டார்கள்.

மீண்டும் கர்ப்பமானேன்.

எமது குடும்ப நண்பர் ஒருவர் கனடாவில் வாழ்க்கை நன்றாக இருக்கின்றது பிள்ளைகளுக்கு நல்ல எதிர்காலம் இருக்கின்றது என்று கூற, எனது கணவர் 7 மாத கர்ப்பிணியான என்னையும் எனது மகனையும் கனடா அனுப்பிவைத்தார். தான் பின்னர் வருவதாகக் கூறினார். என்னை அவர்கள் உறவினர் வீட்டில் தங்குமாறு பணித்தார். ஆனால் இங்கு வந்ததும் அவர் உறவினர்களோ என்னை ஏற்க மறுத்துவிட்டனர்.

எனது சகோதரர் இருவர் எனது நிலைமையை அறிந்து என்னைத் தொடர்பு கொண்டனர். நான் எனது நிலமையை எடுத்துக் கூறினேன். அவர்களும், என்னையும் என் மகனையும் ஏற்றுக் கொண்டார்கள். எனது கணவரோ ஐரோப்பாவில் இருந்து என்னை தொலைபேசியில் அழைத்து நான் எனது சகோதரர் வீட்டில் வசிப்பதற்காக கண்டபடி திட்டுவார். நான் கர்பவதி என்பதை கூட பொருட்படுத்தாமல் என்னை திட்டி மன உளைச்சலுக்கு ஆளாக்கினார்.

இரண்டாவதாக, எனக்கு மகள் பிறந்தார். மகள் பிறந்து சில மாதங்களில் எனக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. எனது மகனுக்கு Down Syndrom இருப்பது கண்டறியப்பட்டது. ஆரம்பத்தில் என்னால் இதை தாங்க முடியவில்லை. மகனைப் பார்க்கும் போதெல்லாம், எனது மகனுக்கு Down Syndrom என்று தெரிந்த பின் எனக்கு என் கணவர் மேல் வெறுப்பு வந்தது. முதல் கருவை கலைத்த தால் தான் எனக்கு இப்படி நடந்தது என்று நினைத்து அவரை வெறுக்க ஆரம்பித்தேன். இனிமேலும் கணவரின் பேச்சை கேட்பதில்லை என முடிவெடுத்தேன். பொறுமையாக இருந்த காலம் போய்விட்டது. பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு அல்லவா?

இரண்டாவது மகள் பிறந்த சில மாதங்களில் என் கணவர் கனடாவிற்கு வந்தார். அவர் வந்ததும் வராததுமாக மீண்டும் என்னை துன்புறுத்த ஆரம்பித்தார். என்னில் எதுக்கெடுத்தாலும் குற்றம் கண்டுபிடித்தார். என்னை உறவு கொள்ளுமாறு கட்டாயப்படுத்தினார். குழந்தை பிறந்த சில மாதங்கள் தான் என்பதால் நான் மறுத்துவிட்டேன் Toronto வில் இல்லாமல் Vancouverக்கு வருமாறு அழைத்தார். மீண்டும் என்னை என் உறவுகளில் இருந்து பிரிக்க நினைக்கின்றார் என்பதை புரிந்து கொண்டு, நான் அவருடன் Vancouver செல்லச் சம்மதிக்கவில்லை. அத்துடன் எனது கணவருடனான உறவு விவாகரத்தில் முடிந்தது. அவரும் தனது உறவுகார பெண்ணை மறுமணம் செய்து கொண்டார்.

பின்னர் நான் ஒரு Basementஇல் வாடகைக்கு எனது குழந்தைகளுடன் வாழ்ந்து வந்தேன். அத்தோடு எனக்கு வேலையும் கிடைத்தது. எனது அக்காவும் தம்பியும் எனக்கு பல வழிகளில் உதவியாக இருந்தனர்.

துன்பம் என்னை மீண்டும் துரத்தியது. இம்முறை எனது அக்காவின் கணவர் குடிப்பழக்கத்திற்கு ஆளாகினார். அதனால் அக்காவும், நானும் மன ரீதியாக கவலைப்பட்டோம். இந்த விடயம் தெரிவதற்கு முன் நானும் எனது அக்காவும் பங்குக்கு ஒரு வீடு வாங்கி, நானும் அவர்களுடன் வசித்து வந்தேன். இந்த குடிப்பழக்கத்தால் நாளடைவில் எனது அக்காவின் கணவர் தன் வேலையை இழந்தார். எனது அக்காவின் குடும்பம் பொருளாதார ரீதியாக கஷ்டப்பட்டார்கள். நானும் எனது தகுதிக்கு மீறி வங்கியில் கடன் வாங்கி இருந்ததால் என்னாலும் எனது அக்காவாலும் வீட்டுக் கடனை கட்ட முடியவில்லை இதனால் எனது 'Credit' பாதிப்புக்குள்ளாகியது.

இந்தப் பிரச்சினை மீண்டும் என்னை மன உளைச்சளுக்கு உள்ளாக்கியது. எனக்கும் எனது அக்காவிற்கும் மனக்கசப்பு ஏற்பட்டு நான் தனியாக Basement க்கு வாடகைக்கு போய் விட்டேன். சில மாதங்களின் பின் அந்த வீட்டில் எனது அக்காவின் கணவரும் சில பெண்களும் என்னுடன் பேசுவது போல் குரல்கள் கேட்க ஆரம்பித்தது. என்னை கொல்லப் போவதாகவும், எனது சாப்பாட்டிலும் எனது பிள்ளைகளின் சாப்பாட்டிலும் போதை மருந்து கலந்து இருப்பதாகவும், எனது பிள்ளைகளைப் பழிவாங்க வேண்டும் என்றும், நான் ஒரு நடத்தை கெட்ட பெண் என்றும், பல ஆண்களுடன் எனக்கு தொடர்பு இருப்பதாக என்னை சித்தரிக்கப் போகின்றார்கள் என்றும், என்னையும் எனது குழந்தைகளையும் பிரித்துவிடுவோம் என்றும் மிரட்டுவதாக அந்த குரல்கள் எனது காதில் கேட்ட வண்ணம் இருக்கும். காலப்போக்கில் இந்த குரல்கள் பலமாக கேட்கவே, எனது தோழியுடன் சிறிது காலம் சென்று தங்கினேன். என்னை யாரோ 'Camera' வைத்து பார்ப்பதாகவும் எனக்கு தோன்றிற்று.

எனது தோழி வீட்டிலும் எனக்கு அந்த குரல்கள் கேட்கவே இன்னொரு basement வாடகைக்கு எடுத்து அங்கு எனது பிள்ளைகளுடன் குடியேறினேன். அங்கும் அந்த குரல்கள் முன்னைவிட பல மடங்கு பலமாக கேட்டது. அந்தக் குரல்களுடன் நான் வாதாடி எதிர்த்து பேசுவேன். எனக்கு பல ஆண்களுடன் தொடர்பு இருப்பது போல் கற்பனை செய்வேன். எனது மனதில் இவையாவும் ஒரு படம் மாதிரி ஓடும்.

ஒரு நாள் விடியல் காலையில் என்னை சில ஆண்கள் கற்பழித்துவிட்டதாகவும், எனது மகளை காரில் கடத்தி போய்விட்டதாகவும் அந்தக் குரல்கள் கூறினார்கள். இதை கேட்ட நான், காவல் நிலையத்திற்கு சென்று முறையிட்டேன் அவர்கள் எனது கதையை கேட்ட பின்னர் என்னை வைத்திய சாலைக்கு அழைத்து சென்றனர். அங்கு சில நாட்கள் தங்கி இருந்து சிகிச்சை பெற்ற பின் இந்த குரல் கேட்பது படிப்படியாக நின்றுவிட்டது.

வைத்திய சாலையில் கனடிய உளநலச் சங்கம் பற்றி கூறினார்கள். நான் York Region னில் உள்ள கனடிய உளநலச் சங்கத்தை தொடர்பு கொண்டு அவர்களின் உதவியை பெற்று வருகின்றேன். நான் இன்றுவரை மாத்திரை சாப்பிட்டு வருகின்றேன். சில சமயம் சாப்பிட மறந்தால் மீண்டும் எனக்கு அந்த குரல்கள் கேட்கும். எனக்கு என்ன நோய், அதற்கான அறிகுறிகள் என்ன என்பதை கனடிய உளநலச் சங்கம் மூலம் தெரிந்து கொண்டதால் அந்த குரல்களை நான் கண்டு கொள்வதில்லை.

நீங்கள் York Regionனில் வசிப்பவரா? உங்களுக்கோ, உங்களுக்கு தெரிந்தவர்களுக்கோ மன நலம் தொடர்பாக ஏதேனும் பிரச்சினை இருக்குமாயின் பின்வரும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும்.

**கனடிய உளநலச் சங்கம்: 905 853 8477**
**கட்டணமின்றி அழைக்க: 1 866 208 5509**

நீங்கள் Canadaவில் வேறு பாகங்களில் வசிப்பவரானால் உங்களுக்கு அருகில் உள்ள கனடிய உளநல சங்கத்தை தொடர்பு கொள்வதற்கு **www.cmha.ca** என்ற இணையத் தளத்திற்குச் செல்லவும்.

*(இது ஓர் கட்டணம் செலுத்தப்பட்ட அறிவித்தல்)*


■ ■ ■

Canadian Mental Health Association
York and South Simcoe
*Mental health for all*



# Sell your home **faster** and more **money**

Skyridge/Keeler




3 Bedrooms, 2 W Rooms

Meadowvale/Sheppard




3 Bedrooms, 3 W Room
Hardwood Floor

Townline/Taunton




4 Bedrooms, 3 W Rooms

Markham Rd /Denison St




4 Bedrooms, 3 W Rooms

Fincham Rd/16th Avenue




3 Bedrooms, 2 W Rooms
Eat-In Kitchen

Hoover Park & Reeves Way




3 Bedrooms, 3 W Rooms
Gas Fireplace

Brock/Tauton




4 Bedrooms, 3 W Rooms
Hardwood Floor

9th Line & Hoover Park




3+1 Bedrooms, 3 W Rooms
Hardwood, Ceramic Floors

9th Line/Highway 7




4 Bedrooms, 3 W Rooms
Gas Fireplace

Markham/Mcnicoll




3+1 Bedrooms, 4 W Rooms
Hardwood Floor

Ellesmere/Meadowvale




4+1 Bedrooms, 4 W Rooms
Hardwood Ceramic Floors

14th & Box Grove By-Pass




3 Bedrooms, 3 W Rooms
Hardwood ,Ceramic Floors

Castlemore / 9th Line




4 Bedrooms,3 W Rooms
Hardwood Floor

Steels Ave / Staines




4 Bedrooms, 4 W Rooms
Ceramic Floor

Mccowan/16 Ave




4 Bedrooms, 4 W Rooms
Family Size Kitchen

**When you list your home with Mike,you receive these Guarantees.**

Your home advertised 24 hours a day until it is sold

Your home advertised in full color prints ads every week until it is sold

Our team of specialists for the same price as hiring a single agent

**Your home sold in 30 days or we buy it**

RE/MAX



**Elaguppillai Srinathan (Mike) B.Sc**
Sales Representative

**Direct 416 - 276-1225**
Email: esrinathan@yahoo.com

Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Office: 905-470-9800
Fax: 905-470-7770

I can also assist you Mortgage financing, Home Inspection Real Estate lawyer

KZG 647-200-5833

# நீதிகேட்கும் போர்...

4ம் பக்கத் தொடர்ச்சி...

இனக்கொலை (Genocide) என்ற முதலாவது வகைக்குற்றச் செயலானது குறிப்பிட்ட நோக்கத்துக்காக ஒரு நாட்டையோ தேசிய இனத்தையோ, குழுமத்தையோ, மதப்பிரிவினரையோ சேர்ந்த நபர்களைக் கொல்லுவதனை அல்லது அழிப்பதனைக் குறிப்பிட்டு நிற்கிறது.

இரண்டாவது வகையான மனித குலத்துக்கெதிரான குற்றங்கள் (Crimes against Humanuty) பொதுமக்களை இலக்கு வைத்துத் தாக்கும் பிரதானமான குற்றச் செயலாகக் கொள்ளப்படுகிறது. இதில் 15 வகையான குற்றங்களை ரோமபுரிப் சட்டம் வரையறை செய்திருந்தது. கொலை, வன்புணர்வு, சிறையில் தடுத்து வைத்தல், காணாமற்போகச் செய்தல், பெண்கள் குழந்தைகளை அடிமைகளாக நடத்துதல், பாலியல் அடிமையாக்கல், உடல் சித்திரவதை, நிறவெறி, நாடுகடத்துதல் ஆகியவை உள்ளடக்கப்பட்டிருக்கிறது.

மூன்றாவது வகையான போர்க்குற்றம் என்பதில் 50 வகையான குற்றங்களுக்காக ரோமாபுரிச்சட்டம் தண்டனை வழங்க ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. சர்வதேசம் சார்ந்ததும் சர்வதேசம் சாராததுமான ஆயுதப்போராட்டங்கள் என்று வேறுபடுத்தப்பட்ட இரு பிரிவுள் பல குற்றங்கள் அடையாளம் செய்யப்பட்டிருக்கின்றன. இதில் குழந்தைப் போராளிகள், சிறுவர் இராணுவம், கொலை, பொதுமகன் சித்திரவதை, போர்க் கைதிகளின் சித்திரவதை, வேண்டுமென்றே வைத்தியசாலைகளை, வரலாற்றுச் சின்னங்களை, மதக் கட்டடங்களை, கல்வி நிறுவனங்களை, கலைக்கட்டடங்களையோ விஞ்ஞான, தொண்டு நிறுவனக் கட்டடங்களையோ தாக்குதல் போன்றன சில வகையினதாக அமைந்துள்ளன.

போர் நடாத்தப்பட்ட பொழுதிலெல்லாம் இந்த எல்லாவகையான குற்றங்களும் நடாத்தப்படுவது வழக்கமாகிவிட்டது. குற்றச்சாட்டுகள் மறுக்கப்படுவதும் திசை மாற்றப்படுவதும் தெரியாத பகுதியினர் மீது சுமத்தப்படுவதும் ஆகிய நிலைமைகளினால் சட்டத்திலிருந்து தப்பும் வாய்ப்பு இருப்பது தவிர்க்கமுடியாதது. தவிரவும், சொந்த நாட்டு நீதிமன்றங்கள் விசாரணை செய்யும் பொழுது அதில் உண்மையான குற்றவாளிகள் தப்பிச் செல்லவும் வாய்ப்புக் கிடைப்பதுடன் சமூக அரசியல் சட்ட ரீதியான சாதக நிலைமைகளைப் பயன்படுத்திப் பலருக்குத் தண்டனை கிடைக்காமலும் போய்விடுகிறது.

ரோமாபுரிச் சட்டவரைவை ஏற்றுக் கொள்ளாத நாடுகளில் இடம் பெறும் குற்றங்களுக்கு ஐ.நா கொடுக்கும் அழுத்தமானது பூகோள அரசியற் காரணிகளினால் போதாமல் போய் விடுவதும், காலத்தினாலும், நிலையான சமாதானம் நோக்கிய எதிர்பார்ப்பினாலும் காலாவதியாகப் போய்விடுவதும் தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. எப்போது நீதி கிடைக்கும் என்று எதிர்பார்ப்பவர்களுக்கு என்றுமே கிடைக்காமாலும் போகும் நிலைமை ஏற்படவும் கூடும்.

2003ம் ஆண்டு ஹேக்கிலுள்ள குற்றவியல் நீதிமன்றத்தின் முதலாவது நீதிபதிகள் தெரிவு செய்யப்பட்டதிலிருந்து பல்வேறு அழுத்தங்களுடாக இந்நிறுவனம் பயணிக்க வேண்டியேற்பட்டது. இதில் குறிப்பாக வல்லரசுகளின் ஆதிக்கம் முக்கிய இடம் பெறுகிறது. 120 அரசுகளும் பாதுகாப்புச் சபையும் கொடுக்கும் தீர்மானத்துக்குச் சார்பாக நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலையில் இருப்பதால் பல இழுபறிகளை நாம் கடந்தகாலங்களில் அவதானிக்கமுடிந்தது.

சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் பங்களிப்பானது இந்த இரு பெரும் பிரிவினருடைய ஒத்துழைப்பின்றிச் செயற்படமுடியாத நிலையிருப்பினும் லிபியாவில் இந்நாடுகளின் ஒன்றுபட்ட நிலைமையானது புதிய திருப்பத்துக்கு வழிவகுத்திருந்தது.

கொங்கோ ஜனநாயகக் குடியரசு,(அங்கத்துவ அரசு, State party) உகண்டா, (அங்கத்துவ அரசு) மத்திய ஆபிரிக்கக் குடியரசு, (அங்கத்துவ அரசு) சூடான்,(அங்கத்துவ அரசல்ல) கெனியா, லிபியா, ஐவரிகோஸ்ட் ஆகிய நாடுகளில் இடம் பெற்ற குற்றங்களுக்கு வல்லரசுகளின் பெரிய எதிர்ப்புக்கள் இல்லாத காரணத்தால் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டன.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் நடாத்திய முதலாவது விசாரணையின் தீர்ப்பு புதியதொரு எதிர்பார்ப்பினை ஏற்படுத்தியிருக்கிறது. தோமஸ் லுபாங்கா (Thomas Lubanka) என்ற உளவியலாளர், போராளி கொங்கோவில் 2002-2003 களில் 15 வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமிகளைப் பெற்றோரிடமிருந்து பிரித்தெடுத்து கிராம மக்களைப் பயமுறுத்தியும் கொலை செய்தற்கும் பொறுப்பாக இருந்தமை நிரூபிக்கப்பட்டு 14 வருடச் சிறைத்தண்டனை இந்நீதிமன்றத்தால் வழங்கப்பட்டிருக்கிறது. அவர் செய்ததாகச் சொல்லப்படும் பாலியல் பலாத்காரம், சிறுவர் பாலியல் அடிமையாக்கம், 60 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டமை போன்ற குற்றங்களுக்கன்றி தனியாக சிறார்களைப் படையிற் சேர்த்ததற்கான தண்டனையாக வழங்கப்பட்ட இத்தீர்ப்பு குற்றக்தொடுப்பு சரியான முறையில் கையாளப்படவில்லை என்ற குற்றச்சாட்டினைப் பெற்றிருக்கிறது. 30 வருடங்களுக்கு மேலாகக் கிடைக்கவேண்டிய சிறைவாசமானது 14 வருடங்களாக மாறியிருந்தமை ஏமாற்றத்தை அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இத்தண்டனையை லுபாங்கா முற்றாக அனுபவிக்காது போயிருப்பினும் கூட சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் வரலாற்றில் ஒரு திருப்பத்தினை ஏற்படுத்தக்கூடிய நீதியினை வழங்கியிருக்கிறது என்ற பெருமை இந்த நிறுவனத்தின் 10 ஆண்டுகளுக்கான சாதனையாக வெளிவந்திருக்கிறது. இது போர் விரும்பிகளுக்கும், போர்மாயைக் காட்டிச் சிறுவர்களைத் தவறாக நடத்துபவர்களுக்கும் ஒரு அபாய அறிவுப்பாகவும் அமைந்துமிருக்கிறது.

120 நாடுகளின் இறுதி ஊன்றுகோலாகவும் நம்பிக்கைத்தளமாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த இக்குற்றவியல் நீதிமன்றம் விசாரணைத்தளமாக இருந்த பொழுதிலும் ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா, சீனா போன்ற பெரிய வல்லரசுகள் தமது கையொப்பத்தை வழங்குவதற்குக் காலம் தாழ்த்தும் நிலைமைகளினால் நீதி கேட்கும் போர்க்குற்றங்களின் தொகை கூடிச் செல்லவே வாய்ப்பு ஏற்படுகிறது. 1999ல் சேபியாவுக்கு ரஸ்யா வழங்கிய ஆதரவினால் பலமாதங்கள் போர் நீடித்தது. சிரியாவில் ரஸ்ய சீன ஒத்துழைப்பின்மையால் உள்நாட்டு யுத்தத்துக்கெதிரான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட முடியாத நிலை காணப்படுகிறது.

பல நாடுகள் பயங்கரவாதத்தையும் போதைப் பொருள் கடத்துதலையும் குற்றமாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டிருந்தன. பயங்கரவாதத்துக்கான வரைவிலக்கணம் தொடர்பான சர்ச்சை காரணமாக அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இந்தியா அணுவாயுதத்துக்கெதிராகப் பிரச்சாரம் செய்திருந்தது. போர்க்குற்றமாக ஏற்றக்கொள்ளப்படாத பேரழிவாயுதங்களின் பயன்பாடு போன்றன ரோம் சட்டவரைவுக்குள் உட்படுத்தப்படவேண்டிய தேவையும் ஏற்பட்டிருக்கிறது.

அரசியற் பழிவாங்கும் நடவடிக்கைதான் போர் குற்றத்துக்கான தண்டனை வழங்கக்கூடிய சாதகமான நிலை என்ற முறை மாற்றம் பெறவேண்டும். அரசியற் பழிவாங்குதல்கள் முறைமூலம் அரசியல்என்ற நிழலில் மறைந்து தப்பிக்கும் உண்மையான குற்றவாளிகள் பலருக்கு ஒருபோதும் தண்டனை கிடைக்கப் போவதில்லை.

போர்க்குற்றவாளிகள் தண்டனைக்குத் தகுதியானவர்கள் என்ற உண்மையினை வெளியே கொண்டுவரும் விசாரணைகள் எதிர்காலத்தில் சமாதானமான ஒரு சமூகத்தை உருவாக்க நிச்சயம் உதவி புரியும்.



kanapathipillai.a@thaiveedu.com



# மோட்கேஜ் கிளினிக்

**சனிக்கிழமை வோக் - இன் 9.00 am - 5.00 pm வரை**

" ஓம் எண்ணுவினம் பிறகு இழுத்தடிப்பினம் ? "

நோ ... இழுத்தடிப்பு : ஓமா இல்லையா என்று உடன பதில் சொல்லுவம்; ! !

தற்பொழுது நீங்கள் வைத்திருக்கும் மோட்கேஜ் செக்கன்ட் மோட்கேஜ் , லைன் ஒவ் கிரடிட் எல்லாத்தையும் ஒரு பேமன்ராக மாத்தலாமா ? ?

கொன்சுயுமார் புரபோசலுக்கு கட்ட வேண்டிய காசை வீட்டுக்குள்ளிருந்து எடுத்து கட்டலாமா ?

நல்ல றேட்டில மோட்கேஜ் இருக்கு ஆனால் பிரேக் பண்ணாமல் கொஞ்ச காசு எடுக்கலாமா ?

வேற என்னென்ன கடனை ஒரே பேமன்ராக மோட்கேஜுடன் சேர்க்கலாம் ?

சாமத்திய வீட்டுகடன் சீதனகாசுக்கடன்

மகளின்ர அரங்கேற்ற கடனை மறந்திட்டேனா ? ?

அழையுங்கள்



**416-644-3555**

22 ← Ext → 28



**CENTUM Rapid Mortgages Inc.**

211-80 Nashdene Road, Scarborough ON M1V 5E4

**தயா PK கந்தையா** BAS, ABR, AMP
**Principal Broker / President**
FSCO License # M 08001083
**T.P : 416-716-8707**

**ஜெ. இராசதுரை (Jey)** MBA, BBA (Hons), AMP
**Team Leader & Agent**
FSCO License # M 09001428
**T.P : 416-624-4843**

rapid realty inc. ⟹ **"Rapid Response; Rapid Results"**

# காற்றுவடி இயந்திரம்

செல்வி அதினி

வீட்டின் ஜன்னல் வழியே சூரிய ஒளி உள் வரும் போது தூசின் நடமாற்றத்தை அவதானிக்கக்கூடியதாக இருக்கும். வீட்டுக்குள் என்ன அவ்வளவு தூசியா..? வல்லுனர்களின் கணிப்பின்படி சாதாரண வீடொன்றில் ஒரு கன அடி காற்றுக்குள் 3 மில்லியன் வரையிலான தூசுத் துகள்கள் இருக்கும். அதனால்தான் வீட்டுக்குள் தூசைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளும் அமுலில் உள்ளன.

தூசு என்பது பொதுவாக அழைக்கப்படும் சொல்லாக இருப்பினும் அது பல்வேறு வகையினதை உள்ளடக்கியதாகவே இருக்கிறது. உதாரணமாக: விறகுச் சாம்பல், சிக்கிரட் அல்லது சமையல் புகை, இறந்த தோல் கலன்கள், வளர்ப்புப் பிராணிகளின் மயிர்கள் மற்றும் இறந்த கலன்கள், மோல்ட் நுண்ணுயிர்கள், பூஞ்சணம், தாவரங்களின் பூ மற்றும் தாவர உதிர்வுகள், துணி துகள்கள் போன்ற பலவற்றை உள்ளடக்கியதாகவே தூசு காணப்படுகிறது.

பொதுவாக ஒவ்வாமை வியாதி உள்ள பலருக்கு தூசு உடல் கேடை விளைவிக்கிறது. ஆஸ்மா, தோல்கடி, கண்கடி, தும்மல், போன்ற வியாதிகளுக்கு ஒரு காரணமாய் அமைவது மட்டுமல்லாது பக்றீயா போன்ற நுண்ணுயிர்களின் காவிகளாய்க்கூட இவை தொழிற்படுகின்றன.

இதனால்தான் வீட்டுக்குள் காற்றை சுத்தமாகப் பேண பல வழிமுறைகள் முன்வைக்கப்படுகின்றன. பிரதான வழிமுறைகளாக

- காற்று நுண் துவாரங்கள் கொண்ட வடிக்குள்ளால் செலுத்தி வடிகட்டல்.
- காற்றில் உள்ள தூசுகளுக்கு மின்னேற்றி காந்தகவர்ச்சி மூலம் தூசுகளை கவர்தல்
- மேற்கூறிய இரண்டும் இணைந்த செயற்பாடு.

வீடுகளில் மேசைகளில் வைக்கப்படும் காற்றுவடி இயந்திரம் பொதுவாக மூன்று நிலைகளில் தங்கள் காரியங்களை புரிகின்றன. முதலில் Foamக்குள்ளால் காற்று வடிகட்டப்பட்டு அதன் பின்னர் நுண்ணுயிர்களை வடிகட்டக்கூடிய வடிக்குள்ளால் செலுத்தப்பட்டு பின்னர் காபன் வடிக்குள்ளால் செலுத்தப்பட்டு காற்றின் துர்நாற்றம், சில வாயுக்கள் மற்றும் மீறிய தூசுகள் போன்றவை அகற்றப்படுகின்றன.

சேரும் தூசுகளும் அதிகரித்து அடைப்பு ஏற்பட வாய்ப்பு உண்டு. அதனால் அடிக்கடி இந்த வடியை மாற்றவேண்டிய தேவையும் ஏற்படுகிறது. ஆயினும் சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்ட காற்று வடிகள் நுண் தூசுகளை வடிகட்டக் கூடியனவாயும், தொடர்ப்புப்பரப்பு கூடியனவாயும் இருப்பதினால் கூடியகாலம் பாவிக்கக்கூடியனவாய் உள்ளன. காந்த கவர்ச்சி முறை வடிகள் மிகச்சிறிய தூசுகளை கவர்வதினால் காற்று தடைப்படுதல் மிக அரிதாகவே நிகழ்கிறது.

> “பொதுவாக ஒவ்வாமை வியாதி உள்ள பலருக்கு தூசு உடல் கேடை விளைவிக்கிறது. ஆஸ்மா, தோல்கடி, கண்கடி, தும்மல், போன்ற வியாதிகளுக்கு ஒரு காரணமாய் அமைவதுடன் பக்றீயா போன்ற நுண்ணுயிர்களின் காவிகளாய்க் கூட இவை தொழிற்படுகின்றன.”

சந்தையில் பல்வேறு வகையான காற்றுவடி இயந்திரங்கள் விற்பனையில் உள்ளன. இவைகளில் எது தனது தொழிலை செவ்வனவே செய்கிறதென்பது எம்முன்னுள்ள கேள்வி. பொதுவாக குறிப்பிட்ட ஒரு பொழுதில் வடியில் தங்கும் தூசின் அளவைக்கொண்டு இவ் இயந்திரங்களின் திறன் அறியப்படுகிறது. அத்தோடு எவ்வகையான தூசு வடியில் தங்கி நிற்கின்றது என்பதும் கவனத்தில் எடுக்கப்படுகிறது.

காற்றுவடியின் செயல்திறன் அதிகரிக்க வடியில் ஆயினும் தூசுத்துகள்கள் வடியில் சேரும் போது மின்னேற்றத்தை இழக்க நேரிடுகிறது. இவ் வடிகளுக்குள்ளால் காற்றும் மிகக் குறைந்தவேகத்தில் செல்லும்போதே மிகச் சிறப்பாக பணியாற்றுகிறது.

தூசுத்துகள்களை அளப்பதற்கான அளவு கோலாக “மக்ரோன்” அலகு பாவிக்கப்படுகிறது. ஒரு மக்ரோன் என்பது 1/25,400 அங்குலம் ஆகும். 10 மக்ரோன்களுக்கு மேல் உள்ள தூசுகளை எம்மால் பார்க்கக் கூடியதாய் இருக்கும். கூரிய பென்சிலால் இடப்படும் புள்ளியின் விட்டம் கிட்டத்தட்ட 200 மக்ரோனாய் இருக்கும். இப்பொழுது ஓரளவேணும் தூசை அடையாளங்காணக் கூடியதாய் இருக்கிறதா? பொதுவான காற்று வடிகள் கண்ணால் பார்க்கக்கூடிய தூசுகளை வடிகட்டுகின்றன. மிகத் திறனான காற்றுவடி இயந்திரங்கள் 10 மக்ரோன்களுக்கு உற்பட்ட தூசுகளையும் வடிகட்டவேண்டும்.

### காற்றுவடி இயந்திரங்களை வாங்கும் போது கருத்தில் கொள்ள வேண்டியவை:

ASHRAE (American Society of Heating Refrigeration and Air-Conditioning Engineers) எனப்படும் அமெரிக்க பொறியாளர் நிறுவனத்தினால் வழங்கப்படும் சான்றுக் குறிப்பு நல்ல காற்றுவடி இயந்தித்தை வாங்குவதற்கு ஏதுவாய் உள்ளது. Clean Air Delivery Rate (CADR) இவ் சான்றுக்குறிப்பு, ஒரு நிமிடத்திற்கு காற்றுவடிக்குள்ளால் செலுத்தப்படும் காற்றின் கனஅளவும் அதன்போது வடிகட்டப்படும் தூசுகளின் அளவும் கவனத்தில் எடுக்கப்பட்டு வழங்கப்படுகிறது. CADR அளவு அதிகமாய் இருந்தால், குறைந்தளவு நேரத்தில் குறிப்பிட்டளவு பிரதேசத்தில் உள்ள கூடியளவு தூசு வடிகட்டப்பட்டு காற்று சுத்திகரிக்கப்படுகிறது.

AHAM - The Association of Home Appliance Manufactuersஇனால் உறுதிப்படுத்தப்பட்ட காற்றுவடி இயந்திரங்கள் CADR சான்றுக்குறிப்பு தரவுகள் கொடுக்கப்பட்டிருக்கும். எனவே காற்றுவடி இயந்திரங்களை வாங்கும்போது இதை நாமும் கவனத்தில் வைத்திருத்தல் நல்லது.

selvi.a@thaiveedu.com

■ ■ ■




Mc Cowan/ Mc Nicoll
3+1 Bedrooms, 2 Washrooms
Finished Basement, Eat-In Kitchen
W/ Granite Countertop



Markham/Denison
3 Bedrooms, 3 Washrooms
Freshly Painted Throughout
Hardwood Floor In Liv/Dining



Markham/ Sheppard
2 Bedrooms, 2 Washrooms
Less Than 2 Yrs Old, Super Clean
Sun-Filled Corner Unit



Warden/Steeles
4 Bedrooms, 4 Washrooms
Entire House Newly Painted
Steps To Ttc,Parks,Shopping



Ellesmere/ Birchmount
2+1 Bedrooms, 2 Washrooms
Step To Ttc, Close To Shopping,
Schools, Hwy 401



Mc Cowan/ 401
1+1 Bedrooms, 1 Washroom
Suite Was Recently Painted &
Has Many Upgrades.



Markham/Sheppard
2 Bedrooms, 1 Washroom
Less Than 2 Yrs Old, Super Clean
Sun-Filled Corner Unit



Neilson/Finch
3 Bedrooms, 2 Washrooms
Newly Painted And Upgraded
With Crown Moulding

தூணி லழகியதாய் - நான்மாடங்கள்
தூய்ய நிறத்தினவாய் - அந்தக்
காணி நிலத்திடையே - ஒரு மாளிகை
- புரட்சிக்கவி பாரதியார்

RED CARPET®
Royal Realty Ltd., Brokerage

Bus: 416-284-5555

RANJAN FRANCIS XAVIER
Sales Representative.
Cell: 416-816-1220
www.ranjanfx.com





உங்கள் மனைகள் மாளிகைகளாகிட...

YOUR HOUSE WILL BE SOLD FASTER WITH SATHHI MARUTHAPPAH

416-816-1500

FREE MARKET EVALUATION
FREE CONSULATATION
FREE MORTGAGE ARRANGEMENTS
FREE LAWYER ARRANGEMENTS
FREE VIRTUAL TOUR
FREE ADVERTISMENT
OPEN HOUSES (SELLERS WISH)
TOTAL COMMISSION PACKAGE

FLEXIBLE COMMISSION OR CASHBACK

WE ARRANGE
MORTGAGE
LAWYER
INSPECTION



முழுநேர வீடுவிற்பனை முகவர், Emerald Award Winner

சத்தி மருதப்பா

Sales Representative

416.816.1500

Not intended to solicit properties currently listed for sale.

Available
Gas Station, Hotel, Motel, Plazas
From $500k - 15 Million
For Info Call
Sathhi
416-816-1500

Century 21

Affiliate Realty Inc., Brokerage
208-80 Corporate Drive, Toronto, ON M1H 3G5
Bus: 416-290-1200, Fax: 416-290-1900



People don't plan to fail, but they do fail to plan

You don't have to take life the way it comes to you...
You can design your life to come to you the way you want!

நாளை நம் கையில்
இன்றே செயற்படுங்கள்

Estate Planning
Disability Income Insurance
Critical illness Insurance
Mortgage Insurance
No medical exam Life Insurance
Permanent Life Insurances
Term Life Insurance
Travel & Visitor Insurance
RRSP Loan / Investment
RESP



*As an Independent Insurance Broker, I will shop around for you and get you the best rate...*

Guna Thuraisingham M.A.Sc (Eng.)
*Independent Insurance Advisor*
Dir: 416 528 1407
Tel: 905 230 4986 | guna@elite-associates.ca
www.elite-associates.ca

Auto & Home Insurance
குறைந்த கட்டணத்தில் பெற்றுத் தரப்படும்

Industrial Alliance | RBC Royal Bank | Assumption Life | Desjardins | Manulife | Canada Protection Plan | Foresters

**Computek College**
BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY
Registered as a private career college under the Private Career Colleges Act. 2005.

**Community Services Worker (CSW) 47 wks**
*Graduates of this program may find jobs as :*
- Immigration & Settlement Worker
- Settlement Worker
- Addiction Counselor
- Child & Youth Counselor
- Case Worker
- Community Outreach worker
- Intake Worker

Available at Scarborough Campus



**Early ChildCare Asst (ECA) 32 wks**
*Graduates of this program may find jobs as :*



- Childcare Assistant
- Childcare Worker
- Early Childhood Educator Assistant
- Daycare Worker
- Preschool Worker
- Infant Daycare Worker

Available at Markham & Scarborough Campuses

**Personal Support Worker (PSW) 24 wks**
*Graduates of this program may find jobs as :*
- Personal Support Worker
- Home Support Worker
- Personal Care Attendant
- Residence care Aid
- Nursing Assistant



Available at Markham &Toronto Campuses

**Other Diploma Programs**

Accounting & Payroll Administrator 44 wks
(Scarborough Campus)
Enterprise Network Engineering 50 wks
(Scarborough & Toronto Campuses)
Business Administration 26 wks
Computerized Accounting 26 wks
Medical Office Administration 28 wks
Network Engineering 28 wks

**Bank Teller**
Wednesday Sept 12
6-9pm

**Food Handler**
*Next batch:*
Saturday July 28th
9am-3pm

**Certificate Courses**
Bank Teller, Exam Prep: CSC, A+, MCITP, ICNT
Food Handler Program, MS Office
AccPac, Quick Books, Simply Acounting
Photoshop, CorelDRAW, Dreamweaver, Flash
C/C++, C#, Java/J2EE, VB.net, MS SQL, HTML
RECO – Continuing Education (CE) Credits

Financial assistance may be available to those who qualify

Markham 905.471.3344
Scarborough 416.321.9911
Toronto 416.285.9941

# சினம் காக்க...

11ம் பக்கத் தொடர்ச்சி...

- நல்ல நகைச்சுவை உணர்வுடன் பழகும் போது கோபம் தவிர்க்கப்படுகிறது.
- உன் நண்பனைச் சொல்லு உன்னைப் பற்றி சொல்கிறேன் என்பது ஒரு பழமொழி. அதிகம் கோபப்படுகிற நபர்களோடும் அந்த சூழ்நிலையில் எப்போதும் இருக்கும் வாய்ப்புகள் இவையெல்லாம் தானாகவே ஒரு வருக்குள் கோப உணர்வினை பழக்க மாக்கிடும். அதிகம் கோபப்படுகிற பெற்றோர்களின் பிள்ளைகள் எப்போதும் கோப உணர்வினைச் கொண்டிருப்பர் என்பது ஆய்வுகளின் முடிவு. எனவே இப்படிப்பட்ட சூழ்நிலைகளை தவிர்த்தல் நல்லது.
- நான், நீ, உனது, எனது, வா, போ, போன்ற வார்த்தைகளை பேச்சிலே அடிக்கடி பயன்படுத்தும் வழக்கம் உள்ளவர்களுக்கு கோபம் அடிக்கடி வருகிறதாம் வார்த்தைகளை அளந்தும் அறிவோடும் அளவோடும் பேசக்கற்றுக் கொள்ளலாம். கேலிசெய்யும் வகையான வார்த்தைகள், சாதி, இனம், நிறம், மதம், கல்வித்தரம், வயது, தொழில், வசதி வாய்ப்புகள், போன்றவற்றோடு தொடர்புடைய உரையாடல்கள் தான் கடைசியில் சண்டையில் முடிவடைகிறது இன்னொரு உளவியல் ஆய்வு.
- கோள்மூட்டுதல், புறம் பேசுதல், குற்றம் சுமத்திப் பழிபோட்டு பேசுதல் போன்ற பழக்கமும் சகவாசமும் தவிர்த்தல் அவசியமானது.
- பொதுவாக வாகன நெரிசல் பலரை விரைவில் கோபமடைய வைக்கிறது. இதை தவிர்ப்பதற்கு, முன்கூட்டியே திட்டமிடுவதால் தேவையற்ற பதட்டம், படபடப்பை முடிந்தவரை குறைக்கலாம்.
- கோபம் வரும் போது உடனே மூன்று அல்லது நான்கு கிளாஸ் தண்ணீர் அருந்தினாலும் அல்லது ஒரு இனிப்பு, சொக்லற் போன்றவற்றை வாயில் போட்டுக்கொண்டாலும் பதட்டம் படபடப்பு போன்றன குறைவதால் கோபம் தணிந்து போகிறது.
- நல்ல உறக்கமும் அதனால் மூளையில் உண்டாகும் மெலற்றோனின் என்கிற இரசாயனமும் கோப உணர்ச்சியைக் குறைக்கிறது என்பதும் ஆய்வுகளின் முடிவு.
- பேசும் போது குரலை உயர்த்தி சத்தமாக பேசாமல் மெதுவாக தாழ்ந்தகுரலில் அமைதியாகப் பொறுமையாகப் பேசும் தன்மையை வளர்த்துக் கொண்டால் கோபம் வராது என்பது பலரின் அனுபவம்.

ஏழாவது விடயம் அப்படியும் கோபம் வரும் சூழ்நிலைகளில் கோபத்தை ஆரோக்கியமாக வெளிப்பதும் முறைகளைக் கையாளலாம்.

உதாரணமாக சிலருக்கு மற்றவர் மேல் ஏற்கெனவே உள்ளுக்குள் புழுங்கிக் கொண்டிருக்கும் கோபம் நீறுபூத்த நெருப்பாய் இருந்து கொண்டிருக்கும். ஆனால் எதுவுமே இல்லாத, உப்புச் சப்பில்லாத விடயங்களை காரணங் காட்டி கோபத்தை வெளிக்காட்டுவார்கள், இது நல்லதல்ல. பிரச்சினைக்குரியவர்கள் (இருவரும்) முதலில் 'மனந்திறந்து பேசுதல்' என்ற ஆரோக்கியமான உளவியல் கொள்கையால் வெற்றி பெறுவது நிச்சயம். நான் முதலில் குறிப்பிட்ட பைபிள் பொன்மொழியில் குறிப்பிடுவது போன்று 'சண்டையின் ஆரம்பம் நீர் நிறைந்த மதகைத்திறந்துவிடுகிறது போலிருக்கும் ஆகையால் விவாதம் எழும்புமுன்பு அதை விட்டுவிடு' கோபத்தின் போது விவாதம் என்பது எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுதல் போல, எனவே விவாதத்தை தவிர்த்துவிட்டு சாதாரணமாக இன்னொரு நாள் அவரிடம் விளக்கத்தை கேட்கலாம் அல்லது உங்கள் எண்ணங்களை பகிர்ந்து கொள்ளலாம்.

எட்டாவது விடயம், நமக்கும் மற்றவர்களுக்குமான உறவு முறைகளில் எப்போதும் ஆரோக்கியமான தன்மைகளைப் பேணுவது அவசியம். குடும்பத்திலும் சரி, சமூகத்திலும் சரி, பேச்சிலும் செயலிலும் மற்றும் தக்க நேரத்தில் ஆதரவு, ஆறுதல், உதவிகள் செய்தல், சமூகப்பணிகளில் ஈடுபடுதல் போன்றவற்றால் மற்றவர்களுடனான உறவுமுறைகளை நல்லமுறையில் பேணுவதால் கோபம் என்கிற கொடிய நோய் பரவுவதை தடுக்கலாம். திருவள்ளுவர் கூறியதுபோல் 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்'. இதைவிட மேலான உளவியல் ஆலோசனை எதுவும் இல்லை என்கிற அளவுக்கு, கோபத்தை ஆரோக்கியமாக வெளிப்படுத்த ஒரு நல்ல ஆலோசனையாகும்.

ஒன்பதாவது விடயம் கோபமான சூழ்நிலைகளில் எந்த முடிவுகளோ தீர்மானங்களோ (Decision-Making) எடுப்பது மிகவும் ஆபத்தானதாகும். எனவே, அதுபற்றி கவனம் எடுப்பது மிக அவசியமாகும்.

பத்தாவது விடயம் உணவு முறைகளில் சற்றுக் கவனம் எடுப்பது மிகநல்லது. சில ஆய்வுகள் சொல்வதெல்லாம் அதிகமான மாமிச உணவு, கொழுப்புத் தன்மையுள்ள உணவுகள் இரத்த அழுத்தத்தை அதிகரிக்கச் செய்வதுபோல கோப உணர்ச்சியினையும் தூண்டுகிறது என்பதுதான். எனவே முடிந்தவரை மாமிச மற்றும் கொழுப்பு உணவுகளை தவிர்த்து காய்கறி, பழங்கள், கீரை வகைகள் போன்றவற்றை உணவில் சேர்த்துக் கொள்வது நல்ல பலனைத்தரும்.

முன்பு எழுதிய சில கட்டுரைகளில் குறிப்பிட்ட 'c' க்களை கொஞ்சம் மீண்டும் ஞாபகப்படுத்திப் பார்த்தால் இதோடு தொடர்புபடுத்திப் பயன்பெறலாம். உணவுப்பழக்கம், உறக்கம், உடற்பயிற்சி, உடலுறவு, உடலுழைப்பு, உறவு முறைகளைப் பேணுதல், உணர்வுகளை பகிர்ந்து கொள்ளுதல், உதவி செய்தல், உள்ளத்தை உணர்தல் போன்றவற்றால் சினம் தவிர்த்து சிறப்புடன் வாழலாம்.

paul.joseph@thaiveedu.com

■ ■ ■

## கோழியா முட்டையா முதலில் வந்தது?



இலங்கையில் வெலிமடைப் பகுதியில் விடை கிடைத்திருக்கின்றது. கோழியொன்று மர்மமாக இறந்துவிட்டது. அந்தப் பகுதிக் கால்நடை மருத்துவர் இந்தக் கோழியைப் பரிசோதனை செய்தபோது உடலினுள்ளே கோழிக் குஞ்சொன்றைக் கண்டார். முட்டை உருவாகி, கோழியின் உடலினுள்ளேயே 21 நாட்கள் இருந்து உள்ளேயே குஞ்சு பொரித்திருக்கின்றது.

கோழி மரணித்த காரணம் - உட்காயங்கள்.

குஞ்சு நலமாக உள்ளது.

குட்டான்

'கோழிதான் முதலில் வந்தது முட்டை அல்ல' (The chicken came first; not egg) என்று கொழும்பில் வெளியாகும் Daily Mirror செய்திக்குத் தலைப்பிட்டதாக BBC கூறுகின்றது.

'கோழியா முட்டையா முதலில் வந்தது?' என்று யாரேனும் கேட்டால் இனி வீண் பிரச்சினை வரும்.

# அசையாச் சொத்தும் வாடகை வருமானமும்

*(சென்ற மாத தொடர்ச்சி)*

ஈட்டுக்கடன் பெறுவது என்பது சுலபமானது அல்ல. முக்கியமாக வாடகை வருமானத்தை பெறும் நோக்கில் கொள்வனவு செய்யும் சொத்திற்கான ஈட்டுக்கடன் பெறுவது சற்று கடினமானது. வீடுகள் தொடர்மாடிகள் என்பன வதிவிட சொத்துக்களாயிருந்தாலும் வாடகை வருமானத்தை ஈட்டித்தரும் சொத்தாக (Rental Property) கொள்வனவு செய்யும்போது ஈட்டுக் கடன் (Mortgage) வழங்கும் நிதி நிறுவனங்கள் கூடுதலாக கட்டுப்பாட்டை விதிக்கின்றன. எனவே அனுபவம் வாய்ந்த ஈட்டுக்கடன் முகவர் (Mortgage Agent) ஒருவரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளவும் முக்கியமாக வாடகைச் சொத்தை கொள்வனவு செய்ய முன்னர் ஈட்டுக்கடன் முகவரின் ஆலோசனையை நாடவேண்டும். ஈட்டுக்கடன் எந்தளவு சுலபமாக பெறலாம் என்பது செய்யவிருக்கும் ஆரம்ப முதலீட்டின் (Down Payment) அளவு, சொத்தின் பெறுமதி, கொள்வனவு செய்பவர் ஏற்கனவே வைத்திருக்கும் சொத்துக்கள் மற்றும் கடன்கள், வருமானம் போன்றவற்றைப் பொறுத்திருக்கும்.

கூடுதலான down Paymentஐ போடுவதன் மூலம் சுலபமாக ஈட்டுக்கடனைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன், செலுத்தும் வட்டியும் கணிசமான அளவு குறையும். எந்தளவிற்கு வட்டிச் செலவை குறைக்கிறோமோ அந்தளவிற்கு வாடகை (நிகர) வருமானம் அதிகமாயிருக்கும்.

வெற்றிகரமாக ஈட்டுக்கடன் பெற்றுக்கொண்டு சட்டரீதியாக சொத்தை பதிவு செய்வதோடு சொத்துக்கொள்வனவு கட்டம் பூரணமாகிவிடும். அடுத்த கட்டமாக, வாடகைக்கு கொடுப்பதற்கான நடவடிக்கைகளில் இறங்கவேண்டும்.

வீடு அல்லது தொடர்மாடி அலகு ஒன்றினை வாடகைக்கு விடுதல் என்பது குறிப்பிட்ட வாடகை சொத்து அமைந்த இடம் உட்பட பல காரணிகளை பொறுத்து எந்தளவு இலகுவானதாயிருக்கும் என தெரிந்து கொள்ளலாம்.

இலண்டன் போன்ற நகரங்களில் முகவர்கள் தாம் பொறுப்பெடுத்து வாடகைக்கு விடுவர் அவ்வாறு செய்வது சொத்து உரிமையாளருக்கு மிகவும் வசதியும் வாடகை உத்தரவாதமும் உள்ளதாக அமையும். துரதிஸ்டவசமாக கனடாவில் அவ்வாறு இல்லை. எனவே, சொத்துக்குரியவர் தாமாக வாடகைக்கு வீட்டை அல்லது தொடர்மாடியை தேடுபவர்களை தேடி, ஒப்பந்தத்தை தயாரித்து வாடகைக்கு விடவேண்டும்.

பத்திரிகை விளம்பரங்கள் MLS listings (வீடு விற்பனை பிரதிநிதி மூலம்) போன்ற உத்திகளைக் கையாண்டு குடியிருப்பானை (tenant) ஐத் தேடி வாடகைக்கு விடவேண்டும். சட்டத்தரணி ஒருவரின் உதவியுடன் வாடகை / குத்தகை ஒப்பந்தத்தை (Lease Agreement) கைச்சாத்திடுவது பாதுகாப்பானது.

வாடகைக்கு விடும் சொத்திற்கு காப்புறுதி செய்யும் போது வாடகைக்கு விடும் சொத்தென (Rental Property) என கூறி காப்புறுதி செய்து கொள்ளவும். இவ்வாறு செய்யும் போது காப்புறுதி கட்டணம் சற்று அதிகமானதாயிருந்தாலும் உங்களது சொத்திற்கும், உங்களது பொறுப்பிற்கும் (Liability) பாதுகாப்பானதாக அமையும்.

வாடகைக்குவிடும் சொத்து வாடகைக்கு விடுபவர் அல்லது சொத்துரிமையாளர் வசிக்கும் இடத்திலிருந்து மிக தொலைவில் அமையுமாயின் சொத்து பராமரிப்பு, வாடகை சேகரித்தல் போன்றவற்றிற்காக முகாமையாளர் (Property Manager) ஒருவரை வைப்பது நல்லது. இவர்கள் பொதுவாக, வாடகையில் 10% கமிசன் பெறுவர்.

வாடகைச் சொத்தினை கொள்வனவு செய்து, வாடகைக்கு விட்ட பின் கவனிக்கவேண்டிய முக்கியமான விடயம் வாடகை வருமானத்தை வருமானவரிக்கு காட்டல் பற்றியதாகும். தனி ஒருவர் அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவர்கள் சேர்ந்து கொள்வனவு செய்திருந்தால் தமது பங்கு நிகர வாடகை வருமானத்தை (Net loss/Net Income) தமது தனியாள் (personal) வருமானவரி திரட்டில் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

வாடகை, (மொத்த) வருமானம் (Gross rent) நியாயமான சந்தை பெறுமதியை விட குறைவாக இருக்கும் பட்சத்தில் சந்தைப் பெறுமதியை கணக்கில் எடுக்கவேண்டும். அல்லாவிடில் Canada Revenue Agency ஏற்றுக்கொள்ள மறுக்கும். இந்நிலை பொதுவாக, தெரிந்தவர்கள் / உறவினர்கட்கு வாடகைக்கு விடும் போது குறைந்தளவு வாடகை பெறுவதால் ஏற்படும். சந்தைப்பெறுமதிக்கு குறைவான வாடகைக்கு கொடுக்கவில்லை என நிரூபிக்க, எவ்வாறு குத்தகைக்காரரை (tenant) தெரிவு செய்தீர்கள் அல்லது கண்டு கொண்டீர்கள் என ஆதாரம் கூறவேண்டும். விளம்பரப்படுத்தி அதன் மூலம் குத்தகைக்காரரை கண்டு வாடகைக்கு கொடுப்பது நியாயமான ஆதாரம் ஆகும்.



யாதவன் செல்வராஜா
- வீடு விற்பனைப் பிரதிநிதி -


மொத்த வாடகை வருமானத்தில் என்னென்ன செலவுகளை கழிக்கலாம் என பார்ப்போம்.

- ஈட்டுக்கடன் வட்டி,
- பராமரிப்பு செலவு (Maintenance Fee), Utility bills (நீங்கள் செலுத்துபவை மட்டும்),
- காப்புறுதி கட்டணம்,
- சொத்துவரி (Property tax),
- விளம்பர செலவு,
- முகாமைத்துவ கட்டணம்,
- காகிதாதிகள்,
- சட்ட மற்றும் கணக்காளர் கட்டணம்,
- திருத்த செலவுகள்
- வாடகை சொத்து சம்பந்தப்பட்ட செலவு

இவற்றைக் கழிக்கலாம்.

இதைவிட கொள்வனவு செய்த சொத்திற்கு மேலதிக மூலதன செலவு (Capital Cost Expenditure) செய்திருந்தால் அதற்கு அனுமதிக்கப்பட்ட பெறுமான தேய்வு தொகையை (Capital Cost Allowance) கழிக்கலாம்.

*தொடரும்...*

*yathavan.selvarajah@thaiveedu.com*

■ ■ ■




# குளிரேற்றியற்ற குளிர்மை

## குளிரேற்றி பாவிக்காது வீட்டைக் குளிர்மையாக வைத்திருத்தல்:

கோடை காலத்தில் வெப்பநிலை ஏற ஏற, வீட்டைக் குளிர்மையாக வைத்திருக்கப் பாவிக்கும் குளிரூட்டியின் பாவனையும் கூடிக் கொண்டு செல்லும். இதனால் மின்கட்டணம் கூடுதலாகச் செலுத்த வேண்டி ஏற்படுகிறது.

சாதாரணமாகக் குளிரூட்டியையே நாங்கள் வீட்டின் குளிர்மைக்காகப் பாவிக்கும் சிறந்த சாதனமாகக் கருதினாலும். இதைவிட வேறு பல வழிமுறைகள் மின்கட்டணத்தைப் பெருமளவில் குறைத்து வீட்டையும் குளிர்மையாக வைத்திருக்க உதவுகிறது. குளிரூட்டியானது உயர்வெப்பநிலையிலிருந்து தற்காலிகமாக எங்களுக்கு ஓர் மீட்சியைத் தந்தாலும். அது சூழலுக்கு விளைவிக்கும் தாக்கங்கள் பற்பல. நீங்கள் குளிரூட்டியைப் பாவித்து வீட்டைக் குளிர்மையடையச் செய்யும் அதேவேளை அது இயங்குவதற்கு எரிபொருள் எரியும் வேளையில் சுற்றாடல் சூடாக்கப்படுகின்றது. எனவே இந்தக் கோடைகாலத்தில் குளிரூட்டியின் பாவனையை முற்றாக நிறுத்தி. சூழலுக்குப் பாதகமில்லாத பல வழிமுறைகளின் மூலம் வீட்டின் குளிர்மையை அனுபவிப்பதற்கு உதவுவதற்காகவே இக்கட்டுரையை எழுதுகின்றேன். இங்கு தரப்படுகின்ற வழிமுறைகளின் மூலம் வெப்பம் உருவாகுதல் குறைக்கப்பட்டு உருவாகும் வெப்பமும் வெளியேற்றப்படும்.

## காற்றாடிகள்:

வெப்பநிலையைக் குறைப்பதில் காற்றாடிகள் பெரும் பங்கை வகிக்கின்றது. இந்த ஒரு கருவியே 6-7 பாகைகளில் வெப்பநிலையைக் குறைக்கக் கூடியது. மிகச் சிறந்தாக இயங்கக்கூடிய காற்றாடிகள் கூட 12 மணிநேரமும் இயங்கும் நிலையில்கூட குறைவாகவே மின் கட்டணம் இருக்கும். நன்னிலையில் இயங்கும் காற்றாடிகளால் நீங்கள் உங்கள் thermostat இன் வெப்பநிலை அளவைக் கூட்டி குளிரூட்டியின் மின்பாவனையைக் குறைப்பதற்கு உதவும். காற்றாடி இயங்கும் போது வளி அசைவதனால் அது குளிர்மையடைகின்றது. Ceiling fan மிகச் சிறந்ததாக இருந்தாலும் நகர்த்தக்கூடிய காற்றாடிகளும் நல்ல விளைவைத் தரக் கூடியவையே. 1 kmph வேகத்தில் அசையக் கூடிய வளிகூட 3-4 பாகையால் வெப்பநிலையைக் குறைக்கும். காற்றாடி இயங்கும்போது வளி மேலிருந்து கீழ்நோக்கி அசைகின்றதா என உறுதி செய்து கொள்ளுங்கள்.



## யன்னல் திரைச்சீலைகள் மறைப்புக்கள்:

இவற்றை வெள்ளை நிறத்தில் தெரிவு செய்யுங்கள். வெள்ளை நிறப்பரப்புக்கள் சூரியனிலிருந்து வரும் ஒளிக்கதிர்களை உறிஞ்சாது, முற்றாகத் தெறிப்படையச் செய்வதனால் வெப்பம் வீட்டினுள் நுழையாது தடுக்கப்படுகின்றது. கிழக்கு நோக்கியிருக்கும் யன்னல் திரைச் சீலைகளைக் காலையிலும் மேற்கு நோக்கியிருக்கும் யன்னல் திரைச்சீலைகளை மாலையிலும் மூடி வைக்கவேண்டும். இதனால் வெப்பம் உள்நுழையாது தடுக்கப்படுவதோடு காற்றாடியும், குளிரூட்டியும் கூடியளவு குளிர்மையை ஏற்படுத்துவதற்கும் ஏதுவாக இருக்கின்றது.



## வீட்டின் உட்புற வெப்பக் குறைப்பு:

மின்சாதனங்கள், மின் குமிழ்கள், வேறு பல இயங்கும் சாதனங்களிலிருந்து வெப்பம் வெளியேறிக் கொண்டே இருக்கின்றது. எங்கிருந்து வெப்பம் வெளியேறுகின்றது என்பதில் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். உங்கள் குளிரேற்றியை மிகவும் புத்திசாலித்தனமாகப் பாவியுங்கள். Thermostat இன் அருகில் வெப்பம் வெளியேற்றும் கருவிகளான தொலைக்காட்சிப் பெட்டி, மின்விளக்குகள், போன்றவற்றை வைக்கவேண்டாம். ஏனெனில் இவை குளிரேற்றியை நீண்டநேரம் இயங்க வைக்கும். வீட்டின் சாதாரண வெப்பநிலையை விடக் கூடிய வெப்பநிலையை அது உணர்வதனால், அது தேவையான அளவு நேரத்தை விடக் கூடிய அளவு நேரத்திற்கு இயங்கும். மின்குமிழ்கள் அந்த இடத்தில்தான் இருக்க வேண்டி ஏற்படின், Fluorescent மின்குமிழ்களால் மாற்றீடு செய்தால் சிறிதளவு வெப்பமே வெளியேற்றப்படும். அத்தோடு பாவிக்கப்படும் மின் சக்தியும் குறையும். சமையல் செய்வதைச் சூடான நேரங்களில் தவிர்த்துக் கொள்ளுங்கள். தவிர்க்க முடியாத நிலையில் சமையலறைக் காற்றாடியை இயங்கவைத்து சூடான வளியை வெளியேற்றுங்கள். வீட்டினுள் இருந்து எவ்வளவு வெப்பத்தை வெளியேற்ற முடியுமோ அவ்வளவிற்கு குளிரேற்றியின் தொழிற்பாடு குறைக்கப்படுகிறது.

## தாவரங்கள்:

குளிரேற்றித் தொகுதிக்கு நிழல்படக்கூடியதாகவும், வளிச்சுற்றோட்டத்தைத் தடுக்காத விதத்திலும் தாவரங்களை வையுங்கள். வீட்டின் தெற்கு, மேற்குப் புறமாக வைக்கப்படும் உயரமான அடர்த்தியான தாவரங்கள் கோடை காலத்தில் வீட்டைக் குளிர்மையாக வைத்திருப்பதோடு, பனிக்காலத்தில் வீட்டிற்கு சூரிய வெளிச்சம்பட்டு வீடு சூடாக இருக்கவும் ஏதுவாகின்றது. மூன்றே மூன்று தாவரங்கள் சரியான முறையில் வீட்டைச் சுற்றி இருந்தால் வருடத்திற்கு $100 - $250 சேமிக்கக் கூடியதாக இருக்கும். ஏனெனில் சாதாரண வீட்டின் வெப்பநிலை 3 - 6 பாகைகளால் குறைக்கப்படுகிறது.

## கூரையும் சுவர்களும்:

கூரையையும், வெளிப்புறச்சுவரையும் வெள்ளை நிற வர்ணத்தால் பூச்சுப் பூசவேண்டும். சூரிய ஒளிக்கதிர்கள் தெறிப்படைவதனால் வீடு சூடேறாமல் தடுக்கப்படுகின்றது.

பிரபா
சின்னா



## நினைவில் வைத்திருக்க வேண்டிய ஏனைய விடயங்கள்:

வீட்டின் ஈரப்பதனைக் கூடவிடாது பார்த்துக் கொள்ளுங்கள். கூடிய ஈரப்பதன் வீட்டின் வெப்பநிலையை உயர்த்தும். துணி துவைத்தல், உலரவிடல், குளித்தல், போன்ற செயற்பாடுகள் வீட்டினுள் உள்ள வளியின் ஈரப்பதனை உயர்த்துமாகையால் இச்செயற்பாடுகளைப் பகல் வேளைகளில் இயலுமானவரை குறைத்துக் கொள்ளுங்கள். இச்செயற்பாடுகளைச் செய்யவேண்டிய தேவை ஏற்படுமிடத்து வளி வெளியேற்றும் காற்றாடிகளைத் தொழிற்படவைத்து மேலதிக நீராவியை வெளியேற்ற வேண்டும்.

வீட்டின் தெற்கு, மேற்குப் பக்கத்தில் சீமெந்து, பாறாங்கல் போன்றவற்றால் நிலத்தை அழகுபடுத்துவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் சூரிய அஸ்தமனத்தின் பின், இதிலுள்ள வெப்பமானது வெப்பக்கதிர்வீசல் மூலம் வீட்டுக்குக் கடத்தப்படுவதனால் வீட்டின் வெப்பநிலை உயர்த்தப்படும்.

என்ன வழிமுறைகளை நாங்கள் பின்பற்றிய போதிலும், வீட்டின் Atticஇல் சரியான முறையில் வெப்பத்தடை (Attic Insulation) செய்யப்படாது விட்டால், நாம் எதிர்பார்க்கின்ற பலனைப் பெற முடியாது போய்விடும். வெப்பத்தடை செய்யப்பட்ட வீட்டிலேயே குளிர் வெளியேறாமலும் வெப்பம் உள்நுழையாமலும் பாதுகாக்கப்படுகின்றது. எனவே உங்கள் வீடுகளின் Attic வெப்பத்தடை செய்யப்படாமலோ அல்லது வெப்பத்தடை செய்தது சீரற்றதாகவோ இருக்கின்றது என நீங்கள் கருதினால், உடனடியாக இதற்கெனப் பிரத்தியேகமாகப் பயிற்றப்பட்ட ஒருவரை அழைத்து Attic Insulation செய்வியுங்கள். இவ் Attic Insulation வீட்டின் கூரையின் கீழுள்ள சூட்டை வீட்டின் உட்பகுதிக்கு வராமல் தடுக்கிறது. 3 அங்குலத் தடிப்பிலிருந்து 19 அங்குலத் தடிப்பிற்கு வெப்பத்தடையை மாற்றி அமைக்கும் போது, வீட்டைக் குளிரேற்றுவதற்குரிய செலவு 40%ஆல் குறைக்கலாம்.

இக்கட்டுரையில் கூறியவற்றைக் கடைப்பிடித்து, கூரை வெப்பத்தடையும் செய்வீர்களாக இருந்தால் மின்சக்திப் பாவனைக்குரிய கட்டணத்தில் பாரிய சேமிப்பை அடைவீர்கள்.


prabha.sinna@thaiveedu.com

■ ■ ■




உங்கள் அனைத்து நிகழ்வுகளையும் பார்ப்பதற்கும் பதிவதற்கும்

www.inayam.net


Start your
SUCCESS STORY
We will help you finish it.
TECHNOLOGY (IT)
Network Engineering
Enterprise Network Engineering
Inter-Network Specialist
A+ / Network + / CCNA / Linux + *
MCITP (680, 640, 642, 643, 647, 646)*
HEALTH CARE
Medical Office Assistant
Community Service Worker
BUSINESS / OFFICE
Computerized Accounting
Business Administration
MS Office 2010
Payroll Compliance Practitioner *
QuickBooks / Simply / ACCPAC
* Exam Preparation
Newcomers, Second Career clients and Socials Assistance recipients welcome
citiCOLLEGE
Call today for more information
416-548-7568
Instructor led, hands-on training
Small class size
Career focused training
Career training since 1991
Job search assistance
Free Parking, TTC accessible
OACC PROUD MEMBER
CPA ACP
www.CitiCollege.ca
Microsoft | IT Academy Program
Financial assistance may be available to those who qualify

# உங்களது வீட்டு பரிசோதனையில் சித்தியடைவதற்கு அறிந்திருக்க வேண்டியவை

## பழுதடைந்துள்ள குழாய்த் தொகுதி:
உங்கள் வதிவிடத்தில் உள்ள குழாய்களின் தொகுதியில் பழுது ஏற்பட்டிருந்தால் குழாய்களில் இருந்து நீர் கசிவு ஏற்படுதல் குழாய்களில் அடைப்பு ஏற்படுதல் ஆகிய இருவழிகளில் அது வெளிக்காட்டலாம். மேலெழுந்தவாரியாக பார்வையிடுவதன் மூலம் நீர்க்கசிவை கண்டு பிடிக்கலாம். அதேநேரம் ஓர் வீட்டுப் பரிசோதகர் உங்களது வீட்டின் ஆக உயரத்தில் உள்ள குளியலறையின் சகல வடி குழாய்களையும் (Faucets) திறந்து விடுவதன் மூலம் நீரின் அழுத்தத்தை அளவிட முடியும். நீர் ஓடிக் கொண்டிருக்கும் சத்தத்தை கேட்கக்கூடியதாக இருந்தால், குழாய்களின் அளவு சிறியவை என அறிய முடியும். மூடிய வடி குழாய்களை மீண்டும் திறக்கும் போது வெளியேறுகின்ற தண்ணீர் அசுத்தமாக காணப்பட்டால் குழாய்களில் கறள் தன்மை ஏற்பட்டுள்ளதை அறியலாம். இதன் காரணமாக குடிநீரின் தரம் கடுமையாய பாதிக்கப்படலாம்.

## ஈரலிப்பான நிலக்கீழ் வதிவிடப் பகுதி:
இந்த விதமான சூழ்நிலையில் ஓர் வீட்டுப் பரிசோதகர், தரைப்பகுதியில் இருந்து சில அங்குலங்கள் உயரத்தில் வெண்ணிறமான கனிப்பொருள் படிவு உள்ளதா என்பதும், நிலக்கீழ் வதிவிடப் பகுதியின் தரையில் பொருட்களை பாதுகாப்பாக சேமித்துவைக்க முடியுமா எனவும் பரிசோதிப்பார். ஈரப்பதனுடைய தன்மை நிலவுமாயின் அதன் விளைவாக பூஞ்சண மணம் ஏற்படுவது தவிர்க்க முடியாது.

உங்களது வீட்டின் நிகரப் பெறுமதி விலை என்னவாக இருக்கும் என்பதன் அடிப்படையில் நீங்கள் பொருத்தமான திருத்த வேலைகளை மேற்கொண்டு ஈரப்பதனை அகற்ற முடியும்.

## தேவைக்கு குறைவான மின்சார கம்பிகள் இணைப்பு:
உங்களது வீட்டில் குறைந்தது 100 அம்பியர்கள் அளவிலான சேவைகள் இருக்க வேண்டும். அது தெளிவாக அடையாளமிடப் பட்டிருக்க வேண்டும். மின்சார கம்பிகள் பித்தளை அல்லது அலுமினியத்தினால் ஆக்கப்பட்டிருக்க வேண்டும். உங்கள் வீட்டில் உள்ள மின் இயக்க பாதைகள் தேவைக்கு குறைவாக உள்ளதா என்றும் தீ ஏற்படும் வாய்ப்பு உண்டா என்றும் கணிப்பீடு செய்வதற்காக வீட்டுப் பரிசோதகர் உங்கள் வதிவிடத்தில் உள்ள, மின்சார விநியோக இணைப்பு சொருகிகளை (Electrical Plugs) அவதானிப்பார்.

## வெப்பமாக்கும் தொகுதிகளும் குளிரூட்டும் தொகுதிகளும்:
ஓர் வீட்டில் வெப்பமேற்றுதல் குறைவாக இருப்பதற்கு, தேவைக்குக் குறைவான குளிர் தடுப்பு, வெப்பத்தை ஏற்படுத்தும் தொகுதி நன்கு செயல்படாத நிலை, ஆகிய இரண்டுமே முக்கிய காரணமாகும்.

உங்களது உலை அடுப்பு (Furnace) அதன் சராசரி வாழ்க்கைக் காலமான 15-25 வருடங்களுக்கு மேற்பட்டதா என வீட்டுப் பரிசோதகர், அதனைப் பரிசோதித்து அதன் செயற்படும் திறனை உறுதிப்படுத்துவார். உங்கள் வீட்டில் வாயுவை வலிந்து செலுத்தும் அமைப்பு முறை (Forced air Gas System) இருக்குமானால் உங்கள் வீட்டில்



உள்ள வெப்ப பரிமாற்று (Heat Exchanger) நன்கு பரிசோதிக்கப்படும். அவை பாதிப்படைந்திருந்தால் நீங்கள் ஓர் புதிய வெப்ப பரிமாற்றியை பொருத்த வேண்டும்.

## கூரையில் ஏற்படும் பிரச்சினைகள்:
புயற்காற்று காரணமாக பொறிமுறைக்குரிய பாதிப்பு அல்லது Asphalt ஒட்டுக் கூரைகள் பழுதடைதல் போன்றவை ஏற்படலாம். அதன் காரணமாக நீர் ஒழுக்குகள் ஏற்படலாம். பீலிகளில் ஒழுக்கு ஏற்படுவதன் மூலம் வெளிப்புற சுவர்களினூடாக தண்ணீர் கீழே வடிவதனால் வீட்டின் வெளிப்புறத்தில் ஏற்படும் இந்த பிரச்சினை ஓர் பாரிய உட்புறப் பிரச்சினையாக மாறுகிறது.

## ஈரப்பதனுடைய முகட்டு இடைவெளிகள்:
நிலக்கீழ் வதிவிட பகுதியில் ஏற்படும் ஈரப்பதனுடைய தன்மை
காற்றோட்டம் ஏற்படுத்துவதில் உள்ள பிரச்சினைகள்

மின்சார / வெப்ப தடை ஏற்படுத்துவதில் உள்ள பிரச்சினை அல்லது நீராவித் தடுப்புக்கள் என்பவையும் ஒன்றிணைந்து செயற்படுவதனால் வீட்டின் முகட்டுப் பகுதியில் நீர், ஈரலிப்பு பூஞ்சணம் என்பவை ஏற்படலாம். தன் விளைவாக கூரை, வீட்டின் கட்டமைப்பு, கட்டிடப் பொருட்கள் என்பவை அவற்றின் வழமையான பாவனைக் காலத்திற்கு முன்னதாக பழுதடையலாம் .

## மரம் உக்கி போதல்:
கதவுச் சட்டம், கண்ணாடிச் சட்டம், மரத்தினால் ஆன வேலிகள் ஆகியவற்றில் இது ஏற்படுகிறது. இவைகள் சமீபத்தில் வர்ணம் தீட்டப்பட்டிருந்தால் வீட்டுப் பரிசோதகர் அதனை நுணுக்கமாக ஆராய முடியும்.

## செங்கற்கள் பதிப்பு:
செங்கற்களை மீளப் பதித்தல் என்பது செலவு மிக்க திருத்த வேலை. ஆனால் இதைக் கவனிக்காமல் விட்டால் இதன் காரணமாக வீட்டினுள் தண்ணீர் உட்புகுந்து ஈரப்பதன் ஏற்படலாம். இதனால் செங்கற்கள் உடைந்து விழுந்து புகைபோக்கி அடைப்புக்கு உள்ளாகலாம் அல்லது புகைபோக்கி உடைந்து வீட்டின் கூரையின் மீது விழலாம்.

## பாதுகாப்பற்ற மின் இயக்க பாதை:
வழமையாக சட்டப்படி அனுமதிக்கப்படுகின்ற அளவை விட அதிகமான அம்பியர்கள் அளவிலான மின்சாரம் பயன்படுத்தப்பட்டால் தீவிபத்து ஏற்படும் அபாயம் உண்டு. வீடுகளில் பொதுவாக 15 அம்பியர்கள் அளவுடைய மின் இயக்க பாதைகளே அமைக்கப்படுவது வழக்கம்.

## தேவையான அளவுக்குரிய பாதுகாப்பு அம்சங்கள்:
நீங்கள் ஒரு பாதுகாப்பு சேவை நிறுவனத்திடமிருந்து பாதுகாப்பு அமைப்பை கொள்வனவு செய்திருக்கக் கூடினும், உங்களது வீட்டில் யன்னல் கண்ணாடிகள் வீட்டுக் கோடி (Patio) என்பவற்றில் சரியான பூட்டுக்கள் உள்ளனவா, கதவுகளில் Dead Butts அமைப்பு பொருத்தப்பட்டுள்ளதா, வீட்டின் ஒவ்வொரு அறையிலும் ஒவ்வொரு மட்டத்திலும் காபன் மொனக்சைட் (Co) வாயுவை கண்டறியும் கருவிகளும், புகை கண்டறியும் கருவிகளும் உள்ளனவா என வீட்டைப் பரிசோதிப்பவர் அவதானிப்பார்.

## கட்டமைப்பு அத்திவாரத்தில் ஏற்படும் பிரச்சினை:
ஒரு வீட்டின் கட்டமைப்பின் நம்பகத்தன்மையும், தரமும், மிகவும் அவசியம். எனவே வீட்டை பரிசோதனை செய்பவர் வீட்டின் அடித்தளம் பற்றி நன்கு ஆராய்வார்.

## வளியை குளிரூட்டும் கருவியை பராமரித்தல் A/c Maintenance:
ஓர் வீட்டின் மத்திய குளிரூட்டல் அமைப்பு இரு பகுதிகளைக் கொண்டது.

1. வெளிப்புறத்தில் - ஒரு காற்று அழுத்தி (Compressor) ஒடுக்கும் சுருள். ஓர் கற்றாடி என்பவற்றை கொண்டிருக்கும்.

2. உட்புறத்தில் - காற்றை ஆவியாக்கும் ஓர் சுருள், சூடான வளி உலையின் விநியோகக் குழாயினுள் பொருத்தப்பட்டிருக்கும்.

மகேன் சிங்கராஜா
- வீடு விற்பனைப் பிரதிநிதி -



வீட்டினுள் உள்ள வெப்பம் இழுக்கப்பட்டு குளிரூட்டும் பொருளினால் குழாய்களினூடாக கொண்டு செல்லப்பட்டு வீட்டுக்கு வெளியே உள்ள ஒடுக்கும் சுருளுக்கு எடுத்து செல்லப்படுகிறது.

வெப்பமேற்றும் உலைகளைப் போலன்றி, குளிரூட்டல் கருவிகளை அடிக்கடி பராமரிப்பு செய்ய வேண்டியதில்லை எனினும் நன்கு பராமரிக்கப்பட்ட குளிரூட்டும் அமைப்புகள் வீட்டில் சிறந்த தன்மையுடைய குளிரூட்டும் தன்மையை ஏற்படுத்தும். அதனால் குறைவான செலவில் உங்கள் வீட்டைக் குளிரூட்ட முடியும். அதே சமயம் குளிரூட்டும் உபகரணம் நீண்ட காலம் பாவிக்கக் கூடியதாக அமையும்.

உங்கள் வீட்டில் பொருத்தப்பட்டுள்ள குளிரூட்டும் சாதனத்தை நன்கு பராமரிப்பது பற்றிய விபரங்களை உங்களுக்கு வழங்கப்பட்ட உரிமையாளர்களுக்கான வழிகாட்டி (Owner's Manual)யில் இருந்து அறியலாம்.

எனினும் சில முக்கியமான சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு இத்துறை சார்ந்த தொழில் நிபுணர்களை அழைக்க வேண்டும்.

## பாதுகாப்பான கைப்பிடிகள் Railings / Guards:
வீடுகளைச் சூழ ஏற்படும் மரணங்களில் 40% வீதமானவை தற்செயலாக தவறி விழுவதனால் ஏற்படுகிறது என நோய்க் கட்டுப்பாடு மற்றும் காயங்களைத் தடுத்தலுக்கான நிறுவனம் (CDC) மதிப்பீடு செய்துள்ளது. அவசர சிகிச்சைக்காக செல்பவர்களில் 20 சதவீதமானோர் கீழே விழுந்து காயமடைந்தவர்கள் என புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இவற்றுள் 50 சதவீதமானோர் வீடுகளில் படிகளில் தடக்கி விடுவதனால் கடுமையான காயங்களுக்கு உட்பட்டவர்களாகும்.

Railings. Guards ஆகியவை சரியாகப் பொருத்தப்பட்டிருந்தால் இவ்வகையான காயங்களை குறைக்க முடியும்.

**Railings:** படிகளில் ஏறும் போது இறுக்கமாக பற்றிப் பிடிப்பதற்கு Railings உதவுகின்றன.

**Guards:** படிக்கட்டுக்கள் அல்லது தளம் (Deck) அல்லது மொட்டை மாடி (Balcony) ஆகியவற்றில் இருந்து கீழே விழுந்து விடாமல் பாதுகாக்கின்றன.

mahensingaraja@thaiveedu.com

■ ■ ■

Consult Ranjan
Project Management & Construction Services
Consulting | Engineering | Management
KNOWLEDGE THAT GETS RESULTS
Tel.: 416.627.5664
E-mail: ranjan@consultranjan.com
www.consultranjan.com



# NEW CONDO TO BE LAUNCHED

**through exclusive access**

அனைத்து வசதிகள் உள்ளடக்கிய 41 மாடி **Luxury Condo Tower @ 955 Bay Street** இல் அமையவுற்றது.





## only 15% deposit needed in 1 year

**incentives are:**

a) 1% Discount of the price
b) $2,000 additional Cash Credit
c) $2,000 free upgrade
d) Free Assignment clause **(saving of $5,000)**

முற்பதிவுகளுக்கு உடனே அழையுங்கள்

Minutes from
**University of Toronto & the Yorkville Shopping.**





Get your unit before everyone through
PLATINUM ACCESS


VISIT MY WEB OR CALL

SUJAN SHAN .com
Real Estate Broker 416.402.1040

For more info visit www.NewReleaseCondo.com

416.321.2228
1-2210 Markham Rd.
Toronto, ON M1B 5V6

RE/MAX
Vision Realty Inc., Brokerage
Each Office Independently Owned and Operated


Buying Or Selling
Residential, Commercial, Land & Investment Properties
Mccowan/Hwy $224,900
For Sale Bedrooms 1+1, Washroom 1
Kennedy/Eglinton $239,900
For Sale Bedrooms 2+1, Washrooms 2
Rossland & Country Lane $314,900
For Sale Bedrooms 3, Washrooms 3
Neilson/ Sheppard $320,000
For Sale Bedrooms 3, Washrooms 2
Neilson/Sheppard $349,000
For Sale Bedrooms 4+1, Washrooms 3
9th Line/Hwy 7 $449,000
For Sale Bedrooms 3, Washrooms 3
Brimley/Eglinton $449,900
For Sale Bedrooms 3+2, Washrooms 3
Brock Rd & William Jackson $459,500
For Sale Bedrooms 4, Washrooms 3
14th Ave & 9th Line $469,900
For Sale Bedrooms 3, Washrooms 3
Hwy 48/Bur Oak $489,900
For Sale Bedrooms 3, Washrooms 3
Hardwood/Heskell $498,900
For Sale Bedrooms 4, Washrooms 4
14th Ave/9th Line $499,800
For Sale Bedrooms 3, Washrooms 3
Ellesmere/Meadowvale $549,000
For Sale Bedrooms 4+1, Washrooms 4
9th Line/14th Ave $559,000
For Sale Bedrooms 4, Washrooms 3
Morningside/Sheppard $599,999
For Sale Bedrooms 4, Washrooms 3
14th Ave/9th Line $619,900
For Sale Bedrooms 4, Washrooms 3
Markham & Steeles $669,900
For Sale Bedrooms 4, Washrooms 4
Williamson & Pelister $739,900
For Sale Bedrooms 4, Washrooms 4
HOMELIFE
HIGHER STANDARDS
Sathy Sivasubramaniam Sales Representative
2004|2005 Silver Award
2006|2009 Platinum Club Award
2010 Chairman Club Award Top 5% Sales Rep in Canada
2011 Chairman Club Award Winner Top 5% Sales Rep in Canada
2011 Sales person of the Year
For Sellers:
Free Market Evaluation Available
Competitive commission Packages available
Will pay for Staging & Consultation
Will pay for the Professional Photographer
Virtual Tour
Color Brochure
Will do open house until house get sold.
Will market your home with social medias
For Buyers
Will find the home in any area within your budget
Get you the lowest mtg. rate
1 Year Home Warranty Available for Limited Time
Preferred pricing on Furniture, Appliances & Electronics through "The Brick" up to 35% off
HomeLife/Future Realty
205-7 Eastvale Drive, Markham, Ont L3S-4N8
Office: 905-201-9977 / Fax: 905-201-9229 / Direct: 416-624-5044 E-mail-homelifesathy@gmail.com www.homelifesathy.com



Honda
CHECKERED
FLAG EVENT
OUR MOST POPULAR
HONDA CAR LINES STARTING FROM
0.99% APR
LEASE FOR 24 MONTHS* OR FINANCE FOR UP TO 36 MONTHS**
OUR BIGGEST EVENT OF THE YEAR
ENDS JULY 31ST
HONDA CIVIC: CANADA'S FAVOURITE CAR 14 YEARS IN A ROW**
PURCHASE A 2012 CIVIC DX FROM
$97@1.99% APR
$16,520 SELLING PRICE
2012 ACCORD
$4,000 CUSTOMER CASH INCENTIVE ON ALL 2012 ACCORD MODELS*
LEASE THE ALL-NEW 2012 CR-V LX FROM
$288@2.99% APR
BI-WEEKLY FINANCE FOR 84 MONTHS†.
$0 DOWN PAYMENT/OAC. SELLING PRICE INCLUDES FREIGHT, PDI, LEVIES AND OMVIC FEE. EXCLUDES LICENSE AND HST.
PER MONTH FOR 48 MONTHS*.
$3,679 DOWN PAYMENT/OAC AND $0 SECURITY DEPOSIT.
SCAN HERE FOR MORE INFORMATION
அதீசன் (SHAN) சர்வானந்தன்
CELL (416) 720-1184
FORMULA HONDA
2240 MARKHAM ROAD, SCARBOROUGH, ONTARIO M1B 2W4. TEL: 416-754-4555 EXT.2705, FAX: 416-754-9465
HondaOntario.com
Ontario Honda Dealers
HONDA

# Buying / Selling
## Call me First to evaluate your Home...




**Derry/Scott**
5 Bed rooms, 3.5 Washrooms
Close to all amenities & Backing to pond




**10th Line/Hoover Park**
4 Bed rooms, 3. Washrooms
Close to all amenities



**416.816.0141**




**Yonge & Jefferson**
4 Bed rooms, 3 Washrooms
Close to all amenities & steps to School

மனையும் மனை சார்ந்த நிலமும்
மகிழ்வுற மக்கள் பெற்று விற்றிடவும்
மனமுறப் பணிவதே மகேசனின் பணி




**Nightstar / Staines**
4 Bedrooms, 4 Washrooms
Close to all amenities




**Hurontario/Wanless**
4 +1 Bed rooms, 4 Washrooms
Close to all amenities




**Bus: 416.321.9400**
**Dir: 416.816.0141**




**www.viarealty.ca**

**To Beat your competitor,**
**Start earning 100%* commission**

**301A-5200 Finch Ave E. Toronto, ON. M1S 4Z5**

*Not Intended to Solicit Realtors already under contract *Certain conditions & fees may apply

# உதவியுடனான தற்கொலை / வேதனையற்ற மரணம் / கருணைக் கொலை

ஜீவா திசைராஜா



- குற்றவியல் மீறல்கள் - 6

மருத்துவ சிகிச்சையில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் காரணமாக, மக்கள் நீண்ட காலம் வாழ முடிவதுடன் மரணத்தைத் தள்ளிப் போடவும் முடிகின்றது. ஆனால் நீண்டகாலத்திற்கு வாழ முடியுமான நிலைமையானது சிலருக்கு, அதாவது தீர்க்க முடியாத வியாதியால் நீண்டகாலம் கஷ்டப்படுபவர்களுக்கு துன்பமான ஒரு நிலைமையாக மாறிவிடுகின்றது. வாழ்வதா? சாவதா? என தீர்மானமெடுப்பது பல காரணிகளால் நிர்ணயிக்கப்படுகிறது.

அண்மைக்காலத்தில் வேதனையற்ற மரணம் (euthanasia) கணிசமானளவு கவனத்தைப் பெற்றபோதும் ஆரம்ப காலங்களில் இது ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

தற்கொலைக்கான சகியாத்தன்மையானது 2ஆவது 3ஆவது நூற்றாண்டுகளில் தன்நிலையைப் பிடிக்க ஆரம்பித்ததுடன் கிறிஸ்தவ மதத்தின் செல்வாக்கினால் அதிகரித்த தீவிரத்தைப் பெற்றது. ஆரம்ப காலத்தில் (Classical Period) தற்கொலையானது நியாயமற்றதாக (irrational) விமர்சிக்கப்பட்டதுடன் கிறிஸ்தவ மதமானது இந்த செயல்முறையை கடவுளின் சித்தத்தில் இடையிடுவதாக நோக்கப்பட்டது. தற்கொலை செய்யப்பட்ட ஒருவர் ஓர் கிறிஸ்தவ முறைப்படி அடக்கம் செய்யப்படுவதை மறுப்பதாகவும், குடும்ப அங்கத்தவர்கள் மேல் பாரிய அவமானத்தைக் கொண்டுவருவதாகவும் இருந்தது. பரிசுத்த அகஸ்டைனின்படி, வாழ்வும் அதன் துன்பங்களும் கடவுளால் தேவசித்தப்படி (divinely ordained) ஒழுங்குபடுத்தப்பட்டதாகவும் அதற்கேற்ப அவை சகிக்கப்பட வேண்டும் என்றும் வெளிப்படுத்தப்பட்டது. 13ஆம் நூற்றாண்டில் பரிசுத்த தோமஸ் அகுனோஸ் (Aquinos) தற்கொலையானது கொல்லாமை எனும் வேதாகம கற்பனைக்கு எதிரானதாகவும் இது பாவமன்னிப்பை பெறுவதற்கான சந்தர்ப்பத்தை இழப்பதனால் ஆபத்தான பாவமாகவும் கருதப்பட்டது.

அண்மைக்காலத்தில் விஞ்ஞான ரீதியான மற்றும் மருத்துவ கண்டுபிடிப்புகள் தற்கொலை மீதான விவாதத்தின் தன்மையை மாற்றியமைத்தன. உடலியல்ரீதியான வருத்தங்களை குணப்படுத்தக்கூடிய மருத்துவரின் ஆற்றல்கள், உயிர்வாழக்கூடிய தன்மையை நீடிக்கக்கூடிய தன்மை, மருத்துவரீதியில் வாழ்வு மற்றும் சாவு பற்றிய விவாதத்திற்கான நிலைமையை ஏற்படுத்தியது. மதரீதியான அடிப்படைத் தத்துவங்கள் மற்றும் போதனைகள், விஞ்ஞானம் மற்றும் மருத்துவத்தின் முன்னேற்றத்தினால் சிக்கலானதாக மாறியது. மருத்துவரீதியில் உதவப்படும் மரணம் மற்றும் சிகிச்சையை நிறுத்துதல் என்பன சமகால விவாதத்திற்கு வழிவகுத்தன.

கனடாவில் குற்றவியல் சட்டத்தின் பல சரத்துக்கள், வேதனையற்ற மரணம் (euthanasia) மற்றும் சிகிச்சையை நிறுத்துதல் என்பவற்றைத் தாக்குவனவாக உள்ளன.


கனடாவின் குற்றவியல் சட்டத்தின் 14 வது பிரிவின்படி எந்த ஒரு நபரும் தனது மரணத்திற்கு அனுமதி கொடுப்பதற்கு உரிமை உடையவர் அல்ல. அத்துடன் அந்த அனுமதியானது அந்த அனுமதி கொடுத்த நபரின் மேல் மரணத்தை ஏற்படுத்தும் நபரை குற்றவியல் பொறுப்பிலிருந்து விடுவிக்க மாட்டாது.

மருத்துவ அடிப்படையில் நோக்கினால் ஒரு நோயாளியின் வேண்டுகோளின் பேரில் ஒரு மரணத்தை ஏற்படுத்தக் கூடிய ஊசியை அந்த நோயாளிக்கு போடும் வைத்தியர் குற்றப் பொறுப்புள்ளவராகின்றார் (criminally liable).

சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்து குற்றவியல் சட்டத்தின் பின்வரும் சரத்துகளும் நோயாளரைப் பராமரிப்பதில் தவறும்போது குற்றவியல் மீறலுள் அடங்கும்:

- பிரிவு 45 (சத்திர சிகிச்சை செயல்முறைகள்)
- பிரிவு 215 (அத்தியாவசியமானவற்றை வழங்குவதற்கான நபர்களின் கடமை)
- பிரிவு 216 (வாழ்க்கைக்கு ஆபத்தை விளைவிக்கும் செயல்முறைகளை மேற்கொள்ளும் நபர்களின் கடமை)
- பிரிவு 217 (செயல்களை மேற்கொள்ளும் நபர்களின் கடமை)
- பிரிவு 219 (குற்றவியல் அஜாக்கிரதை)
- பிரிவு 220 (குற்றவியல் அஜாக்கிரதையின் மூலம் மரணத்தை விளைவித்தல்)
- பிரிவு 222 (மனித இனக்கொலை)
- பிரிவு 229 (கொலை)
- பிரிவு 231 (கொலையை வகைப்படுத்தல்)
- பிரிவு 234 (மனிதப்படுகொலை)
- பிரிவு 235 (ஆபத்தான விடயத்தை நிர்வகித்தல்) மற்றும் பல்வேறு தாக்குதலும் உடலியல்ரீதியான ஆபத்து சரத்துகளும்.

வேதனையற்ற மரணத்தை ஏற்படுத்தும் ஒருவருக்கு எதிராக வழக்கு தொடரப்படும் போது அவர் திட்டமிட்ட கொலைக்கான (first degree murder) வழக்கை எதிர்நோக்குவார். ஏனெனில் மரணத்தை ஏற்படுத்தும் நோக்கம் இங்கு உள்ளது. இது கொலை என்பதற்கான வரைவிலக்கணம் ஆகும். அத்துடன் இச்



செயலானது அநேகமாக திட்டமிட்டு வேண்டுமென்றே (deliberate) செயற்படுத்தப்படுவதாகவும் இருக்கின்றது.

## உதவியுடனான தற்கொலைக்கும் (Assisted suicide) வேதனையற்ற மரணத்திற்கும் (Euthanasia) இடையிலான வேறுபாடு யாது?

### உதவியுடனான தற்கொலை:

ஒரு நபர் குணமாக்க முடியாத நோயினால் அல்லது விட்டு விட்டு ஏற்படும் தீர்க்க முடியாத கடுமையான வலியினால் பாதிக்கப்படும் போது இன்னோர் தனிநபரின் உதவியுடன் வேண்டுமென்றே தன்னை கொல்லும்போது உதவியுடனான தற்கொலை நடைபெறுகின்றது.

உதாரணமாக, ஒரு நோயாளி தான் இறப்பதற்காக மேலதிகமாக மருந்துகளை உட்கொள்ள திட்டமிடுகிறார் என்பதை அறிந்து கொண்டு ஒரு வைத்தியர் மேலதிக மருந்துகளை பரிந்துரை செய்தல். அல்லது ஒரு நோயாளியின் கையில் செலுத்த வேண்டிய மருந்தை ஊசி மூலம் செலுத்திய பின்பு அவரைக் கொல்லக்கூடிய ஒரு மருந்தைத் தொடர்ந்து செலுத்துதல்.

உதவியுடனான தற்கொலையானது வேதனையற்ற மரணத்திலிருந்து வேறுபட்டது. வேதனையற்ற மரணமானது (Euthanasia) நோயாளியைத் தவிர இன்னொருவர் வேதனையற்ற முறையில் நோயாளியின் வாழ்வை முற்றுப்பெற வைக்கும் செயல்முறையாகும்.

வேதனையற்ற முறையில் மரணத்தை ஏற்படுத்தல் ஒரு ஊசி மூலம் மட்டுமல்லாது, ஒருவரின் இதயம் நின்றுவிடும்போது அதனை மீண்டும் இயக்குவதற்கு முயற்சி எடுக்காதிருத்தல் மற்றும் உயிருக்கு ஆதரவாயிருக்கும் உபகரணத்தை (Life – support equipment) அகற்றி விடல் போன்ற முறையிலும் மேற்கொள்ளப்படுகின்றது.

## உதவியுடனான தற்கொலை எப்போது ஒரு சட்ட நடவடிக்கைக்குரிய விடயமாகின்றது?

புராதன காலத்திலிருந்து தத்துவவியலாளர்கள் 'ஓர் நல்ல மரணம்' என்பதைக் குறித்து சிந்தித்து வந்தனர். எவ்வாறெனினும் மரணம் எவ்வாறு ஏற்பட வேண்டுமென்பதை குறித்த தனிநபரின் விருப்பம் அல்லது தெரிவு 1970 களில் பொதுமக்களின் விவாதத்திற்கு வந்தது. அதுவரை, கனடாவிலும் அநேக ஏனைய நாடுகளிலும் தற்கொலைக்கு முயற்சி செய்பவர்களைக் குற்றவாளிகளாக காணுமிடத்து அவர்கள் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டியவர்களாக இருந்தனர். ஆனால் கனடா மத்திய அரசாங்கம் 1972இல் தற்கொலை முயற்சியை குற்றமீறல் (Criminal offence) என்பதில் இருந்து அகற்றியது.

மருத்துவத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப முன்னேற்றத்தின் காரணத்தினால் நோயாளிகளை வைத்தியர்கள் நீண்ட காலம் உயிர் வாழ வைக்க முடிந்த அதேநேரம் மருத்துவ சிகிச்சையைத் தொடர்ந்து வழங்குவதனை நிறுத்தும் சட்ட உரிமையும் அதேகாலப் பகுதியில் ஏற்பட்டது.

1970களில், அறிவு நினைவுடன் இருக்கும் ஒரு நபர் தமக்கு வழங்கப்படும் மருத்துவ உதவியினை மறுக்கும் உரிமை தொடர்பான பல தொடரான நீதிமன்ற வழக்குகள் வெற்றி பெற்றதுடன் தற்போது இந்த கருத்துக்கள் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுமுள்ளன.

எய்ட்ஸ், அல்சைமர் நோய், மத்திய நரம்புத் தொகுதி (Central nervous system) தேய்மானம் அடைவதால் (Multiple sclerosis) ஏற்படும் தொடர்ந்த வருத்தம் போன்றவற்றினால் துன்பமடையும் நோயாளிகள் தாம் மரணமடைவதற்கான உரிமைக்காக போராடுவது தொடர்பான விவாதங்கள் தற்போது பலமடைந்து வருகின்றன.

## இது ஏன் ஒரு பிரச்சினையாக இருக்கின்றது?

உதவியுடனான தற்கொலையை சட்டமாக்க விரும்பும் மக்கள், மரணத்திற்கான நேரத்தையும் சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் கட்டுப்படுத்தும் உரிமை தனிநபர்களுக்கு இருக்க வேண்டுமென்று நம்புகின்றனர். ஒருவரது இறப்புக்கு உதவுவது உயிரைப் பாதுகாக்கும் சிகிச்சையை மறுப்பதில் இருந்து வேறுபட்டதல்ல என சிலர் எதிர்வாதமிடுகின்றனர்.

நோயாளிகளை பராமரிக்கும் செலவில் இருந்து விடுபடுவதற்காக பலவீனமான நோயாளிகள் உதவியுடனான தற்கொலைக்கு உடன்பட வைக்கப்படலாம் என இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மக்கள் நம்புகின்றனர். உதவியுடனான தற்கொலையானது சிறந்த பராமரிப்பை வழங்க வேண்டிய அழுத்தத்தைக் குறைப்பதுடன் புதிய சிகிச்சை முறைகளை கண்டுபிடிக்கும் வாய்ப்புக்களையும் குறைக்கும் என சிலர் எண்ணுகின்றனர்.

சில மதரீதியான எதிர்ப்பாளர்கள் மரணத்திற்கான நேரத்தை கடவுளே தீர்மானிக்க வேண்டுமெனவும் இதனை மனிதன் தீர்மானிக்க முடியாது எனவும் வாதிடுகின்றனர். அநேகமான மருத்துவ நிபுணர்கள் ஒரு நோயாளியைக் கொல்வதற்கு வைத்தியர்கள் அனுமதிக்கப்படக் கூடாது என்பதில் உறுதியாக உள்ளனர்.

## கனடாவில் உள்ள சட்டம் யாது?

கனடாவின் குற்றவியல் சட்டத்தின்படி உதவியுடனான தற்கொலை ஓர் சட்ட மீறலாகக் கொள்ளப்படுவதுடன் 14 வருட சிறைத்தண்டனை வரையில் விதிக்கப்படலாம். ஆனால் இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் இந்தச் சட்டத்தின் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் சாசனத்தன்மை தொடர்பாக சவாலிட்டு வருகின்றனர்.

பிரிட்டிஷ் கொலம்பிய பெண்ணான ரொட்றிக்ஸ் இன் வழக்கு மிகவும் பிரபலமானது. இவர் 1990களின் ஆரம்பத்தில் வைத்தியரின் உதவியுடன் தற்கொலை செய்ய தன்னை அனுமதிக்கும்படி கனடாவின் உயர்நீதிமன்றத்தைக் கேட்டுக் கொண்டார்.

பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு எடுத்துக் காட்டப்பட்ட வீடியோவில் முள்ளந்தண்டு தேய்மானமடைந்ததால் பாரிசவாதத்திற்கு வழிவகுக்கும் நோயால் (Amyotrophic Lateral Sclerosis or Lou Gehrig's disease) பாதிக்கப்பட்ட இவர் 1991இல் உதவியுடனான தற்கொலையை (assisted suicide) தடைசெய்யும் சட்டத்தை மாற்றும்படி சட்டவாக்கவியலாளர்களை கேட்டுக் கொண்டார்.

1992 இல் சூ ரொட்றிகஸ் (Sue Rodriguez) இறப்பதற்கான உரிமையை வெளிச்சத்திற்கு கொண்டுவர கனடாவில் முயற்சி எடுத்தார்.

“எனது சொந்த மரணத்திற்கு என்னால் அனுமதி கொடுக்க முடியாவிடின், இந்த உடல் யாருடையது? எனது வாழ்க்கை யாருக்குச் சொந்தம்?” என அவர் கேட்டார்.

உரிமை மற்றும் விடுதலை தொடர்பான சாசனத்தில் (Charter of Rights and Freedoms) உத்தரவாதமளிக்கப்பட்ட தனிப்பட்ட சுதந்திரம், உரிமை ஆகியவற்றிற்கு முரணாக உதவியுடனான தற்கொலையை தடை செய்தல் சாசனத்தை மீறும் செயலாகும் என இவர் வாதிட்டார்.

உயிரை பேணுதல் மற்றும் பலவீனமானவர்களை பாதுகாக்கும் சமூகத்தின் கடமை என்பவற்றிற்கு முக்கியமளித்து நீதிமன்றம் இவரது வாதத்தை 1993 இல் நிராகரித்தது.

கனடாவின் உயர்நீதிமன்றம் ரொட்றிகட்ஸ் இற்கு எதிராக தீர்ப்பளித்தபோதும் அவரது போராட்டம் பொதுமக்களை சிந்திக்க வைத்தது. ரொட்றிஸ் 1994 இல் ஓர் அனாமதேய வைத்தியரின் உதவியுடன் தற்கொலை செய்து கொண்டார்.

எனினும் அநேகமான நீதிபதிகள் ரொட்றிகஸ் போன்ற நோயுற்ற மக்களுக்கு உதவி செய்வதற்காக கனடாவின் சட்டங்கள் மாற்றப்பட வேண்டும் என கருத்து தெரிவித்தனர்.


கனடாவில், அநேக நாடுகளைப் போல் உதவியுடனான தற்கொலை (கருணைக் கொலை) சட்டத்திற்கு முரணானது. ஆனால் உலகின் அநேக நாடுகளில் இந்த சட்டத்தை மாற்றுவதற்கான இயக்கமானது தற்போது வளர்ந்து வருவதைக் காணலாம்.

(தொடரும்...)

**உசாத்துணை:**


- http://www.cbc.ca/news/canada/story/2012/06/15/f-assisted-suicide.html
- http://beaconnews.ca/vancouver/2012/07/is-euthanasia-legalized-murder
- http://www.parl.gc.ca/Content/LOP/researchpublications/919-e.htm
- http://www.righttodie.ca/OLAD-CriminalCode.html
- http://www.ag.gov.bc.ca/prosecution-service/policy-man/pdf/EUT1-EuthanasiaAndAssistedSuicide-15Mar2004.pdf
- http://yourlaws.ca/criminal-code-canada/241-suicide


jeevathisairajah@thaiveedu.com



வீடு வாங்க... விற்க...
உங்கள் முகவராக...
இதோ...
HOMELIFE
HIGHER STANDARDS
நாணயம் * நேர்மை * நம்பிக்கை
என்னிடம் நீங்கள் வீடு
வாங்கினால் உங்களுடைய
"Lawyer Fees" மற்றும்
"Moving Charges"
இலவசம்!**
** Conditions Apply.
VALLIKKANNAN MARUTHAPPAN,
Sales Representative.
Direct: 416-880-6051 / 416-623-4989
HomeLife Today Realty Ltd., Brokerage*
* Independently Owned and Operated - Not intend to solicit buyers or sellers currently under contract
www.mvkhome.ca Business: 416-298-3200

## அழகிய பூஞ்செடிகள்

# எக்கினேசியா / Purple Coneflower

## (Botanical Name: Echinacea purpurea)

### வீட்டுத் தோட்டம் - 54



செல்லையா சந்திரசேகரி

### அறிமுகம்:

குடும்பம் அஸ்ரறேசியேயைச் சேர்ந்த நீலம் கலந்த சிவப்பு நிறமான கூம்புருவப் பூமரம், எக்கினேசியா எனப்படுவது, வட அமெரிக்காவின் பூர்வீகமாக இருந்தாலும் சூரியவொளியினை நன்கு விரும்பி வளரும் செடியாக இருக்கின்றது. பூக்கள் நிறையத் தரும் இனமாகக் காண்பதால் இதனை வீட்டுப்பிரியர் எல்லோரும் நன்கு விரும்பி வீட்டுத் தோட்டத்தில் நடுவார்கள். பல்லாண்டு வாழக்கூடிய





தாவரம், நடுவே குமிள் போன்ற அமைப்பைக்கொண்ட அழகிய பூக்களைத் தருகின்றது. கிரேக்க சொல்லாகிய ‘எக்கினோஸ்’ இற்கு ‘முள்ளம்பன்றி’ என்பதே கருத்து. முட்கள் போன்ற அமைப்பு, பூவின் நடுவே இருப்பதால் இப்பெயரைப் பெற்றிருக்கின்றது. பூவானது 4 - 6 அங் சுற்றளவில், மிகவும் தோற்றமான தலையாகக் காட்சியளிக்கின்றது.

### பொது இயல்புகள்:

செடியானது 2 - 4 அடி உயரமாக வளரக் கூடியது. நேரான தண்டுகளில் இலைகள் ஒன்றைவிட்டொன்றாக அமைந்து காணப்படும். பூக்கள் 6அங் சுற்றாக, டெயிசி போன்ற பூக்கள் போன்று அடர்த்தியான இதழ்களை வெளிப்புறமாக் கொண்டதாகவும் நடுவே தனியனாக தலையான அமைப்பையும் கொண்டு தென்படுகின்றன. பூக்கள் அழகிய மலர்க்கொத்துக்களாக இருக்கும்.

இதனை விதைகளிலிருந்து சுலபமாகவும் ஆபத்தில்லாமலும் வளர்த்தெடுக்கலாம். 1-2 அடி தூரத்தில் செடிகளை நட்டுவிடலாம். ஆழமாக வேர்கள் பரவுதலால் செடியானது வெப்பத்தை நன்கு தாங்கக் கூடியதாயிருக்கின்றது. இருந்தும் காய்ந்த நேரங்களில் நீர் விடுவதால் ஆரோக்கியமான பூக்கள் கிடைக்கும் என்பது புலனாகின்றது. சாதாரணமான பசளை போதுமானது. உரிய காலங்களில் பாதுகாப்புத் தூள்களோடு சேர்ந்த இலைப்பசளை போடுவது நன்றாயிருக்கும். சில போசாக்கு ஊட்டிகளும் பசளையோடு சேர்ப்பது உண்டு. மேலே கூறப்பட்ட இனம், நட்டுவிட்டால் பல வருடங்களுக்கு நிலைத்து வந்துகொண்டே இருக்கும். இளவேனிற் காலத்தில் வசதியாக நிலத்தைக் கிண்டி கிழங்குகளைப் பிரித்தெடுத்தும் நடலாம். வீட்டுத்தோட்டத்தில் கரையோரமாகவோ அல்லது பாத்திகளிலோ வேறு பல்லாண்டு வாழும் செடிகளோடு கலந்து நடுவார்கள். பராமரிப்பு மிகவும் குறைவென்பதால் இச்செடியினை நன்கு விரும்பி உண்டாக்குவர்.

### பயன்கள்:

இச் செடியினைச் சீனாவில் கூடுதலாகப் பயிரிடுகின்றனர். அமெரிக்கர்கள் கூடுதலாக இச் செடியினை மருத்துவக் கண்ணோட்டத்தில் வைத்தே பயிரிட்டனர். மனித உடலின் நோய் எதிர்ப்புத் தன்மையை ஏற்படுத்தவதற்கு உன்னதமானது. இதனது வேர்களின் சாறு, அதிஉன்னதமாக நோய்வராது பாதுகாக்கும் மருந்தாகக் கருதப்பட்டது. ஏயிட்ஸ் போன்ற நோய்களுகாகத் தயாரிக்கும் மாத்திரைகளில் பயன்படுகின்றது. இந்தியாவில் ஏனைய இனங்களிலும் (சூரியகாந்தி இனங்கள்) பார்க்க இச்செடியினையே உபயோகிக்கின்றனர். விஞ்ஞானிகளும் பாரம்பரிய பயன்களிலும் பார்க்க, விரைவாக ஊக்குவிக்கும் செயற்பாடுகளிலும் பற்றீரியாவின் தாக்கம், பூச்சிகளின் தாக்கம் போன்ற ஏனைய செயற்பாடுகளிலும் அதிமுன்னேற்றம் இருப்பதாக கருதுகின்றனர். இலைகளும் வேர்களும் தடிமன், கபசுரம் போன்றவை வராமல் உடலின் எதிர்ப்புச் சத்தியினை உண்டாக்குவதற்கு உற்பத்தியாகும் மேற்கு ஜெர்மனி மருத்துவக் குளிசைகளில் பெரும்பாலும் பயன்படுகின்றன. குருதியமுக்கத்தை குறைப்பதற்கும், புற்றுநோய் போன்றவற்றிற்கும் பாம்புக் கடி, குடற்புண், ஆகியவற்றிற்கும் வேர்கள் பச்சையாகவோ அல்லது தேனீரோடு சேர்த்தோ அருந்துவார்கள். எக்கினேசியா, உடலில் hyaluronidase எனப்படும் நொதியம் உண்டாவதைத் தடுப்பதற்கு காரணியாக இருக்கின்றது. இது ஆரோக்கியமான இழையத்திற்கும் தேவையற்ற நச்சுள்ள கிருமிகளுக்கும் இடையேயுள்ள வெற்றிடத்தை இயற்கையாக தடுத்து அழிக்கின்றது.

வண்ணப்பூச்சிகள், வண்டுகள், போன்றவற்றிற்கு தேன் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. பறவைகள் உண்பதற்கு பூத்தலைகள், காய்ந்த பூவிதழ்கள் பயன்படும்.

### சில இனங்கள்:

Echinacea purpurea,
E.pallida,
E.angustifolia.

***உசாத்துணை:***


- *Herbal Gardening – Completely*
- *The Robison York State Herb Garden*
- *University of California Botanical Garden.*
- *Growing North Ameica’s Favorite Plants – Barbara W. Ellis*


sekari.s@thaiveedu.com

■ ■ ■

## Family: Oxalidacea

# நட்சத்திரப்பழம் / Carambola

## (Botanical Name: Averrhoa carambola Eng.Name: Star fruit)



நட்சத்திரப்பழமரம், பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, மலேசியா, இந்தியா, இலங்கை போன்ற நாடுகளின் பூர்வீக மரமாகின்றது. இம்மரமானது இந்தோனேசியா, இலங்கை ஆகிய நாடுகளில் ஆரம்ப விருத்தி ஏற்பட்டதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர். ஆசியாவின் பல பாகங்களிலும் நூற்றாண்டு காலமாக வளர்க்கப்பட்டு வந்திருக்கின்றது. வெப்ப மண்டல, உபவெப்ப மண்டல மரமாக முழுமையான சூரியவொளி கிடைக்கும் இடங்களில் நன்கு வளரக்கூடியவை. இம்மரமானது மிக விரைவாக வளர்ந்து 4-5 வருடங்களில் பழங்களைத் தரும். மலேசியா நாடு, உலகில் முன்னதாக விருத்தியில் நிற்கின்றது. மலேசியாவில் பொருளாதாரரீதியில் 1980வது ஆண்டு தொடக்கம் பயிரிடப்பட்டது. ஏறக்குறைய 15-20 ஆண்டுகள் உற்பத்தி கிடைக்க முடியும். இம்மரத்தினது பழம், பிரபல்லியமான உணவாக வெப்பமண்டலங்களான ஆசியாவின் தென்கிழக்குப்பகுதிகளிலும் கரிபியன் பகுதிகளிலும் இருந்தமையால் இம்மரம் முன்னுரிமையோடு வளர்க்கப்பட்டிருக்கின்றது. இப்போது உலகில் எல்லாப் பகுதிகளிலும் இதனை வளர்க்கின்றனர். மரத்தில் வருடந்தோறும் பூக்கள் தோன்றும். வருடத்தில் மூன்று தடைவை பூக்கள் கருக்கட்டி பழங்களைத் தரும். இளமையில் கல்வியினை கந்தரோடையில் பயிலும்போது அங்குள்ள மரத்தின் பழங்களை நிறைய உண்டு ரசித்த காலம் இன்னும் ஞாபகம் இருக்கின்றது.

பழத்தின் கு.வெ முகத்தைப் பார்க்கும்போது வெளிக்கரையோரமாக வரம்புகள் போன்ற கரைகள் ஐந்து காணப்படுவதால் நட்சத்திரம் போன்ற பெயர் சூட்டப்பட்டது. முழுமையாக பழம் சாப்பிடக்கூடியது. சதையானது நறநற வெனக் கடிக்கக்கூடியது, ஆனால், உட்புறமாக நிறைவான சாறு காணப்படும். நன்கு பழுத்த பழம் உருசியானது. இதனை ஓரளவு அப்பிள், பியர்ஸ், எலுமிச்சை போன்றவற்றின் கலப்பான ருசி என்றே நாம் கூறலாம். இதனை பிலிம்பி இனத்தோடு ஒப்பிடுவார்கள்.

பழக்கூழ், பழச்சாறு மற்றும் ஊறுகாய் தயாரிப்பதற்கு பழங்கள் எடுக்கப்படும்.

நோய்கள் வராமல் தடுக்கும் சக்தியுள்ள இயல்புகள் இதற்கு உண்டு. நிறைவான, விற்றமின் சீ, விற்றமின் ஏ, பொற்றாசியம் என்பன காணப்படும். சீனித்தன்மை, சோடியம், அமிலம் குறைவாயிருக்கும். சிறுநீரக தொழிற்பாடு சீரற்றவர்கள் இதனை உட்கொள்வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

■ ■ ■

# கருணைக் கொலையை ஏற்கலாமா?

- பொன் குலேந்திரன் -

ஹிப்போகிரிட்டிக் (Hippocratic) வைத்தியத் துறை உறுதி மொழி *“நான் ஒருவருக்கும் இறப்பினைத் தரும் மருந்தை கொடுக்கவோ அல்லது அதை அருந்தும்படி ஆலோசனை சொல்லவோ வற்புறுத்தவோ மாட்டேன் என உறுதி மொழி அளிக்கிறேன்.”*

‘புற்றுநோய், எயிட்ஸ், அல்சைமர் போன்ற தீராத வியாதிகளால் இறப்பு நிச்சயம் என்றறிந்த பின்னர் துன்புறும் நோயாளிகளுக்கு இந்த உறுதி மொழி எவ்வாறு பொருந்தும்? அவர்கள் இறக்குமட்டும் துன்பப்படவேண்டியதுதானா?’ என்பது இப்போது பல நாடுகளில் சர்ச்சைக்கு உரிய விடயமாக உருவெடுத்துள்ளது. தீராத வியாதியால் துன்புறும் ஒருவர் “டொக்டர், நான் இந்த நோயால் கஷ்டப்பட்டது போதும். நான் இறப்பது நிட்சயம். எனக்கு ஏதாவது மருந்து தந்து கெதியிலை சாவைத் தாருங்கள்” என்று நோயாளி கேட்டால் வைத்தியரின் பதில் என்னவாக இருக்கும்? கர்மாவைப் பற்றி வைத்தியர் பேசுவாரா அல்லது சட்டத்தைப் பற்றி பேசுவாரா அல்லது பதில் சொல்லாது சென்று விடுவாரா? வைத்தியருக்கு நன்றாகத் தெரியும்... நோயாளி பல மாதங்கள் கஷ்டப்பட்டு இறக்கப்போகிறார் என்று. சாகும் நேரமாவது நிம்மதியாக சாவதற்கு வைத்தியர் மற்றய வைத்தியர்களுடன் கலந்தாலோசித்து, தீர்மானித்து மருந்து கொடுக்க சட்டம் இடம் கொடுக்கிறதா? அல்லது சித்திரவதை அனுபவித்து நோயாளி இறப்பதை சட்டம் விரும்புகிறதா? அவ்வாறாயின் சித்திரவதையை ஆதரிக்கிறதா? இவை தான் கருணைக் கொலையை தானே நாடும் ஓர் உயிர் எதிர்நோக்கும் பிரச்சினைகள். தன் உயிரை எக்காரணத்தைக் கொண்டும் போக்கினால் அது சட்டப்படி தற்கொலையாகக் கருதப்படும். ஆனால் அவர் உயிருடன் இல்லாத காரணத்தால் அவர் மேல் சட்ட நடவடிக்கை எடுக்காது மருந்தை எடுத்து உயிரை போக்கிக் கொள்ள ஆலோசனை கொடுத்த வைத்தியர் மேல் தற்கொலைக்கு உடந்தையாக இருந்தார் என்ற காரணம் காட்டிச் சட்ட நடவடிக்கை எடுக்கலாம். வைத்தியரே ஊசி ஏற்றி நோயாளியின் சம்மதத்துடன் இறப்பை உண்டு செய்தால், அதை சில நாடுகள் கொலையாகக் கருதுகின்றன. அக்கொலை நோயாளியின் மேல் உள்ள கருணை காரணமாக செய்த கொலையா என்பது தான் கேள்வி.

## ஜீவனும் கர்மாவும் இந்துமதமும்:

குழந்தைப்பருவம் அல்லது இளமைப்பருவம் அல்லது முதிர்ந்த பருவம் உள்ள எந்த உயிரும் விலை மதிக்க முடியாததொன்று. இப்பூவலகில் ஒவ்வோர் உயிரும் தன் கடமையைச் செய்ய தோன்றியுள்ளது. கருவில் தோற்றம், பின் பிறப்பு, அதன் கடமைகள் நிறைந்த வளர்ச்சி அதன் பின் இறப்பு போன்றவை சுழன்று சுழன்று வரும் என்பது இந்து மதத் தத்துவம். பல பிறவிகள் எடுப்பது கர்மாவை தீர்த்து பரிசுத்தமடைந்து மேலும் பிறவியில்லாத மோட்ச நிலையை ஆத்மா அடையவே என்கிறது இந்து மதம். பௌத்தமும் இதைத்தான் எடுத்துச் சொல்கிறது. கிறிஸ்தவ மதம் பிறப்பு, வளர்ச்சி, இறப்புக்குப் பின் மோட்சம் என்ற சுழல் அற்ற நேர்கோட்டுத் தத்துவத்தை எடுத்துச் சொல்கிறது. எமது உடம்பை நாம் உருவாக்காதபடியால் அதை அழிக்க எமக்கு உரிமையில்லை என்கிறது இஸ்லாமிய மதம். நாம் எம் உடம்பை பாதுகாத்து வளர்க்கத்தான் உரிமையுண்டு, கொலை செய்வது பாவம் என்கிறது.

எல்லா மதங்களும் உயிருக்கு மதிப்பளிக்கின்றன. காரணம், இறைவனும் ஆத்மாவும் ஒன்று என்றும், அதனால் ஓர் உயிரை அழிப்பது இறைவனை அழிப்பதுக்கு ஒவ்வும் என்றும் கூறுகின்றன மதங்கள்.

## எது தர்மம்?

ஒருவன் தன் உயிரை தற்கொலை மூலம் போக்கிக் கொள்ள நாம் உதவினால் அவனுக்கும் எமக்கும் கர்மாவை தேடிக் கொள்கிறோம். எது தர்மம்? எது தர்மம் இல்லை? என்பது சந்தர்ப்பத்தையும் சூழ்நிலையையும் பொறுத்தது.

> *“நோயாளியினதோ நெருங்கிய உறவினர்களின் வேண்டுகோளுக்கிணங்கவோ ஒருவர் வாழத் துணைபோகும் உபகரணத்தை செயல்படாது நிறுத்தி மரணத்தை ஏற்படுத்தலாம்.”*

## கருவழிப்பு:

இந்துமத நூல்களில் ஒன்றான மகாபாரதம், கருவழிப்பு பாவம் என்கிறது. துரோணரின் மகன் அஸ்வத்தாமன். அவன் பாண்டவர் வம்சத்தை இல்லாமல் செய்யும் நோக்குடன் அர்ச்சுனன் மகன் அபிமன்யுவின் மனைவி சுபத்திராவின் வயிற்றில் உள்ள கருவை அழிக்க எத்தனித்தான். அதனால் பல ஆண்டுகள் மிருகமாக வாழ கிருஷ்ணரால் சபிக்கப்பட்டான். அக்கதை எவ்வளவுக்கு கருவழிப்பை ஒரு பாரதூரமான செயலாக வேதநூல்கள் கருதின என்பதை எடுத்துக்காட்டுகிறது. இந்து மத நன்னெறி நூலான மனுசிமிர்த்தவிலும் கருவழிப்பு ஏற்றுக் கொள்ளப்படவில்லை. கௌசித உபநிடதம் கருவழிப்பை பெற்றோர்களைக் கொல்வதற்கு சமன் என்கிறது. அதர்வ வேதம். இருக்கு வேதம் கருவில் உள்ள சிசுவின் உயிருக்கு முக்கியத்தும் கொடுத்துள்ளது. வேத நூல்கள் கருவழிப்பை ஏற்காவிடிலும் பின்னர் தோன்றிய நூல்கள் பலசந்தர்ப்பங்களில் கருவழிப்பு செய்யலாம் என்கின்றன. ஒரு தாயின் உயிருக்கு அவள் வயிற்றில் குறைபாடு உள்ள கருவினால் ஆபத்து ஏற்படுமாகில் கருவில் உள்ள, அக்குறையுள்ள சிசுவை அழிப்பது பாவமில்லை. அதை அழிக்காமல் விட்டு, தாய் இறந்தால் மேலும் உயிர்கள் இப்பூமியில் அப்பெண் மூலம் தோன்றமுடியாத நிலை ஏற்படுகிறது. அத்தாய் உயிருடன் இருக்கும் தன் குழந்தைகளுக்கு தன் கடமைகளைச் செய்ய முடியாது போகிறாள். அதுவுமன்றி அச்சிசு பிறந்தால், அங்கவீனமுள்ள குழந்தையாகப் பிறந்து வாழ்நாள் முழுவதும் துன்புறப்போகிறது. அதன் முற்பிறவிக் கர்மபலன் அதுவாகில் அதை கருவில் அழிப்பதன் மூலம் அது செய்த கர்மாவை அனுபவிக்காமல் தடை செய்ய என்ன உரிமை என்பது இன்னொரு சாரார் வாதம். இதை, இன்னோர் உயிரைக் காப்பாற்றச் செய்யும் கொலையென்பதா அல்லது பிறந்தால் அங்கவீனமாகப் பிறக்கப்போகிறதே என்பதற்காக கருணைக்கொலை என்பதா?

கருவழிப்பினால் ஏற்படும் கர்மாவிலும் பார்க்க சமூகத்தால் அல்லது அறியாமை நிறைந்த கலாச்சாரத்தால் ஏற்படும் விளைவுகளின் பாதிப்பு கூடுதலாகும். அண்மையில் தமிழ் நாட்டில் உள்ள ஆண்டிப்பட்டியில் நடந்த 11 பெண்சிசுக்களின் கருவழிப்பு அறியாமையின் விளைவாகும். அதை கருணைக்கொலை எனக் கருத முடியாது. இப்பெண்கள் பிறந்தால் சீதனம் கொடுத்து திருமணம் செய்து வைக்க முடியாத வறுமை நிலையின் காரணத்தால் ஒழுக்கம் தவறி விபச்சாரிகளாக மாறி அவமானத்தைக் கொண்டுவரலாம். அதனால் பெண் சிசுவை முளையில் கிள்ளி எறிவது நல்லது என்பர் சிலர். இதனால் அதை கருணைக்கொலைகள் என்பதா? இல்லவே இல்லை. அவை படுகொலை எனத்தான் கருத வேண்டும். அதுக்கு உடந்தையாக இருந்தவர்களும் கொலைகாரராவர்.

## ஹிட்லரும் கருணைக்கொலைகளும்:

1933ம் ஆண்டு ஹிட்லரின் நாஸி ஆட்சி தொடங்கியபோது, இனத் தூய்மை என்ற பெயரில் பல படுகொலைகள் நடந்தன. தேக நலத்தில் குறைபாடு உள்ளவர்களும் புத்தி சுயாதீனமற்றவர்களும் குழந்தைகளை பெறாமலிருக்க கருத்தடை செய்யப்பட்டது. ஆரம்பத்தில் ஆரியர் அல்லாதவர்கள் மேல் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு பின்னர் யூத இன மக்கள் மேல் பிரயோகிக்கப்பட்டது. 1939ம் ஆண்டு இரண்டாம் உலக யுத்தத்தின் போது தேக நலத்தில் குறைபாடு உள்ளவர்கள் நாட்டுக்கு பாரமானவர்கள் அவர்களால் பிரயோசனமில்லை என்பதற்காக கருணைக் கொலை என்ற பெயரில் படுகொலை செய்யப்பட்டனர். வைத்தியர்கள் இந்த கட்டாயப்படுத்தப்பட்ட கருணைகொலைகளுக்கு உடந்தையாக இருக்க விரும்பவில்லை காரணம் சட்டத்தின் கீழ் அவர்களுக்கு பாதுகாப்பு இல்லாமையே. ‘Aktion T4’ என்ற போர்வையில் ஆரம்பத்தில் தேக நலத்தில் குறைபாடுகளுடன் பிறந்த குழந்தைகளைக் கொன்றனர். அவர்கள் வளர்ச்சியால் நாட்டுக்கு பிரயோசனமில்லை என்பதே அவர்கள் வாதம். மருத்துவிச்சிகளுக்கும் வைத்தியர்களுக்கும், மூன்று வயதுக்குக் குறைந்த குழந்தைகள் மனோவியாதியால் அல்லது தீர்க்க முடியாத வியாதியால் பாதிக்கப்பட்டிருந்தால், அவர்கள் பெயர், பெற்றோர், விலாசம் போன்றவை பதிவு செய்யப்படவேண்டும் எனக் கட்டளையிடப்பட்டது. குழந்தைகளைப் பற்றிக் குறிப்பெடுக்க ஒரு கேள்விப்பத்திரமும் அவர்களுக்கு சுகாதார அமைச்சினால் கொடுக்கப்பட்டது. அந்தப் பத்திரத்தைப் படித்த பின்னர் பிறந்த குழந்தை உயிருடன் இருக்க வேண்டுமா என்பதை மூன்று வைத்தியர்கள் அமைந்த குழு தீர்மானிக்கும். தீர்மானிக்க முன், அவர்கள் குழந்தைகளை பரிசோதிக்கவுமில்லை. குழந்தைகளின் தேகநிலை பற்றிய வைத்தியர்களின் அறிக்கைகளை படிக்கவுமில்லை.

1941ம் ஆண்டு கத்தோலிக்கக் குருவானவர் ஒருவர் ஹிட்லரின் செயலைப் படுகொலை எனக் கண்டித்தார். ஜெர்மன் கத்தோலிக்கரை அந்த பாவச் செயலுக்கு துணைபோக வேண்டாமெனப் பிரச்சாரம் செய்தார். ஆகஸ்ட் 1941ம் ஆண்டு ஹிட்லர் தன் படுபாதகச் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தான். குருவானவரின் பிரச்சாரத்துக்கு துணைபோன மூன்று குருவானவர்கள் நாஸிகளால் கொலை செய்யப்பட்டனர். ‘கருணைக் கொலைகள்’ தொடர்ந்து நடந்தன.

## பிறநாடுகளின் நோக்கு:

பிறருதவியுடன் செய்யப்படும் தற்கொலைக்கு சட்டத்தில் என்ன தண்டனை என்பது பல நாடுகளில் தெளிவாக எடுத்துச் சொல்லப்படவில்லை. சட்டம் எடுத்துச் சொல்லாவிட்டாலும் துணைபோனவர்கள் தண்டனையிலிருந்து தப்ப முடியாத ஒரு குழம்பிய நிலை பல நாடுகளில் நிலவுகிறது. 1941ல் சுவிட்சர்லாந்திலும், 1997ல் அமெரிக்காவின் ஓரிகன் பிரதேசத்திலும், 2002ல் நெதர்லாந்து, பெல்ஜியம் ஆகிய நாடுகளிலும் இறக்கும் தறுவாயில் உள்ள நோயாளி ஒருவரின் மரணத்தை விரைவு படுத்தத் துணைபோவது சட்டப்படி குற்றமில்லை எனச் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் குறைந்தது இரு வைத்தியர்கள் தீர்மானித்த பின்னரே உயிரைப் போக்கலாம்.

சுவீடனில் தற்கொலைக்கு துணைபோவோர்களைத் தண்டிக்க போதிய சட்டமில்லாத போதும் 1979ல் Berit Hedeby என்ற மனித உரிமைக்காகப் போராடும் ஒருவர் தீராத நோயினால் வருந்திய ஒருவர் தற்கொலை செய்ய உதவியதற்காக ஒரு வருடச் சிறைத் தண்டனை பெற்றார். நோர்வேயிலும் தற்கொலை செய்வோருக்குத் துணைபோவோருக்குத் தண்டனையுண்டு. ஆனால் இறந்தவரின் வற்புறுத்தலின் காரணமாகவோ அல்லது கருணை காரணமாகவோ துணைபோனால் தண்டனை குறைக்கப்படும். இங்கு தண்டனையை நீக்க கொண்டு வந்த பிரேரணையை ஆணைக்குழு நிராகரித்தது. 2000ம் ஆண்டு Christian Sandsdalen என்ற வைத்தியர் இருபது வருட காலமாக வியாதியால் பீடிக்கப்பட்டு துன்புற்ற ஒரு பெண்மணிக்கு ஊசிபோட்டு வாழ்வை முடித்ததற்காக அவர்

*தொடர்தல் 49ம் பக்கம்*

• வலுவளருக்கான (Disabled Persons) உடல்/உளநலப்பாதிப்பு மதிப்பீடு
• RDSP Tax Credit Certificate மூலம் RDSP சேமிப்பு
• மாநில அரசின் ODSP மத்திய அரசின் RDSP விண்ணப்பங்கள்
• சமூகநலக் கொடுப்பனவு (Social Benefit)

**A.K. Ananthanathan, MA, MSW, RSW**
Leglly Licensed Medical & Clinical Registered
Social worker with Ontario College of social workers and social services workers (OSWSSW)

தொலைபேசி இலக்கம்: Tel: 905-572-6854 தொலைநகல் இலக்கம்: Fax: 905-572-6854 மின்னஞ்சல் முகவரி: E-maill: kanathan2003@hotmial.com

# GROUP BENEFITS SOLUTION for SMALL BUSINESSES


HEALTH CARE


DENTAL CARE


VISION CARE


DISABILITY BENEFITS

NEEDS-SPECIFIC PLANS
CHOOSE FROM MANY INSURANCE COMPANIES
NO OBLIGATION QUOTES
QUALITY ADVICE YOU CAN TRUST

Let us help you design a plan where...
The cost is affordable! Coverage is flexible!

We deal with various insurance companies to get you the best health benefit plans for your employees

**iNFORCE LIFe Financial Services Inc.**

A professional team providing BENEFIT SOLUTIONS for small businesses

**Tel: 416.321.6000 Ext 401 / Dir: 416.909.0400**

10 Milner Business Court, Suite 208 Scarborough ON. M1B 3C6
Fax: 416.321.6025 www.inforcelife.com


Thurairajah RAMESH
Professional & Honest Service in Real Estate
AVANI
AT METROGATE
TRIDEL
BUILT FOR LIFE
Open House on Sunday July 08 2012
Cell:416.917-9957
For Your Early Booking or Information Please Call
416.321.6969
Buy Through
HomeLife GTA Realty Inc.
Realtors
Chance to WIN**
• a trip to Cuba for 2
• iPad
• 42" TV
• 10% Deposit*
• Price starting at $214,000
• One parking included
• FREE Assignment
• Occupancy early 2015
Thurairajah RAMESH
HomeLife GTA Realty Inc.,
Brokerage*
5215 Finch Avenue E. # 203, Toronto, ON M1S 0C2
*Independently owned and operated. ** Some conditions may apply
***not intended to solicit buyers /sellers currently under contract

# கருணைக் கொலை...

46ம் பக்கத் தொடர்ச்சி...

வைத்திய தொழில் செய்ய தடைவிதிக்கப் பட்டது. மேல்நீதிமன்றமும் தண்டனையை உறுதி செய்தது. பின்லாந்திலும் தற்கொலைக்குத் துணைபோவோருக்கு சட்டங்கள் தெளிவாகவில்லை. ஜேர்மனியில் 1751ம் ஆண்டு முதல் தண்டனை கிடையாது.

இங்கிலாந்திலும், வேல்சிலும் தற்கொலைக்குத் துணைபோவோருக்கு 14 வருடம் வரை சிறைத்தண்டனை வழங்கச் சட்டமுண்டு. கனடாவிலும் நிலைமை இங்கிலாந்து போன்றதே. ஸ்கொட்லாந்தில் துணைபோவோர்களைத் தண்டிக்கச் சட்டம் கிடையாது.

தீராத நோய் காரணத்தால் தாமாகவே விரும்பி தம் உயிரைப் போக்குவதை ஜப்பான் 1962ல் ஏற்றுக்கொண்டது. மிச்சிகனில் Jack Kevorkian என்ற வைத்தியர் கடும் வருத்தத்தால் கஷ்டப்பட்ட சுமார் 130 நோயாளிகளுக்கு விஷ ஊசி ஏற்றிச் சாவை ஏற்படுத்தியதற்காக 1999ல், 10 முதல் 25 வருடச் சிறைத்தண்டனை பெற்றார். இவரின் தாய் புற்றுநோயால் அதிக காலம் கஷ்டப்பட்டு உயிர்நீத்தார். ஆனால் இவர் இந்த முறையைக் கடைப்பிடித்தார் எனச் சொல்ல முடியாது. அவருக்கு நோயாளியின் சாவை நிர்ணயிக்கக்கூடிய தகுதியில்லை என அமெரிக்க வைத்திய சங்கம் கண்டித்தது. 2007ம் ஆண்டு அவர் 'தற்கொலைக்குத் துணைபோகக்கூடாது' என்ற நிபந்தனையோடு பரோலில் வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டார். (2011 ஜுனில் காலமாகிவிட்டார்).

1973ம் ஆண்டுக்கு முன் நெதர்லாந்தில் கருணைக்கொலை செய்வது சட்டப்படி குற்றம். 1984ல் அரச வைத்தியர் சபை, கருணைக் கொலை செய்வதற்கு நெறிமுறைகளை வகுத்தது. மிக நெருங்கிய உறவினருடன் தொடர்பு கொண்டு, நோயாளியின் நிலையைப் பற்றிக் கலந்தாலோசித்து, நோயாளியின் விருப்பப்படி இன்னொரு வைத்தியரின் ஆலோசனையுடன் கருணைக் கொலையில் ஈடுபடவேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப் படவேண்டும் என்கிறது அந்த நெறிமுறை.

## இந்தியாவில் கருணைக் கொலை:

இந்திய குற்றவியற் சட்டம் கருணைக் கொலையையும், தற்கொலையையும் குற்றமாகக் கருதுகிறது. 1994ம் ஆண்டு இந்தியன் பீனல் கோட் (IPC) 309 அரசியல் அமைப்புச் சட்டத்துடன் பொருந்தாது என உயர் நீதிமன்றத்துக்கு இரத்தினம் என்பவர் மனு சமர்ப்பித்தார். உயர் நீதிமன்றம் மனுதாராருக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கியது. Passive Ethenesia என்ற கருணைக் கொலையின் போது நோயாளியின் மனோநிலை பாதிப்படையாமல் சுயமாகச் சிந்தித்து தனது மரணத்துக்கு ஒப்புதல் கொடுக்கவேண்டும் என்றது நீதிமன்றம். பின்னர் 1996ம் ஆண்டு அரசியல் அமைப்புச் சட்டத்தின் படி IPC 309ம், 306ம் செல்லுப்படியாகும். ஆகவே கருணைக் கொலையும் தற்கொலையும் குற்றங்கள் ஆகும் என முன்னர் இருந்த நிலைக்குச் சார்பாக தீர்ப்பு வழங்கியது.

## கனடாவில் கருணைக் கொலை பற்றிய நோக்கு:

கனடாவின் குற்றவியலின்படி எவராவது தம் மேல் இன்னொருவர் மரணத்தை ஏற்படுத்த அனுமதிக்காது. அதுவுமன்றி ஒரு தற்கொலைக்கு எக்காரணத்தைக்கொண்டும் துணைபோவது குற்றமாகும். ஆனால் பல வைத்தியர்கள் நோயாளியினதோ அல்லது நெருங்கிய உறவினர்களின் வேண்டுகோளுக்கிணங்க அவர் வாழ துணைபோகும் உபகரணத்தை செயல்படாது நிறுத்தி மரணத்தை ஏற்படுத்தலாம். இதை Passive Ethunesia என்பர். அதற்குப் பதிலாக ஊசி எற்றி உயிரைப் போக்கினால் அதை ஆங்கிலத்தில் Active Ethunesia என்பர். முதலாவது முறை இப்போது பல வைத்தியசாலைகளில் கடைப்பிடிக்கப்படுகிறது. ஆனால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. இரண்டாவது முறை குற்றமாகும்.

ஒவ்வொரு கனடியப் பிரஜையும் தனக்கு மரணம் சம்பவிக்கும் எனத் தெரிந்திருந்தும் தான் எந்த மருந்தை எடுக்கவேண்டும் எனத் தீர்மானிப்பதிலும், தனக்குத் தரப்படும் வைத்திய சேவையை மறுப்பதற்கும் உரிமையுண்டு. சட்டப்படி தயாரிக்கப்படும் உயிலில் உள்ள சில குறிப்புகள் கருணைக் கொலையுடன் சம்பந்தப்பட்டவையாகும். கருணக்கொலை மூலம் ஒருவர் உயிர் நீத்தால் அவரின் உயில் சட்டப்படி செல்லுபடியாகுமா என்பது ஆராய்ச்சிக்குரியது.

அண்மையில் சஸ்கச்சுவான் மாகாணத்தில் நடந்த ஒரு பெண்ணின் கருணைக் கொலை தீராத வியாதிகள் உடைய நோயாளிகளைப் பராமரிக்கும் மருத்துவ வசதியைப்பற்றிய சர்ச்சையை உருவாக்கியுள்ளது. இந்த மரணத்தின் பின் கருணைக்கொலைக்கு எதிரான கனடிய சட்டத்தை மறுபரிசீலனை செய்யும் படி பல இயக்கங்கள் அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன. உடலியங்க மறுக்கும் வயது வந்தவர்களை எவ்வாறு முக்கிய கவனமெடுத்து அரசு கவனிக்கப் போகிறது? அதற்கு வேண்டிய நிதி உண்டா? அல்லது கருணைக் கொலை மூலம் பிரச்சினைக்கு முடிவு காணப்போகிறதா என்ற கேள்விகள் எழும்பியுள்ளன. அமெரிக்கா, இங்கிலாந்தில் வாழும் வைத்தியர்கள் போன்று நோயாளிகளின் பராமரிப்பை கருணைக்கொலைக்கு அடகு வைக்க விரும்பவில்லை. நோயாளிகளை வைத்திய காரணத்துக்காக மரணத்தை விரைவில் தழுவச் செய்யலாம் என்ற அதிகாரத்தை வைத்தியர்களுக்கு கொடுத்தால் அதை அவர்கள் துஷ்பிரயோகம் செய்யக்கூடும் என் பது பலர் கருத்து. அதுவுமன்றி நெதர்லாந்து நாட்டைப் போன்று நிலைமை கட்டுக்கடங்காமல் போய்விடும் என்ற பயம் வேறு.

கனடாவில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பின் படி 71 சதவீதமானோர், நோயால் வருந்துவோரின் பிரச்சினையைத் தீர்க்க கருணைக் கொலை ஒரு வழி அல்ல என்றனர். கிட்டத்தட்ட 54 சதவீதத்தினர் சட்டப்படி கருணைக் கொலையை அனுமதிக்கக் கூடாது என்றனர். கருணைக்கொலையைப் பற்றிய விளக்கம் போதியளவுக்கு 65 வீதத்தினருக்கு தெரிய வில்லை, ஆதலால் கருணைக் கொலையை அனுமதிக்கக் கூடாது என்ற கருத்து 54 சதவீதத்திலும் பார்க்கக் குறைவாக இருக்கும் என நம்பப்படுகிறது.

## கருணைக் கொலையை ஏற்கலாமா?

கருணைக் கொலை நடப்பதற்கு முக்கிய காரணம் தீராத நோயும் அதனால் ஏற்படும் துன்பமும், வலியுமாகும். 6 மாதத்துக்குள் மரணம் நிச்சயம் என்று உறுதியானால் பின் எதற்காக அதை எதிர்பார்த்துத் துன்புற வேண்டும்? நித்திரையில் சிலர் திடீரென மரணமடைவதுண்டு. "கொடுத்து வைத்தவர் கஷ்டப்படாமல் போய்விட்டார்" என்பார்கள் அதைக் கேட்டவர்கள். துன்பமற்ற மரணத்தை எல்லோரும் விரும்புவதை இது எடுத்துக் காட்டுகிறது. நடக்கப் போவது உறுதியானால் சித்திரவதைக்கு உட்பட்டு துன்பப்படாமல் இவ்வாறு மரணத்தைத் தழுவினால் என்ன? மரணதண்டனை பெற்ற கைதியின் தண்டனையை விஷ ஊசி ஏற்றியோ அல்லது மின்சாரம் செலுத்தியோ மரணத்தை உண்டு பண்ண முன் மயக்க மருந்து கொடுத்து கைதி துன்புறாது இறக்க வழிசெய்தால் என்ன என்றன சில மனித உரிமை இயக்கங்கள்.

கருணைக் கொலை முறையைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மனித உரிமைகளில் ஒன்றா? இதற்கான பதிலில் கருணைக்கொலையினை ஆதரிக்கிறோமா இல்லையா என்ற முடிவு தங்கியுள்ளது.

pon.kulendiran@thaiveedu.com

■ ■ ■



# சிறு தொழிற் காப்புறுதி



## செந்தூரன் புனிதவேல்

- காப்புறுதி முகவர் -

கனடாவின் பொருளாதாரத்தில் சிறு தொழில் (Small business) வளர்ச்சியானது பெரும்பங்கு வகிக்கின்றது. இதன் காரணமாகத்தான் அர சாங்கம் பல வரிச்சலுகைகளைக் கொடுத்து சிறுதொழில் வளர்ச்சியில் பெரும் ஆர்வம் காட்டிவருகிறது.

இத்தகைய சிறுதொழில்களில் பெருமளவா-னவை அதன் நடத்துனரில் / உரிமையாளரில் தங்கியுள்ளது. உதாரணத்திற்கு, நீங்கள் ஒரு பல் வைத்தியர் அல்லது வீடு விற்பனை முகவர் அன்றேல் வீட்டுத் திருத்தொழில் செய்பவர் எனப் பல்லாயிரம் சிறுதொழில்க ளில் உரிமையாளராயும் முக்கிய வல்லுன ராயும் இருக்கலாம். இத்தகைய முறையில் பதிந்து செய்யும் வியாபாரத்தில் முக்கிய காரியகர்த்தாவான உங்களுக்கு நோய் அல் லது மரணம் சம்பவித்தால் அந்தச் சிறுதொழில் தொடர்வதற்கு இன்னுமொருவரை வேலைக் குச் சேர்க்க வேண்டும் அல்லது அந்த சிறு தொழிலை விற்றுவிட வேண்டிவரும்.

இத்தகைய எதிர்பாராத அனர்த்தம் ஏற்பட் டால் உங்களையும் உங்களை நம்பியுள்ள வர்களையும் காப்பதற்குக் கைகொடுக்கும் காப்புறுதியினை 'முக்கிய பிரமுகர் காப்புறுதி' என்று அழைப்பர் (Key-man Insurance).

இந்த முக்கிய உறுப்பினர் காப்புறுதியானது அச் சிறுதொழில் உரிமையாளர் அல்லது முக்கிய தொழிலாளியின் ஆயுள், ஆரோக் கியம் ஆகியவற்றைக் காப்புறுதி செய்வதாகும்.

இக்காப்புறுதி ஏனைய காப்புறுதிகள் போல் பணம் கொடுத்தாலும், சாதாரண காப்புறுதி களிலும் சற்று வித்தியாசப்படும். அந்த வேறு பாடு வரி செலுத்துவதில் ஏற்படும் தாக்கங் களாகும்.

ஒரு சாதாரண காப்புறுதியில் ஒருவர் தனது வருவாயில் வரி செலுத்தியபின் எஞ்சியுள்ள பணத்தைக் கொண்டு காப்புறுதிக்கட்டணம் செலுத்துவார். அனர்த்தம் ஏற்பட்டு பணம் கிடைக்கும் வேளையில் அப்பணத்திற்கு வரி கிடையாது.

முக்கிய பிரமுகர் காப்புறுதியிலும் கட்டணத்தை அந்த தொழில் செலவாகக் கருதி செலவிடப் படும். எந்தத் தொழில் செய்தாலும் அதற்கான காப்புறுதிக்கட்டணம் ஒரு தொழில் செய்வ தற்கான செலவாகவே கணிக்கப்படும். உதா ரணத்திற்கு நீங்கள் ஒரு பல் வைத்தியர் என்று கொள்வோம். நீங்கள் வைத்தியம் செய் கையில் ஏதும் தவறு ஏற்பட்டால் உங்களை மற்றவர் குற்றவாளியாகக் காட்டும் வேளை யில் அவருடைய நஷ்டஈட்டை உங்கள் காப் புறுதிதான் வழங்கும். அதேபோல் நீங்கள் ஒரு உணவு விடுதியின் உரிமையாளராய் இருந்து உங்கள் உணவினை உண்ட ஒரு வருக்கு நோய் ஏற்படின் அவர்கள் நஷ்டஈடு கோரி, நீதிபதி அவருக்கு சார்பாகத் தீர்ப்பு வழங்கினால் அதுவும் உங்கள் காப்புறுதி தான் வழங்கும்.

முக்கிய பிரமுகர் காப்புறுதியில் கட்டணங் கள் உங்கள் தொழில் செலவாக செலுத்-தப்பட்டு பின் நீங்கள் மரணம் அடைந்தால் அல்லது பெரும் நோய்க்கு உட்பட்டால் காப்புறுதி அமைப்பு பணத்தை உங்கள் நிறுவனத்திற்கு கொடுக்கும். அப்பணத்தைக் கொண்டு புதிய முக்கிய தொழில் வல்லுனரை வேலைக்கமர்த்தலாம். அல்லாவிடில் அது அந்த நிறுவனத்தின் இருப்பில் இருந்து இலாப மாக மீள்பெறலாம்.

இதுபற்றி மேலும் அறிய வேண்டுமானால் அனுபவமுள்ள காப்புறுதி முகவரிடம் அல் லது கணக்காளரிடம் அணுகி இது விடய மாக தகுந்த விளக்கம் பெறுவது அவசியம்.

நீங்கள் இத்தகைய காப்புறுதிக்குச் செலுத்தும் கட்டணத்தை வரிசெலுத்து முன்பா அல்லது பின்பா என்பது நீங்கள் பெறும் காப்புறு தியின் தன்மையைப் பொறுத்து அமையும் என்பதை மறந்து விடலாகாது. ஆனால் இளமையில் நல்ல வருவாய் பெறும் காலத் தில் போதிய, சரியான காப்புறுதியைப் பெற்று வைப்பது அறிவுள்ள செயல் என்பதை ஒரு வரும் மறுக்கமாட்டார்கள். எனவே சிறுதொழில் செய்யும் அனைவரும் இதில் கவனம் செலுத்-துவது அவசியம்.

*தமிழாக்கம்: குமார் புனிதவேல்*

senthuran.punithavel@thaiveedu.com

■ ■ ■

### Polapadyயும் மசாலாப்பொடியும்:

முட்டான்

Naveen Polapady என்பவர் ரொறன்ரோ நகர மத்தியில் இந்திய உணவகமொன்றை நடத்திவருகிறார். உணவகமும் அவரது வாகனமும் பல கொள்ளை முயற்சி, கொள்ளை களுக்குள்ளாகியிருக்கின்றன. ஒரு தடவை கமரா, மடிக்கணினி, கைத்தொலைபேசி, iPad என்பனவும் பின்பொருதடவை அவரது காரிலிருந்த GPS சாதனமும் களவாடப்பட்டிருந்தன. ஓகஸ்ட் 21, 2011ல் உணவகத்தின் பின்புறம் நிறுத்தப்பட்டிருந்த காரில் திருட முனைந்த ஒருவரை நவீன் எதிர்கொண்டார். திருடனும் ஆவேசமாகி 'உன்னைக் கொல்லுவேன்' என்று மிரட்ட கையிலிருந்த மசாலாப்பொடியை திருடனின் முகத்தில் வீசினார் நவீன். அதன் பின்பு நடந்த அடிதடியில் நவீனின் கையில் தும்புத்தடி இருப்பது கண்காணிப்பு வீடியோவில் பதிவாகியிருக்கிறது. திருடன் ஓட காவற்றுறை துரத்திப் பிடித்து, சாட்சிகள் இல்லையென்று திருடனை விட்டுவிட்டது. நவீன் மீது, உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் வகையில் தாக்கியமை, ஆயுதம்(?) கொண்டு தாக்கியமை, ஆபத்தான ஒரு பொருளைப் பயன்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இத்தகைய சூழ்நிலையில் பாதிக்கப்படும் நவீன் போன்றவர்கள் மீது குற்றஞ் சாட்டப்படாத வகையில் சட்டமுன்மொழிவொன்று கனடியப் பிரதமரின் ஆதரவோடு நாடாளுமன்றத்தில் இரண்டாவது அமர்வில் விவாதிக்கப்பட்டுக்கொண் டிருக்கிறது. சட்டம் நிறைவேறினால் நவீன் மீதான குற்றச்சாட்டுக்கள் செல்லுபடியற்றவையாகிவிடும்.



பிரதமர் அலுவலக அதிகாரிகள் தொலைபேசியில் அழைத்து தங்கள் உளப்பூர்வமான ஆதரவை நவீனுக்குத் தெரிவித்துள்ளனர்.

திருட வந்தவனுக்கு ஆரத்தி எடுக்கச் சொன்னாலும் சொல்லும் இப்போதைய சட்டம்.


## சக்தி என்றால் காப்புறுதி



காப்புறுதி துறையில் '28' வருட முழுநேர உன்னதமான, நெறியான சேவை

'சகல காப்புறுதி நிறுவன பிரதிநிதி'

- இதுவரை 11,000 இற்கு மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்.
- 200 துரித காப்புறுதி இழப்பீடுகள்.
- ஏறத்தாழ 46 நிரந்தர, பகுதி ஊன இழப்பீடுகள்.
- பாரபட்சமின்றி எந்த நிறுவனத் திட்டமாக இருப்பினும் தெளிவான, துல்லியமான, இலகுவில் கிரகிக்கும் வண்ணம், பொறுமையான விளக்கம்.
- பல்வேறு நிறுவனங்கள் மூலம் சிறப்பு விருதுகள் பெற்ற பெருமை.
- எவ்வித வருத்தங்கள் இருப்பினும் அதற்கேற்ப தகுந்த காப்புறுதி திட்டங்கள் அளிக்கும் திறமை.
- உங்கள் காப்புறுதி மனுப்பத்திரம் ஏதாவது நிறுவனம் மூலம் நிராகரிக்கப் பட்டாலும் தகுந்த காப்புறுதி திட்டம், நிறுவனங்களின் நிபந்தனைக்கு அமைய நிச்சயமாக, உறுதியாகக் கொடுக்கப்படும்.
- உடனே அமுலுக்கு கொண்டுவரும் மருத்துவ ரீதியின்றி ஆயுள்காப்புறுதி.

# சக்திவேல்

**416.706.3530, 905.763.8912**

Fax: 905 428 9307 Email: george14@sympatico.ca

மன்னிக்கவும்!

வாகனக் காப்புறுதி (Car Insurance), தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!

## மருத்துவ ரீதியின்றி ஆயுள் காப்புறுதி

- 85 வயதிற்குட்பட்ட எவரும் **$375,000** வரை மனுச்செய்யலாம்.
- சலரோகம், சலரோக தடுப்பூசி, மாரடைப்பு, இரத்த அழுத்தம் (**BLOOD PRESSURE**), கொழுப்பு சத்து கூடியுள்ளவர்கள் (**HIGH CHOLESTEROL**).
- பகுதி ஊனம், நிரந்தர ஊனம் உள்ளோர்.
- மற்ற காப்புறுதி நிறுவனங்களினால் நிராகரிக்கப்பட்டோர்.
- நிறை கூடியுள்ளோர் (**OVER WEIGHT**)
- அதிகூடியதான கை கால் வலி, மூட்டு வலியுள்ளோர்.

உங்கள் வருத்தங்களை பொறுத்து, நிலவரத்தை பொறுத்து தகுந்த காப்புறுதி திட்டத்தை நிச்சயமாக அளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

**ஒருவரும் நிராகரிக்கப்படமாட்டார்கள்.**

**சக்திவேல்: 416 706 3530**


SELLING-BUYING-INVESTING
Warden & Hwy 7
$ 359,900
2 Bedrooms + 2 Washrooms
Waren & Hwy 401
$ 339,900
3+1 Bedrooms + 2 Washrooms
Morningside & Staines
$ 389,900
3 Bedrooms +3 Washrooms
Taunton & Audley
$ 444,900
4+1 Bedrooms + 4 Washrooms
Warden & Lawrence
$ 479,900
3+2 Bedrooms + 2 Washrooms
Taunton & Country Lane
$ 314,900
3 Bedrooms + 3 Washrooms
Brock & Taunton
$ 439,900
4 Bedrooms + 3 Washrooms
Brock & Taunton
$ 459,500
4 Bedrooms + 3 Washrooms
14th Ave. & 9th Line
$ 469,900
3 Bedrooms + 3 Washrooms
9th Line & Reeves way
$ 449,900
3 Bedrooms + 3 Washrooms
Staines & Steeles
569,000
4 Bedrooms + 4 Washrooms
Thickson & Rossland
$ 489,900
4 Bedrooms + 4 Washrooms
Salem & Rossland
$ 569,900
4+1 Bedrooms +3 Washrooms
14th Ave. & 9th Line
$ 619,900
4 Bedrooms +3 Washrooms
14th ave. & 9th Line
$ 499,800
3 Bedrooms + 3 Washrooms
14th Ave. & 9th Line
$ 559,900
4 Bedrooms + 3 Washrooms
Morningside & Sheppard
$ 599,999
4 Bedrooms + 3 Washrooms
Ellesmere & Meadowvale
$ 549,000
4+1 Bedrooms + 4 Washrooms
Weston & Rutherford
$ 525,900
3+1 Bedrooms + 4 Washrooms
Markham & Steeles
$ 669,900
4 Bedrooms + 4 Washrooms
Taunton & Brock
$ 559,000
4 Bedrooms + 3 Washrooms
Taunton & Harwood
$ 498,900
4 Bedrooms + 4 Washrooms
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Pho:(905)-201-9977 Fax :(905)-201-9229
You Tube
www.realhouse.ca
Muguntham Nadarajah
Sales Representative
Direct: 416-276-8025
Thamil Suberamaniam
Sales Representative
Direct: 416-358-6200
*Independently Owned and Operated
SELL YOUR HOME FASTER AND MORE MONEY

# எருமைத்தயிரும் எள்ளுருண்டையும்

**- கதிர் துரைசிங்கம் -**

**பொன்னர்:** 'சிவகவி' தொடக்கம் 'சிங்கம் 2' வரை தமிழ்த் திரைப்படங்களில் எப்பவும் ஆண் இராஜ்ஜியமும் ஆண் ஆதிக்கமும் தான். கதாநாயகன் அறுபதைத்தாண்டினாலும் கதாநாயகி இருபத்தி ஐந்தைத் தாண்டுவதில்லை. இந்த நிலை எப்ப மாறுமோ தெரியாது.

**கனகர்:** மாறிவிட்டுது பொன்னர்! எப்பவோ மாறிவிட்டுது!!.

**பொன்னர்:** எங்கை மாறினது? எப்ப மாறினது?

**கனகர்:** மோல்லை (Mall) இருந்து முணுமுணுக்கிறதை விட்டுட்டு வீட்டிலை இருந்து மனிசியோடை சின்னத்திரை சீரியல் நாடகங்களைப்பாரும். சித்தி தொடங்கி அரசி, திருமதி செல்வம், தங்கம், தென்றல், அழகி, செல்லமே வரை எல்லாமே பெண் இராஜ்ஜமும் பெண் ஆதிக்கமும் தான். கதாநாயகிதான் முக்கியபாத்திரம். கதாநாயகன் Hero அல்ல Xero. கதாநாயகி சொல்வதைக் கேட்டுக் கொண்டு அவருடைய செயற்பாடுகளுக்குத் துணைபோகும் டம்மியாக கதாநாயகன் இருக்கவேண்டும். பெரிய திரை ஆண்களுக்கு எண்டால், சின்னத்திரை பெண்களுக்கு.

**பொன்னர்:** சின்னத்திரைக்கு மேற்கு உலகில் ஏன் இவ்வளவு மௌசு எண்டு இண்டைக்குத்தானே எனக்கு விளங்கிச்சுது.

•

**விரும்பியது கிடையாவிட்டால் கிடைத்ததை விரும்பு.**

இலங்கையிலை பெயர் போன Physician, பெயர்போன surgeon எண்டு காலத்துக்குக் காலம் வைத்திய நிபுணர்கள் இருந்தார்கள். அவர்களைச் Channel பண்ணி அவர்களிடம் சிகிச்சை பெற்றபின், நான் பெயர்போன வைத்திய நிபுணரிடம் சிகிச்சை பெற்றேன் என்று சொல்லிப் பெருமைப்பட்டோம். கனடாவிலை எவர் பெயர்போன Physician, எவர் பெயர்போன Surgeon என்று எவருக்கும் தெரியாது. Refer பண்ணப்பட்ட நாங்கள் எங்களுக்கு அகப்படுகிற வைத்திய நிபுணரிடம் சிகிச்சை பெற்றபின், எனக்கு வைத்தியம் செய்தவர்தான் கனடாவிலேயே பெயர்போன Physician, பெயர்போன Surgeon என்று மற்றவர்களுக்குச் சொல்லிப் பெருமைப்படுகிறோம்.



•

"ஏனைய பாடசாலைகளுக்கு இருப்பது போல எமது பாடசாலை மாணவர்கள் மலசலம் கழிப்பதற்குப் போதிய மலசல கூட வசதி இல்லை" என்று பாடசாலை அதிபர் ஒருவர் புலம்பெயர் பழைய மாணவர் சங்கம் ஒன்றிற்கு, இந்தக் குறையை நிவர்த்தி செய்யவேண்டி மின் அஞ்சல் மூலம் விண்ணப்பித்தார். மின் அஞ்சல் கண்டதும் அந்தப் பழையமாணவர் சங்கம் "எங்கள் உறவுகளுக்கு இப்படி ஒரு சோதனையா" என்று வேதனைப்பட்டு துரித வேகத்தில் பணம் அனுப்பி நவீன வசதிகளுடனான தொடர் மலசல கூடங்கள் பல கட்டுவித்தனர். இதனை அரசாங்க அமைச்சர் சம்பிரதாய பூர்வமாகக் திறந்து வைத்தபின்னர், திறந்தவெளி அரங்கில் உரை ஆற்றினார். அவரின் உரை இணைவேக மொழிபெயர்பாளரால் தமிழாக்கம் செய்யப்பட்டது.

"புலம்பெயர்ந்து வாழும் பழைய மாணவர்களின் தாராள சிந்தையாலும் தூர நோக்கினாலும் போதுமான அளவு மலசலகூடங்கள் கட்டப்பட்டுத் திறந்து வைத்திருக்கிறோம். மகிழ்ச்சியான இந்த வேளையில் மலசலம் கழிப்பதற்கு மாணவர் தொகை போதாது என்பதை அதிபரின் அறிக்கை மூலம் அறிந்து வேதனைப்படுகிறேன்" என்றார்.

அன்றைய தினமே அதிபர் மின் அஞ்சல் மூலம், அந்தப் பழைய மாணவர் சங்கத் திற்கு நன்றி கூறியதோடு, "மாணவர் தொகையை அதிகரிப்பதற்கும் உங்கள் உதவி நாடி நிற்கிறேன்" என்று மேலும் ஒருவேண்டுகோள் விடுத்து இருந்தார்.

•

**பொன்னர்:** இந்த முகப்புத்தகம் (Face book) எண்டு பிள்ளைகள் சொல்லுதுகள். அது என்ன சாமான்.

**கனகர்:** முகத்தைப் பார்த்துக் கொள்ளாமலேயே ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு இருக்கும் ஒரு ஊடகத்தைத்தான் முகப்புத்தகம் அல்லது மூஞ்சிப் புத்தகம் (Face book) எண்டு சொல்லீனம்.

•

**அன்று:** புகையிலை, சுருட்டு, வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், மாம்பழம் முதலிய எங்கள் உற்பத்திப் பொருட்களை தென் இலங்கை சென்று அவர்களுக்கு நாங்கள் விற்பனை செய்தோம்.

**இன்று:** எருமைத்தயிர், எள்ளுருண்டை, தொதோல், கித்துள் பனக்கட்டி அத்தோடு எங்கட பனங்கட்டி, பனாட்டு, பருத்தித்துறை வடை, புழுக்கொடியல் முதலியவற்றை அவர்கள் வட இலங்கை வந்து விற்பனை செய்ய, நாங்கள் அவர்களிடம் வாங்குகிறோம்.

•

## தெருவோர நடிகர்கள்:

தெருவோரங்களில், பெரும்பாலும் பெருந்தெருவிலிருந்து வெளியே வரும்போது 'வேலையில்லை, உதவி செய்யமுடியுமா?' 'உணவுக்காக வேலைசெய்வேன்' போன்று பல வசனங்கள் எழுதப்பட்ட அட்டைகளோடு சிலரைப் பார்த்திருப்பீர்கள்.




அண்மையில் பிரிட்டிஷ் கொலம்பியாவின் Chilliwack என்ற நகரில் ஒருவர் அப்படி நின்றார். அவரிடமிருந்த காகித அட்டையில் 'ஹலோ! எனது பெயர் Constable. Martell, இப்போது நீங்கள் கைத்தொலைபேசி பயன்படுத்திக் கொண்டிருந்தால் உடனடியாக உங்களுக்குத் தண்டச்சீட்டுக் கிடைக்கப்போகிறது' என்று எழுதப்பட்டிருந்தது.

கைத்தொலைபேசியில் பேசியவண்ணம் இந்த அட்டையை வாசிக்கும் சாரதியின் நிலையை நினைத்தால் சிரிப்புத்தான் வருகிறது. அன்று 21 பேருக்குத் தண்டச்சீட்டும் இன்னும் பலருக்கு அறிவுரையும் எச்சரிக்கையும் வழங்கப்பட்டனவாம். வீதி திருத்து பவரைப்போல வேடமிட்டும் காவல்துறையினர் கைத்தொலைபேசி பயன்படுத்துவோரைப் பிடித்திருக்கின்றனர்.

சாரதிகள் யாரைத்தான் நம்புவதோ!

குட்டான்

**பொன்னர்:** இலங்கையிலை இருக்கேக்கை கேடயங்கள் கிண்ணங்கள், விருதுகள் இருக்கின்ற வீடுகளை விரல் விட்டு எண்ணக் கூடியதாக இருந்தது. ஆனால் கனடாவில கேடயங்கள், கிண்ணங்கள் விருதுகள் இல்லாத வீடுகளை விரல் விட்டு எண்ணலாம். என்ன காரணம்?

**கனகர்:** இலங்கையில் ஏதாவது போட்டியிலை பங்குபற்றி வெண்டால்தான் கேடயம் அல்லது கிண்ணம் கிடைக்கும். அதேபோல் ஏதாவது சாதனை செய்தால்தான் விருது கிடைக்கும். ஆனால் இஞ்சை அப்பிடி இல்லை. போட்டி ஒன்றிற்கு விண்ணப்பித்தால் கேடயம் கிடைக்கும். பங்குபற்றினால் கிண்ணம் கிடைக்கும். ஒழுங்காக வீட்டோடை வாழ்ந்தால் 50, 60, 75, 80 என்று வாழ்வருட சாதனைக்காக விழாவோடு விருதும் அவ்வப்போது கிடைக்கும்.

•

வீடுவிற்பனை முகவர் ஒரு Deal பற்றித் தொலைபேசியில் உரையாடிக்கொண்டு இருக்கிறபோது முதியவர் ஒருவர் வீட்டுக்குள் நுழைகிறார். Tension னில் இருந்த முகவர், சும்மா வந்திருப்பார் என்று நினைத்து முதியவரைப் பார்த்து: "Telephone Numberக்கு அழைத்திருக்கலாம், Calling bell இருக்கு அடித்திருக்கலாம், கதவு இருக்கு தட்டி இருக்கலாம், எந்த சம்பிரதாயமும் இல்லாமல் இப்படி திறந்த வீட்டுக்குள் ஏதோ நுழைஞ்ச மாதி வந்தால் என்ன அர்த்தம்?

**முதியவர்:** அர்த்தம் தெரியாமல் Open House Boardடை நீர் வெளியாலை போட்டிட்டு என்னை அர்த்தம் கேட்கிறீரோ? திறந்த வீட்டுக்குள்ளை நீரும் நூழையலாம், ஏதோவும் நூழையலாம், நானும் நுழையலாம். கதைக்கிறதைக் கவனமாகக் கதைக்கவேணும். வீடு நான் பாத்திட்டன், கூடின Offer என்ன எண்டு சொல்லும். இண்டைக்கே Close பண்ணலாம். Mortgage பிரச்சினை இல்லை. Full paymentக்கு certified cheque தரலாம் என்றார்.

காலில் விழாத குறையாக மன்னிப்புகேட்ட முகவர், எந்தப் புத்துக்குள்ளை என்ன பாம்பு எண்டு எப்பிடிக் கண்டு பிடிக்கிறது? என்று மனதுக்குள் நொந்துகொண்டார்.

•

**'A' பிரிவு சமயபாட ஆசிரியர்:** உங்களை ஆண்டவன் படைத்தது மற்றவர்களுக்கு உதவி செய்வதற்காக.

**மாணவன் 1:** சரி Sir 'B' பிரிவு மாணவர்களை ஆண்டவன் ஏன் படைத்தான்?

**ஆசிரியர்:** அவர்களைப் படைத்ததும் மற்றவர்களுக்கு உதவி செய்வதற்காகத்தான்.

**மாணவன் 2:** 'A' பிரிவு மாணவர்களையும் 'B' பிரிவு மாணவர்களையும் ஆண்டவன் மற்றவர்களுக்கு உதவி செய்ய படைத்தான். அப்படி என்றால் மற்றவர்களை ஆண்டவன் ஏன்படைத்தான்?

kathir.thuraisingam@thaiveedu.com

■ ■ ■







# Do your Mortgage and WIN A TRIP to Dominican Republic




## Residential & Commercial Private Funds for Emergency Mortgages

**1st Mortgage, 2nd Mortgage & 3rd Mortgage**

- **Purchase**
  Buying a new home or Second home (Investment Property)
- **Refinance**
  To pay off High Interest credit cards, Extra cash for special occasions, Home renovation
- **Home equity line of credit** - No appraisal fee and legal fee
- **Mortgage renewal** - Best rate in Town
- **Switch Mortgage** - For good rate with no legal fee
- **Debt Consolidation** - Reduce bill payment by up to 75%
- **Special Occasions** - Power of sale - no credit
- **All Credit Challenges** - Tax arrears - self employment

**Mortgage for any Situation**
**Call Kethes 416-873-5780**

VERICO®
MORTGAGE BROKERS NETWORK

**VERICO The Mortgage Leaders Inc.**
*(Lic # 10238)*
885 Progress Ave, Suite UPH3, Toronto, ON. M1H 3G3

**Kethes**
**Sivasubramaniyam**
*Mortgage Agent - (Lic # M08006105)*
**Cell : 416.873.5780**



# கடன்தொல்லை?




- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## SRI
## CREDIT SOLUTION CENTRE

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com



digi

# வீட்டுக் காப்பை உறுதி செய்யும் வீட்டுக் காப்புறுதி




செந்தூரன் புனிதவேல்

- காப்புறுதி முகவர் -


## வீட்டுக் காப்புறுதி வீட்டுக் காப்பை உறுதி செய்கிறதா?

யூலை மாத ஆரம்பத்தில் தெற்கு மார்க்கம் நகரில் ஏற்பட்ட தீ விபத்து, பலரும் தத்தமது காப்புறுதியை மீள் பரிசோதனை செய்யத் தூண்டுகிறது. உண்ணாமல் உறங்காமல் காத்துச் சேர்த்த செல்வம் அனைத்தும் வீட்டில் கட்டடமாகவும் பொருளாகவும் இருப்பது இயல்பானதே. ஆகவே அதனை சரியாக காப்புறுதி செய்வது அவசியம்.

இங்கு வீட்டுக் காப்புறுதியில் உள்ள சில கட்டுப்பாடுகளையும், அதனை எப்படி தாண்டுவது என்றும் பார்ப்போம்.

அனேகமாக எல்லாருமே வீட்டுக் காப்புறுதி செய்து வைத்திருப்போம். ஆனால் மிகச் சிலரே அது பற்றி தெளிவான விளக்கம் உடையவராய் இருக்கிறோம்.

அனேகமான வீட்டுக்காப்புறுதிகள் வீட்டில் உள்ள பொருட்களை தீ, களவு மற்றும் பல அனர்த்தங்களிலிருந்து ஈடு செய்வதாய் இருப்பினும் அது ஈடு செய்வது ஒவ்வோர் உடன்படிக்கையிலும் வேறாக இருக்கும். மேலும், ஒவ்வொரு காப்புறுதியும் ஓர் உடன்படிக்கை என்பதை மறக்கலாகாது. சாதாரணமாக ஒரு காப்புறுதி, வீட்டின் பெறுமதியில் எழுபத்தைந்து வீத பெறுமதிக்கோ அல்லது வீட்டின் பெறுமதிக்கோ அங்கு உள்ள பொருட்களைக் காப்புறுதி செய்து ஈடு செய்வதாக குறிப்பிடும். உதாரணத்திற்கு ஒரு வீட்டின் பெறுமதி இருநூறு ஆயிரம் டொலர் எனின் அதில் உள்ள பொருட்களை நூற்று ஐம்பது ஆயிரத்திற்கோ அல்லது இருநூறு ஆயிரத்திற்கோ ஈடு செய்யலாம். இத்தொகை பெரிதாகத் தோன்றினாலும் நீங்கள் முக்கியமாக சில விடயங்களை கவனிக்கவேண்டும்.

முதலாவதாகக் கவனிக்கவேண்டியது காப்புறுதிப் பொருட்களின் தற்போதைய பெறுமதி (Actual Cash value) தரப்படுமா அல்லது தற்போது அதை வாங்குவதற்கான விலையை (Replacement cost) தரப்படுமா? என்பதே. உதாரணமாக நீங்கள் ஒரு பெரிய தொலைக் காட்சி பெட்டியை (T.V) இரண்டாயிரம் டொலருக்கு வாங்கி இருந்தால் ஐந்து வருடங்களுக்குப்பின் அதன் பெறுமதி இருநூறு டொலராக இருப்பதே கஷ்டம். எனவே முதல் முக்கியமாக கவனிக்கவேண்டியது, புதுப் பொருளின் விலைப்படி பணம் தரப்படுமா? என்பதே. இதனை Replacement cost என்று குறிப்பிடுவர்.

அடுத்து காப்புறுதி உடன்படிக்கையில் அதாவது வீட்டுக்காப்புறுதியில் கவனிக்கவேண்டியது: ஏதாவது சில பொருட்களுக்கு உச்சவரம்பு உண்டா? என்பதாகும். அனேகமாக நகைகள், கம்பளி ஆடை (Fur coats) மற்றும் நாணயம் போன்றவற்றிற்கு உச்சவரம்பு பெறுமதி ஆயிரம் முதல் பத்தாயிரம் வரை ஏதாவது ஒரு தொகை குறிப்பிட்டு இருப்பார்கள். அப்பொருட்களை, அதிலும் மிக அதிகமாகவே வைத்திருப்பார்கள் எம்மவர்கள்.

எமது பாரம்பரியப்படி பெண்கள் ஒரு நடமாடும் நகைக்கடை போல் நகைகள் சேர்த்து வைத்திருப்பார்கள். முகத்தில் புன்னகை வேண்டுமென்றால் உடம்பில் பொன்னகை வேண்டும். இப்படி பெருந்தொகை பெறுமதியான நகை உள்ளவர்கள் தரமான நகை கடைகளில் அதனை 'பெறுமதி நிர்ணயித்து' (appraised) காப்புறுதியில் இணைத்துக் கொள்வது அவசியம்.

இவ்விடயத்தில் இன்னுமொரு விடயத்தைக் கவனிக்க வேண்டும். வீட்டிற்கு உறவினர்கள் வருகையில், அவர் நகைகளை உங்கள் காப்புறுதி ஈடு செய்யாது. எனவே பயணிக்கும் வேளைகளில் புன்னகையை மட்டும் எடுத்துச் செல்லுங்கள். உங்கள் நகைகளை காப்புறுதி செய்வதற்கான கட்டணம் சற்று அதிகமே. ஆனால், நகைகளைப் பயணிக்கும் வேளையில் இழந்தாலும் ஈடு செய்யும்.

மூண்றாவதாகக் கவனிக்க வேண்டிய விடயம் இழந்த பொருட்களின் விலையை நிர்ணயிப்பது. இதற்கு உங்கள் வீட்டிலுள்ள பொருட்களைப் பட்டியலிட்டு அதில் விலைகளைக் குறிப்பதுடன் இயன்றளவு கொள்வனவுச் சீட்டுகளையும் வைத்திருங்கள். இந்த பட்டியலை அறை அறையாக நடந்து தயாரிக்கலாம்.

மேலும், அறை அறையாக ஒரு வீடியோ கமராவுடன் நடந்து, அதேவேளை நீங்களும் விளக்கம் தருவதுடன் அதில் உள்ள தொடர் எண் (Serial Number) குறிப்பிட்டு விடுவது சிறப்பு.

இன்னுமொரு விடயம்: பெரிய விலையுயர்ந்த பொருட்களை மட்டும் படமெடுத்து அதன் பின்புறத்தில் ரசீதை ஒட்டிவைப்பது மிக மிக முக்கிய விடயம். இந்த ஆவணங்கள் அனைத்தையும் வீட்டில் வைத்திருக்காதீர்கள். வீடு எரிந்தால் அவையும் எரிந்துவிடுமல்லவா? எனவே வங்கிப் பாதுகாப்புப் பெட்டகத்தில் அவற்றை வைத்துவிடுங்கள்.

சில காப்புறுதி அமைப்புகள் பட்டியல் தயாரிப்பதற்கான படிவங்கள் வைத்துள்ளார்கள். அவற்றைப் பாவித்து பயனடையுங்கள். தகுந்த ஒரு காப்புறுதி முகவர் ஆலோசனையுடன் காப்புறுதியை பெறுவதுடன் வருடாவருடம், அல்லது இருவருடத்துக்கு ஒருமுறை மீளாய்வு செய்யுங்கள்.


*தமிழாக்கம்: குமார் புனிதவேல்*

senthuran.punithavel@thaiveedu.com

■ ■ ■







# வேலை செய்யும் இடங்களில் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

- என். மிலான் -

## வேலை செய்யும் இடங்களில் நீங்கள் வன்முறைகள் மற்றும் துன்புறுத்தல்களை எதிர்நோக்கு கின்றீர்களா?

எங்களில் பலர் வேலை இல்லாமல் மன உழைச்சலுக்குள் வாழுகின்றோம். இன்னும் சிலரோ வேலை தேடித் தேடி அது கிடைக்காமல் போய் சோர்வடைந்து போகின்றோம். ஆனால் மீதியாக உள்ள, தொழில் கிடைத்து தொழில் புரிந்து கொண்டிருக்கும் பலரோ தொழில் புரியுமிடங்களில் நிம்மதி இழந்து தினமும் விருப்பமின்றியே தொழில் செய்து நாட்களைக் கடக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளோம். ஒரு கணிசமான அளவினரே தாங்கள் செய்யும் தொழிலை விரும்பி முழு மனதுடன் செய்கின்றார்கள். அந்த வகையில் இன்று, வேலை கிடைத்தும் நிம்மதியைத் தொலைத்து வேலையிடங்களில் வன்முறைகளையும் துன்புறுத்தல்களையும் எதிர்நோக்கியபடியே மிகவும் மன உழைச்சலுடன் வேலை புரிபவர்களிற்கு நீங்கள் வேலை செய்யுமிடங்களில் நடைபெறக்கூடிய வன்முறைகள், துன்புறுத்தல்கள் பற்றியும் அவற்றில் இருந்து உங்களைப் பாதுகாப்பது எவ்வாறு என்பது பற்றியும் இது தொடர்பான உதவிகளை எங்கே பெறுவது என்பது பற்றியும் தொழிலாளர்களிற்கான நடவடிக்கை நிலையம் என்ன கூறுகின்றது என்று பார்ப்போம்.

## வேலை செய்யும் இடத்தில் வன்முறை மற்றும் துன்புறுத்தல் ஆகிய இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

### வேலை செய்யும் இடத்தில் வன்முறை(Violence):

நீங்கள் வேலை செய்யும் போது ஒரு மனிதர் தன் உடல் வலிமையால் உங்கள் தேகத்திற்கு தீங்கிழைப்பது இந்த வகை வன்முறையாகும். ஒரு தொழிலாளி வேலை செய்யும் போது வேலை செய்யும் இடத்தில் அவருடைய தேகத்தற்கு தீங்கிழைத்தல் அல்லது அதற்கான மிரட்டல் வார்த்தை வன்முறை என்று கருதப்படும்.

### வேலை செய்யும் இடத்தில் துன்புறுத்தல்(Harassment):

நீங்கள் ஒரு இடத்தில் வேலை செய்யும் போது ஒரு மனிதர் உங்களை கேலியும், கிண்டலும் செய்தல், பெரும் சத்தமிட்டு உங்களை பரிகாசம் செய்தல், கோபத்துடன் உங்களை பயமுறுத்துதல், உங்களை பற்றி ஆபாசமான நகைச்சுவைகளை கூறுதல் போன்றவை உங்களை கொடுமை செய்தல் ஆகும். மனித உரிமைகள் சட்டத்தின் படி இந்த வகை நடத்தையை தண்டிக்க முடியாது என்றாலும் உங்கள் மீது பாகுபாடு காட்டப்படுகிறது என்பதை நிரூபித்தால் சட்டப்படி தண்டனை கிடைக்க வழி இருக்கிறது.

### மனித உரிமைகள் ரீதியான பாகுபாடு:

இனம், நிறம், மொழி, பிறப்பிடம், வயது, பாலினம், கலப்பு திருமணம், உடல் ஊனம், திருமணம் மற்றும் குடும்ப அந்தஸ்து, மதம், குடியுரிமை மற்றும் மன்னிக்கப்பட்ட குற்றவியல் செயல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் வேலை செய்யும் இடத்தில் பாகுபாடு காட்டப்படுவதை மனித உரிமைகள் சட்டம் தடை செய்கிறது. தான் கொடுமை மற்றும் பலாத்காரம் செய்யப்படுகிறோம் என்று ஒரு தொழிலாளி உணர்ந்தால் அதுபற்றி மனித உரிமைகள் தீர்ப்பாயத்திடம் அவர் புகார் செய்யலாம். Ontario Human Rights Tribunalக்கு புகார் செய்ய சம்பவம் நடந்த தேதியிலிருந்து உங்களுக்கு ஒரு வருடம் கால அவகாசம் உண்டு.

இந்த சட்டப்படியான புதிய பாதுகாப்புகள் 2010 ஜூன் மாதத்திலிருந்து அமுலுக்கு வருகின்றன.

Ontarioவில் உள்ள அனைத்து வேலை நடக்கும் இடங்களில் உள்ள தொழிலாளர்கள் மீது காட்டப்படும் பாகுபாடு மற்றும் வன்முறை சம்பந்தமாக Occupational Health and Safety Actல் கொண்டு வரப்பட்ட மாற்றங்கள் தெளிவாக விவரிக்கின்றன. கொடுமையிலிருந்தும் மற்றும் வன்முறையிலிருந்தும். இந்த சட்டத்தின் மாறுதல்கள் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கின்றன. வேலை நடக்கும் இடத்தை பாதுகாப்புடன் வைத்திருக்க வேண்டும் என்று வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டும்.

- வேலை செய்யும் இடத்தில் நிகழ இருக்கும் வன்முறை சூழ்நிலைகளை முதலாளிகள் முன்கூட்டியே கணக்கிட்டிருக்க வேண்டும். அதற்கான தடுப்பு நடவடிக்கைகளையும் அவர்கள் தீர்மானித்திருக்க வேண்டும்.
- நீங்கள் வேலை சம்பந்தமாக சந்திக்கும் சக மனிதர் வன்முறை நடத்தை என்ற பின்னணிச் சரித்திரத்தை கொண்டிருந்தால், உங்கள் முதலாளி அவரை பற்றி உங்களிடம் முன்கூட்டியே தெரிவித்திருக்க வேண்டும். அப்போது தான் உங்கள் உடலிற்கு தீங்கு ஏற்படாமல் அவரிடமிருந்து உங்களை நீங்கள் பாதுகாத்துக் கொள்ளமுடியும்.

> பாதுகாப்புடன் இருங்கள்
> உங்களுக்கு ஏதாவது ஆபத்து வரும் என்று
> நீங்கள் உணர்ந்தால்
> உடனே காவல்துறையை துணைக்கு அழையுங்கள்.
> வேலை செய்யும் இடத்தில் நடக்கும்
> அவசரகால சம்பவங்களை எதிர்கொள்ள
> அவர்கள் மட்டுமே சரியானவர்கள்.

உங்கள் முதலாளியை இந்த சட்டம் வலியுறுத்தும். உங்கள் மீது காட்டப்படும் பாகுபாட்டை எதிர்கொள்ள நீங்கள் என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதையும் இந்தச் சட்டம் விளக்கும்.

## புதிய சட்டத்தின் கீழ், முதலாளிகள் தங்கள் நிர்வாக செயல் பற்றி சரியான விளக்கம் அளிக்க வேண்டும்.

- வேலை செய்யும் இடத்தில் காட்டப்படும் கொடுமை மற்றும் வன்முறையைத் தடுக்க சரியான கொள்கைகளும் மற்றும் செயல் திட்டங்களும் உருவாக்கப்பட வேண்டும்.
- இந்த கொள்கைகள் மற்றும் செயற்திட்டங்கள் சம்பந்தமான தகவல்கள் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.
- வேலை செய்யும் இடத்தில் காட்டப்படும் கொடுமை மற்றும் வன்முறை சம்பவங்கள் பற்றி தொழிலாளர்கள் புகார் செய்ய உதவும் வழிமுறைகள் அறிவிக்கப்பட வேண்டும்.
- துன்புறுத்தல் அல்லது வன்முறை சம்பவங்கள் பற்றி ஏதவாது புகார்கள் இருந்தால் அவற்றை புலன் விசாரணை செய்ய உதவும் வழிமுறைகள் தெரிவிக்கப்பட வேண்டும்.

## வேலை செய்யும் இடத்தில் வன்முறையை தடுக்கும் செயல் திட்டங்கள்.

- வன்முறை சம்பவம் நடந்தேறிய பின் அல்லது நடக்கும் தருவாயில் அவற்றை தடுக்க அவசர கால பாதுகாப்பு முறைகள் தீர்மானிக்கப்பட வேண்டும். உதாரணமாக அவசர கால சூழ்நிலையை சமாளிக்க உடனடியாக உதவி எப்படி வரவழைக்க

## வேலை செய்யும் இடத்தில் ஒவ்வொரு தொழிலாளரின் உடலிற்கும் தீங்கு ஏற்படாமல் பாதுகாப்பது ஒரு முதலாளி யின் கடமையாகும்.

உங்களுக்கு தீங்கிழைப்பவர் உங்கள் சக தொழிலாளியாக இல்லாமல் இருந்தாலும் நீங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

## இத்துன்புறுத்தல்கள் மற்றும் வன்முறைகளில் இருந்து உங்களை நீங்களே எப்படிப் பாதுகாத்துக் கொள்ளுவது?

- பாதுகாப்புடன் இருங்கள் உங்களுக்கு ஏதாவது ஆபத்து வரும் என்று நீங்கள் உணர்ந்தால் உடனே காவல்துறையை துணைக்கு அழையுங்கள். வேலை செய்யும் இடத்தில் நடக்கும் அவசரகால சம்பவங்களை எதிர் கொள்ள அவர்கள் மட்டுமே சரியானவர்களாக உள்ளார்கள்.
- நீங்கள் வேலை செய்யும் இடத்தில் வன்முறையால் ஏதவாது ஆபத்து உங்களுக்கு நேரிடும் என்று நீங்கள் உணர்ந்தால் Occupational Health and Safety சட்டத்தின் படி நீங்கள் வேலை செய்ய மறுக்கக் கூட முடியும். அதை காரணம் காட்டி உங்கள் முதலாளி உங்களை தண்டிக்க முடியாது. (போலீஸ் அதிகாரிகள் மற்றும் தீயணைப்பு படை அதிகாரிகள் போன்ற சில ஊழியர்கள் மட்டும் ஒரு வரையறைக்கு உட்பட்டே வேலை செய்ய முறுக்க முடியும்.)
- முதலில் உங்கள் முதலாளி அல்லது மேற்பார்வையாளரிடம் பேசி பாருங்கள். நீங்கள் பாதுகாப்புடன் வேலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியது அவர்கள் பொறுப்பு உங்கள் முதலாளி எடுத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி எழுதிவையுங்கள். பிரச்சினைக்கு அவர் சரியான தீர்வு காணவில்லை என்றால் அவரைப் பற்றி Ministry of Labourக்கு புகார் செய்யுங்கள்.

Occupational Health and Safety Actன் படி அனைத்து நடைமுறைகளையும் உங்கள் முதலாளி சரியாக கடைப் பிடிக்கிறாரா என்பதை Ministry of Labour முடிவு செய்யும். இந்த புதிய சட்ட மாற்றங்களின் கீழ் முதலாளிகள் பல விதிகளையும் மற்றும் வழிமுறைகளையும் பின்பற்ற வேண்டும்.

உங்கள் மீது காட்டப்பட்ட பாகுபாடு, கொடுமை அல்லது வன்முறை பற்றிய ஒவ்வொன்றையும் தெளிவாக எழுதி வைத்திருங்கள். பின்னர் ஒரு புகார் கொடுக்க இவை உங்களுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும். நீங்கள் வேலையை விட்டு விலக எண்ணினால், உங்களுக்கு Employment Insurance மற்றும் termination and Severance pay கிடைக்க வழிவகை செய்யும்.

## வன்முறை மற்றும் துன்புறுத்தல்களால் பாதிக்கப்படின் இது பற்றிய உதவிகளிற்கு நீங்கள் தொடர்பு கொள்ளக் கூடிய இடங்கள்.

### Worker's Action Centre:

நீங்கள் வேலை செய்யும் இடத்தில் உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கவும் மற்றும் ஒரு திட்டத்தை வகுக்கவும் தேவையான உதவிகளை பெற நீங்கள் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண் 416 531 0778 அல்லது www.workersactioncentre.org என்னும் இணையத்தளத்திலும் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். அனைத்து அழைப்புகளும் இரகசியமாக வைக்கப்படும்.

### Toronto Worker's Health and Safety Legal Clinic:

உடல் நலம் மற்றும் பாதுகாப்பு சம்பந்தமாக மேலும் கூடுதல் விபரங்கள் பெற 416-971-8832 அல்லது www.workerssafety.ca என்னும் இணையத்தளத்திற்குச் சென்று பாருங்கள்.

### Ministry of Labour Occupational Health and Safety Branch:

வேலை செய்யும் இடத்தில் உடல் நலம் மற்றும் பாதுகாப்பை பேணுதல் மற்றும் சட்டத்தின் புதிய மாற்றங்களை செயலாற்றுதல் சம்பந்தமான மேலும் கூடுதல் விபரங்களுக்கு இலவச தொலைபேசி எண் 1 800 268 8013 or www.labour.gov.on.ca/english என்னும் இணையத்தளத்தைப் பாருங்கள்.

### Human Rights Legal Support Centre:

நீங்கள் பாகுபாட்டுடன் நடத்தப்படுகிறீர்கள் என்பதை உணர்ந்தால் மனித உரிமைகள் சட்ட சேவை மையத்தின் உதவிகளை நீங்கள் நாடலாம். இலவச தொலைபேசி எண் 1-866-625-5179 அல்லது www.hrisc.on.ca என்னும் இணையத்தளத்தைப் பாருங்கள்.

### Assaulted Women's Helpline:

பெண்கள் முரட்டுத்தனமாக தாக்கப்பட்டு வன்முறைக்குள்ளாக்கப்பட்டால் தொடர்பு கொள்ளவேண்டிய பலமொழி தொலைபேசி எண் 1-866-0511.

milan@thaiveedu.com

■ ■ ■




Bedrooms: 4 / Washrooms: 4
**26 Cragg Crs Ajax**




Bedrooms: 2 / Washrooms: 2
**SCARBOROUGH**







Bedrooms: 3 / Washrooms: 2
**Finch/Leslie**




Bedrooms: 3 / Washrooms: 4
**Scarborough**




Bedrooms: 2 / Washrooms: 2
**SCARBOROUGH**




Bedrooms: 4 / Washrooms: 4
**Staines / South Of Steeles**

# Sell Your Home For Top Dollars

## Buy Your Home For Less $

## Experienced Full Time Agent

HOMELIFE HIGHER STANDARDS

NANO COMPUTER



*Homelife/Future Realty Inc.,Brokerage**

205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: (905) 201-9977 Fax: (905) 201-9229
** Independently Owned and Operated,*

**RAJ NADARAJAH**
Sales Representative
**Direct:416-333-6115**
E-mail: nanohomes@gmail.com


# காபனீர் ஒட்சைட் நச்சுவாயு

வட அமெரிக்காவில், நாம் நமது தொண்ணூறு சத வீதமான நேரத்தை வீட்டுக்குள்ளேயே கழிக்கின்றோம். அப்படி இருக்கின்ற போது, நாம் சுவாசிக்கின்ற, நமது வீட்டுக்குள் இருக்கின்ற காற்றின் தரத்தைப்பற்றி அறிந்திருக்கின்றோமா? அது சுத்தமான காற்றா கத்தான் இருக்கின்றதா?

வெளியில் உள்ள காற்றின் தரத்தைவிட வீட்டுக்குள் உள்ள காற்றுத்தான் தரம் மிகக் குறைந்தது என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வீட்டுக்குள் உள்ள அசுத்தக் காற்றில் CO என்று குறிப்பிடப்படும் காபனோர் ஒட்சைட்டும் (carbon monoxide) இருக்கின்றது. வருடாந்தம் பல நூறுபேர் இந்த காபனோர் ஒட்சைட்டினை சுவாசித்து இறந்து போகின்றார்கள். ஆயிரக்கணக்கானவர் கடுமையாகப் பாதிக்கப்பட்டு மருத்துவ உதவியை நாடவேண்டி ஏற்படுகின்றது.

காபனோர் ஒட்சைட்டு ஒரு நச்சு வாயு. இதற்கு நிறம், மணம் கிடையாது. எனவே இந்த நச்சு வாயுவின் அளவு நமது இருப்பிடங்களில் அதிகரிக்குமாயின் அதை உணர்ந்து கொள்ள முடியாது. (இதை அறிவதற்காகவே வீடுகளில் காபனோர் ஒட்சைட் monitors வைக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகின்றது).

சிறிய அளவு காபனோர் ஒட்சைட்டை ஒருவர் சுவாசித்தால் சுவாசிப்பதில் தடை ஏற்றடும். இலேசாக வயிற்றைப் புரட்டும், அத்தோடு தலையிடியும் ஏற்படும். இந்த அறிகுறிகள் காய்ச்சல், மற்றும் சில வருத்தங்களின் அறிகுறிகளாயும் இருப்பதால் காபனோர் ஒட்சைட்டை நாம் சுவாதித்துள்ளோம் என்று நினைப்பதில்லை. அதிக அளவு காபனோர் ஒட்சைட்டை சுவாசிப்பது மரணத்திற்கு இட்டுச்செல்லும்.



நாம் சுவாசிக்கும் போது எம்மை அறியாமலே உட்செல்கின்ற காபனோர் ஒட்சைட் குருதியைச் சென்றடைகின்றது. குருதியில் உள்ள ஒட்சிசனை அடித்துத் துரத்திவிட்டு, ஒட்சிசன் இருக்க வேண்டிய இடத்தில் தான் சண்டித்தனமாக உட்கார்ந்து விடுகின்றது. ஒரு நிமிட நேரத்தில் பெருந்தொகையான

> “ குருதியைச் சென்றடைகின்ற காபனோர் ஒட்சைட், குருதியில் உள்ள ஒட்சிசனை அடித்துத் துரத்திவிட்டு, ஒட்சிசன் இருக்க வேண்டிய இடத்தில் தான் சண்டித்தனமாக உட்கார்ந்து விடுகின்றது.. ”

காபனோர் ஒட்சைட் நமது சுவாசப்பை வழியாக குருதியை அடைந்துவிடும். இதனால் மூளை உட்பட ஒட்சிசன் தேவைப்படுகின்ற அனைத்துக் கலங்களுக்குமான ஒட்சிசன் விநியோகம் உடனடியாக துண்டிக்கப்படுகின்றது.

குழந்தைகள், முதியவர்கள், சுவாசப்பை மற்றும் இதய நோய் உள்ளவர்கள் மிக விரைவாக காபனோர் ஒட்சைட்டினால் பாதிக்கப்படுவார்கள். இவர்களை எல்லாம் விட தாயின் வயிற்றில் உள்ள சிசு மிகக் கடுமையான பாதிப்புக்குள்ளாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

காபனோர் ஒட்சைட்டினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு அவசரசிகிட்சைகளின் பின்னால் அதிஸ்டவசமாக ஒருவர் மீண்டு வந்தாலும், அவருக்கு சில உறுப்புகள் நிரந்தரமாக பாதிப்பு அடைந்துவிடலாம். இந்த முக்கியமான உறுப்புகள் ஒட்சிசன் அதிக அளவில் தேவைப்படுகின்ற இதயமும், மூளையுமே ஆகும். இதன் பின் வாழ்க்கை துயரம் நிறைந்ததாயே அமைந்து விடும் என்று சொல்லவும் வேண்டுமா?

### எவ்வாறு இந்த நச்சு வாயு வீட்டுக்குள் வந்து சேர்க்கின்றது

எரிக்கின்ற எல்லா இடங்களிலும் பக்க விளைபொருளாக காபனோர் ஒட்சைட் உருவாகின்றது. நீங்கள் குப்பையை எரித்தாலும் சரி விறகை எரித்தாலும் அல்லது சிகரட், ஒயில், GAS, மண்ணெண்ணெய் என்று எதை எரித்தாலும் இந்த காபனோர் ஒட்சைட் உருவாகின்றது.

எரிகின்ற போது ஒரு காபன் இரண்டு ஒட்சிசனுடன் இணைந்து $CO_2$ உருவாகின்றது. ஒரு சில காபன்களுக்கு ஒட்சிசன் பற்றாக்குறை ஏற்படும். இதனால் ஒரு காபன் ஒரு ஒட்சிசனுடன் இணைந்து CO என்ற இந்த காபனோர் ஒட்சைட் உருவாகின்றது.

வட அமெரிக்காவில் நமது வீட்டுக்குள்ளேயே இவ்வாறு ‘எரித்தல்’ வேலையை செய்கின்ற பல உபகரணங்களை நமது தேவைக்காக வைத்துள்ளோம். Furnaces, ranges, oven, water heaters, dryers, fireplaces என்று இவற்றைச் சொல்லிக் கொண்டே போகலாம். இவை எரிகின்ற போது இவற்றிற்குத் தேவையான ஒட்சிசன் போதுமான அளவு செல்லாமல், ஏதாவது ஒரு காரணத்தால் தடைப்பட்டால் அங்கு பிரமாண்டமான அளவு காபனோர் ஒட்சைட் உருவாகிவிடுகின்றது. இந்நிலைமை பல மரணங்களுக்கும், பாதிப்புகளுக்கும் காரண மாகின்றது.

ஒரு மில்லியனுக்கு, 50ppm என்ற அளவில் காபனோர் ஒட்சைட் காற்றில் இருந்தால் அது பாதுகாப்பான நிலையாகும். 200 ppm இருந்தால் அந்தக் காற்றை 2-3 மணி நேரம் சுவாசிப்பவருக்கு தலையிடி ஆரம்பமாகும். 400 ppm இருக்கின்றபோது இந்த தலையிடி 1-2 மணிநேரத்திலேயே ஆரம்பமாகிவிடும். 800ppm இருக்கின்றபோது 45 நிமிடத்தில் வாந்தி ஏற்படும். இரண்டு மணிநேரத்தில் மரணம் நிகழலாம்.

### காபனோர் ஒட்சைட்டினால் ஒருவர் பாதிக்கப்பட்டுள்ளார் என்றால் என்ன செய்யலாம்?

உடனடியாக அவரை அந்த இடத்தில் இருந்து அப்புறப்படுத்தி வெளிக்காற்று படும் இடத்திற்கு கொண்டு செல்லவேண்டும். அதே சமயம் எந்தவித தாமதும் இன்றி அவசர இலக்கமான 911 இலக்கத்திற்கு தகவல் கொடுக்க வேண்டும்.

வீட்டில் காபனோர் ஒட்சைட்டைடால் அபாயம் ஏற்படாமல் இருக்கு சில முன் கூட்டிய நடவடிக்கைகளை எடுப்பதுதான் சரியான வழியாக இருக்கும்.

காபனோர் ஒட்சைட்டை உருவாக்கக் கூடிய உபகரணங்களான Furnaces, water heaters என்பனவற்றை நல்ல நிலைமையில் இருக்கக் கூடியதாக பழுதுபார்த்துக் கொள்ள வேண்டும். தகுதிஉடைய ஒருவரைக் கொண்டு (Qualified technician) வருடாந்தம்




இவற்றை inspect செய்து கொள்வது மிக நல்லது. காபனோர் ஒட்சைட் monitor வீட்டின் எல்லாத் தளத்திலும் பொருத்த வேண்டும். இதனால் காபனோர் ஒட்சைட்டின் அளவு வீட்டினுள் அதிகரிக்கத் தொடங்கியதுமே மணி (alarms) அடித்து நம்மை எச்சரிக்கை செய்து விடும்.

பூட்டிய காராஜ் இனுள் காரை இயங்கு நிலையில் வைத்திருக்கக் கூடாது. காரில் இருந்து பெருமளவு காபனோர் ஒட்சைட் உருவாகும். அண்மையில் ஒரு தாயும், மகனும் தமது வீட்டில் இறந்து போய் கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மகன் தனது காரின் இயந்திரத்தின் இயக்கத்தை நிறுத்தாது, integral garageல் நிறுத்தியிருந்தார். இந்தக் காரில் இருந்து வந்த காபனோர் ஒட்சைட்டினாலேயே இவர்கள் இருவரும் இறந்து போயிருந்தனர்.

■ ■ ■

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

*E-mail: info@thaiveedu.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

www.noolaham.org
noolahamfoundation@gmail.com
நூலகம்

# மலைநாட்டு எழுத்தாளர் மன்றம்

## கனடாவில் இருந்து வெளிவரும் தாய்வீடு மாத இதழுடன் இணைந்து நடத்தும்

### என்.எஸ்.எம்.ராமையா நினைவு சிறுகதை-கவிதை போட்டி

மலைநாட்டு எழுத்தாளர் மன்றம், அமரத்துவம் அடைந்த மலையக எழுத்தாளர்கள் / கலைஞர்களின் ஞாபகார்த்தமாக நடத்தும் சிறுகதை மற்றும் கவிதைப் போட்டிகள், இம்முறை மலையக சிறுகதை முன்னோடிகளுள் ஒருவரான அமரர் என்.எஸ்.எம்.ராமையா அவர்களை நினைவு கூர்ந்து நடைபெறுகின்றது.

மலையக எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் மலைநாட்டு எழுத்தாளர் மன்றம், கனடா – தாய்வீடு மாத இதழுடன் இணைந்து நடத்தும் இப்போட்டிக்கான ஆக்கங்கள் மலையக இலக்கிய தளத்திலிருந்து கோரப்படுகின்றன.

போட்டிக்கான விதிமுறைகள்

1. இலங்கையில் எப்பாகத்திலும் வசிக்கும் மலையக எழுத்தாளர்கள் போட்டிகளில் பங்குபற்றலாம்.
2. ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட ஆக்கங்களை அனுப்பலாம். ஆனால் தெரிவு செய்யப்படும் ஏதேனும் ஓர் ஆக்கத்துக்கு மட்டுமே பரிசு வழங்கப்படும்.
3. படைப்புகள் மலையக வாழ்வினை மையமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. கவிதைகள் - மரபுக்கவிதை, புதுக்கவிதை என எந்த வடிவிலும் 40 முதல் 60 வரிகளுக்குள் அமைதல் வேண்டும்.
5. ஆக்கங்கள் தாளின் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதப்படுதல் வேண்டும்.
6. படைப்பாளர்கள் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

**முடிவு திகதி: 2012 ஆகஸ்ட் 31**

### பரிசு விபரம்

**சிறுகதை**

முதல் பரிசு: 10,000 ரூபா
இரண்டாம் பரிசு: 7,500 ரூபா
மூன்றாம் பரிசு: 5,000 ரூபா
(மேலும் 10 சிறுகதைகளுக்கு 2,000 ரூபா வீதம் ஆறுதல் பரிசு)

**கவிதை**

முதல் பரிசு: 5,000 ரூபா
இரண்டாம் பரிசு: 4,500 ரூபா
மூன்றாம் பரிசு: 3,000 ரூபா
(மேலும் 10 கவிதைகளுக்கு 1,000 ரூபா வீதம் ஆறுதல் பரிசு)

**ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி**

இணைச் செயலாளர்
மலைநாட்டு எழுத்தாளர் மன்றம்,
152, 1/5, ஹல்ஸ்டொப் வீதி,
கொழும்பு 12
மின்னஞ்சல்: memmandram@yahoo.com

தாய் வீடு THAIVEEDU HOME & LIVING
E-mail: info@thaiveedu.com
Tel: 416 857 6406.
Fax: 416 849 0594

**தொடர்புகளுக்கு:**

தெளிவத்தை ஜோசப் - தலைவர் - 077-0248366
இணைச் செயலாளர்கள் இரா. சடகோபன் - 0777-679231 ஜி.சேனாதிராஜா – 0777-708948

**மலைநாட்டு எழுத்தாளர் மன்றம்**


BUYING OR SELLING



3 Bed Rooms, 3 Wash Rooms
(427/Burnhamthorpe)
Stacked Townhouse



Luxury Condo - 2 Bed Rooms
(Mccowan/401)
Close To Scarborough Town Centre




2+1 Bed Rooms, 2 Wash Rooms
Condo Townhouse 2-Storey
Walk in Distance University fo Toronto (UFT)



4+2 Bed Rooms,4 Wash Rooms
(Morningside/Old Finch)
Detached 2-Storey




Home Life/Future Realty Inc, Brokerage*
Highest Standard Agents.... Highest Results!...
7-205 Eastvale Dr. Markham, ON L3S 4N8
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
Raja V.S. Rajagopal
Sales Representative
Dir : 416-727-8647
HOMELIFE Higher Standards
MLS
* Independently Owned and Operated, REALTOR
Attention Seller... Sell your home with confidence
ACT NOW... FLAT FEE FULL SERVICE MLS/TREB
Some Condition Apply


BUYING OR SELLING
HAS NEVER BEEN THIS EASY
Sell your home FAST for TOP DOLLARS at very flexible listing commission
Or simply allow me to find your DREAM HOUSE at no COST
TOP 5% in CANADA 2010, 2011
MAPLE
Jane / Mj. Mackenzie
SOLD OVER ASKING!
$ 489,000 Bed: 3, Baths: 3, detached home
BRAMPTON
Hwy 50 / Cottrelle Blvd
$ 429,000 Bed: 3, Baths: 3, close to 2000 sqf
BRADFORD
8th Line / Gardiner Dr
$ 399,000 Bed: 3, Baths: 3, detached home
BRAMPTON
Sandalwood / Queen Mary
$ 419,000 Bed: 4, Baths: 3, detached home
MAPLE
Jane / Mj. Mackenzie
$ 649,000 Bed: 4, Baths: 3, 2300 sqf, fihed basemt, detached
GEORGE TOWN
Argyll Rd / 8th Line
BANK SALE
$ 489,900 Bed: 4+1, Baths: 4 detached home
MARKHAM
9th line / 14th Ave
$ 629,900 Bed: 4, Baths: 3 detached home
VAUGHAN
Weston / Rutherford
$ 634,900 Bed: 4, Baths: 4, 2500 sqf, detached home
BRAMPTON
Gore Rd / Hwy 7
FOR LEASE
$ 2900 a month
3 acres that is just breathtaking!
TORONTO
Hwy 427 / Hwy 7 (Conservation)
$ 1,699,900 Bed: 9+1, Baths: 8, 4000 sqf, 2 custom homes, 3 acre lot
MARKHAM
9th line / 14th Ave
$ 699,000
Bed: 4, Baths: 4, 2800 sqf
BRAMPTON
Hwy 50 / Hwy 7
$ 259,900 Bed: 2, Baths: 2 new condo
Ganesh Thangarajah
Real Estate Broker
416-994-9046 / 416-298-3200
FREE HOME EVALUATION
FREE HOME STAGING
FREE PHOTOGRAPHY
HOMELIFE HIGHER STANDARDS
HomeLife Today Realty Ltd., Brokerage
31 Progress Avenue, Suite 210, Toronto, Ontario. M1P 4S6
*Independently Owned and Operated, Realtor




## 9th Line / Hoover Park



**$388,888**

Semi-Detached 2 Storey, 3 Bedrooms, 3 Washrooms, Walk To Transit, Shopping, Hardwood Floors On Main Level


## Eglinton / Victoria Pk



**$429,900**

Twnhouse 3-Storey, 3 Bedrooms, 4 Washrooms, Spacious, Clean, Updated, Freshly Painted, Freehold Townhouse


## Mccowan / Finch



**$438,000**

Link 2 Storey, 3+2 Bedrooms, 3 Washrooms, 2400 Sq Ft, Renovated, Friendly Neibourhood! New Morden Kitchen


## Harwood / 401



**$439,000**

Detached 2-Storey, 4+3 Bedrooms, 4 Washrooms, Modern Open Concept, Hardwood Floors, Finished Basement

## Rossland / Salem



**$479,900**

Detached 2 Storey, 4 Bedrooms, 3 Washrooms, Mn Flr 9Ft Ceilg,Chair Rails & Shutters,Re-Decor'd/Painted


## Markham/Bur Oak



**$488,900**

Att/Row/Twnhouse 2 Storey, 3 Bedrooms, 3 Washrooms, Brand New Freehold Townhouse With Double Garage


## Derry / Scott



**$524,900**

Detached 2 Storey, 4 Bedrooms, 3 Washrooms, Absolutely Gorgeous! Mattamy Built, In Hawthorne Village

## Eglinton / O'connor



**$539,900**

Att/Row/Twnhouse 3-Storey, 3 Bedrooms, 3 Washrooms, Brand New Home Under Construction, 1,830 Sq.Ft

## 16th Ave / 19th Line



**$549,900**

Detached 2 Storey, 4 Bedrooms, 3 Washrooms, Finish Basement,Top Of The Line Stainless Steel Appliances,Oak Staircase


## Pleasant Ridge / Summeridge



**$574,900**

Att/Row/Twnhouse 2 Storey, 3 Bedrooms, 3 Washrooms, Bright And Spacious, Upgraded Open Concept Kitchen


## Taunton / Westney



**$599,900**

Detached 2 Storey, 4 Bedrooms, 4 Washrooms, Absolutely Beautiful, 6 Years Old, 3080 Sq', 2 Oak Staircases, 9' Ceilings

## Bathurst / Davis



**$609,000**

Detached 2 Storey, 4 Bedrooms, 3 Washrooms, Bright,Cozy Home, Stained Hardwood Floor, Walk To Mall

# Yathavann Selvarajah

Sales Representative



RE/MAX

**RE/MAX CROSSROADS REALTY INC.,**

BROKERAGE

Never too busy, for any of your Referrals!

**416-992-4474** (24 hrs)

**416-491-4002** (Office)

www.buzzmetoronto.com

Not intended to solicit properties currently listed for sale




## Heart of India

**11 NIGHTS AND 12 DAYS**

This tour takes you to the richest in heritage and culture cities of India. It includes visit to one of the Seven Wonders of the World 'The Taj Mahal' in Agra, to the holy city of Varanasi and also to the architecturally defined city of Jaipur. The cities are situated at comfortable distances well connected with varied modes of transport and are laced with numerous options for accommodation.

**Delhi / Jaipur/ Agra/ Khajuraho/ Allahabad Varanasi and much more**

**CDN 2250.00**

## Western Canada Tour

**August 18 to 31, 2012**

**Canada:** Rocky Mountain/ Banff Manitoba/Saskatchewan/ Alberta British Colombia

**USA :** Washington / Dakota / Minnesota Wisconsin / Chicago Michigan and more

**CDN 1950.00**

## Hawai Tour

**November 2012**

Kauai Island/ Oahui Island Hawai Island and other attractions in Hawai Islands.

**CDN 2400.00**

## Eastern Asia Tour

**Indonesia /Thailand/Cambodia Malaysia**

East Asia offers its guests new lessons, adventures and extreme sports to refresh the mind, body and soul. East Asia Tour Packages offers a wide range of tour packages and a choice of luxury hotels. All are at your convenience. Discover East Asia thoroughly and learn East Asian people's way of living, traditions, cultures and customs.

**CDN 4400.00**

ALL ABOVE FARES ARE SUBJECT TO AVAILABILITY

# Serandib Travel 1

*Your satisfaction is our success*

SUITE 207- 7 EASTVALE DR, MARKHAM, ON L3S 4N8
**Tel: 416 750-0009, 905-472-7500**
618 GOYEAU STREET #2A WINDSOR **Tel: 519-977-1234**
Montreal : 514 448 1389, Calgary : 403 770 9647, Ottawa: 613 482 6590,
Vancouver : 604 625 0495, Mississauga : 905 564 7564

New York : 716-408-0342
Los Angeles : 213-254-0119
New Jersey : 732-783-1513
Washington : 202-517-0139

Honolulu : 808-457-1730
Miami : 305-625-4102
Chicago : 312-625-1420
Detroit : 313-263-0610

CHENNAI
23 NOOR VEERA SAMY LANE NUNGAMBAKKAM CHENNAI 600 034. Tel: 044-43596232 044-28266233

Email: info@serandibtravel.com Web: www.serandibtravel.com

SriLankan Air India Emirates Etihad British Airways Qatar Jet Airways Gulf Air Kuwait Airways IATA tico.ca

# எரிபொருட்(Gas) - செலவைச் சேமிப்பதற்கான சில குறிப்புகள்

**பெற்றோல் (Gas) விலைஏற்றம் பல வகையிலும் எம்மைப் பாதிக்கத்தான் செய்கின்றது. இந்த விலை ஏற்றத்திற்குள்ளும் எப்படி வாகனம் வைத்திருப்போர் எரிபொருள் விரையத்தைத் தடுக்கலாம் என்பதைப்பற்றிய சில தகவல்களைப் பார்ப்போம்.**

- வேகவரம்புடன் (Speed limit) காரைச் செலுத்துங்கள். 1 மணித்தியாலத்திற்கு 55 மைல் வேகத்தில் செல்வதை விட 1 மணித்தியாலத்திற்கு 70 மைல் வேகத்தில் செல்லும்போது கார்கள் 20% அதிக எரிபொருளைப் பயன்படுத்துகின்றன.

- குறைந்த கியரில் (Gear) அதிக வேகமாக ஓடிச் செல்வதைத் தவிருங்கள். பொருத்தமற்ற கியரில் அதிக வேகத்தில் ஓடிச் செல்வது எரிபொருள் வினைத்திறனை (Fuel efficiency) 40%தால் குறைக்கும்.

- குளிரூட்டியை (Air condition) பயன்படுத்துவதை கூடுமானவரை தவிருங்கள். குளிரூட்டியையானது எரிபொருள் விரையத்தை 10% இலிருந்து 20% ஆல் கூட்டும்.

- அதிக வேகத்தில் செல்லும்போது யன்னல்களைத் திறக்க வேண்டாம். பெருந்தெருவில் (Highway) செல்லும்போது யன்னல்கள் திறந்திருந்தால் எரிபொருள் வினைத்திறனை இது 10%தால் குறைக்கும். காற்றோட்ட முறைமையை (Ventilation system) பயன்படுத்துவது அதிக சிறந்ததாகும்.

- வாயு (Gas) விலை குறைவாக உள்ள இடத்தை தேடிச் செல்லுங்கள். ஆனால், சிறந்த விலையைப் பெறுமுகமாக நீங்கள் செல்லும் பாதையை விட்டு அதிக தூரம் விலகிச் செல்ல வேண்டாம். ஒரு சில சதங்களைச் சேமிப்பதற்காக நீங்கள் நீண்ட தூரம் செல்லும்போது, குறைந்த வாயு விலை மூலம் பணத்தை சேமிப்பதை விட அதிக பணத்தை கார் ஓடுவதற்காக செலவு செய்ய நேரிடும்.

- உங்கள் பிரதேசத்தில் குறைந்த வாயு விலையைக் கண்டறிவதற்காக கார் ஓடிச் செல்வதற்குப் பதிலாக இணையத் தளத்தில் தேடுங்கள். www.gasbuddy.com போன்ற இணையத் தளங்கள் மூலம் இலகுவாக நீங்கள் குறைந்த விலையுள்ள இடங்களைக் கண்டறியலாம்.

- மிகவும் சுறுசுறுப்பாக இயங்கும் எரிபொருள் நிலையத்திலிருந்து வாயுவைக் கொள்வனவு செய்வது சிறந்ததாகும். வெளியே எடுக்கப்படாது தாங்கிகளில் அதிக காலத்திற்கு வாயு இருக்கும் போது மாசடைந்து அதன் வினைத்திறன் குறைந்ததாகி விடும். புத்தம் புதிதான வாயு மாசடைவது குறைவாக இருப்பதுடன் நீங்கள் கொடுக்கும் பணத்திற்கு ஏற்றதான அதிக சக்தியை வழங்குவதை உறுதி செய்யும்.

- எரிபொருள் தாங்கி நிலையத்தின் தரைக் கீழ் தாங்கிகள் அப்போது தான் நிரப்பப்பட்டிருக்குமாயின் அங்கிருந்து வாயுவைப் பெறுவதைத் தவிருங்கள். தாங்கிகள் நிரப்பப்படும்போது கீழிருக்கும் அடையல் பொருட்கள் மேலே கிளம்பியிருக்குமாதலால், அவை உங்கள் எரிபொருள் நிரப்பியின் வடிகட்டியை அடைப்பதுடன் கார் ஓடும் வினைத்திறனையும் (Efficiency) குறைக்கும்.

- வாயுவை அதிகாலையில் அல்லது இரவில் வாங்குங்கள். (வெளியே குளிரான வானிலை காணப்படும்போது,) குளிரான வானிலையின்போது அதிக அடர்த்தியுடையதாக இருக்கும். வாயு பம்பிகள் (Gas pumps) எரிபொருளின் கனவளவை (Volume of fuel) அளவிடுமே தவிர அடர்த்தியை அளவிடாது. இதனால் வெளியே வானிலை வெப்பமாக இருக்கும்போது வாங்குவதை விட குளிரான வானிலையின்போது வாயுவை வாங்கும்போது நீங்கள் கொடுக்கும் பணத்துடன் ஒப்பிடுகையில் அதிக தூரம் ஓடக்கூடியதாக இருக்கும்.

- ஒவ்வொரு மாதமும் உங்கள் காரின் ரயரின் அழுத்தத்தை (Tire pressure) பரிசோதிப்பதற்கு சிறிது நேரம் ஒதுக்குங்கள். காற்று குறைந்து போன ரயர்கள் எரிபொருளைச் சிறப்பாகப் பயன்படுத்தும் வினைத்திறனைக் குறைக்கின்றன. காற்று குறைவதால் ரயரின் நிறை குறையும் ஒவ்வொரு இறாத்தலின்போதும் எரிபொருள் வினைத்திறன் 2%தால் குறைகின்றது. அதேவேளை ரயர் தேய்வடைவதற்கும் வழிவகுப்பதால் ரயரின் ஆயுட்காலம் குறைவடைவதற்கும் காரணமாகின்றது.



- சரியான ரயர் அழுத்தத்தை அறிவதற்கு ரயர் வாங்கிய இடத்தின் ரயருக்கான கையேட்டை வைத்திருங்கள். ரயரின் பக்கச்சுவரில் அச்சடிக்கப்பட்டிருக்கும் அழுத்தமானது ரயர் எவ்வளவு வளியை பாதுகாப்பாக கொள்ளக்கூடும் என்பதைக் குறிக்கும். ஆனால் சாதாரண பாவனைக்கு எவ்வளவு காற்று ரயரினுள் இருக்க வேண்டும் என்பதை இது குறிக்காது.

- வெளியே வானிலை குளிராக இருக்கும் போது ரயரின் அழுத்தத்தை பரிசோதியுங்கள். கார் இரவுமுழுவதும் ஓய்வில் இருந்த பின்பு காலையில் பரிசோதிப்பதே சிறந்த நேரமாகும். ஓர் எரிபொருள் நிலையத்திற்கு ஒரு சில மைல்கள் கார் ஓடிச் சென்றாலும் ரயரினுள் வெப்பத்தை இது அதிகரிப்பதுடன் ரயர் அழுத்தத்தை போலியான முறையில் அதிகரித்துக் காட்டும்.

- Car racks மற்றும் ஏனைய அம்சங்கள் பயன்படுத்தப்படாதபோது காரினுள் காற்றோட்டத்தைக் குறைக்கும். அவை பயன்படுத்தப்படும்போது காரின் எரிபொருள் வினைத்திறனைக் குறைக்கும்.

- எரிபொருள் வினைத்திறனை அதிகரிப்பதற்கு பெருந்தெருவில் (Highway) ஓர் உறுதியான வேகத்தை பேணுவதற்கு Cruise controlஐப் பயன்படுத்துங்கள்.

- சீரற்ற பாதைகளைப் பயன்படுத்துவதைத் தவிருங்கள். அழுக்கு, கிரவல் நிறைந்த பாதைகள் எரிபொருள் சிக்கனத்தை 30%தால் குறைக்கும்.

- கார் எஞ்சினை (Engine) இயக்கி விட்டு ஓடாது வெறுமனே வைத்திருக்க வேண்டாம். குளிரான காலையில் கார் ஓட முன்பாக எஞ்சினை இயக்கி விட்டு 30 செகண்டுக்கு மேல் வைத்திருக்க வேண்டாம். புதிய கார்கள் உடனடியாக ஓடக்கூடியதாக வடிவமைக்கப்படுவதுடன் காரை இயக்கியபடி ஓடாது வைத்திருத்தல் வாயு வீணாவதற்கு வழிவகுக்கும். சுற்றுச் சூழலும் மாசடையும்.

- காத்திருக்கும்போது 45 செகண்டுக்கு மேலாக எஞ்சினை ஓடவிடுவதை விட எஞ்சினை நிறுத்திவிட்டு பின்னர் திரும்பவும் இயக்குவது மிகவும் வினைத்திறனானதாகும்.

- உங்கள் வாகனத்தில் இருந்து மேலதிக பாரங்களை அகற்றுங்கள். அநேகமானோர் தமது காரை பொருட்களைச் மேிக்கும் இடமாக பயன்படுத்துவதன் மூலம் அநாவசியமாக காரின் நிறையை அதிகரிக்கச் செய்கிறார்கள். இந்த அநாவசிய நிறை காரின் எரிபொருள் வினைத்திறனைக் குறைக்கும்.

- வேகத்தை அதிகரிக்கும்போது மென்மையாக அதிகரியுங்கள். அதேபோல் படிப்படியாக வேகத்தை குறையுங்கள். ஓடிக்கொண்டிருக்கும் போது நிறுத்தங்களைத் தவிருங்கள். திடீரென வேகத்தை அதிகரித்தல், திடீரென நிறுத்துதல் என்பன எரிபொருளை வீணாக்கும் வழிகளாகும்.

- மிகவும் நெருக்கடியான போக்குவரத்து நேரங்களின்போது, நீங்கள் அடிக்கடி நிறுத்தி நிறுத்தி செல்ல வேண்டியிருக்கும் என்பதால் இத்தகைய சந்தர்ப்பங்களில் பயணம் செய்வதைத் தவிருங்கள். நிறுத்தி நிறுத்தி செல்ல வேண்டிய இடங்களில் ஊர்ந்து மெதுவாகச் செல்லும் வழிமுறையைப் பின்பற்றுங்கள்.

- மலைப்பகுதிகள் அல்லது சரிவான சாய்வுகளை அண்மிக்கும் போது, உயரமான பகுதி வருமுன்பே வேகத்தை அதிகரியுங்கள். சாய்வின் மீது வேகத்தை அதிகரிப்பது அதிக வாயு செலவாவதற்கு வழி வகுக்கும்.

- ஒயில் (Oil), வடிகட்டிகள் (Filter) ஆகியவற்றிற்கு சிறப்பான கவனம் கொடுத்து உங்கள் காரை ஒழுங்காக Service செய்யுங்கள். காற்று வடிகட்டிகள் (Air filter) அடைபட்டிருந்தால் வளி தடைபடுவதால் எரிபொருள் அதிகளவில் வீணாவதற்கு வழிவகுக்கும்.

- உங்கள் கார், எரிபொருளை எவ்வளவு வினைத்திறனாக பயன்படுத்துகின்றது என்பதை காலத்திற்குக் காலம் கணக்கிட்டுப் பாருங்கள். எரிபொருள் வினைத்திறன் இழக்கப்படுதல்,பொறியியல் ரீதியான பிரச்சனைகள் இருப்பதற்கான அறிகுறியாகும்.

- அநேகமான கார்களுக்கு Octane வாயுவைப் பயன்படுத்தல் வீணானதாகும். Regular unleaded (கிட்டத்தட்ட 87 Octane அளவினதாக இருக்கும்) ஆனது விலை குறைவானதாக இருப்பதுடன் நீங்கள் வாங்க வேண்டியதும் இதுவேயாகும். உங்கள் கார் எஞ்சின் Regular unleaded எரிபொருளைப் பயன்படுத்தும்போது தகராறு செய்தால் மட்டுமே நடுத்தர அல்லது உயர் Octane gasஐ வாங்குங்கள்.

- கூடுமானவரை Gasoholஐ வாங்க வேண்டாம். Gasohol என்பது Gas உம் Ethanol உம் சேர்ந்த கலவையாகும் Ethanol என்பது தானியங்களில் இருந்து பெறப்படும் மதுசாரம் ஆகும். Gasohol காரிற்கு பயன்படுத்துவதன் மூலம் விவசாயிகட்கு உதவி செய்வதற்கும் மாசடைதலைக் கட்டுப்படுத்துவதற்குமான வழியாக இது கருதப்படுகின்றது. இதிலுள்ள பிரச்சனை யாதெனில், Gasoline இன் சக்தியில் 2/3 பங்கை மட்டுமே Ethanol கொண்டிருக்கிறது. அதாவது ஒரேயளவு தூரத்திற்குச் செல்வதற்கு Gasohol அதிக வாயுவைப் பயன்படுத்த வழிவகுக்கின்றது.

- வீட்டிற்கு கிட்ட உள்ள இடங்கட்கு நடந்து செல்ல முயற்சியுங்கள். இது வாயுவிற்குச் செலவாகும் பணத்தினைச் சேமிக்க உதவுவதுடன், உங்களுக்கும் ஆரோக்கியமான உடற்பயிற்சி கிடைக்கச் செய்யும்.

- நீங்கள் கடைகளுக்கு அல்லது வெளியே வேறு அலுவல்கட்காகச் செல்லும்போது பலதடவைகளாக வெளியே செல்லாது, எல்லாவற்றையும் ஒரே தடவையில் செய்து முடிக்கக் கூடியதாக திட்டமிடுங்கள். இதன்மூலம் வாயுவை மட்டுமன்றி உங்கள் நேரத்தையும் சேமிக்க முடியும்.

- பலர் ஒன்றாக பயணம் செய்யும் போக்குவரத்து முறைமைகளை (உதாரணமாக Car Pooling, bus) கூடுதலாகப் பயன்படுத்துவதன் மூலம், வாயுவைப் பயன்படுத்துவதைக் குறைக்கலாம். இவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் கார் காப்புறுதியில் ஓர் கழிவையும் நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

- எரிபொருள் நிலையத்தில் வாயுவை நிரப்பி முடிந்ததும், Gas pump nozzleஐ 180 பாகை வரை திருப்பி மூடுங்கள். இதன் மூலம் கிட்டத்தட்ட 1/2 லீற்றர் Gasoline உங்கள் தாங்கியினுள் சேரும். இவ்வாறு நீங்கள் மூடாவிடின் இதேயளவு வெளியில் சிந்தப்படவோ அல்லது அடுத்த வாடிக்கையாளருக்கோ செல்லும்.

- உங்கள் ரயர்கள் சீரற்று தேய்ந்திருக்கிறதா என அடிக்கடி சரிபாருங்கள்.

- பிரேக்கில் உங்கள் காலை எப்போதும் வைத்திருக்க வேண்டாம். சிலர் கார் ஓடும்போது பிரேக்கில் மெதுவாக காலை வைத்திருப்பது ஓர் பழக்கமாகும். இது கார் இழுபட்டு (Drag) செல்வதற்கு வழி வகுப்பதுடன், வாயு அதிகளவில் செலவாவதற்கும் உங்கள் பிரேக்குகள் அதி விரைவில் தேய்வடையவும் வழிவகுக்கும்.

- அடுத்தமுறை ரயர் வாங்கும்போது Standard tires இற்குப் பதிலாக Radial tireகளை வாங்குங்கள். இவை (சரியான முறையில் காற்றடிக்கப்பட்டிருக்கும்போது) உங்கள் எரிபொருள் கட்டணத்தை 2% - 3%மாக குறைக்கும்.

■ ■ ■

# "பொருள் தேடும் பூமியில்...."



சிவவதனி
பிரபாகரன்

வாழ்க்கை ஒரு விரித்த சாகரம். அந்த சாகரத்தின் சில துளிகளை மட்டும் நாம் எம் வாழ்நாளில் சுவைத்துவிட்டு வாழ்வைப் பற்றி 'எல்லாமே எமக்குத் தெரியும்' என தற்பெருமையோடு மார்தட்டுகின்றோம். 'கற்றது கையளவு கல்லாதது உலகளவு' என்ற பெரும் உண்மையை நாம் உணர மறுக்கின்றோம். வாழ்வை சுமையாக நினைப்பவர் எம்மில் பலர். சுகமாக நினைப்பவரோ மிகச் சிலர். சுகமோ சுமையோ வாழ்வு எம் கையில் எமக்காய் தரப்பட்டது என்பதே உண்மை. இன்பமோ துன்பமோ வாழ்வை நிறைவாக்கி வாழ்வது எம் கையிலேயே உள்ளது. வாழ்வில் நம் எதிரில் வரும் தடைகள் எத்தகையவையாக இருந்தாலும் அவற்றை தடையறுத்து வாழ்ந்து காட்ட வேண்டும். இதையே வாழ்வியல் தத்துவப்படி 'வெற்றிகரமாக வாழும் கலை' என்கின்றனர். ஆம்! வாழ்தல் ஒரு கலை தான்! அதனை எந்த நிலையிலும் இரசித்து சவாலாக எண்ணி வாழத் தெரிந்தவர்களுக்கு மட்டுமே!

மனித வாழ்வு மாற்றங்கள் நிறைந்தது. சில சமயங்களில் ஏமாற்றங்களும் வருவதுண்டு. வாழ்வில், தானாகவே நடைபெறும் மாற்றங்கள் ஒரு புறம்... சக மனிதர்களால் ஏற்படும் மாற்றங்கள் ஒருபுறம். ஆனால், எது மாறுகிறதோ இல்லையோ வாழ்வில் மாறாத ஒன்றாக 'மாற்றம்' மட்டுமே இருக்கின்றது.

உலகில் வாழும் அனைத்து மனிதர்களையும் அவர்களைச் சுற்றி வாழும் மனிதர்கள் ஏதோ ஒரு வகையில் பாதிக்கின்றனர். மனிதன் மனிதனாலேயே உயர்கின்றான். சக மனிதனாலேயே சிலசமயங்களில் தாழ்கின்றான். வீழ்ச்சியை தாழ்வாக எண்ண வைப்பதும் உயர்ச்சியை உயர்வாக எண்ண வைப்பதும் எண்ணங்களின் பாங்கில் தங்கி உள்ளன. ஒவ்வொரு மனிதனின் எண்ணங்களும் தனித்தன்மை வாய்ந்தவை. அந்த தனித்தன்மைகள் மானுட மேம்பாட்டுக்கு பயன்படும் வகையில் மேம்பட வேண்டும்.

எல்லா உயிர்களும் இவ்வுலகில் இன்பம் அடைதல் இயற்கை. இன்பத்தை தேடும் மனிதனையே துன்பமும் துரத்துகின்றது. வாழ்வியல் இன்பங்கள் யாவுமே இனிப்பூட்டப்பட்ட துன்பங்கள் தான் என்றாலும் அந்த துன்பச் சுமைகளை விரும்பி சுமக்கும் மனிதனுக்கு அந்த சுமைகள் யாவும் இன்பச் சுமைகளாகவே தெரிகின்றன. இதனால் மனிதன் வரவுள்ள துயர் குறித்த கவலையேதும் இன்றி மேன்மேலும் வாழ்வியல் இன்பங்களை தேடித் தேடி இன்ப துன்ப சுழலுக்குள் சிக்கி தவித்து வெளிவர வழி தெரியாமல் தவித்து இறுதியில் துன்பச் சாகரத்தில் மூழ்கிப் போகின்றான். வாழ்க்கைக் கடலுள் முத்துக்குளித்து அவன் தேடும் இன்பம் கையில் கிடைக்கையில் அதுவரை பட்ட துன்பங்களை எல்லாம் மறந்து தான் தேடிப் பெற்ற இன்பத்தினை போற்றி மகிழ்கின்றான். ஆனால் தேடும் இன்பம் கிடைக்காத போதோ துயரங்கள் அவனை பல மடங்காகி பயமுறுத்தி வருத்துகின்றன. இதனால் உள்ளத்தால் மிகவும் சோர்வுற்று சுருண்டு போகின்றன். வாழ்வியல் இன்ப துன்பங்கள் சக்கரமாய் சுழலும் தன்மை கொண்டவை. ஆனால் வாழ்வின் மெய்பொருள் தேடும் இன்பமோ இத்தகைய துயரச் சகாரத்துள் எதிர்நீச்சலிட்டு பெறப்படுவது அல்ல. அது நிலையானது. நித்தியமானது!

வாழ்வே பொருள் தேடும் போராட்டம் தானே? 'பொருள்' என்றால் எல்லோரும் எண்ணி விடுவது 'பணம்' என்பதையே. ஆனால் உண்மையான 'மெய்ப்பொருள்' அதுவல்ல. மெய் என எண்ணி பொய்யாய் வாழும் எம் வாழ்வில் நாம் பொருள் தேடும் போராட்டத்தில் எம்மையும் எம் வாழ்வையும் தொலைக்கின்றோம். இத்தகைய புறவாழ்வு சார்ந்த ஆசைகள் நிச்சயமாய் எம்மைத் துன்பச் சூழலுள் சுழற்றி தொலைந்து போக வைத்துவிடும். இதை இலக்கியங்கள் பலவகையாய் சொல்லி இருந்தாலும் இந்த ஐங்குறு நூற்றுப் பாடல் இப்படி சிறப்பாக விளக்கி இருப்பதைக் காணலாம். ஒரு இல்லத்தில் பொருளுக்காய் துயருறும் ஒரு பெண்ணின் துயரை இப் பாடல் விளக்குகின்றது.

*அன்பும் அருளும் பண்பும் நீக்கி*
*பொருள்வயின் பிரிந்தோர்*
*உரவோர் உரவோர் ஆக*
*மடவை மன்ற வாழிய நிலனே*

புறத்தின்பம் மனிதனை துன்பத்துள் வீழ்த்துகிறது. புறத்தின்பம் பல வகைப்படும். அதில் மதுவும் ஒன்று. மது மனிதனை தனக்கு அடிமையாக்குகின்றது. உடலுக்கும் தீங்கு தருகிறது என்பதை மனிதர்கள் நன்கு அறிந்தாலும் அதை அற்ப ஆசையால் கைவிடாமல் சுவை என நம்பி மேன்மேலும் அருந்தி காலப்போக்கில் அதற்கு அடிமையாகின்றனர். அதே போல் மனிதன் வாழ்வில் போலியான

***வாழ்வை மகிழ்வோடு வாழ்பவன்***
***வாழ்வை இரசிக்கின்றான்.***
***மகிழ்சி என்பது அவரவர் மகிழ்வை உணரும்***
***பார்வையிலேயே உள்ளது.***
***ஒரு மனிதன் எதை நினைக்கிறானோ***
***அவன் அதுவாகவே மாறிவிடுகின்றான்.***

இன்ப நுகர்வுகளுக்கு படிப்படியாக அடிமையாகி மேன்மேலும் பல துன்பங்களை தானாகவே விலைக்கு வாங்குகின்றான். சுமைக்கு மேல் சுமைகளை தேடிச் சுமந்து பின் வருந்துகின்றான். போலித்தத்துவங்கள் மனிதனை சுயமிழக்க வைக்கின்றன. இவ்வண்ணம் மனிதன் தன் தனித்துவங்களை காலப்போக்கில் இழந்தும் போகின்றான். தன்னிலை இழக்கும் வாழ்வு அதன் 'பொருள்' இழந்து வலி சுமக்கும் வாழ்வு ஆகிவிடும் என்பதை அவன் உணர்வதே இல்லை.

வாழ்வு என்பது ஒரு போர்க்களம். வாழ்வின் பக்கங்கள் தோறும் மாறும் களங்கள். ஆனால் போராட்டம் முடிவதில்லை. போராடாமல் வாழ்வில்லை. வேர்கள் மண்ணில் போராடா விட்டால் மரங்கள் காய்க்கவோ பூக்கவோ முடியாது. விதைகளின் போரில் விருட்சங்கள் எழுகின்றன. இன்பம் என்ற பரிசைப் பெற மனிதர்கள் வாழ்வில் பல போர்களை போரிட்டு வெல்ல வேண்டும். நாளைய இன்பங்களைத் தரப்போகும் இன்றைய துன்பங்களும் இன்பமயமானவையே என்ற மனப்பக்குவத்தை பெற்றவன் மனம் தளராமல் போராடுகின்றான். வாழ்க்கை என்பதே இடர்களெனும் தடைகள் நிறைந்ததே. அந்தத் தடைகளை தாண்டி இலக்கினை நோக்கி மனவுறுதியோடும் மன உற்சாகத்தோடும் ஓடத் தெரிந்தவனே வாழ்வின் வெற்றியாளன் ஆகின்றான்.

வாழ்வு என்பது கவலைகளில் உழன்று காலத்தை கடத்துவது அல்ல. காலத்தை தவற விட்டு பின் வருந்துவதும் அல்ல. வாழ்வு என்பது காலத்தை வசப்படுத்தி பயன் தரும் வண்ணம் பொழுதுகளை வளப்படுத்துவதாகும். வாழ்க்கை வாழும் வரை அஸ்தமிப்பதில்லை. என்று, எம்மால் இனி வாழமுடியாது என நம்பிக்கை இழக்கின்றோமோ அன்று வாழ்வு இருந்தாலும் இறந்தாலும் முடிந்து போகிறது. வாழ்வில் நாம் வீழ்கின்ற பொழுதில் எல்லாம் தன்னம்பிக்'கை' என்ற மூன்றம் கையை ஊன்றி எழுப் பழக வேண்டும் வீழ்வது தோல்வியல்ல. வீழ்ந்த இடத்தில் இருந்து மீண்டும் எழத் துணியாதிருப்பதே தோல்வி.

ஆனால், வெற்றி என்பது இலகுவில் பறிக்கும் கனி அல்ல. வெற்றிக்காக வாழ்க்கையோடு போராட அறிவும் நம்பிக்கையும் உதவுகின்றன. அரைகுறை அறிவும் அரைகுறை நம்பிக்கையும் ஆபத்தானவை. உலகில் நாம் யாரை நம்பாது போனாலும் எம்மை நாம் உறுதியாக நம்பவேண்டும் தன்னம்பிக்கையே வாழ்வின் ஆதாரம். அறிவுத்தேடல் வாழ்வுக்கான ஊட்டம்.

எம் தோல்விகளுக்கு காரணம் வேறு யாரும் அல்ல, நாமே தான். சரியான முயற்சிகளை தேவையான அளவு எடுக்காதிருத்தல், தவறான வீண் முயற்சிகளில் ஈடுபடுதல், கவனம் சிதறுதல், கவலையீனமாக இருத்தல் என பல காரணங்களை சொல்லலாம் 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' எத்தகைய நிலையிலும் நாம் மனத் தைரியத்தை இழக்கலாகாது. மனத் துணிவை இழப்பதால் தான், பலர் வாழ்வில் தோற்றுப் போகின்றனர்.

'பலமே வாழ்வு பலவீனம் மரணம்' என்று விவேகானந்தர் சொன்னது போல், நாம் எம் மனதை எந்நிலையிலும் வலிமை கொண்டதாய்ப் பேண வேண்டும். மனவுறுதி கொண்டவனுக்கு வாழ்வு ஒரு விளையாட்டுக் களம். வெற்றி தோல்விகள் எது வந்தாலும் சமநிலை குன்றாது வாழப் பழக வேண்டும்.

வாழ்வை மகிழ்வோடு வாழ்பவன் வாழ்வை இரசிக்கின்றான். மகிழ்சி என்பது அவரவர் மகிழ்வை உணரும் பார்வையிலேயே உள்ளது. ஒரு மனிதன் எதை நினைக்கிறானோ அவன் அதுவாகவே மாறிவிடுகின்றான். ஒவ்வொரு செயலுக்கும் எம் எண்ணங்களே காரணம். எண்ணங்களே செயல்களின் மூலகாரமாய் விளங்குகின்றது.

*முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை*
*இன்மை புகுத்திவிடும்*

என வள்ளுவர் கூறியதுபோல் வாழ்வை வரமாக்க வேண்டுமானால் வாழ்வில் முயற்சிகளைத் தொடர்ந்தவண்ணம் இருக்க வேண்டும். முயன்றால் வாழ்வு நிச்சயம் கையில் கிடைத்த வரமாகவே மாறி பெருமை தருவது உறுதியாகும்.

வாழ்வு என்பது எவ்வளவு காலம் வாழ்கிறோம் என்பதில் அழகுபடுவதில்லை. எப்படி வாழ்கிறோம் என்பதிலேயே பொருள் கொள்கிறது வாழ்வில் உயர் 'பொருள்' தேடி அருள் பொங்க வாழ்ந்திடுவோம்.

*sivavathani.p@thaiveedu.com*

■ ■ ■

**FIRST AID AND CPR CLASSES**
**(Certificate provided)**
**In English and Tamil**

**FOR TUITION ARRANGEMENTS**
**Grade 9 and 10 - Math and Science**
**Grade 11 and 12 - Biology, Chemistry and Physics**

**647-801-9252**






Detached, 3+1 Bedrooms, 2 Washrooms
Finished



Semi-Detached, 3+1 Bedrooms, 1 Washroom
Finished



Att/Row/Twn House 3 Bedrooms, 3 Washrooms




Detached 3 Bedrooms, 3 Washrooms
Finished



Detached 4+1 Bedrooms, 2 Washrooms,
Finished. Sep Entrance




Detatched, 3+1 Bedrooms, 2 Washrooms,
Finished



Semi-Detached, 3+1 Bedrooms, 3 Washrooms
Finished



Att/Row/Twnhouse, 3 Bedrooms, 3 Washrooms,
Finished



Detatched, 4+1 Bedrooms, 4 Washrooms,
Finished



Detached, 4 Bedrooms, 3 Washrooms
Full



Detached, 3+1 Bedrooms, 4 Washrooms
Fin W/O



Detached, 4+1 Bedrooms, 4 Washrooms
Finished Sep Entrance

# வீடு வாங்க...
# விற்க...
# உங்கள்
# முகவராக... இதோ...



HOMELIFE
STANDARDS

**KIREW KANAGASABAI**
Broker
**Off: 416-298-3200 Direct: 416-903-4663**

**HomeLife Today Realty Ltd., Brokerage***
*Independently Owned and Operated - Not intend to solicit buyers or sellers currently under contract

210-31 PROGRESS AVE, TORONTO, ON. M1P-4S6 Fax: 416-298-3440

# நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்



முருகேசு
பாக்கியநாதன்

ஆறுமுகநாவலர் 1822 – 1879 காலப்பகுதியில் இலங்கைத் தமிழர்களின் சமூக, மத, கல்வி போன்ற பல பரிமாணங்களில் அக்காலச் சமுதாயத் தேவையினை அறிந்து அத்தேவைகளைப் பூர்த்தி செய்ய தன்னையே அர்ப்பணித்துச் சேவையாற்றினார். சென்ற மாத இதழில் அவர் பற்றிய ஒரு அறிமுகத்தினைப் பார்த்தோம். இன்றைய இதழில் தொடர்ந்து சற்று விரிவாக நோக்குவோம். அவரது சேவைகளை, சமூக நோக்கில் சிந்தித்து பல வகையான நடவடிக்கைகளை மேற்கொண்டமை, தற்போதைய கல்விப் பாரம்பரியத்திற்கு வித்திட்டமை, அதன் நோக்கமாக நூல்கள் எழுதியமை, அதனை ஏனையோரும் அறியும் வண்ணம் வெளியிட்டமை, அவைகளை வெளியிட இலகுவாக யாழ்ப்பாணத்திலும் தென்இந்தியாவிலும் அச்சியந்திர சாலைகள் அமைத்தமை, சைவ சமயம் தளைத்தோங்க அவரது விரிவான நடவடிக்கைகள், கிறிஸ்தவ மத எதிர்ப்புப் பிரசாரம், தேசிய வரலாற்றுப் பின்னணியில் அவரது பங்கு, சமூக மாற்றத்தினை ஏற்படுத்தவிளைந்தமை, இலக்கியத்தில் அவரது பங்களிப்பு அதில் பலவித மாற்றங்களை ஏற்படுத்தியமையும், பாடநூற்களில் அவரது பங்களிப்பு, தீவிர சாதிப்பிரசாரம் போன்றவற்றை நோக்கலாம்.

## சமூக நோக்குச் சிந்தனை:


தனது சமூகத்தினைப் பற்றிய பிரக்ஞை ஏற்படுபவனே தான் சார்ந்த சமூகத்திற்கு அந்தந்தக் காலச் சூழலுக்கேற்ப சிந்தித்து அச்சமூகத்திறகாகத் தன்னைத் தயார்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அவ்வாறாகப் பரிணமிக்கவும் முடியும். இந்த வகையிலே நாவலர் அவர்கள் அக்காலத்தே நிலவிய யாழ்ப்பாணத்து நிலவுடைமைச் சமுதாயத்தின் பின்னணியிலேயே சிந்தித்துச் செயற்பட வேண்டிய ஒருவராக உந்தப்படுகின்றார். இச்சூழலே அவருக்குரிய ஆளுமையை அங்கு வளர்த்துக் கொள்ள உதவியதென்று கூறலாம். அத்தோடு அவர் பெற்ற கல்வி, அவரது குடும்பப் பின்னணி, அவருக்கு நெருங்கிய அக்காலத்தே கல்விகற்ற சுற்றுவட்ட சமூகம் ஆகியனவும் சேர்ந்தே அவரது ஆளுமையினைத் தீர்மானித்தது எனலாம். எதிர்காலத்தில் ஏற்பட்ட தமிழர்களின் அரசியல் பங்களிப்பிற்கும் இவரது ஆளுமையின் செல்வாக்கு ஓரளவு பங்கு வகித்திருக்கும் என்பதில் ஐயம் ஏதும் இல்லை என்று கூறலாம்.

## தமிழும் சைவமும்:

இவரது சமூகச் சிந்தனை என்பது தமிழும் சைவமும் பற்றியதாகவே இருந்தது. இது இரண்டினையும் தனித்தனியே வளர்ப்பதென்பதனை நாவலரால் சிந்தித்துப்பார்க்க முடியவில்லை. அவை இரண்டுமே அவர்களது இரண்டு கண்களாக இருந்தன. அதனால் அவைகள் ஒரே பார்வையாகவே அவரால் நோக்க முடிந்தது. அதனாலேயே இரண்டினையும் ஒன்றுசேர வளர்த்தெடுக்கத் திடசங்கற்பம் பூண்டார். அந்நியராட்சிக்குட்பட்டு வாழ்க்கையின் அடித்தளமே பிறழ்வுற்று இருந்த அன்றைய யாழ் சமூகத்திற்கு நாவலர் அவர்களே ஒளி பாய்ச்சும் எழு ஞாயிறாகத் திகழ்ந்தார். கல்விக் கண்ணைத் திறத்தலே சகல தடைகளையும் தாண்டி ஒரு மெய்யறிவைத் திறந்து சமூகத்தை ஒழுங்கு வழிப்படுத்தும் என்பதனைத் திடமாக நம்பி அத்தகைய செயற்பாட்டிலும் ஈடுபடலானார்.

1946ஆம் ஆண்டிலே சைவசமயப் பிள்ளைகளை ஒன்று சேர்த்து இலவசமாக பாடங்களைக் கற்பிக்கத் தொடங்கினார். இதுவே அவரது சைவசமய போதனைகளில் முதற்படியாக அமைந்தது. இதனைத் தொடர்ந்தே 1948ஆம் ஆண்டு ஆவணி மாதம் 5ஆம் திகதி வண்ணார்பண்ணை, சைவப்பிரகாச வித்தியாசாலையினை அமைத்தார்.

வெளிநாட்டுக்காரரின் சுரண்டலில் இருந்தும் அவர்களது கிறிஸ்தவ மத வியாபகத்தில் இருந்தும் தனது மக்களைக் காப்பாற்ற அவர் முனைந்தார். அதன் பொருட்டு அவர் எடுத்த நடவடிக்கைகளைப் பின்வருமாறு நோக்கலாம். யாழ். வாழ் சைவர்களுக்கு கல்வியூட்டி அதன் மூலம் விழிப்புணர்ச்சியூட்டல். இதன் பொருட்டு



அவர்களுக்கு தமிழ் மொழியும், சைவ சமயமும் கற்பிக்கத் தொடங்கினார். இவ்வாறு கல்வி போதிக்க ஆரம்ப நூல் வசதிகள்கூட இல்லாத காலத்தே அவைகளை உருவாக்க வேண்டிய பொறுப்பினையும் நாவலர் அவர்களே பொறுப்பெடுத்து 1850ஆம் ஆண்டுகளில் பாலபாடம் என்ற அரிவரிப் பாடம் சொல்லும் அந்த நூலை வெளியிட்டார். இதனைத் தொடர்ந்து பாலபாடம் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்று நான்கு பகுதிகளாக வெளியிட்டு, சாதாரணன் ஒருவன் கல்வியில் கால் பதிக்க ஒரு மிதி கல்லினை அமைத்துக் கொடுத்தார். அதனைத் தொடர்ந்து சைவ சமயத்தினைப் போதிக்கும் பொருட்டு சைவ வினாவிடை என்ற நூலை பகுதி ஒன்று, இரண்டு என்று இரண்டு பகுதிகளாக வெளியிட்டு, அழிவை நோக்கிச் சென்று கொண்டிருந்த சைவத்தினை மீட்டெடுக்கும் பொருட்டான தனது வரலாற்றுக் கடமையினைத் தொடரலானார். சைவம் பற்றி நூல் எழுதினால் மட்டும் போதாது, சாதாரண மக்களுக்கும் விளங்கும் வண்ணம் சைவ சமயப் பிரசங்கமும் செய்ய எண்ணி தனது முதலாவது பிரசங்கமாக 1847ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வண்ணார்பண்ணை சிவன் கோவிலில் கிறிஸ்தவமத பிரசாரத்தைக் கண்டித்தும் சைவத்தின் மேன்மையினை நிறுவியும் பிரசாரத்தினைத் தொடங்கி அதனை வாரம் தோறும் நிகழ்த்தும் ஒரு தொடர் பிரசங்கமாகவே செய்தார்.

இவ்வாறாக அவரது வாழ்நாள் சாதனைகள் நுணுகி ஆராயப்பட வேண்டியதென்றாக உணரப்பட்டு பலர் அவ்வாறாக பல்வேறு கோணங்களில் ஆராய்ந்துள்ளார்கள். அந்த வகையில் கல்வியியல், சமூகவியல், மொழியியல், வெகுசனத் தொடர்பியல், சமயவியல், இலக்கியம், தேசியம், தத்துவம், பதிப்பியல் போன்ற துறைகளில் பலர் ஆய்ந்துள்ளமை அறியக் கிடக்கின்றது. இவைகள் மேலும் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டிய தேவை மேலும் எழுகின்றது.

## பாடசாலைகள் ஸ்தாபிதம்:

முதலிலே தனது ஆரம்ப முயற்சியான வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை 1848ல் அமைத்தது பற்றி ஏற்கனவே நோக்கினோம். இவ்வாறாக தொடர்ந்து பாடசாலை நடைபெற்று வரும் வேளையிலே பாடசாலைக்குப் பணம் திரட்டவேண்டிய ஒரு கட்டாயம் ஏற்பட்டு, இதனால் வித்தியாசாலை வரலாற்றைப் பலருக்கு விளக்கி 1858ஆம் ஆண்டளவில் பிரசங்கம் செய்து பணம் திரட்டி பாடசாலையினை திறம்பட நடாத்தலானார். இக்காலகட்டங்களில் நூல்கள் அச்சிடவும் அச்சுயந்திரம் வாங்கவும் பலமுறை இந்தியா சென்று வந்தார். ஆனால் கிறிஸ்தவசமயப் பாதிரிமார்களால் சைவத்தின் நிலை தமிழ் நாட்டிலும் யாழ்ப்பாணம் போலவேயிருந்தது. இதன் காரணமாக அங்கும் சைவத்தினையும் தமிழையும் ஒருங்கு சேர வளர்க்க பாடசாலை ஒன்றின் தேவையை உணர்ந்து 1862ஆம் ஆண்டு தமிழ்நாடு - சிதம்பரத்தில் ஒரு சைவ வித்தியாசாலையினை நிறுவ ஆரம்ப முயற்சியாக வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் அது பற்றிய ஒரு விரிவான பிரசங்கத்தினைச் செய்து அதற்கான ஆதரவினை வேண்டிக்கொண்டார். இதற்காக தொடர்ந்து பருத்தித்துறையிலும் இதுசம்பந்தமாக பிரசாரக் கூட்டத்தினை நடாத்தி அதிலும் வெற்றி கண்டார். தொடர்ந்து 1964ஆம் ஆண்டு அக்டோபர் 28ஆம் திகதி சிதம்பரத்தில் சைவ வித்தியாசாலையை நிறுவினார். தொடர்ந்து சிதம்பரத்தில் வேதாகம பாடசாலையினை நிறுவி சைவசமயப் பிரசாரகர்களை உருவாக்கத் திட்டமிட்டு அதற்கா முயற்சியில் இறங்கினார். இதனைத் தொடர்ந்து சைவர்களுக்கு ஆங்கிலப் பாடசாலை ஒன்றின் தேவையை உணர்ந்து அதனை 1872ஆம் ஆண்டு வண்ணார்பண்ணையில் சைவ ஆங்கில பாடசாலையை நிறுவினார். தொடர்ந்து அதே யாண்டில் கோப்பாயிலும் பருத்தித்துறை புலோலியிலும் சைவப்பிரகாச வித்தியாசாலைகளை நிறுவி சைவத்தினையும் தமிழையும் போதிக்கும் ஒழுங்குகளைச் செய்து வைத்தார். இதனை விட நாவலர் அவர்களின் தூண்டுதலினால் மேலும் பல பரோபகாரிகளால் வேறு பல பாடசாலைகளும் யாழ் மாவட்டத்தில்த் திறக்கப்பட்டன. இவ்வாறாக சாதரண குடும்பச் சைவப்பிள்ளைகளின் கல்விக் கண்களைத் திறந்து விட்டார்.

## அச்சுயந்திரசாலைகள் நிறுவுதல்:

நாவலரின் குறிக்கோள் செல்லரித்துப்போய் இத்துப்போன ஏட்டுச்சுவடிகளில் இருந்த பழைய நூல்களையும் பத்தி நெறிக்காலத்தே தோன்றிய பல சைவசமய நூல்களையும் வெளிக்கொணர வேண்டும் என்ற நோக்கம் இவரது உள்ளத்தே இருந்து அவரைத் துண்டிக் கொண்டேயிருந்தது. அத்தோடு 1848 ஆம் ஆண்டு தான் மொழிபெயர்த்த பைபிளை அச்சிடும் நோக்கோடு பேர்சிவல் பாதிரியார் அவர்கள் நாவலரையும் அழைத்துக் கொண்டு தமிழ்நாடு சென்று பைபிளை அச்சேற்றி அதனை வெளியிடபோதுதான் அவரது உள்ளத்தே சுடர்விட்டு எரிந்து கொண்டிருந்த வேகம் தமிழ் எழுத்துத் துறையிலும் அதனைப் பதிப்பிக்கும் துறையிலும் அவரை ஈடுபடுவதற்குத் தூண்டுதலாகவிருந்தது. பேர்சிவல் பாதிரியாருடன் தமிழ்நாடு போவதற்கு முன்பும் ஒருமுறை அங்கு சென்று வந்ததனை அறியக் கிடக்கின்றது. 1846ஆம் ஆண்டு ஜுன் மாதம் யாழ் அம்பலவாண முதலியார் அவர்களுடன் சென்னையின் வித்தியாசாலைகளையும் அங்கு கற்பிக்கும் வித்துவான்களையும் கண்டு கல்வி சம்பந்தமான ஆய்வினைச் செய்ய அங்கு வெளிவந்த நூல்களைப் பற்றி விபரமாக அறிந்து கொள்ளும் பொருட்டு சென்னை வந்திருந்தார். அப்போதே சைவப் பாடசாலைகளைத் தாபிக்கும் நோக்கம் அவர் மனதில் குடிகொண்டுவிட்டதனை இந்தப் பிரயாணத்தின் போது அவரே உணர்ந்து கொண்டார். சாதரணமாக ஒருவரது பிரயாணம் என்பது பலருக்கு பலவிதமான சிந்தனைச் செயற்படுகளைத் தோற்றுவிக்கின்றது. இந்த வகையிலே நாவலர் அவர்களைத் தமிழை நோக்கியும் சைவத்தை நோக்கியும் சென்று தனக்கொன இறைவனால் விடப்பட்ட ஒரு சேவையாகவே கருதி அதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அச்சுயந்திரசாலை ஒன்றை நிறுவவேண்டும் என்ற ஒரு உந்துதலுக்கு வேறு ஒரு முக்கிய காரணமும் இருந்தது. யாழ்பாணத்தை முற்றுக்கையிட்ட கத்தோலிக்கர்களும் புரொட்ஸ்தாந்துக் கிறிஸ்தவர்களினதும் பிரசுரப் பிரசாரமாகும். பாதிரிமார்கள் தமது பிரசாரத்திற்காக அச்சுயந்திரத்தினையும் கொண்டுவந்து அதில் அச்சேற்றி தமது பரப்புதலை நிறைவேற்றி வந்தனர். இதன் காரணமாக மானிப்பாயில் ஒரு அச்சுயந்திரசாலை வைத்து 'உதயதாரகை' என்னும் ஒரு கிறிஸ்தவப் பத்திரிகை நடாத்தி வந்தனர். இதன் மூலம் அவர்களுக்கு அனுகூலமான பல பிரசுரங்களையும் சைவநிந்தனைப் பிரசுரங்களையும் அச்சிட்டு வெளியிட்டுக் கொண்டிருந்தனர். இவைகளுக்கு மறுப்பு எழுதி வெளிடவேண்டிய நிர்ப்பந்தம் சைவர்களுக்கு இருந்ததனை உள்ளூர உணர்ந்தார். இதனாலேயே சைவத் தமிழர்களும் தாங்களும் ஒரு அச்சுயந்திர சாலை வேண்டுமென்பதனை வசதிபடைத்தவர்கள் பலருக்கும் தெரியப்படுத்தி ஊக்கப்படுத்தியதனால் நாவலரின் நண்பனும் அவர்போன்றே பிரமச்சாரியம் அனுட்டித்த நல்லூர் சதாசிவம்பிள்ளை அவர்களுடன் 1849ஆம் ஆண்டு இந்தியாவிற்கு அவர்களுடன் அச்சுயந்திரம் வாங்குவதற்காகச் சென்றிருந்தார்.

## நாவலர் பட்டம்:

இந்தப் பிரயாணத்தின் போதே அங்கு அவருக்கு ஒரு பாரிய திருப்பம் ஒன்று ஏற்பட்டது. அவர் ஏற்கனவே சைவ ஆதீனங்களுடன் கொண்டிருந்த தொடர்பாலும் அவர் சமயப் பிரசங்கள் செய்து மக்களிடத்தே சைத்தினைப் பாதுகாக்க சண்டமாருதமாகப் பிரசங்கங்கள் செய்து, கிறிஸ்தவ பாதிரிமார்களுக்கு தக்க

தொடர்தல் 69ம் பக்கம்

French Tuition

For grade 1 to grade 12 or IB program - French about foundation and higher level grammar, listening, speaking, reading and writing.
By a native French speaking teacher from France (In the past years our students won French awards)

பிரெஞ் மொழி நன்கு பேச வல்ல ஆசிரியையிடம் பிரெஞ் மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டுமா?

Mr & Mrs. Shanthakumar

Tel: 647 262 94 30 Intersections: Victoria Park and Ellesmere, McCowan and 14th Avenue

கடந்த மாதத்தில்...

# நினைவில் நிற்கும் நிகழ்வுகள் சில...





ஜூலை 21 - **Cheetahs-Malvern Soccer Festival**





ஜூலை 21 - பீல் தமிழ் முதியோர் சங்கம், மிசிசாகா **Older Adult Centre** இல் நடத்திய இரண்டாவது எலிசபெத் மகாராணியின் வைரவிழாக் கொண்டாட்டம் **(Funded by Heritage Canada)**



ஒன்ராறியோ முதுதமிழர் மன்றத்தின் 2012 / 13ம் ஆண்டுக்கான புதிய இயக்குநர் சபை




ஸ்காபரோ முதுதமிழர் மன்ற வருடாந்த பொதுக்கூட்டத்தில் தெரிவான புதிய நிர்வாக சபை






ஜூலை 23 - ஸ்காபரோ சிவிக் சென்ரரில் கனடியத் தமிழர் பேரவை ஒழுங்குசெய்த கறுப்பு ஜூலை நினைவு நாள் கண்டனக் கூட்டம்



ஜூலை 29 - மோணிங்சைட் பூங்காவில் அச்சுவேலி பழைய மாணவர் சங்கத்தின் கோடைகால ஒன்றுகூடல்
படம்: மு. திருச்செல்வம்



ஜூலை 14 - சீன கலாச்சார கலையரங்கில் செல்வன். ரூபகாந் சண்முகலிங்கம் அவர்களின் மிருதங்க அரங்கேற்றம். படம்: காயா போட்டோஸ்




மார்க்கம் தமிழ் முதியோர் மன்ற வருடாந்த பொதுக்கூட்டத்தில் தெரிவான புதிய நிர்வாக சபை




ஒன்ராறியோ முதுதமிழர் மன்றத்தின் கனடா நாள் கொண்டாட்டம்




ஜூலை 29 - **Armenian Youth Centre**இல் கனடியத் தமிழர் தேசிய அவை நடத்திய 'மண் வாசனை'.

உங்கள் விழாக்களின் படங்களும் இங்கு இடம்பெறவேண்டுமாயின், விழா பற்றிய விபரங்கள், புகைப்படம் எடுத்தவரின் பெயர் மற்றும் உங்கள் தொடர்பிலக்கங்களுடன் **events@thaiveedu.com** என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

# நல்லூர் ஸ்ரீலஸ்ரீ...

66ம் பக்கத் தொடர்ச்சி...

பதில் இறுப்பதிலே வல்லவராக இருந்தார். இவரது சேவைகள் தமிழ்நாட்டில் பலராலும் பாராட்டப்பட்டிருந்து. இதற்கு முன்னோடியாக திருவாவடுதுறை ஆதீனம் ஆறுமுகம் அவர்களுக்கு 'நாவலர்' என்னும் பட்டத்தினை வழங்கியது. இது இந்தியா, இலங்கை எங்கும் ஒரு உயரிய பட்டமாகவே பார்க்கப்பட்டது. இப்டியான ஒரு பட்டத்தினை இவருக்கு முன்பு இந்தியாவில் யாரும் பெற்றிருக்கவில்லை. சைவசமயிகள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்த திருவாவடுதுறை ஆதீனம் இப்பட்டத்தினைக் கொடுத்ததனால் அதன் மதிப்பு மேலும் பிரகாசம் பெறலாயிற்று. அத்தோடு எதிர்காலத்தே நாவலர் பட்டத்தினை திருவாவடுதுறை ஆதீனம் வழங்கியதனால் அப்பட்டமே அவர்களால் சிறப்புப் பெற்றதெனலாம். அதற்கு முன்பு சாதாணமாக ஆறுமுகம் என்று மட்டும் அறியப்பட்டவர் அன்றுமுதல் ஆறுமுக நாவலர் என்ற பட்டத்துடன் அழைக்கப்படலானார். நாவலர் என்பது நா வன்மை கொண்டவர் என்பதாகப் பொருள் கொள்முடியும். இந்த விஜயத்தின்போதே தன்னோடு எடுத்துச் சென்ற தன்னால் ஏற்கனவே எழுதப்பெற்ற 'சூடாமணி நிகண்டு உரை', 'சவுந்தர்ய லகரி உரை' போன்றனவற்றை இந்தியாவில் பதிப்பித்துக் கொண்டு வந்தார். அவர் திரும்பி வரும்போது ஒரு அச்சுயந்திரத்தோடு யாழ்ப்பாணம் திரும்பி வந்து 'வித்தியனுபாலன யந்திரம்' என்னும் அச்சியந்திரசாலையை நிறுவினார். இந்த அச்சுயந்திரசாலை அவரது எழுத்தை மேலும் ஊக்குவித்தது எனலாம். அத்தோடு கிறிஸ்தவர்களின் துஷித்து எழுதும் பிரசுரங்களுக்கு மறுப்புக்களும் உடனுக்குடன் எழுதி வெயியிட்டு அவர்களின் பிரச்சாரங்களுக்கு ஆப்பும் வைத்தார். இதனைத் தொடர்ந்து பல நூல்களை நாவலர் அவர்கள் எழுதி வெளியிடத் தொடங்கினார். இது பற்றி விரிவாக பின்னர் நோக்குவோம்.

1854ஆம் மீண்டும் நல்லூர் சதாசிவம்பிள்ளை அவர்களுடன் தமிழ்நாடு சென்றார். அப்போது அங்கு பிரமச்சாரியத்தினை ஏற்று சிவபூசையிலும் கலந்து கொண்டார். அவரது விருப்பு வெறுப்பற்ற பிரமச்சாரியமே அவரை இச்சேவைகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளத் துணையாகவிருந்தது. தனது வாழ்நாள் காலம் வரை பிரமச்சாரியத்தினைக் கடைப்பிடித்தே வாழ்ந்தார். நாவலர் அவர்கள் தமிழுக்கும் சைவத்திற்கும் தன்னையே அர்ப்பணித்துச் சேவை செய்யும் போது தனது குடும்பப் பற்றுக்களை அறுத்தே சேவை செய்தார் என்பது அவரது முதல் வரலாற்று நூலாகிய "ஆறுமுகநாவலர் சரித்திரத்திலிருந்து அறியக் கிடக்கின்றது. உண்மையில் நாவலர் கிறிஸ்தவமதத் திணிப்பை அவர் எதிர்த்திருந்தாலும் பாதிரிமார்களது ஒழுக்க முறை, அவர்களது வாழ்க்கை முறை என்பன அவரைக் கவர்ந்ததென்றே கூறவேண்டும். மக்களுக்குச் சேவை செய்யக் கிறிஸ்தவ பாதிரிகள் செய்யும் பல வேலைகளை நாவலர் தனது சேவையிலும் தனது சொந்த வாழ்விலும் கடைப்பிடித்து வாழ்ந்தார் என்பதனை அவர் பிரமச்சாரியம் ஏற்றல், பாடசாலைகளை ஸ்தாபித்தில், கிறிஸ்துவமத எதிர்ப்பிரசாரங்கள், சைவ சமய பிரசாரகர்களை உருவாக்க வேதாகமப் பாடசாலையை உருவாக்கி அங்கு பிரசாரகர்களுக்குப் பயிற்சி கொடுத்தமை போன்ற செயல்கள் யாவும் கிறிஸ்தவமதப் பாதிரிகள் யாழ் வந்து கடமையாற்றிய பின்பு ஏற்பட்ட பாரம்பரியங்களேயாகும். நாவலர் அவர்களும் கிறிஸ்தவ சமயத்திலிருந்து நல்ல நடைமுறைகளை எடுத்து அதனைப் பின்பற்றத் தவறவேயில்லை. ஆனால் அவர்களிமிருந்து ஒன்றை மட்டும் அவர் கற்கவில்லை. அதுதான் சகல சமூக மக்களையும் சாதி வேறுபாடின்றி நடாத்துவதென்பது. இவர், அப்போதைய பிராமண ஐயர்களிடமும் மிகவும் நம்பிகை அற்றவராகவே இருந்துள்ளார். இதனை திரு. கைலாயபிள்ளை அவர்களின் நூலில் அவர்களை ஒழுங்காகக் கற்காதவர்கள் என்றும் சைவ சமயத்தைப் பற்றி விபரம் அறியாதவர்கள் என்றவாறாகவும் நாவலர் கூறியதாக வெளிப்படுத்தியுள்ளார்.

1858 ஆம் ஆண்டு அங்கு யாழ்ப்பாணத்தில் தொடங்கப்பட்டது போன்றதொரு 'வித்தியானுபாலன அச்சியந்திரசலை'யை சிதம்பரத்தில் ஸ்தாபித்தார். அங்கும் பல நூல்களை எழுதி வெளியிட்டார். ஒருவர் தனது குறுகிய 57 வருட வாழ்க்கையில் ஏற்கனவே தன்னால் எழுதப்பெற்றிருந்த 65ற்கு மேற்பட்ட நூல்களை வெளியிடுவதென்பது ஒரு சாதரண வேலையல்ல. அதுவும் பொருளியல் வசதி, அச்சுயந்திரம் பற்றிய தொழில் நுட்ப வசதி, காகிதம் பெறுவதில் இருந்த சங்கடங்கள் போன்றவற்றடையே தானே அச்சு யந்திர சாலையினைத் தாபித்து தனது நூல்களையும் பிறரது நூல்களையும் வெளியிடுவதென்பது, இன்று இருப்பதுபோல் அக்காலத்தே அதனை ஒரு சுலபமான வேலையாகப் பார்க்கவே முடியாது. இன்று ஒருவர் ஒரு நூலோ அல்லது இரண்டு நூலோ வெளியிடுவது என்பது நினைத்துப் பார்க்கவே மிகவும் பாரமானதொரு விடையமாக இருக்கின்ற பொழுதிலும், அக்காலத்தே தானே நூலையும் எழுதி அதனைத் தானே பிரசுரம் செய்வதென்பது ஒரு பெரிய பணியாகவே இருக்க முடியும்.

## வசனநடை கைவந்த வல்லாளர்:

நாவலர் பிறந்து வளர்ந்து, படித்த, வாசித்த காலமெல்லாம் செய்யுளால் ஆக்கப்பட்ட இலக்கிய காலமாகவேயிருந்தது. ஆனால் இன்று நமது முன்னினையிலே நாம் படித்துக் கொண்டிருக்கும் வசன நடையில் உள்ள இலக்கியங்களை முதன் முதலில் இலங்கையிலேயும் இந்தியாவில் ஒரு பகுதியாகவும் முதன் முதலில் தமிழுக்குத் தந்த பெருமை நாவரையே சாரும். இதனால் அவர் 'வசன நடை கைவந்த வல்லாளர்' என்று போற்றப்படுகின்றார். தென் நாட்டிலே முதல் வசன நடையில் எழுதிய இலக்கியம் வெளிநாட்டவரும் தென் நாட்டில் வந்து தமிழ் வளர்த்த முனிவராகிய 'வீரமாமுனிவர்' என்பதாகும். மேற்கு நாட்டுப் பாதிப்பினால் அவரே முதலில் வசன நடையில் 'பரார்த்தகுரு கதை' என்றொரு சிற்றிலக்கியத்தினைப் படைத்தார். அதுவே தமிழுக்கு வசன நடைக்கு வழி திறந்துவிட்ட முதல் அடியாகும். ஆனால் அதனை முதலில் வளர்த்தெடுத்த பெருமை நாவலரையே சாரும். நாம் யாவரும் சிந்திக்கலாம் வெளிநாட்டவர்களா எமக்கு உரை நடையினைத் தந்தவர்கள் என்று, அனால் அதற்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வசனம் எனப்படும் உரை பற்றித் தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ளது ஈண்டு நோக்கத்தக்கது. 'பாட்டிடை வைத்த குறிப்பினாலும் - பாவின் றெழுந்த கிளவியானும் என்ற தொல்காபியர் சூத்திரத்தால் அறியமுடியும்'. இதிலிருந்து பாட்டிற்கிடையே வரும் உரைக் குறிப்புப் பற்றி 5000 ஆண்டுகளுக்கு முன்பு தெள்ளு தமிழ் பாடல்களிடையே உரை நடையும் இருந்தனை அறிகிறோம். உண்மையிலே இதற்கான சான்றினை சிலப்பதிகாரத்திலே தான் இளங்கோவடிகள் அழகாக அந்த உத்தியினைக் கையாண்டு அந்த காலத்தால் அழியாத அந்த மாபெரும் காப்பியமான நெஞ்சையள்ளும் சிலப்திகாரத்தைத் தந்துள்ளார். இவர்களின் வழியிலேயே நாவலர் அவர்கள் செய்த உரைநடைகள் காலத்தின் தேவை உணர்ந்து இன்று வரை நிலை நிற்கும் உரை நடைக்குக் கால்கோள் இட்டவர் என்றால் அதில் மிகயேதும் இல்லை. இதனை பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் குறிப்பிடும்போது "கற்றோரும் மற்றோரும் இனிக்கத்தக்க வகையில் செந்தமிழ் வசன நடையைத் தொடக்கி வைத்துச் செய்யுணடையிலிருந்த தமிழுக்கு மறுமலர்ச்சி செய்த பரேபகாரசீலர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள், சேனாதிராய முதலியாரின் எச்சம், மாணவர்." (பரோபகாரசீலர் என்பது எதுவித பலனையும் எதிர்பாராமல் உதவிசெய்யும் நற்பண்பாளர்)

*தொடரும்...*

***உசாத்துணை:***


- *ஆறுமுகநாவலர் சரித்திரம் – த.கைலாசபிள்ளையார்*
- *ஆறுமுகநாவலர் பதிப்பு நெறிமுறை (கட்டுரை)*
- *யாழ்ப்பாணத்து நல்லூர் தவத்திரு ஆறுமுகநாவலரவர்கள் - எம். கனக ஸ்ரீதரன்*
- *நாவலர் நூற்றாண்டு மலர் 1979 - ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை*
- *நாவலர் பெருமான் - ஒன்ராரியோ இந்துசமயப் பேரவையின் 10ஆண்டு மலர்*
- *இலக்கியவழி – பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை*


*packiyanathan.m@thaiveedu.com*

■ ■ ■


N.K.S

Drapery & Blinds Fabric LTD



திறமையான சேவையால் பல விருதுகளை பெற்ற நிறுவனம்

உங்கள் வீட்டுக்குனுத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.

கேதா நடராஜா

416.321.6420

Ketha Nadarajah
(President)
Tel: 416.321.6420,
Fax: 416.321.2217
www.nksdrapery.ca

Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9



இந்திய மருத்துவம்

உடலும் - மனமும்

- மருத்துவ ஆலோசனைகள்
- மூலிகைகள்
- மருத்துவம் கற்றுக் கொள்ள
- மருத்துவ தொழில் ஆலோசனை பெற

நேரில் சந்திக்கவும்:

இராஜசேகர் ஆதித்தியப்பன்

416-995-0416

ayurvetha@gmail.com

www.ayurexpress.net

# துயர் பகிர்வோம்



## திருமதி. வேலாயுதம் இரத்தினம்

புலோலி தெற்கு கிராமகோட்டை பிறப்பிடமாகவும் தற்போது கண்டியில் வசித்து வந்தவருமாகிய வேலாயுதம் டீச்சர் என அன்போடு அழைக்கப்படும் இளைப்பாறிய வடஇந்து மகளிர்கல்லுரியின் ஆசிரியை வேலாயுதம் இரத்தினம் அவர்கள் ஜுலை 08, 2012 அன்று கண்டியில் காலமானார்.

அன்னார் காலம்சென்றவர்களான முருகேசு, பார்வதிப் பிள்ளை இணையரின் மகளும், காலம்சென்ற வேலாயுதத்தின் அன்பு மனைவியும், ரவீந்திரன் (விரிவுரையாளர் கண்டி), ராதாகிருஷ்ணன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், குமுதினி (ஆசிரியை-கண்டி)யின் மாமியாரும், ரதினி, ரகுராமனின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு புலோலியில் நடைபெற்றது.

| | | |
|---|---|---|
| ராதா கிருஷ்ணன் | ரொறன்ரோ | 416 553 2033 |
| ரவீந்திரன் | கண்டி | 9477 644 3290 |
| தயாளன் | புலோலி | 9477 802 0280 |



## செல்வன் நவயுகா விவேகாநந்தன்

யாழ். நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடா ரொறன்ரோவை வதிவிடமாகவும் கொண்ட நவயுகா விவேகாநந்தன்(நவன்) அவர்கள் 19-07-2012 அன்று காலமானார்.

அன்னார், கனகசபாபதி விவேகாநந்தன் (வண்ணர்பண்ணை கலட்டி), வரதவாணி விவேகாநந்தன் (நல்லூர்) இணையரின் ஏக புத்திரனும்,

ஸ்ரீ லங்காதேவி(அவுஸ்திரேலியா), இந்திராதேவி, சுசீலாதேவி, கமலாதேவி (யாழ்ப்பாணம்), சகுந்தலாதேவி (யாழ்ப்பாணம்), ஸ்ரீ (லண்டன்), தயா (இலங்கை), நிதி(லண்டன்) ஆகியோரின் அன்பு மருமகனும், பவானி (ரொறன்ரே), சத்தியவாணி (லண்டன்), ஜெயவாணி(புத்தளம்), கலைவாணி(ஜேர்மனி) ஆகியோரின் பாசமுள்ள பெறாமகனும், ஜெயலக்சுமி, முருகாநந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு ஜுலை 24, 2012 அன்று ரொறன்ரோவில் நடைபெற்றது.

416 291 0109
416 492 2481



## நிரோசன் தில்லைநாதன்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லைநாதன் கணபதிப்பிள்ளை - கனகாம்பிகை தில்லைநாதன் இணையரின் இளைய மகன் நிரோசன் தில்லைநாதன் 22.07.2012 அன்று ரொறன்ரோவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, பராசக்தி மற்றும் காலஞ்சென்ற முத்துக்குமாரு, காலஞ்சென்ற கற்பகம் ஆகியோரின் அன்புப் பேரனும் தான்யா, பிரதீபா, சத்யா, சத்யன் ஆகியோரின் இளைய சகோதரனும், பேரம்பலம், சரஸ்வதி, காலஞ்சென்ற கோபாலபிள்ளை, யோகபத்மாவதி (பிரித்தானியா), காலஞ்சென்ற தியாகராசா, சந்திரா, சுப்பிரமணியம், கலாமதி (சுவிஸ்), குணசிங்கம், மாலினி, நடராசா, கமலாம்பிகை, யோகநாதன் (பிரித்தானியா), பத்மாவதி (பிரித்தானியா), சண்முகநாதன் (பிரித்தானியா), தயாநிதி (பிரித்தானியா), கமலநாதன், சந்திரமணி, மகேந்திரன் (கனடா), குணசீலி (கனடா), யோகா, ரவி ஆகியோரின் பாசமுள்ள மருமகனும், தவமணிதேவி (கனடா), அம்பலவாணர் (கனடா), பேரின்பநாயகம் (அவுஸ்திரேலியா), புட்கலா (அவுஸ்திரேலியா), பாலன் (கனடா), சந்திரா (கனடா), லோகன் (கனடா), ராஜேஸ்வரி (கனடா), தேவநாதன் (கனடா), கலைவாணி (கனடா), சறோஜாதேவி (அமெரிக்கா), சிவனேஸ்வரன் (அமெரிக்கா), கயிலாயநாதன் (கனடா), மாலினி (கனடா) ஆகியோரின் பாசமுள்ள பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு ஜுலை 29, 2012 அன்று ரொறன்ரோவில் நடைபெற்றது.

| | |
|---|---|
| தில்லைநாதன்: | 416 609 1924 |
| லோகன்: | 416 671 5795 |
| பாலன்: | 416 452 6975 |
| தேவன்: | 416 399 9146 |
| கயிலாயநாதன்: | 647 284 1057 |
| மகேந்திரன்: | 289 752 0762 |



## திரு. ஆறுமுகம் பொன்னுத்துரை

யாழ். புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் தெற்கு இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பொன்னுத்துரை அவர்கள் 17-07-2012 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், அன்னப்பிள்ளை இணையரின் அன்பு மகனும், நடராசா அன்னம்மா இணையரின் அன்பு மருமகனும், திவ்வியமலர் அவர்களின் அன்புக் கணவரும், சந்திரா, இந்து, ரவி, நாதன், சுசி, கண்ணன், உதயன், கலா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான செல்லம், கமலம், பாலசிங்கம், யோகராசா மற்றும் கந்தசாமி (இலங்கை)ஆகியோரின் அன்புச் சகோதரரும், குகன், ஞானி, சுயிதா, சிறிகலா, அற்புதராசா, சர்மிளா, நந்தா, சைலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சஞ்ஜீவ், ராஜீவ், பவின், சிபியா, தட்சா, பவிசன், சியானி, அகீஸ், அருஸ், கிளக்சியா, விஸ்வா, மித்திரா, மாதுமை, சனு, பிரித்தி, கைலாஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு ஜுலை 22, 2012 அன்று ரொறன்ரோவில் நடைபெற்றது.

| | | |
|---|---|---|
| சந்திரா | கனடா | 1416 724 4622 |
| இந்து | கனடா | 1416 292 5763 |
| ரவி | கனடா | 1416 628 5657 |
| நாதன் | கனடா | 1416 893 8363 |
| சுசி | கனடா | 1416 299 9620 |
| கண்ணன் | கனடா | 1416 721 7879 |
| உதயன் | கனடா | 1416 505 2120 |
| கலா | கனடா | 1416 546 7108 |



## திருமதி மகேஸ்வரி இராசையா

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும், தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி இராசையா அவர்கள் 29-06-2012 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை, யோகாம்பிகை இணையரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், பேரின்பம் இணையரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசையா (ஓதுவார்) அவர்களின் அருமை மனைவியும், இராஜேஸ்வரன் (கனடா), இராஜேஸ்வரி (கனடா), நாகேஸ்வரன் (கனடா), ஜெகதீஸ்வரன்(கனடா), இந்திரேஸ்வரி(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், பரிமளா, கனகேஸ்வரன், ஜெயா, உதயா, நவேந்திரகுமார் ஆகியோரின் அருமை மாமியாரும், தியாகராஜா(கொழும்பு), காலஞ்சென்றவர்களான பத்மநாதன், மங்கையற்கரசி, மற்றும் மரகதமணி (இலங்கை), இலங்கைநாதன்(கனடா), மங்களாம்பாள் (கனடா), பர்வதபத்தினி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அமிர்தம், சொர்ணம்மா, சின்னத்தங்கம், அன்னம்மா, சோமசுந்தரம், குலசேகரம்பிள்ளை, தியாகராஜா, குணபாலலட்சுமி, அமிர்தவல்லி, காலஞ்சென்ற துரைராஜசிங்கம், நடராஜா, புஸ்பராணி, பரம்சோதி, மஹேஸ்வரன் ஆகியோரின் அருமை மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு ஜுலை 03, 2012 அன்று ரொறன்ரோவில் நடைபெற்றது.

| | | |
|---|---|---|
| இராஜேஸ்வரன் | (ஈசன்) | 1416 267 0137 |
| கனகேஸ்வரன் | (நிமலா) | 1905 792 6660 |
| நாகேஸ்வரன் | (ஸ்ரீ) | 1647 283 7576 |
| ஜெகதீஸ்வரன் | (ரவி) | 1905 604 3041 |
| நவேந்திரகுமார் | (பவா) | 1647 271 5026 |



## திருமதி பத்மாவதி நவரட்ணம்

கோண்டாவிலைச் சேர்ந்தவரும், ஸ்காபுரோவில் வசித்தவருமான திருமதி பத்மாவதி நவரட்ணம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்- கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்) அவர்கள் 26-7-2012 அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த திரு.சீனிவாசகம் நவரட்ணம் (ஓய்வுபெற்ற அதிபர் - கொக்குவில் நாமகள் வித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும், யாழ்ப்பாணம் மாட்டின் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மாணிக்கம் சச்சிதானந்தம், எலிசபெத் செல்லம்மா இணையரின் அன்பு மகளும், கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சீனிவாசகம், தெய்வானைப்பிள்ளை இணையரின் அன்பு மருமகளும், வசந்தரூபா, பிறேமரூபா, சாந்தரூபா, குகன் லண்டன், பரதன், அகிலன், சுமதி, பாமதி ஆகியோரின் அன்புத் தாயாரும், சின்னராசா, காலஞ்சென்ற உதயலிங்கம், கிருபானந்தன், லதா (லண்டன்), தனோபதி, ரஞ்சினிதேவி, ரூபன், கருணாகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ராகுலன், சிந்துஜா, நர்மதா, சாரங்கன், சரவணன், பிரசன்னா, மதுமிதா, அயோனரூபா லண்டன், ராகுல் லண்டன், அபிமன்யு, அர்ஜுன், அர்ச்சனா, அஞ்சலி, விஷ்ணு, விக்ரம், விஷால், மீனாட்சி, வருண் ஆகியோரின் அன்பு பேத்தியும், இஷானி, இனியா, ஓவியா, மாலிக்கா ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு ஜுலை 30, 2012 அன்று ரொறன்ரோவில் நடைபெற்றது.

416 901 5217

# CTR தகவல் பலகை

416 754 3223

கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இப்பகுதியில் பிரசுரமாகின்றன. அவற்றின் சரி, பிழைகளுக்கு தாய்வீடு பொறுப்பல்ல.


**PICKERING**
House for Sale
Near 401/4 bdrm
Ananthan: 647 – 987 – 9326

**MIDLAND & EGLINTON**
2 bdrm Condo for sale
Jeya: 647 – 741 – 2110

**MORNINGSIDE**
2 bdrm Basement for rent
Rathy: 647 – 761 – 5144

**DENISON & MIDDLEFIELD**
1 room for rent/Basement
Rani: 905 – 201 – 9901

**BIRCHMOUNT & STEELES**
Basement for rent
Selvan: 647 – 787 – 7154

**MARKHAM & STEELES**
2 bdrm Basement
Bala: 905 – 471 – 2381

**MIDLAND & LAWRENCE**
3 bdrm Rent
Kala: 416 – 754 – 8947

**HWY 7 & HWY 50**
1 bdrm Basement
Santha: 416 – 726 – 3220

**RESTAURANT**
for sale
Ananthan: 905 – 239 – 6161

**2004 TOYOTA COROLLA**
Kumar: 416 – 419 – 1257

**1999 HONDA CIVIC**
150 Km
Electric Nokia Scooter for sale
Siva: 416 – 835 – 3616

**1996 TOYOTA CAMRY**
280km
Raja: 905 – 471 – 0789

**2003 HONDA CIVIC**
Black
Krishna: 416 – 887 – 8270

**COMPUTERS REPAIRS**
Brampton
Sutban: 647 – 409 – 2045

**PAINTING SERVICES**
Jeeva: 647 – 763 – 57 45

**ENGLISH TUITION**
Savarimuthu: 416 – 570 – 6920

**LEATHER SOFA**
(black)/6 months old
Nathan: 416 – 289 – 8721

**FRIDGE & STOVE & DRYER**
for Sale
Kajan: 647 – 855 – 6482

**EMPLOYMENT SERVICES**
Kumar: 416 – 627 – 0147

**TUITION**
Tuition for University Students
Hamilton
Santhiran: 416 – 208 – 9491

**FREEZER**
2 Commercial Freezers for Sale
Raj: 416 – 716 – 2975

**MOVING SALE**
Thangaraddnam: 416 – 438 – 3799

**CAR WASH**
Midland & Eglinton
Thavamani: 647-706-7844

உங்கள் வீட்டுக்கே வந்து கற்பிக்கின்றார்கள்
**One-on-One in Home Tutoring**

**Vimal** B.Sc. Eng
Advanced functions, Math, Data Management, Science, Calculus, Physics

**416 284 1659**
vimal_rasiah@hotmail.com
84, Upper Rouge Trail, Scarborough, ON, M1B 6K6

**தமிழ், ஆங்கில தட்டச்சு**
**தமிழ், ஆங்கில தட்டச்சுத் தேவைகளுக்கு அழையுங்கள்**
**Tamil / English Typing**
**Mrs. S.Yaso - 647 859 2181**

**தமிழ், ஆங்கில தட்டச்சு**
**Tamil / English Typing**
**அழையுங்கள் 647 502 2159**


# துயர் பகிர்வோம்



## திருமதி முத்துலக்ஷ்மி அம்மாள் சண்முகரத்தினம்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட முத்துலக்ஷ்மி அம்மாள் சண்முகரத்தினம் அவர்கள் 23-07-2012 அன்று காலமாணார்.

அன்னார், புங்குடுதீவு 11ம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்துரை விதானையார் இணையரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற திரு. திருமதி அருணம்பலம் இணையரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சண்முகரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ராஜலக்ஷ்மி, பாக்கியலக்ஷ்மி (வர்ணம்), காலஞ்சென்ற சுந்தரராஜன், காலஞ்சென்ற சண்முகராஜன், மங்கயர்க்கரசி (கனடா), நவரட்ணராஜா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தர்மரட்ணம், வைத்தி லிங்கம் விதானையார், அழகுதேவி, சிவகாமசுந்தரி, பத்மநாதன் (கனடா), ரமணி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு ஜுலை 29, 2012 அன்று ரொறன்ரோவில் நடைபெற்றது.

| | | |
|---|---|---|
| மங்கை - பத்மன் | கனடா | 1416 924 9107 |
| உதயன் | கனடா | 1416 363 8968 |
| சிவா | பிரித்தானியா | 442086563528 |
| வைத்திலிங்கம் | கொழும்பு | 94112367980 |



## சுவாமிநாதர் தர்மரட்ணம் செல்வகுமாரன்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட சுவாமிநாதர் தர்மரட்ணம் செல்வகுமாரன் அவர்கள் 23-07-2012 அன்று காலமாணார்.

அன்னார், நெடுந்தீவைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. திருமதி தர்மரட்ணம் இணையரின் அன்பு மகனும், நெடுந்தீவைச் சேர்ந்த சின்னக்குட்டி கணபதிப்பிள்ளை மனோன்மணி இணையரின் அன்பு மருமகனும், புங்குடுதீவு 11ம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. திருமதி சின்னத்துரை விதானையார் இணையரின் அன்புப் பேரனும், பவானி அவர்களின் ஆருயிர் கணவரும், பவித்திரன் அவர்களின் பாசமிகு தந்தையும், உதயகுமாரன்(கனடா), சிவகுமாரன்(லண்டன்), காலஞ்சென்ற தர்மகுமாரன், மீரா(நோர்வே), ராஜகுமாரன்(அப்பன் - கனடா), கலா(கொழும்பு), தேவகுமாரன்(லண்டன்), லதா(கனடா), தயா(லண்டன்), யோககுமாரன்(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜசிகா, அஜன், அலன் (கனடா), பிரவீன், பிரியா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், ஆர்த்திகா (நோர்வே), சிவஜனார்த்தன், லக்ஷ்மிதா (கனடா), நைஜல் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும்,

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு ஜுலை 29, 2012 அன்று ரொறன்ரோவில் நடைபெற்றது.

| | | |
|---|---|---|
| மங்கை - பத்மன் | கனடா | 1416 924 9107 |
| உதயன் | கனடா | 1416 363 8968 |
| சிவா | பிரித்தானியா | 442086563528 |
| வைத்திலிங்கம் | கொழும்பு | 94112367980 |

# ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி - 2012



குரு அரவிந்தன்

இம்முறை கோடைகால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி லண்டனில் நடைபெறுகின்றது. 'ஒரு தலைமுறையின் எழுச்சி' என்பதே இம்முறை ஒலிம்பிக் இலட்சினை வாசகமாக இருக்கின்றது. யூலை மாதம் 27ம் திகதி இப்போட்டி உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆகஸ்ட் மாதம் 12ம் திகதி ஞாயிற்றுக் கிழமை இப்போட்டிகள் முடிவடையும். இப்போட்டியில் சுமார் 204 நாடுகள் பங்கு பற்றுகின்றன. சுமார் 10,500 வீரர்கள் இப்போட்டியில் பங்குபற்ற இருக்கின்றனர். இந்தப் போட்டிக்கான ஒலிம்பிக் சுடர் மே மாதம் 10ம் திகதி கிரேக்க நாட்டில் உள்ள ஒலிம்பியா விளையாட்டரங்கில் ஏற்றி வைக்கப்பட்டு, பிரத்தியேக விமானம் ஒன்றில் லண்டனுக்குக் கொண்டு வரப்பட்டது.

சுமார் 500 ஏக்கர் நிலப்பரப்பில் ஒலிம்பிக் விளையாட்டரங்கம் லண்டனில் அமைக்கப்பட்டுள்ளது. ஒரு லட்சத்து எண்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் அமர்ந்திருந்து போட்டிகளைப் பார்க்கக்கூடிய வசதிகளோடு அமைந்திருக்கிறது. எந்த ஒரு நகரத்திற்கும் கிடைக்காத அதிஸ்டம் இம்முறை லண்டன் மாநகருக்குக் கிடைத்திருக்கிறது. ஏனென்றால், லண்டனில் நடக்கும் மூன்றாவது ஒலிம்பிக் போட்டி இதுவாகும். முதற்தடவையாக ஒலிம்பிக் போட்டி 1908ம் ஆண்டும், அதன்பின் இரண்டாவது முறையாக 1948ம் ஆண்டும் இத்தகைய ஒலிம்பிக் போட்டி லண்டனில் நடைபெற்றது. 1944ல் லண்டனுக்குக் கிடைத்தாலும் 2ம் உலகமகாயுத்தம் காரணமாக அப்போட்டி தவிர்க்கப்பட்டது.

இந்தப் போட்டிக்குப் பல நகரங்கள் விண்ணப்பித்திருந்தாலும், முக்கியமாக மாஸ்கோ, லண்டன், மட்றிட், நியூயோர்க், பாரிஸ் போன்ற பிரசித்தி பெற்ற நகரங்கள் இந்த ஒலிம்பிக் போட்டி தங்கள் நகரத்தில் நடைபெறவேண்டும் என்று 2004ம் ஆண்டே விண்ணப்பித்திருந்தனர். இறுதித் தெரிவில் லண்டனும், பாரிஸூம் போட்டி போட்ட போது பாரிஸ் 50 வாக்குகளும் லண்டன் 54 வாக்குகளும் பெற்றன. அதனால் இறுதியாக லண்டன் மாநகரமே ஒலிம்பிக் - 2012 போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

முதன் முதலாக கிரேக்க நாட்டில் ஏதென்ஸ் நகரில் உள்ள ஒலிம்பிக் திடலில்தான் 1894ல் கோடைகால ஒலிம்பிக் போட்டி ஆரம்பமானது. நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுவதால், அடுத்தது 1900ம் ஆண்டு பாரிஸ் நகரில் நடைபெற்றது. 1916, 1940, 1944 ஆகிய ஆண்டுகளில் உலகயுத்தம் காரணமாகப் போட்டிகள் நடைபெறவில்லை. இதுவரை அமெரிக்காவில் 8 தடவைகளும், பிரான்சில் 5 தடவைகளும் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றிருக்கின்றன. ஐக்கிய இராச்சியம், கனடா, ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளில் தலா மூன்று தடவைகள் நடைபெற்றிருக்கின்றன. கடைசியாக 2008ம் ஆண்டு சீனாவில் உள்ள பீஜிங் நகரில் ஒலிம்பிக் போட்டி நடைபெற்று முடிவடைந்த போது, இறுதி நாளில் லண்டன் மேயரிடம் ஒலிம்பிக் கொடி சம்பிரதாய பூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

2012ம் ஆண்டு கோடைகால பராலிம்மிக்ஸ் ஆகஸ்ட் மாதம் 29ம் திகதி ஆரம்பமாகி செப்டம்பர் மாதம் 9ம் திகதி முடிவடையும். லண்டனில் ஏற்கனவே இரண்டு தடவைகள் கோடைகால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி நடந்தாலும், இதுவே முதற்தடவையாக லண்டனில் நடக்கும் பராலிம்பிக்காகும். இதைவிட முதற்தடவையாக ஒரே மாதிரியான இலட்சினையை சிறிய மாற்றங்களோடு இரண்டு போட்டிகளுக்கும் பாவிக்கின்றார்கள். ஒலிம்பிக் வளையத்தில் நீலம், கறுப்பு, சிகப்பு, மஞ்சள், பச்சை ஆகிய ஐந்து நிறங்கள் இருக்கின்றன. இவை 5 கண்டங்களையும் குறிப்பது மட்டுமல்ல போட்களில் பங்குபற்றும் ஒவ்வொரு நாட்டுக் கொடியிலும் இதில் ஏதாவது ஒரு நிறம் கலந்திருக்கிறது. சுமார் 499 தங்கப் பதக்கங்கள் பராலிம்பிக் போட்டியில் வென்றெடுக்கப்பட இருக்கின்றன. இம்முறை ஏனைய நாடுகளோடு சேர்ந்து சொலமன் தீவுகளும் முதற்தடவையாகப் பங்கேற்க இருக்கின்றது. இப் போட்டியில் அதி வயதில் கூடியவராக யப்பானைச் சேர்ந்த 70 வயதான குதிரைச் சவாரி வீரர் ஒருவர் கலந்து கொள்கின்றார்.




அடுத்த கோடைகால ஒலிம்பிக் 2016ம் ஆண்டு பிரேசிலில் உள்ள றியோடி ஜன்றோ என்ற இடத்தில் நடைபெற இருக்கின்றது. செப்ரெம்பர் மாதம் 7ம் திகதி ஆரம்பமாகி திகதி 18ம் திகதி முடிவடையும். குளிர்கால பராலிம்பிக் போட்டி முதன் முதலாகப் பிரான்சில் உள்ள சாமொனிக்ஸ் என்ற இடத்தில் 1924ம் ஆண்டு ஆரம்பமானது. குளிர்கால பராலிம்பிக் 1910ம் ஆண்டு கனடாவில் உள்ள வான்கூவரில் நடைபெற்றது உங்களுக்கு நினைவிருக்கலாம். அடுத்த குளிர்கால பராலிம்பிக் 2014 ரஷ்யாவில் உள்ள சோஷி என்ற நகரில் நடைபெற இருக்கின்றது. பெப்பிரவரி மாதம் 7ம் திகதி இந்தப் போட்டி ஆரம்பமாகி பெப்பிரவரி மாதம் 23ம் திகதி முடிவடையும். இறுதித் தெரிவில் தென்கொரியாவும் ரஸ்யாவும் போட்டி போட்டன. இதில் தென்கொரியா 47 வாக்குகளும், ரஷ்யா 51 வாக்குகளும் பெற்றதால் ரஷ்யா தெரிந்தெடுக்கப்பட்டது. இதற்கு அடுத்த குளிர்கால பராலிம்பிக் தென் கொரிய நாட்டில் 2018ம் ஆண்டு நடைபெற இருக்கின்றது. இப்போட்டி பெப்பிரவரி மாதம் 9ம் திகதி ஆரம்பமாகி பெப்பிரவரி மாதம் 25ம் திகதி முடிவடையும்.

தற்போது லண்டனில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியின் தொடக்கநாளில் பல்கலாச்சாரத்தைப் பேணிக்காக்கும் வகையில் 'வணக்கம்' என்ற தமிழ் சொல்லையும் பாவித்திருந்தார்கள். பாடப்பட்ட பிரபல பாடகர்களின் 86 பாடல்களில் இளையராஜா இசை அமைத்த 'நான்தான் ஒங்கப்பண்டா' என்ற பாடல் வரிகளும் இடம் பெற்றிருந்தன.

ஈழத்தமிழ் மக்களின் இன்றைய அவல நிலைக்குப் பிரித்தானியாவும் ஒரு காரணம் என்பதைச் சரித்திரம் தெரிந்த யாரும் மறுக்க முடியாது. எனவேதான் ஒரு இனத்தை வேரோடு அழிக்க, இனப்படுகொலையில் ஈடுபட்டிருப்பவர்களை இத்தகைய போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்ககூடாது என்ற நியாயமான கோரிக்கையை ஒலிம்பிக் குழுவின் முன் ஈழத்தமிழர்கள் வைத்திருந்தார்கள்.

இதுவரை நடந்த கோடைகால ஒலிம்பிக் போட்டிகளின்போது அமெரிக்கா 2296 பதக்கங்களைப் பெற்று முதலாவது இடத்திலும், ரஷ்யா 1010 பதக்கங்களைப் பெற்று இரண்டாவது இடத்திலும், ஜெர்மனி 851 பதக்கங்களைப் பெற்று மூன்றாவது இடத்திலும் நிற்கின்றன. அதிக மக்கள் தொகையைக் கொண்ட நாடான சீனா 385 பதக்கங்களை மட்டுமே பெற்றிருக்கின்றது. மக்கள் தொகை கூடிய நாடுகளில் இரண்டாவதாக இருக்கும் இந்தியா இதுவரை 20 பதக்கங்களையே பெற்றிருக்கின்றது. குழு விளையாட்டான வளைதடிப் பந்தாட்டத்திற்காக (Hockey) 8 தங்கப்பதக்கமும், 1 வெள்ளிப்பதக்கமும், 2 வெண்கலப் பதக்கமுமாக மொத்தம் 11 பதக்கங்களை இந்தியா பெற்றிருந்தது. இதை விட தனிப்பட்டவர்கள் துப்பாக்கி சுடுவதில் ஒரு தங்கப்பதக்கம் உட்பட 9 பதக்கங்களைப் பெற்றிருக்கின்றனர். மொத்தமாக 9 தங்கப் பதக்கங்களும், 4 வெள்ளிப் பதக்கங்களும், 7 வெண்கலப் பதக்கங்களும் இந்தியா பெற்றிருக்கின்றது. இலங்கை இதுவரை இரண்டு வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றிருக்கிறது. 1948ம் ஆண்டு லண்டனிலும் 2000ம் ஆண்டு சிட்னியிலும் இப்பதக்கங்கள் கிடைத்தன. குளிர்கால ஒலிம்பிக்கில் இலங்கை ஒருபோதும் கலந்து கொள்ளவில்லை.

கனடாவில் மூன்று தடவைகள் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றிருக்கின்றன. 1976ல் கோடைகால ஒலிம்பிக் போட்டி மொன்றியலிலும், 1988ல் குளிர்கால ஒலிம்பிக் போட்டி கல்கரியிலும், 2010 குளிர்கால ஒலிம்பிக் போட்டி வான்கூவரிலும் நடைபெற்றிருக்கின்றன. மொன்றியல் போட்டியின்போது 11 பதக்கங்களையும், கல்கரி போட்டியின் போது 5 பதக்கங்களையும், வான்கூவர் போட்டியின் போது 26 பதக்கங்களையும் கனடா வென்றெடுத்திருக்கின்றது. சீனாவில் நடந்த ஒலிம்பிக் போட்டியின் போது கனடா 18 பதக்கங்களைப் பெற்றிருந்தது. மொத்தமாக 260 கோடைகாலப் பதக்கங்களையும், 145 குளிர்காலப் பதக்கங்களையும் கனடா இதுவரை பெற்றிருக்கின்றது. அனேகமாக எல்லா ஒலிம்பிக் போட்டிகளிலும் கலந்து கொண்ட கனடிய விளையாட்டு வீரர்கள், 1980ம் ஆண்டு கோடைகால ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ளவில்லை.

இம்முறை லண்டனில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ள கனடாவில் இருந்து 277 விளையாட்டு வீரர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

நம்பிக்கையே வெற்றியின் முதற்படியாகையால், விளையாட்டுத் துறையில் ஆர்வமுள்ள நம்மவர்களும் முயற்சி செய்தால் ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெறும் காலம் அதிதூரத்தில் இல்லை என்றே கூறலாம்.

kuruaravindan@thaiveedu.com

■ ■ ■

உங்கள் அனைத்து நிகழ்வுகளையும் பார்ப்பதற்கும் பதிவதற்கும்

www.inayam.net

# சகல ரோக நிவாரணி
# பிராண ஜீவ

மூவாயிரமாண்டுகளுக்கு மேலான ஆயுர்வேத பாரம்பரியத்தில் நவீன முறையில் தயாரிக்கப்பட்ட ஆயுர்வேத மூலிகை ஊட்டச்சத்து ஔடதம்




எமது புதிய அறிமுகம்!!


- 200 ற்கும் மேற்பட்ட மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்டது
- உடலின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது
- உடலின் நச்சுத்தன்மையை நீக்கி புத்துணர்வை ஊட்டுகிறது
- அமெரிக்க FDA (Food and Drug Administration) இனால் அங்கீகரிக்கப்பட்டது

## பேரழிவினைக் கொண்டுவரும் நீரழிவு நோயினை இரண்டே இரண்டு மாதங்களில் முற்றும் முழுதாக கட்டுப்படுத்த முடியும்!




**டயபீனா** தினமும் அருந்தக்கூடிய மூலிகை ஆரோக்கிய பானம். இது உடலில் மிகுதியான குழுக்கோசினை குறைக்கக்கூடியதும், இரத்தத்திலுள்ள அதிகளவு குழுக்கோசினால் ஏற்படக்கூடிய நோய்களை ஒழுங்கு முறையாக தடுக்கவும் உதவுகிறது. விறைப்புத்தன்மை, பாதங்களில் சுளுக்கு, அலட்சியத் தன்மை மற்றும் மீண்டும் மீண்டும் வியாதிகளை படிப்படியாக நீக்கிவிடக் கூடியது. டயபீனா கண்டிப்பாக நீரிழிவு நோயினால் வருந்துபவர்கள் மட்டுமே பாவிக்கவேண்டியது.

## ஊளைச் சதை பெருகுவதை தடுக்கிறது! வாத வலியை நீக்குகிறது! உடலுக்கு புதுத்தென்பைக் கொடுக்கிறது!




**க்லூட்டியலா** பானமானது மிகுதியான உடல் கொழுப்பை குறைக்கக் கூடியதும், குறிப்பாக உடலின் இடுப்பு, தொடை, தோற்பட்டை, கைகள் போன்ற பகுதிகளில் ஏற்படக்கூடிய ஊளைச் சதை பெருகுவதை தடுக்கவும், கொழுப்பினால் விளையக் கூடிய கெடுதியினை கட்டுப்படுத்தவும், உடல் வலியை நீக்கவும், அத்துடன் வாதத்தினால் ஏற்படக்கூடிய வலியினை குறைக்கவும் உதவுகிறது. க்லூட்டியா உடலுக்கு புதுத்தெம்பைக் கொடுப்பதோடு நீண்ட சுகமான வாழ்விற்கும் வழிவகுக்கிறது.

## The EVERMATIN HAIR LOTION™




உங்கள் முடியுதிர்வை தடுக்கவும் மீண்டும் தலைமுடி வளரவும் எவமார்டின் மூலிகை ஔடதம்! உலகெங்கிலும் பல்லாயிரக்கணக்கானவரின் பாராட்டுதலைப் பெற்ற மூலிகைத் தயாரிப்பு இது. இப்போது எவமாட்டின் சாம்பூவும் கிடைக்கிறது.




## இயற்கை மூலிகையிலான தலைமுடி மை

மருதாணி கொண்டு செய்யப்படும் முடி மை உங்கள் கேசத்தை நன்கு பராமரிக்கிறது.

Amazon
Health Care

SABONA
& Gift

இப்போது இங்கிலாந்து மற்றும் ஐரோப்பா நாடுகளிலும் எமது தயாரிப்புகளை பெற்றுக்கொள்ளலாம்.
www.amazonhealthcare.co.uk



Tel: 416-264-8787
www.amazonhealthcare.ca
2602 Eglinton Ave,. East. (@Midland)

## மனம் விரும்பியது போல் பிராம்டனில் வீடு வாங்க விற்க அழையுங்கள்

**CALL BEFORE YOU LIST & SEE THE DIFFERENCE**

**FOR SALE** $499,900

Scarborough ON



Bellamy/Kingston Rd.
**Bedrooms: 3+1 Washrooms: 2**

**FOR LEASE** $1,999 /mo

Brampton ON



Bovaird/Ashby Field
**Bedrooms: 4+1 Washrooms: 4**

**FOR SALE** $974,500


Brampton ON



McVean / Riverstone
**Bedrooms: 5+1 Washrooms: 6**

**FOR SALE** $648,800

Brampton ON



Queen St / Mississauga Rd.
**Bedrooms: 4 Washrooms: 3**

**FOR SALE** $639,800

Brampton ON



Queen St / Mississauga Rd.
**Bedrooms: 4 Washrooms: 4**

**FOR SALE** $675,000

Brampton ON



Queen St / Creditview
**Bedrooms: 5+1 Washrooms: 4**

**FOR SALE** $489,900

Brampton ON



Kennedy/Bovaird
**Bedrooms: 4+2 Washrooms: 4**

**FOR SALE** $859,000

Brampton ON



Queen St / Mississauga Rd.
**Bedrooms: 4+1 Washrooms: 4**

**FOR SALE** $369,900

Brampton ON



Nelson / Mcmurchy
**Bedrooms: 3 Washrooms: 3**

HOMELIFE
HIGHER STANDARDS

HomeLife/Future
REALTY INC. BROKERAGE*

TEL: 905.201.9977
FAX: 905.201.9229

205-7 Eastvale Drive
Markham Road, Ontario L3S 4N8

Ruby Thambiah
SALES REPRESENTATIVE

416.999.5337
rubysri@hotmail.com
www.buyandsellwithruby.com

Top Producer: 2009, 2010, 2011 *

Top 5% in Canada: 2009, 2010, 2011 **

* Within HomeLife/Future ** Within HomeLife



## - பின்லாந்தின் பசுமை நினைவுகள் - 12

# அடி வாங்கிப் பெறும் அறிவு

- உதயணன் -

ஜரி லிண்டொம் (Jary Lindholm) அவர்களும் நானும் தொலைபேசியில் அடிக்கடி பேசிக் கொண்டோம். ஒரு நாள் அவர் எங்களுடைய வீட்டுக்கு வந்தார். அவர் ஓர் இளைஞர். அதே பத்திரிகையில் கடமையாற்றும் ஒரு மூத்த பத்திரிகையாளரான அன்னா பல்யக்கா (Anna Paljakka) என்ற பெண்ணையும் அழைத்துக் கொண்டு வந்தார். அன்னா பல்யக்கா, “எந்த நாடாக இருந்தாலும், பெரும்பான்மையரால் சிறுபான்மையர் பாதிக்கபடுவதில் எனக்கு உடன்பாடு இல்லை. நான் சில தடவைகள் சென்னைக்குப் போயிருக்கிறேன். அங்கே பிரபாகரன், உமா மகேஸ்வரன், பத்மநாபா போன்ற தமிழ் அமைப்புத் தலவர்கள் பலரைச் சந்தித்திருக்கிறேன். திரும்பி வந்து அந்தச் சந்திப்புகளின் அடிப்படையில் கட்டுரைகளும் எழுதியிருக்கிறேன்,” என்றவர் தொடர்ந்து, “ஜரி உங்களைப் பற்றிச் சொன்னார். இலங்கையில் 1983 ஜூலையில் நிகழ்ந்த இனக்கலவரம் பற்றி முழுமையாக அறிந்திருக்கிறேன். எப்படி அந்தச் சூழ்நிலையில் இருந்து வெளியேறி, எப்படி இத்தனை ஐரோப்பிய நாடுகளையும் கடந்து, எப்படி கட்டுப்பாடுகள் நிறைந்த இந்த நாட்டுக்குள் நுழைந்தீர்கள்? உங்களைச் சந்திக்க வேண்டும் போலத் தோன்றியது. அதுதான் ஜரியுடன் சேர்ந்து உங்களைப் பார்க்க வந்தேன்,” என்று சொன்னார்.

சிறிது நேரம் இலங்கை நிலைமையைப் பற்றி, எனது குடும்பத்தைப் பற்றிப் பொதுவாகப் பேசிக்கொண்டு இருந்தோம். பின்னர், மேசையில் இருந்த வீரகேசரி பிரசுரங்களான எனது நாவல்களை எடுத்துப் பார்த்தார்கள். அவற்றைப் பார்த்த அன்னா பல்யக்கா, “எங்களுடைய நாளிதழ் ‘ஹெல்சிங்கின் சனோமத்’தில் (Helsingin Sanomat) ஒரு சிறப்புப் பக்கம் வரும். அந்தப் பக்கத்தில் ஆசிரியர் தலையங்கமும் ஒரு சிறப்புக் கட்டுரை மட்டுமே வெளிவரும். வேறு செய்திகள் கட்டுரைகள் விளம்பரங்கள் எதுவுமே வராது. அப்படியான ஒரு ஞாயிற்றுக்கிழமை சிறப்புப் பக்கத்துக்கு இலங்கையைப் பற்றிய ஒரு கட்டுரை எழுதித் தாருங்கள். அதை வெளியிட நான் ஏற்பாடு செய்கிறேன்,” என்று சொன்னார்.

“இப்பொழுது வேண்டாம்,” என்று குறுக்கிட்டார் ஜரி. “இவரையும் இவரது குடும்பத்தினரையும் நேர்காணல் செய்து, மாதம் இரு முறை வெளியாகும் எங்களுடைய சஞ்சிகையில் ஒரு கட்டுரை எழுத இருக்கிறேன். அந்தக் கட்டுரை இவரை எங்களுடைய வாசகர்களுக்கு நன்கு அறிமுகப்படுத்தும். அதன் பின்னர் நீங்கள் குறிப்பிட்ட கட்டுரை வருவதே பொருத்தமாக இருக்கும்.”

ஜரியின் ஆலோசனையை ஏற்றுக் கொண்ட அன்னா பல்யக்கா, “எதற்கும் நாங்கள் கட்டுரையை ஆயத்தம் செய்கிறோம். உங்களுடைய நேர்காணல் கட்டுரை வெளிவந்த பின்னர் ஓர் இடைவெளி விட்டு எங்கள் கட்டுரையைப் பிரசுரிக்கலாம்,” என்றார்.

ஜரியின் நேர்காணல் கட்டுரையைப் பற்றிப் பின்னர் சொல்வேன். அந்தக் கட்டுரை வெளிவந்த சில காலத்துக்குப் பின்னர், அன்னா பல்யக்கா கேட்டு, நான் எழுதிய இலங்கை பற்றிய கட்டுரையை பின்னிஷ் மொழியில் மேலே கூறிய சிறப்புப் பக்கத்தில் வெளியிட்டார். அந்தக் கட்டுரை பலருக்கு ஈழத் தமிழரின் பிரச்சினையை விளக்கிக் கூறுவதாக அமைந்தது. என்னைத் தெரிந்த பலர் தங்கள் கருத்துகளைச் சொன்னார்கள். அந்த ஒரு கட்டுரைக்குச் சன்மானமாக 200 பின்னிஷ் மார்க் கிடைத்தது. அப்போது அதன் பெறுமதி இலங்கை ரூபா 2000. அந்த 2000 இன்றைய 20,000க்குச் சமமாகும். அந்தக் கட்டுரையை எழுதிக் கொடுக்கும்போது இவ்வளவு சன்மானம் கிடைக்கும் என்றெல்லாம் எனக்குத் தெரியாது. அந்த நாட்டுப் பத்திரிகையாளர்களின் உறவைப் பேணவேண்டும் என்பதற்காகவும் வெளிநாட்டில் ஒரு தலையாய பத்திரிகையில் எழுதக் கிடைத்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதற்காகவும் கட்டுரையைக் கவனமாக எழுதிக் கொடுத்தேன்.

எனது குடும்பத்தினர் பின்லாந்துக்கு வந்துவிட்டார்கள். அவர்கள் பின்லாந்தில் அடி வைத்த தினத்தன்று காலநிலை -25 (minus 25) ஆக இருந்தது. இத்தனை ஆயிரம் மைல்கள் கடந்து யாரையும் தெரியாத ஒரு புதிய நாட்டில் அடி வைத்திருக்கிறோமே என்ற பயத்திலும் பார்க்க, இரத்தத்தை உறைய வைக்கும் குளிரைத் தாங்க முடியுமா என்ற பயம் பிள்ளைகளிடம் தெளிவாகத் தெரிந்தது. விமான நிலையத்தில் இருந்து வாகனத்தில்



ஹெல்சிங்கி நகர மத்தியில் அமைந்துள்ள 74 மீட்டர்கள் உயரமான இரட்டைக் கோபுரத் தேவாலயம் St. John’s Church. 1888 - 1891இல் ஒரு குன்றில் கட்டப்பட்டது

வீட்டுக்குப் போய்க் கொண்டிருக்கும்போது தெருவின் இரு கரைகளிலும் நாலைந்து அங்குல உயரத்துக்குப் பனிப்பூக்கள் விழுந்து படர்ந்து இருந்ததைப் பார்த்த என் மனைவி, “என்றாவது இந்த மண்ணில் புல்பூண்டைப் பார்க்க முடியுமா?” என்று ஏக்கத்துடன் கேட்டது நினைவுக்கு வருகின்றது.

எனது குடும்பத்தினர் எந்த விமானத்தில் எத்தனை மணிக்கு வந்து இறங்குகிறார்கள் என்பது என்னோடு சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தெரியும். புலம் பெயர்ந்தோர் புனர்வாழ்வு மையத்தில் எங்களுக்கு ஒரு தனி வீடு ஏற்பாடு செய்து தேவையான பொருட்கள் அனைத்தையும் வாங்கி வைத்திருந்தார்கள். அந்த நேரம் மாறிற் சூத்தரில்லா செஞ்சிலுவைச் சங்கத்தின் வெளிநாட்டுச் சேவைக்குப் போய்விட்டார். மாறிற்றின் இடத்துக்கு வந்த செஞ்சிலுவைச் சங்கத்தின் அதிகாரியான பெண்மணி (பெயர் ஞாபகம் இல்லை) எங்களை அழைத்துப் போக செஞ்சிலுவைச் சங்க வாகனம் ஒன்றுடன் விமான நிலையத்துக்கு வந்திருந்தார். பின்னர் பல தடவைகள் எங்கள் வீட்டுக்கு வந்தார். பல வருடங்களாகப் பல உதவிகளைச் செய்தார். மாறிற் சூத்தரிலா எனது குடும்பத்துக்குத் தானாகவே முன்வந்து செய்த மனிதாபிமானம் மிக்க பல உதவிகளைப் பார்த்து மனம் நெகிழ்ந்து போயிருந்தேன். ஆனால் மாறிற்றின் இடத்துக்கு வந்திருந்த புதிய செஞ்சிலுவைச் சங்க அதிகாரி, மாறிற்றைத் தள்ளி விழுத்திவிட்டுத் தான் இன்னும் உயரத்துக்குப் போய்விட்டார்.

எனது மனைவி மக்கள் இலங்கையின் வெப்பதட்ப நிலைக்கேற்ற உடைகளுடன் தான் வந்து இறங்குவார்கள் என்பதை ஊகித்த லொயிட் சுவான்ஸ், சில குளிராடைகளை விமான நிலையத்துக்கு அனுப்பியிருந்தார். புனர்வாழ்வு மையத்தின் அதிபராக இருந்த பீர்யோ டுப்போயும் பின் ஒரு காலகட்டத்தில் வெளிநாட்டுச் சேவைக்குப் போய்விட்டார். பின்லாந்தில் தொடங்கிய வாழ்க்கை என்னும் ரயில் பயணத்தில் பல கட்டங்களில் பலர் வந்தார்கள். உறவாடி மகிழ்ந்தார்கள். வெவ்வேறு கட்டங்களில் பிரிந்து போனார்கள். முதல் நாளிலிருந்து கடைசி நாள்வரை 25 வருடங்களாகச் சேர்ந்து பயணித்தவர் லொயிட் சுவான்ஸ் ஒருவர்தான்.

எழுத்தாள நண்பர் சிற்பி, “பின்லாந்து உங்களுடைய இரண்டாவது தாயகமாக நிரந்தரமாகி விட்டது.” என்று ஒரு கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். பின்லாந்து எங்களுக்கு மிகவும் பிடித்த நாடு. எத்தனை வருடங்கள் ஆனாலும் பின்லாந்திலேயே வாழ்ந்து முடிப்பது என்று பிரியப்பட்டோம். காலம் விடவில்லை. ஒழுங்காகத் தமிழே பேசத் தெரியாத இரண்டொரு தமிழ்க் குடும்பங்கள், பின்லாந்துக் குடியுரிமை கிடைத்ததும் ஆங்கிலத்தில் பேச ஆசைப்பட்டு லண்டனுக்குப் புறப்பட்டுப் போனார்கள். இரண்டொரு மாதங்களில் ‘அக்கரைக்கு இக்கரை மேல்’ என்று திரும்பி வந்துவிட்டார்கள். இருப்பதை விட்டுவிட்டு பறப்பதற்கு ஆசைப்படாதே என்று யாரோ சொன்னார்களே! யாரும் சொல்லவில்லை. அடிபட்ட நான்தான் சொல்கிறேன். இதுதான் வாழ்க்கை! ஒரு பெருமூச்சுடன் பின்னிஷ் மொழியில் சொல்லப் போனால், Uum...! Tämä on elämää!

பின்லாந்தில் என் மனைவிக்கு மொழிக் கல்வியும் தொழிற் பயிற்சியும் கொடுத்தார்கள். அதன் பின்னர் எஸ்ப்போ நகராட்சியின் தலைமை நூலகத்தில் உதவி நூலகராக வேலையும் கிடைத்தது. பிள்ளைகளை வழக்கமான பின்னிஷ் பாடசாலைக்கு அனுப்பினார்கள். பிள்ளைகளின் பிஞ்சு மனங்களில் பின்லாந்து மொழியும் பின்லாந்து மக்களின் நல்ல பழக்க வழக்கங்களும் ‘பச்சென்று’ ஒட்டிக் கொண்டன. “இவ்வளவு நன்றாகப் பின்னிஷ் மொழியைப் பேசுகிறீர்களே. உங்களுடைய பெற்றோரில் யார் பின்லாந்தியர்? அப்பாவா? அம்மாவா?” என்றும் சிலர் கேட்டார்கள். பிள்ளைகள் படித்த பாடசாலை ஆசிரியர்களும் மனைவி கடமையாற்றிய நூலக நண்பர்களும் அறிமுகம் ஆனார்கள். தொடக்க நாட்களில் பின்லாந்தியருடன் பழக நாங்கள் கூச்சப்பட்டோம். ஆனால் அவர்கள் எங்களுடன் உறவாட ஆர்வம் காட்டினார்கள். கல்வி சம்பந்தமாகவோ தொழில் தொடர்பாகவோ நான்கு பின்லாந்தியருடன் எங்களில் ஒருவர் ஒரு நேர்முகப் தேர்வுக்குப் போனால் எங்களுக்கு முன்னுரிமை தந்தார்கள். ஒரு பின்லாந்தியருக்கு உதவ இந்த நாடே இருக்கிறது. எல்லா உறவுகளையும் உதறிவிட்டு முன்பின் தெரியாத எங்களை நம்பி வந்தவர்களுக்கு நாங்கள் எல்லோரும்தான் உண்மையான உறவுகள் என்ற விசாலமான சிந்தனை சிலருடைய செயலில் தெரிந்தது. இந்தக் கண்ணோட்டம் எங்களுடைய கலாசாரத்தில் காணப்படாத (எங்களுக்குக் கஷ்டமான!) ஒரு பின்லாந்திய கலாசாரம்.

நான் இலங்கையைவிட்டு வெளியேறுவது என்று தீர்மானித்த பொழுது அன்றைய சூழ்நிலையில் எனது மனதில் முதலாவது நாடாக ஜேர்மனியும் இரண்டாவது நாடாகக் கனடாவும் இருந்தன. ஒரு முறை கனடாவுக்குப் பயணப்பட என்று புறப்பட்டுக் கட்டுநாயக்கா விமான நிலைய வாயில்வரை வந்து திரும்

தொடர்தல் 77ம் பக்கம்

# Tamil Mirror தமிழ் மிரர்

## ENGLISH SHORT STORY CONTEST






Entries must be received by 11:59 p.m., Friday, September 10, 2012

## -For Tamils around the World-

**Attention Tamil English Writers! Do you have a good story to tell? If you do, here is the opportunity to take part in this prestigious writing contest that offers you a chance to tell that story to readers across the World.**
**The contest, which is in its First year, is open to all Tamils around the World, aged 19 and older.**

## Five Prizes



- **The winner of the contest will receive a grand prize of $500.00, plus creative writing book from CHAPTERS Book store.**
- **The second-place winner will receive a prize of $300.00**
- **The third-place winner will receive $200.00**
- **The fourth-place winner will receive $ 150.00**
- **And the fifth-place winner will receive $ 100.00**

**Mail or email your submission to:**

**Short Story Contest, Tamil Mirror**
**3364 Keele Street**
**PO BOX 50513**
**Toronto, On, M3J 3LO. Canada**
**E mail: tamilmirror2011@gmail.com**



**• NO ENTRY FEE REQUIRED**

For more info: Please visit www.thetamilmirror.com or www.tamilmirrorcanada.blogspot.com

# அடி வாங்கிப்...

75ம் பக்கத் தொடர்ச்சி...

பிப் போயிருக்கிறேன். என்னை ஜேர்மனிக்கு அனுப்புகிறேன் என்று கூறிக்கொண்டிருந்த ஒரு தரகரை ஒருநாள் கொழும்பு மெயின் வீதியில் சந்தித்தேன். அவர் என்னை விமானத்தில் ஏற்றிப் பாகிஸ்தானுக்கு அனுப்புவாராம். அங்குள்ள அவரது நண்பர் அங்கிருந்து மோட்டார் சைக்கிளில் என்னை ஜேர்மன் எல்லையில் கொண்டுபோய்ப் பறித்துவிடுவாராம். ஜேர்மன் அரச அதிகாரிகள் பாண்டு வாத்தியத்துடன் வந்து என்னை அழைத்துப் போவார்களாம். 'கூரை ஏறிக் கோணற் சுரக்காய் அறுக்காத குருக்களா, நாளைக்கு வானத்தைக் கீறி வைகுந்தம் காட்டப் போகிறார்?' என்ற பழமொழி மனத் திரையில் பளிச்பளிச் என்றது. கொக்குவிலிலிருந்து கோண்டாவிலுக்குப் போகவே வழி தெரியாத அவரை எப்படி நம்பலாம் என்று எண்ணிய நான், பக்கத்து நடைபாதையில் பளபளப்பான சாரிகள் கட்டி நகர்ந்து கொண்டிருந்த பெண்கள் கூட்டத்தை அவர் பராக்குப் பார்த்துக் கொண்டிருந்த வேளையில் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவந்துவிட்டேன். அடுத்து அகப்பட்ட தரகர் ஓர் ஓய்வுபெற்ற தமிழாசிரியர். நல்ல மனிதராகத் தெரிந்தார். தூரத்துப் பார்வையில் தாடியும் கொண்டையும் இல்லாத திருவள்ளுவர் மாதிரி இருந்தார். அவருடைய வார்த்தைகளில், 'உண்மையைத் தவிர வேறெதுவுமில்லை' என்ற சத்தியப் பிரமாணம் தெரிந்தது. இப்படிப்பட்ட அப்பாவிகள் இத்தகைய வில்லங்கமான வேலைக்கு வரக்கூடாது என்று உள்ளூர எண்ணி வருத்தப்பட்டேன். அவர் அடிக்கடி எனது கைகளையே பார்த்துப் பார்த்துப் பேசினார். அவருடைய பிரச்சினை என்னவென்றால் அவர் கட்டிய வீடு ஒன்று அரைவாசியில் நின்றுவிட்டது. என்னிடம் ஒரு முற்பணம் வாங்கினால் இன்னும் இரண்டு கற்களை வைத்துச் சுவர்களைக் கொஞ்சம் உயர்த்தலாம் என்பதுதான். முற்பணத்தையும் பாஸ்போர்ட்டையும் அவரிடம் கொடுத்து, "பொய் விஸா, கள்ளப் பாஸ்போர்ட், பம்மாத்துப் பண்ணிய பத்திரங்கள் என்று எதையும் ஏற்கமாட்டேன். உங்களால் முடியவில்லை என்றால் காசைத் திருப்பித் தாருங்கள்" என்று சொல்லிவிட்டு யாழ்ப்பாணம் போய்விட்டேன். அடிக்கடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு நிலைமையை விசாரித்துக் கொள்வேன்.

திடீரென்று ஒருநாள், "உங்களுக்குப் பின்லாந்துக்கு விஸா எடுத்துவிட்டேன். இன்னும் இரண்டு நாட்களில் விஸா அடித்த பாஸ்போர்ட்டும் பயணச்சீட்டுகளும் உங்கள் கைக்கு வரும்," என்றார்.

"பின்லாந்து எங்கே இருக்கிறது?" என்று கேட்டேன். "பின்லாந்தில்தான்" என்றார்.

ஓகோ, அவருக்கே தெரியாது போலிருக்கிறது என்று எண்ணிக் கொண்டு நடராசா அண்ணரைத் தேடி யாழ்ப்பாணம் கச்சேரிக்குப் போனேன். நடராசா என்பவர் உசனைச் சேர்ந்தவர். புத்தளம் கச்சேரியில் தேர்தல் அலுவலகத்தில் பல வருடங்களாகத் தலைமை எழுதுவினைஞராக இருந்தவர். பின்னர் இடமாற்றம் கிடைத்து யாழ்ப்பாணம் கச்சேரிக்கு வந்துவிட்டார். நான் சொன்ன விபரங்களைக் கேட்டுவிட்டு, ஹரிச்சந்திரா நாடகத்தின் மயான காண்டத்தை முதல்முறையாகப் பார்த்தவரைப் போல கொஞ்ச நேரம் மவுனமாக இருந்தார். பின்னர், "ஏண்டாப்பா, உனக்கு வேறு நாடே கிடைக்க வில்லையா? சந்திர மண்டலத்துக்குப் போய்ச் சட்டியான விற்கப் போகிறேன் என்பது போலச் சொல்கிறாய். இந்தப் பின்லாந்து எங்கே இருக்கிறது?" என்று கேட்டார்.

"தெரியாது" என்று நான் தலையை ஆட்டினேன். என்னை முறைத்தவர், எங்கே எழுந்து அறைந்துவிடுவாரோ என்று பயமாக இருந்தது.

"சரி, வா" என்று எழுந்தார் நடராசா அண்ணர். "இங்கே ஒரு சீனியர் இருக்கிறார். அவர் உலக நாடுகளை உரலிலே போட்டு இடித்து உளுத்தங்களி கிண்டிச் சாப்பிட்டவர். பின்லாந்தைப்பற்றி அவரிடம் கேட்கலாம்".

அந்தச் சீனியர் தனது புத்தகங்கள் எல்லாவற்றையும் புரட்டோ புரட்டென்று புரட்டி, வரைபடங்களையெல்லாம் நிலத்திலே தாறுமாறாகப் பரப்பித் தேடி, அரை மணி நேரத்துக்குப் பின்னர், "இதோ பின்லாந்தைக் கண்டுபிடித்துவிட்டேன். வட துருவத்தோடு ஒட்டிக் கொண்டு இருக்கிறது. நீல நிறத்தில் நல்ல கலர் அடித்திருக்கிறான். நாடு வடிவாக இருக்கிறது," என்று பெருமையுடன் சொன்னார்.

"அங்குள்ள மக்களைப்பற்றி...!" என்று நடராசா அண்ணர் இழுத்தார்.

"மக்களா? இதுவென்ன கேள்வி? வட துருவத்துக்கு அருகில் யார் இருப்பார்கள்?" என்று தொடர்ந்தார் சீனியர். "அங்கே எஸ்கிமோவர்தான் வாழ்கிறார்கள். பச்சை இறைச்சிதான் அவர்களுடைய உணவு. குள்ளமான மனிதர்கள். அவர்களுடைய பனிக்கட்டி வீடுகளுக்குள் குனிந்துதான் நுழைவார்கள். ஒருவேளை நீங்கள் தவழ்ந்து போக வேண்டிவருமோ?" என்று என்னைப் பார்த்துக் கண்ணடித்தார். நான் நடராசா அண்ணரைக் கடைகண்ணால் பார்த்தேன். அவர் கண்களை மூடிக்கொண்டு பற்களை 'நற நற' வென்று கடித்துக் கொண்டிருந்தார்.

சீனியர் என்னைப் பார்த்து, "எதற்கும் உங்களுடைய சாதகத்தை ஒரு நல்ல சோதிடரிடம் காட்டுங்கள். பெருமாள் கோயிலுக்குப் போய் ஒரு நவக்கிரக அர்ச்சனை செய்துவிட்டுப் புறப்படுங்கள்" என்று சொன்னார். 'கிர் கிர்' என்று ஏதோ ஒரு சப்தம் எங்கேயோ கேட்பதுபோல இருந்தது. அது, ஒருவேளை எனது தலை சுற்றிய சப்தமாக இருந்திருக்குமோ?

பின்லாந்துக்குச் சுற்றுலாப் பயண விஸாவைப் பெற்றுத் தந்த ஓய்வுபெற்ற ஆசிரியரை அறிமுகப்படுத்திய நண்பரின் பெயர் இராஜலிங்கம். நான் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் கடமை ஆற்றிய காலத்தில் அவர் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்தார். நீதிமன்றத்தில் இருந்த வழக்குகள் தொடர்பாக அடிக்கடி சந்தித்துப் பேசிய வகையில் நண்பர்களானோம். சுன்னாகத்தில் அவருடைய வீட்டுக்கு நான் போயிருக்கிறேன். அவருடைய மனைவியின் கையால் தேனீர் வாங்கிப் பருகியிருக்கிறேன். பின்லாந்து விஸா கிடைக்க உதவியதற்காக கனடாவில் வாழும் அவருக்கு நன்றி கூறக் கடந்த 30 வருடங்களாகத் தேடிக் கொண்டிருக்கிறேன். இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னர் கனடாவில் ராமக் கிருஷ்ண விழா ஒன்றில் சுன்னாகத்தைச் சேர்ந்த ஒருவரைச் சந்தித்தேன். அவர் தனக்கு இராஜலிங்கத்தைத் தெரியும் என்றும் ஆனால் அவருடைய தற்போதைய முகவரி தெரியாது என்றும் சொன்னார். இராஜலிங்கத்தின் மனைவி ஒரு அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் காலமாகிவிட்டதாகவும், அதிலிருந்து இராஜலிங்கம் மனம் நொருங்கிப் போய் வாழ்வதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். உடைந்து போனால் பொறுக்கி எடுத்து ஒட்ட வைக்க முயற்சி செய்யலாம். நொருங்கிப் போனால் கூட்டியள்ளி எறிய வேண்டியதுதான்! ஒருவர் ஒரு மரணச் செய்தியைச் சொன்னால், 'ஓ, அப்படியா?' என்று கேட்டுக் கொண்டே நகர்ந்திருக்கிறோம். எதுவும் தனக்குத் தனக்கு என்றால்தான் மனம் படக்குப் படக்கு என்னும் என்பார்கள். அன்னியோன்னியமான ஒரு குடும்பத்தில் கணவனோ மனைவியோ மறைவது என்பது இல்லறம் என்னும் அந்தக் கோயிலின் வாயிற்கோபுரம் சரிபாதி சரிவது போன்றது என்ற அறிவையும், கர்ப்பகிரகத்தின் திருவிளக்கு அணைவது போன்றது என்ற ஞானத்தையும் அடி வாங்கித்தான் அடைய வேண்டும் என்பது ஆண்டவன் கட்டளை போலும்!

*(தொடரும்)*



uthayanan@thaiveedu.com

JRS College
of Business and Health Care Inc.
"Committed to Provide Quality Training"

Non Vocational Program
Food Service Worker
Starts on August 12th @ 9.00 am(Sunday)
Electrician License Exam prep course
Starts soon

VOCATIONAL PROGRAM
Accounting and Payroll Administration Diploma
(Next Batch Starts in September)
Health Office Administrator Diploma (HOA)
(Next Batch Starts September)
Office Assistant Diploma
Personal Support Worker Diploma (PSW)
(Next Batch Starts in September)
Computerized Accounting Diploma
* Approved as a Vocational Program under the Private Career Colleges Act 2005.

NON VOCATIONAL PROGRAM
Food Handling
Electrician Licence Exam prep course
Payroll
Bank Teller
Cashier
Ms Office
QuickBooks
Simply Accounting
Accpac
Business Communication
Dietician Aid
Food Service Worker
* This Program does not require approval under the Private Career Colleges act 2005.

Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005.

Contact Info
(Midland & Finch)
330-4168 Finch Ave East
Scarborough, ON M1S 5H6
416-292-2455

# சரசோதிமாலையில் வீடுகட்டும் படலம்

**- பால சிவகடாட்சம் -**

இற்றைக்கு எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஈழத்தில் வீடுகள் எப்படிக் கட்டப்பட்டன எவ்வாறு வீடு குடிபுகும் சடங்குகள் நடை-பெற்றன போன்றவிபரங்களை சரசோதிமாலை மூலம் அறியமுடிகிறது. வீடுகட்டுவதற்குப் பொருத்தமான நிலத்தைக் கண்டறியும் வழி முறைகள் மனைசெயற்படலத்தில் முதலில் கூறப்பட்டுள்ளன. நிறை, மணம், தோற்றம், மணல்பாங்கு என்னும் மண் பரிசோதனைகளுடன் கூடவே சகுனங்களையும் கவனத்தில் கொண்டு மனை அமைப்பதற்கேற்ற தரையைத் தேர்ந்தெடுக்கவேண்டும். மனிதர் வாழ்வதற்கும் கடவுளர்க்கும் கட்டவேண்டிய அறைகள் முறைப்படி செய்வதை அறிந்து வாஸ்து புருஷன் நிற்கும் நிலைக்கு ஏற்ப வீடுகட்ட வேண்டும் என்று முன்னோர்களை மேற்கோள் காட்டிக் கூறுகிறார் இன்னூலாசிரியர்.

*நிறை மணமுருவந்தூளி சோதனை நிமித்தத்தாலே*
*தறை தனைத்தேர்ந்துகொண்டு*
*தக்கவிண்ணவர்க்குமண்ணோர்க்கு*
*அறைகளாம்படியேசெய்வது அறிந்து பூநாகநிற்கு*
*முறையினால் வீடுகட்ட மொழிந்தனர்முனிவரன்றே*

மனைசெயற்படலம்: பாடல் 1

வாஸ்து சாஸ்திரம் பற்றிக் கூற முற்பட்டால் இந்த நூல் விரிவாகிவிடும். எனவே இது பற்றி விரிவாக அறிந்துகொள்வதற்கு முன்னோர்கள் எழுதிவைத்துள்ள சிற்பநூலைப் படித்து அறிந்துகொள்ளலாம் என்று கூறிவிட்டு இது பற்றித் தாம் விரிவாகக் கூறுவதைத் தவிர்த்துக் கொண்டார் நூலாசிரியர்.

*இல்லமேமுதலாம் வாத்து வியற்றிடற்குரிய பூமிப்*
*புல்லு மாகிருதிதன்னைப் புகன்றிடின் விரிவதாகவும்*
*பல்வளைக்கரத்தாய் முன்னோர்*
*பகர்ந்திடுஞ்சிற்பநூலிற்*
*சொல்லியவகையைப் பார்த்துச் சுகம்பெற*
*வியற்றுவாயே*

*மனைசெயற்படலம்: பாடல் 6*

எனினும் வாஸ்து தொடர்பாக ஒரு சில விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார். வீடுகட்டும் நிலம் கிழக்கிலும் வடக்கிலும் தாழ்ந்து இருப்பின் வளமான வாழ்வும் செல்வமும் சேருமென்றும் தெற்கும் மேற்கும் தாழ்ந்திருந்தால் பெருந்துன்பமும் கேடும் விளையும் என்றும் கூறுகிறார்.

*வளர்நிலம் கிழக்கொடு வடக்குத் தாழ்ந்திடில்*
*அளவிலா வாழ்வுடன் ஆக்கமும் எய்துமால்*
*விளைவுறு தெற்கொடு மேற்குத் தாழ்ந்திடிற்*
*கிளர்பெருந் துன்பமும் கேடும் எய்துமே*


*மனசெயற்படலம்: பாடல் 7*

வீட்டினை ஒன்பது அறைகளாகப் பிரித்து நீண்ட வலப்பக்கமாக ஐந்து அறைகளுக்கும் இடப்பக்கமாக மூன்று அறைகளுக்கும் இடம் விட்டு நடுவில் வாயிலை அமைக்க வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது.

*ஓதியவீடறையொன்பதுசெய்தே*
*நீதியொடைந்தறைநீள்வலம்விட்டுக்*
*கோதறுமூவறைகூறிடம்விட்டான்*
*மேதகுவாயில்விளம்பிடைசெய்யே*

*மனைசெயற்படலம்: பாடல் 24*

அக்காலப்பகுதியில் வீடுகளின் சுவர் பெரும்பாலும் மண்ணால் அல்லது கல்லினால் எழுப்பப்பெற்றன. வீடு வேய்வதற்கும் வீடு மெழுகுவதற்கும் பொருத்தமான நாட்கள் குறித்தும் போசராச பண்டிதர் குறிப்பிட்டுள்ளார்.


சரசோதிமாலை

வீடு முழுமயாகப் பூர்த்தி அடைந்த பின்னரேயே வீடு குடிபுகவேண்டும். தாழ்ப்பாளோடு கூடிய கதவு இல்லாமல், தரையும் சுவரும் மெழுகாமல் கிரகபலி கொடுக்காமல், மேற்கூரை வேயாமல், பசுவுக்குக் கொட்டில் கட்டாமல், ஒருவர் வீடுகுடிபுகுவாராயின் சுற்றத்தாரும் பொருளுங் கெடுவதோடு தாமுங் கெடுவது நிச்சயம் என்கிறார் இந்நூலாசிரியர்.

*தாழொடுகதவுமின்றித் தரைசுவர் தீற்றலின்றிக்*
*கோளுறுபலியுமின்றிக் கூரைமேல்வேய்தலின்றி*
*நீள்பசுவுறைதலின்றி நீடகம்புகுவராயிற்*
*கேளிரும்பொருளுந்தானுங் கெடுவதுதிண்ணமாமே*

*மனைசெயற்படலம்: பாடல் 45*

வீடு குடிபுகுவதற்கு முன் கடுகு, கொத்தமல்லி, அதிமதுரம், வசம்பு, கோரைக்கிழங்கு, குங்கிலியம், வேர்க்கொம்பு, எருக்கு, துளசி, பம்பளிமாசுத்தோற்பொடி, புடோல், பேய்ப்புடொல் என்னும் மூலிகைகளை எரித்துப் புகை உண்டாக்கி அப்புகையினால் வீடு முழுவதற்கும் தூபம் போடுவதன்மூலம் தேள் மூட்டை பாம்பு போன்ற விஷ ஜந்துக்கள் வீட்டுக்குள் நுழையாதவறு தவிர்த்துக் கொள்ளலாம் என்று அறிவுரையும் வழங்கப்பட்டுள்ளது.

*கடுகிங்குகொத்தமதுரம்வசம்பு கனமோடு*
*குக்கில்வகைதான்*
*சுடுசுக்கெருக்குத் துளபம்மெதுக்குத் துகளர்*
*புடோலமனையிற்*
*சுடுமிக்கதூபமிடுதேண்முகுட்டை கடுநாகம்*
*யாவுமணுகா*
*விடுமுற்றபேய்கடன்தானியங்கண்மிகுமென்பர்மேன்மை*
*மயவரே*

*மனைசெயற்படலம்: பாடல் 46*

இந்நூலில் வேறுபல விடயங்களுடன் வீட்டு மனையருகில் நிற்கத் தகுதியான மரங்கள், வளவுக்குள் நிற்கக்கூடாத மரங்கள், என்று ஒரு பட்டியலே தந்துள்ளார்.

*சீதநீர்க் குலைக்காய்த் தெங்கு செழும் பலா*
*வாழை பூகம்*
*மாதுளை திராட்சம் வேம்பு வளர் எலுமிச்சை*
*மௌவல்*
*ஆதளை துளசி சூதம் தக்க வம்பளை*
*நாரத்தை*
*மீதுறு கொன்றை நாவல் வீட்டின்பால்*
*நிற்கநன்றே*

*மனைசெயற்படலம்: பாடல் 65*

குளிர்ச்சி தருகின்ற இளனீர்க்குலைகளைத் தரும் தென்னை, பலா, வாழை, கமுகு, மாதுளை, திராட்சை, வேம்பு, எலுமிச்சை, மல்லிகை, காத்தோட்டி, துளசி, மா, நாரத்தை, கொன்றை மற்றும் நாவல் என்பன வீட்டு மனையருகில் நிற்கலாம் என்கிறார் இந்த அரண்மனைச் சோதிடர். வீட்டுக்கு நல்லதெனப் பராக்கிரமபாகுவின் சோதிடர் குறிப்பிட்டுள்ள மரங்கள் ஒவ்வொன்றும் ஏதோஒரு விதத்தில் அன்றாட சீவியத்துக்கு உதவுவன.


சிலமரங்கள் வீட்டுமனைக்கருகே நிற்கக் கூடாதெனவும் போசராசபண்டிதர் குறிப்பிட்டுள்ளார். இலவு, கோங்கு, விளாத்தி, கூளைப் பலா, இருப்பை, புளி, வில்வம், வாகை என்பன இவற்றுள் அடங்கும். மிக உயரமாக வளர்ந்து வீட்டின்மேல் கிளைகள் பரப்பி சூரிய ஒளியை மறைத்துவிடக்கூடிய மரங்கள் இவை என்பது மனங்கொளத்தக்கது.

*விண்ணோங்கும் இலவு கோங்கு விளாம் புளி*
*மிளகு கூழா*
*வண்ணோங்கும் இருப்பை வில்வம்அலரி*
*கார்ப்பாசம் அச்சம்*
*தண்ணோங்கு முருங்கை வாகை தாலம்*
*ஏரண்டம் அர்க்கம்*
*பண்ணோங்கு மனையில் நிற்கில் பாழ்படும்*
*இல்லந்தானே*

*மனைசெயற்படலம்: பாடல் 66*

வீட்டருகே நிற்கக்கூடாத மரங்களாக அலரி, ஆமணக்கு, அகத்தி, பருத்தி, எருக்கு, முருங்கை, பனை என்பனவும் கூறப்படுகின்றன. அலரிக்காய், தோலுடன்கூடிய ஆமணக்கம் விதை என்பன மிகுந்த நச்சுத்தன்மையுடையன. அவை வீட்டருகே நிற்பது ஆபத்து. அகத்தி இலை உணவுக்கு ஏற்றதாயினும் அதைப் புறந்தள்ளி விட வேண்டி வந்ததற்கான காரணம் தெரியவில்லை.

*(தொடரும்...)*



Sivakadadcham@thaiveedu.com

## கொள்ளை போன கொம்பு:

தென்னாபிரிக்காவில் ஒரு காண்டாமிருகப் பண்ணையில் உள்ள 15 வெள்ளைக் காண்டாமிருகங்களின் கொம்புகள் அகற்றப்பட்டிருக்கின்றன. கொம்புகளுக்காக, கடத்தற்காரர்கள் மிருகங்களைக் கொல்வதைத் தடுக்கவே இந்நடவடிக்கை. காண்டா மிருகங்களைப் பாதுகாக்க பல அரசுகள் இவ்வாறு செய்கின்றன.

இந்தப் பண்ணையில் வெளியே கண்ணாடி நாரிழையால் (Fibre Glass) ஆன வெள்ளைக் காண்டாமிருகச் சிலையொன்றிருந்தது. அதன் கொம்பை யாரோ வெட்டிக் கொண்டு போய்விட்டனர்.

அது சரி, காண்டாமிருகக் கொம்பை ஏன் கடத்துகின்றனர்? வியட்நாம், சீனா போன்ற நாடுகளில் நாட்டு மருத்துவத்தில் பாலியல் இச்சையைத் தூண்டுவதற்காகவும் காய்ச்சல் போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதற்காகவும் கொம்பைத் தூளாக்கிப் பயன்படுத்து கின்றனர். அறிவியலில் இன்றும் இம்மருத்துவமுறை நிரூபிக்கப்படவில்லை. கொம்பில் இருப்பது Keratin என்ற வேதிப்பொருள். தலைமுடி, நகம் போன்றவற்றில் Keratin இன் பங்கு அதிகம். கண்ணாடி நாரிழைக் கொம்பை வைத்து என்ன செய்யப்போகின்-றனரென்று தெரியவில்லை.



தென்னாபிரிக்கா மற்றும் அயல் நாடுகளில் ஒரு கிலோகிராம் காண்டா மிருகக் கொம்பின் கறுப்புச் சந்தை விலை $55,000

அஸ்பிரினும் வயாக்கராவும் கொள்ளை மலிவல்லவோ…!

குட்டான்

GP
TELECOM
இரமணன் திரு
(முன்னாள் பெல் கனடா ஊழியர்)
Security Camera Systems
Telephone and Voice Mail Systems
Voip Phone Systems - Wireless Networks
Surveillance Cameras
Voice and Data Structured Cabling
Professional Cable Fishing for
Residential and Commercial Buildings
416.203.0344


ROGERS

# தரமான சேவைகள் ஒப்பற்ற விலையில்



Digital Basic Cable + Hi Speed Lite Internet = $45 35
(For 1 Year 2 year Term)
FREE HD PVR



HI Speed Internet 27 99
( For 6 Months )

Digital Plus Cable + Hi Speed Express Internet
$ 75.30
(For 1 year * 2 year Term)



Student Offer
* BASIC CABLE $20.30
* HI SPEED EXPRESS INTERNET (140GB) $ 44.99 (FOR 8 MONTHS)

6 மாதம் இலவசம்
- DIGITAL VIP
- HIGH SPEED INTERNET EXPRESS
- HOME PHONE

*ONLY FOR BRAND NEW HOMES
(FOR 8 MONTHS)

தமிழ் மொழியிலும் சேவை

பலர் அனுபவிக்கும் இச்சலுகைகளை நீங்களும் பெற்றுகொள்ள நேரடியாக அழையுங்கள்!

* All offers for a limited time only

Basic Digital Cable 1Tamil Chanal for $33.92

DANIEL RAVINDRAN
Advisor, Rogers Cable Communications Inc.
(416)-817-7977 / 1-866-360-7977
நம் மக்கள் மத்தியில் 12 வருடங்களுக்கு மேலான சிறந்த சேவை
Email Id : daniel.ravindran@rcirogers.com

*Some conditions may apply, limited time offers, taxes extra.

ROGERS

# 'வெயில் காயும் பெருவெளி' கூர் 2012




கனடா தமிழ்கலை,இலக்கியத்தை வலிதாய் முன்னெடுக்கும் முயற்சியில் 4வது தோற்றம்

விலை-$10.00

கிடைக்கும் இடம் :

KALAIMAHAL BOOK DEPOT
566 PARLIAMENT ST
•
SRIMURUGAN BOOKS
GTS SQUARE
FINCH & MIDDLEFIELD
•
ILANTHULIR VIDEO
FINCH & WARDEN



# இப்போது ஒரே கூரையின் கீழ்

முதன் முறையாக
தமிழர் நிர்வாகத்தில்
sprayfoam CARE
CARE AS IF IT'S OUR OWN

An inteligent choice of insulation for higher performance and an exceptional air sealing

## உங்களின் வீட்டில் திருத்த வேலை செய்கின்றீர்களா?

sprayfoamcare insulation செய்வதன் மூலம் அதியுச்ச சக்தி சேமிப்பை அடைவது மட்டுமல்லாமல் air leakage, water leakage போன்றவற்றையும் தடுக்கலாம்.

## Room Above the garage

உங்கள் garageற்கு மேல் உள்ள வீட்டின் பகுதி தற்போது அதிக வெப்பமாகவோ அல்லது பனிக்காலத்தில் அதிக குளிராகவோ இருக்கின்றனவா?

sprayfoamcare insulation செய்வதன் மூலம் இப்பிரச்சனைக்கான தீர்வை அடையலாம்


பல வருடங்களாக
தமிழர் நிர்வாகத்தில்
Atticare
CARE AS IF IT'S OUR OWN


Insulating your attic is the number one way to make your home energy efficient

## உங்களின் வீடு மிகவும் வெப்பமாக இருக்கின்றதா?

நீங்கள் உங்கள் வீட்டிற்கு Atticare insulation செய்வதன் மூலம் உங்கள் வீட்டை குளிர்மையாகவும் மின்சார கட்டணத்தையும் சேமிக்கலாம்.

Cash in up to 50% of your energy cost




SPECIAL REBATE COUPON
எமது சேவையை பெற்றுகொள்பவர்களுக்கு
energy audit
blower door pressure test
இலவசம்
A VALUE $299
conditions apply offer expires August 31st 2012

தமிழில் உரையாட
**416.912.2449**

தமிழில் உரையாட
**416.556.6115**

• Attic • Wall • Basement • Crawl space • Garage • Ceiling • Overhang • Dormer

• Air Tightness • Indoor Air Quality • Moisture-mold Control



PRABHA SINNA
Government certified Energy Advisor

YOUR ENERGY EFFICIENCY CONTRACTOR

## Insulation is all about how you install them, Let the experts do it for you

பல வருடங்கள் energy audit அனுபவம் பெற்ற பிரபா சின்னா வின் நிர்வாகத்தின் மூலம்

Make YOUR home GREEN

• An intelligent choice • Energy saving for years to come • Create greater comfort • Sound control your living spaces • Improve your interior air quality

வளர்ச்சிக்குப் பங்களித்த உங்களுக்கு மனமார்ந்த நன்றி!

# 10 ஆண்டுகள் YEARS

## சேவையும் அனுபவமும்
## Service and Experience

# Thank you Sale

**1000 Full Colour Business Cards** **$10**

Design charges, taxes and shipping extra. In store only. Printed one side on 12pts coated card stock. 3 business days turnaround. 1 Hr service and shipping available. Call or email for more details.

**Full Colour Copy/Print 8.5"x11"** **¢10**

Design charges, taxes and shipping extra. In store only. Minimum 100 copies or prints. Printed one side on 20lbs offset stock. Same day turnaround. 1 Hr service and shipping available. Call or email for more details.

**Digital, Offset and Large Format Printing**
**Promotional Products**
**Print and web Integration**

Award winning service
Eco friendly process
3 Brands under one roof
24/7 Online order placing
Competitive prices
Fastest turnaround

**Call customer service:**
**416.752.3278/ 1.866.310.3278**

J2812-ITV1 © 2001-2012 GTTN Group Inc. All rights reserved

PRINT FAST.ca — IMAGINE DIGITALLY — imagine create print promote

Display FAST.ca — signs displays popups exhibits

imprint FAST.ca — promotional products brand marketing

416.752.3278 | 866.310.3278 | www.printfast.ca | print@printfast.ca | 4-2085 Lawrence Ave. E

# ரொறன்ரோவில் 'கர்ணன்'



பொன்னையா விவேகானந்தன்

'ஜுலை 27 வெள்ளி முதல் ஸ்காபரோ AMC Kennedy Commons திரையரங்கில் கர்ணன் திரைப்படம் வெளியாகின்றது'.

இந்த விளம்பரத்தைப் பார்த்ததும், இதயத் திற்குள் இன்ப அதிர்ச்சி.

1964ம் ஆண்டு தைப்பொங்கல் நாளில் முதன் முதலாகத் திரையிடப்பட்ட இந்தப்படம், 48 ஆண்டுகள் கடந்து மீண்டும், அதுவும் வட அமெரிக்க நகரங்களில் திரையிடப்படுகின் றதே என உணர்கையில் ஏற்பட்ட இன்ப அதிர்ச்சிதான் இது.

இத்திரைப்படத்தை நான் முதலில் பார்த்தது என்பதுகளில்தான். 20 ஆண்டுகள் கடந்தும் சிறப்பில் சிறிதளவும் குறையாத அற்புதமான படம் என அக்காலத் தலைமுறை இப்படத் தைப் புகழ்ந்தது. இதற்குப்பின் 28 ஆண்டு கள் கடந்து மீண்டும் கனடாவிலா?

அதிர்ச்சிக்கு ஆளாகாமல் இருக்க முடியுமா?

ஒரு தமிழனாக இதயத்திற்குள் ஏகப்பட்ட பெருமை. தமிழர் நடித்து, தமிழர்களால் உரு வாக்கப்பட்ட பழம்பெரும் தமிழ்த் திரைப் படம், அதிநவீன தொழில்நுட்பத் திரைப்ப டங்களுக்கு மத்தியில் நவீன திரையரங்கில் வெளியாகியிருக்கின்றதே.

ஜுலை 28 சனி இரவு, நண்பர்களோடு திரை யரங்கில் சென்றமர்ந்தேன்.

குந்திதேவி இளவயதில் முனிவர் வரமாக வழங்கிய மந்திரமொன்றை உச்சரிக்க, கதி ரவன் உதவியால் ஒரு மகவைப் பெற்றெடுத்து, பழிக்கு அஞ்சி, அம்மகவைப் பேழையுள் இட்டு ஆற்றோடு விடும் காட்சியோடு ஆரம் பித்தது படம்.

மூன்று மணிநேரம். அப்பால், இப்பால் அசை யவில்லை. வெளியே சென்றுவர உந்துகின்ற பாடல்காட்சிகள் இல்லை. கிராபிக் சண்டை கள் இல்லை. வெறுப்பேற்றும் 'பஞ்ச்' வாய் மொழிகள் இல்லை.

இலக்கிய நயம் மிக்க உரையாடல்கள், பார்ப்போரை ஈர்ப்போடு வைத்திருக்கும் காட் சித் தொகுப்பு, கண்நிறையும் வண்ணத்தில் பொருத்தமான கோணங்களில் காட்சிக்கு வலுச்சேர்க்கும் ஒளிப்பதிவு, திரைக்கதையின் நகர்வு, ஒப்புவமை இல்லா இனிய இசை, திரைப்படத்தின் உயிர்நாடியான கர்ண கதாபாத்திரத்தின் நடிப்பு.

இவையாவும், சற்றே அறிவுநிலை கொண்டு, திரைப்படங்களை ஆய்வுசெய்யும் ஆற்றல் கொண்டிருக்கும் இக்காலத்தில் எம்மை வியக்கவைத்தன.

இது சமூகக்கதை அல்ல. வரலாற்று அரசர் களின் வீரக்கதையும் அல்ல. வடநாட்டு புராணக்கதையான மகாபாரதத்தில் இடம்பெற்ற புராணகாலக் கதாபாத்திரமான கர்ணனின் கதை.

மகாபாரதத்தில் முரண் நாயகர் (வில்லன்) அணியின் முதன்மையானதொரு பாத்திரம் கர்ணன். தலைமை நாயகர் பாத்திரங்களில் முதன்மையானவன் அர்ச்சுனன்.

ஆனால் இத்திரைப்படம் கர்ணனை நாயக னாகவும் அர்ச்சுனனை முரண் நிலையிலும் பார்க்கவைக்கின்றது. இது ஒரு சவால் மிக்க நிலை. காலங்காலமாக மக்களால் ஏற்றுக்




கொள்ளப்பட்ட கதையமைப்பிற்குள் மாற்றுச் சிந்தனையோட்டத்தை விதைக்கும் நிலை.

பீமனைக் கொல்ல முயன்ற கர்ணன், தாய்க் குக் கொடுத்த வரத்தை எண்ணி, 'பிழைத்துப் போ' என உயிர்ப்பிச்சை கொடுப்பதுவும், கர்ணன் மகன் விருஷசேனன் எனும் 12 வயதுப் பாலகனை தூரத்தேயிருந்து அர்ச்சுனன் அம்பெய்து கொல்வதுவும் புராண வெளிப் பாடுகளில் அதிகம் இடம்பெறாதவை. இவை போன்ற பல காட்சிகள் பாண்டவர்களின் மறுபக்கத்தையும் கர்ணனின் புதிய பரிமா ணத்தையும் காட்டுகின்றன.

இந்த முரண்கூற்றுகளையெல்லாம் கடந்து 1964ம் ஆண்டு பெருவெற்றி கண்டது இந்தத் திரைப்படம்.

காரணம் மேற்கூறியவைதான்.

சிவாஜி கணேசனின் ஒப்பற்ற நடிப்பு, நேர்த் தியான திரைக்கதை - வசனம், இனிய இசை.

இத்திரைப்படத்தில் கண்ணனாகத் தோன்று கின்றார் மறைந்த முன்னாள் ஆந்திர முதல்வர் என்.டி. ராமராவ். இவர் காட்சிகளில் தோன்றுகின்றபோதெல்லாம் உரையாடல்க ளில், அங்கதமும் தத்துவ வேதாந்தங்களும் சிந்துகின்றன. துரியோதனன் அவைக்கு கண்ணன் தூது செல்லும் காட்சியும் "கர்ணன் உன் மூத்த மகன்" எனக் குந்திக்குக் கூறும் போதும் போர்க்களத்தில் சோர்வுற்ற அர்ச் சுனனுக்கு உலக நியதியை எடுத்துக்கூறி கடமையை உணர்த்துத் போதும் பாரதத் தின் தத்துவ சாரங்கள் வெளிப்படுகின்றன.

திரைப்படத்தைப் பார்த்தபிறகு மனதெங்கும் நிறைந்திருந்தது நடிகர் திலகத்தின் நடிப்பு. அந்த 3 மணி நேரத்திற்குள் அவர் வெளிப் படுத்திய நடிப்பின் நுண்மைகள் விபரிப்புக்கு அப்பாற்பட்டவை.

அனுமானிக்க முடியாத வேகத்தில் உணர் வுகளை மாற்றி மாற்றி பாவங்கள் வழியும் மொழியின் வழியும் அசைவுகளின் ஊடாக வும் கர்ண வாழ்வு வாழ்ந்து காட்டுகின்றாரே... இவருக்கு ஒப்பாரும் மிக்காரும் இலர். சிவாஜி என்கின்ற ஒருவர் இல்லையெனில் இத்திரைப் படத்தைத் தயாரிக்கும் துணிச்சல் யாருக்கும் வந்திருக்காது.

தாய் குந்திதேவியோடு, கொஞ்சியும் கெஞ் சியும் நடிக்கும் உருக்கமான காட்சி நெஞ் சைவிட்டு ஒருபோதும் நீங்காது.

இது புராணக்கதையின் தழுவல் என்கின்ற போதும், சமகால அரசியல் வாடை வீசாமல் இல்லை. பாண்டவர்களுக்கான உரிமையை துரியோதனன் மறுக்கின்ற போதும், கர்ணன் மகன் போர் அறம் மீறிக் கொல்லப்படுகின்ற போதும், எம் களங்கள் விழிநீரோடு நினை வுக்கு வருகின்றன.

இது ஆரிய வழிப்பட்ட ஒரு புராணக்கதை. இது வரலாற்று உண்மைகளைக் கொண்ட தல்ல. அத்தோடு ஆரியப் பண்பாட்டு எச்சங் களும் இத்திரைவழி வெளிப்படுகின்றன. பார்ப்பன ஆளுமையும் சாதிய அடிமைத்தன மும் புராண இயல்புநிலையை உணர்த்து கின்றன.

இவை கடந்து நின்று இத்திரைப்படத்தை நோக்கினால், 1964ம் ஆண்டில் தமிழ்த் திரை யுலகு, சர்வதேச தரத்திற்கு உருவாக்கிய இத்திரைப்படத்தின் மேன்மையை உணர்ந்து கொள்ளமுடியும்.

இத்திரைப்படம் அக்காலத்தில் 40 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டது. 35 - 38 திரையரங்குகளில் திரையிடப்பட்டது. 4 திரையரங்குகளில் 100 நாட்களுக்கு மேல் ஓடியது.

பாரதப் போர் நிகழ்ந்த இடமென மகாபார தம் சொல்லும் குருஷேத்திரத்திலேதான் படத் தில் வரும் பாரதப்போரும் படமாக்கப்பட் டுள்ளது. சென்னையில் உருவாக்கப்பட்ட போர்க்களத் தேர்களை அங்கு கொண்டு செல்லவே பெருந்தொகை செலவானதாம்.

இத்திரைப்படத்தை இயக்கியிருந்தார் இயக் குனர் பி.ஆர் பந்துலு. சுவை மிக்க உரை யாடல்களுக்குச் சொந்தக்காரர் சக்தி கிருஷ் ணசாமி. இனிய இசையை வழங்கியிருந்த வர்கள் விஸ்வநாதன் - இராமமூர்த்தி இரட் டையர்.

'உள்ளத்தில் நல்ல உள்ளம்'
'என்னுயிர்த்தோழி'
'கண்கள் எங்கே'
'நிலவும் மலரும்'

இந்தப் பாடல்களை மீண்டும் ஒரு தடவை கேட்கின்றபோது பிறக்கும் இன்பத்திற்கு நிகரேது?

இத்திரைப்படத்தை மீண்டும் மூன்றாண்டு முயற்சியாக, டிஜிட்டல் தொழில்நுட்பத் துணை யுடன் மீண்டும் இன்னொரு 40 இலட்ச ரூபாய் செலவில் மெருகூட்டியிருக்கின்றனர். கடந்த மார்ச்சில், 50 அரங்குகளில் வெளி யாகி, சாந்தி திரையரங்கில் 100 நாட்களுக்கு மேல் ஓடியது. மீள்வெளியீட்டில் மொத்தமாக 5 கோடி ரூபாய் வருவாய் ஈட்டியிருக்கின்றது கர்ணன்.

மறுபிறவி எடுத்த தமிழ்த் திரைப்படங்களில் இதுவே அசுர சாதனை.

இப்போது 100 கோடி ரூபாய் செலவழித்தா லும் இது போன்றதொரு கர்ணனை உரு வாக்க முடியாது என்கின்றார்கள்.

இத்திரைப்படத்தின் வெற்றியைத் தொடர்ந்து, வீரபாண்டிய கட்டபொம்மன் 3D யில் மாற்றப் படுவதாக செய்திகள் வருகின்றன.

நாம் வழங்கும் ஊக்கத்தை சற்றே அதிகப் படுத்தினால் பல நல்ல பழைய திரைப்படங் கள் மீளுருப்பெற்று உலகெங்கும் உலா வரும். அது நம் இனத்திற்குப் பெருமை யல்லவா.

vivekanandan.ponniah@thaiveedu.com

■ ■ ■

**TUTORING**

**Grades: 1-8: English, Math, Science & Social studies**
**Grade 9&10: English & Math ஆகிய வகுப்புகள் நடாத்தப்படுவதுடன்**
**EQAO, Literacy test களிற்கும் தயார்படுத்தப்படும்.**

**இடம்: Kennedy & Ellesmere அருகாமையில்**

**அஞ்ஜலீன் திசைராஜா B.A (Hons), M.Sc, Ph.D**
**(Certified teacher)**

**647 291 1357**

# இலகுவாக மோட்கேஜ்

கடினமான இலக்குகளையும் நாம் இலகுவாக்குவோம்

## Mortgages

- First Time Buyers
- Refinancing
- Renewal
- Self Employed
- Pre-Approval
- Bankruptcies
- Bad Credit
- Debt Consultant
- Non-verifiable Income
- New immigrant



### *We Will*

- Simplify the entire process of mortgage financing
- Save you money and time
- Get you the most competitive rates
- Offer you the widest selection of mortgage options including variable rate, fixed rate, capped variable rate, step, secured lines etc. for all situations including self-employed, no down payment ….
- Counsel you on credit and mortgage qualifications
- Provide maximum flexibility in financing choices
- Assist you every step of the way

***Best Rates***

We can get you a mortgage in most situations regardless of your circumstances. Where traditional financial institutions have given the answer "No", We routinely says "**Yes**" and get you a product that suits your needs at an extremely competitive rate.

**VERICO TMP**

**Siva Ratnasingam**


*Lic: M08002133*
*Brokerage # 11156*

SENIOR MORTGAGE CONSULTANT

***2005,2006,2007,2008 Diamond Award Winner***

**416.520.1214**






**இ.பி. டொங்காலா:**

(இமானுவல் டொங்காலா 1941. பிராஸவில் என்ற கொங்கோ குடியரசைச் சேர்ந்தவர். சிறுகதை, நாவல், நாடக ஆசிரியர். பிராஸவில்லிலும் அமெரிக்காவிலும் பிரான்சிலும் இரசாயனவியல் பயின்று முனைவர் பட்டம் பெற்றவர். 1998 வரை கொங்கோவில் பேராசிரியராக வேலை பார்த்தார். சிவில் யுத்தத்தினால் நாட்டை விட்டு வெளியேறி அமெரிக்காவில் கல்வி கற்பிக்கிறார். அமெரிக்க எழுத்தாளர் பிலிப் றொத் இவரின் நண்பர்.

பிரெஞ் மொழியில் எழுதுகிறார். பல மொழிகளில் இவரின் நூல்கள் மொழியாக்கம் செய்யப் பெற்றுள்ளன. கொங்கோ தேசிய எழுத்தாளர்கள் நிறுவனர், முன்னாள் தலைவர். PEN இன் கொங்கோ தலைவர். நாடகக் கொம்பனி ஒன்றை நிறுவி நடத்தியவர்.

அவருடைய நாவல்களான The Fires of Origin, Johnny Mad Dog ஆபிரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாட்டுப் பரிசுகளைப் பெற்றவை. Jass and Palm Wine இவருடைய சிறுகதைத் தொகுதி.)



# அந்த மனிதன்

## - இ.பி. டொங்காலா -

### தமிழில்: என்.கே. மகாலிங்கம்

இல்லை, இந்த முறை அவனால் தப்பவே முடியாது! நாற்பத்தெட்டு மணித்தியாலத்துக்குப் பின் அவன் வழித்தடத்தை அறிந்து கொண்டு விட்டார்கள். அவனுடைய பயணத் திட்டம் தெரிந்து விட்டது. எந்தக் கிராமத்தில் அவன் ஒளித்திருக்கிறான் என்று தெரிந்து விட்டது. ஆனால் அப்படி எத்தனை முறை அவனைப் பற்றிய பொய்த் துப்புக்கள் கிடைத்தன! ஒரே நேரத்தில் அவன் பல இடங்களில் காணப்பட்டான். அவனிடம் எங்கும் இருக்கும் திறன் இருந்தது என்பது போல. அர்ப்பணிப்புள்ள போராளிகளிடம் சில திறன்கள் இருக்கின்றன. ஓர் இடத்துக்குள் இருந்தும் பிடிபடாமல் ஓடித் தப்பும் திறன். ஒருமுறை வடக்கிலிருந்த சதுப்பு நிலப்பகுதிக்குள் பரச்சூட்டால்-வான் குடை-கண்காணிப்புப் படையினரை இறக்கினார்கள். அவனை மோசமாகக் காயப்படுத்தி விட்டார்கள் என்றும் சொன்னார்கள். அதற்குச் சான்றாக அவர்கள் காட்டியது பள்ளத்தாக்கில் மறைந்து போன இரத்தத் தடங்களை. அவன் ஆற்றில் படகொன்றில் தப்பி ஓட முயன்றபோது எல்லைக் காவலாளிகள் அதில் வைத்து அவனைச் சுட்டதாகச் சொன்னார்கள். அப்படகு துரதிர்ஷ்டவசமாக அமிழ்ந்து போனதாகவும் சத்தியம் பண்ணினார்கள். இந்தக் கதைகள் அத்தனையையும் ஊன்றி விசாரிக்கையில் அவை உண்மையல்லவெனத் தெரிந்தன. ஏற்கெனவே இறுகியிருந்த பொலிஸ் வலை மேலும் இறுக்கபட்டது. ஆயுதம் தரித்த புதிய பொலிஸ் பட்டாளம் உருவாக்கப்பட்டது. இராணுவத்திற்கு எல்லையற்ற அதிகாரம் அளிக்கப்பட்டது. படையினர் நகரத்திலுள்ள தொழிலாளர் குடியிருப்புப் பகுதிக்குள் படையெடுத்துச் சென்று வீட்டுக் கதவுகளை உடைத்தார்கள், புல்லாலும் பஞ்சாலும் அடைக்கப்பட்ட படுக்கை மற்றெஸுகளுக்குள் துப்பாக்கிக் கத்தி முனைகளை ஓட்டிப் பார்த்தார்கள், ஃபூ ஃபூ உணவுச் சாக்குகளை கிழித்துத் திறந்தார்கள், எவராவது அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு உடனடியாகப் பதில் சொல்லாவிட்டால் துவக்கு ‘சோங்’கால் அடித்தார்கள், தங்கள் வீட்டை ஏன் உடைக்கிறீர்கள் என்று துணிந்து கேட்டவர்களைக் கொன்றார்கள். இப்படியான வன்முறை உத்திகள் எந்தப் பலனையும் தரவில்லை. நாடு பீதியின் எல்லைக்கே சென்றது. அவன் எங்கே ஒளித்திருக்கிறான்?

தேசத்தை உருவாக்கிய தேசத் தந்தை. அறிவு வழிகாட்டி. மக்களின் மீட்பர். பெரும் மீகாமன். உயிருள்ளவரை ஜனாதிபதி. முப்படைத் தளபதி. மக்களின் அன்புத் தந்தை. அவர் மாபெரும் அரண்மனையில் சாதாரண குடிமக்களுக்கு எட்டாத தூரத்தில் வசிக்கிறார். ஆகவே அது ஏறக்குறைய முடியாததொரு சாதனையாகவே தோன்றியது. எப்படி இருந்த போதிலும் போர் விஞ்ஞானத்திலும் பயங்கரவாத தடுப்பு ஆய்விலும் பட்டங்கள் பெற்ற இஸ்ரேலிய பேராசிரியரால் திட்டமிடப்பட்ட வட்டமான பாதுகாப்பு அமைப்புக்குள் ஒருவராலுமே நுழைய முடியாது.

அரண்மனையிலிருந்து ஐநூறு யார் சுற்றளவுக்கு அப்பால் ஆயுதப் படையினர் ஒவ்வொரு பத்து யார் இடைவெளியில் இரவும் பகலும் காவலுக்கு நின்றனர். இந்த வகை அமைப்பு முதலில் சுற்றளவிலிருந்து இரு நூறு யாருக்கும், பின்னர் நூறு யார் தூரத்திற்கும் பின்பற்றப்பட்டது. அரண்மனை மிக ஆழமான நீருள்ள அகழியால் சூழப்பட்டிருந்தது. அகழிக்குள் ஆபிரிக்கா, இந்தியா, மத்திய அமெரிக்கா ஆகிய இடங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முதலைகள் திரள் திரளாக மொய்த்துக் கொண்டிருந்தன. அவை தனிய சிறு சிறு மீன்களில் மட்டும் உயிர் வாழவில்லை என்பது மிக மிக நிச்சயம். விசேஷமாக, வழக்கமாக நாட்டில் நடைபெறும் உண்மையான அல்லது பொய்யான வன்முறை, ஆட்சி மாற்றச் சதிகளின்போது நடக்கும், அடக்கி ஒடுக்கி வேட்டையாடும் காலத்தில். அகழிக்குப் பின்புறம் ஒரு குழி நிறைய கறுத்த மம்பா பாம்புகளும் பச்சை மம்பா பாம்புகளும் கிடக்கின்றன. அவை கடித்தவுடன் அவற்றின் மிகச் சக்தி வாய்ந்த விஷத்தால் தாக்குண்டு கடிபட்டவர் அந்த இடத்திலேயே உடனே இறந்து விடுவார். சுற்றுச் சுவர் மட்டும் மிகப் பெரியது. அறுபது அடி உயரம். செங்கல்லாலும் கல்லாலும் கட்டப் பெற்றது. அது சிம்பாம்வே நாட்டிலுள்ள கவர்ச்சிகரமான சிதைவுகளைப் போன்றது. அந்தச் சுவர்களில் கண்காணிப்பு அரண்கள், தேடொளிகள், ஆணிகள், முள்ளுக் கம்பிகள், உடைந்த கிளாஸ் துண்டுகள் ஆகியவை நிரம்பி இருந்தன. அரண்மனைக்குள் போவதற்கு மிகப் பெரிய இரண்டு கதவுகள் இருந்தன. அவையும் இழுத்து விடும் பாலமாகப் பாவிக்கப்பட்டன. அவை உள்ளிருந்து மட்டுமே இயக்கப்பட்டன. கடைசியாக, புனிதத்தில் புனிதமான அரண்மனையில் தான் பிரியத்துக்குரிய தந்தை வசித்தார். அதில் நூற்றைம்பது அறைகள். ஒவ்வொன்றிலும் ஒவ்வொன்றையும் ஒவ்வொருவரையும் எதிரொளிக்கும் மிகப் பெரும் கண்ணாடிகள். அவை அனைத்தையும் எல்லையற்றுப் பெருப்பித்தும், சிறுப்பித்தும் காட்டும். அதனால் அங்கு வந்த விருந்தாளிகள் அனைவரும் எந்த நேரமும் தங்களுடைய சிறு செய்கைகளையும் யாரோ கண்காணிக்கிறார்கள் என்று அசௌகரியமாகவும் ஒடுக்கப்பட்டவர்கள் போலவும் உணர்ந்து கொண்டிருப்பார்கள். ஒவ்வொரு அசைவு கூட எதிரொலி போல ஒவ்வொரு அறைக்கும், ஒவ்வொரு கண்ணாடிக்கும், கடைசியில் இறுதிக் கண்ணாடிவரை, முழுப் பிரபஞ்சத்தையுமே கவனித்துக் கொண்டிருக்கும் தலைவரின் கண் இருக்கும் இடம் வரை செல்லும்.

எந்த அறையில் அந்த நிறுவன ஜனாதிபதி துயில்வார் என்பது எவருமே அறியார். பல இரவுகள் தொடர்ந்து அவருடன் தங்கி அவருடைய உயர் நுட்பமான இன்பங்களுக்கு விருந்தளிக்கும் எல்லாம் வல்ல விலைமாதர்களுக்குக் கூட அது தெரியாது. அதிசயங்கள் நிறைந்த அரண்மனையிலிருந்து வெளியிடும் இரண்டு தீர்ப்பாணைகள் பிறப்பிப்பதற்கு இடையிலுள்ள காலத்தில், கன்னிமை அழித்து இன்பம் அனுபவிக்கும் பழுதாக்கப்படாத, மகிழ்ச்சியான, சின்னஞ் சிறு சிறுமிகளுக்கு அவர் துயிலுமிடத்தை அறிந்து கொள்வதற்குரிய சந்தர்ப்பம் இன்னும் குறைவானதே.

அன்புக்குரிய தேசத் தந்தை - ஒப்புயர்வற்ற-அறிவொளிமிக்க - வழிகாட்டி - அனைத்துப் படைகளின் முதற்படைத் தலைவர் - கொடை வள்ளல் - மனிதவின மேதை -பெரும்பான்மையான குடி மக்களின் கண்களுக்கு மனித வடிவில் காட்சி கொடுக்காதவர். மறு பக்கம் எங்கும் நிறைந்திருப்பார்: எல்லா வீடுகளிலும் அவருடைய உருவப் படம் தொங்க விடப்பட வேண்டும் என்பது சட்டம். வானொலியில் வெளிவரும் தகவல் வெளியீடுகள் அவருடைய எழுச்சிமிக்க சிந்தனைக் கூற்று ஒன்று இல்லாமல் ஆரம்பிக்காது அல்லது முடியாது. தொலைக்காட்சி செய்திகள் அவருடைய உருவப்படத்தின் முன்னால் ஆரம்பிக்கும், தொடரும், கடைசியில் அதன் முன்னாலேயே அது முடிவடையும். வெளிவரும் ஒரேயொரு செய்திப் பத்திரிகையிலும் நாலு பக்கங்களில் குடிமக்கள் அவரில்லுள்ள தங்களின் மாளாத அன்பை அவர்கள் எழுதிய கடிதங்களில் தெரிவித்திருப்பார்கள். அவர் எங்கும் நிறைந்தவர். ஆனால் அணுக முடியாதவர். அதனால் தான் அதுவொரு வீர தீரச் செயல்.

இருந்தும் அவன் அதைச் செய்து முடித்திருக்கிறான். முதலைகளைக் கடந்து, மம்பாப் பாம்புகளைக் கடந்து, சிறப்புக் காவலாளிகளைக் கடந்து, அடுத்தது காட்டிக் காட்டிக் கொடுக்கும் கண்ணாடிகளைக் கடந்து அரண்மனைக்குள் சென்று, ஒரு சாதாரண கிளர்ச்சியாளனை அல்லது சதி செய்யத் தூண்டிய ஒருவனைக் கொல்வதுபோல தேசத் தந்தையைக் கொன்றிருக்கிறான். கொன்றது மட்டுமல்லாமல், காவல் கோபுரங்களைத் தவிர்த்து, இழு பாலத்தைக் கடந்து, கறுப்பு, பச்சை மம்பாக்களை கடந்து, முதலைகளைக் கடந்து, சிறப்புக் காவலாளிகளைக் கடந்து திரும்பியும் சென்றிருக்கிறான். தப்பிச் சென்றிருக்கிறான்! நாற்பத்தெட்டு மணித்தியாலத்திற்குப் பிறகும் அவன் இன்னும் பிடிபடவில்லை!

... அதன் பிறகு வதந்தி ஒன்று உலாவியது. அது எங்கேயிருந்து வந்ததென்று ஒருவருக்கும் தெரியாது. அவன் இருக்குமிடத்தைக்

*தொடர்தல் 86ம் பக்கம்*

# அந்த மனிதன்...

85ம் பக்கத் தொடர்ச்சி...

கண்டு பிடித்து விட்டார்கள். அவன் போய் வரும் இடங்கள் தெரிந்துவிட்டன. ஒளித்திருக்கும் கிராமம் அடையாளம் காணப்பட்டு விட்டது. அவனைச் சுற்றி வளைத்து விட்டார்கள். இந்த முறை அவனால் தப்ப முடியாது!

படையினர் நிறைந்த கவச வாகனங்கள், ஜீப்புக்கள், லொறிகள் அவனைத் தேடிக் காலை மூன்று மணிக்கு வெளிக்கிட்டு விட்டது. பீரங்கிப் படைகள் கிராமங்களிலுள்ள வீடுகளைச் சுற்றிப் போகும் சிரமத்தை எடுக்காமல் இரண்டு புள்ளிகளின் நேர்ப்பாதையே ஆகக் கிட்டிய தூரம் என்ற கணக்குப் படி சென்றன. அவர்கள் போய்க் கொண்டிருந்த கிராமங்களை எரித்து விட்டுச் சென்றார்கள். விளைச்சல் நிலங்கள் அழிக்கபட்டன. பிரேதங்கள் குவிந்து கிடந்தன. கற்றப்பில்லர் வாகனங்கள் ஏற்படுத்திய குழித் தடங்களில் பிரேதங்கள் குவிந்து கிடந்தன. தோற்கடிக்கப்பட்ட தேசத்தில் வெற்றியீட்டியவர்கள் சென்றார்கள். கடைசியாக தாங்கள் சேர வேண்டிய இடத்தை வேகமாக அடைந்தார்கள். தங்கள் துவக்குச் ‘சோங்’குகளால் கிராமத்தவர்களை எழுப்பினார்கள். எல்லா விடங்களையும் தேடினார்கள். தானியக் களஞ்சியங்களை காலியாக்கினார்கள். மரங்களைப் பார்த்தார்கள். பரணங்களின் உள்ளே பார்த்தார்கள். அவர்கள் தேடும் மனிதனை கண்டு பிடிக்க முடியவில்லை. அப்படைகளுக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரி சீற்றத்தால் கொதித்தான். அவனுடைய கழுத்துப் பட்டியின்கீழ் அவன் கழுத்து வெடித்து விடும் போல வீங்கியது.

‘அவன் இங்குதான் இருக்கிறான் என்று எனக்குத் தெரியும். ‘வேசை மகன்’. எங்கள் அன்புக்குரிய தேசத் தந்தை, சாகாவரம் பெற்ற வீரர்களின் வரிசையில் இடம் பெறும் அவரைக் கொல்லத் துணிந்தவன். இழிந்தவன். தாடி வைத்தவன். ஒற்றைக் கண் குருடன். அவன் எங்கே ஒளித்திருக்கிறான் என்று இன்னும் பத்து நிமிஷங்களில் நீங்கள் சொல்லாவிட்டால் உங்கள் வீடுகள் எல்லாவற்றையும் எரித்து விடுவேன். உங்கள் ஒவ்வொருத்தனையும் யாரென்றில்லாமல் பிடித்து சித்திரவதை செய்து சுட்டு விடுவேன்!’

உலகத்தைப் படைப்பதற்கு முந்திய அமைதியைப் போன்ற பயங்கரமான அமைதியில் பத்து நிமிஷங்கள் கடந்தன. அதன் பிறகு படை அதிகாரி படையினரைப் பார்த்து பழி வாங்கல் படலம் ஆரம்பிக்கட்டும் என்று ஆணையிட்டான். அவர்கள் கிராமத்தவர்களை முரட்டுத்தனமாகப் பிடித்து இழுத்தார்கள். சிலரைத் தலைகீழாக காலில் தொங்க விட்டு அடித்தார்கள். மிளகாய்த் தூளை வெட்டுக் காயங்களில் அப்பினார்கள். இன்னும் சிலரை சாணியைச் சாப்பிட வைத்தார்கள்... ஆனால் அவர்கள் ஒருவரும் அவனைக் காட்டிக் கொடுக்கவில்லை. அதனால் படையினர் அவர்களின் வீடுகள் அத்தனையையும் எரித்தார்கள். சாப்பிடவே இல்லாமல் பற்றாக்குறையுடன் வாழும் அவர்கள், ஆண்டு முழுவதும் பாடுபட்டு விளைவித்த விளைச்சல்களையும் எரித்தார்கள். அப்படியிருந்தும் அவர்கள் கேட்ட தகவலைச் சொல்லவே இல்லை. உண்மையில், அவர்கள் மௌனமாக இருந்ததற்குரிய காரணம் மிகச் சாதாரணமானது. எவன் அந்த வேலையைச் செய்தான் என்று உண்மையாகவே அவர்களுக்குத் தெரியாது.

அவன் தனி ஒருவனாகவே அதைச் செய்தான். தனது ஆயத்தங்களைப் பல மாதங்களாகச் திட்டமிட்டான். அதைப்பற்றிய விஷயங்களை வாசித்தான், படித்தான், திட்டமிட்டான். அதன் பிறகு பொய்த் தாடியொன்றை வைத்தான். இடது கண்ணை கறுத்தப் பட்டியால், ஒரு கடற் கொள்ளைக்காரனைப் போல மறைத்தான். புக முடியாத அந்த அரண்மனைக்குள் எப்படி ஊடுருவி அந்தச் சர்வாதிகாரியைக் கொல்லலாம் என்று கண்டு பிடித்தான். அதைச் செய்தது மிகவும் எளிதானது. ஆகவே அதை எவருக்கும் சொல்லாமல் இருப்பதில் உறுதியாக இருந்தான். சித்திரவதை செய்தாலும் கூட. அதைத் திரும்பவும் செய்யலாம் என்பதற்காக. இருந்தும், அவனுடைய கிராமத்திற்கு படையினர் எப்படி வந்தார்கள் என்பது அவனுக்கு ஆச்சரியமாகவே இருந்தது. அவர்கள் அவனுடைய அடையாளத்தை உண்மையாகவே கண்டு பிடித்து விட்டார்களா? அல்லது ஏமாற்றுகிறார்களா? அவன் அவர்களுக்கு முன்னால், அவன் செய்தது என்னவென்றே தெரியாத கிராமத்தவர்களுக்கு இடையில் நிற்கிறான். இருந்தும் அவன் தான் அது செய்தது என்பது அவர்களுக்குத் தெரியாதென்பது வெளிப்படையாகவே தெரிகிறது. அங்கே தாடியை மழித்து, கண்கள் இரண்டும் பார்க்க, அடுத்தது என்ன நடக்கிறது என்பதைப் பார்த்துக் கொண்டு அவன் நிற்கிறான்.

படையினருக்குப் பொறுப்பான அதிகாரிக்கு -அவன் ஒரு படைத் தலைவனுங் கூட- அவர்கள் அனைவரும் மௌனமாக இருப்பதைக் கண்டு மேலும் கோபம் கூடியது.

‘கடைசி முறையாச் சொல்லுறன்! அந்த ஒத்தைக் கண்ணனை, வேசை மகனை. கோழைத்தனமாக எங்கள் அன்புக்குரியவனை, நிரந்தர ஜனாதிபதியை - எங்கள் கட்சியின் நிறுவனரை-எங்கள் தேசத்தின் தந்தையைக் கொன்றவனை - அவன் எங்கே ஒளித்திருக்கிறான் என்று நீங்கள் சொல்லாவிட்டால் உங்களில் ஒருத்தனில் எவனையாவது பிடித்து சுட்டுக் கொன்று விடுவேன்! உங்களுக்கு ஒரு ஐஞ்சு நிமிஷம் தாறன்!’

அவன் தான் கட்டியிருந்த குவாட்ஸ் கைக் கடிகாரத்தை பதற்றத்துடன் பார்த்தான். இரண்டு நிமிஷம். ஒரு நிமிஷம். முப்பது விநாடிகள்.

‘படைத் தலைவரே, எங்களுக்கு அவனைத் தெரியாது. அவன் எங்கள் கிராமத்தில் இல்லவே இல்லை என்று சத்தியமாகச் சொல்லுறம்,’ என்று கிராமத் தலைவர் மன்றாடினார்.

‘இனிச் சரி வராது. ஒருத்தனைப் பிடித்து உங்களுக்கு முன்னால் சுடப்போறன். அப்படிச் செய்தால் உங்களுக்கு அது புரியும். ஆ, நீ இங்க வா!’

படைத் தலைவன் அவனைக் காட்டிச் சொன்னான். அவன் அதைப் பற்றி ஆச்சரியப்படக் கூடவில்லை. அதையே அவன் எதிர்பார்த்தவன் போல. ஆழத்தில் அதுவே அவனுக்குத் தேவைப்பட்டதும். அவனுக்குப் பதிலாக வேறொருவனைப் பிடித்துக் கொன்றிருந்தால்



***விளைச்சல் நிலங்கள் அழிக்கபட்டன. கற்றப்பில்லர் வாகனங்கள் ஏற்படுத்திய குழித் தடங்களில் பிரேதங்கள் குவிந்துகிடந்தன. தோற்கடிக்கப்பட்ட தேசத்தில் வெற்றியீட்டியவர்கள் சென்றார்கள்.***

அவனுடைய மனச்சாட்சி அவனை வருத்தும். அதனுடன் அவனால் மீதியுள்ள நாட்களை நிம்மதியாகக் கழிக்க முடியாது என்றும் அவனுக்குத் தெரியும். அவன் தான் மறைத்து வைத்திருக்கும் இரகசியத்துடன் இறக்கும் வரை திருப்தியுடன் வாழ முடியாது. ஆகவே சாவதையே அவன் விரும்பினான்.

‘நீ ஒன்றுமறியாத பணயக் கைதி. ஆனால் உன்னுடைய கிராமத் தலைவனின் பிடிவாதத்தால் நீ உன்னைத் தியாகம் செய்ய வேண்டியிருக்கிறது. அவனை மரத்தில் கட்டிப் போட்டுச் சுடுங்கள்!’

அவனை உதைத்தார்கள். துவக்குச் சோங்கால் அடித்து அதன் முனையால் அவன் உடலைக் கிழித்தார்கள். நிலத்தில் தறதற வென இழுத்துக் கொண்டு போய் மாமரத்தில் கட்டினார்கள். அவனுடைய மனைவி அவனில் மேல் விழுந்து தடுத்தபோதும் அவனை இழுத்துக் கொண்டு போனார்கள். நாலு படையினர் அவனைச் சுடுவதற்கு குறி வைத்தார்கள்.

‘கடைசி முறையாகக் கேட்கிறேன். அந்தக் கொலையாளி எங்கே ஒளித்திருக்கிறான்?’

‘எனக்குத் தெரியாது, படைத் தலைவரே!’ என்று கிராமத் தலைவர் கெஞ்சினார்.

‘சுடுங்கள்!’

அவனுடைய நெஞ்சு முன்னால் சென்று சிறிது நேரம் ஆடியது. பின் எந்தச் சத்தமும் போடாமல் சுருண்டு விழுந்தான். இப்பொழுது அவனைக் கண்டு பிடிக்கவே முடியாது!

புகை மூட்டம் கலைந்தது. கிராமத்தவர்கள் ஆழமாக அதிர்ச்சிக்குள்ளாகி, திகைத்துப் போய், கரடு முரடான கயிற்றால் கட்டப்பட்டு அதில் சோர்ந்துபோய் தொங்கிக் கொண்டிருக்கும் உடலைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள். படைத் தலைவன் தான் சொன்னதைச் செய்து விட்டு அவர்கள் முன் நின்றான். இப்பொழுது அவர்களை என்ன செய்வது என்று தெரியாமல் நின்றான். உள்ளார்ந்த பயத்தால் உந்தப்பட்டு நின்றான். குறைந்தது தான் அணிந்திருக்கும் இராணுவப் பதக்கங்களின் மரியாதையையாவது காப்பாற்றுவதற்கு முயன்று கொண்டிருந்தான்.

‘சரி,’ என்றான் படைத் தலைவன்.

‘என்ன சரி!,’ கிராமத் தலைவர் கோபத்துடன் உறுமினார். ‘நீங்கள் தேடிய மனிதனை எங்களுக்குத் தெரியாது என்று நாங்கள் சொன்னோம். அதை நீங்கள் நம்பவில்லை. இப்போ எங்களில் ஒருத்தனைக் கொன்று போட்டீர்கள். அதைவிட நான் என்ன முடியும்!’

படைத் தலைவனிடம் எந்தப் பதிலும் இருக்கவில்லை. அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் மேலும் கீழும் ஆடிவிட்டு, தன் படையினரை அழைத்தான்:


‘கவனம்! ஒன்று கூடுங்கள்! தேடுதல் தொடரட்டும். வேசை மகன் அடுத்த கிராமத்தில் ஒளித்திருக்கலாம். வீணாக நேரத்தை விரயமாக்க நேரமில்லை. நேரே செல்லுங்கள்!’

பிறகு கிராமத்தவர்களை நோக்கி, கத்தினான். ‘அவனைக் கண்டு பிடிப்போம். வேசை மகன். எங்க ஒளித்திருந்தாலும் கண்டு பிடிப்போம். அவனின் விதையையும் காதுகளையும் வெட்டி விடுவோம். நகங்களையும் கண்களையும் எடுத்து விடுவோம். அவனுடைய மனுஷி, தாய், பிள்ளைகளுக்கு முன்னால் அவனை அம்மணமாக்கி பொது இடத்தில் தூக்கில் தொங்கப் போடுவோம்! பிறகு நாய்களுக்கு இரையாக அவனைப் போடுவோம். இது சத்தியம்!’

ஜீப்புகளும் கவச வாகனங்களும் ‘அவனைத்’ தேடி வேறு இடத்துக்கு நகர்ந்தன.

அவனை இன்னும் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அவன் இருக்கிறான். அவன் எங்கோ மறைந்திருக்கிறான், ஆனால் எங்கே? சர்வாதிகாரத்தால் நசுக்கப்பட்ட மக்களின் இதயங்கள் அந்த மனிதனைப் பற்றிய பேச்சு வரும்போதெல்லாம் துரிதமாகத் துடித்துக் கொண்டன. முன்னெப்போதும் இல்லாத மாதிரி இப்போது அந்த நாடு பொலிஸ்காரர்கள் நடமாடும் நாடாக ஆகிவிட்டபோதிலும், உளவாளிகளும் காட்டிக் கொடுப்பவர்களும் அடியாட்களை வைத்துக் கொலை செய்பவர்களும் பூச்சிகள் போல ஊர்ந்து திரிந்தனர். தனக்கு முழு விசுவாசத்துடன் நடக்கும் தன் இனக்குழுவினரை பாதுகாப்புத் தலைவர்களாக நியமித்தும் பிரியத்துக்குரிய புதிய ஜனாதிபதி, அதாவது தேசத்தின் இரண்டாம் தந்தை, நிறுவன ஜனாதிபதியின் பணிகளைத் தொடர்ந்து செய்வதற்கு நியமிக்கப்பட்டபோதும் அவரும் வெளியே நடமாடுவதற்குத் துணிவில்லாமல் இருந்தார். அந்த மாய வசியத்திலிருந்து மீறுவதற்காக அவர் கொலை செய்யப்பட முடியாதவர் என்றும் சிரஞ்சீவி என்றும் தீர்ப்பாணையின் மூலம் அறிவித்தார். இருந்தாலும் அவர் இன்னும் அரண்மனையின் எங்கோ ஓர் ஆழத்தில், சிக்கலான பாதைகளும் இடைகழிகளும், கண்ணாடிகளும், எதிரொளிகளும் நிறைந்த, உயர்ந்த சுவர்களுக்குப் பின்னால் ஒளித்திருந்தார். ஏனென்றால் ‘அந்த மனிதன்’ எப்பொழுது சடுதியாகத் தோன்றித் தன்னைக் கொல்வான் என்றோ, நீண்ட காலமாக ஒடுக்கப்பட்டிருந்த சுதந்திரம் கடைசியில் கிடைக்கும் என்றோ அவருக்குத் தெரியாது.

‘அந்த மனிதன்,’ தேசத்தினதும் தேசத்து மக்களின் நம்பிக்கையுமான அவன், இல்லவே இல்லை என்று சொல்லிக் கொண்டு, இன்னும் கவனித்துக் கொண்டிருக்கிறான்...



mahalingam.k@thaiveedu.com

**SP Electronics**

**TV, VCR, DVD, Players-Telephone-Computers**

**உங்களுக்குத்தேவையான அனைத்துத் தமிழ் வானொலிகளுக்கும், திருத்த வேலைகளுக்கும்**

**416 264 6400**

**2641 Eglinton Avenue East ( Brimley & Eglinton)**



Famous LIGHTINGS Home Decor
- CHANDELIERS
- CRYSTAL CHANDELIERS
- FLUSHMOUNTS
- TRACK LIGHTS
- ISLAND LIGHTS
- PENDANT LIGHTS
- BATHROOM VANITIES
- WALL SCONES
- TABLE LAMPS
- FLOOR LAMPS
- SHADES
- LED STRIPS
- CEILING FANS
- OUTDOOR LIGHTS
- OUTDOOR POSTS
- SPOT LIGHTS
- NUMBER SIGNS
- MAILBOXES
- MIRRORS
HWY 48
16th Ave
Markham Rd
9th Line
HWY 7
மிகப் பெரிய காட்சி அறையுடன் தமிழர் நிர்வாகத்தில்
SALE! UP TO 50% OFF
9291 HIGHWAY 48, (HWY 48 & 16TH) MARKHAM, ON L6E 1A3
TEL: (905) 471-7070




வீடு வாங்கவும், விற்கவும்.......
$480,000
'Prime Location' Renovated Bungalow
In a Desirable Family Neighbourhood of 'Dorset Park'
Birchmount / Ellesmere
- 5 (3+2) Bedrooms
- 2 Kitchens & 2 Full Washrooms
- With Separate entry To Basement
- Over 35K Spent On Renovation
- Hardwood Floors on Main (4 Yrs)
- Laminate (2012) In Basement
- Car Port Roof Shingles (2012)
- Professionally Finished Basement
- Freshly Painted with Neutral Colour
- 4 Cars Drive Way
Steps To:
- Ellesmere Station Public School
- TTC and Costco
- Home Depot & Shopping
$299,900
EXCLUSIVE LISTING
Mccowan / Hywy 401
4 Bedrooms, 3 Washrooms
Penthouse Condo Unit With
Owned Parking And Locker
FREE
Home Insurance For 12 months
When you buy a home through us we pay your Home Insurance
Call now for more info!!!!
Through the co-operators & RED CARPET
A Better Place For You
1265 Morningside Ave, Unit 201, Scar., ON M1B 3V9
(416) 396-0707
RED CARPET
Royal Realty Ltd., Brokerage
880 Ellesmere Road, Suite 204, Toronto, ON., M1P 2W6
ANANTHI SELVASIVAM,
Sales Representative
Dir: 416-666-2075
Bus: 416-284-5555

# மாறுதல்கள்

தெளிவத்தை ஜோசப்

11



இராமர் வர இரவாகி விட்டதால் பதறிப் போயிருந்தாள் செந்தாமரை.

'ஒருநாளும் இப்படி ராவாவாதே... இந்த மனுசனையும் இன்னம் காணலியே... பெரியாணி அவசரமா வரச் சொன்னாருன்னு செவத்தான்னன் சேதி சொல்லிவிட்டுப் போவுதே... என்னவா இருக்கும். ராமரையும் அய்யாவூட்டு சீதையையும் பத்தி யாராரோ என்னென்னமோ பேசுனாலும் எனக்குத் தெரியும் எம் மவனப்பத்தி... ஆனாலும் இது அவன் சம்பந்தப்பட்டது மட்டுமில்லியே... அந்தப் பொண்ணு மனசுல என்னாருக்குன்னு யாருக்குத் தெரியும்... ஒரு நேரத்தப்போல..' என்று நினைத்தவளுக்கு ஒரு பயம் புகை போல் எழுந்து வந்து நெஞ்சை அடைத்தது.

நாம் நல்லவர்களாக இருந்தாலும் உலகம் பொல்லாதது' என்பதை உணர்ந்தவளாகவே அவள் இருந்தாள்.

'நம்ம காலம் போலவா இப்ப..! இந்த சீதை வயசுல நான் இருந்தப்ப எவ்வளவு கட்டு செட்டா இருந்தேன்... எத்தனை பேரு எப்படி எப்படி எல்லாம் கொளைஞ்சாங்க... சுத்து-னாங்க... கரும்புகட்டோட இருந்தா எறும்பு தன்னால ஓடிறும்னு சும்மாவா சொன்னாக. ஆனா இந்தக் காலத்துப் பொண்ணுக எங்க கட்டோட இருக்குதுக... இனிப்பைக் காட்டிக் காட்டி எறும்பை கூப்பிடுற காலமாக்கெடக்கு.

'இந்தப்புள்ள ஆளாகி இருந்தப்ப ஒருத்தி கேட்டாளே... மொய் எழுதப் போன என்னப் பாத்து "மறுமவளைப் பாக்க வந்தியான்னு... சும்மா கெடக்குற பஞ்சுல இவளுகதான் நெருப்பக் கொளுத்திப் போடறவளுக...?

அடுப்பைப் பார்ப்பதும் எழுந்தோடி வந்து ரோட்டைப் பார்ப்பதுமாக இருந்த அவளுக்கு இராமர் வருவது இருட்டுக்குள்ளும் தெரிந்தது.

தேயிலைக்கு மேல் கறுப்புடன் கறுப்பாய் தெரிவது அவனது தலையும் தோளும் இடுப்பும் தான் என்றாலும் அவன் நொண்டுகின்றான் என்பதும் ஏதோ விபரீதம் நடந்திருக்கிறது என்பதும் அவளுக்குத் தெரிகிறது.

ஒரு மின்னலைப் போல் இருளைக் கிழித்துக் கொண்டு காற்றாய் ஓடினாள் மகனை நோக்கி.

'ஒங்கப்பாவை வரச்சொல்லி அய்யாகிட்ட இருந்து சேதி வரயிலய நெனைச்சேன்... ஏதோ நடக்கப் போவுதுன்னு' என்றபடி ஓடி வரும் தாயைப் பார்த்ததும் நடையை விரைவாக்கினான். "ஒன்னுமில்லேம்மா... பதறாத' என்றபடி தாயின் விரித்த கரங்களுக்குள் அடங்கிக் கொண்டான்.

'அப்பத்தாகிட்ட சொல்லிட்டுதான் ஓடியாந்தேன் 'அம்மா பதறும் நான் போறேன்னு' அதே மாதிரிதான் பதறியடிச்சுகிட்டு ஓடியாற... ஒண்ணுமில்லேம்மா'' என்றவன் அவளது அணைப்புடன் நடந்தான்.

'அப்ப ஏன் நொண்டுறே'

'வா சொல்றேன்' என்றபடி லயத்துக் கோடியில் ஏறி வீட்டுக்குள் நுழைந்து விளக்கொளியில் காலைப் பார்த்தான். முழங்கால் நைந்திருந்தது. வழிந்தொழுகிய இரத்தம் காய்ந்து கறுப்புக்கோடாய் பயமுறுத்திக் கொண்டிருந்தது.

'ஐயய்யோ... இது என்ன ராமரு' என்று ஓலமிடத் தொடங்கிய தாயை 'ஒன்னுமில்லம்மா' என்று வாயில் கை வைத்துப் பொத்தி அடக்கிய இராமர் நடந்த கதைகளை ஒன்று விடாமல் கூறினான்.

'அடப்பாவி' என்று வெகுண்டெழுந்த தாய் ஒரு படுகுழியில் அந்தப் புள்ள விழுந்திருந்தா... அவனை சும்மாவா விட்ட... நாளைக்கும் அந்தப்புள்ளய பஸ்ஸுல என்னமாச்சும் பண்ணிப்புட்டான்னா... இனி இந்த பஸ்ஸுல ஏத்தமாட்டேன்னு ஒதுக்கி வச்சிட்டான்னா' என்று அங்கலாய்த்துப் போனாள்.

அவளுடைய அங்கலாய்ப்பில் கோபத்தின் கொடிய முகம் பளிச்சிட்டது. அந்த முகத்துக்கும் பின்னால் எத்தனை கோபங்கள், கோப முகங்கள் இதழ் விரித்தாடுகின்றன.

ஒரு அப்பாவிப் பெண்ணுக்கு இழைக்கப்பட்ட அநியாயம் மூட்டிவிட்ட சீதையின் கோபம்.

தன்னுடைய அதிகாரம் பறிபோய்விட்ட ஆத்திரத்தாலும் எரிச்சலாலும் சுற்றி இருக்கிறவர்கள் ஊதி விட்டதாலும் ஏற்பட்ட பஸ் கண்டக்டரின் கோபம்.

தன்னுடைய பாதுகாப்பில் உள்ள ஒரு பெண்ணுக்கு நேர்ந்த அச்சுறுத்தலால் அவமரியாதையால் கொதித்தெழுந்த இராமரின் கோபம்.

அத்தனை கோபங்களும் ஒன்றாகி மூட்டிவிட்ட இந்தத் தாயின் கோபம் என்று எத்தனை கோபங்கள்.

மனிதர்களுக்கு ஏன் கோபம் வருகின்றது! அதற்கான காரணத்தை கண்டு பிடிப்பது சிரமம் என்கின்றனர் விஞ்ஞானிகள் மனிதர்களுக்கு மட்டுமா கோபம் வருகின்றது. தேவர்களுக்கும் தேவர்களின் தேவனான இறைவனுக்கும், விலங்கினம், ஊர்வன, பறப்பன என்று சகல உயிரினங்களுக்கும் கோபம் பொதுவானதுதான்.

அன்பு செய்யும் அனைவருக்கும் பயம் கொள்ளும் அனைவருக்கும் கோபம் வரும். அன்பு, பயம், போன்று கோபமும் ஒரு உணர்வுதான் என்கின்றனர் மனநலவியலாளர்கள்.

கோபம் ஒரு உணர்வு என்கின்றபோது கோபத்தையும் நாம் கட்டுப்படுத்தத் தெரிந்து கொள்ள வேண்டும். அடக்கக் கற்றிருக்க வேண்டும்.

நாம் கோபத்தைக் கட்டுப்படுத்தாவிட்டால் அது நம்மைக் கட்டுப்படுத்தும். அடக்கி ஆளும். அழிவைநோக்கியும் இட்டுச் செல்லும்.

கோபத்தை அடக்கி வைக்க விவேகம் வேண்டும். அந்த விவேகம் சீதையிடம் நிறையவே இருந்தது. 'போலீசுக்குப்போய் பிரச்சினையை பெரிதாக்க வேண்டாம் மேடம்' என்ற அவளுடைய கோரிக்கை அந்த விவேகத்தின் குறியீடு.

'அவனே சும்மாவா விட்டே' என்னும் செந்தாமரையின் குமுறல் கோபத்தின் குறியீடு.

அது ஒரு தாயின் கோபம். நியாயத்துக்கான கோபம்...

அந்தக் கண்டக்டருடையதைப்போல் அநியாயக் கோபமல்ல.

'பாத்தியாப்பா எங்கோபத்துல ஒனக்கு ஒரு வாய் தேத்தண்ணி குடுக்க மறந்துட்டேன்..' என்றவாறு அடுப்படியை நோக்கி நடந்தாள்.

தேனீர் ஜொக்குடனும் சீனிப்போத்தலுடனும் அவள் மகனிடம் வந்தபோது சின்னானின் தலை வாசலில் தெரிந்தது.

வழமையாகவே சீதையை பெரியகங்காணியார் வீட்டில் விட்டு விட்டு, மீனாட்சிக்கிழவியிடம் ஒரு கிளாஸ் தேனீர் குடித்து விட்டே இராமர் வீடு வருவதுண்டு. இன்று அந்த வழமைகளுக்கு இடையூறுகள் ஏற்பட்டிருந்தன.

அவனுடைய களைப்புக்கு தேனீரின் தேவை அவசியமாயிருந்தது.

சீனிப்போத்தலைச் சரித்து வலது கையில் அளவாகச் சீனியைக் கொட்டி வாயில் போட்டு கீழ் உதட்டடியில் அடக்கிக் கொண்டு தேனீரை உறிஞ்சினான். உதட்டடியில் இருந்து லேசாக இழையும் இனிப்பு வாயிலூற்றிய தேனீருடன் இணைந்து சூடாக தொண்டைக்குள் இறங்கும் சுகம் அலாதியானது. உடற் களைப்பைப் போக்கும் ஒரு ஔடதம் இந்தத் தேனீர்.

வீட்டுக்குள் நுழைந்த சின்னான் இராமரின் காலையே பார்த்துக் கொண்டிருந்தான். இரத்தத்துக்கான காரணம் தெரியாவிட்டாலும் எங்கேயோ விழுந்து வந்திருக்கின்றான் என்பதைப் புரிந்து கொண்டான்.

'தேத்தண்ணி கொஞ்சம் தரவா' என்று கேட்டவள் 'வேண்டாம்' என்று தான் பதில் வரும் என்பதை அறிந்தவளாக 'கங்காணியாரு வரச் சொன்னதா செவத்தான் ரெண்டுவாட்டி வந்து சொல்லிட்டு போச்சு...' என்று கூறினாள்.

'தேத்தண்ணி வேணாம்' என்றவன் 'எங்கே விழுந்தானாம், மொளங்காலை ஒடைச்சிக் கிட்டு வந்திருக்கான்' என்றபடி குனிந்து மகனின் காலை உற்றுப் பார்த்தான்.

'ஒன்னுமில்லேப்பா... நீங்க நசுக்குறதுதான் வலிக்குது' என்றான் இராமர்.

'வலிக்கும், வலிக்கும்... நல்ல நேரம் கொட்டங்காச்சி பெரலலை...' என்றவன் மனைவியைப் பார்த்து 'சுட்டதண்ணி இருக்கா... துணியை நனைச்சு புளிஞ்சிட்டு காயத்தை தொடச்சிவிடு... நான் பச்செலை ஆஞ்சுகிட்டு வர்றேன்...' என்றவாறு டோர்ச்சை எடுத்துக் கொண்டு தோட்டத்துக்குள் போனான்.

லயத்துக்கு முன்னால் கிளை விரித்து நிற்கும் பூவரசம் மரம் தாண்டி படி இறங்கியதும் ஒரு சிறு காய்கறித்தோட்டம் இருக்கிறது. அந்தக் கையகலத் தோட்டத்தில் வீட்டுப் பாவனைக்கான காய்கறிகளை இவர்கள் உண்டாக்கிக் கொள்கின்றனர்.

பாத்திகளில் காய்கறிகளும் ஓரங்களில் தும்பை, அறுபதாம்பச்சை, புதினா, வெட்டுக்காயப் பச்சிலை போன்ற பெயர் தெரிந்த பெயர் தெரியாத மூலிகைகளும் வளர்ந்திருக்கும். பாத்தியில் வளரும் காய்கறிகளுக்குப் போடும் தண்ணீரில் இவைகளும் செழித்துக் கொள்ளும்.

வெட்டுக் காயப் பச்சிலைக்கு ஏதாவதொரு தாவரவியல் பெயர் இருக்கலாம். ஆனால் இவர்களுக்கு அது மருந்துப் பச்சிலைதான்.

மாட்டுக்குப் புல் அறுக்கையில், ஆட்டுக்குக் குழை வெட்டையில், காய்கறித் தோட்ட வேலையின் போது ஏற்படும் வெட்டுக் காயங்களுக்கு இந்தப் பச்சிலையில் நாலைந்தைக் கிள்ளி உள்ளங்கையில் வைத்து நசுங்கி, வெட்டுக்காயத்தின் மேல் இரண்டு சொட்டு சாறைப் பிழிந்து விட்டால் உயிரே போவது போல் எரியும்.

நசுக்கிப் பிழிந்த இலைகளை காயத்தின் மேல் வைத்து துணியால் சுற்றிக் கட்டுப் போட்டுவிட்டால் இரண்டாவது நாள் கட்டை அவிழ்த்து வீசிவிடலாம். காயம் பட்ட இடத்தில் அடையாளம் மட்டுமே இருக்கும்.

**தொடர்தல் 90ம் பக்கம்**

An Ontario Secondary Private School Registered Under the Ministry of Education

# Delta Academy Inc.

Delta Academy Inc.

## Offers the Following OSSD Credit Courses

Our goal is not the quantity of students but quality of education. We ensure that the students are trained to work independently and be prepared to the next grade level with the help of our highly qualified and experienced teachers.



BSID # 667561

| | |
|---|---|
| **Grade 10** | |
| English | ENG2D |
| Principle of mathematics | MPM2D |
| Science | SNC2D |
| **Grade 11** | |
| English | ENG3U |
| Functions | MCR3U |
| Biology | SBI3U |
| Chemistry | SCH3U |
| Physics | SPH3U |
| Accounting | BAT3U |
| Economics | CIA3U |
| **Grade12** | |
| English | ENG4U |
| Advanced Functions | MHF4U |
| Calculus and Vectors | MCB4U |
| Data Management | MDM4U |
| Biology | SBI4U |
| Chemistry | SCH4U |
| Physics | SPH4U |
| Accounting | BAT4M |
| Economics | CIA4U |

ART COURSES

| | |
|---|---|
| **Grade 9** | |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU1O |
| Piano Keyboard | |
| Dance | ATI1O1 |
| Miruthangam | AMP1O |
| **Grade 10** | |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU2O |
| Piano Keyboard | |
| Dance | ATI2O1 |
| Miruthangam | AMP2O |
| **Grade 11** | |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU3M |
| Piano Keyboard | |
| Dance | ATI3M1 |
| Miruthangam | AMP3M |
| **Grade 12** | |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU4M |
| Piano Keyboard | |
| Dance | ATI4M1 |
| Miruthangam | AMP4M |

Classes begins on
February 23, July 3, September 24 2012.
Register with us early as the space is limited.
All courses are 110 hours.
Course fee is $500 (Including registration )

**Contact**

# 416.751.2011

**deltaacademyinc@hotmail.com**

**1160 Birchmount Road, Unit 1B, Scarborough ON M1P 2B8**

# வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?



அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்!

# FIREMAN STEINMETZ

PERSONAL INJURY LAWYERS

CERTIFIED AS A SPECIALIST IN CIVIL LITIGATION

SPECIALIZING IN SERIOUS PERSONAL TRAUMATIC INJURIES AS RESULT OF A

## MOTOR VEHICLE ACCIDENT

FRACTURES - SPINAL CORD INJURY - BRAIN OR HEAD INJURY
SCARRING OR DISFIGUREMENT - INTERNAL INJURIES OR DEATH



**Jack J. Fireman Q.C. LLM.**
Jack J. Fireman Q.C. has been voted to the "Most Frequently Recommended Lawyer"catergory in L'Expert since 1997 as voted by the his peers from Ontario



**Harry F. Steinmetz**
Mr. Steinmetz is a member of the Advocates Society, the Canadian Bar Association, the Metropolitan Toronto Lawyers Association and the Medico-Legal society.

## உங்களுக்குத் தெரியுமா?

- நடந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் பணமாக வலி, வருத்தம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி ஆகியவற்றுக்காக பணமாக **$330,000.00** வரையும், சம்பள இழப்பீடுகள் அத்துடன் **$86,000.00** வரை இழப்பாகவும் மற்றும் பல்வகையான இழப்புகளுக்கு நஷ்டஈடுகள் பெறமுடியும்.
- நடந்த விபத்து உங்கள் தவறாக இருப்பின் உங்களால் **$86,000.00** வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு **$400** வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.

**If the impairment catastrophic your claim can be:**

- Medical and Rehabilitation expenses up to **$1,000,000.00**
- Personal care expanses up to **$1,000,000.00**

***OVER 50 YEARS COMBINED EXPERIENCE***

**even if you are:**
unemployed - employed - passenger - pedestrian
cyclist - traveling in public transit - student - housewife

You may be eligible for benefits to THOUSANDS of dollars

*if you have optional insurance you can calm up to **$1,000.00** IRB'S-per week
வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்!

**இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்**

# தீபன்

**24 Hours Direct Line**
**(416) 505 - 9804**
**(416) 624 - 4751**

Thiparanjan Sivarajalingam
Accident Benefit Specialist
Licensed Paralegal
(Member of The Law Society of upper Canada)
www.thipaninjuryclaim.com
thiparanjan@gmail.com

அனுபவம் இல்லாதவர்களின் ஆலோசனையின் கீழ் விழுந்திடாதீர்கள்

TORONTO SCARBOROUGH MISSISSAUGA

# மாறுதல்கள்...

88ம் பக்கத் தொடர்ச்சி...

இப்படித்தான் ஒரு தடைவ இராமர் விரலை அறுத்துக் கொண்டான்.

சின்னான் காய்கறித் தோட்டத்துக்குள் வேலை செய்யும் போது மகனையும் கூடமாட ஒத்தாசைகளுக்காக கூடவே வைத்திருப்பான். கணக்கப்பிள்ளை அய்யாவின் மாடுகளுக்கு அவன்தான் புல் அறுப்பான். அது ஒரு வாடிக்கை. அவனுக்கு மாடில்லாவிட்டாலும் அவனுடைய தோட்டத்துக்குள்ளாக சளசளவென்று ஓடும் தண்ணீர்க் கான் ஓரங்களிலும், காய்கறிகள் விளைய மறுக்கும் கட்டாந்தரை இடங்களிலும் புல் வளர்ந்திருந்கும். நாமாக வளர்க்காவிட்டாலும் தானாக வளரும் ஒரு விவசாய வித்தை இந்த கால்நடை-யாகாரப்புல்.

தரையுடன் படர்ந்தும், வளர்ந்தும் கிடக்கும் இவைகளை பிறைநிலா போல் வளைந்த அறுவாளால் மிக விரைவாக அறுத்துக் குவிப்பதே ஒரு கலை தான். கொழுந்தாயும் பெண்களின் விரல் வீச்சுக்கள் போல்.

தரையுடன் தரையாகப் படர்ந்து செல்லும் புற்கற்றைகளை அறிவாளின் கூர்நுனியால் கெந்திக் கெந்தி நிமிர்த்தி அறிவாளை உள் நுழைத்து உள் நுழைத்து அறுத்துக் குவிக்கும் விதத்தை இராமர் உன்னிப்பாகவும் ஒரு ரசனையுடனும் பார்த்துக் கொண்டிருப்பான்.

சித்திரமும் கைப்பழக்கம் என்பார்கள்! இந்தப் புல் அறுக்கும் கைப் பழக்கமும் ஒரு சித்திரம் தான். அதைப் பார்த்து ரசிப்பதும் ஒரு மகிழ்ச்சிதான்.

அப்படிப் பார்த்துப் பார்த்தே ரசித்து ரசித்தே இராமரும் புல் அறுக்கக் கற்றுக்கொண்டான். இந்தப் புல் அறுக்கும் சித்தரமும் இராமருக்குக் கைப்பழக்கமாகவிட்டது.

அன்றொரு நாள் அதிகாலை அப்பாவும் பிள்ளையும் தோட்டத்தில் நின்றார்கள். சின்னான் காய்கறிப் பாத்திகளுக்கு பூவாளியால் நீரூற்றிக் கொண்டிருந்தான்.

அறிவாளைக் கையிலெடுத்துக் கொண்ட மகன் ‘நான் அறுக்கவாப்பா’ என்றான். அந்தத் தொனியில் அவனது ஆவலும் இருந்தது. ஆசையும் இருந்தது.

‘சரி அறு... ஆனா கவனம்! அறுவாள் மொட்டையாப் போச்சின்னு ராவுதான் ராவி வச்சி-றுக்கேன்... கவனம்’ என்றான்...

இராமர் அறிவாளைப் பார்த்தான். சின்னச் சின்னப் பற்கள் மின்னிக் கொண்டிருந்தன. அரத்தின் இராவுதல் பற்களை கூர்மை கொள்ளச் செய்திருந்தன. தரையில் அமர்ந்து அறுக்கத் தொடங்கினான்.

நோக்கல் கிழங்கு பாத்திக்கு தண்ணீர் போட்டு முடித்திருந்த சின்னான், பூவும் பிஞ்சுகளுமாய் நிற்கும் செடிப்போஞ்சி பாத்திக்கு நீரூற்றத் தொடங்கினான்.

குத்துக் குத்தாய் வளர்ந்து கொத்துக் கொத்தாய் காய்க்கும் இந்தச் செடிப் போஞ்சி வளர்ப்பதில் சில வசதிகள் உண்டு. போஞ்சு என்றாலே அது ஒரு கொடி வகை தாவரம் தான். இந்தக் கொடிப் போஞ்சின் காய்கள் நீளமாகவும், ஒரு ரம்மியமான சுவையும் கொண்டவை. ஆனாலும் முளைத்து மூன்றி-லை நாலிலை விடும்போது ஒரு கொம்பைத் தேடி அலையும் கொடியாக உருவெ



**குத்துப் போஞ்சி பாத்திக்கு நீரூற்றிக்கொண்டிருந்த சின்னானை மகனின் ‘அய்யோ அப்பா’ என்ற கதறல் திடுக்கிட்டுத் திரும்ப வைத்தது.**

**‘வெரலை அறுத்துக்கிட்டியா’ என்றவாறு மகனிடம் ஓடினான்.**

டுக்கும். ஒன்றுடன் ஒன்று சுற்றிக் கொள்ள முயலும். அதற்குள்ளாக வரிச்சிதேடி ஊன்றி, கொடியை அதில் சுற்றி ஏற்றி விட வேண்டும். இரண்டு பாத்தி போஞ்சு என்றால் குறைந்த பட்சம் ஐம்பது வரிச்சிகளாவது தேடியாக வேண்டும். இந்தக் கம்பு தேடும் வம்பும் சிரமமும் செடிப்போஞ்சியிடம் இல்லை. மிளகாய்ச் செடிபோல் குத்துக் குத்தாய் வளரும். கொத்துக் கொத்தாய்க் காய்க்கும் குத்துப் போஞ்சி என்றும் இதற்கொரு பெயர் உண்டு.

இதன் காய்கள் கொடிப்போஞ்சி காய்களை விடக் குட்டையானவை. சுவையும் கம்மிதான். தரையிலிருந்து ஒரு அடி உயரம் போலவே வளரும் இந்தச் செடிகளின் அரைவாசி உயரத்தில் இருந்தே காய்கள் தொங்கும். கொடிப்போஞ்சி காய்கள் போல் இவைகளும் நீளமாக இருந்தால் என்ன ஆகும். தரை தட்டும். மண்ணில் பட்டுப் பட்டுக் காய்கள் பழுதடையும்.

ஆட்டுக்கும் வாலை அளந்துதான் வைத்திருக்கிறான் ஆண்டவன் என்பது எப்படிப் பொய்யாகும்.

‘இத்தனை பெரிய ஆலமரத்துக்கு ஏன் இத்தனை சின்னச்சின்ன பழங்கள்’ என்று ஆண்டவன் படைப்பபை விமர்சித்த புத்திசாலி மனிதனை நாம் சின்ன வகுப்புப் புத்தகத்தில் படித்திக்கின்றோம் அல்லவா!

குத்துப் போஞ்சி பாத்திக்கு நீரூற்றிக் கொண்டிருந்த சின்னானை மகனின் ‘அய்யோ அப்பா’ என்ற கதறல் திடுக்கிட்டு திரும்ப வைத்தது.

‘வெரலை அறுத்துக்கிட்டியா’ என்றவாறு மகனிடம் ஓடினான்.

பாதி அறுத்த புல்லும் புல்லுக்குள் நுழைந்த அறிவாளும் அப்படியே கிடக்க இடதுகையை தூக்கித் தூக்கி உதறினான் இராமர். இரத்தம் பிசிறியடிக்கிறது.

அதிகாலை நேரம், வளரிளம் பருவம், ரத்தம் பெருக்கெடுக்க கேட்கவா வேண்டும்.

ஓடிவந்த சின்னான் மகனின் இடது கையை பிடித்து உதரவிடாமல் அவனை கெட்டியாகப் பிடித்து அணைத்து உட்கார வைத்தான்.

கையை உயர்த்திக் காயத்தைப் பார்த்தான். மோதிர விரலின் நுனியிலிருந்தே இரத்தம் வழிகிறது. நுனிவிரல், நகம் வரை நண்றாகவே அறுபட்டிருக்கிறது. அறுபட்ட விரலின் மேல்துண்டு தோலின் பிடிப்புடன் மறு பக்கம் தொங்கிக் கொண்டிருக்கிறது. கையைத் தான் இருக்கிப்பிடிக்காமல் இன்னும் கொஞ்சம் உதர விட்டிருந்தால் அறுபட்ட மேல் நுனி உதிர்ந்து எங்காவது புற்களுக்குள் விழுந்து போயிருக்கும்.

இராமர் தான் என்ன செய்வான். பிஞ்சான விரல். வலி பொறுக்க முடியாமல் தான் உதறுகின்றான்.

மகனின் தலையைத் தன்தோள் மீது சாய வைத்துக் கொண்டதன் மூலம் அவனது பார்வையிலிருந்து வெட்டுப்பட்ட விரலை மறைத்துக் கொள்ளுகின்றான் தகப்பன்.

பிள்ளை பயந்து விடுவான் என்று.

அறுபட்டுத்தொங்கும் விரல் நுனியை மெதுவாக உயர்த்தி அறுபட்டிருக்கும் விரல் மேல் பொருத்தி வைத்து கட்டை விரலால் அழுத்திப் பிடித்துக் கொள்ளுகின்றான்.

ஓங்கி ஒரு குரல் கொடுத்து மனைவியை தோட்டத்துக்குள் அழைக்கின்றான்.

பதறியபடி ஓடி வந்தவளை சமாதானப் படுத்தி இராமரை அவளுடைய அணைப்பில் கொடுத்து கையை ஆட்டாமல் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளக் கூறிவிட்டு லயத்துக்கோடி பழைய வெள்ளைத்துணி ஒன்ற நீளமாகக் கிழித்தெடுத்துக் கொண்டு ஓடிவருகின்றான்.

‘பதறிய காரியம் செதறிறும்... பேசாமக்கெட சும்மா பதறாதே’ என்று மனைவியைச் சமாதானம் செய்கின்றாள்.

வெட்டுக்காயப் பச்சிலைகளைப் பறித்து உள்ளம் கையில் நசுக்கி லேகிய உருண்டை போல் உருட்டி எடுத்து, மகனின் கையை இருக்கிப் பிடித்து விரல் நுனியில் இரண்டு மூன்று சொட்டு பிழிந்து விடுகின்றான்.

எரிச்சல் தாளாமல் மகன் விரலை ஆட்டுவான் உதறுவான் என்பது தெரிந்ததால் தான் கையையும் விரலையும் ஆடவிடாமல் அழுத்திப் பிடித்துக் கொண்டான்.

நசுக்கிய பச்சிலையை மெதுவாக விரல் நுனியில் அப்பி அறுபட்ட காயம் தெரியாமல், மருதானி பூசிய விரல் மாதிரி பச்சிலையால் மூடி வெள்ளைத்துணியால் சுற்றிக் கட்டுப் போடுகின்றான்.

சம்பளம் போனால் போகட்டும் என்று ஆளுக்கிரண்டு நாள் வேலைக்குப் போகாமல் வீட்டிலிருந்து மகனைப் பாதுகாத்தனர். பகலில் சமாளித்து விடலாம். இரவில் தூங்கும் போது தான் விரலைப் பாதுகாப்பது சிரமம். இருவரில் ஒருவர் இராத்தூக்கம் விழித்தி-ருந்தனர்.

இரண்டு நாட்களின் பின் கட்டை அவிழ்த்து பச்சிலை கழடாமல் அதன் மேல் முன் போலவே இரண்டொரு சொட்டு பச்சிலைச் சாறு பிழிந்து மீண்டும் கட்டுப் போட்டான்.

ஒரு மாதத்தின் பிறகு கட்டவிழ்த்தபோது வெட்டுப்பட்ட விரல் ஒட்டிக் கொண்டிருந்தது. இப்போதும் கூட இராமரின் இடது கை மோதிர விரல் நகத்துக்கடியில் சிறிதாக மேடு கட்டி இருப்பது தெரியும். உற்றுப் பார்த்தால் மட்டுமே அந்த சின்ன வித்தியாசம் தெரியும்.

நம்ம ஆசுபத்திக்குக் கொண்டு போனா பெரியாஸ்பத்திரிக்கு துண்டு கொடுத்துறுவாக... பதுளாஸ்பத்திரிக்குக் கொண்டு போனா மேல் துண்டை வெட்டி எறிஞ்சிட்டு மருந்து போட்டு ஆத்தி மொட்டை வெரலோட அனுப்பி இருப்பாக... கையில இருக்கு மருந்து...’ என்று சின்னான் பெருமையாகக் கூறிக் கொள்வான்.

அறுபட்டுத் தொங்கிய விரலையே ஒட்ட வைத்து ஆற்றிக் காட்டியவன் அவன். இந்த அடிபட்டிருக்கும் முழங்கால் புண் எம்மாத்திரம். கையில் டோர்ச்சுடன் தோட்டத்துக்குள் நுழைந்தான்.

டோர்ச்செல்லாம் பூச்சி பொட்டு, பாம்புக்-காகத்தான்.

பச்சிலை சாற்றை பிழிந்து, கிள்ளிக் கொண்டு வந்திருந்த அடிக் கொடியின் வெற்றிலையை அனலில் வாட்டி லேசாக வேப்பெண்ணைத் தடவி முழங்கால் மேல், பச்சிலை சாத்தை மூடிக் கட்டுப் போட்டு விட்டான்.

‘நாளைக்கு ஸ்கூலுக்குப் போகாதே... அய்யா மக தனியா போகட்டும்... இனிப் பழகிக்கிற வேண்டியதுதானே...’ என்றான் சின்னான்.

‘நான் போகலைப்பா... வரமாட்டேன்னு சீதை கிட்டச் சொல்லிட்டுதான் வந்தேன்’ என்று இராமர் கூறிக் கொண்டிருக்கும்போதே ‘கங்காணியாரு வரச்சொல்லி ஆளனுப்பி-னாரு... செவத்தண்ணே ரெண்டு தரம் வந்து

*தொடர்தல் 92ம் பக்கம்*

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...

**Uthayan Alex Sivasambu** B.Sc. (Hons), M.B.A
Broker

**Ottawa: 613.276.SALE (7253)**
**Toronto: 416.659.SELL (7355)**
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com

COLDWELL BANKER




To Buy, Sell or Rent
your home and condos
call me today!
Shiamala Ratnasabapathi
Sales Representative
Direct: 416.854.1368
Office: 416-298-3200
HomeLife Today Realty Ltd., Brokerage
Independently Owned and Operated
HOMELIFE
HIGHER STANDARDS


சுவை—தரம்—புத்துணர்வு
Hattan Tips
Ceylon Black Tea
Hattan Tips Tea
416-548-8020
Quality & taste....
அனைத்து வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்

# மாறுதல்கள்...

90ம் பக்கத் தொடர்ச்சி...

சொல்லிட்டுப் போச்சி... ஏதும் அவசரமோ தெரியலை...' என்று செந்தாமரை நினைவு படுத்தினாள்.

'இப்பப் போகேலாது... மணி பத்தாகப் போவுது... அய்யாவும் படுத்திருப்பாரு... காலை யில வெள்ளனங்காட்டியும் போறேன்...' என்ற படி கை கால் முகம் கழுவ பீலிக்கரை நோக்கி நடந்தான் சின்னான்.

சீதை பஸ் ஏறியதும் படி இறங்கிய மீனாட் சிக் கிழவி பட்டர்புருட் மரத்தடியில் சற்று நின்றாள்.

முட்டை வடிவிலான பட்டர் புருட்காய்கள் குண்டுகுண்டாய் சலங்கை கோர்த்தது போல் மரம் நிறைந்து கிடக்கிறது.

அடிக்கிளைக் காய்கள் எப்போதும் அவளது உச்சந்தலையில் மோதி ஆடும். இன்றும் மோதி ஆடிய காய்களை ஒரு மகிழ்வுடன் நிமிர்ந்து பார்த்தாள். ஊஞ்சலாடிக் கொண் டிருந்த காய்கள் அவளைப் பார்த்து சிரித்தன.

இந்த பட்டர்புருட் மரத்தடியில் நின்று கீழே பார்த்தால் பதுளை தெரியும். மலைகளைச் சுற்றிச் சுற்றி மறைந்தும், நெளிந்தும் தெரி யும் பாதையில் சின்னதாகத் தூரத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது பஸ்.

இரவில் பார்த்தால் வானத்து நட்சத்திரங் கள் போல், மின் விளக்குகளால் அலங்க ரிக்கப்பட்ட திருமண மண்டபம் போல் ஜெக ஜோதியாய் மின்னிக்கொண்டிருக்கும் இரவின் பதுளை.

கம்பியடி லயத்தின் தொங்கக் காரம்பிரா தங்கமணியிடம் மீனாட்சி இரண்டு மூன்று கத்தரிக்காய் கேட்டிருந்தாள். அய்யாவுக்கு கத்தரிக்காய் போட்ட கறுவாட்டுக் குழம்பென் றால் கொள்ளை ஆசை. அய்யா வீட்டுத் தோட்டத்தில் கத்தரிக்காய் எல்லாம் பிஞ்சா யிருக்கிறது என்றும் கறிக்குச் சரிவராது என்றும் மெய்யப்பக்கிழவன் கூறியிருந்தான். ஆகவேதான் மீனாட்சியின் இந்த ஏற்பாடு.

மீனாட்சியும் தங்கமணியும் கூட்டாளிகள். தங்க மணி மீனாட்சியை விட வயது குறைந்தவள். மீனாட்சிக்கு அறுபது என்றால் அவளுக்கு நாற்பதிருக்கும். ஒத்த வயதுள்ளவர்கள் தான் நண்பர்களாக இருக்க வேண்டும் என்று சட்டம் இல்லையே தங்கமணி வீட்டோடிருப்பவள். 'வேலைக்குப் போக வேண்டாம் வீட்டு வேலை களைப் பார்த்துக்கிட்டாப் போதும்' என்று பிள்ளைகள் நிற்பாட்டிக் கொண்டார்கள். அய்யா வீட்டில் தனியாக இருக்கும் மீனாட் சிக்கு அவள்தான் பேச்சுத்துணை. உதவி ஒத்தாசைக்கு தங்கமணியைக் கூப்பிட்டு வச்சிக்கிறு' என்று அய்யாவே உத்தரவு கொடுத்திருக்கின்றார். அவள் சரியான அரட் டைக்காரி, அதிகப்பிரசங்கி என்பது முழுத் தோட்டத்துக்குமே தெரியும். ஆண்கள் கூட அவளிடம் பேச்சுக் கொடுக்கத் தயங்குவார் கள். ஆனாலும் நல்லவள். தனக்கு உரித் தில்லாத எதன் மீதும் ஆசைப்படாத மிகவும் நல்லவள்.

காலடி ஓசை கேட்டு எட்டிப் பார்த்த மீனாட் சிக்கு தங்கமணி இறங்கி வருவது தெரிந்தது.

'இவ ஏன் இப்ப வர்றா... இன்னம் அய்யாவே கௌம்பலையே' என்று நினைத்தபடி அவளை மறித்து நிறுத்த படிப்பக்கம் விரைந்தாள்.

இரண்டு மூன்று காய்களை இடது கையில் பிடித்தபடி குதித்துக் குதித்துப் படி இறங்கிய தங்கமணியின் வலது கை முன் காலில் மிதி படாதிருக்க சீலையை உயர்த்திப் பிடித்துக் கொண்டிருந்தது. இடுப்படியில் சேலைக்குள் நுழைந்திருந்த வலது கையிலும் ஒரு கத் திரிக்காயை மறைத்து வைத்திருக்கின்றாள் என்பது மீனாட்சிக்கு தெரியவருகிறது. அவள் கையை அசைத்துக் காட்டியவிதத்தில்.



***குகைப்பிடி மங்கில்***
***பால்த் தேனிரும்***
***ஒரு கரண்டியில்***
***சீனியுடனும்***
***வந்தவள்***
***அவனுடைய***
***உள்ளங்கையில்***
***சீனியைக் கொட்டி***
***சிரட்டை நிறைய***
***தேனீரை ஊற்றினாள்.***

'நேத்து ராவே கத்தரிக்காய் கேட்டில்ல அது தான். வெள்ளனவே கொண்டாந்தேன்' என்ற வளது கையிலிருந்த காய்களைப் பிடுங்கிக் கொண்டவள் 'போதும்டி ஒஞ்சேட்டையெல் லாம்... ஆக்கிக் குடுக்குற காயை எதுக்குள்ள வச்சிக் கொண்டாற...' என்று கோபித்துக் கூறியவள் 'இன்னும் ஐயாவே போகலடி... போயிட்டு அப்பறமா வா' என்று விரட்டினாள்.

'இன்னமா போகலை... ஐயய்யோ' என்றபடி படிக்கொரு காலூன்றி வேகமாக ஓடினாள் தங்கமணி.

அவள் மேலேறி ஓடுவதையே பார்த்துக் கொண்டிருந்த மீனாட்சிக்கு தேயிலைக்கு மேலாக முண்டாசு கட்டிய தலை ஒன்று தெரிந்தது.

பாதைக்கிறங்கி, பாதையைக் கடந்து அய்யா வீட்டுப் படிகளில் இறங்கும்போதே முண்டா சைக் கழட்டி உதரி தோளில் போட்டுக் கொண்டவனை மீனாட்சி கண்டு கொண்டாள்.

இராமரின் அப்பா சின்னான்.

"வாங்கப்பு என்ன இந்தக் காலையிலய... நேத்து ராமரு இருட்டோடல்ல வந்துச்சு... அய்யா லைட்டைக் குடுத்தாக... தம்பிதான் அம்மா தேடும்னுட்டு இருட்டுக்குள்ற ஓடிரிச்சு... யாரோ படுபாவிக பாப்பாவைப் பஸ்ஸ்லயி ருந்து புடிச்சுத் தள்ளிட்டானுகன்னு... நடத் திக் கூட்டியாந்துச்சு... நாம்பாட்டுக்கு பேசிக் கிட்டுப் போறேன்... இந்தாப் போயி அய்யா கிட்ட சொல்லிட்டு வாறேன்..."

'அதுக்கென்னாத்தா... பரவாயில்ல, இந்த ராமர் பய ஒன்னுமே சொல்லலையே... அவந் தான் விழுந்து காலெல்லாம் காயத்தோட வந்தான்.

நாந்தான் பச்செலை புளிஞ்சு மருந்து கட்டி விட்டேன். பாப்பாவும் விளுந்த கதையை சொல்லவே இல்லையே... ஐயா நேத்து ராவு வரச்சொன்னாகளாம்... எனக்கு நாட்லேருந்து வரவே ரொம்ப இருட்டாகிருச்சி... அதான் இப்ப ஓடியாந்தேன்...

அதோட நானும் அய்யாகிட்ட செல சங்கதி கள் பேசணும்..."

உள்ளே சென்ற மீனாட்சி திரும்பி வந்தாள்.

'தேத்தண்ணி குடுக்கச் சொன்னாக... இப்ப வர்றேன்னு...' என்றாள்

'நேத்து ராவு வரச் சொன்னா இப்பத்தான் வர்றாரோ...' என்று அய்யா கத்தியது அவனுக் கும் கேட்டது.

கூரையில் செருகி வைத்திருந்த சிரட்டையை எடுத்து பைப்பில் கழுவிக் கொண்டாள்.

நீண்ட நாள் பாவித்த அகப்பையின் சிரட்டை போல் அதுவும் வழுவழுவென்று செந்நிறக் கறுப்பில் இருந்தது. ஆனாலும் அகப்பை யின் சிரட்டை போல் லேசான தட்டையாக இல்லாமல் உடைத்த தேங்காயின் அரை மூடி தேங்காய்ச் சிரட்டைபோல் குழியாக இருந்தது.

கைப்பிடி மங்கில் பால் தேனிரும் ஒரு கரண்டி யில் சீனியுடனும் வந்தவள் அவனுடைய உள்ளங்கையில் சீனியைக் கொட்டி சிரட்டை நிறைய தேனீரை ஊற்றினாள்.

மங்கை அரைச் சுவற்றில் வைத்தபடி இன்னம் இருக்குப்பா ஊத்திக்கிறுங்க... சீனி வேண்ணா கேளுங்க என்று கூறியபடி சமையலறைக்குள் நுழைந்தாள்.

வெளியே வந்த பெரிய கங்காணியைப் பேச விடாமல் சின்னான் முந்திக் கொண்டான்.

'ஐயாவு நேத்து நாட்டுலேருந்து வரயில ஒன்பதாயிறிச்சிங்க... ஐயா வரச் சொன்னதா அப்பதாங்க தகவல் கெடச்சிச்சி... அதே நேரம் தான் இராமரும் காலை ஒடைச்சிகிட்டு ரத்தத்தோட வந்து சேர்நதான். அவனுக்கு மருந்தை கட்டி முடிக்கையில பத்துமணி பிந்திறிச்சிங்க... அதோட ஐயாகிட்ட பேச எனக்கும் ஒரு சங்கதி இருந்துச்சிங்க... அதான் ஒரேதிரியா காலையில வருவமின்னு...'

'ஒனக்கென்ன சங்கதி பேசணும் சொல்லு...'

'ஏஞ்சங்கதி இருக்கட்டுங்க... ஐயா ஏனுங்க அவசரமா வரச் சொன்னியக...'

ஐயா ஏன் சின்னானை அவசரமாகக் கூப் பிட்டார் என்பது ஐயாவுக்குத் தெரியும். நமக் கும் தெரியும். சீதையையும் ஓம் மகன் ராம ரையும் பற்றி கண்டமாதிரி மலையில பொண் டுக பேசிச் சிரிக்குறாளுக... பெரட்டுக் களத் துல அகராதிப்புடிச்ச பயலுக பேசுறாய்ங்க... அதனால ராமரை பெறட்டுக்கு வரச்சொல்லு நானு சீதையை எப்படியாச்சும் அனுப்பிக்கி றேன்னு கூறத்தான் அவனை வரச் சொன் னார் அய்யா. அதை எப்படி மீனாட்சியை எல்லாம் வைத்துக் கொண்டு பேசுவார்...

ஆகவேதான் நீ சொல்ல வந்ததை சொல் என்கின்றார்.

மொதல்ல தேத்தண்ணிய குடி... அப்புறமா சொல்லு என்றார்.

'இப்ப பாப்பாவும் பெரியபுள்ள தானுங்களே...' என்று பேச்சை நிறுத்தினான்.

'ஏன், ஏன்... யாராவது என்னமாவது சொன் னானுகளா..." என்று அவசரமாகக் கேட்டார் அய்யா.

'அப்படி ஒண்ணுமில்லீங்க... பாப்பாவை ஸ்கூல்ல விட்டப்பறம் திரும்பி கூட்டியாறதி ராமரை நம்ப பரமசிவம் மொதலாளியோட பலசெலவுக்கடையில தான் நிக்க சொல்லி யிருந்தேன். அவனும் சும்மா நிக்காம கூட மாட வேலகள் செஞ்சிருக்கான். பேங்குக் கெல்லாம் கொட போயிருக்கான். அவருக்கும் அவனை நல்லா புடிச்சிறிச்சி... கடையிலய நிக்கிறியா... சாப்பாடு போட்டு தங்க வச்சி மாசம் ஆயிரம் ரூவா சம்பளம் தர்றேன்னு கூப்பிட்றாரு...' என்றான் சின்னான்.


பெரிய கங்காணியாருக்குத் தன் காதுக ளையே நம்பமுடியவில்லை. 'பழம் நழுவிப் பாலில் விழுந்த கதை' என்பது இதைத்தா னோ என்று எண்ணி மகிழ்ந்தார்.

'தோட்டத்துல இராமரப் பேர் பதிஞ்சி இருக் குங்கிறதை மறந்துறாதே... எந்த நாளும் செக்றோல்ல பேர் விழாம சீக்கு விழுந்தா தொரை தாட்பூட்டும்பாரு தெரியும் தானே'!

'தாட்பூட்டுன்னு தாண்டி என்னங்க செய்துறு வாரு... வேலை குடுக்க மாட்டேம்பாரு... செக்றோல்ல பேரை வெட்டிறுவேம்பாரு.... செஞ்சிட்டு போகட்டுங்க... நாமதான் தேயிலை மலையே கெதின்னு கெடந்துட்டோம்... அது காளாச்சும் வெளியே போகட்டுங்க... நாலு மனுசரோட பழகட்டுங்க... நல்லது கெட்டதை தெரிஞ்சுக்கிடட்டுமுங்க...' என்றான்.

பெரிய கங்காணியார் திகைத்துப் போய் நிற்கின்றார். நம்மைப் போலவே!

*(தொடரும்)*



theliwathai.joseph@thaiveedu.com

உங்கள் அனைத்து நிகழ்வுகளையும் பார்ப்பதற்கும் பதிவதற்கும்

www.inayam.net



வீடு விற்பனைக்கு FOR SALE
9th Line & 14th Ave. (Boxgrove Area)
MARKHAM
KenKirupa
Sales Representative
INSPIRED BY YOU
Thinking of Selling? Contact Me Today.
Beautiful Arista Built 6 yrs old Home in the Heart of Box Grove.
Open Concept Layout, Approx 2900 Sf.
Hardwood on Main Floor & Oak Stairs, Laminate Floor on 2nd.
Modern Kitchen With Granite Counters, Ceramic Backsplash,
High End Stainless Steel Appliances (Newer Fridge & D/W),
Extended Cabinets & Separate Pantry.
Large Family Room With Ceiling Fan & Pot Lights.
Large Master With Huge Walk In Closet & Gorgeous 5 Pc Ensuite.
Fully Fenced,
Garage Access,
9Ft Ceilings On Main.
Close To Schools, Box Grove Plaza, Walmart, Transit and Hwy 407.
Newer Samsung Fridge (Still Under Warranty),
Newer Kitchenaid D/W,
Fridgidaire Gas Stove,
Whirlpool Front Load Washer & Dryer,
Central A/C.
Cold Room & 3Pc Rough in Bath in Basement.
All Electric Light Fixtures & Window Coverings.
2 Garage Door Openers and Remotes.
$699,900 $649,900
Direct 416 294 9322
Office 416 491 4002
RE/MAX
Re/Max Crossroads Realty Inc., Brokerage
905areahomes.ca 416homes.ca




Arajen Beauty Centre
• Make Up
• Hair Style & Hair Care
- Dying & Highlighting
• Bridal Make Up & Arangetram
• Skin Care (All Kind of Facial)
- Threading & Waxing
• Skin Treatment
• Nail Art
• Dress Making (Saree & Blouse)
• Permanent Hair Removal
• Pedicure, Manicure
• Mehindi
• Bouquet, Sadainagam
• Cryotherapy
• Micro Dermabrasion
Beauty Classes
அழகியல் கலையை கற்க விரும்புகிறீர்களா? எங்களது கலை வகுப்புகளில் இணைந்து கொள்ளுங்கள்
Certificate Courses & Seminars
அரஜன் அழகு நிலையம்
2605-A Eglinton Ave. E.,Scarborough, ON M1K 2S2
(இரா சுப்பர் மார்க்கட் மேல் மாடியில்)
இப்போது ஆண்களுக்கான சேவைகளும்
Tel: 416.509.7978
Web: www.arajenbeauty.ca, E-mail: sasi@arajenbeauty.ca

MasterCard

VISA

# NEW LIFE FRESH START

**உங்கள் கடன் அட்டை, வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு**

**We will reduce your debts upto 80%**

**(Visa, Master Card, AMEX, Personal Loans, Line of Credit, Income Tax, HST, GST Owing, Car or House Repossessed, Student Loan outstanding for 7 years )**

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
**We will stop all interest on your debts immediately**

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள்,சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்
**We will stop collection calls, court action & wage garnishments immediately**

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
**We will protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC, Life Insurance, Stocks, Bonds & Shares)**

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப் பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
**We will make one monthly payment to all your creditors**

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
**No need to file for Bankruptcy**

**Suren Sornalingam BBA**
Post Graduate Diploma in Business Management
Federal Government Registered & Certified (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation



**CREDIT RECOVERY CANADA**
55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON.
M1P 4X4

**Tel: 416-264-1272**
Fax: 416-332-0914
Web: www.creditrecoverycanada.com

# புறோக்கர் இரத்தினம்

- பொ. கனகசபாபதி -

அவர் சங்கானைவாசி. வாரத்தில் குறைந்தது இரண்டு நாட்களாவது எமது கிராமமாகிய சண்டிலிப்பாயில் பிரசன்னமாகி விடுவார். ஐந்து அடிக்கும் குறைந்த உயரமே உள்ள குள்ளமான மனிதர். ஐம்பது வயதிருக்கும். வாய் நிறைய வெற்றிலைச் செல்வம். ஆகவே கன்னச் சொக்கை ஒரு புறம் புடைத்தபடி இருக்கும். இடையிடையே வெற்றிலைச்சாறை விழுங்கிக் கொள்வார். யாராவது வீட்டிற்குச் சென்றால் மாத்திரம் சக்கையை வெளியே துப்பிவிட்டு வாயினைக் கொப்பளித்த பின்னர் அங்கே ஏதாயினும் நீராகாரம் கிடைத்தால் உட்கொண்ட பின்னர், மீண்டும் புதிதாகப் போட்டுக் கொள்வார். நீள்வட்டமான தலை அடர்த்தியான நரையும் கறுப்பும் கலந்த தலைமயிரை கன்ன வகிடு எடுத்து வாரியிருப்பார். பூனைக்கண் என்பார்கள். அது அவரது கபில நிறமான வட்ட முழியினைக் குறிக்கும். விசாலமான நெற்றி நிறையவே திருநீறு அப்பியபடி சிவப்பழம் போலக் காட்சி தரும் அவரது நெற்றியின் மத்தியிலே ஒரு குங்குமப் பொட்டு. கரைவேட்டியும் சேர்ட்டும்தான் அவரது ஆடை. பேழை வயிறு சேர்ட்டினை வெளியே தள்ளியபடி எட்டிப் பார்ப்பதா அல்லது அடக்கமாக உள்ளே இருக்கலாமா என்று தீர்மானம் எடுக்க முடியாதபடி இடையிடையே வெளியே எட்டிப் பார்ப்பதுண்டு. சேர்ட்டின் முன்மார்புப் பக்கம் வலப்புறத்திலே ஒரு பொக்கற். அது எப்பொழுதும் மடித்து வைக்கப் பட்ட பேப்பர்களால் பம்மியபடி காணப்படும். சேர்ட் பொக்கட்டின் ஒரு பக்கமாக அந்தக்காலத்து சுவான் பேனா. எல்லோருடனும் சுபாவமாகப் பழகுவார் இது அவர் தொழில் பண்பு.

அவரது வாகனமான துவிச்சக்கர வண்டிக்கும் ஏறக்குறைய அவர் வயது இருக்கும். அவர் அதில் ஆரோகணித்து வருவதே ஒரு காட்சியாகத் தான் இருக்கும். அச்சின் மேல் காலைவைத்து வண்டியைத் தள்ளிக்கொண்டு ஓடி இரண்டு மூன்று முறைகளாவது தெத்தித்தான் ஆசனத்தில் ஏறி உட்காருவார். உட்கார்ந்த பின்னர் நெஞ்சை நிமித்தியபடி நேர்ப் பார்வையுடன் பவனி வருவார். வழியே குறியாக அந்த இந்தப் பக்கம் பார்க்கின்ற பழக்கம் இல்லை. யாரேனும் இரத்தினம் என்று அழைத்தால் மாத்திரம் அங்கே பார்க்காமல் குதித்து, சிறிது தூரம் வண்டியுடன் ஓடி நிறுத்துவார்.


ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு கல்யாணத்தைச் செய்து வைக்கவேணும் என்பார்கள். எமது ஊர் விவசாயக் குடும்பங்களால் நிரம்பிய கிராமம். ஆகவே அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தான் காதல் கல்யாணம் நடைபெற்று வந்தது. பெரும்பாலும் பேசித் தான் கல்யாணங்கள் நடைபெறும். ஊரிலே இரத்தினத்தின் கைங்கரியத்தால் குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டவர்கள் கணிசமான தொகையினர். ஆகவே இரத்தினம் எல்லா வீடுகளுக்கும் செல்லப்பிள்ளையாகி விட்டார். குறிப்பாக எங்கள் ஊர்ப்பக்கம் வருகின்ற அத்தனை நாட்களும் எமது வீட்டிற்குப் பிரசன்னமாகி விடுவார். எனது மூத்த அக்காவின் கல்யாணத்தை அவர்தான் ஒப்பேற்றி விட்டார் ஆகவே அவர் மேல் அம்மாவுக்கு ஒரு கரிசனை. அவருக்கும் அம்மாவின் வெற்றிலை மீது அலாதிப்பிரியம். எமது வீட்டிற்கு வந்ததும் வாயின் உள்ளே குதப்பிக் கொண்டிருக்கும் வெற்றிலைச் சக்கையைக் காறித் துப்பிவிட்டு, வாயினைக் கொப்பளித்த பின்னர் அம்மா கொடுக்கும் காப்பியை விழுங்கி விட்டு புதிதாக அம்மாவின் வாழை மடலிலை பாதுகாத்து வைத்திருக்கும் வெற்றிலையைத் தட்டத்தில் உள்ள பாக்கு உடன் வாயுள் திணித்துக் கொள்வார். பிஞ்சுப் பாக்கும் ஒரு கீறல் உடன் சேரும். சில நாட்களில் கோப்பி வேண்டாம் என மறுப்பார். அந்நாட்களில் அப்புவின் வர்ணனைப்படி பார்த்தால் இரத்தினம் கீறலில் இருக்கிறார் என்பது அர்த்தம். இரத்தினம் பொதுவாக குடிப்பழக்கம் இல்லாதவர் ஆனால் கல்யாணப் பேச்சுக்களின் போது மாத்திரம் சிறிது அருந்துவார். சம்பந்தப் பேச்சுக்காரரின் நன்கொடை. அத்தகைய நாட்களில் அவர் பேச்சு சுவாரஸ்யமானதாக இருக்கும். தனது அனுபவங்களை எடுத்து வீசுவார். அத்தகைய ஒரு நாளில் நடைபெற்ற உரையாடல் இன்றும் என் நினைவில் பசுமையாக உள்ளது. பட்டப் படிப்பினை முடித்து விட்டு நான் வீட்டில் இருந்த சமயம். அம்மா என்னைப் பார்த்து கண்ணைச் சிமிட்டிவிட்டு, “இரத்தினம் இவன் தம்பிக்கு ஒரு கல்யாணம் பேசுமேன்” என்றார். “அக்கா, தம்பி என்ன நட்சத்திரம்?” என்றார் இரத்தினம். அம்மா கார்த்திகை என்றார். “சீ! இருக்க முடியாதே? அது முருகனின் நட்சத்திரம். அந்த நட்சத்திரக்காரர்கள் எல்லாம் மிகவும் அழகாக இருப்பார்கள். கார்த்திகை நட்சத்திரக்காரரை பெண்கள் கலைத்துப் பிடிப்பார்கள். தம்பியைப் பார்த்தால் அவர் கார்த்திகை நட்சத்திரம் இல்லைப் போலத் தெரிகிறது” என்றவர், “நான் கார்த்திகை நட்சத்திரம். என்னைப் பாருங்கள்” என்றார். அம்மாவுக்கு நான் இலட்சணமாயில்லை என இரத்தினம் கூறியது கோபத்தினை ஏற்படுத்தியிருக்க வேண்டும். “நீர் கார்த்திகையோ? நிச்சயமாக நீர் சதய நட்சத்திரமாகத் தான் இருக்க வேண்டும்” என்றார் எள்ளலாக. “அதென்னக்கா சதயம்?” என்றார் இரத்தினம். “அது தான் பிள்ளையாருடைய நட்சத்திரம்” என்றார் அம்மா. அம்மாவுக்குத் திருப்பி அடித்த திருப்தி. இரத்தினம் சட்டை செய்யவில்லை. அவர் இதற்கும் மேலாகச் சொல்லடி பட்டுள்ளார். தொழிலில் அது சகசம். இரத்தினம் ஆயிரம் பொய் சொல்வதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டதில்லை. பொய் சொல்லாமலும் இருக்க முடியாது. வசதிக்கேற்ப தொகை கூடும், குறையும். அதெல்லாம் தொழில் தர்மம் எனத் தத்துவம் பேசுவார் இரத்தினம். ஒரு சுமர் காரியம் நிறைவேறுவதற்காக ஒரு சிறு பொய் சொல்வதில் ஒரு குறையும் இல்லையே என்பார்.



ஆனால், சில சந்தரப்பங்களிலே பெண்வீட்டார்களிடமோ அல்லது மாப்பிள்ளை வீட்டாரிடமோ அதீதமாக இரு வீட்டாரிடமோ இரத்தினம் செமத்தியாக வாங்கிக் கட்டினதை ஊரவர்கள் பலர் பார்த்து உனக்கு இது வேண்டியது தான் என சொல்லியதையும் இரத்தினம் சட்டை செய்தாரில்லை. மறுநாளோ, மறுநாளுக்கு மறுநாளோ பழையபடி அதே கோலத்தில் ஊரில் பவனி வருவார். கொஞ்சம் சாதகப் பொருத்தம் பார்க்கவும் அவர் தெரிந்து வைத்திருந்தார். சில சமயங்களில் குறிப்புக்களை ஒத்துப் பார்த்து பெண்வீட்டார்களிடமோ மாப்பிள்ளை வீட்டாரிடமோ “நல்ல பொருத்தமாய் உள்ளது. நீங்கள் சாதிசனம், குணநலம் பற்றி விசாரித்துச் சொல்லுங்கள். நான் மிச்சத்தைப் பார்த்துக் கொள்கிறேன்’ எனக் கூறிப் பொக்கற்றினுள் உள்ள குறிப்பில் ஒன்றினைக் கொடுப்பார். விசாரிக்கப் போனவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிய நாட்கள் பலவுண்டு. மாப்பிள்ளை குடியும் குடித்தனமுமாயிருப்பார். “நான் என்னண்ணை செய்யலாம்? பெண்ணைப்பார் எனக் குறிப்பைத் தருகிறார்கள். வேறு எங்கேனும் ஒப்பேறி விட்டால் கல்யாண அழைப்பிதழாவது தந்தார்கள் என்றால் அந்தக் குறிப்பை எடுத்து வீசலாம். இந்த மனுசருக்கு விவஸ்தையே இல்லை” எனத் தத்துவம் பேசுவார். அவரது கூற்றிலும் நியாயம் இருக்கவே செய்கிறது.

சுப்பையா குடும்பம் சண்டிலிப்பாயில் உள்ள சராசரிக் குடும்பங்களில் ஒன்று. மூன்று மகன், ஒரு பெண்பிள்ளை என விவசாயம் மூலம் காலத்தை ஓட்டிக் கொண்டது. மூன்று அண்ணன்மாரும் சகோதரிக்குத் திருமணமான பின்னரே தாம் திருமணம் செய்வது எனத் தீர்மானம். அத்தனை கல்வி அறிவு இல்லாதவர்களான சகோதரர்கள் தம்மைப் போல ஒரு விவசாயியை சகோதரிக்குத் திருமணம் செய்து வைப்பதில்லை. ஒரு அரசாங்க உத்தியோகத்தரைத்தான் செய்ய வேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தனர். ஆகவே அவருடைய சாதகக் குறிப்பும் இரத்தினத்தின் சேர்ட் பொக்கற்றினுள் இடம் பெற்றது. அவர்களை இரத்தினம் அதிகம் காக்க வைக்கவில்லை. ஒரு மாப்பிள்ளையின் சாதகம் மிகப் பொருத்தமாயுள்ளது என்றும் மாதகலில் தபால் கந்தோரில் வேலை செய்வதாகவும் கூறியவர் மாப்பிள்ளையின் அருமை பெருமைகளைப் பற்றி வாய் ஓயாமல் பேசினார். வேக வேகமாக செயல்கள் முன்னேறின. திருமண வேலைகளும் மும்முரமாக நடைபெற்றன. திருமணத்திற்கு இரண்டு நாட்களிருக்கும் போது இரத்தினம் அவர்கள் வீட்டிற்கு தனது வருமதியைப் பெறுவதற்காக வந்தவர் மூன்று தமையன்மார்களும் உருத்திரத் தாண்டவம் ஆடுவதைக் கண்டார். இரத்தினத்தைப் புரட்டி எடுத்து விட்டார்கள். இரத்தினம் கதறிய குரல் கேட்டு அண்டை அயல்வீட்டார் வந்துதான் இரத்தினத்தினைக் காப்பாற்றினார்கள். அல்லாவிட்டால் இரத்தினம் வீட்டிற்கு சக்கையாகத் தான் யாராவது கருணை உள்ளத்தின் உதவியால் போய்ச் சேர்ந்திருப்பார். அவர்கள் கோபத்திற்குக் காரணம்? இரத்தினம் தம்மை மாப்பிள்ளையின் தொழில் விசயமாக ஏமாற்றி விட்டார் என்பதே. இரத்தினம் தபாற்கந்தோரில் வேலை என்று கூறியதை அவர்கள் பெரிதாக தபால் நிலைய அதிபர் என எண்ணி விட்டார்கள் ஆனால் மாப்பிள்ளையோ வெறும் தபால்காரர் என்பதை அவர்கள் முதல் நாள் தான் அறிந்தார்கள். மோசம் போய்விட்டோமே எனத் துடித்தார்கள். கோபத்தில் இருந்தவர்களுக்கு இரத்தினம் வந்தது நல்ல சந்தர்ப்பமாக அமைந்தது. அதனை இரத்தினம் மேல் காட்டிவிட்டனர். மூவருமாகத் தவில் சமாவே நடத்தி விட்டனர்.

பாவம் இரத்தினம், ஒன்றுமே நடவாதது போல மறுநாள் வந்தார். வெற்றிலைத் தட்டத்தினை அவர் பக்கமாகத் தள்ளிவிட்ட அம்மா முதல் நாள் நடந்தது பற்றிக் கேட்டதற்கு, “நான் எங்கே பிழை விட்டேன்? அவர் தபாற் கந்தோரில் வேலை என்றுதானே கூறினேன். அவர்கள் விசாரிக்காதது என் குற்றமா?” என்றவர் “இந்த உலகத்தில் நன்மை செய்பவரை யார் தான் மதிக்கிறார்கள்?” என்றார் ஒரு பெருமூச்சுடன். “அது போகட்டும் அக்கா, உங்கடை மகனுக்கு ஒன்று பார்க்கச் சொன்னீர்களே, தோதாய் ஒன்று வந்திருக்குது, குறிப்பைத் தரட்டுமா?” என்றார். “கொஞ்சம் பொறு இரத்தினம், தாலி கூறைக்காவது அவன் காசைச் சேர்க்கட்டும் பார்க்கலாம்!” என்றார் அம்மா.



kanagasabapathy.p@thaiveedu.com

# Buying a home?



Mortgage protection insurance is an important part of owning a home. Let's talk about your options.

Get a plan for coverage you carry with you – just like the keys to your new home.



**Ahilan Balachandran**, B.Comm, CLU, CFP®, CHS
Advisor
CERTIFIED FINANCIAL PLANNER™
Tel: 416-412-0401 ext 2302 Cell: 416-894-2009
ahilan.balachandran@sunlife.com
www.sunlife.ca/ahilan.balachandran
1300 - 2075 Kennedy Road
Scarborough, ON M1T 3V3

CFP

Life's brighter under the sun

© Sun Life Assurance Company of Canada, 2012.

Sun Life Financial

# அலசாத அழுக்குத் துணி

**- அ. முத்துலிங்கம் -**

மொழிபெயர்ப்புகள் செய்ய ஒருவரும் விரும்புவதில்லை. காரணம், எவ்வளவுதான் உயிரைக் கொடுத்து ஒரு மொழிபெயர்ப்பைச் செய்திருந்தாலும் அந்தப் புகழ் மூல நூலாசிரியருக்குத்தான் சென்று சேரும். மொழிபெயர்ப்பவருக்கு ஒன்றுமே கிடைப்பதில்லை. எவ்வளவுதான் சிறப்பாக ஒரு மொழிபெயர்ப்பு நூல் அமைந்தாலும் அது மூல நூலுக்கு ஒரு படி குறைந்துதான் இருக்கும். மொழிபெயர்ப்பாளரே திருப்திப்படும் விதமாக ஒரு மொழிபெயர்ப்பு அமைவது அபூர்வமானது. ரோல்ஸ்ரோய் எழுதிய 'போரும் அமைதியும்' நாவலின் ஆங்கில மொழிபெயர்ப்பு 1885ல் வெளிவந்தது. அதைத் தொடர்ந்து பல மொழிபெயர்ப்புகள் வந்து கொண்டேயிருந்தன. பத்தாவது மொழிபெயர்ப்பு 2007ல் வந்தபோது இதுவே ஆகச் சிறந்த மொழிபெயர்ப்பு என பத்திரிகைகள் எழுதின. இப்பொழுது பத்தாவது மொழிபெயர்ப்பு அவ்வளவு திருப்திகரமாக இல்லையென்று பதினோராவது மொழிபெயர்ப்பும் வந்துவிட்டது.


மொழிபெயர்ப்பு என்றாலே தூர ஓடும் இந்தக் காலத்தில் 2500 வருடங்களுக்கு முற்பட்ட சீன இலக்கியத்தை சேர்ந்த கவித்தொகையிலிருந்து சில பாடல்களை தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார் 'பயணி' என்னும் புனைபெயரில் எழுதும் ஸ்ரீதரன் மதுசூதனன். கவித்தொகையில் கிடைத்த 305 பாடல்களில் 34 பாடல்களை தேர்வு செய்து மொழிபெயர்த்து 'வாரிச்சூடினும் பார்ப்பவரில்லை' என்ற தலைப்பில் காலச்சுவடு வெளியீடாக கொண்டுவந்திருக்கிறார். சீனமொழியில் இருந்து தமிழுக்கு நேரடியாக மொழிபெயர்க்கப்பட்ட முதல் நூல் என்ற பெருமை இதற்கு உண்டு. இதை மொழிபெயர்க்க அவர் மேற்கொண்ட கடின உழைப்பும், ஆராய்ச்சியும், பல் துறை அறிஞர்களை தொடர்புகொண்டு ஐயங்களை உடனுக்குடன் தீர்த்த செயலும் வியப்பை ஏற்படுத்தும். இந்தப் பணியில் இவருக்கு உதவிய, ஆலோசனை வழங்கிய, உற்சாக மூட்டியவர்களின் பட்டியல் ஒரு பக்கத்தை தாண்டிச் செல்கிறது என்றால் அந்த உழைப்பின் ஆழத்தை ஓரளவுக்கு உணரமுடியும்.

ஸ்ரீதரன் இந்திய வெளியுறவுத்துறையில் பணியாற்றுகிறார். பணி நிமித்தம் ஒன்பது ஆண்டுகள் பெய்சிங்கிலும் ஹாங்காங்கிலும் வாழ்ந்தார். பெய்சிங்கில் முறையாக சீன மொழி கற்று தகுந்த மொழி வல்லுனர்களிடம் பாடம் கேட்டு இந்த மொழிபெயர்ப்பை சிறப்பாக முடித்திருக்கிறார். இவர் ஹாங்காங்கில் பணியாற்றியபோது என்னைத் தொடர்புகொண்டு அவர் மொழிபெயர்த்த சில பாடல்களை அனுப்பிவைத்தார். நான் அவரை சந்தித்தது கிடையாது. அவரிடம் பேசியதும் இல்லை. பாடல்களைப் படித்த நான் பரவசமாகி 'அவை ஒவ்வொன்றும் சங்கப் பாடல்களை நினைவூட்டுகின்றன. தொடர்ந்து மொழிபெயருங்கள்' என்று ஊக்குவித்து கடிதம் எழுதினேன். இப்பொழுது முழு நூலையும் கையில் ஏந்தியிருக்கையில் அது இத்தனை செறிவாகவும் அழகாகவும் வரும் என்று நான் எதிர்பார்த்திருக்கவில்லை.

எங்கள் பழைய இலக்கியங்களில் நிறையப் பாடல்கள், பணி நிமித்தமாகப்போன தலைவனைப் பற்றி பாடப்பட்டிருக்கின்றன. சீன இலக்கியத்திலும் இந்தப் பொருளில் நிறைய பாடல்கள் இருப்பதாகத் தெரிகிறது. தொகுப்பிலே 'சென்றான் தலைவன் பணி நிமித்தம்' என்று ஒரு பாடல் தொடங்குகிறது. பணி காரியமாகப் போன தலைவன் திரும்பவில்லை. மாலை நேரமாகிவிட்டது. சேவல்களும் கோழிகளும் கூடு திரும்பிவிட்டன. ஆடு மாடுகள் மேய்ந்து வந்துவிட்டன. நாட்கள் மாதங்கள் என்று கடந்துவிட்டன. தலைவனுக்கு என்ன ஆனது? அவனை பசியும் தாகமும் வாட்டுமே' என்று வருந்துகிறாள் தலைவி. இதை படித்த கணமே ஐங்குறு நூறில் பேயனார் பாடல் நினைவுக்கு வருகிறது.

*தேரைகள் கத்துகின்றன*
*பறவைகள் சத்தமிடுகின்றன*
*மழைக்காலம் வந்துவிட்டது*
*தலைவனின் தேர் இன்னும் வரவில்லை.*

இப்படி ஒவ்வொரு பாடலை படித்தவுடனும் பழைய இலக்கியங்களுடன் அதை ஒப்பிடவே மனம் விழைகிறது.




இன்னொரு பாடலில் பாரதியின் தூண்டில் புழுவினைப்போல் தலைவி வேதனையில் துடிக்கிறாள். பாடல் முழுக்க தலைவியின் ஏக்கமும் வேதனையும் சோகமும் விரக்தியுமே மேலோங்கிய உணர்வாக நிற்கிறது. 'நான் ஒருவருக்கும் பயனில்லாமல் வீணாகிப் போனேன்' என்ற தொனி பாடலில் வெளிப்படுகிறது.

*தலைவன் கிழக்கே போனது முதலே*
*தலையும் புதரென ஆகிப்போனேன்.*
*கழுநீர் இல்லா நிலையா? இல்லை,*
*வாரிச் சூடினும் பார்ப்பவரில்லை.*

•

*மனதில் தலைவன் நினைவே நிலைக்கும்*
*இன்ப வேதனை நெஞ்சை நிறைக்கும்.*

அவள் தலை வாரவில்லை. அந்தக் காலத்தில் கழுநீரைப் பூசி கூந்தலை வாரி முடிவது வழக்கம். அழகாக வாரினாலும் பார்க்க ஆர் இருக்கிறார்கள்? அவள் மனது வலித்தாலும் அதில் ஒரு மெல்லிய சுகம் இருப்பதை அவள் காண்கிறாள். 'இன்பவேதனை' என்கிறார் கவி. 2500 வருடங்களுக்கு முன்னர் எழுதப்பட்ட ஒரு கிரேக்கப் பாடலும் இதைத்தான் சொல்கிறது.

*I sigh and burn*
*And my heart drips blood*
*But the pain is sweet*
*When I suffer for you.*

'உனக்காக நான் வேதனை அனுபவிக்கும் போது அதுகூட இன்பமாகத்தான் இருக்கிறது.' தலைவி விரக்தியில் 'ஓ, நான் வீணாய் போய்க்கொண்டிருக்கிறேன்' என்று சொல்வதைத்தான் குறுந்தொகை பாடல் வேறுவிதமாக உணர்த்துகிறது.

*கன்றும் உண்ணாது கலத்தினும் படாஅது*
*நல்லான் தீம்பால் நிலைத்துக் காஅங்கு*
*எனக்கும் ஆகாது, என்னைக்கும் உதவாது*

'பசுவின் பால் கறக்கவும் இல்லாமல் கன்றும் உண்ணாமல் வீணாவதுபோல் நானும் வீணாகிறேன்' என்கிறாள் தலைவி. சீனப்பாடலாக இருக்கட்டும், கிரேக்கப் பாடலாக இருக்கட்டும், தமிழ் பாடலாக இருக்கட்டும் 2500 வருடங்களுக்கு முன்பிருந்தே கவிகள் பெண்களின் காம உணர்வை நுணுக்கமாக அவதானித்து வந்திருக்கிறார்கள்.

ஆனால் கவித்தொகையின் உண்மையான சிறப்பு அவை சங்கப்பாடல்களை ஒத்து இருப்பதால் அல்ல. முற்றிலும் வேறுபட்ட பல பாடல்களை கொண்டிருப்பதால்தான். அவற்றின் பொருளும் சொல்லும் முறையும் அதிசயிக்க வைக்கும். சங்கப் பாடல்களில் அண்ணனைப் பற்றியோ தகப்பனைப் பற்றியோ குறிப்புகள் காண்பது அபூர்வம்.

'அடர்ந்த மலை' என்று ஒரு பாடல். ஒருவன் மலை ஏறுகிறான். வழக்கமாக அவன் காதலியை நினைப்பான் அல்லது மனைவியை நினைப்பான். ஆனால் இந்தப் பாடலில் அவன் அப்பாவை நினைக்கிறான். அம்மாவை நினைக்கிறான். பின்னர் அண்ணனை நினைக்கிறான்.

*சின்ன மலையில் ஏறுகிறேன்*
*அண்ணன் திசையை நோக்குகிறேன்*
*அண்ணன் சொல்வார்: ஆ!*
*என் தம்பி வேலைக்குச் சென்றானே*
*பகலும் இரவும் குழுவோடு*
*எச்சரிக்கையாய் இருப்பானே*
*இறந்துவிடாமல் வருவானே!*

மிகச் சாதாரண வரிகள்தான். ஆனால் மலை ஏறுபவன் தன் அண்ணன் இப்படியெல்லாம் எண்ணுவான் எனக் கற்பனை செய்யும்போது அந்த நினைவு எங்களை 2500 வருடங்கள் தாண்டி வந்து மெள்ள அழுத்துகிறது.

சங்கப்பாடல்களில் காணவே முடியாத இன்னொரு பாடல் 'தண்டச்சோறு.' மரம் வெட்டிகள் 'க்கான், க்கான்' என்று சத்தம் எழ மரம் வெட்டுகிறார்கள் வெட்டியபடியே பாடுகிறார்கள். அந்தப் பாடல் முழுக்க பிரபுக்குல ஐயாமார் பற்றிய எள்ளல்தான்.

தொடர்தல் 98ம் பக்கம்


**TUTORING**

Grades: 1-8: English, Math, Science & Social studies
Grade 9&10: English & Math ஆகிய வகுப்புகள் நடாத்தப்படுவதுடன் EQAO, Literacy test களிற்கும் தயார்படுத்தப்படும்.

இடம்: Kennedy & Ellesmere அருகாமையில்

அஞ்ஜலீன் திசைராஜா B.A (Hons), M.Sc, Ph.D (Certified teacher)
647 291 1357

# அலசாத அழுக்குத்...

97ம் பக்கத் தொடர்ச்சி...

*விதைப்பதுமில்லை, அறுப்பதுமில்லை*
*விரட்டுவதில்லை வேட்டையுமில்லை*
*வீட்டு முற்றத்தில்*
*வளர்ந்த கிடாக் கறி தொங்குவது எப்படியாம்?*
*அந்தப் பிரபுக்குல ஐயாமாரே*
*தண்டக்கூழே குடிப்பதில்லையே!*
*விதைப்பதுமில்லை, அறுப்பதுமில்லை*
*முன்னூறு குதிர் தானியம் மட்டும்*
*குவிப்பது எப்படியாம்?*

சின்னச் சின்ன கேள்விகள். அப்பாவித்தன மாகத் தோன்றும் கேள்விகள். அவர்கள் மரம் வெட்டும் கோடரிகளிலும் பார்க்க கூர்மையான கேள்விகள். மொழிபெயர்ப்பாசிரியர் கூறு வதுபோல சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எங்கோ ஓர் ஆற்றங்கரையில் ஏதோ ஒரு மதியத்தில் வெளிப்பட்ட பசித்த வயிற்றின் கோபம் இன்றைக்கும் குமுறி எரிவது தெரி கிறது.

அபூர்வமான ஒரு பாடல் 'குட்டியாய், மிருது வாய்' என்று உள்ளது. குன்றிலே நீண்டு போகும்பாதை. களைத்த போர் வீரர்கள் ஒரு வர் பின் ஒருவர் அணிவகுத்து செல்கிறார்கள். நேர் எதிராக குட்டியாய் மிருதுவாய் மஞ்சள் குருவிகள் உற்சாகமாகவும் சுதந்திரமாகவும் சிறகடித்து பறக்கின்றன. தொடர்ந்து நடந்து இறுதியிலே போய்ச்சேரும் இடத்தை அடை வோமா என்ற அச்சம் போர் வீரர்களுக்கு வருகிறது. 'பானம் தாருங்கள், பண்டம் தாருங் கள்' என்று வேண்டியபடியே தொடருகிறார்கள். யாராவது கொடுப்பார்கள் என்ற ஆசைதான், ஆனால் கொடுப்பார் ஒருவரும் இல்லை. போர் வீரர்களின் வீரசாகாசங்களை, தைரி யத்தை, நாட்டுப்பற்றை கவிகள் பாடியிருக் கிறார்கள். ஆனால் அவர்களுடைய அவலத் தையும், களைப்பையும், கையாலாகத்தனத் தையும், விரக்தியையும் ஒருவரும் பாடியதா கத் தெரியவில்லை.

'தென்மலை' என்ற தலைப்பில் அதிர்ச்சி தரக் கூடிய பாடல் ஒன்றும் இருக்கிறது. ட்ச்சீ நாட்டு இளவரசி மணமாகி கணவன் வீட்டுக்கு சென்றுவிட்டாள். அவளுடைய அண்ணன் ட்ச்சீ நாட்டு அரசனாக ஆள்கிறான். இளவரசிக்கும் அவளுடைய அண்ணனுக்கும் இடையில் இருந்த கள்ள உறவு மணமான பின்னரும் தொடர்கிறது. ஒருகட்டத்தில் அண்ணன்காரன் இளவரசியின் கணவனைக் கொன்றுவிடுகி றான். ஒரு நாட்டின் மன்னன் செய்த ஒழுக் கமற்ற செயலை கண்டித்து பாடிய புலவர் எத்தனை துணிச்சல்காரராக இருந்திருப்பார்.

*எப்படிப் பிளப்போம் விறகினை*
*கோடரி இன்றி இயலாது*
*எப்படித் தேர்வோம் மனைவியை*
*தூதுவர் இன்றி அமையாது.*
*அமைந்துவிட்டது என்றபின்*
*வரம்பு மீறுதல் என்பதேன்?*

இப்படி அறிவுரையில் தொடங்கி கேள்விக் குறியுடன் பாடல் முடிகிறது.

இன்னும் பல வித்தியாசமான பாடல்களை தொகுப்பில் காணலாம். சங்க இலக்கியங்க ளில் உள்ளதுபோல விவசாயிகளின் பெரு மையை சொல்லும் ஒரு பாடல். சகோதர் களைப் புகழ்ந்து பாடும் பாடல் ஒன்றும் உள் ளது, அதன் தலைப்பு 'செர்ரி மலர்கள்.'

*உணவுக் கலங்களைப் பிடியுங்கள்*
*மதுவை நிறைவாய்க் குடியுங்கள்*
*அண்ணன் தம்பி வந்தார்கள்*
*மகிழ்வு, களிப்பு, நம் களத்தில்*

செர்ரி மரங்கள் குளிர் காலத்தில் இலைகள் உதிர்ப்பதில்லை. பனிக்காலத்தில் மற்ற மரங் கள் எல்லாம் இலை உதிர்த்து மொட்டை யாக நிற்கும்போது செர்ரி மரம் இலைக ளோடு நிற்பதால் அவை இலகுவில் அடை யாளம் தெரிந்துவிடும். 'ஆயிரம் பேர் இருந் தாலும் சகோதரர்களுக்கு ஈடு இணை கிடை யாது, அவர்களை இலகுவில் கண்டுபிடித்து விடமுடியும்' எனப் பாடல் சொல்கிறது.

'விரைதல்' என்ற தலைப்பில் மனதை திடுக் கிடவைத்தது வரலாற்றுப் பின்னணிகொண்ட ஒரு பாடல். கி.மு 670ல் நடந்த சம்பவத்தை ஒட்டி இயற்றப்பட்டது. பெய் நாட்டின் இளவரசி இன்னொரு நாட்டில் மணமுடித்துக் கொடுக் கப் படுகிறாள். அவளது தந்தை இறந்துபோக வேறொரு நாடு அதன் மீது படை எடுக்கிறது. இளவரசியால் சும்மா பார்த்துக்கொண்டு இருக்க முடியவில்லை. கணவனிடம் உதவி கேட்டும் அவன் மறுக்கவே துணிகரமான காரியம் ஒன்று செய்கிறாள். ஜான்ஸிராணி வெள்ளைக்காரரை எதிர்த்ததுபோல இவள் தனியாகக் குதிரை ஏறி அவளுடைய தந்தை நாட்டுக்கு போர் புரிய விரைகிறாள். ஆனால் கணவனுடைய அதிகாரிகள் அவளை துரத்தி வந்து பிடித்துவிடுகிறார்கள். அந்தப் பெண் அடையும் அவமானமும், கோபமும், துயர மும், விரக்தியும் பாடலாக வெளிப்படுகிறது.

*விரைவேன், விரைவேன்*
*விரட்டிச் செல்வேன்*
*வெய்நாடு சென்று துக்கம் கேட்பேன்*
*விரையும் குதிரையை விரட்டிச் செல்வேன்*
*விரைவில் ட்ஸாவ் நகரத்தை அடைவேன்*
*வேகமாய் என்னைப் படைகள் துரத்தும்*
*வேதனை எந்தன் நெஞ்சை உடைக்கும்.*

பெண்ணின் காம உணர்வை நுட்பமாகக் கூறும் பாடல் ஒன்று 'வனத்திலிருக்கிறது இறந்த நீர்மான்' என்ற தலைப்பில் வருகிறது. காத லனைப் பார்க்க காதலி தன் நாயுடன் வரு கிறாள். காதலன் அவளுக்கு இறந்துபோன நீர்மான் ஒன்றை கோரையில் சுற்றி பரிசாக அளிக்கிறான். மரகதம்போல அவள் வனப்புடன் ஜொலிக்கிறாள். அவன் அவளை அவசரமாக அணுகும்போது அவள் தடுக்கிறாள். அவளு டைய அரைக் கச்சை தொடுகிறான். 'தொடா டாதே, தொடாதே' என்கிறாள். 'அவசரப் படாதே மெள்ள, மெள்ள' என்கிறாள். பின்னர் 'நாயை குரைக்க விடக்கூடாது, எங்கள் கள்ளம் பிடிபட்டுவிடும்' என அறிவூட்டுகிறாள்.

*வனத்திலிருக்கிறது இறந்த நீர்மான்*
*வெள்ளைக் கோரையால் சுற்றப்பட்டு*
*வசந்த நினைவில் அவளிருக்கிறாள்*
*வசப்படுத்த அவனிருக்கிறான்.*
*காட்டிலிருக்கின்றன சிந்தூரப்புதர்கள்*
*வனத்திலிருக்கிறது இறந்த கலைமான்*
*வெள்ளைக் கோரையால் கட்டப்பட்டு*
*மரகதம்போல அவளிருக்கிறாள்.*
*நிதானமாக, மெள்ள! மெள்ள!*
*எனது அரைக் கச்சைத் தொடாதே!*
*எனது நாயையும் குரைக்கவிடக்கூடாது!*

சங்ககாலப் பண்பாட்டில் 'விடுமின், விடுமின்' என்றால் 'தொடுமின், தொடுமின் என்றுதானே அர்த்தம்.

ஸ்ரீதரன் நிறைய சவால்களை எதிர்கொண்டு, பல இன்னல்களைத் தாண்டி இந்த மொழி- பெயர்ப்பு தொகுப்பை கொண்டுவந்திருக்கி றார். சீன மொழியில் அ, ஆ, இ என்று எழுத்துக்கள் இல்லை, ஒவ்வொன்றையும் வார்த்தையாகத்தான் எழுதவேண்டும். ஒவ் வொரு சொல்லின் பொருளையும் தனித்தனி யாகக் கற்கவேண்டும். புதிதாக ஒரு வார்த் தையை பார்க்க நேரிட்டால் அதன் பொரு ளும் தெரியாது. உச்சரிப்பும் புலப்படாது. இந்த நிலையில் பல்துறை அறிஞர்களை தொடர்புகொண்டு தன் சந்தேகங்களை நிவர்த்திசெய்த பின்னரே கவிதைகளை மொழிபெயர்த்திருக்கிறார். சீன மொழியில் ஏற்கனவே பல உரையாசிரியர்கள் கவித் தொகைக்கு உரை எழுதியிருந்தார்கள். அவை ஒன்றுக்கொன்று முரணாகவும் சில பொருத்த மில்லாமலும் இருந்தன. இந்தச் சமயங்களில் ஸ்ரீதரன் தன்னுடைய சீனமொழிப் பேராசிரியர் சொன்ன அறிவுரையை ஏற்றிருக்கிறார். பொருள் வேறுபாடுகளுக்கு மதிப்பளிக்காமல் மனதின் கவிதை உணர்வை அவர் நம்பச்சொன்னார். அந்த அறிவுரையின்படி மொழிபெயர்த்த கவி தைகள்தான் இவை. ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது இக்கவிதை தொகுப்பு வெறும் மொழிபெயர்ப்பு நூல் அல்ல. ஆராய்ச்சி நூலும் கூட. மேலும் பல இலக்கியங்களை இவர் சீனமொழியிலிருந்து தமிழுக்கு கொண்டு வருவார் என எதிர்பார்ப்போம்.

கடந்த பத்து நாட்களாக 'வாரிச் சூடினும் பார்ப்பவரில்லை' தொகுப்பின் கவிதை வரி- களை திரும்பத் திரும்ப படித்தபடியே இருந் தேன். அவை தந்த இன்ப உச்சத்திற்கு அளவே இல்லை. மனதை விட்டு அகல மறுக்கும் 'தேவதாருப் படகு' என்னும் பாடல் ஓர் உதாரணம். இரவு நேரம் காதலனைப் பிரிந்து தனிமையில் ஆற்ற முடியாத சோகத் தில் உழலும் பெண்ணைப் பற்றியது.

*பதைக்கும் மனதில் துக்கக் கலக்கம்*
*சிறுமதியோரின் எரிச்சல் துரத்தும்*
*துக்கம் பலவும் சந்திக்கின்றேன்*
*அவமானங்கள் அடுக்கடுக்காக.*
*ஆழ்சிந்தனையில் படுத்துக் கிடப்பேன்*
*'பியாவ்' என நெஞ்சில் அடித்துக்கொள்வேன்*
*கதிர்கள் சாய்ந்து நிலவெழுந்தாலும்*
*தேய்ந்த அவைதாம் திரும்பி வராதோ?*
*எந்தன் மனதில் சோகம் தோன்றும்*
*அலசா அழுக்குத் துணியாய் ஆகும்,*
*எனக்குள் இதையே சிந்தித்திருக்கிறேன்*
*எழும்பிப் பறந்திட இயலாதிருக்கிறேன்.*

முதலில் கண்ணில் பட்டது பாடலின் ஒலிக் குறிப்புகள்தான். 'பியாவ், பியாவ்' என நெஞ் சில் அடித்துக் கொள்கிறாள் பளார் பளார் என்று அல்ல. சீன ஒலிக்குறிப்பு கவிதையின் பெறுமதியை உயர்த்திவிடுகின்றது. துக்கமும் அவமானமும் வெறுப்பும் அழுகையும் 'பியாவ்' என்ற அந்த ஓர் ஒலிக்குறிப்பில் வெளிப்பட்டு விடுகிறது. ஔவையாரின் குறுந்தொகை பாடலில் ஆ அ ஒல்லெனும் ஒலிக்குறிப்பு செய்த வேலையை 'பியாவ்' செய்துவிடுகிறது.

கழுவாத துணியில் அழுக்கு அப்பியிருப்பது போல மனதிலே சோகம் கவிந்திருக்கிறது. 'அலசா அழுக்கு' என்ற உவமையின் ஆழமும் கூர்மையும் அதிசயிக்கவைக்கிறது. இந்த மொழிபெயர்ப்பில் இதுபோல பல வரிகள் அலசமுடியாமல் மனதைப் பிடித்து நிற்கின்றன.



muththulingam.a@thaiveedu.com

## எழுதாத சட்டங்கள்:

சவூதி அரேபியாவின் ஜெட்டா நகரத்து அங்காடியென்றில் ஒரு 13 வயதுச் சிறுமிக்கு அருகே சென்றதால் உயிரிழக்கும் நிலையிலுள்ளார் ஒரு பெண். 13 வயதுச் சிறுமியின் நடவடிக்கைகளில் திடீரென அசாதாரண மாற்றம் தெரிந்ததாம். இந்தப் பெண் அருகே வந்தபோதுதான் இது நிகழ்ந்ததாம். 'இந்தப்பெண் ஒரு சூனியக்காரி. ஏதோ சாபமிட்டிருக்க வேண்டும்' என்று சிறுமியின் தந்தை முறைப்பாடுசெய்ய, அந்தப் பெண் கைதாகியுள்ளார். குற்ற வியல் சட்டம் எதுவும் எழுத்தில் இல்லாத சவூதி அரேபியாவில் இஸ்லாமிய ஷரியா சட்டத்தை அடிப்படையாகக் கொண்டுதான் மதத் தலைவர்களால் தீர்ப்புக்கள் வழங்கப்படுகின்றன.

2011 செப்டெம்பரில் சூடான் நாட்டைச் சேர்ந்த ஒருவரும் டிசம்பரில் பெண்ணொருவரும் சூனியம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனைக்குள்ளாகினர். பொது இடத்தில் பலர் முன்னிலையிலேயே தலைவெட்டப்பட்டு மரணதண்டனை நிறைவேற்றப்படுவது இந் நாட்டு வழமை.




2011இல் மரண தண்டனை நிறை வேற்றப்பட்ட 76 பேரில் குறைந் தது 3 பேர் பெண்கள் 11 பேர் வெளிநாட்டவர்.

கைதான பெண் இலங்கையைச் சேர்ந்தவர். தான் குற்றமற்றவர் என்று நிரூபிக்க இப்பெண்ணுக்கு வாய்ப்புக்கள் கிடைக்குமா? கிடைத்தாலும் நிரூபிப்பது எப்படி?

பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள்!

குட்டான்




உலக அரசியல்
சமூக
பொருளாதார
சினிமா
நிலவரங்களை
உடனுக்குடன்
அறிய...

நிலவரம்

www.nilavaram.com

e mail : nilavaram2010@gmail.com

# வீடு வாங்கவும், விற்கவும்.......

Platinum Award Winner -2011



- Your neighborhood sales representative
- Flexible commission package available
- Free virtual tour and Staging
- 9 Years Real Estate Experience

HOMELIFE HIGHER STANDARDS

## Siva Kandiah

Sales Representative

**Cell: 416-301-9540**

Email: skandiah@trebnet.com

## HomeLife Today

Realty Ltd., Brokerage

**Bus: 416.298.3200**

Fax: 416-298-3440

31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6





**Kenndy/Eglinton**
$219,000
2+1 Bedrooms, 2 Washrooms
Steps Away From Kennedy Subway




**14th Ave/Box Grove Bypass**
$599,000
3+2 Bedrooms, 4 Washrooms
Location! Location! Location!




**Warden / Finch**
$152,900
2+1 Bedrooms, 2 Washrooms
Own Instead Of Renting




**Morningside/Sheppard**
$309,900
3 Bedrooms, 3 Washrooms
Finished Rec Room In Basement




**Markham / Elson**
$469,900
3 Bedrooms, 3 Washrooms
Location! Location! Location!




**Morningside / Mclevin**
$369,900
3+1 Bedrooms, 3 Washrooms
Basement With Seperate Entrance




**Mclaughlin/ Sandalwood**
$374,900
4 Bedrooms, 3 Washrooms
Dark Hardwood Through Out




**Midland/Steeles**
$395,000
3+1 Bedrooms, 3 Washrooms
Finished Basement




**Markham / Eglinton**
$154,000
2 Bedrooms, 2 Washrooms
Walk-Out To Large Balcony!




**Midland / Lawrence**
$149,999
2 Bedrooms, 1 Washroom
New Kitchen! New Bathroom!




**Neilson / Sheppard**
$339,900
4+2 Bedrooms, 3 Washrooms
Kitchen Newly Renovated!




**Sheppard/Markham**
$36 9,900
3 Bedrooms, 3 Washrooms
Basement Finished With Rec




**Finch / Morningside**
$419,000
3+2 Bedrooms, 3 Washrooms
Extensively Renovated Bunglow




**Weston Rd / Hwy 401**
$549,900
3+1 Bedrooms, 4 Washrooms
New Hardwood Floor




**9th Line / 14th Ave**
$729,900
4+1 Bedrooms, 4 Washrooms
Brand New Kitchen Counter Top!!!





**Kennedy / Progess**
$139,900
2 Bedrooms, 1 Washroom
Location! Location! Location!

வாழ்க்கையில் வீடு வாங்குவதும் விற்பதும் மிக
முக்கிய நிகழ்வு. இதில் தவறுகள் ஏற்படாதிருக்க அழையுங்கள்.


**சிவா கந்தையா**

**$99,000.00**




**Jane/ Eddystone**
Condo Apt 3-Storey, 3 Bedrooms, 2 Washrooms, Well Maintained Unit, Close To Hwy 400 & 401, Schools, Library, Shopping Mall And Hospital.

**$314,000.00**



**Birchmount / Ellesmere**
Condo Townhouse Multi-Level, 2+1 Bedrooms, 2 Washrooms, Excellent Location,Immaculate Executive Town Home Built By Tridel, Laminate Floorings In Living & Dining Room, Freshly Painted, New Pot Lights

**$359,900.00**



**Sheppard / Markham**
Detached, 3 Bedrooms, 3 Washrooms, Very Demand Location!! Clean & Well Maintained, Laminate Floor, Basement Finished With Rec. RoomClose To Shopping, School, Park,Ttc & Hwy 401

**$383,000.00**




**Chinguacousy / Bovaird**
Semi-Detached 2-Storey, 3+1 Bedrooms, 3 Washrooms, Gorgeous Well Kept Semi-Detached 3+1 Bedroom Home With Finished Basement! Open Concept Living/Dining Room! Hardwood Flooring Thru-Out! Finished Basement With Pot Lights And Bedroom

**$519,900.00**



**Morningside/Neilson**
Detached 2-Storey, 4 Bedrooms, 3 Washrooms, Location & Perfect For The 1st Time Home-Buyers.Possible Sep Ent To Bmnt, Just Walk School,Brookside Elm Uniform School,Ttc Bus In Front

**$649,900.00**



**Weston / Rutherford**
Detached 2-Storey, 4 Bedrooms, 4 Washrooms, Stunning Home! Approx 2,400 Sqft! Loaded With Upgrades In Vellore Village! Open Concept Layout With 4 Large Bedrooms

## HomeLife Today Realty Ltd., Brokerage**

31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6,

Bus: **416-298-3200**, Fax: 416-298-3440

E-mail: kuna.homelife@gmail.com

**Independently Owned and Operated.

## Kunasegar Nagalingam

Sales Representative

Direct: **416-402-4545**

## Sujatha Kunasegar

Sales Representative

Direct: **647-401-9644**





We do not intent to solicit currently listed properties.

திட்டங்களுக்கான நிதியினைப் பெறுதல் மற்றும் திட்டங்களுக்கான நிதியினை வழங்கல்

# Toronto Venture Day 2012

பங்குபற்றும் நிறுவனங்கள்: அரச துறைசார் அமைப்புக்கள், தொண்டு நிறுவனங்கள், வங்கிகள், முதலீட்டு நிறுவனங்கள் மற்றும் சேவைகளை அல்லது ஆலோசனைகளை வழங்கும் தொழில்சார் நிபுணர்களின் நிறுவனங்கள்.
பதிவு முறை: கண்காட்சிக்கான இட ஒதுக்கீட்டினை உறுதிப்படுத்த முன்பாகவே கட்டணங்களைச் செலுத்த வேண்டும்
வர்த்தக நாள் சஞ்சிகைக்கான விளம்பரங்களை உறுதிப்படுத்த முன்பாகவே கட்டணங்களைச் செலுத்த வேண்டும்.











இந்த நிகழ்விற்கு அரசாங்கத்தின் மூன்று நிலைகளிலிருந்தும் வலுவான ஆதரவு உண்டு.
பிரதமர், அமைச்சர்கள், ஒன்ராறியோ முதல்வர், ரொறன்ரோ மேயர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது ஆதரவினை நல்கியுள்ளனர்.

# AUGUST - 11

## Markham Holiday Inn Hotel, Toronto

2012 ஆவணி 11 பிற்பகல் 1.30 முதல் 5.00 வரை
கண்காட்சிக்கான பதிவுகள்: முற்பகல் 10.30 முதல் பிற்பகல் பிற்பகல் 1.00 வரை
கண்காட்சிக்கான கட்டணங்கள்: 150டொலர்கள் + வரி (1 மேசை 2 நாற்காலிகள் 2 பிரதிநிதிச் சான்றுகள் மற்றும் வர்த்தக நாள் சஞ்சிகை) நுழைவுச்சீட்டுக் கட்டணம்: 10 டொலர்கள்

தொடர்பு: கஜரூபன் குகதாசன், நிறைவேற்று இயக்குனர் Mr. Rooban Ms. Kelly Mr. Peter Mr. Gao Mr Robin
505 Consumers Rd. Suite 310, Toronto Ont., Canada M2J 4V8 Tel: 1-416-499-7588 Fax: 1-647-438-9642 Email: ticua@torcom.org www.torcom.org



Foundation of your financial freedom!
LIVE LIFE
FULLY COVERED
COVERAGE FOR YOUR MOST PRECIOUS ASSET.
YOU & YOUR FAMILY
கவலை அற்ற நிம்மதியான வாழ்க்கை வாழ்ந்திட...
சிறந்த ஆலோசனைகளுக்கும் உங்களுக்கு ஏற்ற காப்புறுதியை
செய்வதற்கும் எங்கள் முகவர்களில் ஒருவரை அழையுங்கள்.
Life Insurance
Non-Medical Insurance
Travel Insurance
Critical Illness Insurance
Disability Insurance
Mortgage Insurance
RESP - Education Saving Plan
Dental & Drug Insurance
RRSP's & Investments
Final Expense Products
(Through Funeral Homes)
Mega Financial Group
416 666 1120 • 416 293 5559
PH28-4168 Finch Ave. E. Scarborough, ON
Now Hiring
FULLTIME / PART TIME AGENTS
FASTEST GROWING INSURANCE AGENCY
Well Established Name / Multicultural Agents / Great Support
Call Raj Nadarajah for more info
416 666 1120
Desjardins
RBC Insurance
Canada Life
Union of Canada
Sun Life Financial
ASSURANT

# Thinking of Buying or Selling Your Home ...
# I will Save Your $$$$$

## MORTGAGES CAN BE ARRANGED IN MAJOR BANKS

$218,000




### Kenndy/Eglinton
2+1 Bed Rooms, 2 Washrooms
24/7 Security, Laminate Floors
Minutes to Kenndy Subway, Nor fills & All Banks

$459,000




### Markham / Elson
3 Bed Room, 3 Washroom
Great Layout!, Semi-Detached. Close to Schools
Nor fills, TD, CIBC, Wallmart, Rona,TTC, Costco

$249,900



### Sheppard & Markham
2 Bed Rooms, 1 Washrooms
Corner Unit Excellent View

$419,000



### Finch / Morningside
3+2 Bed Rooms, 3 Washrooms
Location! , Newly Renovated

$284,900



### Kennedy / 401
2 Bed Room, 2 Washroom
Walking Distance To Ttc, Go, Mall,

## NEW TOWN HOUSES Markham & Sheppard
Call for More Details Hariharan 416.856.4276



*Flexible Commission*
*Free Market Evaluation*
*HomeLife Home Warranty Program*

**Hariharan Nadarajah**
Sales Representative
**Cell: 416-856-4276**

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife Today**
Realty Ltd., Brokerage
Independently Owned and operated
**416-298-3200**

Platinum Award Winner 2011

*Not intended to solicit properties, already listed for sale or buyers under buyer agency agreement

# இரண்டாம் கலியாணம்

**- இளைய அப்துல்லாஹ் -**



கடந்த வாரம் இங்கு ஹரோவில் உள்ள நண்பர் ஒருவரின் வீட்டுக்கு போயிருந் தேன். அங்கு இலங்கையில் இருந்து வந்த மௌலவி ஒருவர் இருந்தார். இவர் இரண்டு திருமணம் முடித்தவர் என்று அறி முகப்படுத்தினார் நண்பர்.

உண்மையில் இரண்டாம் கலியாணம் என்பது சொல்வதற்கு இலகு. ஆனால் கட்டிப்பாத்-தாத்தான் தெரியும் அதன் விசயம். நான்கு கலியாணம் முடிக்கலாம் உங்களுக்கென்ன என்று பல நண்பர்கள் என்னிடமே சொல்யி ருக்கிறார்கள். பொதுவான சட்டத்தில் இடமில லையே என்பது பல தமிழ் நண்பர்களின் ஆதங்கம். கவலை.

ஆழகான பெண்களை கண்டால் அவளை கல்யாணம் முடிப்பமோ என்று திருமணம் முடித்த ஆண்களுக்கும் மனதில் ஆசை வரும் தான். ஆனால் அது அவ்வளவு இலகுவான காரியம் அல்ல.

மலேசியாவில் பல பெண்களை திருமணம் முடித்த ஆண்கள் (முஸ்லிம்கள்) இருக்கிறார் கள். அவர்களில் பலரை நேரே கண்டிருக் கிறேன். அவர்கள் சுமுகமாக திருமணம் செய்திருக்கிறார்கள். முதலாவது மனைவியின் குடைச்சல் இல்லாமல் வாழ்கிறார்கள். அரபு நாடுகளிலும் அந்த வழக்கம் இருக்கி றது. ஆபிரிக்க நாடுகளிலும் அந்த வழக் கத்தை கேள்விப்படுகிறோம். நாட்டு வழக்கம் அப்படி என்றால் நல்லதுதான். ஆனால் தமிழ் பண்பாடு நிறைந்த நமது நாடுகளில் ஒருவன் ஒருத்தி என்ற விடயதானம் மேலோங்கி இருப்பதால் இன்னொரு கலியாணம் என்பது அவ்வளவு லேசுப்பட்ட விசயமல்ல. ஆண் களை மனைவிமார்கள் விட்டுகொடுக்க தயா ராக இல்லை. அதனால் கணவன்மார்களுக் கான வாய்ப்பு தவறிப்போகிறது.

இலங்கையில் தப்லீக் ஜமாத்தில் போகிற வர்கள் நபிகளாரின் வழிமுறையை பின்பற்ற போகிறேன் என்று விட்டு வேறு பல நபிக-ளாரின் வழிமுறைகள் இருக்கும்போதும் முத லாவதாக இன்னொரு கலியாணம் முடிக்க போகிறேன் என்றுதான் ஒற்றைக்காலில் நிற்பார்கள், நிற்கிறார்கள். கண்டிருக்கிறேன்.

நபிகளாரின் வழிமுறைகளில் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவது, பொய் சொல்-லாமை, பொறாமை கொள்ளாமை, ஹராமான உணவை உண்ணாமை, வட்டி வாங்காமை (வங்கியிலும்) கொடுக்காமை, மற்றவர்களை ஏமாற்றாமை, வியாபாரத்தில் திருட்டுத்தனம் செய்யாமை, நோயாளிகளை சென்று நலம் விசாரித்தல், பக்கத்து வீட்டாருக்கு உதவி செய்தல், மையத்து தொழுகைக்கு செல்லல் என்று ஆயிரம் சொல்லிக்கொண்டு போகலாம். ஆனால் இவற்றையெல்லாவற்றையும் விட்டு விட்டு இரண்டு கலியாணம் முடிப்பதில் தான் குறியாக இருப்பார்கள்.

கண்டியில் எனது நண்பர் ஒருவர் தனது மனைவிக்கு தெரியாமல் இரண்டாம் கலியா ணத்தை தூர இடமொன்றில் செய்துவிட்டார். அது மூத்த மனைவிக்கு தெரியவர வீட்டில் ஆரம்பித்தது பிரளயம். இருந்த நிம்மதியும் கெட்டுப்போய் பள்ளிவாசல்தான் அவரின் தங்குமிடமாயிற்று. நிம்மதியாக இருந்தவர் உள்ளதையும் கெடுத்துப்போட்டு நிற்கிறார் என்று ஊரில் உள்ளவர்கள் பேசிக்கொண்-டனர்.

இன்னுமொரு மௌலவி இருந்தார் அவர் ஒரு சிங்களப் பெண்ணை, அதுவும் அவரது கடைக்கு சாமான் வாங்க வந்த பெண்ணை காதலித்து இரண்டாம் கலியாணம் செய்து கொண்டார். அவர் ஏற்கனவே கலியாணம் முடித்து பிள்ளைகளும் இருப்பது சிங்கள பெண்ணுக்கும் தெரியும்.

இரண்டாம் திருமணம் செய்வது என்பது இஸ்லாம் மதத்தில் ஆகுமாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு பெண்ணின் அழகை பார்ப்பது ஹராம். பார்த்து லவ் பண்ணுவது இன்னொரு ஹராம். இதுவெல்லாம் மௌலவிமாருக்கு தெரியாததல்ல. ஆனால் அவர் லவ் பண்ணி கலியாணம் முடித்தார். பிறகு இரண்டு மனைவி மாருக்கும் பிள்ளைகள் இருக்கின்றன. அவர் இரண்டாம் மனைவியை முதல் மனைவிக்கு தெரியாமலத்தான் வைத்து இருந்தார். இப்ப அவர் என்ன பாடுபடுகிறாரோ தெரியாது நான் லண்டன் வந்ததன் பின்பு அவரை சந்திக்க வில்லை.

இரண்டாம் திருமணத்துக்கு முதல் மனைவி யின் அனுமதி தேவையில்லை என்ற ஒரே ஒரு பகுதியை மட்டும் இஸ்லாத்தில் எடுத்துக் கொண்டு ஏனைய எல்லாவற்றையும் மறந்து விடுகின்றனர். இஸ்லாம் மதத்தில் பல தார மணத்துக்கு வரையறை விதிக்கப்பட்டிருக்கிறது. இஸ்லாம் மதத்தில் நான்கு கலியாணம் செய்து கொள்ள ஒரு ஆணுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தச்சட்டம் உல கம் முழுக்கப் பொதுச் சட்டமாக இருக்கிறது. ஆனால், திருமணம் முடிக்கும் எல்லா பெண் களையும் சமமாக நடத்த வேண்டும் என்பது விதி. இரண்டு பெண்களை முடித்திருந்தால் இருவருக்கும் ஒரே விதமான பொருட்களை ஒரே அளவில் ஒரே தரத்தில் வாங்கி கொடுக்க வேண்டும். தரத்தில், அளவில் மாறுதல் ஏற் பட்டாலும் இறைவனின் கேள்விக்கு உள்ளா வார் என்று இஸ்லாம் கூறுகிறது.

அத்தோடு உடலுறவில் ஈடுபடுவது தொடர் பாகவும் நாட்களை பிரிக்கவேண்டும் என்று இருக்கிறது. பெரிய வேலை அது. சும்மா சாதாரணமாகச் சொல்லி விட்டுப் போகிற விடயமல்ல இது.

உங்களுக்கு பிடித்தமான பெண்களை இரண் டிரண்டாகவோ மும்மூன்றாகவோ நன்னான்-காகவோ மணந்து கொள்ளுங்கள் ஆனால் நீங்கள் இவர்களிடையே நியாயமாக நடக்க முடியாது என்று பயந்தால் ஒரு பெண்ணையே மணந்து கொள்ளுங்கள் என்று குர்ஆன் மிகத் தெளிவாகவே சொல்கிறது.

நியாயமாக நடக்கவேண்டும் என்பது குர்ஆன் வலுக்கட்டாயமாக சொல்லும் கட்டளை. குர் ஆன் அருளப்படுவதற்கு முன்பு இஸ்லாம் மார்க்கத்தில் பல பெண்களுடன் உடலுறவு கொள்ளுதல் தடையில்லாமல் இருந்தது. பலதார மணம் என்பது ஒரு பிரச்சினையே இல்லை. யாரை வேண்டுமானாலும் யாரும் மணந்து கொள்ளலாம்.


தென்னாபிரிக்க அதிபர் சுமோ ஆறாவது கலியாணத்தை அண்மையில் முடித்திருந்தார். அவர் முஸ்லிம் அல்லாதவர். ஆனால் அவ ரின் கோத்திரத்தில் பல பெண்களை மணம் முடித்திருந்தால்த்தான் கௌரவம்.

குர்ஆன் வந்த பிறகு இஸ்லாம் நான்கு பெண் களை மணம் முடிக்கலாம் என்று வரையறை வந்தது. ஆனால் அந்த மனைவிகளித்தில் சமமான உரிமை பேணப்பட வேண்டும் என்ற விடயமும் கட்டாயமாக்கப்பட்டது.

'விசுவாசிகளே! நீங்கள் எவ்வளவுதான் விரும்பினாலும் மனைவியரிடையே நீங்கள்

*தொடர்தல் 106ம் பக்கம்*


கனடிய தமிழ் வழக்கறிஞர்



The Law Office of
**Raphael Maharaja**
**Barrister & Solicitor**

Tel: 416-847-7077
416-847-7093 (Injury Claims)
Fax: 416-847-7088

GTA SQUARE
5215 Finch Ave. East, Unit 219
Toronto, Ontario, M1S 0C2 (Middlefield & Finch)

www.maharajalaw.com



# நதி 07

தேவகாந்தன்

வெப்பம் தொடர்கிறது...

அடக்கப்படாக் காமமும், அடக்கப்பட்ட பசியுமே உலகில் வெடித்தெழுந்த அத்தனை கிளர்ச்சிகள், போராட்டங்கள், புரட்சிகளுக்கும் அடியாதாரமென்பதை நதி சரியாகவே புரிந்திருந்தது.

காமம் அதனளவில் உடலிச்சை மட்டுமில்லை. மனித அவாக்களையும், அந்த அவாக்களை அடைதற்கான சகல வழிமுறைகளையும், அவற்றைப் பிரயோகிப்பதற்கான கூடுதல் சுயாதீனங்களின் தேவைகளையும் அடக்கியதே காமமாகும். பசி ஊனோடு பிரதான தொடர்புற்றிருந்த நேரத்தில், காமமோ ஊனோடும் உயிரோடும் பிணைந்திருந்தமை இதனால்தான்.

ஜுகுரி ஓர் இனக்குழுப் பெண். திருமணமாகாத கன்னி. அவளது இனக்குழுவின் வாழ்முறை அவளைத் தனித்தேறியாய் வனாந்திர மலைய அனுமதித்துவிட மாட்டாது. ஆயினும் அவள் தனித்தேறி வனாந்திரத்தில் கிழங்குகள் சேர்த்தாள், விறகுகள் சேகரித்தாள், இன்னும் இயற்கையின் அழிவுறா அழகையெல்லாம் ஆராதித்தாள். அவளை மார்ஷலோடு உறவாட வைத்தது அந்த தனித்தலையும் இச்சைதான்.

தன் தாயோடு, தன் பாட்டனோடு, தன் தந்தையோடும்கூட அவளை அது அவ்வப்போது முரண்பட வைத்தது. அந்த முரண்களை உதாசீனம் செய்துதான் அவள் தன் தாபத்தைத் தணித்தாள். அந்த முரண் சமூகமளவு வியாபித்தெழுந்தால் கிளர்ச்சியாகிவிடுகிறது. முழு இனக்குழு அளவுக்குப் பரவிவிட்டால் போராட்டமாகிவிடுகிறது. அதுவே நாடு தழுவி எழுந்தால் புரட்சியெனப்பட்டுவிடும்.

அணுக்கங்களும் முரண்களுமாய் அவள் தன் குடும்பத்தாரோடு ஊடாடிய காலத்தில், அவளது அணுக்கங்களை விரும்பியும், முரண்களை வெறுத்தும்தான் அவளுடனான தன் தொடர்பை அவளது குடும்பம் மேற்கொண்டிருக்கவே வாய்ப்பிருக்கிறது. அந்த முன்னிராப் போதில் அவள் மார்ஷலை சந்திக்கச் சென்றிருந்த வேளையிலும், அவள் ஒரு முரணினையும், அவளது குடும்பத்தார் ஒரு வெறுப்பையும் சுமந்துகொண்டிருத்தலே நிகழ்ந்திருக்க முடியும்.

அந்த பதினாறாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இரொக்குவா இனக்குழுவுக்கும் பிரான்ஸிய குடியேற்றவாசிகளுக்கும் இடையில் நிகழ்ந்த யுத்தத்தின் விளைவுகள் பயங்கரமானவை. ஏறக்குறைய அந்த இரொக்குவா குடியிருப்பே நிர்மூலமாக்கப்பட்டுவிட்டது. வானில் விசை விசையாய்ப் பறந்த அம்புகள் எரிகளை ஏந்தியிருந்தன. முழுக் குடியிருப்புமே தழல் சூழ்ந்து சாம்பராய்ப் போயிற்று. இருட்டு இன்னுமொரு உபகாரியாய் இருந்து குழிகளிலும், நீர்நிலைகளிலும், சகதிகளிலும் மனித இறுதிகளை உருவாக்கிற்று.

உயிர் தப்பியோர் இருந்தனர். ஜுகுரியின் குடும்பத்திலும் சில அங்கத்தவர்கள் வெவ்வேறு திசைகளில் ஓடி போரின் அன்றைய இருளின் கொடு மரணத்தைக் கடந்திருந்தனர். அந்த வேளையிலும் தம் பெண்ணைக் காணவில்லையென்று அந்தக் குடும்பம் துடித்துப் போய்விடவில்லை. அவள் மரணத்தை ஒரு வன்மத்தோடு அது விரும்பிக்கொண்டிருந்தது.

இரண்டு திசைகளிலுமிருந்து விஷமும் நெருப்பும் காவிப் பறந்துகொண்டிருந்த அம்புகள் தாராளமாகவே இரண்டு குடியிருப்புப் பகுதிகளுக்கும் இடையிலிருந்து விரிந்தெழுந்த அந்த வனத்தில் விழுந்துகொண்டிருந்தன. விஷ அம்பின் முனைபட்டாலே மாண்டுவிட நேரிடும் என்பது ஜுகுரிக்கு அந்த இனக் குழுவைச் சேர்ந்தவள் என்பதாலேயே அதிகமாகத் தெரிந்திருந்தது. ஆனாலும் அவள் அப்படியொரு மரணம் வரின் அதை மிகவும் இசைவாக ஏற்றுக்கொள்ளும் மனநிலையிலேயே இருந்திருந்தாள்.

மார்ஷல் பதறினான். ஓட முனைந்தான் இருண்ட அந்த வனத்தின் முன்னிருந்த இடுக்குகள் ஊடாக. அவள் சொன்னாள், 'ஓடாதே, இதுதான் இங்குள்ள மிகப் பாதுகாப்பான இடம்' என்று. அவனால் ஏற்று அமைந்திருக்க முடியாதுபோனது. தன் மனைவியின் ஞாபகம் மூர்க்கமாய் எழுந்துநின்று உயிர் தப்ப எத்தனிக்க வைத்தது. அவன் அறிந்து அவள் அறியாத அந்த மனைவியின் பாசத்தில் அவன் எரிபட்டதுபோலத் துடித்தது கண்டு, ஜுகுரி தன் எண்ணத்தை மாற்றினாள். வனத்திலிருந்து வெளியேறி அப்பாலுள்ள மலையடிவாரத்தை அடைந்துவிட்டால் அந்த மலை தன் நிழலை அடைந்த எந்த ஜீவராசியையும்கூடக் காப்பாற்றிவிடும். ஆனால் அதற்கு, இடையிலேயுள்ள வெளியைக் கடந்தாக வேண்டும். அதைச் சாத்தியமாக்கினால் ஆபத்திலிருந்து தப்பித்துவிடலாம்.

அவள் வன எல்லைக்கு வந்து, நிலைமையை அவதானித்தாள். மறுகணம், 'ஓடு' என்றுவிட்டு தானே முன்பாய்ந்தாள். அவளது விலங்கின் ஓட்டத்தின் முன்னால் மார்ஷலின் மனித ஓட்டம் இடைவெளியை மிகுப்பித்துக்கொண்டிருந்தது. இருவருக்குமே யார் முதலில் செத்தது என்று தெரிந்திருக்கவில்லை. இறப்பின் வருத்தமின்றி இருவருமே செத்து வீழ்ந்தார்கள்.

தன் நண்பன் எட்ரியன் புருலே ஹுரன் இனக் குழுவால் கொல்லப்பட்டான் என்ற செய்தியை அறியாமலே மார்ஷல் இறக்கநேர்ந்தது.

இவர்களது மரணத்தின் வேர் எங்கேயிருக்கிறது? நதி சிந்தித்துப் பார்த்தது. வேறு விடையல்ல, அது ஏற்கனவே அறிந்திருந்ததே கிடைத்தது.

காமம்!

காமம் அடங்கிய மனிதனே நிதானத்துக்கு வருகிறான். சிவப்பிரகாசமும் நிதானமடைந்திருந்தார்.

காலச் சுழற்சி மணத்தியாலங்களாய், நாள்களாய் அந்தரமான மனநிலையோடு கழிய வைத்துக்கொண்டிருந்த சூழலில், மூன்று அறைகள் அவசியமில்லாதிருந்த பொழுதிலும், அதே நிர்வாகத்தில் இருந்த இன்னொரு கட்டிடத்தில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டார் அவர்.

அந்த வீட்டில் குடிபுகுந்த பின்னர் வந்த முதல் வெள்ளிக்கிழமை இரவு பத்து மணிக்கு மேல் இருந்த பொழுது அது. பிள்ளைகள் தூங்கப் போயிருந்தனர். மறுநாள் பாடசாலை இல்லையென்பது அவர்களது படுக்கை செல்லும் நேரத்தில் மாற்றம் எதையும் செய்வதில்லை.

முந்திய வீட்டிலிருந்து அவர் மறக்காமல் கழற்றிவந்த நீலக் குமிழ் விளக்கு ஒளி பாய்ச்சிக்கொண்டிருந்தது.

நதி முகம் பார்த்ததும், இன்னும் அணித்தானதாகவும் இருந்த அந்த வீட்டிலிருந்து சிவப்பிரகாசம் நதி பார்த்து நின்றிருந்தார். வெளியே குளிர் மண்டிக்கிடந்தது. வெண்பனிப் படர்வில் வெளியெங்கும் ஊமை வெளிச்சம். அவருக்கு வெண்ணிறம்பற்றிய ஆச்சரியகரமான எண்ணமொன்று எழுந்துகொண்டிருந்தது.

சுண்ணாம்பு வெள்ளை. பால் வெள்ளை. பால்போன்ற வெண்மையென்றுதான் பொதுவாக ஊரிலே சொல்லுவார்கள். ஆனால் பனி வெண்மையா? வெண்மையெனில் அதனோடு அந்த மெல்லிள நீலம் எப்படிக் கலக்கிறது? அதன் பளீர் வெண்மையைக் கண்டிருந்தும் தமிழ்மொழி பனிபோல் மென்மையென்று சொல்கிறதே தவிர, பனிபோல் வெண்மையென்று ஏன் சொல்வதில்லை. ஆனால் ஆங்கிலம் 'ஸ்னோ வைற், றோஸ் றெட்' என்ற தேவதைக் கதைமூலம் பனியைத்தான் வெண்மைக்கு ஒப்பாகச் சொல்கிறது.

அப்போது பால் எப்படி இருக்குமென்று கேட்ட ஓர் அந்தகனின் கதை ஞாபகமாகியது அவருக்கு.

அந்தகனின் குழந்தை பால் பிரையேறி இறந்துவிடுகிறதாம். அதை ஒருவன் அந்தகனுக்குத் தெரிவிக்கிறான். கதையின்படி முன்னர் எப்போதுமே பால்பற்றி அறிந்திராத அந்த அந்தகன், பால் எப்படி இருக்கும் எனக் கேட்கி

தொடர்தல் 106ம் பக்கம்


Connecting
you to yours...
UNLIMITED PLANS
Internet +
Home Phone
with all the features
STARTING FROM
$49.95[1]
/MONTH
முதல்
FREE
WIRELESS
MODEM
Sign up TODAY! 416.907.7777
Lowest international calling rates. Try it now.
INTERNET | HOME PHONE | LONG DISTANCE | BUSINESS PHONE+INTERNET
www.sunsonic.ca
100 Dynamic Dr., Suite 202
Toronto, ON M1V5C4
sun sonic

# நதி...

104ம் பக்கத் தொடர்ச்சி...

றானாம். அதற்கு விஷயத்தைத் தெரிவித்தவர், ‘பால் கொக்குப்போல் இருக்கும்’ என்கிறாராம். அப்போது மீண்டும் அவ்வந்தகன் கொக்கு எப்படி இருக்கும் எனக் கேட்டதற்கு, அவர் முழங்கையை மடித்துயர்த்தி, அகங்கை கவிழ நீட்டி இப்படி இருக்கும் என்றாராம். கையைத் தொட்டுப் பார்த்த அந்தகன், ‘ஆ… இவ்வளவு பெரிய பால் தொண்டைக்குள் போனால் குழந்தை இறக்கத்தானே செய்யும்!’ என்று பிரலாபித்தானாம்.

அக்கதையின் நினைப்பில் அவருக்கு மெல்லச் சிரிப்பு வந்தது. அப்போது, படுத்துவிட்டாள் என்று அவர் நினைத்துக்கொண்டிருந்த மனைவி பக்கத்திலே வந்துநின்று இழையாய் நெளியும் மெல்லிய குரலில், ‘என்ன உங்களுக்கயே சிரிச்சுகொண்டு நிக்கிறியள்?’ என்று முணுமுணுத்தாள்.

அவர் திடுக்கிட்டுத்தான் போனார் உண்மையில். சிறிதுநேரத்தில் சுதாரித்துக்கொண்டு, ‘ஒண்டுமில்லை’ என்றார்.

அவள் இன்னும் நெருங்கினாள். சந்தன சோப்பின் வாசம் மெல்ல நாசியில் நுழைந்தது. பிள்ளைகளின் சாப்பாட்டுச் சந்தடி நேரத்தில் குளித்திருக்கிறாள் என நினைத்துக்கொண்டார். அவளது அணுக்கம் அவர் அணிந்திருந்த சுவெற்றருக்கூடாக அவர் தேகத்தில் மின்னலைகளைப் பரவவைத்தது. அத்துடன் அவளது கையும் அவர் பிடரியில் படர்ந்தது. அவர் சிலிர்க்குமிடம் அதுவென்பதை அவள் மறக்காமலேதான் இருக்கிறாள்! காந்தள் விரல் படரவிட்ட நீல ஒளிபடரும் சங்கப் பாடற் தேவதையாய் அவர் அவளை இறுக்கமாய் அணைத்தார்.

மனம் நிதானப்பட்டு வாழ்க்கை சுவையெழ ஆரம்பித்துவிட்டது அவருக்கு. மனிதர் மூர்க்கமாய் உழைத்தார். விசாலமான வீட்டில் விரிந்த அந்நியோன்யமான வாழ்க்கை நாளில் ஒரு மாலை அவர் வேலையிலிருந்து வீடு திரும்பிய வேளை. வீட்டு வாசலில் மனைவி பிள்ளைகளும், மனைவியின் சிறிய தாயாரது மகள் சாந்தியும் அவளது கணவன் கதிர்காமநாதனும் நின்றுகொண்டிருந்தார்கள். சாந்தியுடனான தொலைபேசித் தொடர்புகளை அவர் அறிந்தே இருந்தார். ஆனால் வீட்டுக்கு வந்து போகிற அளவான தொடர்பாக அது விரிவது ஏனோ அவருக்கு விருப்பமில்லாதிருந்தது. கதிர்காமநாதனின் அவரைச் சிறுத்துப்போக வைத்த பார்வை அவனை நினைக்கும் போதெல்லாம் அவருள் முனைமுறிந்த முள்ளாய் வலிக்கச் செய்தது.

மேலும் இன்னொரு விருப்பின்மை அவருள் இருந்திருப்பதும் சாத்தியமாகப்பட்டது. வீடு விற்பனை முகவராக அவன் வேலை பார்ப்பதும், அண்மையில் மார்க்கம் பகுதியில் பெரிய வீடொன்றைச் சொந்தமாக வாங்கியிருப்பதும், அக்குறா காருடன் வசதியாக வாழ்வதும்பற்றி மகாலிங்கம் அவருக்குச் சொல்லியிருந்தான்.

இனம்புரியாத அவதியொன்று அவரைத் துளைத்தது. அவரோ அமெரிக்கன் கம்பெனியொன்றில் வேலைசெய்கிறார். அது அவரது கல்வித் தகைமைக்கான வேலையல்லவெனினும் சம்பளம் சராசரி இலங்கைத் தமிழரைவிட அதிகமாகவேதான் இருக்கிறது. இருந்தும் ஒரு சொந்த வீடு, கார் என்று எதுவுமில்லை அவருக்கு. அவரும் பிள்ளைகளும் சிலவேளை மனைவியும் இன்னும் ரிரிசியிலேதான் போய் வந்துகொண்டிருக்கிறார்கள்.

மனத்தில் மாச்சரியமென்பது அந்த மனத்துக்குரிய மனிதரை அரித்துத் தின்றுவிடும் என்ற விபரம் தெரிந்திருந்தும், சிவப்பிரகாசம் பல நாள்கள் அந்த நினைப்பில் எரிந்துகொண்டுதான் திரிந்திருந்தார். அன்றைக்கு வீட்டுவாசலில் விடைபெற்று நின்றுகொண்டிருந்த கதிர்காமநாதனைக் கண்டதும் ஒரு விருப்பமின்மை அவரில் படர்ந்தது அதனால்தான். ஆயினும் வெளிக்காட்டிக்கொள்ளாமல், அவருக்காகக் காத்துக்கொண்டிருந்ததாய் சாந்தி சொன்ன போது, ‘அதாலயென்ன, இன்னொரு நாளைக்குச் சந்திப்பம்’ என்று சமாளித்து அனுப்பிவிட்டார்.

வாரமொன்றாயிருந்த கூடற்சுகங்கள் மாத-மொன்றாய் ஆகியிருந்தது. அவரே பலநாள்களில் உடல் களைத்துத்தான் வேலையிலிருந்து வந்துகொண்டிருந்தார். வார விடுமுறைகளில்கூட சனிக்கிழமைகளில் சிலவேளைகளில் வேலை இருந்துவிடுகிறது. மாதமொன்று போதுமானதாய் அவரது மனம் அதை நம்பி அனுசரித்தது.

நீல விளக்கின் மென்னொளிப் படர்வில் அவள் சந்தன சோப்பின் வாசமடிக்க ஒரு நாளிரவு வந்து, இலேசாகத் திறந்திருந்த ஜன்னலோரம் அவர் நின்றிருந்த பொழுதில், அவரது பின் கழுத்தினை வருடியபடி கேட்டாள்: ‘என்னருங்கோ, மாசம்மாசம் ஆயிரம் ரூபாய் வாடகை குடுத்துக்கொண்டிருக்கிறதைவிட, ஒரு வீடொண்டைச் சொந்தமாய் வாங்கினால் அந்த ஆயிரத்தைவிட குறைவாய்த்தான் மோட்கேஜ் கட்டவருமாம், ஒரு வீடொண்டு பாப்பமே?’

அது நியாயமான ஒரு விருப்பமென்பது அவருக்குத் தெரிந்துதான் இருந்தது. எனினும் அந்த விருப்பத்தை அவளில் விழுத்தியது யாராக இருக்கலாமென எண்ணியபோது அவர் தன் பதிலைச் சொல்லத் தயங்கினார்.

ஆனாலும் அந்த நேரத்தில் அவளது கைபட்டிருந்த இடமும் முக்கியமானதே. அவர் சிலிர்ப்படைந்துகொண்டிருந்தார். பெற்றிக் கோட்டுக்குள் அவர் அவாவிய அவயவங்கள் தேடி மனம் அலைபாய அவர் சொன்னார்: ‘இஞ்சை ஸ்கார்பரோவிலை ஒரு வீடு பாப்பம். கொண்டோவிலையெண்டாலும் பறவாயில்லை. சினோத் தள்ளுற வேலை இருக்காது. கரண்ட் பிரச்சினை, தண்ணிப் பிரச்சினை அது இது எண்டாலும் மனேஜ்மென்ற் பாத்துக்கொள்ளும். வாங்கியிடலாம்.’

அவள் கைகளெறிந்த திசையில் காலத்தின் அழுத்தம் இருந்ததை சிவப்பிரகாசம் உணர்ந்தாரா?

நதி எல்லாம் பார்த்து நகைத்துக்கொண்டி-ருந்தது. வீடு என்பது வாழ்வின் ஆதாரம் பனிவிழும் நாட்டில் மட்டுமில்லை, உயிர்களிருக்கும் எல்லா தேசங்களிலுமேதான். வீடு ஒன்றை கொண்டோமினியத்தில் சரி, தனி வீட்டுப் பிரதேசத்தில் சரி வாங்கிக்கொள்வது ஆசிய நாட்டினர்க்கு, குறிப்பாக இலங்கைத் தமிழருக்கு, மிகமிக முக்கியமானது. வீடு பேறடைதல் பற்றி அவர்களில் கூடுதலானவர்களின் மதம் உரைப்பதை நதி அறியாதது. அறிந்திருந்தால் அவ் வீடுபேறடைதலைவிடவும் ஒரு வீட்டின் பேற்றினை அடைதல் தமிழ-ருக்கு எவ்வளவு முக்கியமானது என்பதை அது புரிந்துகொண்டிருந்திருக்கும். அவர்களது கலாச்சார முகிழ்ப்பு அங்கிருந்தேதான் தொடங்குகிறது. வீட்டுக்கு அகம் என்றும் ஒரு சொல்லுண்டு. வீடு சார்ந்த அனைத்தும் அகத்திணையாகவும், அதன் வெளி சார்ந்த அனைத்தும் புறத்திணையாகவும் அது அர்த்-தப்படுத்திக்கொண்டிருக்கிறது இலக்கணம் தாண்டி.

கூடு குடும்பத்துக்கானதாய் இருக்கிறது குருவிக்கு. குகையும் பொந்தும் மிருகத்துக்கும் அதற்கானதாகவே இருக்கிறது. மனிதனுக்கும் வீடு வேறு காரணத்துக்காய் இல்லை. குடும்பம் காமத்தின் விளைச்சல், அவாக்களின் சங்கமம்.

சிவசிதம்பரமும் வீடு வாங்கப் புறப்பட்டார்.

*(வெப்பம் நிறைகிறது)*



devakanthan@thaiveedu.com

# இரண்டாம்...

103ம் பக்கத் தொடர்ச்சி...

நீதம் செலுத்தச் சாத்தியமாகாது’ என்று குர்ஆன் எச்சரிக்கையும் விடுகிறது. இஸ்லாத்தில் பலதார மணம் ஒரு சாத்தியமே தவிர கட்டாயமானதல்ல. இதனை ஆசைப்படுகின்ற ஆண்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

பாலுறவு தொடர்பாக எந்த கட்டுப்பாட்டையும் இஸ்லாம் சொல்லவில்லை. மனைவி றொட்டி சுட்டுக்கொண்டிருந்தாலும் கணவன் பாலுறவுக்கு அழைத்தால் மனைவி அதனை மறுக்க கூடாது என்று இஸ்லாம் சொல்கிறது.

மனைவியுடனான உற்சாக உறவுக்கு இஸ்லாம் மார்க்கத்தில் எந்த தடையுமில்லை. திருமண பந்தத்தை தாண்டிய பாலுறவு ஹராம். அதாவது பெரும் பாவம்.

நபிகளார் கூட கணவன் மனைவியையோ அல்லது மனைவி கணவனையோ செக்ஸுக்காக நாடும் பொழுது பாலுணர்வை கிளர்ந்து எழச்செய்யும் காம விளையாட்டுக்களில் நன்கு ஈடுபட்டு புணர்ச்சிக்கு ஒருவரை ஒருவர் தயார் செய்து கொள்ளவேண்டும் என்று ஊக்குவிக்கிறார் என்று நபித்தோழர்களும் தெரிவிக்-கின்றனர்.
உடலுறவு விடயத்தில் மனைவியை கணவன் முழுமையாக சுகமடைய செய்யவேண்டும். அதிலே குறைபாடு ஏற்படுவது வாழ்வை கசப்படைய செய்து விடும். ஏத்தனையோ குடும்ப பிரச்சினைகள், கணவன் மனைவி தகராறு, விவாகரத்து என்பவற்றுக்கு சரியான உடலுறவு இன்மை காரணம். மனைவியைக் கணவன் திருப்திப் படுத்த வேண்டும். பாலியல் ரீதியான நல்ல சுகம் மனதுக்கும் உடலுக்கும் உற்சாகத்தை வழங்குகின்றது. இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

‘மனைவியை முத்தமிட்டு அவளை காம விளையாட்டுக்குள் ஈடுபடுத்தி திருப்திப்படுத்தாதவன் நீசன்’ என்று ஒரு நபி மொழி சொல்கிறது. நீசன் என்ற சொல் மிகவும் கேடுகெட்டவன் என்று பொருளாகும்.

இந்தளவிற்கு திருமண பந்தத்திற்கும் மனைவிக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறது இஸ்லாம். தலாக் என்னும் விவாகரத்து எங்கு இலகுவாக நடைமுறைப்படுத்தப் படுகிறதோ அங்கு பலதார மணங்களும் இலகுவாக்கப் பட்டிருக்கும். ஆனால் தலாக் தொடர்பாக இஸ்லாமியரின் விளக்கம் குறைவாகவே இருக்கிறது. தங்களை அறிவாளிகள் என்று நினைப்பவர்கள், மார்க்கவாதிகள் என்று நினைத்து கொள்பவர்கள், தலாக் என்ற ஒன்றை சொல்லி மனைவியை துன்புறுத்துகின்றனர்.

‘அல்லாஹ் அனுமதித்தவைகளில் அல்லாஹ்வுக்கு மிகவும் வெறுப்பானது தலாக் (விவாகரத்து)’ என்று நபிகளார் தெரிவிக்கிறார்கள். ஆகவே கருத்து ஒற்றுமையுடன் சேர்ந்து வாழ்தலையே இஸ்லாம் ஆதரிக்கிறது.

வாழ்க்கையில் பெரும் சிக்கல்கள் வரும் பொழுதும் மார்க்க விடயங்களுக்காகவும் ஒரு ஆணை ஒரு பெண் விவாகரத்துச் செய்யலாம் என்று வழிமுறை இருக்கிறது.

கணவர் தொழாமல் இருப்பது, போதைப் பொருளை பயன்படுத்துவது, பாவமான காரியங்களை செய்ய நிர்பந்திப்பது, கடுமையாக துன்புறுத்துதல், அநீதம் செய்ய நிர்ப்பந்திப்பது, மார்க்க உரிமைகளை தர மறுப்பது, உடலுறவு செய்ய முடியாத கணவனின் நிலை, இயற்கைக்கு மாற்றமாக உடலுறவுக்கு மனைவியை நிர்ப்பந்திப்பது, இவற்றில் இணைந்து வாழும் முயற்சிகள் பயனில்லை எனில் தன்னையும் தனது மார்க்கத்தையும் காப்பாற்றி கொள்ள மனைவி கணவனிடம் தலாக் கோரலாம்.

இவ்வளவு விடயம் இருக்கிறது. எனவே பல பெண்களை மணப்பது என்பது அவரவர் வல்லமையை பொறுத்தது. கலியாணம் முடிக்கலாம் ஆனால் மிகவும் சிரமமானது.


முதல் மனைவியின் அனுமதியோடு அவளின் விருப்பத்தோடு இரண்டாம் கலியாணம் முடித்த ஒருவரை எனக்கு தெரியும் அவர் மட்டும்தான் எனக்கு தெரிந்து சிக்கல்படாமல் இருக்கிறார்.

முதல் மனைவிக்கு தெரியாமல் ஆசைப்பட்டு முடித்தவர்கள் பலர், தலையை பிய்த்துக் கொண்டிருக்கின்றனர். அதில் பலர் பிரபல்யமான பணக்காரர்கள். பெரும் கஸ்டப்படுகின்றனர். புலிவாலைப் பிடித்த மாதிரி. விட்டால் கடிக்கும். எத்தனை காலத்துக்கு பிடித்துக் கொண்டிருப்பது.



Ilaya.abdillah@thaiveedu.com

திருப்தியான இல்லம்; முழுமையான சந்தோஷம்



Thavaraj Logasundaram
Sales Representative
thavarajl@yahoo.ca
Cell: 416 277 1453

HomeLife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated, REALTOR ®
HOMELIFE HIGHER STANDARDS
205 - 7 Eastvale Dirve,
Markham, ON L3S 4N8
Office: 905 201 9977


CMR
FM 101.3
CMR.FM
Youth
Heartthrob
SINGER
KARTHIK
Joins Toronto's fame Agni as part of
cross cultural music festival
CMR
STAR FEST
2012
பல்கலாச்சார இசைநிகழ்ச்சி
• CMR STAR SEARCH 2012
GRAND FINALE
• SOL DE CUBA • TASSA DRUMS
NOON TO MIDNIGHT
SATURDAY
25
AUGUST
MARKHAM FAIR GROUNDS
Multicultural Cusines | Carnival Rides
cmr
Diversity FM 101.3

## கனடாவின் கதை 05

நிமால் நாகராஜா

# அடுத்தவர்களின் அழிவுகளில் எழுகின்ற எங்கள் பரம்பரை

மனித குல பரிணாம வரலாற்றின் மிகப் பெரும் மர்மம் அது.

இன்றுவரை அவிழ்க்க முடியாத முடிச்சு அது. இதற்கு என்றைக்குமே விடை தெரியாமலும் போகலாம்.

இந்த மர்மம் எங்களது ஒன்று விட்ட சகோதரர்களான நியாண்டர்தால் மனிதர்களைப் பற்றியது.

பத்து இலட்சம் வருடங்களுக்கு முன்பு அவர்களுக்கும், எங்களுக்கும் ஒரே மூதாதையர்கள் தான். அப்போது ஆபிரிக்காவை வாட்டிய வறட்சியைத் தாங்க முடியாது ஏராளம் பேர் ஐரோப்பாவிற்கும், ஆசியாவிற்கும் புலம் பெயர்ந்தார்கள். மண் பாசத்தில் ஆபிரிக்காவிலேயே தங்கி விட்டவர்களின் பரம்பரையே நவீன மனிதர்களாக உருவெடுத்தார்கள். இந்த நவீன மனிதர்களின் வாரிசுகள் தான் நாங்கள்.

ஐரோப்பாவிற்கு குடி போய் விட்ட எங்களது ஒன்றுவிட்ட சகோதரர்கள் ஆரம்பத்தில் எங்களை மாதிரித்தான் இருந்தார்கள். காலம் போகப் போக, கடும் குளிருக்கு அவர்கள் பழக்கப்பட வேண்டியிருந்தது. நிறம் மாறிய, உடல் வலு கூடிய, உயரம் குறைந்த புதிய வகை மனிதர்களாக அவர்கள் உருவெடுத்தார்கள்.

இப்படியாகத் தான் எங்களின் பழைய வரலாறு கிளை பிரிந்தது.

தற்போதைய ஸ்பெயின், போர்த்துக்கல் தொடங்கி ரஷ்யா வரைக்கும் அவர்கள் பரவியிருந்தார்கள்.

இலட்சக்கணக்கான வருடங்களாக பெரும் பிரதேசங்களில் ஆட்சி செலுத்திய அவர்கள் முப்பதினாயிரம் வருடங்களுக்கு முன் திடீரென, ஒட்டுமொத்தமாக காணாமல் போனார்கள்.

ஒரு முன்னேறிய மனித வகை, நீண்ட துன்பங்களுக்கு மத்தியிலும் நெடுங்காலம் நிமிர்ந்து வந்தவர்கள், பயமே அறியாத வீர வரலாற்றைக் கொண்டவர்கள், எப்படி இல்லாமல் போனார்கள்?

வரலாற்றில் விடையில்லை. ஆயிரம் காரணங்களை அடுக்கினாலும் ஆராய்ச்சியாளர்களால் சரியான ஒரு காரணத்தை இன்று வரை சொல்ல முடியவில்லை. நியாண்டர்தால் மனிதர்கள் என வரலாற்றில் வாழ்ந்த இவர்களின் முடிவு சபிக்கப்பட்ட ஒன்றாயிருந்தது.

18ம் நூற்றாண்டில் German நாட்டிலுள்ள Dusseldorf நகருக்கு அருகிலுள்ள நியாண்டர் பள்ளத்தாக்கில் தான் இவர்களது முதலாவது மண்டையோடு அகப்பட்டது. இதனாலேயே இவர்கள் நியாண்டர்தால் மனிதர்கள் என அழைக்கப்படுகிறார்கள்.

முதலாவதாக கண்டுபிடிக்கப்பட்ட மண்டையோட்டின் வடிவம் சற்று வழமைக்கு மாறாகவிருந்தது. மற்றவர்களை மட்டம் தட்டுவதில் வல்லவர்களான நாங்கள் உடனேயே நியாண்டர்தால் மனிதர்கள் புத்தி குறைந்தவர்கள் என பட்டம் சூட்டி விட்டோம். அப்போதைய பிரபல ஆராய்ச்சியாளர் ஒருவர் "நியாண்டர்தால் மனிதர்கள் படு முட்டாள்கள்" என உரக்கச் சொல்லியிருந்தார்.

வரலாறு மீண்டுமொருமுறை எங்களைத் தான் முட்டாள்களாக்கியது.

நோய் ஒன்றினால் தான் அந்த மண்டையோடு உருமாறியிருந்தது என்பதை பிற்பாடு கண்டுபிடித்தார்கள்.

கடந்த நூற்றாண்டில் கண்டெடுக்கப்பட்ட ஏராளமான நியாண்டர்தால் மனித எலும்புகளும், அவர்கள் வாழ்ந்து போன குகைகளும் அவர்களது உண்மை வாழ்க்கையை படம் போட்டுக் காட்டின.

அவர்கள் குகைகளில் கூட்டமாய் வாழ்ந்தார்கள். உடம்பில் அழகாக வர்ணங்களால் வடிவங்கள் வரைந்தார்கள். சிப்பிகளாலும், சின்ன எலும்புகளாலும் ஆபரணங்கள் செய்து அணிந்தார்கள். வருத்தக்காரர்களையும், வயது போனவர்களையும் அன்போடு உபசரித்தார்கள். (பல்லுப் போன கிழவன் ஒருவனுக்கு மற்றவர்கள் தங்கள் வாய்களால் இறைச்சியை அரைத்து உணவூட்டியதற்கு ஆதாரம் இருக்கிறது). இறந்து போனவர்களுக்காக துக்கித்து பூ போட்டு புதைத்தார்கள்.

சங்கீதத்தைக் கூட அவர்கள் அறிந்திருந்தார்கள். சடங்குகள் செய்தார்கள். ஒரு சமூகமாய் சந்தோசமாய் வாழ்ந்தார்கள்.

ஆண்களும், பெண்களும் வீரத்தோடு கொடிய மிருகங்களுக்கு அருகில் சென்று வேட்டையாடினார்கள். இன்றுவரை கண்டுபிடிக்கப்பட்ட இவர்களின் ஏராளமான எலும்புகளில் மிருகங்களோடு மோதிய முறிவுகள் இருக்கின்றன.



காலத்தோடும், இயற்கையோடும் போராடி வென்று வந்த அவர்களுக்கு, ஒன்றுவிட்ட சகோதரர்களான எங்களது இனத்துடன் போராடி வெல்ல முடியாது போயிற்று. தோற்றுப் போனார்கள். தொலைந்து போனார்கள்.

எங்களுடனான போராட்டம் சண்டை பிடிப்பதாக இருக்கவில்லை. சாப்பாட்டுத் தேடலாகவே இருந்தது.

எங்கள் நேரடி முன்னோர்களான Homo Sapiens ஐரோப்பாவிற்கு வந்து சேர்ந்த போது உலகம் முழுவதிலும் Ice Age என அழைக்கப்படுகின்ற பனியுகம் நடந்து கொண்டிருந்தது.

இந்தப் பனியுகம் இரண்டு மில்லியன் வருடங்களுக்கு முன் ஆரம்பித்து இன்றுவரை தொடர்கிறது. பூமி தோன்றியதிலிருந்து இது வரை நாலு பனியுகங்கள் நடந்து முடிந்து விட்டன. இப்போது நடப்பது ஐந்தாவது.

துருவப் பகுதிகளிலும், உயரமான மலை முகடுகளிலும் பனி படர்ந்திருந்தால் அது பனி யுகம் தான். பனி யுகம் இல்லாவிட்டால் இமயமலையின் உச்சியில் கூட வெண்பனியைப் பார்க்கவே முடியாது.

நெடுங்காலம் நீளுகின்ற பனியுகங்களின் போது, ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு பூமி குளிராகும். பின்னர் அடுத்த ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு வெப்பமாகும். மாறி மாறி இது நடந்து கொண்டிருக்கும். பூமி குளிரடையும் போது, பூமியின் நடுப்பகுதியை விட மிச்சப் பகுதிகள் பனி மலைகளினால் மூடப்படும். வெப்பமடையும் போது பனி விலகி நிலம் தெரியும். நாங்கள் இப்போது பூமி வெப்பமாகும் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஒரு காலத்தில் பூமி மீண்டும் குளிரும் போது, எங்களுடைய பரம்பரைகள் பூமியின் மத்தியப் பகுதிக்கு ஓட வேண்டியிருக்கும்.

எங்கள் முன்னோர்கள் நியாண்டர்தால் மனிதர்களை சந்தித்த காலத்தில் பூமியின் பெரும் பகுதி பனியால் மூடப்பட்டிருந்தது. நிலப்பகுதி மிகவும் சுருங்கியிருந்தது. அதுவும் ஐரோப்பாவின் நிலமையைப் பற்றி சொல்லத் தேவையில்லை.

நிலப்பிரதேசங்கள் குறைந்த போது, மிருகங்களுக்கு தட்டுப்பாடு வந்தது. வேட்டையாடுவது முந்தியதைப் போல இலகுவாக இருக்கவில்லை. நியாண்டர்தால் மனிதர்கள் இந்தப் பிரச்சினையை சமாளிக்கத் திணறிக் கொண்டிருந்த போது தான் இன்னொரு பிரச்சினை வந்து கொண்டிருந்தது.

ஆபிரிக்காவிலிருந்து அலையலையாக Homo Sapiens மனிதர்கள் ஐரோப்பாவை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். வந்த மனிதர்கள், இருந்த மனிதர்களை விட எண்ணிக்கையில் மிக அதிகம். சுமார் பத்து மடங்கு அதிகம்.

உணவுக்கான உரிமைப் போராட்டம் ஆரம்பித்தது.

ஆரம்பத்தில் ஆங்காங்கே மோதல்கள் நடந்தாலும், நியாண்டர்தால் மனிதர்களும், எங்களுடைய முன்னோர்களும் பெரிதாக சண்டையிட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை. ஆனாலும் அவர்கள் ஒன்றாக கலந்து விடவும் இல்லை. விலகியே வாழ்ந்தார்கள். அப்படியிருந்தும் துணிவுள்ள சில இளவட்டங்கள் அவ்வப்போது கலப்புக் கலவிகள் செய்திருக்க வேண்டும். இதனால் தான் எங்களுடைய உடம்பில் மூன்று வீதமான நியாண்டர்தால் மரபணுக்கள் இன்றும் இருக்கின்றன.

நியாண்டர்தால் மனிதர்களின் ஆயுதங்கள் வெறும் கல்லாயுதங்கள் தான். அதிகம் போனால் ஈட்டிகள் வைத்திருந்தார்கள். மிருகங்களுக்கு அருகில் போனால் தான் அவைகளை கொல்ல முடிந்தது.

109ம் பக்கத் தொடர்ச்சி...

**TBC Toronto Business College**
*Dedicated to Excellence*



**SECOND CAREER**
- EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
- 2005ம் ஆண்டுக்குப் பின் வேலை இழந்தவர்கள்
- 5 வருடங்களுக்குள் Maternity Benefits பெற்றவர்கள்

அரசாங்க நிதி உதவியில் இலவசமாகக் கற்கலாம்.
Tuition Fees, Books, Living Expenses, Day care & Transportation up to $28,000 Free Funding.

**DIPLOMA PROGRAMS**

**Accounting**
Accounting & Payroll - 35 Weeks
Computerized Accounting - 26 Weeks

**Health care**
Personal Support Worker - 26 Weeks — *Accredited by NACC*
Classes Start August 7th
Medical Office Administrator - 32 Weeks

**CERTIFICATE COURSES**
- MS Windows
- Computer Basics
- MS Office
- CSC (Canadian Securities Course)
- DFC (Derivatives Fundamentals Course)
- Investment Funds Course (IFIC & CSI Versions)
- Quickbooks
- Simply Accounting
- Sage ACCPAC
- Medical Transcription
- Medical Terminology
- OHIP Billing
- Food Service Worker

**FREE SEMINAR**
**Online Stocks & Options Trading**
**Wednesday, August 8th, 2012**
Learn from a Qualified & Experienced Professional.
Call Now for More Details.

OACC PROUD MEMBER
Ample Free Parking
Small Class Sizes

**4465 Sheppard Ave. E. Suite 208, Toronto, M1S 5H9**
**(Sheppard & Brimley)**
**info@tbcollege.com www.tbcollege.com**
**416-291-5155**
Registered as a Private Career College under the Private Career College Act 2005

# அடுத்தவர்களின்...

**108ம் பக்கத் தொடர்ச்சி...**

ஆனால் எங்கள் முன்னோர்களோ அப்போது ஆயுத அறிவில் பெரிதும் முன்னேறியிருந் தார்கள். (இந்த அதீத ஆயுத அறிவு தான் எங்களை உலகப் போர்கள் வரை கொண்டு வந்து நிறுத்தியது). அவர்களிடம் எறியக்கூடிய ஆயுதங்கள் இருந்தன. இலகுவாக தூரத்தே இருந்து மிருகங்களை வேட்டையாடினார்கள். இவர்கள் வீரத்தை விட விவேகத்தை அதிகம் நம்பினார்கள்.

வேட்டையாடுவதில் எங்கள் முன்னோர்களு டன் போட்டி போட முடியவில்லை.

காலம் ஓடியது.

உணவுப் பிரச்சினை நியாண்டர்தால் மனி தர்களின் எண்ணிக்கையைக் குறைக்கத் தொடங்கியது. அவர்கள் ஒதுங்கிப் போகத் தொடங்கினார்கள். Homo Sapiens மனிதர்கள் முன்னிலும் அதிகமாய் புதிய இடங்களில் பரவினார்கள்.

ஒதுங்கி, ஒதுங்கிப் போன நியாண்டர்தால் மனிதர்கள் கடைசியில் Spain நாட்டிற்கு தெற் காய் உள்ள Gibraltar குகைகளில் புகலிடம் தேடினார்கள். அங்கேயும் கொஞ்ச காலத்திற் குத் தான் அவர்களால் தாக்குப் பிடிக்க முடிந்தது. சற்று காலத்திற்குள்ளேயே அவர் களது மனிதவகை முற்றாக அழிந்து போனது.

எங்கள் முன்னோர்களின் சவாலை அவர்க- ளால் ஏன் சந்திக்க முடியவில்லை? இன்று வரை விடை தெரியாத மிகப்பெரும் மர்மம் அது.

நீண்ட காலமாய், பல்வேறு ஆபத்துக்களை தாண்டி வென்று வந்த வீர வரலாற்றைக் கொண்ட நியாண்டர்தால் இனம் வீழ்ந்து போனது அவர்களின் விதியா? எங்கள் முன் னோர்களின் விவேகமா? அல்லது காலத்தின் கட்டாயமா?

விவாதம் இன்றுவரை தொடர்கிறது.

இது ஐரோப்பாவை சுற்றி நடந்த சோகக் கதை! ஆசியாவில் என்ன நடந்தது? அங்கே யும் அதே கதை தான் முதலே நடந்து முடிந்திருந்தது.

ஆபிரிக்காவிலிருந்து ஆரம்பத்திலேயே புறப் பட்டு ஆசியாவிலும் பரவியிருந்த Homo Erectus மனித வகையின் வாரிசுகளை புதிதாக வந்த Homo Sapiens இனம் இல்லாமல் ஆக்கியது. ஐம்பதினாயிரம் வருடங்களுக்கு முன்பு, கடைசி Homo Erectus மனிதன் இறந்து போனான்.

Homo Sapiens மனிதர்கள் ஆசியாவிலும், ஐரோப்பாவிலும் பரவத் தொடங்கி வெறும் பத்தாயிரம் வருடங்களுக்குள்ளாகவே நியா ண்டர்தால் மனிதர்களும், Homo Erectus மனிதர்களும் முற்றிலும் இல்லாமல் மறைந்து போனார்கள்.

இப்போது உலகில் இரண்டே இரண்டு மனித வகைகள் தான். ஒன்று வெற்றி மேல் வெற்றி பெற்றுக் கொண்டிருக்கும் எங்கள் நேரடி முன்னோர்களான Homo Sapiens மனிதர்கள். மற்றையது இந்தோனிசியத் தீவுகளில் அகப் பட்டுக் கொண்டதால் தனித்துப் போய்விட்ட குள்ள மனித வகையான Flores மனிதர்கள். ஆனால் இவர்களாலும் தொடர்ந்து தாக்குப் பிடிக்க முடியவில்லை. பன்னிரண்டாயிரம் வரு டங்களுக்கு முன்னால் இந்த குள்ள இனமும் முற்றாக அழிந்து போனது. (இப்போது இவர் கள் இருந்திருந்தால் தமிழ்ப்படங்களில் நாய கியின் பின் கூட்டமாய் ஆடிப் பாட வைத்தி- ருப்பார்கள்).

இவ்வளவும் உலகத்தின் மற்றப் பக்கத்தில் ஆரவாரமாக நடந்து கொண்டிருக்கையில் அமெரிக்க கண்டம் அமைதியாக இருந்தது. பனியுகம் என்றபடியால் பெரும்பாலான இடங் கள் பெரும் பனிக்கட்டிகளால் மூடப்பட்டிருந்தன. நிலப்பகுதியில் மிருகங்கள் சர்வ சுதந்திரமாக உலாவித் திரிந்தன. அவற்றைக் கொன்று தீர்ப்பதற்கு இன்னும் மனித குலம் இங்கே காலடி வைக்கவில்லையே!

கனடா தேசம் ஏறக்குறைய முற்றுமுழுதாக பெரும் பனிமலைகளால் நிரம்பியிருந்தது. பனிமலை என்றால் ஒன்றிரண்டு அடிகள் உய ரம் அல்ல. சுமார் ஆறாயிரம் அடி உயர மான பிரமாண்டமான பனிமலைகள். இந்த பனிமலைகள் வெறுமே கம்மென்று ஓரிடத் தில் இருக்கவில்லை. மெதுவாக அசைந்து கொண்டிருந்தன. இராட்சத புல்டோசர் ஒன்று அசைவது போல் வழியில் அகப்பட்ட அத்த னையையும் தவிடுபொடியாக்கியபடி இவை கள் ஊர்ந்து கொண்டிருந்தன.

ஒன்ராரியோ மாகாணம் முழுவதும் பனிக்குள் தான் புதைந்திருந்தது.

உலகின் பெரும் பகுதி பனியால் மூடியிருந்த படியால், இவைகளின் மேல் பொழிகின்ற மழை நீரும் முற்றாக உறைந்து போனது. மழை நீர் மீண்டும் கடலுக்கு சென்று சேரு வதற்கு வழியில்லை. விளைவு, கடலின் நீர் மட்டம் வெகுவாக குறைந்து போனது. முந்- நூறு அடிகளாவது குறைந்து போயிருக்கும். கடலின் கீழே இருந்த நிலப்பரப்புகள் வெளியே தெரிய ஆரம்பித்தன. புதிதாய் தோன்றிய இந்த நிலப்பரப்புகள் அமெரிக்க கண்டத்தை யும், ஆசியக் கண்டத்தையும் இணைத்தன.

இது நடந்தது சுமார் 12 தொடக்கம் 30 ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்ட ஒரு காலப் பகுதியில்.

ஐரோப்பா, ஆசியா எங்கினும் பரவியிருந்த எங்கள் முன்னோர்களுக்கு அமெரிக்க கண்டத்திற்கு வருவதற்கு வழி கிடைத்தது. சைபீரியா, அலாஸ்கா வழியாக மனிதர்கள் முதல் தடவையாக அமெரிக்க கண்டத்தின் வாசலில், கனடிய தேசத்தின் வடபிரதேசத்தில் வந்து நிற்கிறார்கள். கடவுச் சீட்டுகளை கிழித்து விட்டு கையை உயர்த்த வேண்டிய தேவை அவர்களுக்கு இருக்கவில்லை. அவர் கள் தான் இந்தப் பெரும் பிரதேசத்தின் ஆதிக்குடிகள்.

அவர்களை வரவேற்போம்.

இந்த ஆதிக்குடிகளின் வாரிசுகள் தான் கனடிய, அமெரிக்க, தென்னமெரிக்க தேசமெங்கும் பரவப் போகின்றார்கள். மெக்சிகோவின் புகழ் பெற்ற மாயா நாகரீகத்தையும், பேரு நாட் டின் இன்கா நாகரீகத்தையும் இவர்களே தோற்றுவிக்கப் போகின்றார்கள்.

இயற்கையை மீறாமல், இயல்பாக வாழப் பழகிக் கொள்ளும் இவர்கள், செல்வம் கொழித்த இந்த பரந்த நிலப்பரப்பில் மகிழ்ச் சியான வாழ்க்கையை வாழப் போகின்றார்கள், கொலம்பஸ் எனும் மனிதன் காலடி எடுத்து வைக்கும் வரை.

*(வரலாறு தொடர்ந்தும் வளரும்)*

*உசாத்துணை:*

- *The Theory of Everything, The Origin and Fate of the Universe, Stephen W. Hawking, 2002*
- *The Grand Design, Stephen Hawking and Leonard Mlodinow, Audiobook CD, 2010*
- *Big Bang, The Most Important Scientific Discovery of All Time and Why You Need to Know about It, Singh Simon, 2005*
- *God, the Universe and Everything Else, Stephen Hawking , Arthur C. Clarke , Carl Sagan DVD, 1988*
- *Becoming Human, PBS DVD, Nova, 2009*
- *The Complete Guide to Prehistoric Life, Haines Tim, 2006*
- *Dinosaurs, Rebecca L. Grambo, 2002*
- *http://www.bbc.co.uk/science/earth*
- *http://en.wikipedia.org/wiki/Timeline_of_evolution*
- *http://www.pbs.org/deepspace/timeline/*
- *http://news.nationalgeographic.com*
- *Human Origins, The story of our species, Yves Coppens, 2003*



nimal.nagaraj@thaiveedu.com

## போராளி உருவாக்கம் - III

# போராளியின் செயற்படுதன்மையின் உளவியல்

- சுல்பிகா இஸ்மாயில் -

**முன் கட்டுரைகளின் சுருக்கம்:**
போராளி உருவாக்கமானது அடிப்படை நம்பிக் கைகளை கட்டமைக்கின்ற ஒரு விடயமா கவே ஆரம்பிக்கின்றது. யதார்த்தம், சுயம், உறவுகள் குறித்த நம்பிக்கைகள், சமூக சூழ்நிலைக் காரணிகளின் அடிப்படையில் கட்டமைக்கின்றன. இவை சார்ந்து போராளி களிலும் போராளிக் குழுமங்களிலும், பல்வேறு உளவியல் இயல்புகள், மனப்பாங்குகள், உணர்வலை சார் நுண்ணறிவுகள் போன்ற னவும் உருவாக்கப்படுகின்றன. போராளிக் குழும உருவாக்கமானது சமூகக்கூறுபடுதல், சமூக ஒன்றிணைதல் ஆகிய செயற்பாடுகள் மூலம் வலுப்படுத்தப்படுகின்றது. எனிலும் இவ்விரு செயற்பாடுகளும் ஒரே நேரத்தில் சமுதாயத்தின் கட்டமைக்குரிய ஆக்கபூர்வ மான விசையாகவும், அழிவுக்குரிய அல்லது சீர்குலைவுக்குரிய விசையாவும் தொழிற்படு கின்றது என சமூக உளவியலாளர்கள் எடுத்துக் காட்டுகின்றனர். விளைவாக எந்த ஒரு விடயம் தொடர்பாகவும், நேரடியான பல வேளைகளில் எதிர்த்து நிற்கின்ற செயற்பாடு களில் ஈடுபடுவதற்கான தனிமனித, குழுமத் தயார்படுத்துதலாகவே போராளி உருவாக்கம் அமைகின்றது.

இனி, போராளியின் செயற்படுதன்மையின் உளவியல் பற்றிப்பார்ப்போம்.

எது ஒருவரை செயற்படுகின்ற போராளியாக் குகின்றது? என்பது குறித்த உளவியல் விட யங்களைச் செயற்படு தன்மையின் உளவி யல் குறிப்பிடுகின்றது. இருவிதமான சமூக உளவியல் ஊக்கவகைகள் மனிதர்களை செயற்படுகின்ற போராளிகளாக்குகின்றது என பெப்பர், கே.எஸ். குறிப்பிடுகின்றார்.

- உள்ளார்ந்த ஊக்கம் (intrinsic motivation)
- வெளிப்புற ஊக்கம் (extrinsic motivation)

குறிப்பாக, சுய முன்னெடுப்பாளர்களிற்கு போராட்ட அடிப்படை விடயங்களுடன் நேர டித் தொடர்பு காணப்படுவதாக அவர் எடுத்துக் காட்டுகிறார். குறிப்பிட்ட விடயம் தொடர்பாக ஒரு பாதிப்பு ஒருவருக்கு நிகழ்ந்திருக்கும் நிலையில் அவர் சமூகத்தின் பாதிப்பினை இலகுவாக உணர்கின்றார். உள்ளார்ந்த ஊக்கமுள்ளோர் அது தொடர்பாக தொடர்ந் தியங்க விரும்புகின்றார். சிலருக்கு இதற்கான ஊக்கம் வெளிப்புறத்திலிருந்து கிடைகின்றது. உள்ளார்ந்த ஊக்கமுடையோருக்கு வெளிப் புற ஊக்கமானது மேலும் சாதகமானதாக அமைகின்றது.

சுயநலம் (personal gain), பொது நலம் (common good) ஆகிய இரண்டின் அடிப்படை யிலும் தியாகம் செய்யும் தன்மை ஒருவரில் உருவாகலாம் என்கின்றார் டெப்ரா மசொக். மற்றவர்களுக்கு உதவ அல்லது செயற்பட விரும்புகின்றவர்களில் அறம் சார்ந்த உள் ளுணர்வு மிகையாகக் காணப்படுகின்றது. அத்துடன் அவர்கள் அது குறித்து மாற்ற மடைந்த விழிப்பு நிலையில் (altered con- sciouness) உள்ளனர். இது ஒரு எழுச்சிய டைந்த (arousal state) மனநிலையாகும், இம் மனநிலை எப்பொழுதும் குறித்த போராட்டம் தொடர்பாக திருப்தியையும், சந்தோசத்தையும் உணருகின்றது.

உள்ளார்ந்த ஊக்கமுடை போராளிகளுக்கான ஊக்கம், உள்ளுணர்வுக்கூடாக கிடைப்பதால், அவர்கள் குறித்த செயற்பாட்டினைத் தொடங் குவதற்கும், செயற்படுத்துவதற்கும், முடித்துக் கொள்ளவதற்குமான சாதகமான உளச்சக் தியையும் உணர்வுகளையும் தனக்குள்ளேயே திரட்டிக் கொள்கிறனர். அவர்களாகவே அது சார்ந்த தோழமைச் சக்திகளையும் கண்டறிந்து இணைத்துக் கொள்கின்றார். சவால்களை எதிர் கொள்ளவும், நினைத்ததை அடையவும், ஒரு கட்டுப்பாட்டுக்குள் இருக்கவும் தம்மைப் பயிற்றுகின்றனர். உள்ளார்ந்த ஊக்கமுடை யோர் தமது செயற்பாட்டுக்கு, தமக்கான சன்மானத்தினையும் (கைமாறு) தாமாகவே உருவாக்கிக் கொள்கின்றனர். அவர்களது செயற்படுத்தன்மை வினைத்திறன் கூடியது எனினும் மெதுவானது. நீண்டகாலத்திற்கு அவர்களாலேயே முன்னெடுத்துச் செல்லப் படக் கூடியது.

வெளிப்புறமான ஊக்கமடைவோர், தமது செயற்படுதலுக்கான சன்மானத்தினை ஏதே வழியில் பரிமாறிக் கொள்கின்றனர். நிதி சன் மானம், பொதுசன அங்கீகாரம், மற்றவர்களின் ஏற்பு போன்ற விடயங்களாகவே இவை அமைகின்றன. இதனால் அவர்களுக்குள் எழுகின்ற உணர்வுகள் தம்மை குறிப்பிட்ட விடயத்தின் வல்லுணர்களாகவும் திறன் படைத் தோராகவும் எண்ணச் செய்கின்றது. இந்த உணர்வு வெளிப்புறக் கண்ணோட்டங்கள் அபிப்பிராயங்களின் அடிப்படையிலேயே கட்ட மைக்கப்படும். வெளிப்புறத்திலிருந்து ஊக்கம் பெறுவோரின் செயற்படுத்தன்மை வினைத் திறன் கூடியது. எனிலும் குறுகிய காலத்திற்கே நிலைத்திருக்கக் கூடியது. போராளியின் செயற்படுத்தன்மை வினைத்திறன் உள்ளார்ந்த ஊக்க நிலையிலும், வெளிப்புற ஊக்கிகளிலும் தங்கியிருக்கும். பெரும்பாலும் வெளிப்புற ஊக்கிகளாக அண்மித்த உறவுகளும் நண் பர்களும் அமைகின்றனர். அத்துடன் அவர்க ளது அண்மித்த சூழல் காரணிகளும் இதில் பெரிதும் பங்களிப்புச் செய்கின்றது.

போராளிகள் செயற்படும் தளங்கள் வேறு படுகின்றன. போராளிகள் laptop, black top, over the top, top of mind எனப் பலவாறு வகைப்படுத்தப்படுகின்றனர். அவர்கள் பல்வேறு ஒழுங்கமைக்கப்பட்ட தளங்களில் செயற்படு கின்றனர்.

> “சுயநலம் பொதுநலம் ஆகிய இரண்டின் அடிப்படையிலும் தியாகம் செய்யும் தன்மை உருவாகலாம். மற்றவர்களுக்கு உதவ விரும்புகின்றவர்களில் அறம் சார்ந்த உள்ளுணர்வு மிகையாகக் காணப்படுகின்றது. அத்துடன் அவர்கள் மாற்றமடைந்த விழிப்பு நிலையில் உள்ளனர். இது ஒரு எழுச்சியடைந்த மனநிலையாகும்.”

சுருக்கமாக நோக்குமிடத்து, போராளி உரு வாக்கத்தில் பின்வரும் விடயங்கள் முக்கிய மாவையாகும்.

- யதார்த்தம், சுயம், உறவு தொடர்பான நம்பிக்கைகளின் உருவாக்கம்.
- சமூக ஒன்றிணைதல், சமூகக் கூறுபடுத் தல் சொல்நெறிகள்.
- போராளிகளின் செயற்படுதிறனைத் தீர்- மானிக்கும் சமூக உளவியல் ஊக்குவிசை கள்

மேற்குறிப்பிட்ட கோட்பாட்டு ரீதியான விடயங் களின் அடிப்படையில், உயிர்வாழும் தரவு கள் சிலவற்றை நோக்குவோம்.

நீண்டகாலமாக பத்திரிகையையும் இலத்திர னியல் ஊடகத்தினையும் தளமாகக் கொண்டு இயங்கிவரும் எழுத்துப் போராளி ஒருவர் பின்வருமாறு தனது உருவாக்கம் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

- “நான் ஒரு பேராளியாக மாறுவதற்குப் பல காரணங்கள் இருந்தன. எனக்கு எப் பொழுதுமே ஒரு வலிமையான அறம் சார்ந்த, நீதி சார்ந்த நம்பிக்கைகள் இருந் தன. அவற்றை எனது தகப்பனாரிடமிருந் தும் எனது பாடசாலை ஆசிரியர் ஒருவரி டம் இருந்தும் கற்றுக் கொண்டேன்.
- “குறிப்பான ஒரு சம்பவம் என்னை மிகவும் பாதித்தது. எனது அண்டைய கிராமத்தில் பலவகையான அக்கிரமங்கள் நிகழ்ந்தன. குற்றங்களை செய்தோர் சட்டத்தின் பிடி யிலிருந்து அவர்களுக்குள்ள பண, அரசியல் அதிகாரங்களைப் பயன்படுத்தித் தப்பித்துக் கொண்டனர். அக்கிரமங்களுக்குள்ளான ஒருவரது குடும்பம் எங்கள் வீட்டிற்கு அரு கில் இடம்பெயர்ந்து ஒளிந்து வாழ்ந்து வந்தனர். எந்தக் குற்றமும் செய்யாத அவர் களது வாழ்க்கை நாளாந்தம் சொல்ல முடி யாத பிரச்சினைளுடன் கடந்து சென்றது, ஒரு நாள் அவர்களது கிராமத்திற்குச் சென்ற தகப்பன் திரும்பி வரவில்லை. கொல்லப்பட்ட செய்தி பின்னர் கிடைத்தது.”
- அந்தக் குடும்பத்தவர்கள் படும் பாட்டை என்னால் பார்க்க முடியவில்லை. அவர்க ளுக்கு அநீதி செய்தவர்கள் மீது படு கோபம் எனக்கிருந்தது. அக்கொடுமை பற்றியும் நீதித்துறையின் போக்குப் பற்றி யும் பத்திரிகைக்கு எழுத வேண்டும் என என் மனம் உந்தியது. முதலில் புனை பெயரிலேயே எழுதினேன் எப்பொழுதுமே நான் அமைதியான போக்கையே விரும் பிய படியால் போராட்டத்தின் கருவியாக எழுத்து எனக்கு பிடித்திருந்தது. மனிதர்க ளின் சுதந்திரம், உரிமைகள் பற்றிய எனது நம்பிக்கைகளின் அடிப்படையில் எனக்கு சரி/பிழை எனப்பட்டவைகளை வெளிப் படுத்த என் உள் மனம் உந்தியது”

மேற்குறித்த எழுத்துப் போராளியின் உரு வாக்கத்திற்கான உந்து விசை (ஊக்கம்) உள்ளார்ந்ததாகும். வெளிப் புறக்காரணிக- ளால் அல்லது நபர்களால் அவை வலுப் படுத்தப்பட்டிருக்கின்றன. யதார்த்தம் தொடர் பான அவரது நம்பிக்கைகள் சுதந்திரம் உரி மைகள் பற்றியதாகவும் அதன் பாதுகாப்பு பற்றியதாகவும் உள்ளன. பாதிக்கப்பட்டவர்கள் அவருக்கு சார்பான உறவுகளாகவும் பாதிப்பை ஏற்படுத்தியோரும் அதற்கு அதரவாக இருந்த பாதுகாப்பு / நிதித்துறை அவருக்கு எதிரி யாகவும் உள்ளனர். அவர்களது உறவு நிலைகளுடன் சார்ந்து அநுதாபம், கோபம் போன்ற உணர்வலைகளையும் அவர் கொண் டுள்ளார்.

(தொடரும்)



zulfika.ismail@thaiveedu.com

www.inayam.net

- கலை விழாக்கள்
- எழுச்சி நிகழ்வுகள்
- ஊர்ச்சங்க ஒன்றுகூடல்கள்
- திருவிழாக்கள்
- கொண்டாட்டங்கள்
- நடன, நாடக, இசை விழாக்கள்
- குடும்ப நிகழ்வுகள்
- மரணச் சடங்கு நிகழ்வுகள்

எதுவானாலும்,

இணையம் .net மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்களுக்கு அனுகூலமான இடம், காலம், நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

முன்கூட்டியே inayam.net இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பங்குபெறும் மக்களின் அனுகூலம் முக்கியமானது.

இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் தளமே inayam.net

முயற்சி செய்யுங்கள்!

முற்றிலும் இலவசம்

inayam

416•400•6406

digi



PEGASUS®
MORTGAGE & FINANCIAL SOLUTIONS
1457 McCowan Road, Suite 202 Toronto, ON M1S 5K7

- 1st & 2nd Mortgage
- Pre-Approvals
- Renewals & Refinance
- Purchases


- Self Employed
- New Immigrants
- Debt Consolidation
- Credit Repair Programs

HELOC Up to 85% approval of your House Market Value and I Can Help you Reduce your Mothly Payment and you can save thousands of Dollars.

உங்கள் அனைத்து வீட்டு அடமானத் தேவைகளுக்கும் என்னை அழையுங்கள்

LATHA JESUTHASAN
Mortgage Agent
Direct: **416 605 5011**
E-mail:latha.jesuthasan@yahoo.ca
Broker Lic#11479
FSCO Lic # M10001117






# வீடு வாங்க விற்க அழையுங்கள்!

அனுபவம்! திறமை! நேர்மை!

Century 21
Brokerage*
AFFILIATE REALTY INC
416-290-1200
email: rpushpakanthan@trebnet.com

**Pat Pushpakanthan**
*Real Estate BROKER*

*7 Time Centurian award*
*Hall of fame award*

Full time Broker 11 years

**416-894-1187** **416-490-7653**

Mid land/Lawrence


3 bm 2 wsrm

Markham


Book now make 40K*

Mccowan/ denison


4 bm 4 wsrm sep entr bsmnt apt

Markham/bur oak

4 bm 4 wsrm approx 3000 sq

9 th / 16 th ave


4 wsrm

Scarborough


43bm 32wsrm Sep entr bsmnt apt

******41 power sale homes..******

Mccowan/ellesmere


2 bm / 2wsrm

Mccowan/kingston

3 BM

Markham/Denison


Own your business with building

stouffville


4 bm 4 wsrm hardwood approx 3300 sq

ajax


4 bm 3 wsrm

ajax


4 bm 3 wsrm larger lot

**Brand New Condo in Scarborough.. 1, 2, 3 bm larger Units Luxuary condo book now and earn 40K**

# எனது இணையிலா இரசிகர் திரு. சின்னத்துரை நடராஜா

**இலக்கிய உறவுகள் - 20**

தாயகத்தில் எனது வீட்டுக் கோடியில் ஒரு கொய்யா மரம் வளர்ந்திருந்தது. பருவத்துக்குப் பருவம் நன்றாகக் காய்க்கும். பழுக்கட்டும் பறிப்போம் என்று நாம் காத்திருப்போம். பழுத்துவிட்டது என்ற செய்தியை எமக்கு அறியத்தருவது அணில்கள் தாம். தலைப் பழங்களை அவை சுவைத்து விடும்.

அப்படி ஓர் சுவைஞர்தான் திரு. நடராஜா அவர்கள். எனது கவிதைகள் அல்லது கட்டுரைகள் பத்திரிகைகளில் வந்தால் அவற்றைத் தேடிப் படித்து முதற் சுவைப்பவர் அவர்தான். நான் பார்ப்பதற்குமுன் அவர் படித்துவிடுவார். உங்களைப் பற்றி ஒரு கட்டுரை ஈழநாட்டில் வந்திருக்கிறது என்று அவர் செய்தி அறிவிப்பார். அதன்பிறகுதான் நான் பத்திரிகையைப் பார்ப்பேன்.

திரு. சின்னத்துரை நடராஜா எனக்கு நல்ல நண்பர். என்னுடன் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் படிப்பித்தவர். என்னிடத்தில் ஏதாவது உதவிகள் பெறவேண்டும் என்ற எண்ணத்தில் அவர் நண்பரானவரல்லர். உண்மையாகவே அகம்நக நட்புக் கொண்டவர்.

நான் அயலூர்களில் எங்காவது பேசுகிறேன் என்றால் அங்கு தவறாது வந்துவிடுவார். எட்டத்திலே நின்று பேச்சைக் கேட்டுவிட்டுத் தன்பாட்டிற் சென்றுவிடுவார். பின்னர் அடுத்த நாள் பாடசாலையில் சந்திக்கும்போது பேச்சு மிக நன்றாக இருந்தது என்பார். எனக்குச் சொல்வதற்கு முன்னதாகவே மற்றைய ஆசிரியர்களுக்குச் சொல்லி மகிழ்வார். அப்படி ஒரு தனி ஆர்வம் அவருக்கு.

எனது கலை இலக்கிய முயற்சிகள் பற்றிப் பாடசாலையில் மட்டுமன்றித் தனது கிராமத் தவருக்கும் பரப்புரை செய்வதில் அவருக்கு அவ்வளவு தாகம்.

அவரது கிராமம் ஏழாலை வடக்கு. பிறந்த பதி கோப்பாய் தெற்கினைச் சேர்ந்த இருபாலை. தந்தையார் சின்னத்துரைச் சாமியார். தாயார் மாவிட்டபுரம் வீமன்காமத்தைச் சேர்ந்த நாகம்மா.

நண்பர் திருமணஞ் செய்த பதிதான் ஏழாலை. ஏழாலை குரும்பசிட்டிக்கு அணித்தான் ஊர். அவர் எங்கள் ஊர்க் கோயில் திருவிழாக்களுக்கு வருவார். நான் அவரது ஊர்க் கலை விழாக்களுக்குச் செல்வேன். அவ்வகையில் வயாவிளானுக்கு அவர் படிப்பிக்க வருவதற்கு முன்னதாகவே நாங்கள் நண்பர்களாகிவிட்டோம். அவரது மனைவியார் சிவபாக்கியம். அவர்களது வீட்டுக்கும் சென்றிருக்கிறேன். வள்ளுவரும் வாசுகியும் போல நடராஜாவும் சிவபாக்கியமும் இல்லறம் நடத்துவதைப் பார்த்திருக்கிறேன். ஒரேயொரு மகள்தான். தேவிகா என்று பெயர்.

நடராஜா ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர். பயிற்சி பெற்றது சைவ ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில். அங்கு பயிற்சிபெற்ற ஆசிரியர்களைப் புறம்பாகத் தெரியும். அவர்கள் ஆசிரியராவதற்கு மட்டும் பயிற்சி பெறுவதில்லை. வாழ்க்கையை முறையாக வாழ்வதற்கும் பயிற்சி அளிக்கின்ற கலாசாலை அது.

நண்பருடைய நெற்றியில் எப்பொழுதும் திருநீறு இலங்கும். அவர் ஆன்மிக நெறியில் வளர்க்கப்பட்டவர். ஒழுக்கத்தை உயிரினும் மேலாக ஓம்பியவர். அடக்கம் அவரைவிட்டு அகலாத தேவதையாக இருந்தது. ஆன்மிகம் பற்றிய விடயங்களில் அழகாகச் சொற்பொழி வாற்றுவார். வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும் சமய விழாக்களில் அவரது பங்களிப்பு அதிகமாக இருக்கும்.

என்மீது கொண்ட நட்புக்காரணமாகக் கல்லூரி அலுவல்களில் எனக்கு உதவியாளராக அவரை உரிமையுடன் வைத்துக்கொள்வேன், மறுக்கமாட்டார். உதாரணத்துக்கு 1972ல் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் கொண்டாடிய வெள்ளி விழாவைச் சொல்லலாம்.

வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தின் வரலாற்றில் நிகழாத பல நிகழ்வுகள் இந்த விழாவையொட்டி நடத்தப்பட்டன. பொருட்காட்சி, கலைவிழா, கல்விக் கருத்தரங்கம் என்று மூன்று நாட்களாக விழா நடந்தது. மற்றுமொரு நிகழ்வு வெள்ளிவிழா மலர் வெளியீடு. மலர்க்குழுவில் எனக்கு உதவி



யாக ஆசிரியர்கள் ச. விநாயகமூர்த்தியும் சி. நடராஜா அவர்களும் இருந்து தொண்டாற்றினர்.

ஆசிரியர் கூட்டங்களிலும் ஆசிரியர்கள் நடராஜாவும் விநாயகமூர்த்தியும் நானுந்தான் அடிக்கடி பேசுவோம். நடராஜாவின் பேச்சுக்களில் நகைச்சுவை அதிகம் இருக்கும். ஆள் அடக்கமானவரானாலும் பேச எழுந்தால் ஒரே கலகலப்புத்தான்.

1973ல் அவர் வேரவில் இந்து அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அதிபராக இடமாற்றம் பெற்றுச் சென்றார். இரண்டு மாதங்கள் கழித்து நானும் வயாவிளானிலிருந்து வவுனிக்குளம் யோகபுரத்துக்கு அதிபராக இடமாற்றம் பெற்றேன். இருவருக்கும் பிரியாவிடை ஒன்றைக் கல்லூரி வைக்க விரும்பியது. சரி என்று சொன்னோம்.

ஆனால், குறித்த நாளில் வடமாநிலக் கல்வி அதிபதி மாணிக்கவாசகர் திரு. தி. மாணிக்கவாசகர் கிளிநொச்சியில் அதிபர்கள் கூட்டம் ஒன்றை நடத்தினார். அது அவர் வடமாநிலக் கல்வி அதிபரான பின்னர் நடத்துகின்ற முதல் கூட்டம். அதற்குத் தவறாது செல்ல வேண்டிய பொறுப்பு எமக்கு இருந்தது. இருவருமாகக் கூட்டத்துக்குச் சென்று வரவைப் பதிவு செய்துவிட்டு இடையில் எழுந்து எனது வாகனத்தில் வயாவிளானுக்குப் புறப்பட்டோம். பெரும் வேகத்தில் வண்டியைச் செலுத்தியும் உரிய நேரத்துக்குப் பிரியாவிடைக்குச் செல்ல முடியவில்லை.

பிற்பகல் ஒரு மணிக்குச் செல்லவேண்டிய நாம் 4.00 மணிக்குப் போய்ச் சேர்ந்தோம். பிள்ளைகளை மறித்து வைத்துக்கொண்டிருந்த அதிபர் இராமசாமி, காத்துக் களைத்துப் போய் அவர்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டார். ஆசிரியர் எல்லோரும் பொறுமையுடன் இருந்தனர்.

கல்லூரி மண்டபத்தில் கோலாகலமாக நடக்க வேண்டிய பிரியாவிடை ஆசிரியர் அறையில் அடக்கமாக நடந்தது. பதில் உரையில் நான் தாமதத்துக்கான காரணத்தை விளக்க, நண்பர் நடராஜா தன் வாழ்நாளில் அன்றுதான் விமானத்தில் பயணம் செய்யும் வாய்ப்புக் கிடைத்தது என்று தொடங்கி எனது வாகனம் செலுத்தும் திறமைபற்றிச் சீனவெடிகள் கொளுத்தி எல்லேரையும் சிரிக்க வைத்தார்.

நடராஜா, இலக்கியங்களில் நல்ல பயிற்சியுள்ளவர். தற்கால இலக்கியப் படைப்புகளையும் விரும்பிப் படிப்பவர். எனது படைப்புகளையும் அவ்வப்போது படித்து நயங்கள் சொல்லுவார். ஆனால் அவற்றைப் பத்திரிகைகள் எதற்கும் எழுதியதாகத் தெரியவில்லை. அப்படி எழுதும்படி நான் கேட்கவுமில்லை. எழுதியிருப்பார், அதற்கு அவரது குடும்பப் பொறுப்புகள் விடவில்லை. அவரை மிகவும் பாதித்த விடயம் அவரது அன்பு மனைவியின் நோய். மனைவியை அவர் பேணிய விதம் எந்தக் கணவனும் பாடம் படிக்கவேண்டிய விதம்.

நான் ஆபிரிக்காவுக்குச் சென்ற பின்னர் ஒழுங்குமுறையாகக் கடிதங்கள் எழுதுவார்.

**- வி. கந்தவனம் -**

இடையிடையே எனது பாடல்கள், பேச்சுக்கள்தாம் உதாரணங்களாக வரும். சிலவற்றை இன்றும் பேணி வைத்திருக்கின்றேன். அந்தக் கடிதங்கள்தாம் எனது படைப்புக்களில் அவருக்கு எவ்வளவு பயிற்சி இருந்தது என்பதை எடுத்துக்காட்டியன. இப்படி ஒரு இரசிகர் எனக்கு வந்து வாய்த்தது எனது தவப்பயன்.

பின்னர் இடப்பெயர்வு நடந்த காலத்துக்குப் பின் கடிதங்கள் வருவது குறைந்தது. நானும் கனடாவுக்கு வந்தபின் அவருடன் தொடர்பு கொள்ள முடியவில்லை. முகவரியும் தெரியவில்லை. முயன்றால் முடிந்திருக்கும். அவரது மரணச் செய்தி என்னை எட்டிபோதுதான் எவ்வளவு பெரிய தவறு செய்துவிட்டேன் என்பது எனக்கே புரிந்தது.

இரங்கிப் பாடிய பாடல் இது:

*உன்னத நடையும் நின்றதுவோ*
*ஒப்பற்ற தவமும் வென்றதுவோ*
*இன்னல நண்பா நடராஜா*
*எங்களை விட்டுப் பிரிந்தனையோ?*

*நோய்நொடி யாலே வருந்தாது*
*நுடங்கிப் பாயிற் படுக்காது*
*ஓய்வின்றி வீட்டுக் கடமைகளை*
*உவப்புடன் செய்கையில் உறங்கினையோ?*


*உன்னுடன் நானும் கற்பித்த*
*உறவினை நினைவலை ஒப்பிக்க*
*மன்னவ னேநீ என்முன்னே*
*மந்திரச் சிரிப்புடன் நிற்கின்றாய்!*

*நகைச்சுவைப் பேச்சிற் சிறக்கவல்லாய்*
*நன்றல்ல தன்றே மறக்கவல்லாய்*
*பகைச்சினம் இல்லா அழகுடையாய்*
*பக்குவ முனிபோற் பழகவல்லாய்!*

*ஒழுக்கத்தில் உயர்ந்த குணக்குன்றே*
*உள்ளத் தூய்மையிற் பசுக்கன்றே*
*விழுப்பம் மிகுந்த வேளாண்மை*
*விளம்பரம் இல்லாச் சான்றாண்மை!*

*எந்தன் எழுத்தைப் பேச்சையெல்லாம்*
*இரசித்த நண்பா மறைந்தனையோ*
*அந்தோ அந்தோ அன்புடனே*
*அகம்நக நட்பார் யாரினிமேல்?*

*ஆன்மிகச் செல்வா பக்குவத்தை*
*அறிந்தே அரனார் அழைத்தரிய*
*வான்பதம் அளித்தார் வாழியவே*
*மறவா துணையில் வையகமே!*



kandavanam.v@thaiveedu.com

உங்கள் அனைத்து நிகழ்வுகளையும் பார்ப்பதற்கும் பதிவதற்கும்

www.inayam.net

அனைத்துலக தமிழ் வானொலி வழங்கும்

# நட்சத்திர விழா

*MINI OLYMPICS & MUSIC FEST.*

**AUGUST**

**18 19**

சனி - ஞாயிறு

ஊர்ச்சங்கங்களுக்கிடையேயான
விளையாட்டுப்போட்டிகளும்

இசைக்குழுக்களின்
இன்னிசை வார்ப்புக்களும்!

விளையாட்டுப்போட்டிகள் பற்றிய விபரங்களை அறிந்துகொள்ளவும்
வணிகச்சாவடிகளை பதிவு செய்யவும் அழையுங்கள்

**416 264 4283 / 416 727 1204**

**Markham Fair Groungs ல்**
**கூடிக்கொண்டாட கோடைக்குதூகலம்!**



GTR - மண்ணையும் மனங்களையும் நேசிப்போம்.


SEPTEMBER
1 sat • 2 sun 2012
11:00 AM-11:00 PM
7th South Asian Business Festival
6900 Airport Rd.
(Airport & Derry)
ஐரோப்பிய, ஆசிய, வடஅமெரிக்க கலைஞர்கள் வழங்கும் மிகப் பிரமாண்டமான நிகழ்வு!
கொண்டாட்டம்
நகைச்சுவை
நடனம்
இன்னிசை
சர்க்கஸ்
ஆடை அலங்காரம்
KIDS RIDES
வர்த்தக நிலையங்கள்
உள்ளரங்க, வெளியரங்க நிகழ்வுகள்!!!
FREE PARKING
PLATINUM SPONSORS
Gary Anandasangaree
416 321 1100
Century 21
Asok Santhiralingam,B.Sc
647-297-2765
IDEAL DEVELOPMENTS
Building a future together
Asiyans
The One Stop Shopping Centre for the Entire Family
Tel: 416-438-6568
SP SOLUTION
416 593 9300 . www.southasianbusinessfestival.ca


எமது இல்லங்களில்
எமக்கென்றொரு தொலைக்காட்சி
tvi
Tamil Vision Int.
ON Bell
Fibe TV
From July 12th
Ch.845
August 21 முதல் Sept 11 வரை
TVI தொலைக்காட்சியை
ROGERS Ch.867ல்
இலவசமாக பார்த்து மகிழலாம்.
416-593-9300
Bell Ch.707
ROGERS Ch.867
Fibe TV Ch.845
www.tamilvision.tv
@tvicanada

# அரங்கக்கலை வளர்த்த புலவர் சு.செல்லத்துரை

ஆழத்து முத்துக்கள் 78

**- தெளிவத்தை ஜோசப் -**

### அறுபதுகளில் அரங்கக்கலை வளர்த்த சைவப் புலவர் சு. செல்லத்துரை:

வலிகாமம் வடக்கின் அவைக்காற்று கலை உந்துசக்தியாகத் திகழ்ந்தவர்களில் முக்கிய மானவர் சு. செல்லத்துரை அவர்கள். இளவாலையில் பிந்திய முப்பதுகளில் பிறந்த இவர் இளவாளை மெய்கண்டான் வித்தியாலயத்தில் கல்வி கற்றவர்.

பாடசாலை நாட்களிலேயே இலக்கிய ஆர்வமும் கலை விருப்பும் கொண்டவராகத் திகழ்ந்தார். இவருடைய கலை ஆர்வத்தை தூண்டி விடுபவராகவும், ஒரு உந்து சக்தியாகவும் திகழ்ந்தவர் மெய்கண்டான் வித்தியாலய அதிபர்.

'துன்னாலையைச் சேர்ந்த சுப்பையா என்னும் தலைமை ஆசிரியர் இவரது கலை இலக்கிய ஆர்வத்தைத் தூண்டி வளர்த்தார். 'புலவர் புலவர்' என்று தனது மாணவனை அழைத்து 'பிற்காலத்தில் நீ ஒரு ஆக்கபூர்வ மனிதனா கத்திகழ்வாய்' என்றும் ஆசி கூறினார் என்று எழுதி வைக்கின்றார் கலைப்பேரரசு ஏ.டி.பொன்னுத்துரை அவர்கள்.

தெல்லிப்பழை கலை இலக்கியக்களம் 1998ல் சைவப் புலவர் சு.செல்லத்துரை அவர்களின் மணிவிழா ஆண்டை முன்னிட்டு கலைப்பேரரசு ஏ.ட பொன்னுத்துரை அவர்களைக் கொண்டு 'அரங்கக் கலைஞர் ஐவர்' என்ற நூலை வெளியிட்டுள்ளது.

கலை இலக்கியக் களத்தினர் இந்நூல் வெளியீட்டிற்கான வழிகாட்டியாகத் திகழ்ந்த களத் தலைவர் பேராசிரியர் நா.சுப்பிரமணிம் அவர்களுக்கும் கலாநிதி. செ. கிருஸ்ணராஜா, திருமதி கோகிலா மகேந்திரன், நூலை ஆக்கித்தந்த கலைப் பேரரசு ஆகியோருக்கும் நன்றி கூறியிருக்கின்றனர்.

சைவப் புலவர் செல்லத்துரை அவர்கள் மாணவனாக இருந்த ஐம்பதுகளில் நாடகம் என்ற கலைக்கு மக்கள் மத்தியில் ஆதரவு இருக்கவில்லை.

ஆதரவு இல்லை என்பது மட்டுமல்லாமல் தூற்றுதல்களும் நடந்தேறிய காலம் அது. நாடகம் போடுபவர்கள் கூத்தாடிகள் என்று குட்டுப்பட்டனர். பாடசாலைகள் கூட நாடகத்துக்கு இடமளிக்கவில்லை. ஆதரவளிக்க-வில்லை. ஒரு சில கல்விக்கூடங்களில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு நாடகம் பழக்கினால், 'படிக்க வந்த பிள்ளைகளை மண்ணாக்கு கிறார்கள்' என்று சக ஆசிரியர்களும் பெற்றோர்களும் குறை கற்பித்த காலம் அது.

அப்படிப்பட்ட நாட்களில் நாடகம் நடித்து, நாடகம் பழக்கி, நாடகம் மேடையேற்றி நாடகத்துக்காகவே வாழ்ந்தவர்கள் உண்மையாகவே போற்றுதலுக்குரியவர்கள் தான்.

சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களும் அந்தவகையில் போற்றுதலுக்குரியவரே.

50களில் பாடசாலை மாணவனாக இருந்த போது இவர் பங்கேற்ற முதல் நாடகம் சோம சுந்தரப்புலவர் எழுதிய 'உயிரிளம் குமரன்' என்பதாகும். பாடசாலைக்காக இந்த நாடகத்தை தயாரித்து, நெறியாள்கை செய்து அரங்கேற்றியவர் அந்த நாட்களில் யாழ் நாடக உலகில் பிரசித்தம் கொண்டிருந்த சின்னையா தேசிகர் என்பவராகும்.

செல்லையா அவர்களின் தொடர்ச்சியான அரங்கியற் பணிகளுக்கு இந்த ஆரம்ப குருவாக தேசிகர் அமைந்ததுவும் ஒரு முக்கிய காரணமாகும்.

முதல் நாடகமான 'உயிரிளம் குமரன்' நாடகத்தில் இவருக்கு ஒரு பெண் பாத்திரமே கிடைத்திருந்தது. ஒரு ஆண் பெண்ணாக நடிக்கும் போது கூடுதலான நடிப்பு நுட்பங்களை கற்றுக் கொள்ளுகின்ற வாய்ப்புக் கிடைக்கின்றது.

இவருக்குக் கிடைத்த முதல் ஆசிரியர் நியமனம் மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியில் ஆகும். அங்கும் நாடகப் பயிற்சி மற்றும் நாடகச் செயற்பாட்டுக்கான சூழலை ஏற்படுத்திக் கொண்டார் இவர்.

மன்னாருக்கென்று விசேடமான கூத்து மரபொன்றுண்டு.

1960இல் நடந்த கலைக்கழகப் போட்டியில் இவர் தயாரித்து, நெறிப்படுத்திய 'தணியாத தாகம்' பரிசு பெற்றது. குரும்பசிட்டி சன்மார்க்க சபை இதே அறுபதுகளில் ஆண்டுதோறும் நாடகப் போட்டிகள் வைத்து தங்கப் பதக்கம் உட்பட்ப பரிசில்கள் கொடுத்து நாடகக் கலைக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்து வந்தது.

'தீந்தமிழ்த் தீ' என்ற இவரது நாடகம் கலையரசு சொர்ணலிங்கம் முன்னிலையில் குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் பரிசைப் பெற்றது.

1964ல் கரவைக் கிளானின் 'ஆதவனே மன்னிப்பாய்' நாடகத்தை தயாரிக்கத் தொடங்கினார்.

அறுபதுகளில் கலைக் கழகத் தமிழ் நாடகக் குழுவின் தலைவராகப் பேராசிரியர் சு.வித்தியானந்தனும் செயலாளராக பேராசிரியர் கா. சிவத்தம்பியும் இருந்தனர். ஆண்டு தோறும் நாடக விழா நடக்கும். 1965 ஆம் ஆண்டு நடைபெற்ற விழாவில் அரங்கியற்கலைஞர்



சு.செல்லத்துரை அவர்கள் தயாரித்து நெறிப்படுத்திய கரவைக்கிளான் எழுதிய 'ஆதவனே மன்னிப்பாய்' நாடகமும் மேடையேற்றப்பட்டது. அகில இலங்கை மட்டத்தில் முதல் பரிசினைப் பெற்றுக் கொண்டது.

மன்னார், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, காரை நகர், பருத்தித்துறை போன்ற பல இடங்களில் இவருடைய நாடகங்கள் மேடை ஏற்றம் கொண்டன. அரச பதவி வகிப்பவர்கள் உயர் உத்தியோகத்தினர், நாடகக் கலையையும், நாடகத்தில் நடிப்பதையும் பங்கேற்பதையும் இழிவானது அநாகரீகமானது என்று புறக்கணித்த அந்த நாட்களில் சுகாதாரத் திணைக்கள உயர் அதிகாரிகள் டொக்டர்கள் உட்படப் பலர் செல்லத்துரை அவர்களின் நாடகத்தில் பங்கேற்று நடித்துள்ளமைக்கு இவரது பண்பான நடத்தையும் வாழ்க்கை முறைகளுமே காரணமாகின்றன. ஒழுக்கமும் ஆற்றலும் ஒருங்கே பெற்ற இந்த நாடகக் கலைஞர் மற்றவர்கள் மத்தியிலும் கற்றவர்கள் மத்தியிலும் மதிப்புப் பெற்றமை வியப்பானதல்ல.

மன்னாரில் நாடகத் தயாரிப்பில் ஈடுபட்டிருந்த போது அங்குள்ள சில நடிக நண்பர்களுடன் அடிக்கடி யாழ்ப்பாணம் சென்று கலையரசு சொர்ணலிங்கம் அவர்களிடம் நாடகமேடை யேற்றம், ஒத்திகை சம்பந்தமான பிரச்சினைகளைப் பேசி தீர்வு கண்டு கொள்வாராம்.

1969ல் காரைநகர் ஈழத்துச் சிவன் கோவில் நிர்வாகம் கோவில் நிதிக்காக ஒரு நாடகம் நடத்தத் தீர்மானித்து அதற்கான பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தது. இளவாலையிலிருந்து ஒவ்வொரு நாளும் காரை நகர் சென்று நாடகத்துக்கான செயற்பாடுகளை மிகவும் சுறுசுறுப்பாய்க் கவனித்தார்.

ஈழத்துச் சிவன் தேவஸ்தான நிர்வாகத்தினர் இந்த நாடகத்தை கொழும்பில் அரங்கேற்றத் திட்டமிட்டிருந்தனர். அதற்கேற்பவே 'மணியோசை' என்ற நாடகத்தை நெறிப்படுத்தி வெற்றியீட்டினார். தேவஸ்தானம் தங்கப் பதக்க மீந்து கௌரவித்தது.

நாடகத்துறைக்கு இளைஞர்களை உள்வாங்கி ஊக்குவிக்கவும் உற்சாகப்படுத்தி ஒத்துழைத்து முன்னேற வழி செய்யவும் இவர் பின் நின்றவர் அல்ல.

இளவாலை இளைஞர்கள் சிலர் ஒன்று சேர்ந்து 'இளவாலை இளங்குமரன் கலாமன்றம்' என்னும் பெயரில் ஒரு நாடக மன்றம் அமைத்து செயற்பட்டனர். தம்பு என்ற இளவாலைக் கிராமத்து இளைஞர் இந்த மன்றத்திற்கான தனது தீவிர உழைப்பை நல்கினார்.

நாடகத்துக்கு வேண்டிய சீன், திரை, ஒப்பனைப் பொருட்கள் என்பவற்றை தானே வாங்கி மன்றத்துக்கு அளித்தார். ஊர்ப் பெரியவர்கள் 'நாடகம் ஆடத்தானே' என்று முகம் திருப்பிக் கொண்டனர்.

சைவப்புலவரும், நல்லாசிரியரும், நாடக வல்லவருமாகிய சு.செல்லத்துரை அவர்கள் இந்த இளைஞர்களுக்கு உதவ முன்வந்தார்.

தனக்குத் தெரிந்ததை இளைஞர்களுக்குத் தர முன்வந்த அதேவேளை எதுவிதமான தாழ்வுச் சிக்கல்களுமின்றி இளைஞர்களிடமிருந்து தான் கற்றுக்கொள்ள வேண்டியவைகளைக் கற்றுத்தேர்ந்தார்.

ஒப்பனைக் கலையில் தேர்ச்சிப் பெற்றிருந்த தம்பு என்னும் இளைஞனிடமிருந்து ஒப்பனை – காட்சியமைப்பு போன்ற நுட்பங்களைக் கற்றுக் கொண்டார்.

ஆசிரியராக ஆரம்பித்து கல்விப் பணிகளாற்றி அதிபராய் உயர்ந்த சைவப்புலவர் பாடசாலை மட்டத்தில், மாணவர்கள் மத்தியில் நாடகக் கலையை வளர்த்தெடுக்க பெரும்பணி ஆற்றியவர்.

மேலை நாடுகளில் வயது, வகுப்பு என்பவற்றிற்கிணங்க பாடசாலைகளில் நாடக ஊடகத்தைப் பயன்படுத்தத் தொடங்கி விட்டனர். முப்பதுகளிலேயே 'வகுப்பறை நாடகம்' என்ற நாடக முறைமை நடைமுறைக்கு வந்து விட்டது. மேற்கத்தியக் கல்வி உலகம் நாடகத் துறையை கல்விக் கூடங்களில் அறிமுகப் படுத்தியதுடன் முன்னிலைப் படுத்தியும் கொண்டது.

முப்பதுகளில் அவர்கள் செய்ததை 60களில் சிறிய அளவிலேனும் நமது கல்விக்கூடங்கள் நடைமுறைப்படுத்தத் தொடங்கின. பாடசாலை நாடகத்துறையை மேம்படுத்த உதவிய கல்வியலாளர்களில் நமது செல்லத்துரை அதிபரும் முன்வரிசை பெறுபவர்.

எழுபதுகளில் கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயத்தில் ஆசிரியப் பணியாற்றிய காலத்தில் இலங்கை கலைக்கழகம் பாடசாலை நாடகப் போட்டி நடாத்தியபோது வித்தியாலய அதிபர், ஆசிரியர்களை மாணவர்களுடன் இணைந்து செயற்பட வைத்து உழைத்து 'கலையால் அழிந்த கர்வம்' என்ற நாடகத்தை தயாரித்து போட்டியில் பங்குபெறச் செய்தார்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி போன்ற பெரிய பாடசாலைகளுடன் எப்படிப் போட்டியிட முடியும் என்று அங்காலாய்த்த அதிபரையும் ஆசிரியர்களையும் சமாளித்து உற்சாகப்படுத்தி கலைக்கழகப் போட்டியில் கீரிமலை நகுலேஸ்வரா மாணவர்களின் நாடகத்தை மேடை ஏற்றினர். – 'கலையால் அழிந்த கர்வம்' கலைக்கழகப் பாடசாலைப் போட்டியில் இரண்டாவது பரிசினைப் பெற்றுக் கொண்டது.

இளவாளை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் அதிபராகப் பதவியேற்றதன் பின் பூரண சுதந்திரத்துடன் செயற்பட்டார். கல்வித் திணைக்களம் அப்போது வருடா வருடம் நாடகப் போட்டிகளை நடத்தியது.

1976ல் இவரது 'பாதுகை பெற்ற பரிசு' என்ற மாணவர் நாடகம் அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தையும், 1977ல் 'கர்வ பங்கம்' முதல் இடத்தையும் பெற்றன.

இளவாலை இளங்குமரன் கலாமன்றத்தினருக்காக ஆண்டுக்கு இரண்டு நாடகம் என்று இருபதுக்கும் மேற்பட்ட நாடகப்பிரதிகளை தயாரித்துக் கொடுத்துள்ளார்.

இவருடைய 'மாயவன் செய்த மாயை' நாடகத்தை மகாஜனக் கல்லூரி மேடை ஏற்றியமை குறிப்பிடத்தக்கது. இராவணன் நாடகம் இவராலேயே மெமோரியல் கல்லூரியில் மேடை ஏற்றப்பட்டது.

'சுப்ரீம் கோர்ட்டில் திரௌபதை' 'வயோதிபர் விடுதியில்' 'ஐயோ அம்மான்' 'கண்ணீர்' போன்ற சமூக நாடகங்களும் மேடையில் அலங்காரம் பெற்றன.


சமய நாடகம், நாட்டிய நாடகம், இசை நாடகம், கூத்து, பஜனை, வில்லுப்பாட்டு என்று இவருடைய நாடகப் பிரதிகளை பல நிறுவனங்கள் பயன்படுத்திக் கொண்டன.

நாடகக்காரர் பலரின் பழக்க வழக்கங்கள், பண்புகள் என்பவை சீர்கெட்டு நாடகக்காரர்கள் காவாலிகள் என்று சமூகம் எண்ணத் தலைப்பட்ட காலம் ஒன்று இருந்தது. அதற்குச் சவாலாய் நாடகம் ஒரு நற்கலை அதனை வளர்க்கப் பாடுபடும் நாடகக் காரர்கள் நல்லவர்கள் பண்பானவர்கள் என்பதை நிலை நாட்டிய அரங்கியல் பெரியார் இந்த சைவப் புலவர்.

நாடக மேடைகளில் ஆண்களே பெண் பாத்திரங்களேற்றுத் திரிந்ததொரு காலகட்டத்தில் யாழ்ப்பாணத்துக் கிராமியச் சூழலில் பெண்கள் நாடக மேடையில் ஏறுவார்களா, நடிப்பார்களா, நடிக்க விடுவார்களா.

அப்பேர்ப்பட்டதொரு காலகட்டத்தில் இவருடைய ஒரு நாடகத்தின் பெண் பாத்திரத்துக்குப் பெண்ணே நடிக்க வேண்டும் என்னும் நிலை வந்தபோது, அந்தப் பாத்திரத்தில் தனது மனைவி சிவகாம சுந்தரியை நடிக்கவைத்து வெற்றி கண்ட அரங்கியல் விற்பன்னர் இந்த சைவப்புலவர்.

ஈழத்து நவீன நாடக உலகு இந்த அரங்கியல் கலைஞருக்கு என்றும் கடமைப்பட்டது. போற்றவும் நினைக்கவும் மதிக்கவும் கடப்பாடுடையது.



theliwathai.joseph@thaiveedu.com

# ‘கலாபூஷணம்’ அண்ணாவியார். செ.டானியல் பெலிக்கான்

ஆழத்து முத்துக்கள் 79

- என். அருளானந்தம் -

தமிழரின் பாரம்பரிய கலைகளில் கூத்துக் கலையும் ஒன்றாகும். நாட்டுக் கூத்துக்கலையைப் பொறுத்தமட்டில் நாவாந்துறைக் கிராமத்திற்கு ஒரு வரலாற்றுத் தனிச்சிறப்புண்டு. காரணம், இக்கலைக்கு மக்கள் அளித்த பெரும் வரவேற்பும் புலவர்கள், அண்ணாவிமார், கலைஞர்கள் தம்மை முழுமையாக அர்ப்பணித்து கலைப்பணியாற்றியமையுயேயாகும். கிராம புலவர்களான கிரித்தே மரியாம் பிள்ளை, சூசைப்பிள்ளை (நல்லையா) ‘கலைக்கவி’ ஆசிரியர் எஸ்தாக்கி ஆகியோர் கலைப்பணியாற்றியமையால் புகழ்பெற்றனர். அந்த வரிசையில் ‘கலாபூஷணம்’ அண்ணாவியார் செ. டானியல் பெலிக்கான் நாட்டுக் கூத்துக் கலையை நலியவிடாது கலைப் பணியாற்றிவருவது கண்கூடு.

அண்ணாவியார் பெலிக்கான், அமரர் மடுத்தீஸ் லெஸ்தியாம்பிள்ளை - மேரிப்பிள்ளை தம்பதிகளுக்கு மூத்த புதல்வராக 1928இல் நாவாந்துறைக் கிராமத்தில் பிறந்தார். இவருடைய தந்தையார் கூத்துக் கலைஞராகவும் கூத்துமேடை அரங்கேற்றப் பணிகளில் சிறப்புடன் பணியாற்றி நன்மதிப்பைப் பெற்றவராகவும் இருந்தார். இதனால் கவரப்பட்ட டானியல் பெலிக்கான் தன்னையும் கூத்துக் கலையுடன் இணைத்துக்கொண்டார்.

அண்ணாவியார் பெலிக்கான் தமது 9வது வயதில் கிராமத்தில் அரங்கேறிய ‘ஏழுபிள்ளை நல்லதங்காள்’ நாடகத்தில் நல்லதங்காள் கதாபாத்திரத்தில் சிறப்பாக பாடி நடித்து கூத்துக்கலையில் கால்பதித்தார். தொடர்ந்து பாடசாலையிலும் சனசமூக நிலையத்திலும் நடத்தப்பட்ட கூத்துக்களிலும் சமூக நாடங்களிலும் பங்குபற்றி தமது திறமையை வெளிப்படுத்தினார். கால ஓட்டத்தில் சிறிது காலம் அவரது பார்வை கர்நாடக சங்கீதத்தில் சென்றதினால் அதிலும் தேர்ச்சிபெற்றார். கிராமத்தில் ஆண்டுதோறும் வழமையாக புனித பரலோக அன்னை திருவிழாவின் இறுதிநாளில் நாடக, நாட்டுக்கூத்துக் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். தென்மோடி மரபு நாட்டுக்கூத்துகளில் அண்ணாவியார் பெலிக்கான் பங்கேற்று நடிக்கலானார். புனிதர்கள், சரித்திர மன்னர்கள் (ராஜபாட்), ஸ்திரிகள் போன்ற பல்வகை கதாபாத்திரங்களிலும் தோன்றி பலரதும் பாராட்டுக்களையும் பெற்று சிறந்த குணசித்திர கலைஞன் என நிரூபித்துள்ளார்.

எடுத்துக்காட்டாகச் சிலவற்றைக் கோடிட்டுக் காட்டலாம். வீரத்தளபதியில் புனிதர் செபஸ்தியார் ‘அலசு’வில் வர்த்தசன் பெமியான். உலக அழகி கிளியோபாட்ராவில் மார்க் அந்தனி என்று நாட்டுக்கூத்துக்களில் முத்திரை பதித்தார் என்றால் மிகையாகாது. கலைக்கவி எஸ்தாக்கி ஆக்கிய ‘வீரத்தளபதி’யில் செபஸ்தியர் பாடும் “கட்டியில் கள்ளி நட்டனையாய் துட்ட வேடர்தான்...” என்ற பாடலை பாடி எல்லோர் கண்ணிலும் கண்ணீர் வடியவைத்தார். அலசு நாடகத்தில் பெமியான் வரவுப் பாடலான “ஞானக் கலையுணர்ந்த ரோமைப் பதியை பரிபாலித்திடும் அரசன் நானே....” என்ற ரீங்காரப் பாடல் இன்றும் எம் மக்கள் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. 1965ல் யாழ். மாநகரசபையால் ஒழுங்கு செய்யப்பட்ட பௌர்ணமி கலைவிழாவில் அரங்கேறிய ‘வீரத்தளபதி’ நாட்டுக்கூத்திற்கு தலைமை தாங்கிய பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களால் கலைஞர் பெலிக்கான் பாராட்டுப் பெற்று கௌரவிக்கப்பட்டார். வட, தென்மோடி கூத்துக் கலையை ஆய்வு செய்த பேராசிரியர்கள் சண்முகதாஸ், மௌனகுரு ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்க கூத்து ராகங்களை லாவகமாகப் பாடிக்காட்டி ஆய்வுகளுக்கு உதவலானார்.



அண்ணாவியார் பெலிக்கானின் கலைப்பணியில் ஒரு சிறந்த அம்சம் என்னவெனில் தம்முடன் நடிக்கும் சக கலைஞர்களும் திறமையாகப் பாடவேண்டும் என்று ஆதங்கப்பட்டு செயற்படுவதாகும். இவருடைய இளைய சகோதரர் மைக்கல்ராஜாவும் ஒரு சிறந்த கூத்துக்கலைஞராவார். இவருடன் அண்ணாவியார் பல கூத்துகளில் இணைந்து நடித்து பாராட்டுதல்களைப் பெற்றதுண்டு. ‘தேவசகாயம்பிள்ளை’, ‘விஜய மனோகரன்’, ‘ஸ்நாபக அருளப்பர்’ கூத்துகளில் அண்ணாவியார் தேவசகாயம் பிள்ளை, மனோகரன், அருளப்பராகவும், கலைஞர் மைக்கல்ராஜா, ஞானப்பு மனோகரி ஏரோது மன்னனாகவும் தோன்றி குணசித்திர நடிப்புடன் அற்புதமாக பாடல்களைப் பாடியும் ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றார்கள். யாழ்ப்பாணப் பிரதேசத்திலுள்ள சிறந்த நாட்டுக்கூத்துக் கலைஞர்களால், மூத்த நாட்டுக் கூத்து கலைஞர் பூந்தான் யோசப் தலைமையில் யாழ் நவரச நாட்டுக்கூத்து கலாமன்றம் அமைக்கப்பட்டது. இம்மன்றத்தில் அண்ணாவியார் பெலிக்கானும் இணைந்து பணியாற்றினார். ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களைக் கொண்டு யாழ். ஆசனக்கோவில் அரங்கில் அப்போதைய யாழ். ஆயர் வண. தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையில் ‘தேவசகாயம்பிள்ளை’ நாட்டுக் கூத்து அரங்கேற்றப்பட்டது. இதில் தேவசகாயம் பிள்ளை பாத்திரமேற்று பெலிக்கான் திறமையாகப் பாடி நடித்ததினால் ஆயரின் பாராட்டுதலைப் பெற்றுப் பொன்னாடையும் பெற்றுக் கொண்டார்.

நாட்டுக்கூத்துகளில் முக்கிய கதாபாத்திரங்களை ஏற்று நடித்து பாடி புகழ் பெற்ற அண்ணாவியார் பெலிக்கானின், 1985ன் பின்னர் புகழ் பெற்ற நாட்டுக்கூத்து புலவர்களினால் பாடப்பட்ட தென்மோடி நாட்டுக் கூத்துகளை தெரிவு செய்து அவற்றை நெறியாளுகை செய்து அரங்கேற்றினார். முக்கியமாக நாவாந்துறைக் கிராமத்தில் புலவர் சூசைப்பிள்ளை மற்றும் கலைக்கவி எஸ்தாக்கி ஆகியோரினதும், சுண்டிக்குழி புலவர் ஆசீர்வாதம் மற்றும் பூந்தான் யோசப்பினால் பாடப்பட்ட சிறப்பு மிகு கூத்துகளைக் கிராம இளைஞர் யுவதிகளுக்கு பயிற்றுவித்து அரங்கேற்றலானார். சுமார் 25ற்கு மேற்பட்ட கூத்துகளை அரங்கேற்றி சாதனையாளரானார். வீரத்தளபதி செபஸ்தியார், ஞானசவுந்திரி, ஜெனோவா கூத்துக்கள் மீண்டும் மக்கள் மத்தியில் வரவேற்புப் பெற்றன. முழுவதும் இளம் பெண்களைப் பழக்கி அரங்கேற்றிய புனிதவதி இரசிகர் மத்தியில் பாராட்டுதலைப் பெற்றது. இக்கூத்தும் சஞ்யுவானியார், அலங்கார ரூபன் ஆகிய கூத்துக்களும் ஒளி நாடாவில் படமாக்கப்பட்டுள்ளன. அண்ணாவியார் நெறியாளுகை செய்து நடித்த எஸ்தாக்கியார் பெரும் பாராட்டைப் பெற்றது. அவ்வமயம் நாவாயூர் முத்தமிழ் அரங்கில் நாட்டுக்கூத்து மேதை என்ற கௌரவப்பட்டம் அளிக்கப்பட்டு பல அறிஞர்களினாலும் பாராட்டப்பட்டார். அண்ணாவியாரின் கூத்துக்கள் யாழ் மாவட்டத்திற்கு வெளியே மன்னார், பூநகரிப் பிரதேசங்களிலும் அரங்கேற்றப்பட்டுப் பாராட்டுப் பெறத் தவறவில்லை.

அண்ணாவியார் பெலிக்கான் பன்முகத்திறமை பெற்றவராகத் திகழ்ந்தார். யாழ் மாவட்டத்தில் சிறந்த உதைபந்தாட்டக் கழகமான சென்.மேரிஸ் கழகத்தில் ஆரம்பகாலம்தொட்டு முன்னணி வீரராகவும் அணித் தலைவராகவும் திகழ்ந்து இரசிகர்களினால் புகழப்பட்ட வீரராவார். கர்நாடக சங்கீதத்தில் ஈடுபாடு கொண்டவராகவிருந்ததனால் கிராமக் கலை விழாக்களில் பல சினிமாப்பாடல்களைப் பாடி மகிழ்விப்பார். சிறப்பாக மூத்த நடிகரும் பாடகருமான ரி.ஆர். மகாலிங்கம் பாடிய “திராவிடப் பொன்னாடே கலைவாழும் தென்னாடே” என்ற பாடல் பாடி இரசிகர்களின் கரகோஷத்தைப் பெற்றுக்கொள்வார். தமிழ் கத்தோலிக்க சமய சாவீடுகளில் இரவில், விடியும்வரை ஒப்பாரி பாடுவது வழக்காகும். அண்ணாவியார் பாடும் சோகம் ததும்பும் ஒப்பாரிப் பாடல்கள் மெய்சிலிர்க்க வைக்கும்.

அண்ணாவியாரின் மூத்த புதல்வர் அமரர் டானியல் சிறந்த சிறுகதை எழுத்தாளராகவும் சமூக நாடக நடிகராகவும் நிகழ்ந்தவராவர். தந்தையாரின் கலைப்பணிக்கு உந்து சக்தியாக விளங்கினார்.

அண்ணாவியார் பெலிக்கானின் நாட்டுக்கூத்து கலைப்பணி வாழ்வில் மறக்கமுடியாத நிகழ்வு அவர் அர்ப்பணிப்புடன் செய்த கலைப்பணிக்காக இலங்கை அரசின் கலைகலாச்சார அமைச்சினால் 2009ம் வருடம் ஐப்பசித் திங்களில் கலாபூஷணம் பட்டம் வழங்கப்பட்டமையாகும். யாழ். செயலகத்தில் இந்நிகழ்வு அரச அதிபர் தலைமையில் நடைபெற்று பொன்னாடையும் போர்க்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். இதனைக் கொண்டாடுமுகமாக நாவாந்துறை கிராம மக்களால் 16.08.2010ல் சென்மேரிஸ் முத்தமிழ் அரங்கில் பாராட்டு விழா நடைபெற்றது. இவ்விழாவில் பொன்னாடை போர்க்கப்பட்டு பொற்கிளியும் வழங்கப்பட்டது சிறப்புடையதாகும். வாழும் ஒரு கலைஞனுக்கு வாழும் போது பாராட்டுதலை அளிக்கவேண்டும் என்ற கூற்றுக்கு அமைய பாராட்டைப் பெற்றமை கலைவரலாற்றில் பதியப்படவேண்டியதொன்றாகும்.

முதுபெரும் தமிழர் கலையான நாட்டுக் கூத்துக் கலையை நலியவிடாது தொடர்ந்தும் கலைப்பணியாற்றிவரும் அண்ணாவியாரின் சேவை தொடர்ந்து நடைபெற வேண்டுமென்பதே கலைஞர்களினதும் மக்களினதும் எதிர் பார்ப்பாகும்.

தனது முதுவயதிலும் கலைப்பணியாற்றி வரும் டானியல் பெலிக்கான் அவர்களுக்கு ஈழத்துக் கூத்துக்கலைஞர்களின் வரிசையில் சிறப்பான ஓர் இடமுண்டு என்பது வெள்ளிடை மலையாகும்.

‘கலை காலத்தின் கண்ணாடி, ஆன்மாவின் உண்டி, கலை வளர்ந்தால்தான் மொழி வளரும். எனவே, கலையை விழிபோல் காப்போம்’



arulanandam@thaiveedu.com


## உங்களுக்குத் தெரிந்த கலைஞர்கள் பற்றி நீங்களும் எழுத வேண்டுமா?

கலைஞர்கள் பற்றிய விபரங்கள், அவர்களுடைய புகைப்படங்களுடன்
உங்களுடைய பெயர், தொலைபேசி எண், புகைப்படம்
மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டுக்கு அனுப்பிவையுங்கள்.

**Thaiveedu**
**Woodside Square, P.O.Box #63581**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**


# மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்...

வீடு வாங்கவும் விற்கவும்
குறைந்த வட்டி விகிதத்தில்
மோட்கேஜ் ஒழுங்கு செய்வதற்கும்
அழையுங்கள்

**Ravi. Paramu**
Broker
**Direct: 416-262-4176**




**Neilson / Finch** (30 Wingarden)



**HomeLife Today Realty Ltd.,** Brokerage*

**Bus: 416-298-3200**

31 Progress Ave., Suite 210,
Toronto, ON, M1P 4S6

*Independently Owned and Operated, Broker

# Vasuki Devadas Law Office

## For all your legal needs.............

**Specializing in real estate litigation including claims on new home warranty**



**Real Estate** - வீடு வர்த்தக நிலையம் வாங்குதல் -விற்றல்
**Immigration**- குடிவரவுச்சட்டம்
**Personal Injury / Accident Benefit**
தனிநபர் விபத்து, விபத்து நலன் சம்பந்தப்பட்டவை
**Insurance**- காப்புறுதி கோரிக்கைகள்
**Business Law**- வியாபார வர்த்தகச்சட்டம்
**Family Law**- குடும்பச்சட்டம்
**Last Wills & Estate Planning**- உயில் சம்பந்தமான விடயம், இறுதிவிருப்ப ஆவணங்கள் தயாரித்தல்
**Power of attorney, affidavits, statutory declaration** - சத்தியப்பத்திரங்கள், தத்துவப்பத்திரம்
**Notarization & Commissioning** - அத்தாட்சிப்படுத்துதல்

**Vasuki Devadas Law Office**
2466 Eglinton Avenue East, Unit 10,(Midland & Eglinton)
Toronto, Ontario, M1K 5J8
**416-266-1234**
Vasuki@vdlaw.ca

**Vasuki Devadas**
Barrister, Solicitor & Notary Public

# கொடிய நோய்களுக்கான காப்புறுதி

## கொடிய நோய்களுக்கான காப்புறுதியும் ஆயுட் காப்புறுதியும்

கனேடிய மக்களின் மிகப் பெரிய பிரச்சனைகளில் ஒன்று எதிர்பாராதவிதமாக மரணம் ஏற்படுவது அல்லது கொடிய நோய்களால் தாக்கப்படுவது.

அண்மையில் எடுக்கப்பட்ட புள்ளிவிபரங்களின்படி கனேடிய மக்கள் நீண்ட காலத்திற்கு வாழக்கூடியதாக இருந்தாலும், அதிகமான பங்கு மக்கள் கொடிய நோய்களால் தாக்கப்பட்டு தப்பித்துக் கொள்கின்றனர். ஆனால் ஒருவர் கொடிய நோய்களால் தாக்கப்பட்ட பின்பு வேலை செய்து பணம் சம்பாதிக்க முடியாத நிலை ஏற்படும். ஆனால் இன்னும் சில காலம் வாழக்கூடியதாக இருக்கும்.

ஒருவர் கொடிய நோய்களால் தாக்கப்பட்டுத் தப்பித்துக் கொண்டால் அவருக்கு ஏற்படும் பொருளாதார நெருக்கடியால் அவர் தொடர்ந்து தனது உடல் நலத்தில் கவனமெடுப்பது கடினமாக இருக்கும். காரணம், கொடிய நோய்களால் தாக்கப்பட்ட பின்பு வாழமுடிந்தாலும் அவரது வழமையான வேலை மூலம் பணம் சம்பாதிப்பது இயலாமல் போகலாம். இந்த நேரத்தில் பண நெருக்கடி இல்லாமல் இருந்தால் பாதிக்கப்பட்ட ஒருவர் தனது உடல்நலத்தில் கவனமெடுத்து அந்த நோயை குணப்படுத்துவது இலகுவாக இருக்கும். அத்துடன் பணம் இருந்தால் விருப்பத்திற்கு ஏற்றபடி விரும்பிய நாட்டில் சிகிச்சைபெற முடியும். உலகின் மிகச் சிறந்த மருத்துவரை அணுகி சிகிச்சை பெற முடியும்.

## கனடாவில் எடுக்கப்பட்ட சில புள்ளிவிபரத் தகவல்கள்:

- 65 வயதான ஆண்களில் அதிகமானவர்கள் 84 வயது வரை இருப்பார்கள்.
- 65வயதான பெண்கள் 88வயது வரையும் வாழ முடியும்.
- நாலில் ஒருபங்கு (1/4) கனடிய மக்கள் இருதய நோய்களால் (Heart attack) பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 50% மானவர்கள் 65வயதுக்கு உட்பட்டவர்கள். ஆனால் இவர்களில் 82% மானவர்கள் மாரடைப்பு ஏற்பட்ட பின்பு தப்பித்துக் கொள்கின்றனர்.
- மூன்றில் ஒருபங்கு (1/3) கனடிய மக்கள் புற்று நோய்களால் (Cancer) பாதிக்கப்படுகின்றனர்.
- ஒன்பதில் ஒருபங்கு (1/9)பெண்கள் மார்பகப் புற்று நோயால் (Breast Cancer) பாதிக்கப்படுகின்றனர்.
- 1/20 பங்கு மக்கள் Stoke நோயால் பாதிக்கப்படுகின்றனர். ஒரு வருடத்தில் கிட்டத்தட்ட 50,000 மக்கள் Stoke நோயால் கனடாவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 75%மானவர்கள், மரணத்தில் இருந்து தப்பித்துக் கொள்கின்றனர்.
- 50,000 கனடிய மக்கள் (Multiple Sclerosis) எனப்படும் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த வருத்தத்திற்கான காரணம் இன்னும் சரியாகக் கண்டு பிடிக்கப்படவில்லை.

## கொடிய நோய்களுக்கான காப்புறுதித் திட்டம் (Critical Illness Insurance)

உங்களுக்கு அவர்கள் குறிப்பிட்ட கொடிய

| காப்புறுதி நிறுவனத்தால் குறிக்கப்பட்டுள்ள கொடிய நோய்கள் | | |
|---|---|---|
| 1 | புற்று நோய் | Cancer |
| 2 | மூளைத் தசை இயக்கம் பாதிப்படைதல் (ஸ்ட்றோக்) | Stroke |
| 3 | இதயத் தசையிறுக்கம் (ஹார்ட் அட்டாக்) | Heart Attack |
| 4 | இதய நாடிகளின் பாதை மாற்ற அறுவைச் சிகிச்சை (பை பாஸ்) | Coronary Artery Surgery |
| 5 | சிறு நீரகம் பழுதடைதல் | Kidney failure- |
| 6 | பிரதான உறுப்பு மாற்றம் | Major Organ Transplant |
| 7 | இருதய பெரு நாடி அறுவைச் சிகிச்சை | Artic Surgery |
| 8 | நினைவிழந்து போதல் | Coma |
| 9 | பாரிச வாதம் | Paralysis |
| 10 | அங்கமிழப்பு | Dismemberment |
| 11 | கண்பார்வை இழத்தல் | Blindness |
| 12 | காது கேளாமை | Deafness |
| 13 | வாய் பேசாமை Muteness | Loss of Speech |
| 14 | பெரிய தீக்காயங்கள் | Major Burns |
| 15 | உயிராபத்தற்ற மூளைக் கட்டி | Brian Tumour |
| 16 | தொழில்சார் விபத்துக் காயங்கள் எச்.ஐ.வி. | Occupational Injury HIV |
| 17 | இயக்க நரம்புசார் நோய் | Motor Neuron Disease |
| 18 | ஞாபக மறதி (அல்சைமர்ஸ்) | Alzheimer's Disease |
| 19 | உடல் நடுக்கம் (பாார்க்கின்சன்ஸ்) | Parkinson Disease |
| 20 | சுயமாக இயங்கமுடியாத நிலை | Loss of Independent Existence |
| 21 | இருதய வால்வு மாற்றம் | Heart Valve Replacement |
| 22 | | Cystic Fibrosis |
| 23 | | Multiple Sclerosis |

நோய்களில் ஒன்று ஏற்பட்டு 30 நாட்களில் காப்புறுதித் தொகையை அப்படியே தருவார்கள். இது வருமானவரி இல்லாத பணமாகும் (Lump Sum Tax Free Money). அதே நேரத்தில் உங்களுக்கு நோய் ஏதும் ஏற்படாவிட்டால் குறிப்பிட்ட காலத்திற்குப் பின்பு கட்டிய பணம் முழுவதும் திருப்பிக் கொடுப்பார்கள். ஒவ்வொரு காப்புறுதி நிறுவனமும் பலவிதமான திட்டங்களை வைத்திருக்கின்றனர். சில நிறுவனங்கள் 10 வருடங்களுக்குப் பின்னர் கட்டிய பணம் மீளப் பெறமுடியும். அல்லது 65 வயதில் அல்லது 75 வயதில் திரும்பப் பெறமுடியும்.

அத்துடன் நிறுவனத்திற்கு நிறுவனம் கொடிய நோய்களுக்கான காப்புறுதித் திட்டம் வேறுபடும். சில நிறுவனங்கள் 24இற்கு அதிகமான நோய்களுக்கு பாதுகாப்பு தருவார்கள். சில நிறுவனங்கள் 4 தொடங்கி 15 கொடிய நோய்களுக்கு மட்டுமே பாதுகாப்பு தருவார்கள். எனவே கொடிய நோய்களுக்கான காப்புறுதித் திட்டம் ஒன்று தெரிவு செய்யும் பொழுதில் எத்தனை நோய்கள் பாதுகாக்கப்படுகின்றது. எல்லா நோய்களின் பெயர்களும் சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பது பற்றி கவனமாகப் பார்க்க வேண்டும். உதாரணமாக புற்றுநோய் (Cancer) என்பதற்குப் பதிலாக சில நிறுவனங்கள் Life Threatening Cancer என்று குறிப்பிட்டிருப்பார்கள். இப்படியான கட்டத்தில் எங்களில் பலர் ஆயுட்காப்புறுதித் திட்டங்களை வைத்திருக்கின்றோம். அது அவசியமானது. காரணம் ஒருவருக்கு எதிர்பாராத மரணம் ஏற்பட்டவுடன் அவரது குடும்பத்தினர் பொருளாதார ரீதியான பாதுகாப்பை நிவர்த்தி செய்ய முடியும்.

ஆனால் ஒருவருக்கு திடீரென கடுமையான நோய் ஏதும் ஏற்பட்டால், ஆயுட்காப்புறுதி உதவி செய்யாது. இந்தக் கட்டத்தில் கொடிய நோய்களுக்கான காப்புறுதித் திட்டம் மிகவும் சிறந்தது. ஒருவருக்கு நோய் ஏற்பட்டவுடன் வேலைக்குப் போக முடியாத நிலை ஏற்படும். ஆனால் மாதாந்த செலவுகள் எல்லாம் அப்படியே இருக்கும். உங்களின் வருமானம் தடைப்படும். ஆனால் செலவுகள் மாறாமல் அப்படியே இருக்கும்.

புற்றுநோய் (Cancer)ஏற்பட்டு சிகிச்சை மூலம் மாற்றப்படக்கூடியதாக இருந்தால், காப்புறுதிப் பணம் கொடுக்க மாட்டார்கள். ஆனால் Cancer உங்கள் திட்டத்தில் இருந்தால் எப்படியான Cancer ஏற்பட்டாலும் பணம் கொடுக்கப்பட வேண்டும்.
அதேபோல் Heat attack ஏற்பட்டால் மட்டும் பணம் கொடுப்பார்கள். ஆனால் Coronary Artery Disease ஏற்பட்டால் பணம் கொடுக்க மாட்டார்கள். எனவே உங்கள் திட்டத்தில் கொடிய நோய்களின் பெயர்கள் எல்லாம் சரியாகக் குறிக்கப்பட்டுள்ளதா என்பதைக் கவனித்துக் கொள்ள வேண்டும்.

கொடிய நோய்களுக்கான காப்புறுதித் திட்டம் 1983ஆம் ஆண்டு Marius Barnard என அழைக்கப்படும் தென் ஆபிரிக்க நாட்டைச் சேர்ந்த மருத்துவரும் அவரது சகோதரர் இருதய மாற்றுச் சிகிச்சை நிபுணர் Christian Barnard என்பவரும் சேர்ந்து உருவாக்கினார்கள். காரணம் இவர்களது பெற்றோர்கள் கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டிருந்தும் வாழ்வதற்கு பணம் தேவைக்காக

சிறீதரன் துரைராஜா
- ஆயுட் காப்புறுதி முகவர் -



வேலை செய்ய வேண்டிய நிலைமையைப் பார்த்து இப்படி ஒரு காப்புறுதித் திட்டம் அவசியம் என்பதை உணர்ந்து கொண்டனர். "Dying For A Living"

கொடிய நோய்களுக்கான திட்டத்தை எல்லோரும் பெற்றுக் கொள்ள முடியாத நிலை உள்ளது. காரணம் ஏற்கனவே சில உடல்நலக் குறைபாடுகள் இருத்தல். மற்றையது மாதாந்தக் கட்டணம் அதிகமாக இருத்தல்.

எனவே உடல்நலம் மிகவும் நல்லதாக இருப்பவர்கள் உடனடியாகப் பெற்றுக் கொள்ள முடியும். இந்தத் திட்டத்தைப் பெறுவதற்கு முன்பு காப்புறுதி நிறுவனங்கள் மிகவும் எச்சரிக்கையாக உங்களுக்கு நோய்கள் எதுவும் இல்லை என்பதைக் கவனிப்பார்கள். உங்கள் குடும்பத்தில் அதாவது தாய், தந்தை, சகோதரர்களின் உடல் ஆரோக்கியம் சம்பந்தமான கேள்விகளும் கேட்கப்படும். காரணம் சில நோய்கள் பரம்பரையாக ஏற்படுகின்றது.

சில காப்புறுதி நிறுவனங்கள் இப்படி ஒரு திட்டத்தை மக்களுக்கு வழங்குவதே இல்லை. காரணம் இத்திட்டத்தினால் காப்புறுதி நிறுவனத்திற்கு அதிகமான வருமானம் கிடைப்பதில்லை. ஏனென்றால் நோய் ஏற்பட்டால் பணம் கொடுக்க வேண்டும். நோய் வராவிட்டால், கட்டிய பணம் முழுவதும் திரும்பக் கொடுக்க வேண்டும். கனடாவில் 30இற்கும் அதிகமான காப்புறுதி நிறுவனங்கள் இத்திட்டத்தை விற்பனை செய்கின்றனர்.

## முக்கிய குறிப்பு

கொடிய நோய்களுக்கான காப்புறுதித் திட்டம்: உங்களுக்கு திட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள நோய்களில் ஏதாவது ஏற்பட்டு 30 நாட்களின் பின்பு மட்டுமே பணம் கொடுப்பார்கள். புற்றுநோய் (Cancer) ஏற்பட்டு சிகிச்சை மூலம் மாற்றப்படக் கூடியதாக இருந்தால், அனைத்து நிறுவனங்களும் காப்புறுதிப் பணம் கொடுக்க மாட்டார்கள். ஆனால் Cancer என்று உங்கள் திட்டத்தில் குறிப்பிடப்பட்டு இருந்தால், எப்படியான Cancer ஏற்பட்டாலும் பணம் கொடுக்கப்பட வேண்டும்.

அதேபோல் Heart Attack ஏற்பட்டால் மட்டும் பணம் கொடுப்பார்கள். ஆனால் Coronary Artery Disease ஏற்பட்டால் பணம் கொடுக்க மாட்டார்கள். எனவே உங்கள் திட்டத்தில் கொடிய நோய்களின் பெயர்கள் எல்லாம் சரியாகக் குறிக்கப்பட்டுள்ளதா என்பதை கவனித்துக் கொள்ள வேண்டும். நீங்கள் நோய் ஏற்பட்டு 30 நாட்களுக்குள் இறந்து விட்டால் கொடிய நோய்களுக்கான காப்புறுதிப் பணம் கிடைக்காது. எனவே ஆயுட் காப்புறுதி அவசியமானது.

sritharan.t@thaiveedu.com

■ ■ ■

இறுக்கமான சூழலில் இலகுவான தீர்வு

Life100
INSURANCE & INVESTMENTS INC.

சிறீதரன் துரைராஜா
காப்புறுதி முகவர்
MDRT The Premier Association of Financial Professionals
416.918.9771
info@life100.ca

Serving you in two locations
759 Warden Ave., Scarborough, ON M1L 4B5, Tel: 416-830-0386
10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6 Tel: 416.321.2500



உங்களுக்காகவும், உங்கள் அன்புக்கு உரியவர்களுக்காகவும்...

Life100

INSURANCE & INVESTMENTS INC.

LIFE INSURANCE • CRITICAL ILLNESS • MORTGAGE INSURANCE • RRSP • RESP

MEDICAL INSURANCE FOR SUPER VISA

100% REFUND IF VISA DENIED

கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால்
2 மில்லியன் வரை காப்புறுதி

நோய் ஏற்படாதுவிட்டால் கட்டிய பணம் முழுவதையும் மீளப்பெறுங்கள்.

வயோதிபர்களுக்கான காப்புறுதி

• மருத்துவப் பரிசோதனை வேண்டியதில்லை • உடனடியாக காப்புறுதித் திட்டம் அமலாகும்
• வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும், நீரிழிவு நோயால் இன்சுலின் பாவிப்பவர்களும் பெற்றுக்கொள்ளலாம்

- digi Media -

MDRT
Member of Million Dollar Round Table

சிறீதரன் துரைராஜா
CLU, CHS

Direct: 416.918.9771

10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca



Are you getting Million Dollar advice?




















இம்மாதப் புகைப்படக் கலைஞர்

## மீனா அகிலன்

ரொறன்ரோவில் வசிக்கும், வீடு விற்பனை முகவரும் காப்புறுதி அலுவலகமொன்றின் முகாமையாளருமான இவர் தனது சுற்றுலாக்களின்போது எடுத்த படப் பதிவுகளிற் சில.

**உங்களிடம், நீங்கள் எடுத்த அழகான புகைப்படங்கள் இருக்கின்றனவா? அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.**

புகைப்படம் எடுத்தவரின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், புகைப்படம், எடுக்கப்பட்ட காட்சி அல்லது எடுக்கப்பட்டவருடைய விபரங்கள் என்பவற்றுடன் நீங்கள் எடுத்த புகைப்படத்தையும் அனுப்பிவையுங்கள். அவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.







